Don

சமூக அறிவியல்

10

தொகுதி - 1 & 2

புதிய பாடத்திட்டத்தின் படி

இலவச இணைப்பு

பயிற்சிப் புத்தகம் PMB & PQB & Q Book அலகுத்தேர்வு புத்தகம்

1, 2, 5 & 8 மதிப்பெண் வினாக்கள் உள்ளடக்கம்

2020 பதிப்பு

- அனைத்து பாடங்களுக்கும் மனவரைபடம்
- புத்தக வினாக்கள் & கூடுதல் வினாக்கள்
- எளிமையான தெளிவான விடைகள்
- தலைப்பு & வேறுபடுத்துதல் வினாக்கள்
- அரசு மாதிரி வினாத்தாள் 2019 - 20

டான் பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.

Don
சமூக அறிவியல்
தொகுதி - 1 & 2
10 ஆம் வகுப்பு
புதிய பாடத்திட்டத்தின்படி
முதற்பதிப்பு : 2019
முழுமையாக திருத்தப்பட்ட பதிப்பு - 2020

© *Don* Publications (P) Ltd.

WARNING: All rights reserved. No part of this publication may be reproduced or stored in a retrieval system or transmitted in any form or by any means without the prior written permission of the Publisher, the copy-right holder.

உங்களுடன் ஒரு வார்த்தை...

10 ஆம் வகுப்பிற்கான சமூக அறிவியல் பயிற்சிப் புத்தகம், தமிழக அரசின் தற்போதைய புதிய பாடத்திட்டத்தை வைத்து திறமையான ஆசிரியர் குழு மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. பத்தாம் வகுப்பு என்பது ஒவ்வொரு மாணவ, மாணவியரின் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது. அப்படிப்பட்ட பாடத்திற்கு அதிக கவனம் செலுத்துவது முக்கியமாகிறது.

சமூக அறிவியல் 1 மற்றும் 2ம் தொகுதிக்கான இந்தப்புத்தகத்தில், வரலாற்றில் வரக்கூடிய தலைப்பு வினாக்கள் பகுதிக்கும், புவியியலில் வரக்கூடிய வேறுபடுத்துதல் வினாக்கள் பகுதிக்கும் அதிக கவனம் செலுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் காலக்கோடு வினாக்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அதற்குரிய அட்டவணைகளும் ஒவ்வொரு பாடத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன. இவை மாணாக்கர்களுக்கு எளிதில் மனனம் செய்யவும், தேர்வை எதிர்கொள்ளவும் உதவும்.

எளிதில் புரிந்து கொள்ளும் பொருட்டு வண்ண வரைபடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் இப்புத்தகத்துடன் இலவசமாக வரைபடப் பயிற்சி ஏடு **[PMB (Practice Map Book)], Q Book** கொடுக்கப்படுகிறது.

மொத்தத்தில் இப்புத்தகம், மாணவ மாணவியருக்கு நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற உதவும் துணைவன் என்று கூறினால் மிகையாகாது.

அன்புடன்
S.A. சுரேஷ் குமார், MCA., MBA.,
டாண் பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.

நூலாசிரியர்
Mr. S. **வேலுச்சாமி** M.A., B.Ed.
வி.கே.புரம், திருநெல்வேலி

நூலாக்கம்
Dr. **சொ.அ. ராஜ்குமார்** MBBS.,MS(EM)
திருநெல்வேலி

பதிப்பகத்தார்:
Don Publications (P) Ltd.
நிர்வாக அலுவலகம்:
3/100/1, தூத்துக்குடி மெயின் ரோடு, உத்தமபாண்டியன்குளம் (PO), திருநெல்வேலி - 627 351.
☎: (0462) 2520977, 2520978. செல் : 73730 88821. மின்னஞ்சல் : donbooks01@gmail.com
சென்னை அலுவலகம்:
புதிய எண் 17, பழைய எண் 21A, 2 வது தளம், 11வது அவென்யூ, அசோக்நகர், சென்னை - 600 083.
☎ (044) 48565226, 24892474. செல் : 77083 30666. மின்னஞ்சல் : donbooks.chennai01@gmail.com

Visit us at | : 94890 51855 | Online purchase:www.donbookart.com | www.donbooks.co.in

TO ORDER BOOKS

Dear Teachers and Principals

Thank you for your patronage to *Don* **Book**. You are instrumental in our phenomenal success. Now you can order your required copies by sending the same in your letter head.

For order please

Mobile No.	:	**7373088821, 0462 - 2520977, 2520978**
Whatsapp No.	:	**9443339941**
Website	:	**www.donbookart.com**
E-mail ID	:	**order@donbooks.co.in, enquire@donbooks.co.in**

BANK DETAILS (FOR DIRECT DEPOSIT)

STATE BANK OF INDIA
A/C No. : **35655497778**
IFSC Code : SBIN0000932
(Sripuram Branch, Tirunelveli)

INDIAN BANK
A/C No. : **6204213630**
IFSC Code : IDIB000K184
(KTC Nagar Branch, Tirunelveli)

KARUR VYSYA BANK
A/C No. : **1174135000000133**
IFSC Code : KVBL0001174
(Palayamkottai Branch)

KARUR VYSYA BANK
A/C No. : **1651135000001796**
IFSC Code : KVBL0001651
(Saidapet Branch, Chennai)

SYNDICATE BANK
A/C No. : **60501010001381**
IFSC Code : SYNB0006050
(Ashok Nagar Branch, Chennai)

CITY UNION BANK
A/C No. : **230109000157474**
IFSC Code : CIUB000230
(Palayamkottai Branch, Tirunelveli)

D.D./Cheque

Should be drawn in favour of **'Don Publication (P) Ltd'** payable at Tirunelveli.

(Please send the chellan along with your order)

You can purchase our books through online by visiting the website www.donbookart.com Here you can purchase book in bulk quantites.

For students:

You can buy our books through our website **www.donbookart.com** or sending money order (by clearly writing your address)

Address for correspondence:

Don Publications (P) Ltd.

3/100/1, Uthamapandiankulam, Tuticorin Main Road, **TIRUNELVELI** - 627351.

☎ : (0462) 2520977, 2520978, Cell: 73730 88821, 94433 39941. E-Mail: donbooks02@gmail.com

New No. 17, Old No. 21-A, 2nd Floor, 11th Avenue, Ashok Nagar, **CHENNAI** - 600 083.

☎ : (044) 24892474, 48565226. Cell: 73730 88893, 77083 30666, E-Mail: donbooks.chennai01@gmail.com

Visit us at : 94890 51855 www.donbooks.co.in

பொருளடக்கம்

தொகுதி 1 & 2

வரலாறு

அலகு	1.	முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்	7
அலகு	2.	இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம்	32
அலகு	3.	இரண்டாம் உலகப்போர்	50
அலகு	4.	இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம்	67
அலகு	5.	19 ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்	85
அலகு	6.	ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தாடக்ககால கிளர்ச்சிகள்	102
அலகு	7.	காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும்	119
அலகு	8.	தேசியம் : காந்திய காலகட்டம்	137
அலகு	9.	தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம்	157
அலகு	10.	தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள்	174

புவியியல்

அலகு	1.	இந்தியா–அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு	192
அலகு	2.	இந்தியா – காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள்	213
அலகு	3.	வேளாண்மைக் கூறுகள்	234
அலகு	4.	வளங்கள் மற்றும் தொழிலகங்கள்	260
அலகு	5.	இந்தியா – மக்கள் தொகை, போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் வணிகம்	278
அலகு	6.	தமிழ்நாடு–இயற்கைப் பிரிவுகள்	303
அலகு	7.	தமிழ்நாடு – மானுட புவியியல்	327

குடிமையியல்

அலகு	1.	இந்திய அரசியலமைப்பு	349
அலகு	2.	மத்திய அரசு	362
அலகு	3.	மாநில அரசு	376
அலகு	4.	இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை	389
அலகு	5.	இந்தியாவின் சர்வதேச உறவுகள்	400

பொருளியல்

அலகு	1.	மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி: ஓர் அறிமுகம்	411
அலகு	2.	உலகமயமாதல் மற்றும் வர்த்தகம்	425
அலகு	3.	உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து	439
அலகு	4.	அரசாங்கமும் வரிகளும்	452
அலகு	5.	தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள்	465

அரசு மாதிரி வினாத்தாள் 2019 - 20 477

OUR AREA REPRESENTATIVES CONTACT NUMBERS

You can buy books at the following wholesale / retail stores:

Chennai	94432 21264, 94890 51855
Chennai South	73587 26333, 94890 51855
Chennai Central	90033 59974, 94890 51855
Tiruvallur	73587 26333
Vellore	94899 06831
Kanchipuram	94426 08864, 94890 51855
Tirunelveli	94433 39971, 73730 88835
Nagercoil	94433 39971, 97905 77993, 77082 23111
Takkalai	73587 64222, 77082 23111
Kuzhithurai	94443 39971, 73730 88835
Erode	94426 08863
Dindugul, Karur	94890 51852, 94426 08863
Salem, Namakkal	94426 08863
Krishnagiri	94426 08863
Dharmapuri	94426 08863
Tuticorin	94890 51851
Trichy, Ariyalur, Perambalur	73587 61666, 99430 22335
Vilupuram	94890 51854
Thiruvarur, Thanjavur, Nagapattinam	94421 19859
Thiruvannamalai :	94426 08864
Virudhunagar, Ramnad, Sivagangai	75980 38097
Madurai, Theni, Pudukottai	75980 38096
Coimbatore	73958 32888
Tirupur, Nilgiris	73958 32888
Puducherry, Cuddalore	94426 01362

OUR BOOKS ARE AVAILABLE AT

CHENNAI

1. M.K.StoresChennai — 044 - 25386955
2. Bismi Book Centre — 044 - 25363375/25383264
3. Kings Book House — 044 - 25367660
4. Limra Book Centre — 044 - 42032081
5. F.A.Stores — 044 - 25392240
6. Prince Book House — 044 - 42053926
7. A.R.Book Mart — 99415 16187
8. M.R.Book Store — 044 - 25364596 / 42080600
9. Arraba Book Traders — 044 - 25387868

TAMBARAM (W)

10. Sri Ram & Co Book Shop — 044 - 22266431
11. Kalaimagal Book Centre — 99524 99827

CHIDAMBARAM

12. Vetri Book Centre — 04144 - 222648 / 254359

COVAI

13. Majestic Book House — 0422 - 2382333 / 2384333
14. Cheran Book House — 0422 - 4355453/2396623
15. Radhamani Stores — 0422 - 2392122
16. CBSC Book Shop — 0422 - 2393093
17. Kannan Puthaga Nilayam — 0422 - 2398890, 4369890
18. Murugan Book Depot — 0422 - 2396531

CUDDALORE

19. Indian Book Centre — 04142 - 231780
20. Bell Book House — 94432 65414

PANRUTTI

21. Sri Vinayaga Stores — 81241 01837

DINDIGUL

22. Ayyanar Book Centre — 0451 - 2426561

ERODE

23. Selvam Book Centre — 0424 - 2257027
24. Dhana Book Company — 0424 - 2221230
25. Kalaivani Book Centre — 0424 - 3205711
26. Senthil Book Palace — 0424 - 2214886

KALLAKURICHI

27. Sri Kiruba Stationary — 04151 - 222114

KOVILPATTI

28. Chitradevi Book Centre — 04632 - 220733

MADURAI

29. Mano Book Centre — 0452 - 2621577
30. Jeyam Book Centre — 0452 - 2623636
31. Sunmathi Traders — 0452 - 2338966

NAGERCOIL

32. M. ARUMUGAMPILLAI SONS BOOK CENTRE — 96004 23549, 04652 - 230728

MARTHANDAM

33. Olympic Traders — 04651 - 324533

SALEM

34. Vignesh Book Centre — 0427 - 4020407 / 4020409
35. AK Chandraiah Chettiar & Sons — 0427 - 2410096
36. Kalaivani Book Centre — 0427 - 2411083

DHARMAPURI

37. Vimal Book Centre — 94434 13414

TANJORE

38. Sri Murugan Publications — 04362 - 272922
39. Srinivasa Book Centre — 04362 - 238985

THENI

40. Maya Book Centre — 94439 29273

TENKASI

41. Maheshwari Book Centre — 04633 - 224406

TIRUNELVELI

42. Eagle Book CentrePalai. Tvl — 0462 - 2578899
43. Padma Book Stall — 0462 - 2337650
44. Shyamala Book Centre — 0462 - 2338800
45. Chitradevi Book Centre — 0462 - 2334344
46. Velavan Book Centre — 0462 - 2574457
47. Ponnaiya Pillai Book Shop — 0462 - 2572564

TIRUVANNAMALAI

48. APM Book Centre — 04175 - 224725

TIRUPPUR

49. Senthil Stores — 0421 - 2247274
50. Chola Book House — 0421 - 4323668
51. Maheshwari Book Stall — 94420 04254, 0421 - 2236414

TIRUCHIRAPPALLI

52. Sri Murugan Book Centre — 0431 - 2703076
53. Rasi Publications — 0431 - 2703692
54. Tamilnadu Book House — 96592 99661
55. Sri Raghavendra Stores — 0431 - 2707506

TUTICORIN

56. Sri Durga Stores — 0461 - 2326694
57. Eagle Book Centre — 0461 - 2392333

VILUPPURAM

58. Sabarinathan Brothers — 04146 - 222581

VIRUDHUNAGAR

59. Sethus Book Centre — 04562 - 248400 / 94864 61400

அலகு வரலாறு

1 முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்

மனவரைபடம்

உலக அமைதிக்காக உருவாக்கப்பட்ட முதல் அமைப்பான பன்னாட்டுச் சங்கமும் போர்களைத் தடுப்பதிலும் அமைதியை மேம்படுத்தியதிலும் அது வகித்த பங்கும்

முதல் உலகப்போரின் பின்விளைவுகள், குறிப்பாக ரஷ்யப்புரட்சி, அதற்கான காரணங்கள், போக்கு, விளைவுகள் ஆகியவை

பாரீஸ் அமைதி மாநாடும், வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களும்

நீர்மூழ்கிக்கப்பல் போரினை ஜெர்மன் தொடுத்ததைத் தொடர்ந்து போரில் அமெரிக்கா பங்கேற்றதும் மேற்கு, கிழக்கு முனைகளில் நடைபெற்ற போர்களும் போரின் சிறிய அரங்குகளும்

முதலாளித்துவ நாடுகளின் வளர்ந்து கொண்டேயிருந்த, கச்சாப் பொருட்களுக்கும் சந்தைக்குமானத் தேவைகள் எவ்வாறு காலனியாதிக்கப் போட்டிக்கு இட்டுச் சென்றதென்பதும் அதன் விளைவாக ஐரோப்பிய வல்லரசுகளிடையே ஏற்பட்ட மோதல்களும்

ஐரோப்பா இரு போர்முகாம்களாகப் பிரிந்ததும், அதன் விளைவாக ஏற்பட்ட அணி சேர்க்கைகளும், எதிர்அணி சேர்க்கைகளும்.

ஆசியாவில் ஜப்பான் ஒரு ஏகாதிபத்திய சக்தியாக எழுச்சி பெற்றது.

முதல் உலகப்போர் வெடிப்பதற்கு காரணங்களான வன்முறை வடிவங்களிலான தேசியம், ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு மனப்பான்மை. பிரான்சுக்கு ஜெர்மனியோடு ஏற்பட்ட பகைமை, பால்கன் பகுதியில் ஏற்பட்ட அதிகார அரசியல்.

நினைவில் கொள்க

- உலக அரசியல் வரைபடம் மீண்டும் வரையப்பட்டதற்குக் காரணமான போர் **முதல் உலகப்போர்.**
- முதல் உலகப்போரின் மிகப்பெரும் விளைவு **ரஷ்யப் புரட்சி** ஆகும்.
- உலக முதலாளித்துவத்திற்குத் தலைமையாக விளங்கிய நாடு **இங்கிலாந்து.**
- "முதலாளித்துவத்தின் உச்சக்கட்டமே ஏகாதிபத்தியம்" எனக் கூறியவர் **லெனின்.**
- "ஜெர்மனியே உலகத்தின் தலைவன்" எனப் பிரகடனம் செய்தவர் **இரண்டாம் கெய்சர் வில்லியம்.**
- ஆசியாவில் ஒரு ஏகாதிபத்திய சக்தியாக எழுச்சி பெற்ற நாடு **ஜப்பான்.**
- பதுங்குக்குழிப்போரின் தொடக்கமாக அமைந்த போர் **மார்ன் போர்** ஆகும்.
- ரஷ்யாவில் சார் மன்னருடைய ஆட்சி மாபெரும் **அக்டோபர் புரட்சி** (1917) மூலமாக தூக்கி வீசப்பட்டது.
- முதல் உலகப்போரின் விசவாயுக் குண்டுகளை வீசிய நாடு **ஜெர்மனி.**
- சென்னை மீது குண்டுகளை வீசிய புகழ்பெற்ற ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல் **எம்டன்** என்பதாகும்.
- ஜெர்மனியால் மூழ்கடிக்கப்பட்ட அமெரிக்கக் கப்பல் **லூசிடானியா** என்பதாகும்.
- 1918 ஆம் ஆண்டு பல மில்லியன் மக்கள் உயிரிழக்கக் கராணமான நோய் **இன்ஃப்ளுயன்ஸா** ஆகும்.
- துருக்கி மீண்டும் ஒரு நாடாக மறுபிறவி எடுப்பதற்குக் காரணமானவர் **முஸ்தபா கமால் பாட்சா.**
- ரஷ்யாவில் கம்யூனிச அரசை நிறுவியவர் **லெனின்.**
- பன்னாட்டுச் சங்கத்தின் செயலகம் அமைந்திருந்த இடம் **ஜெனீவா.**

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை?
   அ) ஜெர்மனி, ஆஸ்திரிய – ஹங்கேரி, உதுமானியர்
   ஆ) ஜெர்மனி, ஆஸ்திரிய – ஹங்கேரி, ரஷ்யா
   இ) ஸ்பெயின், போர்ச்சுக்கல், இத்தாலி
   ஈ) ஜெர்மனி, ஆஸ்திரிய – ஹங்கேரி, இத்தாலி

2. எவ்விடத்தில் எத்தியோப்பியாவின் படை இத்தாலியின் படைகளைத் தோற்கடித்தது?
   அ) டெல்வில்லி ஆ) ஆரஞ்சு நாடு இ) அடோவா ஈ) அல்ஜியர்ஸ்

3. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்தநாடு எது?
   அ) சீனா ஆ) ஜப்பான்
   இ) கொரியா ஈ) மங்கோலியா

4. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்? **PTA**
   அ) லெனின் ஆ) மார்க்ஸ்
   இ) சன் யாட் சென் ஈ) மா சே துங்

5. மார்ன் போர் எதற்காக நினைவு கூரப்படுகிறது?
   அ) ஆகாயப் போர்முறை ஆ) பதுங்குக் குழிப்போர்முறை
   இ) நீர்மூழ்கிக் கப்பல் போர்முறை ஈ) கடற்படைப் போர்முறை

6. எந்த நாடு முதல் உலகப்போருக்குப் பின்னர் தனித்திருக்கும் கொள்கையைக் கைக்கொண்டது?
   அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ்
   இ) ஜெர்மனி ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

7. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
   அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ்
   இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

8. பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது?
அ) ஜெர்மனி　ஆ) ரஷ்யா
இ) இத்தாலி　ஈ) பிரான்ஸ்

கூடுதல் வினாக்கள்

9. உலக வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்த ஆண்டு
அ) 1939　ஆ) 1945　இ) 1914　ஈ) 1918

10. உலக அரசியல் வரைபடம் மீண்டும் வரையப்பட்டதற்குக் காரணமான போர்
அ) முதல் உலகப் போர்　ஆ) இரண்டாம் உலகப் போர்
இ) அமெரிக்க சுதந்திரப் போர்　ஈ) ஏழாண்டுப் போர்

11. முதல் உலகப் போரின் மிகப் பெரும் விளைவு
அ) பிரெஞ்சுப் புரட்சி　ஆ) ரஷ்யப் புரட்சி　இ) சீனப் புரட்சி　ஈ) தொழிற்புரட்சி

12. உலக முதலாளித்துவத்திற்குத் தலைமையாக விளங்கிய நாடு
அ) ஜப்பான்　ஆ) ஜெர்மனி　இ) அமெரிக்கா　ஈ) இங்கிலாந்து

13. "ஜெர்மனியே உலகத்தின் தலைவன்" எனப் பிரகடனம் செய்தவர்
அ) ஹிட்லர்　ஆ) முசோலினி
இ) லெனின்　ஈ) இரண்டாம் கெய்சர் வில்லியம்

14. முதல் உலகப்போர் தொடங்கிய ஆண்டு
அ) 1914　ஆ) 1916　இ) 1918　ஈ) 1920

15. முதல் உலகப் போரில் நேசநாடுகளே வெற்றிபெறும் என்பதைத் தீர்மானித்த போர்
அ) வெர்டன் போர்　ஆ) மார்ன் போர்　இ) டானென்பர்க் போர்　ஈ) பால்கன் போர்

16. ரஷ்யாவில் சார்மன்னருடைய ஆட்சி தூக்கி வீசப்படக் காரணமான புரட்சி
அ) ஜூலைப் புரட்சி　ஆ) செப்டம்பர் புரட்சி　இ) அக்டோபர் புரட்சி　ஈ) மே புரட்சி

17. முதல் உலகப் போரின்போது விசவாயுக் குண்டுகளை வீசிய நாடு
அ) அமெரிக்கா　ஆ) ஜெர்மனி　இ) இங்கிலாந்து　ஈ) பிரான்ஸ்

18. சென்னை மீது குண்டுகளை வீசிய ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்
அ) லூசிடானியா　ஆ) எம்டன்　இ) செயின்ட் லூயிஸ்　ஈ) டான்டன்

19. ஜெர்மனியால் மூழ்கடிக்கப்பட்ட அமெரிக்கக் கப்பல்
அ) லூசிடானியா　ஆ) எம்டன்　இ) செயின்ட் லூயிஸ்　ஈ) டான்டன்

20. 1917 ஆம் ஆண்டு ஜெர்மனிக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்த அமெரிக்க குடியரசுத் தலைவர்
அ) தாமஸ் ஜெபர்சன்　ஆ) ஜார்ஜ் வாஷிங்டன்
இ) ஆபிரஹாம் லிங்கன்　ஈ) உட்ரோ வில்சன்

21. பதினான்கு அம்சத் திட்டத்தை முன்வைத்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர்
அ) உட்ரோ வில்சன்　ஆ) தியோடர் ரூஸ்வெல்ட்
இ) ஜான் F. கென்னடி　ஈ) ரொனால்டு ரீகன்

22. முதல் உலகப்போருக்குப் பின்னர் உலகத்திற்கே கடன் கொடுக்கும் நாடாக மேலெழுந்த நாடு
அ) இங்கிலாந்து　ஆ) அமெரிக்கா　இ) ஜப்பான்　ஈ) சீனா

23. துருக்கி மீண்டும் ஒரு நாடாக மறுபிறவி எடுப்பதற்குக் காரணமானவர்
அ) சுலைமான்　ஆ) அப்துல்லா
இ) முகமது நாசர்　ஈ) முஸ்தபா கமால் பாட்சா

24. ரஷ்யாவில் கம்யூனிச அரசை நிறுவியவர்
அ) லெனின்　ஆ) ஸ்டாலின்
இ) மார்க்ஸ்　ஈ) சன்யாட்சென்

25. பன்னாட்டுச் சங்கத்தின் செயலகம் அமைந்திருந்த இடம்
அ) லண்டன் ஆ) தி ஹேக் இ) ஜெனீவா ஈ) பெர்லின்

26. பன்னாட்டு நீதிமன்றம் அமைந்திருந்த இடம்
அ) சிகாக்கோ ஆ) தி ஹேக் இ) ரோம் ஈ) டோக்கியோ

27. ஜெர்மனியை பன்னாட்டுச் சங்கத்திலிருந்து விலக்கிக் கொண்டவர்
அ) ஹிட்லர் ஆ) முசோலினி இ) விளாடிமிர் ஈ) ஜோசப் ஸ்டாலின்

28. பின்லாந்திற்கும், சுவீடனுக்குமிடையே பிரச்சனை ஏற்படக் காரணமான தீவுகள்
அ) பஹாமா தீவுகள் ஆ) கார்சிகா தீவுகள் இ) ஆலேண்டு தீவுகள் ஈ) லட்சத் தீவுகள்

29. பிரான்சுக்கு நிகராக தானும் ஆயுதங்களை வைத்துக்கொள்ள அனுமதிகோரிய நாடு
அ) ஸ்பெயின் ஆ) ஜெர்மனி இ) இத்தாலி ஈ) போலந்து

30. 1939 ஆம் ஆண்டு பின்லாந்தைத் தாக்கிய நாடு
அ) சீனா ஆ) ஜப்பான் இ) ரஷ்யா ஈ) டென்மார்க்

விடைகள்

1 அ) ஜெர்மனி, ஆஸ்திரிய ஹங்கேரி உதுமானியர்		2. இ) அடோவா
3. ஆ) ஜப்பான்	4. அ) லெனின்	5. ஆ) பதுங்கு குழிப்போர் முறை
6. ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்	7. அ) பிரிட்டன்	8. ஆ) ரஷ்யா
9. இ) 1914	10. அ) முதல் உலகப்போர்	11. ஆ) ரஷ்யப் புரட்சி
12. ஈ) இங்கிலாந்து	13. ஈ) இரண்டாம் கெய்சர் வில்லியம்	
14. அ) 1914	15. அ) வெர்டன் போர்	16. இ) அக்டோபர் புரட்சி
17. ஆ) ஜெர்மனி	18. ஆ) எம்டன்	19. அ) லூசிடானியா
20. ஈ) உட்ரோ வில்சன்	21. அ) உட்ரோ வில்சன்	22. ஆ) அமெரிக்கா
23. ஈ) முஸ்தபா கமால் பாட்சா	24. அ) லெனின்	25. இ) ஜெனீவா
26. ஆ) திஹேக்	27. அ) ஹிட்லர்	28. இ) ஆலேண்டு தீவுகள்
29. ஆ) ஜெர்மனி	30. இ) ரஷ்யா	

II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. __________ ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது.
2. 1913ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட ________ உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.
3. __________ ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது.
4. பால்கனில் __________ நாடு பல்வகை இனமக்களைக் கொண்டிருந்தது.
5. டானென்பர்க் போரில் __________ பேரிழப்புகளுக்கு உள்ளானது.
6. பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் _________ ஆவார்.
7. லெனின் போல்ஷ்விக் அரசை நிறுவுவதற்கு முன்னர், தாராளவாதிகள், மிதவாதிகள், சோஷலிஸ்ட்டுகள் ஆகியோரின் புதியக் கூட்டணிக்கு __________ பிரதமராக தலைமை ஏற்றார்.
8. __________ ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

கூடுதல் வினாக்கள்

9. உலக நாடுகள்___________ சங்கத்தின் மூலமாக உலக அமைதியை ஏற்படுத்த முயன்றன.
10. முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம் ___________

11. ஆசியாவில் ஒரு ஏகாதிபத்திய சக்தியாக எழுச்சி பெற்ற நாடு __________
12. ________ போரில் மிகப்பெரிய நாடான சீனாவை சிறிய நாடான ஜப்பான் தோற்கடித்தது.
13. ஜப்பான் ___________ தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் சேர்த்து இணைத்துக் கொண்டது
14. ரஷ்ய – ஜப்பானியப் போர் நடைபெற்ற ஆண்டு ________
15. 1882 இல் ___________ என்பவரின் வழிகாட்டுதலினால் மூவர் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.
16. இரக்கமற்ற தன்முனைப்புக் கொண்ட ஜெர்மன் பேரரசர் ___________
17. 1805 இல் ___________ போரில் நெப்போலியன் தோல்வியடைந்தார்.
18. 1908 இல் துருக்கியில் ஒரு வலுவான, நவீன அரசை உருவாக்கும் முயற்சியாக நடைபெற்ற புரட்சி _______
19. ___________ உடன்படிக்கையோடு இரண்டாம் பால்கன்போர் முடிவடைந்தது.
20. ஆஸ்திரிய இளவரசர் பிரான்ஸ் பெரிடினாண்டுவை கொலை செய்த செர்பிய இளைஞர் ___________
21. துருக்கியர் தாக்க முயன்ற கால்வாய் ___________
22. 1916 இல் வடகடலில் நடைபெற்ற கடற்போர் ___________
23. பாரிஸ் அமைதி மாநாட்டில் கலந்து கொண்ட அமெரிக்க அதிபர் ___________
24. உலக அமைதியை மீட்பதற்காக உட்ரோ வில்சன் முன்வைத்த கோட்பாடு ___________எனப்படுகிறது.
25. 1918 இல் பல மில்லியன் மக்கள் மாண்டிடக் காரணமான நோய் ___________
26. ரஷ்யப்பேரரசின் தலைநகரம் __________
27. ரஷ்யப் புரட்சி வெடித்தபோது லெனின் ___________ நாட்டில் இருந்தார்.
28. லெனினைக் கவர்ந்த சிந்தனையாளர் ___________
29. உலக மக்களின் கற்பனையைத் தூண்டிய புரட்சி ___________
30. 'பிராவ்தா' என்பது ஒரு ரஷ்ய மொழிச் சொல் அதன் பொருள் ___________ என்பதாகும்.
31. பன்னாட்டுச் சங்கம் ___________ உறுப்பு நாடுகளைக் கொண்டிருந்தது.
32. பன்னாட்டு நீதிமன்றம் கொண்டிருந்த நீதிபதிகளின் எண்ணிக்கை ___________
33. 1933 இல் பன்னாட்டுச் சங்கத்திலிருந்து விலகிய நாடு ___________. 1939 இல் வெளியேற்றப்பட்ட நாடு ___________
34. ஜப்பான் மஞ்சூரியாவைத் தாக்கிய ஆண்டு __________
35. பன்னாட்டுச் சங்கம் கலைக்கப்பட்ட ஆண்டு __________

விடைகள்

1. 1894	2. லண்டன்	3. 1902
4. மாசிடோனியா	5. ரஷ்யா	6. கிளமென்சோ
7. கெரன்ஸ்கி	8. 1925	9. பன்னாட்டுக் சங்கம்
10. ஏகாதிபத்தியம்	11. ஜப்பான்	12. சீன–ஜப்பானியப் போர்
13. லியோடங்	14. 1904	15. பிஸ்மார்க்
16. இரண்டாம் கெய்சர் வில்லியம்	17. டிரபால்கர்	18. இளம் துருக்கியர் புரட்சி
19. புகாரெஸ்ட்	20. பிரின்ஸப்	21. சூயஸ் கால்வாய்
22. ஜுட்லேண்டு போர்	23. உட்ரோ வில்சன்	24. பதினான்கு அம்சத் திட்டம்
25. இன்ஃப்ளுயன்ஸா	26. பெட்ரோகிரேடு	27. சுவிட்சர்லாந்து
28. கார்ல்மார்க்ஸ்	29. ரஷ்யப் புரட்சி	30. உண்மை
31. ஐந்து	32. பதினைந்து	33. ஜெர்மனி, ரஷ்யா
34. 1931	35. 1946	

III. சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. i) முதல் உலகப்போர் வெடித்தபோது இத்தாலி நடுநிலைமை வகிக்கும் நாடாக இருந்தது. **PTA**
ii) வெர்செய்ல்ஸ் அமைதி உடன்படிக்கையில் இத்தாலி பெரும் ஏமாற்றமடைந்தது.
iii) செவ்ரஸ் உடன்படிக்கை இத்தாலியுடன் கையெழுத்திடப்பட்டது.
iv) சிறிய இடங்களான ட்ரைஸ்டி, இஸ்திரியா, தெற்கு டைரோல் போன்றவை கூட இத்தாலிக்கு மறுக்கப்பட்டது.
அ) i), ii) ஆகியன சரி　　ஆ) iii) சரி
இ) iv) சரி　　ஈ) i), iii). iv) ஆகியன சரி

2. i) துருக்கியப் பேரரசு, பால்கனில் துருக்கியரல்லாத பல இனமக்களைக் கொண்டிருந்தது.
ii) துருக்கி மையநாடுகள் பக்கம் நின்று போரிட்டது.
iii) பிரிட்டன் துருக்கியைத் தாக்கி கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றியது.
iv) சூயஸ் கால்வாயைத் தாக்க துருக்கி மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.
அ) i), ii) ஆகியன சரி　　ஆ) i), iii) ஆகியன சரி
இ) iv) சரி　　ஈ) i), iii). iv) ஆகியன சரி

3. கூற்று : ஜெர்மனியும் அமெரிக்காவும் மலிவான தொழிற்சாலைப் பொருள்களை உற்பத்தி செய்து இங்கிலாந்தின் சந்தையைக் கைப்பற்றின.
காரணம் : இரு நாடுகளும் தங்கள் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்தன.
அ) கூற்று காரணம் ஆகிய இரண்டும் சரி.
ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல
இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் தவறு.
ஈ) காரணம் சரி. ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை.

4. கூற்று : ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தக்களரியான போர்களில் முடிந்தன.
காரணம் : சொந்தநாட்டு மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது.
அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.
ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.
ஈ) காரணம் சரி ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை.

கூடுதல் வினாக்கள்

5. i) முதலாளித்துவம் சார்ந்த தொழில்களின் நோக்கம் மிகை உற்பத்தி செய்வதாகும்.
ii) முதலாளித்துவம் மிகப்பெரும் முரண்களை ஏற்படுத்தியது.
iii) இங்கிலாந்து உலக முதலாளித்துவத்துக்குத் தலைமையகமாக விளங்கியது.
iv) தங்கள் பேரரசை விரிவாக்கம் செய்ய முதலாளித்துவ நாடுகள் உலகத்தைச் சுற்றி போட்டியில் இறங்கின.
அ) i), ii) ஆகியன சரி.　　ஆ) iii), iv) ஆகியன சரி.
இ) ii), iv) ஆகியன சரி.　　ஈ) அனைத்தும் சரி

6. i) காலனியாதிக்கப் போட்டிக்குள் ஜெர்மனி நுழைந்தபோது, உலகமானது பெரும்பாலும் ஏனைய ஏகாதிபத்திய சக்திகளால் கைப்பற்றப்பட்டிருந்தது.
ii) விரிவாக்கம் செய்ய வெற்றிடங்கள் இல்லாததால் ஏகாதிபத்திய சக்திகள் தங்களுக்குள்ளேயே அடுத்த நாட்டிற்குச் சொந்தமான பகுதிகளைக் கைப்பற்ற முயன்றன.

iii) இங்கிலாந்து இந்தியாவுடன் போட்டியிட வேண்டியிருந்தது.
iv) ஆசியாவில் ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன.

அ) i), மற்றும் ii) சரி.
ஆ) iii) மற்றும் iv) சரி.
இ) i), ii) மற்றும் iii) சரி
ஈ) i), ii) மற்றும் iv) சரி

7. i) ஆஸ்திரிய – ஹங்கேரிப் பேரரசர் பிரான்ஸ் பெர்டினாண்டு.
ii) ஆஸ்திரிய இளவரசர் பிரான்ஸ் ஜோசப்
iii) ஆஸ்திரிய இளவரசர், ஸ்பானிய செர்பியனால் கொலை செய்யப்பட்டார்.
iv) இந்நிகழ்வு செராஜிவோ என்னுமிடத்தில் நடைபெற்றது.

அ) i), மற்றும் iii) சரி.
ஆ) ii) மற்றும் iv) சரி.
இ) iii) மற்றும் iv) சரி
ஈ) i), மற்றும் iv) சரி

8. கூற்று : முதல் உலகப்போரின் தொடக்கத்தில் ஜெர்மனியோடும், ஆஸ்திரியாவோடும் அணிவகுத்திருந்த இத்தாலி பின்னர் விலகியது.

காரணம் : இத்தாலிய மக்கள் அதிகம் வாழும் பிரன்டினோ நகரை மீட்க இத்தாலி மேற்கொண்ட முயற்சியை ஜெர்மனி ஆதரிக்கவில்லை.

அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.
ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.
ஈ) காரணம் சரி ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை

9. கூற்று : ரஷ்யப்புரட்சிக்குப் பின் பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாக்கப்பட்டன.
காரணம் : ரஷ்ய கம்யூனிஸ்ட் அரசு, காலனி நாடுகளை விடுதலைக்காகப் போராட ஊக்குவித்து அவர்களுக்கு முழுமையான ஆதரவையும் நல்கியது.

அ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு
ஆ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி
இ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல
ஈ) காரணம் கூற்றிற்கு சரியான விளக்கமாகும்.

10. கூற்று : பன்னாட்டுச் சங்கம் மூன்று பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பத்தில் வெற்றிபெற்றது.
காரணம் : அமெரிக்கா, ஜெர்மனி, ரஷ்யா ஆகிய மூன்று வல்லரசுகள் இவ்வமைப்பில் அங்கம் வகிக்கவில்லை.

அ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் தவறு
ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கமல்ல
இ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

விடைகள்

1. அ) i), ii) ஆகியன சரி
2. ஈ) i), iii). iv) ஆகியன சரி
3. ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல
4. அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.
5. ஈ) அனைத்தும் சரி
6. ஈ) i), ii) மற்றும் iv) சரி
7. இ) iii) மற்றும் iv) சரி
8. அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.
9. ஈ) காரணம் கூற்றிற்கு சரியான விளக்கமாகும்.
10. ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கமல்ல

IV. பொருத்துக:

பாடநூல் வினா

அ) 1.	பிரெஸ்ட்–லிடோவஸ்க் உடன்படிக்கை	அ)	வெர்செய்ல்ஸ்
2.	ஜிங்கோயிசம்	ஆ)	துருக்கி
3.	கமால் பாட்சா	இ)	ரஷ்யாவும் ஜெர்மனியும்
4.	எம்டன்	ஈ)	இங்கிலாந்து
5.	கண்ணாடி மாளிகை	உ)	சென்னை

விடை: 1) இ 2) ஈ 3) ஆ 4) உ 5) அ

கூடுதல் வினாக்கள்

ஆ) 1.	சிசில் ரோட்ஸ்	அ)	ஜெர்மனி
2.	இரண்டாம் கெய்சர் வில்லியம்	ஆ)	அமெரிக்கா
3.	பிரான்ஸ் ஜோசப்	இ)	ரஷ்யா
4.	இரண்டாம் நிக்கோலஸ்	ஈ)	தென்னாப்பிரிக்கா
5.	உட்ரோவில்சன்	உ)	ஆஸ்திரிய – ஹங்கேரி

விடை: 1) ஈ 2) அ 3) உ 4) இ 5) ஆ

இ) 1.	லியோடங்	அ)	கால்வாய்
2.	அடோவா	ஆ)	துறைமுகம்
3.	சோம்மி	இ)	போர்க்களம்
4.	லூசிடானியா	ஈ)	நதி
5.	சூயஸ்	உ)	கப்பல்

விடை: 1) ஆ 2) இ 3) ஈ 4) உ 5) அ

ஈ) 1.	1912	அ)	ரஷ்யப் புரட்சி
2.	1914	ஆ)	பாரிஸ் அமைதி மாநாடு
3.	1916	இ)	முதல் பால்கன்போர்
4.	1917	ஈ)	மார்ன் போர்
5.	1919	உ)	வெர்டன் போர்

விடை: 1) இ 2) ஈ 3) உ 4) அ 5) ஆ

உ) 1.	ஆங்கிலோ – ஜப்பான் உடன்படிக்கை	அ)	1918
2.	லண்டன் உடன்படிக்கை	ஆ)	1925
3.	பிரேஸ்ட் – லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கை	இ)	1913
4.	வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை	ஈ)	1902
5.	லொக்கர்னோ உடன்படிக்கை	உ)	1919

விடை: 1) ஈ 2) இ 3) அ 4) உ 5) ஆ

ஊ) 1.	போல்ஸ்விக்	அ)	துறைமுகம்
2.	டூமா	ஆ)	கட்சி
3.	ஆர்தர்	இ)	பாதிரியார்
4.	கலீபா	ஈ)	நாடாளுமன்றம்
5.	கபொன்	உ)	பதவி

விடை: 1) ஆ 2) ஈ 3) அ 4) உ 5) இ

V. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. சீன – ஜப்பானிய போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?

- 1894 இல் ஜப்பான் சீனாவின் மீது வலுக்கட்டாயமாக ஒரு போரை மேற்கொண்டது.
- இச்சீன-ஜப்பானியப் போரில் சீனாவை சிறிய நாடான ஜப்பான் தோற்கடித்தது உலகை வியக்க வைத்தது.
- இப்போரில் ஜப்பான் பெற்ற வெற்றி ஐரோப்பிய சக்திகளால் விரும்பப்படவில்லை.
- தொடர்ந்து ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் எச்சரிக்கையை மீறி ஜப்பான் லியோடங் தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் இணைத்துக் கொண்டது.
- இந்நடவடிக்கை மூலம் கிழக்கு ஆசியாவில் தானே வலிமை மிகுந்த அரசு என ஜப்பான் மெய்ப்பித்தது.

2. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

மூவர் கூட்டு நாடுகள்: இங்கிலாந்து (பிரிட்டன்), பிரான்ஸ், ரஷ்யா

3. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?

- கண்மூடித்தனமான நாட்டுப்பற்று – இங்கிலாந்து
- அதிதீவிரப்பற்று – பிரான்ஸ்
- ஜெர்மனியக் கலாச்சாரத்தை மிக உயர்வாக நினைத்தல் – ஜெர்மனி

4. பதுங்குக் குழி போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன? PTA

- போர் வீரர்களால் தோண்டப்படும் பதுங்குக் குழிகள் எதிரிகளின் சுடுதலில் இருந்து தங்களைக் காத்துக் கொண்டு பாதுகாப்பாக நிற்க உதவின.
- முதல் உலகப்போரின் போது இப்பதுங்குக் குழியானது ஒன்றுக்கொன்று இணையாகச் செல்லும் இரண்டு முதல் நான்கு குழிகளைக் கொண்டிருக்கும்.
- ஒவ்வொரு பதுங்குக் குழியும் குறுக்குமறுக்காக வெட்டப்பட்டிருந்ததால், ஒரு முனையிலுள்ள எதிரியால் சில அடி தூரங்களுக்கு மேல் சுட இயலாது.
- பிரதானப் பதுங்குக் குழிகள் ஒன்றோடொன்றும் பின்புறமுள்ள குழிகளோடும் இணைக்கப்பட்டிருக்கும். அவற்றின் வழியாக உணவு, ஆயுதங்கள், கடிதங்கள், ஆணைகள் ஆகியவை வந்து சேரும். புதிய வீரர்களும் வந்து சேர்வர்.

5. முஸ்தபா கமால் பாட்சா வகித்தப் பாத்திரமென்ன?

- துருக்கி ஒரு நாடாக மறுபிறவி எடுப்பதற்கு முஸ்தபா கமால் பாட்சாவின் உன்னதான பங்கு முக்கியமானதாகும்.
- அவர் துருக்கியை நவீனமயமாக்கி அதை எதிர்மறையான அங்கீகாரத்திலிருந்து மாற்றியமைத்தார்.
- சுல்தானியத்திற்கும் கிலாபாத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்தார்.

6. ரஷ்யப்புரட்சியின் உலகளாவிய தாக்கத்தினைக் கோடிட்டுக் காட்டுக.

- ரஷ்யப்புரட்சி உலக மக்களின் கற்பனையைத் தூண்டியது.
- பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாக்கப்பட்டன.
- ரஷ்ய கம்யூனிஸ்ட் அரசு காலனி நாடுகளை விடுதலைக்காகப் போராட ஊக்குவித்தது.
- நிலச்சீர்திருத்தம், சமூகநலன், தொழிலாளர் உரிமைகள், பாலின சமத்துவம் போன்ற இன்றியமையாதவை குறித்த விவாதங்கள் உலகளவில் நடைபெறத் தொடங்கின.

7. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக. PTA

- பன்னாட்டு சங்கம் உலக அளவில் உறுப்பினர்களைக் கொண்டிருந்தாலும் அது ஐரோப்பிய அரசியல் விவேகத்தின் மையமாக மாறியது.
- சங்கத்திற்கென்று இராணுவம் இல்லை என்பதால் தான் எடுத்த முடிவுகளை அதனால் நடைமுறைப்படுத்த இயலவில்லை.

- "கூட்டுப்பாதுகாப்பு" எனும் கோட்பாட்டை நடைமுறையில் செயல்படுத்தவே முடியவில்லை.
- இவ்வமைப்பு உட்ரோ வில்சனின் சிந்தை செயல்வடிவமாக இருந்தபோதிலும் அவரால் தன் நாட்டையே சங்கத்தில் உறுப்பினராக்க முடியவில்லை.

கூடுதல் வினாக்கள்

8. முதலாளித்துவம் சார்ந்த தொழில்களின் உபரிச் செல்வம் எவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டது?

- முதலாளித்துவம் சார்ந்த தொழில்களின் நோக்கம் மிகை உற்பத்தி செய்வதாகும்.
- இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட உபரிச் செல்வம் மென்மேலும் தொழிற்சாலைகள் அமைக்கவும் இருப்புப்பாதைகள் அமைக்கவும் நீராவிக்கப்பல்கள் கட்டவும் அல்லது இவை போன்ற பலவற்றிற்கும் பயன்படுத்தப்பட்டது.

9. "கூட்டு நிறுவனம்" என்றால் என்ன?

- கூட்டு நிறுவனம் என்பது பொருள்களை உற்பத்தி செய்து விநியோகத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு தொழில்சார் நிறுவனமாகும்.
- தனக்கு நன்மை பயக்கும் விதத்தில் பொருள்களின் விநியோகம், விலை ஆகியவற்றின் மீது அந்நிறுவனம் அதிகக் கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கும்.

10. "கார்டெல்" என்றால் என்ன?

- கார்டெல் எனும் சொல் ஒரே வணிகத் துறையில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்களிடையே தொழில் ஒப்பந்தங்கள் செய்துகொள்வதன் அடிப்படையில் உருவாகும் அமைப்பைக் குறிப்பதாகும்.
- சந்தையின் மீது முற்றுரிமைச் செல்வாக்கைச் செலுத்துவதே இதன் நோக்கமாகும்.

11. ஏகாதிபத்தியத்தின் முக்கியப் பண்புக்கூறுகள் யாவை?

- முதலாளித்துவம் தவிர்க்க இயலாமல் ஏகாதிபத்தியத்திற்கு இட்டுச் செல்கிறது.
- முதலாளித்துவத்தின் உச்சக்கட்டமே ஏகாதிபத்தியமாகும்.
- மிகப்பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்குச் சந்தைகள் மட்டுமல்லாது பெருமளவிலான கச்சாப்பொருள்களும் தேவைப்பட்டன.
- கச்சாப்பொருள்களின் மூலங்களைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் தவிர்க்க இயலாமல் ஏகாதிபத்தியத்திற்கு அழைத்துச் சென்றது.
- ஏகாதிபத்தியம் என்பது காலனிகளை பற்றியது மட்டுமல்ல, அது ஒரு முழுமையான முறையாக இராணுவமயமாக்கத்திற்கும் முழுமையான போருக்கும் இட்டுச் சென்றது.

12. 1870 ஆம் ஆண்டிற்குப் பின்னர் காலனியாதிக்கப்போட்டியில் கலந்து கொண்ட ஐரோப்பிய நாடுகள் யாவை?

- இங்கிலாந்து
- பிரான்ஸ்
- பெல்ஜியம்
- இத்தாலி
- ஜெர்மனி

13. வல்லரசுகளுக்கு இடையிலான மோதல்கள் பற்றி குறிப்பு வரைக.

- தொழில்வளர்ச்சியில் முதன்மை இடத்தை வகித்தாலும் பரந்துவிரிந்த பேரரசைக் கட்டுப்படுத்தினாலும் இங்கிலாந்திற்கு மனநிறைவு ஏற்படவில்லை.
- இங்கிலாந்து ஜெர்மனியோடும் அமெரிக்காவோடும் போட்டியிட வேண்டியிருந்தது. ஏனெனில் அந்நாடுகள் விலை மலிவான பண்டங்களை உற்பத்தி செய்து அதன்மூலம் இங்கிலாந்தின் சந்தையையும் கைப்பற்றின.
- நாடுகளுக்கிடையிலான இப்போட்டி ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வல்லரசுகளுக்கிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்படக் காரணமாயிற்று.

14. ஜப்பான் எவ்வாறு வல்லரசுகளின் கவர்ச்சி மிகுந்த கூட்டணியில் நுழைந்தது?

- ஜப்பான் தொழில்துறையில் சிறந்த நாடாகவும் அதே சமயத்தில் ஒரு ஏகாதிபத்திய சக்தியாகவும் ஆகியது.
- ஆனால் ரஷ்யா ஜப்பானைக் குறைத்து மதிப்பிட்டது.
- 1904 இல் தொடங்கிய ரஷ்ய - ஜப்பானியப் போரில் ஜப்பான், ரஷ்யாவைத் தோற்கடித்தது.
- இப்போருக்குப்பின் ஜப்பான் வல்லரசுகளின் கவர்ச்சிமிகுந்த கூட்டணியில் நுழைந்தது.

15. மைய நாடுகள் யாவை?

- ஜெர்மனி
- ஆஸ்திரிய–ஹங்கேரி
- இத்தாலி
- பல்கேரியா
- துருக்கி

16. நேசநாடுகள் யாவை?

- பிரிட்டன்
- பெல்ஜியம்
- பிரான்ஸ்
- ருமேனியா
- கிரீஸ்
- ரஷ்யா
- செர்பியா
- அமெரிக்கா

17. முதல் உலகப்போரின்போது நடைபெற்ற முக்கிய போர்களைக் குறிப்பிடுக.

- முதல் பால்கன் போர் – (1912)
- இரண்டாம் பால்கன் போர் – (1913)
- டானென்பர்க் போர் – (1914)
- மார்ன்நதிப் போர் – (1914)
- டார்டனல்ஸ் போர் – (1915)
- ஜுட்லேண்டு போர் – (1916)
- வெர்டன் போர் – (1917)

18. பன்னாட்டுச் சங்கத்தின் உறுப்புகள் யாவை?

- பொதுச் சபை
- செயற்குழு
- செயலகம்
- பன்னாட்டு நீதிமன்றம்
- பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு

19. பன்னாட்டுச் சங்கத்தின் தொடக்ககால நிரந்தர உறுப்பு நாடுகள் யாவை?

- பிரிட்டன்
- பிரான்ஸ்
- இத்தாலி
- ஜப்பான்
- அமெரிக்கா

20. பன்னாட்டுச் சங்கத்தின் குறிக்கோள்கள் யாவை?

- பன்னாட்டுச் சங்கத்தின் இரண்டு குறிக்கோள்களில் ஒன்று போர்களைத் தவிர்த்து உலகில் அமைதியை நிலைநாட்டுவது. மற்றொன்று சமூகப் பொருளாதார விசயங்களில் பன்னாட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துவது என்பனவாகும்.
- பன்னாட்டுச் சங்கம் நடுவராகவும், சமாதானம் செய்பவராகவும் இருந்து அதன்மூலம் பிரச்சனைகளைத் தொடக்கத்திலேயே தீர்த்துவைக்க விரும்பியது.

21. முதல் உலகப் போரில் அமெரிக்கா ஈடுபட்டதற்கான காரணம் என்ன?

- 1917 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் நடுநிலை நாடுகளின் கப்பல்களையும் மூழ்கடிக்கப் போவதாக ஜெர்மனி அறிவித்தது.
- லூசிடானியா என்னும் அமெரிக்கக் கப்பல் ஜெர்மனியின் நீர்மூழ்கிக்கப்பலால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப் பட்டது. இதன் விளைவாக பல அமெரிக்கர்கள் உயிரிழந்தனர்.
- இதனால் கோபமுற்ற அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜெர்மனிக்கு எதிராக உடனே போர் பிரகடனம் செய்தார்.

22. பிராவ்தா – குறிப்பு வரைக

- பிராவ்தா என்பது ஒரு ரஷ்ய மொழிச் சொல். இதன் பொருள் 'உண்மை'. இது 1918 முதல் 1991 வரை சோவியத் யூனியனின் கம்யூனிஸக் கட்சியினுடைய அதிகாரப் பூர்வமான நாளேடாகும்.

VI. ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. ஏகாதிபத்தியம்

அ) முற்றுரிமை முதலாளித்துவம் குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

- 1870 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சுதந்திரப் போட்டி முதலாளித்துவமானது முற்றுரிமைகளின் முதலாளித்துவமாக மாறியது.
- ஏகாதிபத்தியத்தின் ஒரு முக்கியப் பண்புக்கூறான தொழில், நிதி ஆகிய இரண்டும் அணி சேர்ந்து சந்தைகளில் தங்களின் பொருள்கள் மற்றும் மூலதனத்திற்கான லாபத்தைத் தேடுமென்பது தெளிவாக உணரப்பட்டது.

ஆ) ஜப்பான் எவ்வாறு ஒரு ஏகாதிபத்திய சக்தியாக வடிவெடுத்தது?

- ஜப்பான் மேற்கத்திய நாடுகளைப் பின்பற்றி மேலைநாட்டுக் கல்வியையும் இயந்திரத் தொழில் நுட்பத்தையும் ஏற்றுக்கொண்டு நவீன ராணுவம் கப்பற்படை ஆகியவற்றுடன் தொழில்துறையில் முன்னேறிய நாடாக மேலெழுந்தது.
- ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளிலும் ஐரோப்பிய சக்திகளைப் பின்பற்றி ஒரு ஏகாதிபத்திய சக்தியாக வடிவெடுத்தது.

இ) பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கு காலனிகள் ஏன் தேவைப்பட்டன?

- மிகப்பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு சந்தைகள் மட்டுமல்லாமல் கச்சாப்பொருட்களும் தேவைப்பட்டன.
- மேலும் பேரரசை விரிவாக்கம் செய்யவும் காலனிகள் தேவைப்பட்டன.

ஈ) முதலாளித்துவம் உருவாக்கிய முரண்பாடுகள் யாவை?

அதிகளவு வறுமை – அதிகளவு செல்வக்குவிப்பு
குடிசைப்பகுதிகள் – விண்ணைமுட்டும் கோபுரங்கள்
சுரண்டப்பட்ட காலனிகள் – பேரரசுகள்

2. ஜெர்மன் பேரரசர்

அ) ஜெர்மன் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியமின் இயல்பு யாது?

- இரக்கமற்ற தன்முனைப்புக் கொண்டவர்
- ஆக்கிரமிப்பு மனப்பான்மை கொண்டவர்.

ஆ) ஜெர்மனியின் வன்முறைசார் தேசியம் எவ்வாறு அழைக்கப்பட்டது?
- ஜெர்மனியின் வெறிகொண்ட நாட்டுப்பற்று (kultur) என அழைக்கப்பட்டது.

இ) மொராக்கோ விவகாரத்தில் கெய்சர் வில்லியம் தலையிட்டதேன்?
- மொராக்கோவில் பிரான்சின் நலன்கள் சார்ந்து, இங்கிலாந்து பிரான்சோடு மேற்கொண்ட ஒப்பந்தத்தை ஜெர்மனி எதிர்த்தது.
- எனவே ஜெர்மன் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியம் மொராக்கோ சுல்தானின் அதிகாரத்தை அங்கீகரித்ததோடு மொராக்கோவின் எதிர்காலம் குறித்து முடிவு செய்யப் பன்னாட்டு மாநாடு ஒன்றைக் கூட்டும்படி கோரினார்.

ஈ) ஜெர்மனியின் ஆப்பிரிக்கக் காலனிகளுக்கு என்ன நேர்ந்தது?
- கிழக்கு மற்றும் மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்த ஜெர்மன் காலனிகள் நேசநாடுகளால் தாக்கப்பட்டன.
- இக்காலனிகள் அனைத்தும் ஜெர்மனியிலிருந்து தொலைதூரத்தில் இருந்ததாலும் அவற்றால் உடனடியாக எவ்வித உதவியையும் பெறமுடியாமல் போனதாலும் நேசநாடுகளிடம் சரணடையும் நிலை ஏற்பட்டது.

3. பால்கன் போர்கள்

அ) பால்கன் கழகம் ஏன் உருவாக்கப்பட்டது?
- மாசிடோனியாவை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் கிரீஸ், செர்பியா, பல்கேரியா, மற்றும் மாண்ட் நீக்ரோ ஆகிய நாடுகளிடையே போட்டிகள் நிலவின.
- அவை இதனால் பால்கன் கழகம் எனும் அமைப்பை உருவாக்கின.

ஆ) முதல் பால்கன் போரின் விளைவுகள் யாவை?
- முதல் பால்கன் போரில் பால்கன் கழகம் துருக்கியப்படைகளைத் தாக்கி தோற்கடித்தன.
- 1913 ஆம் ஆண்டு லண்டன் உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.
- மாசிடோனியாவை பால்கன் நாடுகள் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டன.
- துருக்கி கான்ஸ்டான்டிநோபிளைச் சுற்றியுள்ள பகுதிகளை மட்டும் கொண்ட அரசாகச் சுருக்கப்பட்டது.

இ) இப்போரில் தோற்கடிக்கப்பட்டவர்கள் யாவர்?
துருக்கியப் படைகள்

ஈ) இரண்டாவது பால்கன் போரின் இறுதியில் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையின் பெயரென்ன?
புகாரெஸ்ட் உடன்படிக்கை (1913)

கூடுதல் வினாக்கள்

4. ஜப்பானின் வலிய கர அரசியல் விவேகம்

அ) ஜப்பான் எந்த நாட்டின் உள்நாட்டு அயல்நாட்டுக் கொள்கைகளைக் கட்டுப்படுத்தியது?
கொரியா

ஆ) ஜப்பான் 1910 இல் கொரியாவை இணைத்துக் கொண்டதற்கான காரணம் என்ன?
ஒரு முக்கியமான ஜப்பானியத் தூதரக அதிகாரி ஒரு கொரியரால் கொல்லப்பட்டதன் காரணமாக கொரியாவை ஜப்பான் இணைத்துக் கொண்டது.

இ) 1912 இல் வீழ்ச்சியுற்ற சீன அரசவம்சம் எது?
மஞ்சு அரசவம்சம்

ஈ) ஜப்பான் சீனாவிடம் வைத்த இரண்டு கோரிக்கைகள் யாவை?
- சீனாவில் ஷாண்டுங் பகுதியின் மீது ஜெர்மனி கொண்டிருக்கும் உரிமைகளை தனக்கு (ஜப்பான்) மாற்றித்தர வேண்டும்.
- இரண்டு ஜப்பானிய ஆலோசகர்களைச் சீன அரசாங்கம் பதவியில் அமர்த்த வேண்டும் என்பனவாகும்.

5. டானென்பர்க், மார்ன் போர்கள்

அ) டானென்பர்க் போரில் பேரிழப்பைச் சந்தித்த நாடு எது?
ரஷ்யா

ஆ) எந்த ஆண்டு இவ்விரு போர்கள் நடைபெற்றன?
1914

இ) மார்ன் போர் எவ்விரு நாடுகளுக்கிடையே நடைபெற்றது?
பிரான்ஸ், ஜெர்மனி. (பிரான்ஸ் வெற்றி பெற்றது)

ஈ) மார்ன்போர் எதன் தொடக்கமாகக் கருதப்படுகிறது?
பதுங்குக்குழிப் போர்.

6. வெர்டன் போர்

அ) வெர்டன்போரில் கலந்துகொண்ட நாடுகள் எவை?
ஜெர்மனி, பிரான்ஸ்

ஆ) எவ்வளவு காலம் இப்போர் நடைபெற்றது?
ஐந்து மாதகாலம்

இ) ஜெர்மானியருக்கு எதிரான இங்கிலாந்தின் தாக்குதல் எங்கே நடைபெற்றது?
சோம்மி நதிக்கரை அருகில்.

ஈ) வெர்டன் போர் எதனைத் தீர்மானித்தது?
முதல் உலகப்போரில் நேச நாடுகளே வெற்றிபெறும் என்பதை வெர்டன்போர் தீர்மானித்தது.

7. வெர்செயல்ஸ் உடன்படிக்கை

அ) வெர்செயலஸ் உடன்படிக்கை எப்பொழுது ஏற்பட்டது?
1919, ஜுன் 28 ஆம் நாள்

ஆ) பிரான்சுக்குத் திருப்பித்தரப்பட்ட பகுதிகள் யாவை?
அல்சேஸ் – லொரைன்

இ) சுதந்திர நாடுகளாக அறிவிக்கப்பட்ட நாடுகள் யாவை?

- பின்லாந்து
- லாட்வியா
- எஸ்தோனியா
- லிதுவேனியா

ஈ) ஜெர்மனி திரும்பப் பெற்றுக்கொள்ள வற்புறுத்தப்பட்ட உடன்படிக்கைகள் யாவை?

- பிரெஸ்ட் – லிடோவஸ்க் உடன்படிக்கை
- புகாரெஸ்ட் உடன்படிக்கை

8. முதல் உலகப்போரின் விளைவுகள்

அ) 1918 ஆம் ஆண்டு பல மில்லியன் மக்கள் மரணமடையக் காரணமான நோய் எது?
இன்ஃபுளுயன்ஸா

அ) பல மில்லியன் மக்கள் மாண்டதின் விளைவு என்ன?
பல மில்லியன் மக்கள் மாண்டதின் விளைவாக அனைத்து நாடுகளிலும் ஆண்–பெண் எண்ணிக்கையில் சமநிலை குலைந்து ஆண்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டது.

இ) உலகிற்கே கடன்கொடுக்கும் நாடாக விளங்கியது எது?
அமெரிக்கா

ஈ) துருக்கி மீண்டும் ஒரு நாடாக மறுபிறவி எடுப்பதற்கு காரணமானவர் யார்?
முஸ்தபா கமால் பாட்சா

வரலாறு

9. சர்வதேச சங்கம்

அ) சர்வதேச சங்கத்தின் ஐந்து உறுப்புகள் யாவை?

- பொதுச்சபை
- செயற்குழு
- செயலகம்
- பன்னாட்டு நீதிமன்றம்
- பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு

ஆ) சர்வதேச சங்கத்தின் தலைமையகம் எங்கே இருந்தது? அதன் முதல் தலைமைச் செயலர் யார்?

- ஜெனீவா
- சர் எரிக் டிரம்மாண்ட் (பிரிட்டன்)

இ) பன்னாட்டு நீதிமன்றம் எங்கே அமைக்கப்பட்டது? அது எத்தனை நீதிபதிகளை கொண்டிருந்தது?

தி ஹேக் – 15 நீதிபதிகள்

ஈ) இதன் இரண்டு முக்கிய குறிக்கோள்கள் யாவை?

- போர்களைத் தவிர்த்து உலகில் அமைதியை நிலைநாட்டுவது
- சமூக பொருளாதார விசயங்களில் பன்னாட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துவது.

VII. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி. **PTA**

வல்லரசுகளின் இரு அணிகள்:

- 1900 இல் ஐரோப்பிய வல்லரசுகளில் ஐந்து அரசுகள், இரண்டு ஆயுதமேந்திய முகாம்களாகப் பிரிந்தன.
- ஒரு முகாமில் மைய நாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரிய – ஹங்கேரி இத்தாலி ஆகியன 1882 இல் மூவர் உடன்படிக்கையை மேற்கொண்டன.
- மற்றொரு முகாமில் இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய மூவரைக் கொண்ட மூவர் கூட்டு உருவாக்கப்பட்டது.

வன்முறை சார்ந்த தேசியம்:

- ஒரு நாட்டின் மீதான பற்று மற்றொரு நாட்டை வெறுக்கும் தேவையை ஏற்படுத்தியது.
- இங்கிலாந்தின் ஆரவார நாட்டுப்பற்று பிரான்சின் வெறிகொண்ட நாட்டுப்பற்று ஆகிய அனைத்தும் தீவிர தேசியமாக போர்வெடிப்பதற்கு தீர்மானமான பங்காற்றியது.
- ஏனைய நாடுகளைப் பற்றிய செய்திகளைத் திரித்துக் கூறுவதன் மூலம் பத்திரிக்கைகள் தேசிய வெறியைத் தட்டி எழுப்பின.

ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பான்மை:

- ஜெர்மன் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியம் இரக்கமற்ற தன்முனைப்புக் கொண்டவராகவும், ஆக்கிரமிப்பு மனப்பான்மை கொண்டவராகவுமிருந்தார்.
- ஜெர்மனியே உலகத்தின் தலைவன் எனப் பிரகடனம் செய்தார்.
- ஜெர்மனியின் கடற்படை விரிவுபடுத்தப்பட்டது.

- ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு இயல்பு கொண்ட அரசியல் விவேகத்தையும், விரைவாகக் கட்டப்படும் கப்பற்படை தளங்களையும் கண்ணுற்ற இங்கிலாந்தும் கப்பற்படை விரிவாக்கப் போட்டியில் இறங்கியது.
- இதனால் இரு நாடுகளுக்குமிடையே பதற்றம் மேலும் அதிகரித்தது.

பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை:

- 1871 இல் ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்ட பிரான்ஸ், அல்சேஸ், லொரைன் பகுதிகளை இழந்தது. இதனால் பிரெஞ்சு மக்கள் ஜெர்மனியின் மீது கசப்புணர்வு கொண்டிருந்தனர்.
- மொராக்கோ விவகாரத்தில் ஜெர்மனியின் தலையீடு இக்கசப்புணர்வை மேலும் அதிகரித்தது.

பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல்:

- பாஸ்னியாவையும் ஹெர்சகோவினாவையும் தான் இணைத்துக் கொண்டதாக ஆஸ்திரியா அறிவித்தது.
- ஆஸ்திரியாவின் இவ்வறிவிப்பு செர்பியாவின் தீவிரமான எதிர்ப்பைக் தூண்டியது.
- ஆஸ்திரியாவிற்கு ஆதரவாக ஜெர்மனியும் செர்பியாவிற்கு ஆதரவாக ரஷ்யாவும் களமிறங்கத் தயாராயின.
- ஆஸ்திரியாவிற்கும் செர்பியாவிற்குமான இப்பகை 1914 இல் போர் வெடிக்கக் காரணமாயிற்று.

பால்கன் போர்கள்:

- பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் துருக்கியப் பேரரசின் உறுதியற்ற அரசியல், பொருளாதாரச் சூழலைச் சாதகமாகக் கொண்டு கிரீசும் அதனைத் தொடர்ந்து ஏனைய நாடுகளும் ஒன்றன்பின் ஒன்றாக தங்களைத் துருக்கியின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துக் கொண்டன.
- மாசிடோனியா பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்களைக் கொண்டிருந்தது. எனவே மாசிடோனியாவை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பால்கன் நாடுகளுக்கிடையே போட்டி நிலவியது.
- 1912 ஆம் ஆண்டு பால்கன் கழகம் எனும் அமைப்பை உருவாக்கின. இக்கழகம் முதல் பால்கன் போரில் துருக்கியப் படைகளைத் தாக்கித் தோற்கடித்தது.

உடனடிக் காரணம்:

- 1914 ஆம் ஆண்டு ஆஸ்திரிய இளவரசர் பிரான்ஸ் பெர்டினாண்டு, பிரின்ஸப் என்ற பாஸ்னிய செர்பியனால் கொலை செய்யப்பட்டார்.
- ஆஸ்திரியா இதனை செர்பியாவைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பாக எண்ணியது.
- ஆஸ்திரியாவிற்கு ஆதரவாக ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளுக்கு எதிராகப் போர் செய்ய திட்டமிட்டது.
- பெல்ஜியத்தின் நடுநிலைமையை மதியாது அதனை ஜெர்மனி தாக்கியதால் இப்போரில் இங்கிலாந்து பங்கேற்பது கட்டாயமாயிற்று.

2. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களைக் கோடிட்டுக்காட்டுக.

- போரைத் தொடங்கிய குற்றத்தைச் செய்தது ஜெர்மனி என்பதால் போர் இழப்புகளுக்கு ஜெர்மனி இழப்பீடு வழங்க வேண்டும்.
- ஜெர்மன் படை 1,00,000 வீரர்களை மட்டுமே கொண்டதாக அளவில் சுருக்கப்பட்டது. சிறிய கப்பற்படை ஒன்றை மட்டுமே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.
- நீர்மூழ்கிக் கப்பல்களையும் போர் விமானங்களையும் வைத்துக்கொள்ளக் கூடாது.
- ஆஸ்திரியாவின் சுதந்திரத்தை ஜெர்மனி அங்கீகரிக்கவும் மதிக்கவும் வேண்டும்.
- ஜெர்மனி கடல் கடந்த தனது காலனிகள் மீதான உரிமைகளை நேசநாடுகளுக்கு விட்டுக் கொடுக்கக் கட்டாயப்படுத்தப்பட்டது.
- ஜெர்மனியின் அனைத்துக் காலனிகளும் பன்னாட்டுச் சங்கத்தின் பாதுகாப்பு நாடுகளாக ஆக்கப்பட்டன.

- ரஷ்யாவுடன் செய்துகொள்ளப்பட்ட பிரெஸ்ட்–லிடாவஸ்க் உடன்படிக்கையையும் பல்கேரியாவுடன் மேற்கொள்ளப்பட்ட புகாரெஸ்ட் உடன்படிக்கையையும் திரும்பப் பெற்றுக்கொள்ள ஜெர்மனி வற்புறுத்தப்பட்டது.
- அல்சேஸ்–லொரைன் பகுதிகள் பிரான்சுக்குத் திருப்பித் தரப்பட்டன.
- போலந்து மீண்டும் உருவாக்கப்பட்டது. அந்நாடு பால்டிக் கடலை அடைவதற்காக ஜெர்மனிக்குச் சொந்தமான டான்சிக் துறைமுகம் உள்ளிட்ட ஒரு பகுதியும் தரப்பட்டது.

3. லெனின் தலைமையிலான ரஷ்யப் புரட்சியின் போக்கினை விளக்குக.

- சோவியத்துகளில் மென்ஷ்விக்குகள் ஆதிக்கம் செலுத்தஇ சிறுபான்மையினரான போல்ஷ்விக்குகள் அச்சமுற்றவர்களாகவும் முடிவெடுக்க இயலாதவர்களாகவம் இருந்தனர். லெனினின் வருகையால் இச்சூழ்நிலை மாறியது.
- ரஷ்யப் புரட்சி வெடித்தபோது லெனின் சுவிட்சர்லாந்தில் இருந்தார்.
- புரட்சி தொடர்ந்து நடைபெறவேண்டுமென அவர் விரும்பினார்.
- "அனைத்து அதிகாரங்களும் சோவியத்திற்கே" என்ற அவரது முழக்கம் தொழிலாளர்களையும் தலைவர்களையும் கவர்ந்தது.
- போர்க்காலத்தில் ஏற்பட்டிருந்த பற்றாக்குறைகளால் பெருந்துயரங்களுக்கு உள்ளாகியிருந்த மக்கள் "ரொட்டி, அமைதி, நிலம்" எனும் முழக்கத்தால் கவரப்பட்டனர்.
- தற்காலிக அரசு இரண்டு முக்கியத் தவறுகளைச் செய்தது.
  - i) நிலங்களின் மறுவிநியோகம் குறித்த கோரிக்கையின் மீது எடுப்படவேண்டிய முடிவைத் தள்ளிவைத்தது.
  - ii) போரைத் தொடர்வதென எடுக்கப்பட்ட முடிவு.
- ஏமாற்றமடைந்த விவசாய ராணுவ வீரர்கள் தங்கள் பொறுப்புகளைக் கைவிட்டு நில அபகரிப்பில் ஈடுபடலாயினர். இது பெட்ரோகிரேடில் போல்ஷ்விக்குகளின் தலைமையில் நடைபெற்ற எழுச்சியை மேலும் தீவிரப்படுத்தியது.
- அரசு "பிராவ்தா" –வை தடைசெய்து போல்ஷ்விக்குகளை கைது செய்தது.
- டிராட்ஸ்கியும் கைது செய்யபட்டார்,
- கெரன்ஸ்கி பிரம மந்திரி பொறுப்பேற்று தாராளவாதிகள், மிதவாத சோசிலிஸ்டுகள் ஆகியோரின் கூட்டணிக்கு தலைமை வகித்தார்.
- திடீர் அரசியல் புரட்சியை எதிர்கொண்ட அவர் செப்டம்பரில் அரசையும் சோவியத்துகளையும் ஒடுக்க முற்பட்டார். ஆனால் இம்முயற்சி சோவியத்துகளால் குறிப்பாக போல்ஷ்விக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.
- சோவியத்துகள் மற்றும் போல்ஷ்விக்குகளின் முழுமையான ஆதிக்கம் ஏற்படும் வரை அரசு பிழைத்திருந்தது.
- அக்டோபர் திங்களில் லெனின் போல்ஷ்விக் கட்சியின் மத்தியக் குழுவை உடனடிப்புரட்சி குறித்து முடிவு செய்யக் கேட்டுக் கொண்டார்.
- டிராட்ஸ்கி ஒரு விரிவான திட்டத்தைத் தயாரித்தார் நவம்பர் 7ஆம் நாள் முக்கியமான அரசுக்கட்டிடங்கள், குளிர்கால அரண்மனை, பிரதம மந்திரியின் தலைமை அலுவலகங்கள் ஆகியவை உட்பட அனைத்தும் ஆயுதம் ஏந்திய ஆலைத் தொழிலாளர்களாலும் புரட்சிப்படையினராலும் கைப்பற்றப்பட்டன.
- 1917 நவம்பர் 8ஆம் நாள் ரஷ்யாவில் புதிய கம்யூனிஸ்ட் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது. போல்ஷ்விக் கட்சிக்கு ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி எனப் புதுப்பெயரிடப்பட்டது.
- போரிலிருந்து விலகாமல் இருந்ததே தற்காலிக அரசின் வீழ்ச்சிக்குக் காரணம் என லெனின் நினைத்தார், எனவே உடனடியாக விலகினார்,
- புதிய அரசை உருவாக்குவதில் கவனம் செலுத்தினார்.

4. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக. அதன் தோல்விக்கான காரணங்களையும் குறிப்பிடுக.

பன்னாட்டுச் சங்கத்தின் பணிகள்:

- 1920– 1925 ஆகிய ஆண்டுகளிடையே பன்னாட்டுச் சங்கம் பல சிக்கல்களைத் தீர்த்து வைக்க அழைக்கப்பட்டது.
- மூன்று பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் சங்கம் வெற்றி பெற்றது.
- 1920இல் பின்லாந்தின் மேற்குக் கடற்கரைக்கும் சுவீடனின் கிழக்குக்கடற்கரைக்கும் இடையில் அமைந்திருந்த ஆலேண்டுத் தீவுகள் யாருக்குச் சொந்தம் என்பதில் பின்லாந்திற்கும் சுவீடனுக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டது.
- பன்னாட்டுச் சங்கம் அத்தீவுகள் பின்லாந்திற்கே உரியது எனத்தீர்ப்பளித்தது.
- அடுத்த ஆண்டில் போலந்திற்கும் ஜெர்மனிக்குமிடையே மேலை சைலேஷியா பகுதியில் எல்லைப் பிரச்சனை ஏற்பட்டது. அப்பிரச்சனையைச் சங்கம் வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தது.
- மூன்றாவது பிரச்சனை கிரீஸ் பல்கேரியாவின் மீது படையெடுத்தபோது பன்னாட்டுச் சங்கம் போர் நிறுத்தம் செய்ய உத்தரவிட்டது.
- விசாரணைக்குப்பின் சங்கம் கிரீஸின் மீது குற்றஞ்சாட்டி, கிரீஸ் போர் இழப்பீடு வழங்க வேண்டுமெனத் தீர்மானித்தது.
- 1925இல் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்தாகின்ற வரை பன்னாட்டுச் சங்கம் வெற்றிகரமாகவே செயலாற்றியது.
- லொக்கர்னோ உடன்படிக்கையின்படி ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகள் மேற்கு ஐரோப்பாவில் பரஸ்பரம் அமைதிக்கு உத்தரவாதமளித்தன.
- இதன் பின்னர் ஜெர்மனி பன்னாட்டுச் சங்கத்தில் இணைந்தது. பாதுகாப்புக் குழுவில் ஜெர்மனிக்கு நிரந்தர இடம் அளிக்கப்பட்டது.

தோல்விக்கானக் காரணங்கள்

- பன்னாட்டுச் சங்கம் முதல் உலகப் போரில் வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாகவே காணப்பட்டது.
- உலகளவில் அது உறுப்பினர்களைக் கொண்டிருந்தாலும் அது ஐரோப்பிய அரசியல் விவேகத்தின் மையமாக மாறியது.
- அரசியல் பிரச்சனைகளில் சங்கம் எடுக்கும் முடிவுகளுக்கு உறுப்பினர்கள் அனைவரின் ஏகோபித்த ஆதரவு அவசியமாயிற்று.
- சங்கத்திற்கென்று ராணுவம் இல்லை என்பதால், தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த அதனால் இயலவில்லை.
- 'கூட்டுப்பாதுகாப்பு' எனும் கோட்பாட்டை நடைமுறையில் செயல்படுத்தவே முடியவில்லை.
- சர்வாதிகாரிகளால் தலைமையேற்கப்பட்ட இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகள் சங்கத்தின் ஆணைகளுக்கு கட்டுப்பட மறுத்தபோது, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் மட்டுமே உறுதியாகச் செயல்படும் நிலையிலிருந்தன. ஆனால் இவ்விருநாடுகளும் சங்கத்திற்கு ஆதரவளிக்கும் நாடுகளல்ல.
- இவ்வமைப்பு உட்ரோ வில்சனின் சிந்தை செயல்வடிவமாக இருந்தபோதிலும் அவரால் தன்நாட்டையே ஒத்துக்கொள்ளச்செய்து சங்கத்தில் உறுப்பினராக்க முடியவில்லை.

கூடுதல் வினாக்கள்

5. ஜப்பானின் எழுச்சி பற்றி விவரி

- ஜப்பான் மேற்கத்திய நாடுகளைப் பின்பற்றிப் பலதுறைகளில் அவற்றுக்கு நிகராக மாறியது.
- ஜப்பான் தொழில்துறையில் சிறந்த நாடாகவும் அதே சமயத்தில் ஒரு ஏகாதிபத்திய சக்தியாகவும் ஆகியது.

- ஆட்சியாளர்கள் நிலமானிய முறை சிந்தனைகளைக் கொண்டிருந்தாலும் ஜப்பான் மேலை நாட்டுக் கல்வியையும் இயந்திரத் தொழில் நுட்பத்தையும் ஏற்றுக்கொண்டது.
- நவீன ராணுவம், கப்பற்படை ஆகியவற்றுடன் தொழில்துறையில் முன்னேறிய நாடாக ஜப்பான் மேலெழுந்தது.
- ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளிலும் ஜப்பான் ஐரோப்பிய சக்திகளை அடிபிசகாது அப்படியே பின்பற்றியது.
- 1894 இல் ஜப்பான் சீனாவின் மீது வலுக்கட்டாயமாக ஒரு போரை மேற்கொண்டது.
- இச்சீன–ஜப்பானியப்போரில் சீனாவை சிறிய நாடான ஜப்பான் தோற்கடித்தது உலகை வியக்க வைத்தது.
- இப்போரில் ஜப்பான் பெற்ற வெற்றி ஐரோப்பிய சக்திகளால் விரும்பப்படவில்லை.
- தொடர்ந்து ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் எச்சரிக்கையை மீறி ஜப்பான் லியோடங் தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் சேர்த்து இணைத்துக் கொண்டது.
- இந்த நடவடிக்கை மூலம் கிழக்கு ஆசியாவில் தானே வலிமை மிகுந்த அரசு என ஜப்பான் மெய்ப்பித்தது.

6. கடற்போர்களும் போரில் அமெரிக்க பங்கேற்றலும் பற்றி விவரி.

கடற்போர்கள்:

- 1916 இல் வடகடலில் கடற்போர் (ஜுட்லேண்டு போர்) நடைபெற்றது. இங்கிலாந்து இப்போரில் வெற்றி பெற்றது.
- இதன் பின்னர் ஜெர்மனியர் தங்களின் நீர்மூழ்கிப் போரைத் தொடங்கினர். அவை நேசநாடுகளின் கப்பல்களுக்கு இடையூறு செய்தன.
- புகழ்பெற்ற எம்டன் கப்பல் சென்னை மீது குண்டுகளை வீசியது.
- தங்கள் கப்பல்களின் போக்குவரத்தை இடைமறித்துத் தடை செய்த நடவடிக்கைகளுக்கு எதிர்நடவடிக்கையாக 1917ல் நடுநிலை நாடுகளின் கப்பல்களையும் மூழ்கடிக்கப்போவதாக ஜெர்மனி அறிவித்தது.
- இதன் பொருள் இங்கிலாந்தின் கடல்பகுதியில் பயணிக்கும் எந்தக் கப்பலாக இருந்தாலும் அவை ஜெர்மானிய நிர்மூழ்கிக் கப்பல்களால் தாக்கப்படும் என்பதே ஆகும்.

போரில் அமெரிக்கா பங்கேற்றல்

- லூசிடானியா என்னும் அமெரிக்கக் கப்பல் ஜெர்மனியால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது.
- இதன் விளைவாக பல அமெரிக்கர்கள் உயிரிழந்தனர். அதனால் அமெரிக்காவில் பெருங்கோபமும் சீற்றமும் ஏற்பட்டது.
- குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சன் ஜெர்மனிக்கு எதிராக 1917 இல் போர்ப்பிரகடனம் செய்தார். மாபெரும் பொருளாதார பலத்தோடு அமெரிக்கா போரில் இறங்கியது.
- அது நேசநாடுகளின் வெற்றியை முன்னரே எழுதப்பட்ட முடிவுரையாயிற்று.

7. ரஷ்யப் புரட்சியின் விளைவுகள் யாவை?

- ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியால் குறுகிய காலத்தில் ரஷ்யாவில் எழுத்தறிவின்மையையும் வறுமையையும் ஒழிக்க முடிந்தது.
- ரஷ்யாவின் தொழில்துறையும் வேளாண்மையும் உன்னதமான வளர்ச்சியைப் பெற்றன.
- வாக்குரிமை முதலாகப் பெண்களுக்கு சமஉரிமைகள் வழங்கப்பட்டன.
- தொழிற்சாலைகளும் வங்கிகளும் தேசியமயமாக்கப்பட்டன.
- நிலம் சமுதாயத்தின் சொத்தாக அறிவிக்கப்பட்டது. ஏழை விவசாயிகளுக்கு நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.
- லெனின் உடனடியாக அமைதிக்கான முயற்சிகளை மேற்கொண்டார்.
- மையநாடுகளின் கடுமையான நிபந்தனைகளை குறித்துக் கவலைகொள்ளாமல், புதிய அரசை உருவாக்குவதில் கவனம் செலுத்துவதற்காக அவர் போரிலிருந்து விலகினார்.
- 1918 இல் பிரெஸ்ட்–லிடோவஸ்க் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

காலக்கோடு (முக்கிய நிகழ்வுகள்)

1805	–	டிபால்கர் போரில் நெப்போலியன் தோல்வியுற்றார்.
1867	–	மெய்ஜி சகாப்தம்
1879	–	ஜுலுக்களால் இங்கிலாந்து தோற்கடிக்கப்பட்டது.
1881 - 1914	–	ஒட்டுமொத்த ஆப்ரிக்காவும் காலனியாதிக்கத்தின் கீழ் இருந்தது.
1882	–	மூவர் உடன்படிக்கை ஏற்பட்டது.
1884	–	இங்கிலாந்து சூடான் படைகளால் தோற்கடிக்கப்பட்டது.
1894 - 1895	–	ஜப்பான் சீனாவின் மீது படையெடுத்தது.
1894	–	பிரான்ஸ் – ரஷ்யா உடன்படிக்கை
1896	–	இத்தாலியப்படை அடோவா போர்களத்தில் எத்தியோப்பியா படைகளிடம் தோல்வி
1900	–	ஐரோப்பிய வல்லரசுகளில் ஐந்து அரசுகள், இரண்டு ஆயுதமேந்திய முகாம்களாகப் பிரிந்தன.
1902	–	ஆங்கிலோ – ஜப்பான் உடன்படிக்கை
1904	–	1. ஜப்பான் ரஷ்யாவைத் தோற்கடித்தது. 2. நட்புறவு ஒப்பந்தம்
1905	–	ஜப்பான் கொரியாவை கட்டுப்படுத்தியது
1908	–	துருக்கியில், இளம் துருக்கியர் புரட்சி நடைபெற்றது.
1910	–	ஜப்பான் கொரியாவை இணைத்துக் கொண்டது.
1912	–	1. மஞ்சு அரசவம்சம் வீழ்ச்சியுற்றது. 2. பால்கன் கழகம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. 3. முதல் பால்கன் போர்
1913	–	புகாரெஸ்ட் உடன்படிக்கை
1914	–	1. முதல் உலகப்போர் துவக்கம்.
1914	–	2. பால்கன் போர் வெடிப்பு 3. ஆஸ்திரிய இளவரசர் பிரான்ஸ் பெர்டினாண்டு படுகொலை. (செராஜிவோ படுகொலை) 4. மார்ன் போரில் பிரெஞ்சுப்படைகள் ஜெர்மனியரை வென்றது. 5. மெய்ஜி சாகாப்தம் முடிவு.
1915	–	1. ஜட்லாந்து உடன்படிக்கை 2. லண்டன் உடன்படிக்கை
1916 - 1917	–	ருமேனியாவும் கிரீஸும் மைய நாடுகளுக்கு எதிராக போர் அறிவிப்பு.
1916	–	1. வெர்டன் போர் 2. இத்தாலி நேசநாடுகள் அணியில் இணைந்தது. 3. ஜட்லாந்து போர் (ஜுட்லேண்டு போர்)
1917	–	1. சார் மன்னரின் ஆட்சி தூக்கி வீசப்பட்டது. 2. உட்ரோவில்சன் ஜெர்மனிக்கு எதிராக போர்ப்பிரகடனம் செய்தார்.

		3. ரஷ்யப் புரட்சி 4. நான்காவது டூமா முடிவுக்கு வந்தது.
1918	–	1. பிரேஸட் – லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கை கையெழுத்தானது. 2. முதல் உலகப்போர் முடிவு 3. ஜெர்மனி போர் நிறுத்தம்.
1919	–	வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை.
1920	–	அமெரிக்கா தனித்திருக்கும் கொள்கையை பின்பற்றியது.
1925	–	லொக்கார்னோ உடன்படிக்கை.
1926	–	ஜெர்மனி சர்வதேச சங்கத்தில் இணைந்தது.
1931	–	ஜப்பான் மஞ்சூரியாவைத் தாக்கியது
1933	–	ஜெர்மனி சர்வதேச சங்கத்திலிருந்து விலகியது.
1934	–	ரஷ்யா சர்வதேச சங்கத்தில் இணைந்தது.
1937	–	இத்தாலி சர்வதேச சங்கத்திலிருந்து விலகியது.
1939	–	1. ரஷ்யா சர்வதேச சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டது 2. சர்வதேச சங்கத்தின் கடைசி நடவடிக்கை.
1946	–	சர்வதேச சங்கம் கலைக்கப்பட்டது.

வரைபடங்கள்

கண்டங்களும், பெருங்கடல்களும்



ஆசியாவில் ஏகாதிபத்தியம்



வரலாறு

முதல் உலகப்போரில் ஐரோப்பா



வரலாறு

முதல் உலகப்போரில் ஐரோப்பா



அலகு வரலாறு

2 இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம்

மனவரைபடம்

இரண்டாம் உலகப்போர்

காலனிய எதிர்ப்புப் போராட்டங்கள் தீவிரமடையத் தொடங்கின.

தோல்வியடைந்த நாடுகளுக்கு எதிராகப் பாரிஸ் அமைதி மாநாட்டில் எடுக்கப்பட்ட கடுமையான முடிவுகளால், இத்தாலியிலும், ஜெர்மனியிலும் பாசிச சக்திகள் எழுச்சி பெற்றன.

1929 இல் அமெரிக்காவில் தோன்றிய பொருளாதாரப் பெருமந்தம், பின்னர் உலகத்தின் அனைத்து முதலாளித்துவ நாடுகளையும் பாதித்தது.

பிரெஞ்சு இந்தோ - சீனாவில் அடக்குமுறை நடவடிக்கைகளையும் பொருட்படுத்தாது காலனிய எதிர்ப்புப் போராட்டங்கள் வலுப்பெற்றன.

ஆப்பிரிக்காவில் ஐரோப்பியரின் ஆட்சியானது, 1884 – 85 இல் பெர்லினில் நடைபெற்ற காலனிய மாநாட்டிற்குப் பின்னரே உருவாக்கப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டது.

ஆங்கிலேயர் ஆப்பிரிக்கநேர்களை அடக்கி ஒடுக்கி தென்னாப்பிரிக்க ஒன்றியத்தை ஏற்படுத்தினர். அது இனவேற்றுமை இயல்பைக் கொண்டிருந்தது.

மன்றோ கொள்கை லத்தீன் அமெரிக்காவில் ஐரோப்பிய சக்திகள் காலனிகள் ஏற்படுத்துவதைத் தடுத்து அதன் மூலம் அவை முன்னதாகவே இறையாண்மைத் தகுதியைப் பெறுவதை உறுதிபடுத்தியது.

முதல் உலகப்போர்

நினைவில் கொள்க

- **முதல் உலகப்போர்** ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தை அடித்தளமாகக் கொண்ட உலக முதலாளித்துவ முறையைத் தகர்த்தது.
- முதல் உலகப்போருக்குப்பின் இத்தாலியிலும், ஜெர்மனியிலும் **பாசிசம்** எழுச்சிப்பெற்றது.
- முதல் உலகப்போருக்குப்பின் போராடும் தேசிய இயக்கங்களுக்கு **சோவியத் யூனியன்** ஆதரவு நல்கியது.
- அமெரிக்காவில் பங்குச் சந்தை வீழ்ச்சியடைந்த ஆண்டு **1929.**
- **பாசிசம்** என்பது தீவிர ஆதிக்க மனப்பான்மை கொண்ட அதிதீவிர தேசியவாதத்தின் ஓர் வடிவமாகும்.
- 1926 இல் முசோலினி சூட்டிக்கொண்ட பட்டம் **இரண்டாம் டியூஸ்.**
- ஹிட்லர் எழுதிய சுயசரிதை நூல் **மெயின் காம்ப்** (எனது போராட்டம்)
- ஹிட்லரின் ரகசிய காவல்படை **"கெஸ்டபோ"** என அழைக்கப்பட்டது.
- ஹிட்லரின் அரசு **யூத இன** மக்களுக்கு எதிராக ஒடுக்குமுறைக் கொள்கையைப் பின்பற்றியது.
- ஹிட்லர், **வெர்செய்ல்ஸ்** உடன்படிக்கையின் சரத்துகளை வேண்டுமென்றே மீறியது இரண்டாம் உலகப்போர் வெடிப்பதற்கு இட்டுச் சென்றது.
- இந்தியாவில் சுதேசி இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு **1905.**
- 1919 இல் இந்திய அரசுச் சட்டம் **இரட்டையாட்சி முறையை** அறிமுகம் செய்தது.
- **இன ஒதுக்கல்** என்பதன் பொருள் தனிமைப்படுத்துதல் அல்லது ஒதுக்கிவைத்தல் என்பதாகும்.
- பிராங்க்ளின் ரூஸ்வெல்ட்டின் கொள்கை **"நல்ல அண்டை வீட்டுக்காரன்"** என்பதாகும்.
- இத்தாலியில் **முசோலினியின்** தலைமையிலும், ஜெர்மனியில் **ஹிட்லரின்** தலைமையிலும் பாசிச அரசுகள் எழுச்சி பெற்றன.

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?**
   அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) போப் ஈ) ஸ்பெயின்

2. **யாருடைய ஆக்கிரமிப்போடு மெக்சிகோ நாகரிகம் நிலைகுலைந்து போயிற்று?**
   அ) ஹெர்மன் கோர்ட்ஸ் ஆ) பிரான்சிஸ்கோ பிசாரோ
   இ) தௌசெயின்ட் லாவெர்ட்யூர் ஈ) முதலாம் பெட்ரோ

3. **பெரு நாட்டை யார் தங்களுடைய பகுதிகளில் ஒன்றாக ஆக்கிக் கொண்டனர்?**
   அ) ஆங்கிலேயர் ஆ) ஸ்பானியர் இ) ரஷ்யர் ஈ) பிரெஞ்சுக்காரர்

4. **லத்தீன் அமெரிக்காவுடன் 'நல்ல அண்டைவீட்டுக்காரன்' எனும் கொள்கையைக் கடைப்பிடித்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் யார்?**
   அ) ரூஸ்வெல்ட் ஆ) ட்ரூமன் இ) உட்ரோவில்சன் ஈ) ஐசனோவர்

5. **உலகத்தின் எந்தப்பகுதி டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை?** PTA
   அ) ஐரோப்பா ஆ) லத்தீன் அமெரிக்கா
   இ) இந்தியா ஈ) சீனா

6. **தென்னாப்பிரிக்காவின் இனஒதுக்கல் கொள்கையின் மூளையாகச் செயல்பட்டவர் யார்?**
   அ) வெர்வோர்டு ஆ) ஸ்மட்ஸ் இ) ஹெர்சாக் ஈ) போதா

PTA

7. தென் அமெரிக்காவின் விடுதலையைத் துரிதப்படுத்தியது எது?
   அ) அமெரிக்கா அளித்த உதவி   ஆ) நெப்போலியனின் படையெடுப்புகள்
   இ) சைமன் பொலிவரின் பங்கேற்பு   ஈ) பிரெஞ்சுப் புரட்சி

8. லத்தீன் அமெரிக்க விவகாரங்களில் அமெரிக்காவின் தலையீட்டை நியாயப்படுத்துவதற்காக மன்றோ கொள்கையில் திருத்தம் கொண்டுவந்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் யார்?
   அ) தியோடர் ரூஸ்வெல்ட்   ஆ) ட்ரூமென்
   இ) ஐசனோவர்   ஈ) உட்ரோ வில்சன்

கூடுதல் வினாக்கள்

9. முதல் உலகப்போருக்குப்பின் இத்தாலியிலும் ஜெர்மனியிலும் எழுச்சி பெற்றது
   அ) பாசிசம்   ஆ) சோசியலிசம்   இ) கம்யூனியலிசம்   ஈ) கேப்பிடலிசம்

10. போராடும் தேசிய இயக்கங்களுக்கு ஆதரவு வழங்கிய நாடு
   அ) அமெரிக்கா   ஆ) பிரிட்டன்
   இ) ஜெர்மனி   ஈ) சோவியத்யூனியன்

11. உலகிற்கு கடன்வழங்கும் நாடு
   அ) ஜப்பான்   ஆ) அமெரிக்கா   இ) இத்தாலி   ஈ) இந்தியா

12. மேற்கு ஐரோப்பாவில் பழைய ஆட்சி அதிகாரத்திற்கு எதிராகத் திரும்பிய நாடுகளுள் முதல்நாடு
   அ) பிரான்ஸ்   ஆ) ஸ்பெயின்   இ) இத்தாலி   ஈ) இங்கிலாந்து

13. முசோலினி பாசிஸ்டுகளின் மாபெரும் அணி வகுப்பு ஒன்றை ________ நகரை நோக்கி நடத்தினார்.
   அ) லண்டன்   ஆ) பெர்லின்   இ) டோக்கியோ   ஈ) ரோம்

14. லேட்டரன் உடன்படிக்கை கையெழுத்தான ஆண்டு
   அ) 1919   ஆ) 1929
   இ) 1939   ஈ) 1909

15. "மெயின் காம்ப்" (Mein kampf - எனது போராட்டம்) என்ற சுயசரிதை நூலினை எழுதியவர்
   அ) முசோலினி   ஆ) லெனின்   இ) ஹிட்லர்   ஈ) ஸ்டாலின்

16. ஹிட்லர் ஜெர்மனியின் சான்சிலரான ஆண்டு
   அ) 1933   ஆ) 1922   இ) 1911   ஈ) 1931

17. "எந்தப் பொய்யும் மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டால் இறுதியில் உண்மையாகிவிடும்" எனக் கூறியவர்
   அ) கோயபெல்ஸ்   ஆ) ஹைட்ரிச் ஹிம்லர்   இ) ஹிண்டன்பர்க்   ஈ) மாட்டியோட்டி

18. ஹிட்லர் ________ மக்களுக்கு எதிராக ஒடுக்குமுறைக் கொள்கையைப் பின்பற்றினார்.
   அ) யூத இனம்   ஆ) பாலஸ்தீன இனம்   இ) செர்பிய இனம்   ஈ) நீக்ரோ இனம்

19. வியட்நாம் தேசியக்கட்சி தொடங்கப்பட்ட ஆண்டு
   அ) 1925   ஆ) 1927   இ) 1929   ஈ) 1931

20. இந்தியாவில் 1905 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இயக்கம்
   அ) ஒத்துழையாமை இயக்கம்   ஆ) கிலாபத் இயக்கம்
   இ) சட்ட மறுப்பு இயக்கம்   ஈ) சுதேசி இயக்கம்

21. ஆப்பிரிக்காவில் 1899 இல் தொடங்கி 1902 வரை மூன்றாண்டுகள் தொடர்ந்து நடைபெற்ற போர்கள்
   அ) போயர் போர்கள்   ஆ) பால்கன் போர்கள்   இ) பக்சார் போர்கள்   ஈ) நேட்டால் போர்கள்

22. தென்னாப்பிரிக்காவின் முதல் கறுப்பினக் குடியரசுத் தலைவர்

அ) நெல்சன் மண்டேலா ஆ) வெர்வோர்டு இ) டேவிட் வெப்ஸ்டன் ஈ) அஹமட் டிமல்

23. ________ களின் நாடு இராணுவமயமான நாடாகும்.

அ) மாயா ஆ) இன்கா இ) அஸ்டெக் ஈ) மெக்சிகன்

24. அடிமை முறையையும் பிரான்சின் காலனியர் கட்டுப்பாடுகளையும் தூக்கியெறிந்த முதல் கரீபிய நாடு

அ) ஜமைக்கா ஆ) ஹவானா இ) கௌதமாலா ஈ) ஹைதி

25. மன்றோ கோட்பாட்டில் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்ட ஆண்டு

அ) 1903 ஆ) 1904 இ) 1905 ஈ) 1906

விடைகள்

1. இ) போப்
2. அ) ஹெர்மன் கோர்ட்ஸ்
3. ஆ) ஸ்பானியர்
4. அ) ரூஸ்வெல்ட்
5. ஆ) லத்தீன் அமெரிக்கா
6. அ) வெர்வோர்டு
7. ஆ) நெப்போலியனின் படையெடுப்புகள்
8. அ) தியோடர் ரூஸ்வெல்ட்
9. அ) பாசிசம்
10. ஈ) சோவியத்யூனியன்
11. ஆ) அமெரிக்கா
12. இ) இத்தாலி
13. ஈ) ரோம்
14. ஆ) 1929
15. இ) ஹிட்லர்
16. அ) 1933
17. அ) கோயபெல்ஸ்
18. அ) யூத இனம்
19. ஆ) 1927
20. ஈ) சுதேசி இயக்கம்
21. அ) போயர் போர்கள்
22. அ) நெல்சன் மண்டேலா
23. இ) அஸ்டெக்
24. ஈ) ஹைதி
25. ஆ) 1904

II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. சமூக ஜனநாயக கட்சியை நிறுவியவர்__________.
2. நாசிச கட்சியின் பிரச்சாரங்களுக்குத் தலைமையேற்றவர்_________.
3. வியட்நாம் தேசியவாதிகள் கட்சி___________இல் நிறுவப்பட்டது.
4. நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல்படை___________என அழைக்கப்பட்டது.
5. தென்னாப்பிரிக்க ஒன்றியம் __________ ஆம் ஆண்டு மே மாதம் உருவானது.
6. ஆப்பிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவரான நெல்சன் மண்டேலா___________ ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.
7. _____________ஒரு ராணுவ நாடாகும்.
8. போயர்கள்__________என்றும் அழைக்கப்பட்டனர்.

கூடுதல் வினாக்கள்

9. ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தை அடித்தளமாகக் கொண்ட உலக முதலாளித்துவ முறையைத் தகர்த்த போர் __________
10. முதல் உலகப்போரின் முடிவில் வலுவான நிநிநிலையைக் கொண்டிருந்த நாடு ___________
11. 1929 அக்டோபர் 24 இல் ____________ நகரப்பங்குச் சந்தையில் பங்குகளின் விலைகள் செங்குத்தாய் சரிந்தன.
12. இங்கிலாந்தில் 1931 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ____________ கட்சி தோற்கடிக்கப்பட்டது.

13. இத்தாலியில் பாசிசக்கட்சி தொடங்கப்பட்ட ஆண்டு ___________

14. முசோலினியின் ரோம் நகர அணிவகுப்பு நடைபெற்ற ஆண்டு ___________

15. ___________ என்பது தீவிர ஆதிக்க மனப்பான்மை கொண்ட அதிதீவிர தேசியவாதத்தின் ஓர் வடிவமாகும்.

16. இரண்டாம் டியூஸ் என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டவர் ___________

17. ___________ சமயம் இத்தாலியின் மதமாக அங்கீகரிக்கப்பட்டது.

18. தேசிய சோசலிஸ்ட் ஜெர்மன் உழைப்பாளர் கட்சி சுருக்கமாக ___________ என்று அழைக்கப்பட்டது.

19. யூதர்களுக்கு எதிராக வன்முறைசார் அரசியலை வளர்த்தவர் ___________

20. ஹிட்லரை சான்சிலராக பதவியில் அமர்த்திய குடியரசுத்தலைவர் ___________

21. ஹிட்லர் அறிமுகப்படுத்திய கொடியில் பொறிக்கப்பட்ட சின்னம் ___________

22. ஹிட்லரின் போர்வீரர்கள் அணிந்திருந்த சட்டையின் நிறம் ___________

23. ஹிட்லரின் மெய்க்காப்பாளர்களை நிர்வகித்தவர் ___________

24. ___________ ன் மறைவிற்குப்பின் ஹிட்லர் ஜெர்மனியின் குடியரசுத்தலைவராகவும் ராணுவத்தின் தலைமைத் தளபதியாகவும் பொறுப்பேற்றார்.

25. ஹிட்லர் ___________ உடன்படிக்கையின் சரத்துகளை வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் மீறினார்.

26. இந்தோ – சீனாவில் இருந்த அரசியல் கட்சிகளில் ___________ கட்சியே முக்கியமானது.

27. இந்தியாவில் இரட்டையாட்சி முறை அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு ___________

28. வியட்நாமில் 1925 ல் 'புரட்சிகர இளைஞர் இயக்கம்' எனும் அமைப்பை நிறுவியவர் ___________

29. ஓட்டாவா பொருளாதார உச்சிமாநாடு நடைபெற்ற ஆண்டு ___________

30. தென்னாப்பிரிக்காவில் இரட்டை மேலாதிக்கக் கொள்கையைப் பின்பற்ற விரும்பியவர் ___________

31. ___________ என்பதன் பொருள் தனிமைப்படுத்துதல் அல்லது ஒதுக்கிவைத்தல் என்பதாகும்.

32. இன ஒதுக்கல் கொள்கையின் மூளையாகச் செயல்பட்டவர் ___________

33. "தளை தகர்ப்பாளர்" என அறியப்பட்டிருந்த விடுதலை வீரர் ___________

34. 1828 ல் பிரேசிலிடமிருந்து பிரிந்த நாடு ___________

35. "மிருதுவாகப் பேசுங்கள், ஒரு தடியையும் வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிய அமெரிக்க குடியரசுத் தலைவர் ___________

விடைகள்

1. பெர்டினன்ட் லாஸ்ஸல்லி	2. ஜோசப் கோயபெல்ஸ்	3. 1927
4. கெஸ்டபோ	5. 1910	6. 27
7. அஸ்டெக்குகள்	8. ஆப்பிரிக்கநேர்கள்	9. முதல் உலகப்போர்
10. அமெரிக்கா	11. நியூயார்க்	12. தொழிலாளர் கட்சி
13. 1919	14. 1922	15. பாசிஸம்
16. முசோலினி	17. ரோமன் கத்தோலிக்க சமயம்	18. நாசிசக்கட்சி
19. ஹிட்லர்	20. வான் ஹிண்டன்பர்க்	21. ஸ்வஸ்திக்
22. பழுப்பு	23. ஹைட்ரிச் ஹிம்லர்	24. ஹிண்டன்பர்க்
25. வெர்செய்ல்ஸ்	26. வியட்நாம் தேசியக்கட்சி	27. 1919
28. ஹோசி மின்	29. 1932	30. ஹெர்சாக்
31. இன ஒதுக்கல்	32. வெர்வோர்டு	33. சைமன் பொலிவர்
34. உருகுவே	35. தியோடர் ரூஸ்வெல்ட்	

III. சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. i) முதல் உலகப் போரின் போது ஆஸ்திரியாவை தெற்கு முனைப் போரில் தொடர்ந்து முனைப்புடன் ஈடுபட வைப்பதே இத்தாலியின் முக்கியக்கடமையாக இருந்தது. **PTA**
   ii) இத்தாலியைக் காட்டிலும் நீண்ட காலங்கழித்தே ஜெர்மனி பாசிசத்தைக் கைக்கொண்டது.
   iii) அமெரிக்காவில் மிகப்பெரும் பங்குச் சந்தை வீழ்ச்சி 1929ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ஆம் நாளில் ஏற்பட்டது.
   iv) ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் மீதானத் தடை 1966இல் விலக்கிக் கொள்ளப்பட்டது.
   அ) (i), (ii) ஆகியவை சரி　　ஆ) (iii) சரி
   இ) (iii), (iv) ஆகியவை சரி　　ஈ) (i),(ii), (iii) ஆகியவை சரி

2. **கூற்று** : தற்காப்புப் பொருளாதாரக் கொள்கையை முன்னிறுத்தியப் பொருளாதார தேசியம் எனும் புதிய அலையால் உலக வணிகம் பாதிக்கப்பட்டது. **PTA**
   காரணம் : அமெரிக்கா, கடன்பட்ட நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்ய விருப்பமில்லாமல் இருந்ததனால் இந்நிலை உண்டானது.
   அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி
   ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல
   இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு.
   ஈ) காரணம் சரி, ஆனால் கூற்றுக்குப் பொருந்தவில்லை.

3. **கூற்று** : 1884 – 85 இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாடு காலனியாதிக்க சக்திகள் ஆப்பிரிக்காவைத் தங்களின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானித்தது.
   காரணம் : ஆங்கிலேயருக்கும், போயர்களுக்கும் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற போர் இத்தீர்மானத்திற்கு எதிர்ப்பானதாகும்.
   அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி
   ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல
   இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு.
   ஈ) கூற்று தவறு, ஆனால் காரணம் கூற்றுடன் பொருந்தவில்லை.

கூடுதல் வினாக்கள்

4. (i) பெருமந்தம் பல நாடுகளில் சமுதாய நிலைமைகளை மாற்றியமைத்தது.
   (ii) 1931 இல் இங்கிலாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தொழிலாளர் கட்சி வெற்றிப் பெற்றது.
   (iii) அமெரிக்க குடியரசுக் கட்சி பெருமந்தத்திற்குப் பின்னர் இருபது ஆண்டுகளில் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் மக்களால் ஒதுக்கப்பட்டது.
   (iv) தங்க மதிப்பீட்டு அளவு என்பது ஒரு நாணய முறை.
   அ) (i), (ii) ஆகியவை சரி
   ஆ) (iii) சரி
   இ) (iii) மற்றும் (iv) சரி
   ஈ) (ii) மற்றும் (iv) சரி

5. (i) ஹிட்லர் இரும்பு வேலை செய்பவரின் மகனாவார்
   (ii) முசோலினி தொடக்கப்பள்ளி ஆசிரியருக்கான தகுதியைப் பெற்றிருந்தார்
   (iii) 1919 இல் நாசிசக் கட்சி தொடங்கிய போது முசோலினி உடனடியாக அதில் உறுப்பினரானார்.
   (iv) முசோலினி மாபெரும் அணிவகுப்பு ஒன்றை ரோமாபுரியை நோக்கி நடத்தினார்.
   அ) (i) (ii) ஆகியவை சரி
   ஆ) (iii) மற்றும் (iv) சரி
   இ) (i) மற்றும் (iv) சரி
   ஈ) (ii) மற்றும் (iv) சரி

6. (i) பாசிஸம் இத்தாலியில் தோன்றியது
   (ii) பாசிஸம் என்பது தீவிர ஆதிக்க மனப்பான்மை கொண்ட தேசியவாதத்தின் ஓர் வடிவமாகும்.
   (iii) சர்வாதிகார வல்லமையும் எதிர்ப்பை வன்முறை கொண்டு அடக்குவதும் பாசிஸத்தின் பண்புகளாகும்.
   (iv) பாசிஸம் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவில் முக்கியத்துவம் பெற்றது.
   அ) (i), (ii), (iii) ஆகியவை சரி
   ஆ) (ii), (iii),(iv) ஆகியவை சரி
   இ) (iii) மற்றும் (iv) சரி
   ஈ) அனைத்தும் சரி

7. (i) இந்தியாவில் சுதேசி இயக்கம் தொடங்கப்பட்டது.
   (ii) 1919 இல் இந்திய அரசு சட்டம் இரட்டையாட்சி முறையை அறிமுகம் செய்தது.
   (iii) முதல் உலகப்போரானது விரைவான அரசியல் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தியது.
   (iv) இந்திய தேசிய காங்கிரஸ் இரட்டையாட்சி தொடர்பான ஏற்பாடுகளை புறக்கணிக்க முடிவு செய்தது.
   அ) (i) மற்றும் (ii) சரி
   ஆ) (iii) மற்றும் (iv) சரி
   இ) (i) மற்றும் (iii) சரி
   ஈ) அனைத்தும் சரி

8. கூற்று : போராடும் தேசிய இயக்கங்களுக்கு சோவியத் யூனியன் ஆதரவு வழங்கியது.
   காரணம் : போராடும் தேசிய இயக்கங்கள் கம்யூனிசக் கொள்கையை பின்பற்றின.
   அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி
   ஆ) கூற்று சரி ஆனால் காரணம் சரியான விளக்கமல்ல
   இ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி
   ஈ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு

9. கூற்று : அமெரிக்கா முதல் உலகப்போரின் முடிவில் வலுவான நிதிநிலையைக் கொண்டிருந்தது.
   காரணம் : அமெரிக்கா தவிர ஏனைய உலக நாடுகள் அதன் கடனாளிகளாக இருந்தன.
   அ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
   ஆ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி
   இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு
   ஈ) கூற்றும் காரணமும் சரி

10. கூற்று : இந்திய விவசாயிகளும் பொருள் உற்பத்தியாளர்களும் உயிர் பிழைப்பதற்காகத் தங்களிடம் இருந்த தங்கம், வெள்ளி ஆகியவற்றை விற்கும் நிலை ஏற்பட்டது.
   காரணம் : பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மைக்கும் உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கும் மரண அடியைக் கொடுத்தது.
   அ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.
   ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் சரியான விளக்கமல்ல.
   இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு.
   ஈ) காரணம் சரி ஆனால் கூற்றுக்குப் பொருந்தவில்லை.

விடைகள்

1. ஈ) (i),(ii), (iii) ஆகியவை சரி
2. ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல
3. அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி.
4. இ) (iii) மற்றும் (iv) சரி
5. ஈ) (ii) மற்றும் (iv) சரி
6. அ) (i), (ii), (iii) ஆகியவை சரி
7. ஈ) அனைத்தும் சரி
8. ஆ) கூற்று சரி ஆனால் காரணம் சரியான விளக்கமல்ல
9. ஈ) கூற்றும் காரணமும் சரி
10. அ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.

IV.பொருத்துக:

பாடநூல் வினா

அ)

1. டிரான்ஸ்வால்	அ) ஜெர்மனி	
2. டோங்கிங்	ஆ) ஹிட்லர்	
3. ஹிண்டன்பர்க்	இ) இத்தாலி	
4. மூன்றாம் ரெய்க்	ஈ) தங்கம்	
5. மாட்டியோட்டி	உ) கொரில்லா நடவடிக்கைகள்	

விடை: 1) ஈ 2) உ 3) அ 4) ஆ 5) இ

கூடுதல் வினாக்கள்

ஆ)

1. நியூயார்க்	அ) ஜெர்மனி
2. ரோம்	ஆ) கரீபியா
3. பெர்லின்	இ) அமெரிக்கா
4. ஹைதி	ஈ) லத்தீன் அமெரிக்கா
5. கவுதமாலா	உ) இத்தாலி

விடை: 1) இ 2) உ 3) அ 4) ஆ 5) ஈ

இ)

1. இன்கா	அ) பட்டம்
2. கெஸ்டபோ	ஆ) நாகரிகம்
3. ஸ்வஸ்திக்	இ) உடன்படிக்கை
4. டியூஸ்	ஈ) இரகசிய காவல்படை
5. லேட்டரன்	உ) சின்னம்

விடை: 1) ஆ 2) ஈ 3) உ 4) அ 5) இ

ஈ)

1. 1925	அ) சுதேசி இயக்கம்
2. 1929	ஆ) வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை
3. 1919	இ) உலகப்பெருமந்தம்
4. 1935	ஈ) லோகர்னோ ஒப்பந்தம்
5. 1905	உ) இந்திய அரசுச்சட்டம்

விடை: 1) ஈ 2) இ 3) ஆ 4) உ 5) அ

உ) 1. முசோலினி — அ) வியட்நாம்
2. ஹிட்லர் — ஆ) தென்னாப்பிரிக்கா
3. ஹோ சி மின் — இ) இத்தாலி
4. நெல்சன் மண்டேலா — ஈ) அமெரிக்கா
5. ரூஸ்வெல்ட் — உ) ஜெர்மனி

விடை
1) இ
2) உ
3) அ
4) ஆ
5) ஈ

V. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. இந்தோ-சீனாவில் நடைபெற்ற 'வெள்ளை பயங்கரம்' குறித்து நீங்கள் அறிந்ததென்ன? PTA

- 1929 இல் வியட்நாம் வீரர்கள் ராணுவப் புரட்சி செய்தனர்.
- பிரெஞ்சு கவர்னர் ஜெனரலைக் கொலை செய்வதற்கான முயற்சி தோல்வியடைந்தது.
- இதனைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட்களின் தலைமையில் மிகப்பெரும் விவசாயிகளின் புரட்சி நடைபெற்றது.
- இப்புரட்சி ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து "வெள்ளை பயங்கரவாதம்" (White Terror) என்பது அரங்கேறியது.
- அதில் புரட்சியாளர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர்.

2. ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கவும்.

- இங்கிலாந்து பொருளாதாரப் பெருமந்தத்தின் தீய விளைவுகளைத் தனது காலனி நாடுகளின் தோள்களுக்கு மாற்றியது.
- இங்கிலாந்திற்கும் ஆங்கிலப் பேரரசின் உறுப்பு நாடுகளுக்கும் 1932 இல் நடைபெற்ற ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டில் இருதரப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.
- இம்மாநாட்டில் பங்கேற்ற நாடுகள் (இந்தியா உட்பட) ஏனைய நாட்டுப் பொருள்களைக் காட்டிலும் இங்கிலாந்து பொருட்களுக்கு முன்னுரிமை வழங்க ஒத்துக்கொண்டன.

3. மன்றோ கோட்பாட்டை விளக்குக.

- அமெரிக்கக் குடியரசுத் தலைவர் மன்றோ தனது புகழ்பெற்ற மன்றோ கோட்பாட்டை முன்வைத்தார்.
- இக்கோட்பாடு அமெரிக்கக் கண்டம் சார்ந்த விஷயங்களில் ஐரோப்பியர்கள் தலையிடுவதைத் தடைசெய்தது.
- அமெரிக்காவின் எந்தப் பகுதியிலும் அது வடக்கோ, தெற்கோ ஐரோப்பியர்கள் தலையிட்டால் அது அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு எதிரான போராகக் கருதப்படும் என அறிவித்தார்.
- இப்பயமுறுத்தல் ஐரோப்பியர்களை அச்சம் கொள்ள வைத்து அவர்களை தென்அமெரிக்க விவகாரங்களிலிருந்து விலகியிருக்கச் செய்தது.
- 1930 வாக்கில் ஒட்டுமொத்த தென் அமெரிக்காவும், ஐரோப்பிய மேலாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது.
- இவ்வாறு மன்றோ கோட்பாடு ஐரோப்பிய நாடுகளிடமிருந்து அமெரிக்க, தென் அமெரிக்க குடியரசுகளைக் காப்பற்றியது.

4. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை?

- 1922 அக்டோபரில் ஒரு நீண்ட அமைச்சரவைச் சிக்கலின் போது முசோலினி பாசிஸ்டுகளின் மாபெரும் அணிவகுப்பு ஒன்றை ரோமாபுரியை நோக்கி நடத்தினார்.
- முசோலினியின் வலிமையைக் கண்டு வியந்துபோன அரசர் முசோலினியை ஆட்சியமைக்க வரவேற்றார்.

5. 1884 – 85 இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாட்டின் சாரத்தைக் குறிப்பிடுக.

- 1884–1885 ஆண்டுகளில் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாட்டில் காலனியாதிக்க சக்திகள் ஆப்பிரிக்காவைத் தங்கள் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.
- ஆனால் ஆங்கிலேயருக்கும் தென்னாப்பிரிக்க போயர்களுக்கும் இடையே நடைபெற்ற போர் இத்தீர்மானத்திற்கு எதிரான செயலாகும்.

6. பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது?

- பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மைக்கும் உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கும் மரண அடியைக் கொடுத்தது.

- வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலை பாதியாகக் குறைந்தது. ஆனால் விவசாயிகள் நிலத்திற்குக் கொடுக்க வேண்டிய குத்தகைக் தொகையில் மாற்றமேதுமில்லை.
- விவசாய பொருட்களின் விலையைப் பொறுத்தமட்டிலும் அரசுக்கு விவசாயிகள் செலுத்தவேண்டிய பணம் இரண்டு மடங்காயிற்று.
- இந்திய விவசாயிகளும் பொருள் உற்பத்தியாளர்களும் உயிர் பிழைப்பதற்காகத் தங்களிடம் இருந்த தங்கம், வெள்ளி ஆகியவற்றை விற்கும் நிலை ஏற்பட்டது.
- விலைவாசியில் ஏற்பட்ட மிகப்பெரும் வீழ்ச்சி இந்திய தேசியவாதிகளை உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் கோரிக்கையை வைக்கத்தூண்டியது.

7. ஸ்மட்ஸ் – ஹெர்சாக் உடன்படிக்கைக்கானக் காரணங்களை விளக்குக.

- உலகப் பொருளாதார பெருமந்தம் தென் அமெரிக்காவிற்கு வேலையில்லாத் திண்டாட்டத்தையும், கடனைத் தீர்க்க வகையற்ற நிலையையும் ஏற்படுத்தியது.
- இச்சந்தர்ப்பத்தில் தொழிலாளர் இயக்கம் தேசியக் கட்சிக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொண்டது.
- ஒரு நாட்டின் பொருளாதாரப் பிரச்சனைகளை தீர்த்துவைக்க ஒரு கூட்டணி அரசு தேவையென ஸ்மட்ஸ் நம்பினார்.
- ஆகவே 1934இல் தென் ஆப்பிரிக்கக் கட்சியும் (ஸ்மட்ஸ்), தேசியக் கட்சியும் (ஹெர்சார்) இணைந்து ஐக்கிய தென் ஆப்பிரிக்க தேசியக் கட்சி அல்லது ஐக்கிய கட்சி உருவானது.
- ஸ்மட்ஸ்–ஹெர்சாக் கூட்டணி 1939 வரை நீடித்தது.

8. டாலர் ஏகாதிபத்தியம் – தெளிவுபட விளக்குக. **PTA**

டாலர் ஏகாதிபத்தியம்: இச்சொல் தொலைதூர நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்வதன் மூலம் அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தவும், தக்கவைத்துக் கொள்ளவும், அமெரிக்கா பின்பற்றிய கொள்கையை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படுவதாகும்.

கூடுதல் வினாக்கள்

9. இத்தாலியிலும், ஜெர்மனியிலும் பாசிசம் எழுச்சி பெறக் காரணமென்ன?

- முதல் உலகப்போர் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தை அடித்தளமாகக் கொண்ட உலக முதலாளித்துவ முறையைத் தகர்த்தது.
- இப்போரினால் ஐரோப்பிய நாடுகள் அரசியல் ரீதியாகவும் நிதிசார்ந்த வகையிலும் கவலைக்குரிய அளவிற்கு தளர்வடைந்து வலிமை குன்றின.
- போரினால் ஏற்பட்ட வர்த்தக மற்றும் நிதிசார்ந்த சமனற்ற நிலையும், அதைத் தொடர்ந்து நிலவிய மகிழ்வற்ற அமைதியும், 1920 களில் முழுவதுமாய் உறுதியற்ற தன்மைகளை உருவாக்கின.
- வர்த்தகங்களுக்கிடையிலான முரண்பாடுகளும், தொழிலாளர்களுக்கும், அரசைக் கட்டுப்படுத்திய ஆளும் வர்க்கங்களுக்கும் இடையிலான முரண்பாடுகளும் தீவிரமடைந்தன.
- இதன் விளைவாக இத்தாலியிலும், ஜெர்மனியிலும் பாசிசம் எழுச்சி பெற்றது.

10. தங்கமதிப்பீட்டு அளவு என்றால் என்ன?

- தங்கமதிப்பீட்டு அளவு என்பது ஒரு நாணயமுறையாகும்.
- இதில் ஒரு நாட்டினுடைய நாணயம் அல்லது காகிதப்பணம் தங்கத்தோடு நேரடித் தொடர்புடைய ஒரு மதிப்பினைப் பெற்றிருக்கும்.
- தங்க மதிப்பீட்டளவை பின்பற்றும் நாடுகள் காகிதப்பணத்தை ஒரு குறிப்பிட்ட அளவு தங்கமாக மாற்றுவதற்கு சம்மதம் தெரிவித்திருப்பர்.

11. பாசிசம் என்றால் என்ன?

- பாசிசம் என்பது தீவிர ஆதிக்க மனப்பான்மை கொண்ட அதிதீவிர தேசியவாதத்தின் ஓர் வடிவமாகும்.
- சர்வாதிகார வல்லமையும், எதிர்ப்பை வன்முறை கொண்டு அடக்குவதும் சமூகத்தையும் பொருளாதாரத்தையும் வலுவான மத்திய அதிகாரத்தின் கீழ் வைத்திருப்பதும் இதன் பண்புகளாகும்.
- இது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதிகளில் ஐரோப்பாவில் முக்கியத்துவம் பெற்றது.

12. லேட்டரன் உடன்படிக்கை பற்றிக் கூறுக. **PTA**

- லேட்டரன் உடன்படிக்கை போப்பாண்டவருக்கும் முசோலினிக்கும் இடையே 1929 ஆம் ஆண்டு ஏற்பட்டது. இதன்படி முசோலினி வாட்டிகன் நகரத்தை ஒரு சுதந்திர அரசாக அங்கீகரித்தார். இதனால் அவருக்கு ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் ஆதரவு கிடைத்தது.
- இதற்குக் கைமாறாக திருச்சபை இத்தாலிய அரசை அங்கீகரித்தது.
- ரோமன் கத்தோலிக்கச் சமயம் இத்தாலியின் மதமாக அங்கீகரிக்கப்பட்டது.
- பள்ளிகளில் மதபோதனைகள் செய்வதற்கு ஆணையிடப்பட்டது.

13. வெர்செய்ஸ் உடன்படிக்கையின் சரத்துகளை ஹிட்லர் ஏன் எதிர்த்தார்?

- ஹிட்லருடைய அயலுறவுக் கொள்கையானது ஜெர்மனியின் படை பலத்தை முன்பிருந்ததைப் போலவே பெருக்குவது, ஜெர்மனி வலுவிழந்து போவதற்குக் காரணமாயிருந்த வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துகளை ஏற்காமல் மீறுவது என்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.
- ஹிட்லர் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துகளை வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் மீறியது இரண்டாம் உலகப்போர் வெடிப்பதற்கு இட்டுச் சென்றது.

14. காலனிய நீக்கம் என்றால் என்ன?

- காலனிய நீக்கம் என்பது காலனி ஆதிக்க சக்திகள் காலனிகள் மீது கொண்டுள்ள நிறுவனம் மற்றும் சட்டம் சார்ந்த கட்டுப்பாடுகளைச் சொந்த தேசிய அரசுகளிடம் வழங்குவதாகும்.

15. 1935 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டம் பற்றிக் கூறுக.

- ஆங்கிலேயர்களுக்கு இந்திய தேசியவாதிகளைச் சமாதானம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது.
- அதன் வெளிப்பாடு 1935 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டமாகும்.
- இச்சட்டம் உள்ளாட்சி அரசு நிறுவனங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கியதோடு நேரடித் தேர்தலையும் அறிமுகம் செய்தது.
- இச்சட்டத்தின் அடிப்படையில் நடத்தப்பட்ட தேர்தல்களில் பெரும்பாலான மாகாணங்களில் அகில இந்திய தேசிய காங்கிரஸ் அதிர்வை ஏற்படுத்தும் வெற்றியைப் பெற்றது.

16. போயர்கள் என்போர் யாவர்?

- தென்னாப்பிரிக்காவில் குடியேறிய டச்சுக்குடியேறிகளின் வம்சாவளியினரே ஆப்பிரிக்கநேர்கள் என்று அழைக்கப்பட்ட போயர்கள் ஆவர். இவர்களது மொழி ஆப்பிரிக்கான்ஸ் என்பதாகும்.

17. 'அஸ்டெக்குகள் நாடு' பற்றிக் கூறுக.

- அஸ்டெக்குகள் நாடு இராணுவமயமான நாடாகும். அவர்கள் இராணுவக் குடியிருப்புகளையும் கோட்டைப் பாதுகாப்புப் படைகளையும் வலைப்பின்னலைப் போன்று ராணுவச் சாலைகளையும் கொண்டிருந்தனர்.
- பேரரசில் மேலெழுந்தவாரியாய், அமைதி மற்றும் பாதுகாப்பு இருந்தாலும், மக்கள் இரக்கமின்றி ஒடுக்கப்பட்டும் சுரண்டப்பட்டும் இன்னலுக்கு உள்ளாயினர்.

18. மத்திய அமெரிக்காவின் ஐந்து குடியரசு நாடுகள் யாவை?

- கோஸ்டாரிக்கா எல் சால்வடார் கவுதமாலா ஹோண்டுராஸ் நிகரகுவா

VI. ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. இந்தோ - சீனாவின் காலனிய எதிர்ப்புப் போராட்டம்.

அ) காலனியாதிக்க நீக்கம் எனும் கோட்பாட்டைத் தெளிவுபட விளக்குக.
காலனிய நீக்கம் என்பது காலனியாதிக்க சக்திகள் காலனிகள் மீது கொண்டுள்ள நிறுவனம் மற்றும் சட்டம் சார்ந்த கட்டுப்பாடுகளைச் சொந்த தேசிய அரசுகளிடம் வழங்குவதாகும்.

ஆ) இந்தோ - சீனாவை உருவாக்கிய மூன்று நாடுகள் எவை?
கம்போடியா, லாவோஸ், வியட்நாம்.

இ) காலனியாதிக்க எதிர்ப்புணர்வுகள் வளர்வதற்கு கம்யூனிசச் சிந்தனைகள் எவ்வாறு உதவின?
சீனத் தலைநிலப்பகுதியிலிருந்து பரவிய கம்யூனிசச் சிந்தனைகளின் தாக்கத்தினால், இந்தோ–சீனாவின் கணிசமான செல்வம் காலனியாதிக்கச் சக்திக்கே பயன்படுவதை பலர் உணர்ந்தனர்.

ஈ) இந்தோ - சீனாவின் மைய நீரோட்ட அரசியல் கட்சி எது?
வியட்நாம் தேசியக் கட்சி.

2. ஹோ சி மின்

அ) ஹோ சி மின் எங்கே பிறந்தார்?
ஹோ சி மின் (1890 இல்) டோங்கிங்கில் பிறந்தார்.

ஆ) ஹோ சி மின் எவ்வாறு நன்கறியப்பட்ட வியட்நாமின் தேசியவாதியானார்?
- தினசரிகளில் அவர் எழுதிய கட்டுரைகள் குறிப்பாக "விசாரணையில் பிரெஞ்சு காலனியாதிக்கம்" எனும் சிற்றேடு அவரை நன்கறியப்பட்ட வியட்நாமின் தேசியவாதி ஆக்கியது.

இ) ஹோ சி மினின் புரட்சிகர இளைஞர் இயக்கம் குறித்து நீவிர் அறிவதென்ன?
- ஹோ சி மின் மாஸ்கோ சென்று புரட்சியின் நுட்பங்களைக் கற்றார்.
- அவர் 1925 இல் புரட்சிகர இளைஞர் இயக்கம் எனும் அமைப்பை நிறுவினார்.

ஈ) வியட்நாம் விடுதலைச் சங்கம் இந்தோ - சீனாவில் எவ்வாறு அழைக்கப்பட்டது?
வியட்நாம் விடுதலைச் சங்கம் இந்தோ – சீனாவில் "வியட்மின்" என்று அழைக்கப்பட்டது.

3. தென் அமெரிக்க அரசியல் நிகழ்வுப் போக்குகள்

அ) ஒட்டுமொத்த தென் அமெரிக்காவும் எந்த ஆண்டில் ஐரோப்பிய மேலாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது?
1830 ஆம் ஆண்டு

ஆ) மத்திய அமெரிக்காவில் எத்தனைக் குடியரசுகள் உருவாயின?
ஐந்து (கோஸ்டோரிக்கா, எல் சால்வடார், கவுதமாலா, ஹோண்டுராஸ், நிகரகுவா)

இ) எந்த ஆண்டில் கியூபா அமெரிக்காவால் கைப்பற்றப்பட்டது?
1898 ஆம் ஆண்டு கியூபா அமெரிக்காவால் கைப்பற்றப்பட்டது.

ஈ) தென் அமெரிக்காவில் குழுக்களின் ஆட்சிகள் பலராலும் விரும்பப்படாமைக்குக் காரணம் என்ன?
பொருளாதாரப் பெருமந்தத்தால் உருவான சூழ்நிலையில் சிலரின் அல்லது சில குடும்பங்களின் ஆட்சியால் எதிர்பார்ப்புகளை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

கூடுதல் வினாக்கள்

4. முசோலினியின் எழுச்சி

அ) முசோலினியின் திறமைகள் யாவை?

- முசோலினி தொடக்கப்பள்ளி ஆசிரியருக்கான தகுதி பெற்றவர்.
- சோசியலிஸச் சிந்தனைகள் கொண்ட பத்திரிக்கையாளர்.
- ஆற்றல் மிக்க பேச்சாளர்.

ஆ) பாசிஸ்டுகளுக்கு ஆதரவளித்தோர் யாவர்?

தொழிலதிபர்கள், தேசியவாதிகள், முன்னாள் ராணுவத்தினர், நடுத்தரவர்க்கத்தினர், மற்றும் மனநிறைவற்ற இளைஞர்கள் ஆகியோர் பாசிஸ்டுகளுக்கு ஆதரவளித்தனர்.

இ) முசோலினி தனக்கு சூட்டிகொண்ட பட்டம் யாது?

இரண்டாம் டியூஸ் (தலைவர்)

ஈ) 1922 ஆம் ஆண்டு நடைபெற்ற மாபெரும் அணிவகுப்பின் விளைவு யாது?

மாபெரும் அணிவகுப்பில் முசோலினியின் வலிமையைக் கண்டு வியந்துபோன அரசர் முசோலினியை ஆட்சி அமைக்க வரவேற்றார்.

5. ஜெர்மானிய பாசிசத்தின் தோற்றம்

அ) ஜெர்மனியின் பாசிசத்தின் தோற்றம் எவ்வாண்டிலிருந்து தொடங்குகிறது?

ஜெர்மனியின் பாசிசத்தின் தோற்றம் 1919 லிருந்து தொடங்குகிறது.

ஆ) ஹிட்லர் எவற்றை இணைத்துப் பார்த்தார்?

ஜூடாயிசத்தையும், மார்க்ஸியத்தையும் ஹிட்லர் இணைத்துப் பார்த்தார்.

இ) ஹிட்லர் சிறையில் தள்ளப்படக் காரணம் என்ன?

- 1923 இல் பவேரியாவின் அதிகாரத்தைக் கைப்பற்ற ஹிட்லர் முயற்சி மேற்கொண்டார். அம்முயற்சியில் தோல்வி அடைந்தார். எனவே சிறையில் அடைக்கப்பட்டார்.

ஈ) ஹிட்லர் எழுதிய நூல் எது?

தனது சுயசரிதை நூலான 'மெயின் காம்ப்' (Mein kampf - எனது போராட்டம்) எனும் நூலை எழுதினா.

6. தென்னாப்பிரிக்காவில் இன ஒதுக்கல்:

அ) இன ஒதுக்கல் என்றால் என்ன?

இன ஒதுக்கல் என்பதன் பொருள் தனிமைப் படுத்துதல் அல்லது ஒதுக்கி வைத்தல் என்பதாகும்.

ஆ) இன ஒதுக்கல் கொள்கையின் மூளையாகச் செயல்பட்ட பிரதமர் யார்?

தென் ஆப்பிரிக்காவின் பிரதமராக இருந்த வெர்வோர்டு என்பவர் ஆவார்.

இ) ஆப்பிரிக்க தேசியக்கட்சி எவ்வாண்டு நிறுவப்பட்டது?

1912 ஆம் ஆண்டு ஆப்பிரிக்க தேசியக்கட்சி நிறுவப்பட்டது.

ஈ) தென்னாப்பிரிக்காவின் முதல் கறுப்பினக் குடியரசுத் தலைவர் யார்?

நெல்சன் மண்டேலா தென்னாப்பிரிக்காவின் முதல் கறுப்பினக் குடியரசுத் தலைவராவார்.

7. ஐரோப்பியக் காலனியாதிக்கமும் அதன் தாக்கமும்:

அ) அஸ்டெக்குகள் பற்றி நீ என்ன அறிவாய்?

அஸ்டெக்குகள் நாடு இராணுவமயமான நாடாகும். அவர்கள் ராணுவக் குடியிருப்புகளையும் கோட்டைப் பாதுகாப்புப் படைகளையும் வலைப்பின்னலைப் போன்ற ராணுவச் சாலைகளையும் கொண்டிருந்தனர்.

ஆ) மெக்ஸ்ஸிகன் நாகரிகம் சீர்குலையக் காரணமாக இருந்தவர் யார்?
மெக்ஸ்ஸிகன் நாகரிகம் சீர்குலையக் காரணமாக இருந்தவர் ஹெர்னன் கோர்டஸ்.

இ) கோர்டஸின் படையெடுப்பில் நிகழ்ந்த உலகளாவிய அழிவு என்ன?
கோர்டஸின் படையெடுப்புடன் ஒட்டுமொத்த மெக்சிகன் நாகரிகமும் சீர்குலைந்தது. அத்துடன் பெருமை வாய்ந்த நகரமான டெனோச்டிட்லானும், அந்நாகரிகத்திற்கான சுவடுகளேதுமின்றி அழிந்துபோனது. இது உலகின் மிக மோசமான இனப்படுகொலைகளில் ஒன்றாகும்.

ஈ) எந்த நாட்டை ஸ்பானியர்கள் தங்கள் பகுதிகளில் ஒன்றாய் மாற்றினர்?
பெரு நாட்டை ஸ்பானியர்கள் தங்கள் பகுதிகளில் ஒன்றாய் மாற்றினர்.

VII. விரிவான விடையளிக்கவும்

பாடநூல் வினாக்கள்

1. ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.

ஹிட்லர் ஜெர்மனியின் அதிகாரத்தைக் கைப்பற்றுதல்:

- 1919 ஆம் ஆண்டு ஏழு நபர்களைக் கொண்ட ஒரு குழுவானது ஜெர்மன் உழைப்பாளர் கட்சி எனப்படும் நாசிசக் கட்சியை உருவாக்கியது. ஹிட்லரும் அவர்களுள் ஒருவராக இருந்தார்.
- ஹிட்லர் வன்முறைசார் அரசியலை, குறிப்பாக யூதர்களுக்கு எதிராக வளர்த்தார்.
- அவர் முதல் உலகப்போரின்போது பவேரியாவின் படையில் பணியாற்றினார்.
- 1923 இல் பவேரியாவில் அதிகாரத்தைக் கைப்பற்ற ஹிட்லர் முயற்சி மேற்கொண்டார்.
- முன்கூட்டியே திட்டமிடப்படாமல் அவர் மேற்கொண்ட தேசியப்புரட்சி அவரைச் சிறையில் தள்ளியது.
- சிறையில் இருந்தபோது தனது சுயசரிதை நூலான மெயின் காம்ப் (Mein Kampf – எனது போராட்டம்) எனும் நூலை எழுதினார்.
- 1932 இல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் தவறான வழியில் ஜெர்மனியின் அதிகாரத்தைக் கைப்பற்றினார்.

ஹிட்லரின் நாசிச ஆட்சி:

- ஜெர்மனியில் குடியரசு ஆட்சி கவிழ்ந்ததின் விளைவாகத் தொழிலதிபர்களும், வங்கியாளர்களும் குடியாட்சிக் கட்சியினரும் ஹிட்லரை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் 1933 இல் ஹிட்லரை சான்சிலராக (முக்கிய அமைச்சர்) பதவியில் அமர்த்தும்படி குடியரசுத் தலைவர் வான் ஹின்டென்பர்க்கை வற்புறுத்தினர்.
- மூன்றாவது ரெய்க் (குடியரசு) என்று அழைக்கப்பட்ட ஹிட்லரின் நாஜிஅரசு ஜெர்மனியில் நிறுவப்பட்டிருந்த பாராளுமன்ற ஜனநாயக அரசை முடிவுக்குக் கொண்டுவந்தது.

ஹிட்லர் மேற்கொண்ட ஒடுக்குமுறை நடவடிக்கைகள்:

- ஹிட்லர் வெய்மர் குடியரசின் கொடிக்குப் பதிலாக ஸ்வஸ்திக் சின்னம் பொறிக்கப்பட்ட தேசிய சோசியலிசக் கட்சியின் கொடியை அறிமுகம் செய்தார்.
- நாசிச கட்சியைத்தவிர பிறகட்சிகள் அனைத்தும் சட்டத்திற்குப் புறம்பானவை என்று அறிவிக்கப்பட்டது.
- ஹிட்லர் இளைஞர் அணியும், தொழிலாளர் அமைப்பும் நிறுவப்பட்டன.
- தொழிற்சங்கங்கள் ஒழிக்கப்பட்டன.

- பத்திரிக்கைகள், அரங்குகள், திரைப்படங்கள், வானொலி, கல்வி ஆகிய அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன.
- யூதர்களுக்கு எதிராக ஒடுக்குமுறைக் கொள்கை பின்பற்றப்பட்டது.
- 1934 ஆம் ஆண்டு ஹின்டென்பர்க் மறைவிற்குப்பின் சான்சிலராக இருந்த ஹிட்லர் குடியரசுத் தலைவராகவும் ராணுவத்தின் தலைமைத் தளபதியாகவும் பொறுப்பேற்றார்.

2. உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் (1919–39) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதைக் குறித்து வரிசையாக விவரிக்க முயற்சி செய்யவும்.

மாகாணங்களில் இரட்டையாட்சி:

- இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடானது 1905 ஆம் ஆண்டு சுதேசி இயக்கத்தோடு துவங்கியது.
- 1919 இல் இந்திய அரசுச் சட்டம் இரட்டையாட்சி முறையை அறிமுகம் செய்தது.
- அச்சட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மாகாண சட்டசபைகளுக்கும் மாற்று அதிகாரங்களின் பட்டியலின் கீழ் வரும் சில துறைகளை இந்திய அமைச்சர்களே நிர்வகிக்கவும் வழிவகை செய்தது.
- இந்திய தேசிய காங்கிரஸ் இரட்டையாட்சி தொடர்பான ஏற்பாடுகளை மறுத்ததோடு சட்டசபைகளைப் புறக்கணிக்க முடிவு செய்தது.

தொழில்மயமாக்குதலில் குறைபாடுகள்:

- ஆங்கிலேய இரும்பு எஃகு தொழில் நிறுவனங்களுக்கு ஆங்கிலேய இந்திய அரசாங்கம் தொழில் சார்ந்த ஒப்பந்தங்கள் வழங்கப்படும் என உறுதி அளித்ததன் மூலம் ஊக்கமளித்தது.
- ஆனால் உள்நாட்டுத் தொழில்களைப் பொறுத்தமட்டில் தொழில் நுட்பம் சார்ந்த அறிவுரைகளும், கல்வி வழங்குதல், புதிய துறைகள் தொடர்பான முன்னோடித் தொழில் கூடங்களை அரசு தொடங்குதல் போன்ற வடிவங்களில் மட்டுமே அரசு உதவிகள் செய்தது.
- ஆனால் ஆங்கில நிறுவனங்கள் அரசின் தலையீட்டை எதிர்த்ததால் வெகுவிரைவில் இக்கொள்கையும் கைவிடப்பட்டது.

பொருளாதாரப் பெருமந்தத்தின்போது இந்தியா:

- 1929 ஆம் ஆண்டு பொருளாதாரப் பெருமந்தம் ஆங்கிலேய வணிக வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பெரும் சேதத்தை உண்டாக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியது.
- இங்கிலாந்து பெருமந்தத்தின் தீய விளைவுகளைத் தனது காலனிய நாடுகளின் தோள்களுக்கு மாற்றியது.
- 1932 இல் நடைபெற்ற ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டில் பங்கேற்ற நாடுகள் (இந்தியா உட்பட) ஏனைய நாட்டு பொருள்களைக் காட்டிலும் இங்கிலாந்து பொருட்களுக்கு முன்னுரிமை வழங்க ஒப்புக்கொண்டன.
- இந்திய அரசு பின்பற்றிய அந்நியச் செலவாணி மாற்றுக் கொள்கை காலனி அரசுக்கும் மக்களுக்குமிடையே பதற்றமான நிலை ஏற்படுத்தியது. இது ஆங்கில அரசுக்கு எதிரான அரசியல் போராட்டங்களைத் தீவிரப்படுத்தியது.

இந்திய வேளாண்மையின் மீது பெருமந்தம் ஏற்படுத்திய தாக்கம்:

- பொருளாதாரப் பெருமந்தத்தினால் வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலை பாதியாகக் குறைந்தது. ஆனால் விவசாயிகள் நிலத்திற்கு கொடுக்கவேண்டிய குத்தகைத் தொகையில் மாற்றமேதுமில்லை.
- இந்திய விவசாயிகளும் பொருள் உற்பத்தியாளர்களும் உயிர் பிழைப்பதற்காகத் தங்களிடம் இருந்த தங்கம், வெள்ளி ஆகியவற்றை விற்கும் நிலை ஏற்பட்டது.

- விலைவாசியில் ஏற்பட்ட மிகப்பெரும் வீழ்ச்சி இந்திய தேசியவாதிகளை உள்நாட்டு பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் கோரிக்கையை வைக்கத்தூண்டியது.

1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்:

- 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் உள்ளாட்சி அரசு நிறுவனங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கியதோடு நேரடித் தேர்தலையும் அறிமுகம் செய்தது.
- இச்சட்டத்தின் அடிப்படையில் நடைபெற்ற தேர்தல்களில் பெரும்பாலான மாகாணங்களில் அகில இந்திய தேசிய காங்கிரஸ் அதிர்வை ஏற்படுத்தும் வெற்றியைப் பெற்றது.
- இருந்தபோதிலும் காங்கிரஸ் அமைச்சரவையைக் கலந்தாலோசிக்காமல் ஆங்கில அரசு இந்தியாவை இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்தியதால் காங்கிரஸ் அமைச்சரவை ராஜினாமா செய்யும் கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டது.

3. தென் ஆப்பிரிக்க தேசிய அரசியலின் எழுச்சி, வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.

- தென்னாப்பிரிக்காவில் இரு முக்கிய அரசியல் கட்சிகள் செயல்பட்டன. அவை பெரும்பாலும் ஆங்கிலேயர்களைக் கொண்ட யூனியனிஸ்ட் கட்சி மற்றும் ஆப்பிரிக்கநேர்ஸ் என்றழைக்கப்பட்ட போயர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்த தென்ஆப்பிரிக்கக் கட்சி.
- முதல் பிரதம மந்திரியான போதா, தென்ஆப்பிரிக்கக் கட்சியைச் சேர்ந்தவர். அவர் ஆங்கிலேயருடன் ஒத்துழைத்து ஆட்சியை நடத்தினார்.
- ஆனால் தென்னாப்பிரிக்கக் கட்சியைச் சேர்ந்த போராடும் குணமிக்க ஒரு பிரிவினர் ஹெர்சாக் என்பவரின் தலைமையின் கீழ் தேசியக் கட்சி எனும் கட்சியைத் தொடங்கினர்.
- ஹெர்சாக் இரட்டை மேலாதிக்கக் கொள்கையைப் பின்பற்ற விரும்பினார். ஒன்று கறுப்பர்களின் மீதான வெள்ளையர்களின் மேலாதிக்கம், மற்றொன்று வெள்ளையர்களின் மீதான ஆப்பிரிக்கநேர்களின் மேலாதிக்கம்.
- 1920ஆம் ஆண்டுத் தேர்தலில் தேசியக் கட்சி 44 இடங்களைக் கைப்பற்றியது. தென்னாப்பிரிக்கக் கட்சி ஸ்மட்ஸ் என்பாரின் தலைமையில் 41 இடங்களில் வெற்றி பெற்றது.
- இத்தருவாயில் ஆங்கிலேயர்கள் அதிகமிருந்த யூனியனிஸ்ட் கட்சி தென்னாப்பிரிக்கக் கட்சியுடன் இணைந்தது.
- இதனால் போர்க்குணம் கொண்ட ஆப்பிரிக்கநேர்களின் கட்டுப்பாட்டிலிருந்த தேசியக்கட்சியைக் காட்டிலும் ஸ்மட்ஸ் பெரும்பான்மை பெற்றார்.

கூடுதல் வினாக்கள்

4. அமெரிக்காவின் பங்குச் சந்தையின் வீழ்ச்சி பற்றி விவரி.

- அமெரிக்க முதலீடுகள் திரும்பப் பெறப்பட்டதால் ஏற்பட்ட சிக்கலான சூழலை 1929 இல் ஏற்பட்ட பங்குச் சந்தையின் வீழ்ச்சி மேலும் மோசமாக்கியது.
- முதல் பெரும் வீழ்ச்சி 1929 அக்டோபர் 24 இல் அரங்கேறியது. அன்றைய தினம் நியூயார்க் நகரப் பங்குச் சந்தையில் பங்குகளின் விலைகள் செங்குத்தாய் சரிந்தன.
- நம்பிக்கை இழந்த முதலீட்டாளர்களும், வாடிக்கையாளர்களும் ஏனைய மக்களும் பங்குகளை விற்கத் துவங்கினர்.

- இருப்பில் இருந்தனவற்றையும் விற்கத்துவங்கினர். ஆனால் அதனை வாங்குவதற்கு யாரும் இல்லை.
- இப்பெருவீழ்ச்சியும் முதலீட்டில் ஏற்பட்ட சரிவும் அமெரிக்க வங்கிகளின் தோல்விக்கு வழிவகுத்தன.
- அமெரிக்க முதலீட்டாளர்கள் வெளிநாடுகளில் செய்திருந்த தங்கள் முதலீடுகளைத் திரும்பப் பெறும் கட்டாயத்திற்கு உள்ளாயினர்.
- ஜெர்மனிக்கு அமெரிக்கா செய்துவந்த கடனுதவி நிறுத்தப்பட்டதால் ஜெர்மனியின் இரு பெரிய வங்கிகள் செயலிழந்தன. மேலும் இங்கிலாந்து வங்கியும் திவாலானது.

5. தென் அமெரிக்காவில் பெருமந்தம் பற்றி விவரி.

- பொருளாதாரப் பெருமந்தத்தால் உருவான சூழ்நிலையில் சிலரின் அல்லது சில குடும்பங்களின் எதிர்பார்ப்புகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.
- மெக்சிகோவில் அதிருப்திக் குழுக்கள், நடுத்தர வர்க்க அறிவு ஜீவிகள், வேளாண் சமூகங்கள் ஆகியோரை உள்ளடக்கிய வன்முறை சார்ந்த சமூக எதிர்ப்புகள் அரங்கேறின.
- வேறு இடங்களில் தேர்தல் சீர்திருத்தங்கள் புதிய சமூக குழுக்கள் வாக்குப்பெட்டிகள் வழியாக அரசியல் அதிகாரத்தைப் பெற உதவி செய்தன.
- லத்தீன் அமெரிக்கா, அமெரிக்காவின் தலையீட்டை எதிர்த்ததோடு, டாலர் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை.
- 1933 க்குப் பின்னர் அமெரிக்காவின் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது.
- பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் தன்னுடைய "நல்ல அண்டை வீட்டுக்காரன்" கொள்கையில் அமெரிக்கா வேறு எந்த நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிடாது என்று கூறியதோடு லத்தீன் அமெரிக்க நாடுகளுக்குப் பொருளாதார, தொழில்நுட்ப உதவிகளைச் செய்யவும் ஒப்புக்கொண்டார்.

காலக்கோடு (முக்கிய நிகழ்வுகள்)

1884 – 1885	– பெர்லின் காலனிய மாநாடு
1886	– டிரான்ஸ்வால் பகுதியில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது.
1898	– அமெரிக்கா, ஸ்பானியர்களைத் தோற்கடித்தது.
1899 – 1902	– போயர் போர்
1905	– சுதேசி இயக்கம்
1909	– இங்கிலாந்து பாராளுமன்றத்தில் தென்னாப்பிரிக்கச் சட்டம் இயற்றப்பட்டது.
1910	– தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயமானது.
1912	– ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி உருவாக்கப்பட்டது.
1919	– 1. பாசிசக் கட்சியின் தோற்றம் 2. இந்திய அரசுச் சட்டம் இரட்டையாட்சி முறையை அறிமுகம் செய்தது. 3. நாசிசக்கட்சி நிறுவப்பட்டது.
1922	– முசோலினியின் ரோம் அணி வகுப்பு.
1926	– இங்கிலாந்து அரசு மாநாடு
1927	– வியட்நாம் தேசியக்கட்சியின் தோற்றம்

1929	–	1. உலகப்பெருமந்தம் 2. லேட்டர்ன் உடன்படிக்கை 3. அமெரிக்கப் பங்குச்சந்தையில் ஏற்பட்ட முதல் வீழ்ச்சி.
1930	–	1. சட்ட மறுப்பு இயக்கம் 2. இந்திய தேசிய காங்கிரஸ் எழுச்சி
1931	–	இங்கிலாந்தில், தொழிலாளர் கட்சி தோற்கடிக்கப்பட்டது.
1932	–	ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாடு நடைபெற்றது
1933	–	ஹிட்லர் ஜெர்மனியின் சான்சிலர் (முக்கிய அமைச்சர் ஆதல்).
1935	–	1. இந்திய அரசுச் சட்டம் 2. முசோலினி எத்தியோப்பியாவைத் தாக்கினார்.
1941	–	வியட்நாம் விடுதலை சங்கம் நிறுவப்பட்டது
1945	–	ஹிட்லரின் வீழ்ச்சி
1990	–	ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் மீதான தடை விலக்கிக் கொள்ளப்பட்டது.

3 இரண்டாம் உலகப்போர்

மனவரைபடம்

இரண்டாம் உலகப்போருக்கான காரணங்கள்

- ஜெர்மனியும் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையும் (1919)
- பன்னாட்டு சங்கத்தின் தோல்வி
- முதல் உலகப்போருக்குப் பின்னர் ஜெர்மனி
- அடால்ப் ஹிட்லரின் எழுச்சி
- நேச நாடுகளும் தலையிடாக் கொள்கையும்
- மியூனிச் உடன்படிக்கை

இரண்டாம் உலகப்போரின் முக்கிய நிகழ்வுகள்

- டன்கிர்க் 1940
- கடன் குத்தகைத் திட்டம் 1941–1945
- ஸ்டாலின்கிரேடு போர் 1942 - 1943
- இத்தாலி சரணடைதல் 1943
- பிரிட்டன் போர் 1940
- ரஷ்யப் படையெடுப்பு 1941-1942
- எல் அலாமெய்ன் போர் 1942
- ஹிட்லரின் முடிவு 1945

தென்கிழக்கு ஆசியாவில் நடைபெற்ற போர்

- முத்துத் துறைமுகம் தாக்கப்படுதல் 1941
- தென்கிழக்கு ஆசியாவில் ஜப்பான்
- மிட்வே போரும் க்வாடல்கெனால் போரும் 1942
- ஹிரோஷிமா, நாகசாகி மீது அணுகுண்டு வீச்சு 1945

போரின் விளைவுகள்

- புதிய நிலவியல்சார் அரசியல் அதிகார அணிசேர்க்கை
- அணு ஆயுதப் பரவல்
- பன்னாட்டு முகமைகள்

நினைவில் கொள்க

- **முதல் உலகப்போர்** 1914 இல் தொடங்கி 1918 வரையும் **இரண்டாம் உலகப்போர்** 1939 இல் தொடங்கி 1945 வரையும் நடைபெற்றது.
- **ஜெர்மனி** மேற்கொண்ட ஆக்கிரமிப்பு ராணுவ நடவடிக்கைகளும், **ஜப்பானின்** விரைவான வளர்ச்சியுமே இரண்டாம் உலகப்போருக்கான உடனடி மற்றும் அடிப்படைக் காரணங்களாகும்.
- **வெர்செய்ல்ஸ்** உடன்படிக்கையின் சரத்துகளுக்கு நேரெதிராக **ஹிட்லர்** ஜெர்மனியின் ராணுவத்தையும் ஆயுதங்களையும் அதிகரிக்கத் துவங்கினார்.
- இத்தாலி, ஜெர்மனி மற்றும் ஜப்பான் இணைந்து **ரோம் – பெர்லின் – டோக்கியோ** அச்சு உடன்படிக்கை உருவானது.
- இரண்டாம் உலகப்போர் **ஐரோப்பா, ஆசியா பசிபிக்** எனும் இருவேறு முனைகளில் நடைபெற்றது.
- ஜெர்மானியப் படைகள் கடைபிடித்த போர்த்தந்திர முறை **பிளிட்ஸ்கிரிக்** எனும் மின்னல் வேகத்தாக்குதலாகும்.
- ஐரோப்பிய நாடுகளின் கப்பற்படைகளில் மிக வலுவானதாகத் திகழ்ந்தது **"தி பிரிட்டிஷ் ராயல் நேவி"** ஆகும்.
- **லண்டன்** நகரம் 1940 செப்டம்பரில் இரக்கமற்ற குண்டுவீச்சுக்கு இலக்கானது.
- தனிமைப்பட்டிருத்தல் என்ற கொள்கையிலிருந்து மாற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் **ரூஸ்வெல்ட்**
- **முசோலினி** 1945 ஏப்ரலில் இத்தாலிய கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்டார். **ஹிட்லர்** 1945 ஏப்ரலில் தற்கொலை செய்து கொண்டார்.
- அமெரிக்காவால் அணுகுண்டு வீசப்பட்ட ஜப்பானிய நகரங்கள் **ஹிரோஷிமா, நாகசாகி** என்பனவாகும்.
- நாஜிகள் யூதர்களை முற்றிலுமாகக் கொன்று குவிப்பதற்காக முன்வைத்த கருத்து **இறுதித் தீர்ப்பு.**
- உலகம் முழுவதும் மனித உரிமைகள் தினமாகக் கொண்டாடப்படும் நாள் **டிசம்பர் 10**
- **இஸ்ரேல்** எனும் நாடு யூதர்களின் தாயகமாக உருவாக ஜெர்மனி வழிவகுத்தது.
- பன்னாட்டு நீதிமன்றம் ஹாலந்திலுள்ள **திஹேக்கில்** அமைந்துள்ளது.

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. ஜப்பான் சரணடைவதாக எப்போது முறைப்படி கையெழுத்திட்டது?
   அ) செப்டம்பர் 2, 1945 ஆ) அக்டோபர் 2, 1945
   இ) ஆகஸ்டு 15, 1945 ஈ) அக்டோபர் 12, 1945
2. பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார்?
   அ) ரூஸ்வெல்ட் ஆ) சேம்பெர்லின்
   இ) உட்ரோ வில்சன் ஈ) பால்டுவின்
3. ஜப்பானியக் கப்பற்படை அமெரிக்க கப்பற்படையால் எங்கே தோற்கடிக்கப்பட்டது?
   அ) க்வாடல்கெனால் போர் ஆ) மிட்வே போர்
   இ) லெனின்கிரேடு போர் ஈ) எல் அலாமெய்ன் போர்

4. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?
அ) கவாசாகி ஆ) இன்னோசிமா
இ) ஹிரோஷிமா ஈ) நாகசாகி

5. ஹிட்லர் எவரை மிகவும் கொடுமைப்படுத்தினார்?
அ) ரஷ்யர்கள் ஆ) அரேபியர்கள்
இ) துருக்கியர்கள் ஈ) யூதர்கள்

6. ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரிட்டன் பிரதமர் யார்?
அ) சேம்பர்லின் ஆ) வின்ஸ்டன் சர்ச்சில்
இ) லாயிட் ஜார்ஜ் ஈ) ஸ்டேன்லி பால்டுவின்

7. எப்போது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டய சாசனம் கையெழுத்தானது?
அ) ஜூன் 26, 1942 ஆ) ஜூன் 26, 1945
இ) ஜனவரி 1, 1942 ஈ) ஜனவரி 1, 1945

8. பன்னாட்டு நீதிமன்றத்தின் தலைமையகம் எங்கே அமைந்துள்ளது?
அ) நியூயார்க் ஆ) சிகாகோ
இ) லண்டன் ஈ) தி ஹேக்

கூடுதல் வினாக்கள்

9. இரண்டாம் உலகப்போரின் காலம்
அ) 1914 – 1918 ஆ) 1939 – 1945
இ) 1920 – 1935 ஈ) 1940 – 1947

10. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை கையெழுத்தான ஆண்டு
அ) 1945 ஆ) 1920 இ) 1929 ஈ) 1919

11. முதல் உலகப்போருக்குப்பின் தனித்திருக்கும் கொள்கையைப் பின்பற்றிய நாடு
அ) அமெரிக்கா ஆ) பிரிட்டன் இ) இத்தாலி ஈ) ஜெர்மனி

12. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையால் பெரும் அதிருப்தியடைந்த நாடு
அ) இங்கிலாந்து ஆ) பிரான்ஸ் இ) ஜெர்மனி ஈ) இத்தாலி

13. "ஜெர்மனியரே சுத்தமான ஆரிய இனத்தவர்" எனும் இன உணர்வு கொண்டிருந்தவர்
அ) நெப்போலியன் ஆ) முசோலினி இ) ஹிட்லர் ஈ) லெனின்

14. படைநீக்கம் செய்யப்பட்ட மண்டலமாகக் கருதப்பட்டது
அ) பின்லாந்து ஆ) அயர்லாந்து
இ) ஸ்காட்லாந்து ஈ) ரைன்லாந்து

15. பன்னாட்டுச் சங்கத்திடம் முறையிட்ட எத்தியோப்பியப் பேரரசர்
அ) ஹெய்லி செலாஸ்ஸி ஆ) சேம்பர்லின்
இ) ஹேரி டேக்ஸ்டர் ஒயிட் ஈ) ஜான் மேனோர்டு கெய்ன்ஸ்

16. 1937 இல் ஜப்பான் முற்றுகையிட்ட சீன நகரம்
அ) நான்கிங் ஆ) ஷாங்காய் இ) காண்டன் ஈ) பெய்ஜிங்

17. மியூனிச் உடன்படிக்கை ஏற்பட்ட ஆண்டு
அ) 1928 ஆ) 1938 இ) 1918 ஈ) 1948

18. 1940 இல் பதவி விலகிய பிரிட்டன் பிரதமர்
அ) வின்ஸ்டன் சர்ச்சில் ஆ) சேம்பர்லின்
இ) ராம்சே மெக் டொனால்டு ஈ) கிளமண்ட் அட்லி

19. ஆசிய பசிபிக் பகுதிகளில் நேசநாடுகள் எந்த நாட்டிற்கு எதிராகப் போர் செய்தன?
அ) ஜெர்மனி ஆ) இத்தாலி இ) ஜப்பான் ஈ) ஆஸ்திரியா

20. 1941 இல் கடன் குத்தகை திட்டத்தைத் தொடங்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர்
அ) ரூஸ்வெல்ட் ஆ) கென்னடி
இ) தாமஸ் ஜெபர்சன் ஈ) ஜேம்ஸ் மன்றோ

21. ஸ்டாலின் கிரேடு நகரம் ஜெர்மனியரால் தாக்கப்பட்ட ஆண்டு
அ) 1940 ஆ) 1941
இ) 1942 ஈ) 1943

22. ஹிட்லரைப் போலவே பேரரசுக் கனவில் இருந்த நாடு
அ) ரஷ்யா ஆ) ஜப்பான்
இ) சீனா ஈ) இந்தியா

23. ஹவாயிலிருந்த அமெரிக்கக் கப்பற்படைத்தளம்
அ) முத்துத் துறைமுகம் ஆ) டான்சிக் துறைமுகம்
இ) மிட்வே துறைமுகம் ஈ) டார்டனல்ஸ் துறைமுகம்

24. இரண்டாம் உலகப்போருக்குப்பின் சுதந்திரம் பெற்ற நாடுகளுள் முதலாவதாய்த் திகழ்ந்த நாடு
அ) பிலிப்பைன்ஸ் ஆ) இந்தோனேசியா
இ) மியான்மர் ஈ) இந்தியா

25. உலக மனித உரிமைகள் தினமாகக் கொண்டாடப்படும் நாள்
அ) டிசம்பர் 10 ஆ) டிசம்பர் 20
இ) டிசம்பர் 7 ஈ) டிசம்பர் 26

26. யூத இன மக்களுக்கென உருவாக்கப்பட்ட நாடு
அ) பாலஸ்தீனம் ஆ) ஜோர்டான்
இ) இஸ்ரேல் ஈ) ஈரான்

27. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு அமைந்துள்ள இடம்
அ) மாஸ்கோ ஆ) லண்டன் இ) ரோம் ஈ) ஜெனிவா

28. ஐக்கிய நாடுகள் சபையில் தற்போது உள்ள உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை
அ) 139 ஆ) 163 இ) 193 ஈ) 169

29. ஐ.நா சபையில் மறுப்பாணை பெற்றுள்ள நாடுகளுள் ஒன்று
அ) இந்தியா ஆ) ஜப்பான்
இ) ஜெர்மனி ஈ) பிரான்ஸ்

30. ஹாலந்து நாட்டிலுள்ள திஹேக் நகரில் அமைந்துள்ளது.
அ) ஐ.நா வின் செயலகம் ஆ) பன்னாட்டு நீதிமன்றம்
இ) உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு ஈ) உலக சுகாதார நிறுவனம்

விடைகள்

1. அ) செப்டம்பர் 2, 1945	2. இ) உட்ரோ வில்சன்	3. ஆ) மிட்வே போர்
4. இ) ஹிரோஷிமா	5. ஈ) யூதர்கள்	6. அ) சேம்பர்லின்
7. ஆ) ஜூன் 26, 1945	8. ஈ) திஹேக்	9. ஆ) 1939 – 1945
10. ஈ) 1919	11. அ) அமெரிக்கா	12. இ) ஜெர்மனி
13. இ) ஹிட்லர்	14. ஈ) ரைன்லாந்து	15. அ) ஹெய்லி செலாஸ்ஸி
16. ஈ) பெய்ஜிங்	17. ஆ) 1938	18. ஆ) சேம்பர்லின்
19. இ) ஜப்பான்	20. அ) ரூஸ்வெல்ட்	21. இ) 1942
22. ஆ) ஜப்பான்	23. அ) முத்துத் துறைமுகம்	24. ஈ) இந்தியா
25. அ) டிசம்பர் 10	26. இ) இஸ்ரேல்	27. ஈ) ஜெனிவா
28. இ) 193	29. ஈ) பிரான்ஸ்	30. ஆ) பன்னாட்டு நீதிமன்றம்

II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. இராணுவ நீக்கம் செய்யப்பட்ட ___________ பகுதியை ஹிட்லர் தாக்கினார்.
2. இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகியவற்றிற்கிடையேயான ஒப்பந்தம் ___________ என அழைக்கப்பட்டது.
3. ___________ கடன் குத்தகைத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
4. 1940 இல் ராஜினாமா செய்த பிரிட்டன் பிரதமர் ___________ ஆவார்.
5. "இவ்வளவு குறைவான நபர்களுக்கு, இவ்வளவு அதிகமானோர் இவ்வளவு அதிகமாக கடமைப்பட்டிருப்பது" என ___________ ன் வீரத்திற்கு சர்ச்சில் புகழாரம் சூட்டினார்.
6. ___________ என்பது தொலைவிலிருந்தே எதிரிகளின் போர் விமானங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு கருவி.
7. உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் மனித உரிமைகள் குறித்து ___________ பிரிவுகளைக் கொண்டிருந்தது.
8. பிரிட்டனில் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் வாக்களிப்பின் மூலம் அதிகாரத்தில் அமர்த்தப்பட்டவர் ___________ ஆவார்.

கூடுதல் வினாக்கள்

9. மாபெரும் போர் என்றும் அனைத்துப் போர்களையும் முடித்து வைக்கும் போர் என்றும் குறிப்பிடப்பட்ட போர் ___________.
10. ___________ உடன்படிக்கையோடு முதல் உலகப்போர் முடிவுற்றது.
11. பன்னாட்டுச் சங்கம் உருவாக முயற்சியெடுத்த அமெரிக்க அதிபர் ___________
12. அமெரிக்கா பொருளாதாரப் பெருமந்தத்தைச் சந்தித்த ஆண்டு ___________
13. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களுக்கு எதிராக ஜெர்மனியின் ராணுவத்தையும் ஆயுதங்களையும் அதிகரிக்கத் துவங்கியவர் ___________
14. 1936 ல் இத்தாலியும் ஜெர்மனியும் இணைந்து செய்து கொண்ட உடன்படிக்கை ___________
15. 1939 இல் ஹிட்லர் ___________ நாட்டின் மீது படையெடுத்தார்.
16. ஹிட்லரைப் பற்றியும் அவருடைய ராணுவ நோக்கங்களைப் பற்றியும் எப்போதும் எச்சரித்து வந்தவர் ________
17. 1940 இல் அச்சு நாடுகளுடன் கை கோர்த்த நாடு ___________.
18. ஜெர்மானியப் படைகள் கடைபிடித்த போர்த்தந்திரம் ___________ என்று அழைக்கப்படுகிறது.
19. பிரிட்டனின் மிகச்சிறந்த கப்பற்படை ___________
20. 1940 இல் லண்டன் நகரம் மீது இரக்கமற்ற முறையில் குண்டு வீசிய நாடு ___________
21. தனிமைப்பட்டிருத்தல் கொள்கையிலிருந்து மாற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ___________
22. ஜெர்மனியின் போர்த் திட்டமிடல் வல்லுநர்கள் ___________ எனும் திட்டப்படி ஸ்டாலின் கிரேடை கைப்பற்ற எண்ணினர்.
23. இத்தாலி நேச நாடுகளிடம் சரணடைந்த ஆண்டு ___________
24. ஹிட்லர் தற்கொலை செய்து கொண்ட ஆண்டு ___________

25. சீனாவின் பாரம்பரியமிக்க தலைநகர் ___________

26. இரண்டாம் உலகப்போர் முடிவுற்ற ஆண்டு ___________

27. ஹிட்லரின் ஆட்சிக் காலத்தில் யூதர்கள் ___________ எனப்படும் ஒதுக்குப்புறமான பகுதிகளில் வாழ வற்புறுத்தப்பட்டனர்.

28. ஐ.நா. சபையின் ஒவ்வொரு நிரந்தர உறுப்பினருக்கும் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் ___________ என்று அழைக்கப்படுகிறது.

29. ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாட்டு அங்கமாகத் திகழ்வது ___________ ஆகும்.

30. "தொட்டிலிலிருந்து கல்லறை வரை" மக்களைக் கவனித்துக் கொள்ளப் போவதாக உறுதியளித்த பிரிட்டனின் கட்சி ___________

விடைகள்

1. ரைன்லாந்து	2. ரோம்–பெர்லின் டோக்கியோ அச்சு ஒப்பந்தம்	3. ரூஸ்வெல்ட்
4. சேம்பர்லின்	5. ராயல் ஏர்போர்ஸ்	6. ரேடார்
7. 30	8. கிளமெண்ட் அட்லி (தொழிலாளர் கட்சி)	
9. முதல் உலகப்போர்	10. வெர்செய்ல்ஸ்	11. உட்ரோவில்சன்
12. 1929	13. ஹிட்லர்	14. ரோம்–பெர்லின் உடன்படிக்கை
15. செக்கோஸ்லோவாக்கியா	16. வின்ஸ்டன் சர்ச்சில்	17. ஜப்பான்
18. பிளிட்ஸ்கிரிக்	19. தி பிரிட்டிஷ் ராயல் நேவி	20. ஜெர்மனி
21. ரூஸ்வெல்ட்	22. ஃபால் புளூ	23. 1943
24. 1945	25. பெய்ஜிங் (பீகிங்)	26. 1945
27. கெட்டோக்கள்	28. மறுப்பாணை (veto power)	
29. செயலகம்	30. தொழிலாளர் கட்சி.	

III. சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. i) வங்கித் தொழில் யூதர்களின் முக்கியமான வணிக நடவடிக்கையாகும்.
   ii) ஹிட்லர் யூதர்களைத் துன்புறுத்தினார்.
   iii) சித்ரவதை முகாம்களில் யூதர்கள் கொல்லப்பட்டனர்.
   iv) தற்போது ஐக்கிய நாடுகள் சபை 129 நாடுகளை உறுப்பு நாடுகளாகக் கொண்டுள்ளது.
   அ) i), ii) சரி ஆ) i), iii), சரி
   இ) iii), iv) சரி ஈ) i) சரி மற்றும் ii), iii), iv) தவறு

2. கூற்று : குடியரசுத்தலைவர் ரூஸ்வெல்ட் அமெரிக்கா தனது தனித்திருக்கும் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் என்பதை உணர்ந்தார்.
   காரணம் : அவர் 1941இல் கடன் குத்தகைத் திட்டத்தை தொடங்கினார்.
   அ) கூற்றும் காரணமும் சரி
   ஆ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு
   இ) காரணம் கூற்று ஆகிய இரண்டுமே தவறானவை
   ஈ) காரணம் சரி ஆனால் அது கூற்றுடன் பொருந்தவில்லை

கூடுதல் வினாக்கள்

3. i) முதலாவது உலகப் போருக்கான செலவு, இரண்டாம் உலகப் போருக்கான செலவை விட ஐந்து மடங்கு அதிகம்.
   ii) ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு ராணுவ நடவடிக்கைகளும், ஜப்பானின் விரைவான வளர்ச்சியும் இரண்டாம் உலகப்போருக்கு உடனடி மற்றும் அடிப்படைக் காரணமாயிற்று.

iii) உட்ரோ வில்சனின் முயற்சியால் அமெரிக்கா பன்னாட்டுச் சங்கத்தில் உறுப்பினராயிற்று.

iv) வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் போர் இழப்பீடு தொடர்பான சரத்து ஜெர்மனியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

அ) i), ii) சரி ஆ) ii), iv), சரி
இ) i), iv) சரி ஈ) i), iii), சரி

4. i) வல்லமை மிக்க சொற்பொழிவாற்றும் திறமையால் ஹிட்லர் மக்களைத் தன்பக்கம் ஈர்த்தார்.
ii) ஹிட்லர் தேசிய சமதர்மவாதிகள் கட்சியை நிறுவினார்.
iii) இத்தாலியரே "சுத்தமான ஆரிய இனத்தவர்" என்பது ஹிட்லரின் இன உயர்வு மனப்பாங்காகும்.
iv) ஹிட்லர் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டார்.

அ) i), ii), iii) சரி ஆ) ii), iii), iv) சரி
இ) i), ii), iv) சரி ஈ) i) iii), iv) சரி

5. i) இரண்டாம் உலகப்போர், அமெரிக்கா, ஆப்பிரிக்கா எனும் இரு வேறு முனைகளில் நடைபெற்றது.
ii) ஐரோப்பாவில் நேச நாடுகள் ஜப்பானுக்கு எதிராகப் போரிட்டன.
iii) ஆசிய பசிபிக் பகுதிகளில் நேச நாடுகள் ஜெர்மனிக்கு எதிராகப் போரிட்டன.
iv) இரண்டாம் உலகப்போர் நவீனப்போராகும்.

அ) i) சரி ஆ) ii) சரி
இ) iii) சரி ஈ) iv) சரி

6. கூற்று : 1941 இல் ஜெர்மனி படைகள் ரஷ்யாவின் மீது படையெடுத்து தோல்வியுற்றது.
காரணம் : ரஷ்யாவில் கடுமையான குளிர் நிலவியது.

அ) காரணம் சரி ஆனால் கூற்றுடன் பொருந்தவில்லை
ஆ) காரணம் தவறு ஆனால் கூற்று சரி
இ) கூற்று சரி காரணம் கூற்றுக்கேற்ற விளக்கமாகும்
ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

7. கூற்று : 1931 இல் ஜப்பானியப் படைகள் மஞ்சூரியாவைத் தாக்கியது.
காரணம் : இவ்வாக்கிரமிப்பு நடவடிக்கை பிரிட்டன் அல்லது அமெரிக்காவின் கவனத்தை ஈர்க்கவில்லை.

அ) கூற்றும், காரணமும் தவறு
ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கமல்ல.
இ) கூற்று சரி, காரணம் தவறு
ஈ) கூற்று தவறு, காரணம் சரி

விடைகள்

1. அ) i), ii) சரி
2. அ) கூற்றும் காரணமும் சரி
3. ஆ) ii), iv) சரி
4. அ) i), ii) iii) சரி
5. ஈ) iv) சரி
6. இ) கூற்று சரி காரணம் கூற்றுக்கேற்ற விளக்கமாகும்
7. ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கமல்ல

IV. பொருத்துக:

பாடநூல் வினா

அ)	1. பிளிட்ஸ்கிரிக்	அ)	ரூஸ்வெல்ட்	
	2. ராயல் கப்பற்படை	ஆ)	ஸ்டாலின் கிரேடு	
	3. கடன் குத்தகை	இ)	சாலமோன் தீவு	
	4. வோல்கா	ஈ)	பிரிட்டன்	
	5. க்வாடல்கெனால்	உ)	மின்னல்வேகத் தாக்குதல்	

விடை
1) உ
2) ஈ
3) அ
4) ஆ
5) இ

வரலாறு

கூடுதல் வினாக்கள்

ஆ)

		விடை
1. 1939	அ) பிரிட்டன் போர்	1) இ
2. 1940	ஆ) மிட்வே போர்	2) அ
3. 1941	இ) இரண்டாம் உலகப்போரின் துவக்கம்	3) உ
4. 1942	ஈ) இத்தாலி சரணடைதல்	4) ஆ
5. 1943	உ) முத்து துறைமுக நிகழ்வு	5) ஈ

இ)

		விடை
1. ஃபிட்லர் ஆன்ரூஃப்	அ) ஒதுக்குப்புறமான பகுதிகள்	1) ஈ
2. பெவரிட்ஜ்	ஆ) நகரம்	2) உ
3. கெட்டோக்கள்	இ) சிடுமூஞ்சிகள்	3) அ
4. ராயல் ஏர்போர்ஸ்	ஈ) திரைப்படம்	4) இ
5. டன்கிரிர்க்	உ) அறிக்கை	5) ஆ

ஈ)

		விடை
1. சார்லஸ் மாலிக்	அ) கனடா	1) ஆ
2. P.C சாங்	ஆ) லெபனான்	2) ஈ
3. ஜான் ஹம்ப்ரி	இ) ஜெர்மனி	3) அ
4. ரெனே காசின்	ஈ) தேசியவாத சீனா	4) உ
5. ரோம்மெல்	உ) பிரான்ஸ்	5) இ

V. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் முக்கியச் சரத்துக்களைக் குறிப்பிடுக. PTA

- ஜெர்மனி தனது மேற்கு, வடக்கு, கிழக்கு ஆகிய எல்லைகளில் பல பகுதிகளை விட்டுத்தரக் கட்டாயப்படுத்தப்பட்டது.
- ஜெர்மனி ஆயுதக்குறைப்புக்கு உள்ளாக்கப்பட்டு மிகக் குறைந்த அளவிலான படைகளை மட்டுமே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது [காலாட்படை, கப்பற்படை, விமானப்படை]
- போரினால் நேச நாடுகளுக்கு ஏற்பட்ட ராணுவ வீரர்கள் மற்றும் பொது மக்களின் உயிர் இழப்பிற்காக ஜெர்மனி இழப்பீடு வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. இது தன்னுடைய சக்திக்கு மீறியது என ஜெர்மனி எதிர்த்தது.

2. முதல் உலகப்போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்? PTA

- முசோலினி (இத்தாலி)
- ஹிட்லர் (ஜெர்மனி)
- பிராங்கோ (ஸ்பெயின்)

3. ஹிட்லர் ஜெர்மனி மக்களின் ஆதரவை எவ்வாறு பெற்றார்?

- ஹிட்லர் தனது வல்லமைமிக்க சொற்பொழிவாற்றும் திறமையாலும் உணர்ச்சிமிக்க பேச்சுக்களாலும் ஜெர்மனியை அதன் ராணுவப் புகழ்மிக்க முந்தைய காலத்திற்கு மீண்டும் அழைத்துச் செல்வதாக மக்களைத் தன்பக்கம் ஈர்த்தார்.
- மேலும் இரண்டு அடிப்படைக் கருத்துகளை அடித்தளமாகக் கொண்டு ஹிட்லர் மக்களின் ஆதரவைத் திரட்டினார். ஒன்று ஜெர்மனியினரே சுத்தமான ஆரிய இனம் எனும் இன உயர்வு மனப்பான்கு மற்றொன்று மிக ஆழமான யூத வெறுப்பு என்பனவாகும்.

4. முத்துத் துறைமுக நிகழ்வை விவரி.

- 1941 டிசம்பரில் ஹவாயிலுள்ள அமெரிக்கக் கப்பற்படைத் தளமான முத்துத் துறைமுகத்தின் மீது ஜப்பானிய விமானப்படைகள் முன்னறிவிப்பின்றி பெரும் தாக்குதலைத் தொடர்ந்தன.
- இத்தாக்குதலில் பல போர்க்கப்பல்களும் போர் விமானங்களும் அழிக்கப்பட்டன.
- இதனைத் தொடர்ந்து அமெரிக்கா ஜப்பான் மீது போர்ப் பிரகடனம் செய்தது. சீனாவும் பிரிட்டனும் அமெரிக்காவுடன் இணைந்தன.
- இதனால் ஆசிய பசிபிக் போரும் ஐரோப்பியப் போரும் ஒன்றிணைந்து ஒரு பொதுக் காரணத்திற்கான போராக மாறியது.

5. பெவரிட்ஜ் அறிக்கை குறித்து நீ அறிந்தது என்ன?

- 1942 இல் பிரிட்டன் பெவரிட்ஜ் அறிக்கை என்றழைக்கப்பட்ட அறிக்கையை வெளியிட்டது.
- அவ்வறிக்கையில் பொது நலனுக்குப் பெருந்தடைகளாக உள்ள வறுமை, நோய் ஆகியவற்றை வெற்றிகொள்ள, பொதுமக்களுக்கு அதிக வருமானத்தை அளிக்க தீர்மானித்தது.
- உடல்நலப் பாதுகாப்பு, கல்வி, வீட்டுவசதி, வேலைவாய்ப்பு ஆகியவற்றை வழங்கும் பல திட்டங்கள் தொகுப்பாக இடம் பெற்றிருந்தன.

6. பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

- "பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்கள்" எனக் குறிப்பிடப்படும் உலக வங்கி, பன்னாட்டு நிதி அமைப்பு ஆகிய இரண்டும் 1944 இல் நடைபெற்ற பிரெட்டன் உட்ஸ் மாநாட்டிற்குப் பின் 1945 இல் நிறுவப்பட்டன.
- இவ்விரு நிறுவனங்களும் அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் அமைந்துள்ளன.

7. பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள் யாவை?

- உலக அளவில் நிதி சார்ந்த ஒத்துழைப்பைப் பேணுவது.
- நிதிநிலையை உறுதியானதாக வைத்திருத்தல்.
- பன்னாட்டு வணிகத்திற்கு வழிவகைகள் ஏற்படுத்திக் கொடுப்பது.
- வேலைவவாய்ப்பினைப் பெருக்குவது.
- நீடித்த பொருளாதார வளர்ச்சியை அடைதல்.
- உலகம் முழுவதிலும் வறுமையை ஒழிப்பது என்பனவாகும்.

கூடுதல் வினாக்கள்

8. "உலகப்போர்கள்" என்று அழைக்கப்படக் காரணமென்ன?

- முதல் உலகப்போர் 1914 இல் தொடங்கி 1918 வரையும், இரண்டாம் உலகப்போர் 1939 இல் தொடங்கி 1945 வரையும் நடைபெற்றது.
- உலகம் ஏற்கனவே பல போர்களை சந்தித்திருந்தாலும் இவ்விரு போர்கள் மட்டுமே உலகப்போர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன.
- ஏனெனில் இவ்விரு போர்களிலும் மோதல்கள் நடைபெற்ற பகுதிகள் பரந்து விரிந்ததாக இருந்தன.
- மேலும் இப்போர்களினால் உயிரிழந்த ஆயுதமேந்திப் போரிட்டோர், பொதுமக்கள் ஆகியோரின் இறப்பு எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது.
- தவிரவும் இவ்விரு போர்களும் ஐரோப்பிய, ஆசிய, ஆப்பிரிக்கக் கண்டங்களில் பல முனைகளில் நடைபெற்றன.

9. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான காரணங்கள் யாவை?

- அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சனின் முயற்சியால் பன்னாட்டுச் சங்கம் உருவானது.
- அரசியல் பிரச்சனைகளில் சங்கம் எடுக்கும் முடிவுகளுக்கு உறுப்பினர் அனைவரின் ஏகோபித்த ஆதரவு இல்லை. சங்கத்திற்கென ராணுவம் இல்லை என்பதால் எடுத்த முடிவுகளை செயல்படுத்த வேண்டும்.
- ஆனால் அமெரிக்கா இவ்வமைப்பில் உறுப்பு நாடாகச் சேரவில்லை. மேலும் ஏனைய நேச நாடுகளும் தலையிடாக் கொள்கை மனநிலையில் உறுதியாக இருந்தன.
- இதன் விளைவாக பன்னாட்டுச் சங்கம் ஒரு பயனற்ற பன்னாட்டுச் சங்கமாக இருந்தது.

10. முதல் உலகப் போருக்குப்பின் ஜெர்மனியின் நிலை எவ்வாறு இருந்தது?

- முதல் உலகப் போருக்குப்பின் ஜெர்மனி பெருமளவிலான வேலையில்லாத் திண்டாட்டத்தையும் கடுமையான பண வீக்கத்தையும் அனுபவிக்க நேர்ந்தது.
- ஜெர்மனியின் காகிதச் செலாவணி முழுமையாக மதிப்பிழந்தது.
- சாதாரண மக்கள் ரொட்டி வாங்குவதற்குக்கூட ஏராளமான பணத்தைச் செலவிட நேர்ந்தது.
- இவையனைத்திற்கும் ஜெர்மனியின் மீது கட்டாயமாகச் சுமத்தப்பட்ட போர் இழப்பீடே காரணம் என குற்றம் சாட்டப்பட்டது.

11. "மியூனிச் உடன்படிக்கை" – குறிப்பு வரைக.

- 1938 இல் பிரிட்டன் பிரதமர் சேம்பர்லின் ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையை மேற்கொண்டார்.
- இது செக்கோஸ்லோவாக்கியாவின் மீது படையெடுத்து அதன் ஜெர்மன் மொழி பேசும் பகுதியான சூடட்டன்லாந்தை ஜெர்மனி இணைத்துக் கொண்டதை ஏற்றுக்கொள்வதாக அமைந்தது.
- இருந்தபோதிலும் 1939 இல் சோவியத்யூனியன் ஜெர்மனியுடன் ஒருவர்மீது மற்றொருவர் படையெடுப்பதில்லை என ஒப்பந்தம் செய்து கொண்டன.
- நேசநாடுகளின் செயலற்ற இத்தன்மையும் படைகளைப் பெருக்கிக் கொள்வதில் அவை காட்டிய தயக்கமும் இரண்டாம் உலகப்போருக்குக் காரணங்களாக அமைந்தன.

12. இரண்டாம் உலகப்போர் ஒரு நவீனப் போர் என்று கருதப்படுவதேன்?

- இரண்டாம் உலகப்போர் ஒரு நவீனப் போராகும் ஏனெனில் டாங்குகள், போர்க் கப்பல்கள், விமானம் தாங்கிக் கப்பல்கள், நீர்மூழ்கிகள், போர் விமானங்கள், குண்டு வீசும் விமானங்கள் மற்றும் கனரக ராணுவ தளவாடங்களைக் கொண்டு போர்கள் நடத்தப்பட்டன.

13. "கடன் குத்தகைத் திட்டம்" – குறிப்பு வரைக.

- அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட் தனிமைப்பட்டிருத்தல் கொள்கையிலிருந்து மாற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார்.
- ஆனால் ஐரோப்பிய போர்களில் நேரடியாகத் தலையிடுவது சாத்தியமில்லாமல் இருந்தது.
- எனவே 1941 மார்ச்சில் கடன் குத்தகை திட்டத்தைத் தொடங்கினார். அதன்படி 'கடன்' எனும் பெயரில் ஆயுதம், உணவுப் பண்டம், ராணுவத்தளவாடம், ஏனைய பொருள்கள் பிரிட்டனுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- அவை பயன்படுத்திய பின்னர் திருப்பிக் கொடுக்கப்பட்டுவிடும். இத்திட்டம் மிகப்பெருமளவிற்கு பிரிட்டனின் வளங்களைப் பெருக்கியது.

14. "அணு ஆயுதப் பரவல்" – குறிப்பு வரைக.

- அமெரிக்க ஐக்கிய நாடுகளும் சோவியத் யூனியனும் அணு ஆயுதங்களை அதிகரிக்கும் போட்டியில் இறங்கி, ஆயுதங்களைப் பெருக்கிக் குவித்தன.
- இதேபோல் பிரிட்டனும் பிரான்சும் தங்களுக்கான அணு ஆயுதங்களைத் தயாரித்தெடுத்தன.
- அதிகமான அழிவுகளை ஏற்படுத்தவல்ல, அதிக சக்திவாய்ந்த ஆயுதங்களைக் கண்டுபிடிக்கவும் உற்பத்தி செய்யவும் உலக நாடுகள் பெருமளவு தங்கள் வளங்களைச் செலவு செய்தன.
- பல நாடுகளில் ராணுவத்திற்கான செலவினங்கள் உச்சத்தை எட்டின.

15. ஐ.நா.வின் முக்கியத் துணை அமைப்புகள் யாவை?

- ஐ.நா.வின் துணை அமைப்புகள் உலகில் மிகவும் அக்கறை செலுத்தப்பட வேண்டிய துறைகளான உணவு, சுகாதாரம், கல்வி, பண்பாடு ஆகிய களங்களில் செயல்படுகின்றன.
- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு – [FAO]
- உலக சுகாதார நிறுவனம் – [WHO]
- ஐ.நா.கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு – [UNESCO]

- ஐ.நா. குழந்தைகள் நிதி நிறுவனம் [UNICEF]
- ஐ.நா. வளர்ச்சித் திட்டம் [UNDP]

16. அமெரிக்கா ஏன் ஜப்பான் மீது அணுகுண்டு வீசியது?

- ஜப்பானியப் படைத்தளபதிகள் சரணடைய மறுத்த போது அமெரிக்கா ஜப்பானின் ஹிரோஷிமா நகர் மீது ஒரு அணுகுண்டை வீசியது.
- இதன் பின்னரும் ஜப்பானியர் சரணடைய மறுத்ததால் மற்றொரு அணுகுண்டு நாகசாகியின் மீது வீசப்பட்டது. இறுதியில் ஜப்பான் சரணடைந்தது.

VI. ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. ஸ்டாலின் கிரேடு போர்

அ) ஜெர்மனி ஸ்டாலின் கிரேடை எப்போது தாக்கியது?
1942 ஆகஸ்ட் திங்களில் ஜெர்மனி ஸ்டாலின் கிரேடை தாக்கியது.

ஆ) ஸ்டாலின்கிரேடின் முக்கிய உற்பத்திப் பொருள்கள் யாவை?
ஸ்டாலின்கிரேடின் முக்கிய உற்பத்திப் பொருள்கள் ஆயுதங்கள் மற்றும் டிராக்டர்கள் ஆகும்.

இ) ஸ்டாலின்கிரேடைத் தாக்குவதற்கு ஹிட்லர் தீட்டிய திட்டத்தின் பெயரென்ன?
ஹிட்லர் தீட்டிய திட்டத்தின் பெயர் "ஃபால்புளு" (Operation Blue) என்பதாகும்.

ஈ) ஸ்டாலின் கிரேடு போரின் முக்கியத்துவமென்ன?

- ரஷ்ய மக்கள், ஸ்டாலினுக்கு எதிராகப் புரட்சியில் ஈடுபடுவர் என்ற ஹிட்லரின் நம்பிக்கைக்கு நேர்மாறாக மக்கள் சோவியத் அரசுக்கு ஆதரவாக இருந்தனர். இதனால் சோவியத் யூனியனுக்குள் ரஷ்யப்படை முன்னேறுவதைத் தடுத்து நிறுத்தியது. போரின் போக்கு மாறியது.

2. தென்கிழக்கு ஆசியாவை ஜப்பான் ஆக்கிரமித்தல்

அ) ஜப்பானிடம் வீழ்ந்த தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
குவாம், பிலிப்பைன்ஸ், ஹாங்காங், சிங்கப்பூர், மலேயா, டச்சு கிழக்கிந்தியா (இந்தோனேசியா) பர்மா ஆகிய அனைத்து நாடுகளும் ஜப்பானிடம் வீழ்ந்தன.

ஆ) பசிபிக் பகுதியில் நேசநாடுகள் சந்தித்த பின்னடைவுக்கான காரணங்களைக் கணக்கிடுக.
போதுமான அளவிற்கு தயாரிப்பின்மை காரணமாக நேச நாடுகள் பசிபிக் பகுதியில் பின்னடைவுகளைச் சந்திக்க நேர்ந்தது.

இ) மிட்வே போரின் முக்கியத்துவம் யாது?
மிட்வே போரில் அமெரிக்கக் கப்பற்படை ஜப்பானின் கப்பற்படையைத் தோற்கடித்தது. இது போரின் போக்கை நேச நாடுகளுக்குச் சாதகமாக மாற்றியது.

ஈ) பர்மாவில் வாழ்ந்து கொண்டிருந்த இந்தியர்களுக்கு என்ன நேர்ந்தது?
பல இந்தியர்கள் பர்மாவிலிருந்து கால்நடையாகவே இந்திய எல்லையை வந்தடைந்தனர். இடையில் பெரும் துன்பங்களை எதிர் கொண்டனர். நோய் மற்றும் சோர்வு காரணமாகப் பலர் இறந்தனர். அந்நாடுகளிலேயே தங்கியவர்கள் ஜப்பானியரிடம் துயருற்றனர்.

3. பொதுச்சபையும் பாதுகாப்புக் கவுன்சிலும்

அ) பாதுகாப்புக் கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர் நாடுகளை பட்டியலிடுக.

- அமெரிக்க ஐக்கிய நாடுகள்
- பிரிட்டன்
- பிரான்ஸ்
- ரஷ்யா
- சீனா

ஆ) பேரழிவு என்றால் என்ன?
இரண்டாவது உலகப் போரின்போது ஜெர்மனியர்களால் ஆறு மில்லியன் யூதமக்கள் கொல்லப்பட்ட இன அழிப்பை விளக்குவதற்கு பேரழிவு என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

இ) ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்தின் தலைவர் யார்?
- அமெரிக்க குடியரசுத் தலைவர் பிராங்கிளின் ரூஸ்வெல்ட்டின் விதவை மனைவி

ஈ) மறுப்பாணை அதிகாரம் [தடுப்பாணை] என்றால் என்ன?
- ஐ.நா வின் ஒவ்வொரு நிரந்தர உறுப்பினருக்கும் மறுப்பாணை அதிகாரம் (veto power) உண்டு. எடுக்கும் எந்த முடிவையும் இதன் மூலம் ஒரு உறுப்பினர் தடுத்துவிடலாம்.
- இவ்வதிகாரம் வல்லரசுகளால் குறிப்பாக அமெரிக்காவாலும் ரஷ்யாவாலும் முக்கிய முடிவுகளைத் தடுப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

கூடுதல் வினாக்கள்

4. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்வி

அ) பன்னாட்டுச் சங்கம் உருவாவதற்குக் காரணமானவர் யார்?
அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சன்.

ஆ) பன்னாட்டுச் சங்கத்திடமிருந்து எதிர்பார்க்கப்பட்டவை எவை?
- பன்னாட்டுச் சங்கம் நாடுகளிடையே பிரச்சனை ஏற்படும்போது நடுவராக இருந்து பிரச்சனைகளைத் தீர்க்குமெனவும் ராணுவ ஆக்கிரமிப்பை மேற்கொள்ளும் நாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

இ) அமெரிக்கா இவ்வமைப்பில் உறுப்பு நாடாகச் சேராதது ஏன்?
அமெரிக்கா முதல் உலகப் போருக்குப் பின்னர் உலக அரசியலிலோ, ஐரோப்பிய அரசியலிலோ பங்கெடுப்பதில் ஆர்வம் கொள்ளவில்லை என்பதேயாகும்.

ஈ) பன்னாட்டு சங்கத்தில் ஏனைய நேசநாடுகளின் நிலை என்ன?
அமெரிக்கா நீங்கலாக ஏனைய நேச நாடுகளும் தலையிடாக் கொள்கை மனநிலையில் இருந்தன.

5. அடால்ப் ஹிட்லரின் எழுச்சி

அ) ஹிட்லர் எவ்வாறு ஜெர்மானிய மக்களைத் தன்பக்கம் ஈர்த்தார்?
வல்லமைமிக்க சொற்பொழிவாற்றும் திறமையாலும் உணர்ச்சிமிக்க பேச்சுக்களாலும் ஜெர்மனியை அதன் புகழ்மிக்க முந்தைய காலத்திற்கு மீண்டும் அழைத்துச் செல்வதாகக் கூறி ஹிட்லர் ஜெர்மன் மக்களைத் தன்பக்கம் ஈர்த்தார்.

ஆ) ஹிட்லர் நிறுவிய கட்சி யாது?
ஹிட்லர் தேசிய சமதர்மவாதிகள் கட்சியை நிறுவினார். இது நாசிக்கட்சி என்று அழைக்கப்பட்டது.

இ) ஹிட்லர் மக்களின் ஆதரவைத் திரட்ட பயன்படுத்திய இரு அடிப்படைக் கருத்துகள் யாவை?
- ஜெர்மானியரே சுத்தமான ஆரிய இனத்தவர் எனும் இன உயர்வு மனப்பாங்கு
- மிக ஆழமான யூத எதிர்ப்பு

ஈ) ஹிட்லரின் ஆட்சிக் காலத்தைக் குறிப்பிடுக.
ஹிட்லர் 1933 இல் ஆட்சிக்கு வந்து 1945 வரை ஜெர்மனியை ஆட்சி செய்தார்.

6. ஜெர்மனியின் ரஷ்யப் படையெடுப்பு

அ) ஜெர்மனி, ரஷ்யாவின் மீது எப்பொழுது படையெடுத்தது?
1941 ஆண்டு ஜூன் மாதம் ஜெர்மனி ரஷ்யாவின் மீது படையெடுத்தது

ஆ) இப்படையெடுப்பின் நோக்கமென்ன?
- ஜெர்மன் மக்களை குடியேற்றுவதற்குத் தேவையான முக்கிய நிலப்பகுதிகளைப் பெறுதல்.
- கம்யூனிச ஆட்சியை ஒழிப்பது
- ரஷ்யாவின் இயற்கை வளங்களைக் குறிப்பாக எண்ணெய் வளங்களைக் கைப்பற்றுவது என்பனவாகும்.

இ) ஜெர்மன் படைகளின் தந்திரமான தாக்குதல் எவ்வாறு அழைக்கப்பட்டது?
மின்னல் வேகத் தாக்குதல்.

ஈ) ஜெர்மானியப் படையின் தோல்விக்கான காரணமென்ன?
- சோவியத் படைகளின் வலுவான எதிர்ப்பு
- ரஷ்யாவின் கடுமையான குளிர் ஆகிய காரணங்களால் ஜெர்மானியப்படை தோல்வியுற்றது.

VII. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. அடால்ப் ஹிட்லரின் எழுச்சி மற்றும் வீழ்ச்சி குறித்து ஒரு கட்டுரை வரையவும்.

அடால்ப் ஹிட்லரின் எழுச்சி:
- ஹிட்லர் தனது வல்லமை மிக்க சொற்பொழிவாற்றும் திறமையாலும் உணர்ச்சி மிக்கப் பேச்சுக்களாலும் ஜெர்மனியை அதன் ராணுவப் புகழ்மிக்க முந்தைய காலத்திற்கு மீண்டும் அழைத்துச் செல்வதாகவும் கூறி மக்களை தன்பக்கம் ஈர்த்தார்.
- தேசிய சமதர்மவாதிகள் கட்சியை நிறுவினார். இது நாசிக்கட்சி என்று அழைக்கப்பட்டது.
- இரண்டு அடிப்படைக் கருத்துகளை அடித்தளமாகக் கொண்டு ஹிட்லர் மக்களின் ஆதரவைத் திரட்டினார். ஒன்று ஜெர்மனியரே சுத்தமான ஆரிய இனத்தவர் எனும் இனஉயர்வு மனப்பாங்கு மற்றொன்று மிக ஆழமான யூத வெறுப்பு ஆகும்.
- வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துகளுக்கு நேரெதிராக ஹிட்லர் ஜெர்மனியின் ராணுவத்தையும் ஆயுதங்களையும் அதிகரிக்கத் துவங்கினார்.
- ஆயுதப் படைகளுக்கான ஆள் சேர்ப்பு, ராணுவத்திற்குத் தேவைப்படும் ஆயுதங்களையும் ஏனைய இயந்திரங்களையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் நிறுவுதல் போன்றவற்றால் ஜெர்மனியின் பொருளாதாரம் புத்துயிர் பெற்றதோடு வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சனையும் ஹிட்லரால் தீர்த்து வைக்கப்பட்டது.
- ஹிட்லர் படைநீக்கம் செய்யப்பட்ட மண்டலமாகக் கருதப்பட்ட ரைன்லாந்தின் மீது 1936 இல் படையெடுத்தார்.
- ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பானுடன் இணைந்து ரோம் – பெர்லின் – டோக்கியோ அச்சு உடன்படிக்கை செய்து கொண்டது.
- ஹிட்லர் 1938 ஆஸ்திரியா மற்றும் செக்கோஸ்லாவாகியா நாடுகளைக் கைப்பற்றினார்.
- 1939 ல் போலந்தைத் தாக்கி அதைக் கைப்பற்றினார்.

ஹிட்லரின் வீழ்ச்சி:
- இரண்டாம் உலகப்போரின் தொடக்கத்தில் பல வெற்றிகளைப் பெற்றிருந்தபோதிலும் ஜெர்மனி 1940 இல் நடைபெற்ற பிரிட்டன் போரின் இறுதியில் தோல்வியடைந்தது.
- 1941 ஆம் ஆண்டு ரஷ்யாவின் மீது படையெடுத்த ஜெர்மனி மின்னல் வேகத்தாக்குதலால் தொடக்கத்தில் வெற்றி பெற்றது. ஆனால் இறுதியில் சோவியத் படைகளின் வலுவான எதிர்ப்பு, ரஷ்யாவின் கடுமையான குளிர் ஆகிய காரணங்களால் தோல்வியுற்றது.
- 1942 இல் நடைபெற்ற போரிலும் ஹிட்லரின் நம்பிக்கைக்கு எதிராக ரஷ்யமக்கள் சோவியத் அரசுக்கு ஆதரவு அளித்ததால் ஜெர்மனி படைகள் மேலும் முன்னேறுவது தடுத்து நிறுத்தப்பட்டது.
- 1942 இல் நடைபெற்ற எல் அலாமெய்ன் போரில் ஜெர்மனி நேசநாட்டுப் படைகளால் தோற்கடிக்கப்பட்டது.
- 1943 இல் இத்தாலி சரணடைந்தது.
- 1945 இல் முசோலினி இத்தாலிய கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்டார்.
- இத்தொடர் தோல்விகளால் ஹிட்லர் 1945 ஏப்ரலில் தற்கொலை செய்து கொண்டார்.

2. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க. **PTA**

புதிய நிலவியல்சார் அரசியல் அதிகார அணிசேர்க்கை:
- வல்லரசுகள் தலைமையிலான அணிகளைக் கொண்ட உலகம் இரு துருவங்களானது.
- ஒரு அணி கம்யூனிச எதிர்ப்புக் கருத்துக்களைக் கொண்ட அமெரிக்காவால் தலைமையேற்கப்பட்டது.

- மற்றொரு அணிக்கு சோவியத் யூனியன் தலைமை தாங்கியது.
- கம்யூனிசநாடுகள், கம்யூனிசமல்லாத நாடுகள் என ஐரோப்பா இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

அணு ஆயுதப்பரவல்:

- அமெரிக்க ஐக்கிய நாடுகளும் சோவியத்யூனியனும் அணுஆயுதங்களை அதிகரிக்கும் போட்டியில் இறங்கி, ஆயுதங்களைப் பெருக்கிக் குவித்தன.
- இதே போல் பிரிட்டனும் பிரான்சும் தங்களுக்கான அணுஆயுதங்களைத் தயாரித்தெடுத்தன.
- அதிகமான அழிவுகளை ஏற்படுத்தவல்ல, அதிகசக்தி வாய்ந்த ஆயுதங்களைக் கண்டுபிடிக்கவும் உற்பத்தி செய்யவும் உலகநாடுகள் பெருமளவு தங்கள் வளங்களைச் செலவு செய்தன. பல நாடுகளில் ராணுவத்திற்கான செலவினங்கள் உச்சத்தை எட்டின.

பன்னாட்டு முகமைகள்:

- பல பன்னாட்டு முகமைகள் குறிப்பாக, ஐக்கிய நாடுகள் சபை, உலகவங்கி, பன்னாட்டு நிதியம் போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன. இவை பெரிய மற்றும் சிறிய நாடுகளுக்குப் பொது இடமாகத் திகழ்ந்தன.

சமூகப் பொருளாதார மாற்றங்கள்:

- காலனி நீக்கச் செயல்பாட்டின் அடிப்படையில் காலனியாதிக்கச் சக்திகள் தங்களது காலனிகளுக்கு விடுதலை வழங்கவேண்டிய கட்டாயத்திற்குள்ளாயினர்.
- அதில் இந்தியா முதலாவதாய் சுதந்திரம் பெற்றது. விடுதலைபெற்ற நாடுகள் பன்னாட்டு அரங்குகளில் தங்கள் குரல்களை ஒலிக்கச் செய்தன.
- பெண்கள் பெரும் எண்ணிக்கையில் உழைப்பாளர்களாயினர். பொருளாதார ரீதியாகப் பெண்கள் சுதந்திரமானவர்களாக ஆகியதால் சமூக உறவுகள் (திருமணம், குடும்பம்) குறித்த கருத்துக்களும் மாற்றங்களுக்குள்ளாயின.

3. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க. **PTA**

ஐ.நா. சபை

அனைத்து நாடுகளிலும் அமைதி நிலவிடவும் மக்கள் தங்கள் வாழ்வை அச்சமின்றி சுதந்திரமாக வாழ்ந்திடவும் ஐக்கிய நாடுகள் சபை 1945 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

- ஐ.நா சபையின் சாசனத்தில் 1945 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் நாள் 51 நாடுகள் கையெழுத்திட்டன.
- தற்போது ஐக்கிய நாடுகள் சபை 193 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு நாடும் சிறியதோ அல்லது பெரியதோ, ஐக்கிய நாடுகள் சபையில் சமமான வாக்குகளைப் பெற்றுள்ளது.

பொதுச்சபை:

- பொதுச்சபை எனும் அமைப்பில் ஒவ்வொரு நாடும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது.
- இவ்வமைப்பு ஆண்டுக்கு ஒருமுறை கூடி நாடுகளின் நலன் சார்ந்த அம்சங்களும், முரண்பாடுகளுக்கான காரணங்களும் விவாதிக்கப்படுகின்றன.

பாதுகாப்பு சபை:

- பாதுகாப்பு சபையானது 15 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் இச்சபையின் நிரந்தர உறுப்பினர்களாவர். ஏனைய பத்து உறுப்பினர்கள் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- ஒவ்வொரு நிரந்தர உறுப்பினருக்கும், மறுப்பாணை அதிகாரம் (veto power) உண்டு. எந்த முடிவையும் இதன்மூலம் தடுத்துவிடலாம்.

நிர்வாக அமைப்பு:

- ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாட்டு அங்கமாகத் திகழ்வது செயலகம் ஆகும்.
- இதன் பொதுச்செயலாளர், பொதுச்சபையில், பாதுகாப்புச் சபையின் பரிந்துரையின் படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- பொதுச் செயலாளர் தனது காபினெட் உறுப்பினர்கள், ஏனைய அதிகாரிகள் ஆகியோரின் துணையோடு ஐ.நா சபையை நடத்துகிறார்.
- பன்னாட்டு நீதிமன்றம் ஐ.நா. சபையின் நீதி நிர்வாகக் கிளையாகும். இது ஹாலந்திலுள்ள தி ஹேக்கில் அமைந்துள்ளது.

- பொருளாதார மற்றும் சமூகமன்றம் ஐ.நா.சபையின் ஐந்தாவது அங்கமாகும்.

ஐ.நா.வின் இதர முக்கியத் துணைஅமைப்புகள்:

- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு – (FAO)
- உலக சுகாதார நிறுவனம் – (WHO)
- ஐ.நா. வின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு – (UNESCO)
- ஐ.நா. குழந்தைகள் நிதி நிறுவனம் – (UNICEF)
- ஐ.நா. வளர்ச்சி திட்டம் – (UNDP)

ஐ.நா. வின் செயல்பாடுகள்:

- கடந்த பல பத்தாண்டுகளில் உலகம் எதிர்கொண்ட, மாறிவரும் பிரச்சனைகளுக்கு ஏற்றவாறு ஐ.நா. சபை தனது செயல்பாடுகளை விரிவாக்கம் செய்துள்ளது.
- 1960 களில் காலனியாதிக்க நீக்கம் முக்கியப் பிரச்சனையாகும்.
- மனித உரிமைகள், அகதிகள் பிரச்சனை, பருவகால மாற்றம், பாலினச் சமத்துவம் ஆகியன தற்போது ஐ.நா. சபையின் செயல்பாட்டு வளையத்தினுள் உள்ளன.
- ஐ.நா. வின் அமைதிப்படை உலகம் முழுவதிலும் மோதல்கள் அரங்கேறியப் பல்வேறு பகுதிகளில் அடிப்படை பணி செய்துள்ளது. அதன் முக்கியப் பகுதியாக உள்ள இந்திய ராணுவம் உலகின் பல்வேறு பகுதிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளது.

கூடுதல் வினாக்கள்

4. பிரிட்டன் போர் பற்றி விவரி.

- 1940 ஜூலையில் பிரிட்டனின் மீது ஜெர்மனி படையெடுக்கும் எனும் அச்சம் ஏற்பட்டது. நீண்ட நெடிய ஆகாய விமானக் குண்டுத் தாக்குதல்களின் மூலம் தனது திட்டங்களை ஏற்றுக்கொள்ளுமாறு பிரிட்டனை வற்புறுத்த ஹிட்லர் விரும்பினார்.
- ஜெர்மனியின் விமானப்படைகள் குறிப்பிட்ட இலக்குகளை, மிகக் குறிப்பாகத் துறைமுகங்கள், விமானத்தளங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றைத் தாக்கத் தொடங்கின.
- 1940 செப்டம்பரில் லண்டன் நகரம் இரக்கமற்ற குண்டுவீச்சுக்கு இலக்கானது. இந்த நடவடிக்கை மின்னல் என்றழைக்கப்பட்டது.
- இரவு நேரங்களில் லண்டன் மற்றும் ஏனைய தொழில் நகரங்களின் மீது குண்டுவீச்சுத் தாக்குதல் தொடங்கிற்று. ஆனால் இது தோல்வியில் முடிந்தது.
- ஜெர்மனியின் போர் விமானங்கள் சற்று தொலைவில் வரும்போதே அவற்றைக் கண்டறியும் திறன்பெற்ற ரேடாரைப் பயன்படுத்தி பிரிட்டனின் ராயல் ஏர்போர்ஸ் போர் விமானங்கள் ஜெர்மனியின் குண்டுவீச்சு விமானங்களைத் தாக்கி பேரிழப்பை விளைவித்தன.
- விமானத் தாக்குதல்கள் 1940 அக்டோபர் மாதத்தோடு நின்று போனது. விமானப்போரில் ஏற்பட்ட இத்தோல்வியால் பிரிட்டன் மீது படையெடுக்கும் திட்டத்தை ஜெர்மனி கைவிட்டது.

5. மனித உரிமைப் பிரகடனம் பற்றி விவரி.

- இரண்டாம் உலகப்போரின் பேரழிவு நடைபெற்றபின், ஐ.நா. சபை தன்னுடைய மனித உரிமை சாசனத்தில் இனம், பால், மொழி, மதம் ஆகிய வேறுபாடுகளின்றி அடிப்படைச் சுதந்திரமும் மனித உரிமைகளும் உலகளாவிய முறையில் கடைபிடிக்கப்படுவதை ஊக்குவிக்கப்போவதாக உறுதிமொழி மேற்கொண்டது.
- உலகளாவிய முறையில் மனித உரிமைகளை காப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது.
- இவ்வமைப்பால் உருவாக்கப்பட்ட குழு ஒன்றுக்கு குடியரசுத் தலைவர் பிராங்கிளின் ரூஸ்வெல்ட்டின் விதவை மனைவியார் தலைமை வகித்தார்.
- மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் 30 கட்டுரைகளில் அடிப்படை மனித உரிமைகளை முன்வைக்கிறது.
- 1948 டிசம்பர் 10 இல் ஐ.நா. சபை இந்த வரலாற்று சாசனத்தை ஏற்றுக்கொண்டது. இந்த நாள் (டிசம்பர் 10) உலகம் முழுவதும் மனித உரிமைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

காலக்கோடு (முக்கிய நிகழ்வுகள்)

1914 - 1918	–	முதல் உலகப்போர்
1919	–	வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை
1926	–	இங்கிலாந்து பொது வேலைநிறுத்தம்
1929	–	பொருளாதாரப் பெருமந்தம்
1931	–	ஜப்பான் மஞ்சூரியா மீது படையெடுப்பு.
1935	–	இத்தாலி எத்தியோப்பியா மீது படையெடுப்பு.
1936	–	ரோம் – பெர்லின் – டோக்கியோ அச்சு உடன்படிக்கை
1937	–	ஜப்பான் சீனாவை தாக்கி மூற்றுகை
1938	–	1. ஹிட்லர் ஆஸ்திரியா, செக்கோஸ்லோவாக்கியா நாடுகளை தாக்கினார். 2. மியூனிச் உடன்படிக்கை ஏற்பட்டது.
1939	–	1. இத்தாலி அல்பேனியா மீது படையெடுத்தது. 2. சோவியத் யூனியன் ஜெர்மனியுடன் ஒருவர் மீது மற்றவர் படையெடுப்பதில்லை என ஒப்பந்தம் செய்துகொண்டது. 3. இங்கிலாந்து, பிரான்சும், ஜெர்மனி மீது போர்ப்பிரகடனம் செய்தன.
1939 - 1945	–	இரண்டாம் உலகப்போர்
1940	–	1. பிரிட்டன் போர் 2. பிரிட்டன் பிரதமர் சேம்பர்லின் பதவி விலகினார் 3. இத்தாலி ஜெர்மனியுடன் இனைந்தது 4. ஜப்பான்அச்சு நாடுகளுடன் கைகோர்த்தல் 5. கூட்டுபடை வீரர்கள் டன்கிரிக் நகரில் இருந்து பின்வாங்குதல்
1941	–	1. முத்துத் துறைமுகம் தாக்குதல் 2. அமெரிக்காவின் கடன் – குத்தகைத் திட்டம் 3. ஜெர்மன் படைகள் ரஷ்யா மீது படையெடுத்தது
1942	–	1. ஸ்டாலின்கிரேடு போர் 2. ஃபால் புளூ திட்டம் 3. மிட்வே போரும் க்வாடல்கெனால் போரும் 4. எல் அலாமெய்ன் போர்
1943	–	இத்தாலி சரணடைதல்
1944	–	1. ஐரோப்பாவின் முக்கிய நிலப்பகுதிகளுக்குள் நேசநாடுகளின் படைகள் படையெடுத்தது. 2. பிரெட்டன் உட்ஸ் மாநாடு
1945	–	1. ஹிரோஷிமா, நாகசாகி குண்டுவீச்சு 2. இரண்டாம் உலகப் போர் முடிவு 3. அடால்ப் ஹிட்லரின் முடிவு 4. ஐ.நா. சபை வரலாற்று சாசனத்தை ஏற்றுக்கொண்டது. 5. பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்கள் (உலக வங்கி, பன்னாட்டு நிதி அமைப்பு)
1948	–	முதல் மனித உரிமைகள் தினம் கொண்டாடப் பட்டது.

வரைபடம்

இரண்டாம் உலகப்போர் அச்சு நாடுகளும், நேச நாடுகளும்



அலகு 4 வரலாறு

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய உலகம்

மனவரைபடம்

01 1911இல் ஏற்பட்ட புரட்சிக்குப் பின் நிகழ்ந்தவற்றில் துவங்கி இரண்டாம் உலகப் போருக்குப் பின் சீனா ஒரு பொதுவுடைமை அரசாக மாறியது வரையிலான சீனாவின் வரலாறு

02 ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கும் சோவியத் நாட்டிற்குமிடையே மூண்ட பகைமை, உலகை இரு இராணுவப் பிரிவுகளாகப் பிரித்தது. வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு, வார்சா ஒப்பந்தம்

03 கொரியப் போர் கியூபாவின் ஏவுகணைச் சிக்கல்; அரபு – இஸ்ரேல் போர், வியட்நாம் போர், பனிப்போர்

04 மூன்றாம் உலக நாடுகளின் கருத்தியலாக வெளியிடப்பட்ட அணிசேரா இயக்கம்

05 ஐக்கிய அமெரிக்க நாட்டிலிருந்து விலகி ஐரோப்பியக் குழுவை ஏற்படுத்தி அதன் நீட்சியாகவே பின்னர் ஐரோப்பிய பொதுச் சந்தையும் ஐரோப்பிய இணைவும் ஏற்பட்டது.

நினைவில் கொள்க

- முதலாம் உலகப்போர் ரஷ்யாவில் **பொதுவுடைமைப் புரட்சியை** ஏற்படுத்தியது. இரண்டாம் உலகப்போர் சீனாவில் **சீனப்புரட்சி** ஏற்படக் காரணமாயிற்று.
- ஐரோப்பாவின் மறுசீரமைப்பை முன்னிறுத்திய **மார்ஷல் திட்டத்தின்** மூலமாக அமெரிக்க ஐக்கிய நாடு ஐரோப்பாவின் நம்பிக்கையை வென்றது.
- **அணிசேரா நாடுகளின் அமைப்பு** இரு வல்லரசுகளுக்கிடையே ஏற்பட்ட முரண்பாட்டைக் கட்டுக்குள் வைக்க பங்காற்றியது.
- "நவீன சீனாவின் தந்தை" என அழைக்கப்பட்டவர் **டாக்டர் சன்யாட் சென்.**
- இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் சோவியத் நாட்டிற்கும் இரு நாடுகளின் நட்பு நாடுகளுக்குமிடையே மூண்ட விரோதம் **பனிப்போர்** என்று அழைக்கப்படுகிறது.
- **நேட்டோவிற்கு** எதிராக சோவியத் நாடு தன் ஆதரவு நாடுகளைக் கொண்டு உருவாக்கியதே **வார்சா ஒப்பந்தமாகும்.**
- அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைமையில் கூடிய முதலாளித்துவ நாடுகள் உலக அரசியலில் **முதலாம் உலக நாடுகள்** என்று அழைக்கப்பட்டன.
- பாலஸ்தீனிய விடுதலை அமைப்பின் முக்கியத் தலைவர் **யாசர் அராபத்.** இவர் பாலஸ்தீன தேசத்தின் முதல் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- **1976** இல் வடக்கு வியட்நாமும், தெற்கு வியட்நாமும் ஒரே தேசமாக ஒன்றிணைக்கப்பட்டது.
- வியட்நாமின் மிகப்பெருந்தலைவராக மக்களின் முன் உருவெடுத்தவர் **ஹோ சி மின்.**
- ஐரோப்பிய ஒன்றியத்தை ஏற்படுத்திய ஒப்பந்தம் **மாஸ்டிரிக்ட்** (நெதர்லாந்து) ஒப்பந்தமாகும் (1992)
- 1988 இல் ரஷ்யாவில் நிகழ்ந்த அணுக்கசிவு **"செர்னோபில் பேரழிவு"** என்று அழைக்கப்படுகிறது.
- 1989 இல் ஜெர்மனியில் அலைகடல் போல் பரவிய எழுச்சிகள் **பெர்லின் சுவர்** தகர்த்தெறியப்படக் காரணமாக விளங்கின.

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **வம்போவா இராணுவக் கழகத்தின் முதல் இயக்குனர் யார்?** PTA
   அ) சன் யாட் சென் ஆ) ஷியாங் கே – ஷேக்
   இ) மைக்கேல் பொரோடின் ஈ) சூ – யென் – லாய்
2. **எந்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் பொதுவுடைமைக் கொள்கையைக் கட்டுக்குள் அடக்க ஒரு கொள்கை வரைவை முன்வைத்தார்?**
   அ) உட்ரோ வில்சன் ஆ) ட்ரூமென்
   இ) தியோடர் ரூஸ்வேல்ட் ஈ) பிராங்க்ளின் ரூஸ்வேல்ட்
3. **சீனாவில் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு எப்போது நடைபெற்றது?**
   அ) செப்டம்பர் 1959 ஆ) செப்டம்பர் 1948 இ) செப்டம்பர் 1954 ஈ) செப்டம்பர் 1949
4. **அமெரிக்க ஐக்கிய நாடும் அதன் ஐரோப்பிய நேச நாடுகளும் சேர்ந்து சோவியத் நாட்டின் ஆக்கிரமிப்பைத் தவிர்க்க ஏற்படுத்திய அமைப்பின் பெயர் __________ ஆகும்.** PTA
   அ) சீட்டோ ஆ) நேட்டோ இ) சென்டோ ஈ) வார்சா ஒப்பந்தம்
5. **பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் செயற்குழுவிற்கு 1969ல் தலைவராகப் பதவியேற்றவர் யார்?**
   அ) ஹபீஸ் அல் – ஆஸாத் ஆ) யாசர் அராபத்
   இ) நாசர் ஈ) சதாம் உசேன்

PTA

6. வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம் எந்த ஆண்டு ஒன்று சேர்க்கப்பட்டது?
   அ) 1975 ஆ) 1976 இ) 1973 ஈ) 1974

7. அரேபிய கூட்டமைப்பு எவ்விடத்தில் ஏற்படுத்தப்பட்டது?
   அ) கெய்ரோ ஆ) ஜோர்டான் இ) லெபனான் ஈ) சிரியா

8. எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது?
   அ) 1979 ஆ) 1989 இ) 1990 ஈ) 1991

கூடுதல் வினாக்கள்

9. "பொதுவுடைமைப் புரட்சி" தோன்றிய நாடு
   அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா
   இ) இந்தியா ஈ) அமெரிக்கா

10. ஐரோப்பாவின் மறுசீரமைப்பை முன்னிறுத்திய திட்டம்
   அ) மார்ஷல் திட்டம் ஆ) மன்றோ திட்டம்
   இ) ரூஸ்வெல்ட் திட்டம் ஈ) லெனின் திட்டம்

11. ஆசிய – ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளித்த நாடு
   அ) பிரிட்டன் ஆ) அமெரிக்கா
   இ) சீனா ஈ) சோவியத் ரஷ்யா

12. அபினிப் போர்களில் தோல்வியைச் சந்தித்த நாடு
   அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா
   இ) சீனா ஈ) இந்தியா

13. மஞ்சு அரசரின் பாதுகாவலராகத் திகழ்ந்த பேரரசி
   அ) சூ சி ஆ) ஷி – கே இ) சூ – என் – லாய் ஈ) ஷியாங்–கே

14. "நவீன சீனாவின் தந்தை" என்று அழைக்கப்பட்டவர்
   அ) யுவான் ஷி – கே ஆ) டாக்டர் சன் யாட் சென்
   இ) சூ – யென் – லாய் ஈ) மா – சே – துங்

15. டாக்டர் சன் யாட் சென் 1905 ல் துவங்கிய கட்சி
   அ) தைபிங் கட்சி ஆ) பொதுவுடைமைக் கட்சி
   இ) வம்போவா கட்சி ஈ) கோமிங்டாங் கட்சி

16. சீனப்புரட்சி வெடித்த ஆண்டு
   அ) 1909 ஆ) 1919 இ) 1911 ஈ) 1917

17. சன் யாட் சென்னால் ரஷ்யாவின் ஆதரவைப்பெற மாஸ்கோவிற்கு அனுப்பப்பட்டவர்
   அ) ஷியாங் கே ஷேக் ஆ) மா சே துங்
   இ) யுவான் ஷி – கே ஈ) சூ – யென் – லாய்

18. சீனாவில் 1949 இல் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு கூடிய இடம்
   அ) ஹாங்காங் ஆ) பீகிங்
   இ) காண்டன் ஈ) நான்கிங்

19. "பனிப்போர்" என்ற சொல்லாடலை முதன் முறையாகக் கையாண்ட ஆங்கில எழுத்தாளர்
   அ) ஜார்ஜ் ஆர்வெல் ஆ) வெலிங்டன்
   இ) ஜார்ஜ் வாஷிங்டன் ஈ) ட்ரூமென்

20. உலகம் முழுவதும் பொதுவுடைமைக் கருத்தைப் பரப்ப தீர்மானமாக இருந்த நாடு
   அ) சீனா ஆ) பிரான்ஸ்
   இ) ரஷ்யா ஈ) அமெரிக்கா

21. மேற்கு ஐரோப்பிய நாடுகளை தன் செல்வாக்கினுள் வைத்துக் கொள்ள அமெரிக்க ஐக்கிய நாடு உருவாக்கிய திட்டம்
அ) ரூஸ்வெல்ட் திட்டம் ஆ) வெல்லெஸ்லி திட்டம்
இ) மன்றோ திட்டம் ஈ) மார்ஷல் திட்டம்

22. ஜப்பான் மீது அணுகுண்டை வீசிய நாடு
அ) பிரான்ஸ் ஆ) இங்கிலாந்து
இ) அமெரிக்கா ஈ) சீனா

23. ரஷ்யா அணுகுண்டு பரிசோதனை செய்த ஆண்டு
அ) 1945 ஆ) 1947 இ) 1949 ஈ) 1951

24. பனிப்போரை மேலும் சூடுபிடிக்க வைத்த போர்
அ) கொரியப் போர் ஆ) அபினிப்போர்
இ) வியட்நாம் போர் ஈ) பாலஸ்தீனியப் போர்

25. "முதல் உலக நாடுகள்" என அழைக்கப்படுவது
அ) சோசியலிச நாடுகள் ஆ) அணிசேரா நாடுகள்
இ) பொதுவுடைமை நாடுகள் ஈ) முதலாளித்துவ நாடுகள்

26. "அணி சேரா இயக்கம்" அமைக்கப்பட்ட ஆண்டு
அ) 1951 ஆ) 1961 இ) 1971 ஈ) 1981

27. சீயோனிய இயக்கத்தலைவர்களுக்கு பாலஸ்தீனியத்தின் பகுதிகளை யூதக்குடியிருப்புகளாக வழங்க உறுதியளித்த நாடு
அ) ரஷ்யா ஆ) ஜெர்மனி
இ) அமெரிக்கா ஈ) பிரிட்டன்

28. அரேபிய கூட்டமைப்பு உருவாகிய இடம்
அ) பாக்தாத் ஆ) கெய்ரோ
இ) துருக்கி ஈ) ஜோர்டான்

29. சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கிய எகிப்தின் குடியரசுத் தலைவர்
அ) யாசர் அராபத் ஆ) கர்னல் ஹெர்சல்
இ) கர்னல் நாசர் ஈ) கர்னல் தோடார்

30. பாலஸ்தீன தேசத்தின் முதல் அதிபர்
அ) யாசர் அராபத் ஆ) ஹூசைன்
இ) நாசர் ஈ) அன்வர் சாதத்

விடைகள்

1. ஆ) ஷியாங் கை ஷேக்	2. ஆ) ட்ருமென்	3. ஆ) செப்டம்பர் 1949
4. ஆ) நேட்டோ	5. ஆ) யாசர் அராபத்	6. ஆ) 1976
7. அ) கெய்ரோ	8. ஈ) 1991	9. ஆ) ரஷ்யா
10. அ) மார்ஷல் திட்டம்	11. ஈ) சோவியத் ரஷ்யா	12. இ) சீனா
13. அ) சூ சி	14. ஆ) டாக்டர் சன் யாட் சென்	15. ஈ) கோமிங்டாங் கட்சி
16. இ) 1911	17. அ) ஷியாங் கே ஷேக்	18. ஆ) பீகிங்
19. அ) ஜார்ஜ் ஆர்வெல்	20. இ) ரஷ்யா	21. ஈ) மார்ஷல் திட்டம்
22. இ) அமெரிக்கா	23. இ) 1949	24. அ) கொரியப் போர்
25. ஈ) முதலாளித்துவ நாடுகள்	26. ஆ) 1961	27. ஈ) பிரிட்டன்
28. ஆ) கெய்ரோ	29. இ) கர்னல் நாசர்	30. அ) யாசர் அராபத்

II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. 'நவீன சீனாவின் தந்தை' என்று அழைக்கப்படுபவர் ___________ ஆவார்.
2. 1918 இல் ___________ பல்கலைக்கழகத்தில் மார்க்ஸியக் கோட்பாட்டை அறியும் அமைப்பு நிறுவப்பட்டது.
3. டாக்டர் சன் யாட் சென்னின் மறைவுக்குப் பின்னர் கோமிங்டாங் கட்சியின் தலைவராக இருந்தவர் ___________ ஆவார்.
4. அமைதியையும் பாதுகாப்பையும் விரும்பிய அரபு நாடுகளுக்கு திறந்தே இருந்த ஒப்பந்தம்___________ ஆகும்.
5. துருக்கி அரபுப்பேரரசை ஏற்படுத்தும் நோக்கைக் கொண்டிருந்த ஒப்பந்தம் ___________ ஆகும்.
6. ஜெர்மனி நேட்டோவில் ___________ ஆண்டு இணைந்தது.
7. ஐரோப்பியக் குழுமத்தின் தலைமையகம் ___________ நகரில் அமைந்துள்ளது.
8. ஐரோப்பிய இணைவை உறுதிசெய்ய 7 பிப்ரவரி 1992 இல் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் ___________ ஆகும்.

கூடுதல் வினாக்கள்

9. இரண்டாம் உலகப்போர் ___________ புரட்சி ஏற்படக் காரணமாயிற்று
10. ___________ அமைப்பு இரு வல்லரசுகளுக்கிடையே ஏற்பட்ட முரண்பாட்டை கட்டுக்குள் வைத்தது.
11. ___________ சுவர் உடைக்கப்பட்டதோடு பனிப்போர் காலம் முடிவுக்கு வந்தது.
12. சீனாவை ஏறக்குறைய 1650 ஆண்டுகள் ஆட்சி செய்த வம்சம் ___________
13. மஞ்சு வம்சத்தின் பேரரசின் பாதுகாவலாயிருந்த பேரரசி ___________
14. மா சே துங் ___________ நகரை மையமாகக் கொண்டு தனது அரசியல் வாழ்க்கையைத் துவங்கினார்.
15. சீனப் பொதுவுடைமைக் கட்சிக்கும் கோமிங்டாங்கிற்குமிடையே ஏற்பட்ட கூட்டணியின் காரணமாக ___________ அரசியல் செயல்பாடுகளுக்கான பொறுப்பை வகித்தார்.
16. மஞ்சூரியாவைத் தனது ராணுவத் தளமாகப் பயன்படுத்திய நாடு ___________
17. ___________ தலைமையில் உருவான சீன மக்கள் குடியரசு ஆட்சியின் செயல்பாடுகள் உலகையே திரும்பிப் பார்க்க வைத்தது.
18. உலகின் இரு பெரும் பொதுவுடைமை சக்திகளாய் உருவெடுத்த நாடுகள் ___________, ___________
19. நேட்டோ அமைப்பு உருவாக்கப்பட்ட ஆண்டு ___________
20. நேட்டோவிற்கு எதிராக உருவாக்கப்பட்ட ஒப்பந்தம் ___________
21. கொரிய நாடு இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட ஆண்டு ___________
22. பாண்டுங் மாநாடு நடைபெற்ற ஆண்டு ___________
23. யூதர்களின் பூர்வீகப் பகுதி ___________
24. உலக சீயோனிய அமைப்பு உருவாக்கப்பட்ட ஆண்டு ___________
25. பாலஸ்தீனிய விடுதலை அமைப்பின் முக்கியத் தலைவர் ___________

விடைகள்

1. டாக்டர் சன்–யாட்–சென்	2. பீகிங்	3. சியாங்–கை–ஷேக்
4. சென்டோ (அ) பாக்தாத் ஒப்பந்தம்	5. வெர்செய்ல்ஸ்	6. 1955
7. ஸ்ட்ராஸ்பர்க்	8. மாஸ்டிரிக்ட்	9. சீனப்புரட்சி
10. அணி சேரா நாடுகள்	11. பெர்லின்	12. மஞ்சு
13. தாவேகர்	14. ஹனான்	15. சூ – யென் – லாய்
16. ஜப்பான்	17. மா சே துங்	18. சோவியத் ரஷ்யா, சீனா
19. 1949	20. வார்சா ஒப்பந்தம்	21. 1945
22. 1955	23. பாலஸ்தீனம்	24. 1897
25. யாசர் அராபத்		

III. சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. i) கற்றறிந்த சிறுபான்மையினரின் தாக்கத்தில் சீனாவின் (1878) இளம் பேரரசர் துவக்கிய சீர்திருத்தங்கள் நூறு நாள் சீர்திருத்தம் என்று அறியப்படுகிறது.
ii) கோமிங்டாங் கட்சி தொழிலாளர்களையும், விவசாயிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தியது.
iii) மஞ்சூரியா மீதும் ஷாண்டுங் மீதும் ஜப்பான் பொருளாதாரக் கட்டுப்பாட்டை விதிக்க யுவான் ஷி–கே உடன்பட்டதால் தேசியவாதிகள் பார்வையில் அவர் செல்வாக்கு இழந்தார்.
iv) சோவியத் நாடு இருபது ஆண்டு காலத்திற்கும் மேலாக சீன மக்கள் குடியரசை அங்கீகரிக்க மறுத்தது.
அ) i) மற்றும் ii) சரி ஆ) ii) மற்றும் iii) சரி
இ) i) மற்றும் iii) சரி ஈ) i) மற்றும் iv) சரி

2. i) கிழக்கு ஐரோப்பாவில் 1948ல் சோவியத்நாடு நிறுவிய இடதுசாரி அரசுகளை சோவியத் இராணுவம் விடுதலை செய்தது.
ii) வடக்கு அட்லாண்டிக் பகுதியில் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதி செய்யவே நேட்டோ உருவாக்கப்பட்டது.
iii) சீட்டோவின் உறுப்பு நாடுகள் அப்பகுதியில் மக்களாட்சி பரவுவதைத் தடுக்கும் நோக்கோடு செயல்பட்டார்கள்.
iv) ஜப்பானுக்கெதிராக பிரிட்டன் அணுகுண்டைப் பயன்படுத்தியதின் மூலம் அது ரஷ்யாவுக்கு தன்னுடைய அழிக்கும் திறனை எடுத்துக்காட்ட விரும்பியது.
அ) ii), iii) மற்றும் iv) சரி ஆ) i) மற்றும் ii) சரி
இ) iii) மற்றும் iv) சரி ஈ) i), ii) மற்றும் iii) சரி

3. கூற்று : அமெரிக்காவின் மார்ஷல் திட்டம் போரில் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் மறு நிர்மாணத்திற்காக முன்வைக்கப்பட்டது. **PTA**
காரணம் : அமெரிக்க நாடு அத்திட்டத்தின் மூலம் மேற்கு ஐரோப்பிய நாடுகளைத் தன் செல்வாக்கின் கீழ் கொண்டுவர நினைத்தது.
அ) கூற்றும் காரணமும் இரண்டுமே சரி. ஆனால், காரணம், கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.
ஆ) கூற்றும் காரணமும் தவறானவை.
இ) கூற்றும் காரணமும் சரி, காரணம் கூற்றைத் துல்லியமாக விளக்குகிறது.
ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

கூடுதல் வினாக்கள்

4. i) சீன வம்சத்தின் சிதைவு பேராசிரியர் தாவேகரின் மரணத்தோடு துவங்கியது.
ii) டாக்டர் சன் யாட் சென் சீனக் குடியரசின் தற்காலிக குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

iii) சன் யாட் சென் நவீன ராணுவத்தின் முழுக்கட்டுப்பாட்டையும் தன்னிடம் வைத்திருந்தார்.
iv) சன் யாட் சென் நவீன ரஷ்யாவின் தந்தை என அழைக்கப்பட்டார்.
அ) i) மற்றும் ii) சரி ஆ) i) மற்றும் iii) சரி
இ) i) மற்றும் iv) சரி ஈ) அனைத்தும் சரி

5. i) அணி சேரா இயக்கம் லெனின் கிரேடில் ஒரு மாநாட்டைக் கூட்டியது.
ii) சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு அணிசேரா இயக்கத்தின் தேவை அதிகரித்தது.
iii) அணிசேரா இயக்கம் உருவாகக் காரணமானவர்களில் நேருவும் ஒருவராவார்
iv) பாண்டுங் மாநாடு 1955 இல் கூடியது
அ) i) மற்றும் ii) சரி ஆ) iii) மற்றும் iv) சரி
இ) i) மற்றும் iii) சரி ஈ) ii) மற்றும் iv) சரி

6. கூற்று : மணிலா ஒப்பந்தம் 1954 இல் கையெழுத்திடப்பட்டது.
காரணம் : பொதுவுடைமைச் சிந்தனை பரவுவதை தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது.
அ) கூற்று தவறு, காரணம் சரி.
ஆ) கூற்று சரி, காரணம் தவறு.
இ) கூற்றும் காரணமும் சரி, ஆனால் காரணம், கூற்றிற்கான சரியான விளக்கமல்ல
ஈ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றைத் துல்லியமாக விளக்குகிறது.

விடைகள்

1. இ) i) மற்றும் iii) சரி
2. ஆ) i) மற்றும் ii) சரி
3. இ) கூற்றும் காரணமும் சரி, காரணம் கூற்றைத் துல்லியமாக விளக்குகிறது.
4. அ) i) மற்றும் ii) சரி
5. ஆ) iii) மற்றும் iv) சரி
6. ஈ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றைத் துல்லியமாக விளக்குகிறது.

IV. பொருத்துக:

பாடநூல் வினா

அ)

1.	டாக்டர் சன் யாட் சென்	அ)	தெற்கு வியட்நாம்
2.	சிங்மென் ரீ	ஆ)	கோமிங்டாங்
3.	அன்வர் சாதத்	இ)	கொரியா
4.	ஹோ சி மின்	ஈ)	எகிப்து
5.	நிகோ டின் டியம்	உ)	வடக்கு வியட்நாம்

விடை: 1. ஆ 2. இ 3. ஈ 4. உ 5. அ

கூடுதல் வினாக்கள்

ஆ)

1.	ட்ரூமென்	அ)	சீனா
2.	மா சே துங்	ஆ)	ஜோர்டான்
3.	பிடல் காஸ்ட்ரோ	இ)	பாலஸ்தீனம்
4.	யாசர் அராபத்	ஈ)	கியூபா
5.	ஹுசைன்	உ)	அமெரிக்கா

விடை: 1. உ 2. அ 3. ஈ 4. இ 5. ஆ

இ)

1.	நாசர்	அ)	இந்தோனேசியா
2.	டிட்டோ	ஆ)	இந்தியா
3.	நேரு	இ)	கானா
4.	சுகர்னோ	ஈ)	எகிப்து
5.	நுக்ருமா	உ)	யுகோஸ்லோவியா

விடை: 1. ஈ 2. உ 3. ஆ 4. அ 5. இ

ஈ) 1. 1955 — அ) சூயஸ் கால்வாய் சிக்கல்
2. 1949 — ஆ) பெல்கிரேட் மாநாடு
3. 1956 — இ) பாண்டுங் மாநாடு
4. 1961 — ஈ) பெர்லின் சுவர் தகர்ப்பு
5. 1989 — உ) ரஷ்யாவின் அணுகுண்டு பரிசோதனை

விடை
1. இ
2. உ
3. அ
4. ஆ
5. ஈ

V. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. சீனாவில் 1911ஆம் ஆண்டில் நடந்த புரட்சிக்கு எதேனும் மூன்று காரணிகளைக் குறிப்பிடுக.

- மஞ்சு வம்சத்தின் சிதைவு பேரரசின் பாதுகாவலராயிருந்த பேரரசியார் தாவேகரின் மரணத்தோடு துவங்கியது.
- புதிய பேரரசர் இரண்டு வயதே நிரம்பியவர் என்ற நிலையில் மாகாண ஆளுநர்கள் சுதந்திரமாகச் செயல்பட்டனர்.
- உள்ளூர் இராணுவக் கிளர்ச்சி 1911 ஆம் ஆண்டு ஏற்பட்டு அதன் பாதிப்பு பல மடங்குகளில் பரவியது.
- மாகாண ஆளுநர்கள் மஞ்சு அரசின் பிரதிநிதித்துவங்களை உதறித் தங்கள் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தினர்.

2. கோமிங்டாங்கும் ஷியாங் கே – ஷேக்கும் 1928 ஆம் ஆண்டு சீனாவில் எவ்வாறு நடுவண் அரசை ஏற்படுத்தினார்கள் என்பதை விளக்குக.

- ஷியாங் கே – ஷேக் கோமிங்டாங் கட்சியின் தலைவரானார். இவர் தனது கட்சியிலிருந்த பொதுவுடைமைவாதிகளை முக்கியப் பொறுப்புகளிலிருந்து விடுவித்தார்.
- ஷியாங் கே – ஷேக் சீனாவை வெற்றிக்கொள்ளத் துவங்கினார்.
- 1925 இல் காண்டனில் ஆரம்பித்து ஹான்கோ வரை பிடித்திருந்தார்.
- 1927 இன் துவக்கத்தில் அவர் ஷாங்காய் நகரையும் நான்கின் நகரையும் முற்றுகையிட்டிருந்தார்.
- 1928 ஆம் ஆண்டு பீகிங் நகரைக் கைப்பற்றினார். மீண்டும் சீனாவில் ஒரு நடுவண் அரசு உருவானது.

3. மாவோவின் நீண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக. **PTA**

- ஷியாங் கே – ஷேக் பொதுவுடைமைவாதிகளைச் சுற்றி முற்றுகையிடும் விதமாக ஆங்காங்கே பல நிலைகளை உருவாக்கியிருந்தார்.
- மாவோவும் ஹனான் பகுதியை விட்டு அகன்று பாதுகாப்பான ஒரு பகுதிக்குச் செல்ல நினைத்தார்.
- கிட்டத்தட்ட 1933 ஆம் ஆண்டு வாக்கில் சீன பொதுவுடைமை கட்சியின்மீது முழுக் கட்டுப்பாடும் மாவோ வசம் வந்து சேர்ந்தது.
- ஒரு நீண்ட பயணத்தை முன்னெடுத்து 1,00,000 பொதுவுடைமை இராணுவத்தினர் 1934ல் கிளம்பினர். அப்பயணம் ஒரு சகாப்தமாக மாறியது.
- இப்பயணத்தில் பங்கு பெற்றோர் தொடர்ச்சியாக கடும் தொந்தரவிற்கும் அச்சுறுத்தலுக்கும் உட்பட்டனர்.
- இவர்களில் 20,000 பேர் மட்டும் 1935 இன் பிற்பகுதியில் 6000 மைல்களைக் கடந்து ஷேனிப் பகுதியை சென்றடைந்தனர்.
- 1937 ஆம் ஆண்டில் ஏறக்குறைய ஒரு கோடி மக்களின் தலைவராக மாவோ அங்கீகரிக்கப்பட்டார்.

4. பாக்தாத் உடன்படிக்கை பற்றி அறிந்ததை எழுதுக.

- துருக்கி, ஈராக், பிரிட்டன், பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகள் 1955 இல் ஏற்படுத்திய ஒப்பந்தமே பாக்தாத் ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது.
- அமெரிக்க ஐக்கிய நாடு இவ்வுடன்படிக்கையில் 1958 இல் இணைந்ததோடு, இவ்வொப்பந்தம் 'மத்திய உடன்படிக்கை அமைப்பு' என்று அறியப்பட்டது.
- இவ்வொப்பந்தம் அமைதியையும். பாதுகாப்பையும் விரும்பும் அனைத்து அரபு நாடுகளுக்கும் திறந்தே இருப்பதாக அறிவிக்கப்பட்டதெனினும் இவ்வொப்பந்தம் 1979 ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது.

5. மார்ஷல் திட்டம் என்றால் என்ன?

- மேற்கு ஐரோப்பிய நாடுகளைத் தன் செல்வாக்கினுள் வைத்துக் கொள்ள அமெரிக்க ஐக்கிய நாடு மார்ஷல் திட்டத்தை உருவாக்கியது.
- இத்திட்டம் இரண்டாம் உலகப் போரின் பாதிப்புகளில் இருந்து மீண்டு வருவதற்காக அமெரிக்க டாலர்களைப் பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்தது.

6. மேற்கத்திய நாடுகளின் தேவையின் பொருட்டே இஸ்ரேல் உருவாக்கப்பட்டதென்பது சூயஸ் கால்வாய் பிரச்சனையில் உறுதியானது – விளக்குக.

- எகிப்தின் அதிபர் நாசர் 1956 ஆம் ஆண்டில் சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கினார். இது பிரிட்டிஷாரின் நல்லெண்ணெத்திற்கு விரோதமாகத் தெரிந்தது.
- பிரிட்டனும் பிரான்சும் இணைந்து இராணுவ பலத்தைப் பயன்படுத்த முடிவு செய்தன.
- இச்சூழலில் தனக்கு ஒரு வாய்ப்பு இருப்பதாகக் கருதிய இஸ்ரேல் தனது கப்பல் போக்குவரத்திற்கு வசதியாக அக்கபா வளைகுடாவை திறந்துவிட்டதோடு இஸ்ரேலியப் படைகள் எகிப்து மீது படையெடுத்தன.
- இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்த பிரிட்டன் தனது படைகளைக் கால்வாயைக் காப்பாற்றும் வகையில் நிறுத்தி வைக்க அனுமதி கோரியது.
- இதற்கு எகிப்து மறுத்ததால் பிரிட்டனும் பிரான்சும் இணைந்து அந்நாட்டின் விமானத்தளங்கள் மீதும் இன்னபிற முக்கியத்தளங்கள் மீதும் சூயஸ் கால்வாய்ப் பகுதியிலும் குண்டு வீசின.
- எனினும் உலக நாடுகளின் வற்புறுத்தலின் பேரில் நவம்பர் 6ஆம் தேதி பிரான்சும், பிரிட்டனும் தங்கள் எதிர்ப்பை நிறுத்திக் கொண்டன.

7. மூன்றாம் உலக நாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக. **PTA**

- அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைமையில் கூடிய முதலாளித்துவ நாடுகள் உலக அரங்கில் முதலாம் உலக நாடுகள் என்றும், சோவியத் நாட்டின் தலைமையில் கூடிய பொதுவுடைமை நாடுகள் இரண்டாம் உலக நாடுகள் என்றும் வழங்கப்பட்டன.
- இவ்விரு பிரிவிலும் சேராமல் வெளியிலிருந்த நாடுகள் மூன்றாம் உலக நாடுகள் என்று அழைக்கப்பட்டன.
- இச்சொல்லாடல் வழக்கத்திற்கு வரும்போது, வளர்ச்சிப் பாதையிலிருந்த ஆப்பிரிக்க – ஆசிய லத்தீன் அமெரிக்க முன்னாள் காலனி ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளையே அது குறித்தது.

8. கியூபாவின் ஏவுகணைச் சிக்கல் எவ்வாறு செயலிழக்கச் செய்யப்பட்டது?

- கியூபாவிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்த மக்களைக் கொண்ட ஒரு படை பிக்ஸ் வளைகுடாவில் ஏப்ரல் 1961ல் இறக்கியது அதே வேளையில் காஸ்ட்ரோவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கோடு அதன் விமான தளங்களை ஐக்கிய அமெரிக்க நாடுகள் குண்டு வீசித் தாக்கியது.
- அமெரிக்காவின் போர்க் கப்பல்கள் கியூபாவைச் சுற்றிவளைத்தன. சோவியத்நாடு கியூபாவில் அணுசக்தியோடு இணைக்கப்பட்ட ஏவுகணைகளை ரகசியமாக நிறுவப்போவதாய் கென்னடி தலைமையிலான அமெரிக்க அரசிற்கு உளவுத்துறை தகவல் கொடுத்தது.
- இறுதியாக சோவியத் நாட்டின் குடியரசுத்தலைவர் குருசேவ் ஏவுகணைகளைத் திரும்பப் பெற உறுதியளித்ததால் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

கூடுதல் வினாக்கள்

9. "பனிப்போர்" – குறிப்பு வரைக.

- இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் சோவியத் நாட்டிற்கும், இந்நாடுகளின் நட்பு நாடுகளுக்குமிடையே மூண்ட விரோதம், பரபரப்பையே பனிப்போர் என்கின்றனர்.
- இரு வல்லரசுகளும் இருபெரும் இராணுவ சக்தியாகப் பிரிந்து விரோத மனப்பான்மையை வளர்த்துக் கொண்டன.

- அவை நேரடியாக ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தவில்லை மாறாக அவர்கள் அரசியல் பொருளாதார சிந்தனைத் தளங்களைத் தேர்வு செய்து கொண்டனர்.
- "பனிப்போர்" என்ற சொல்லாடலை முதன்முறையாக (1945) ஜார்ஜ் ஆர்வெல் என்ற ஆங்கில எழுத்தாளர் கையாண்டார்.

10. சீட்டோ அல்லது மணிலா ஒப்பந்தம் பற்றிக் கூறுக.

- தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த அமைவு என்பது தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டுப் பாதுகாப்பை முன்னிறுத்தியதாகும்.
- மணிலா ஒப்பந்தம் (1954) அமெரிக்க ஐக்கிய நாடு, பிரான்ஸ், இங்கிலாந்து, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளால் கையெழுத்திடப்பட்டது.
- இவ்வொப்பந்தத்தின் உறுப்பு நாடுகள் இப்பகுதியில் பொதுவுடைமைச் சிந்தனை பரவுவதையும் அக்கொள்கை செல்வாக்குப் பெறுவதையும் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது.

11. வார்சா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகள் யாவை?

அல்பேனியா	கிழக்கு ஜெர்மனி
பல்கேரியா	போலந்து
ஹங்கேரி	ருமேனியா
செக்கோஸ்லோவாகியா	ரஷ்யா

12. சீயோனிய இயக்கம் பற்றி குறிப்பு தருக

- யூதர்களின் பூர்வீகப் பகுதியான பாலஸ்தீனத்தில் 1900 இல் ஆயிரம் யூதர்களே குடியிருந்தனர்.
- இவ்வினத்தின் 15 மில்லியன் மக்கள் ஐரோப்பாவிலும், வடக்கு அமெரிக்காவிலும் பரவிக் கிடந்தனர்.
- இவர்கள் திட்டமிட்ட கொடுமைப்படுத்துதலுக்கு காலம் காலமாக உட்படுத்தப்பட்டு மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியிருந்தார்கள்.
- பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இத்தகைய கொடுமைகள் ரஷ்யாவிலும் பிரான்சிலும் ஜெர்மனியிலும் உச்சத்தை அடைந்தது.
- சில யூதர்கள் பாலஸ்தீனத்திற்குச் சென்றபோது வேறுசிலர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் பிரிட்டனுக்கும் சென்றனர்.
- வியன்னாவில் பத்திரிக்கையாளராக இருந்த தோடோர் ஹெர்சல், யூத நாடு என்ற பெயரில் 1896 ஆம் ஆண்டு ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டார்.
- அதற்கு அடுத்த ஆண்டு (1897) உலக சீயோன் அமைப்பு உருவாக்கப்பட்டது.

13. பாலஸ்தீனிய விடுதலை அமைப்பு பற்றி எழுதுக.

- இஸ்ரேல் என்ற தேசம் 1948 இல் உருவாவதற்கு முன் பாலஸ்தீனில் வாழ்ந்த அரேபியர்களுக்கும் அவர்கள் வம்சாவளியினருக்குமாக உருவாக்கப்பட்ட ஒரு பரந்த அமைப்பு இதுவாகும்.
- இரகசியமாகச் செயல்பட்டுவந்த எதிர்ப்பு இயக்கங்கள் தங்களை ஒருங்கிணைக்க 1964 இல் உருவாக்கப்பட்ட அமைப்பாகும்.
- எனினும் 1967 இல் நடந்த அரபு – இஸ்ரேல் போருக்குப் பின்பே இவ்வமைப்பு உலகின் கவனத்தை ஈர்க்கலாயிற்று.
- இவ்வமைப்பு இஸ்ரேலுக்கு எதிராக நேரடி கொரில்லாப் போரை நிகழ்த்தி வந்தாலும் 1990 களில் அந்நாட்டோடு அமைதி உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டது.
- இவ்வமைப்பின் முக்கிய தலைவர் யாசர் அராபத் ஆவார்.

14. ஐரோப்பிய ஒன்றியம் பற்றி கூறுக.

- 1992 பிப்ரவரி 7 இல் கையெழுத்திடப்பட்ட மாஸ்டிரிக்ட் (நெதர்லாந்து) ஒப்பந்தம், ஐரோப்பிய ஒன்றியத்தை ஏற்படுத்தியது.
- பொதுவான நிதிக்கொள்கையும், நாடுகள் வழங்கிய பணத்தை மீறிய பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பணமும் (யூரோ) முதலில் நடைமுறைப்படுத்தப்பட்டு பின்னர் அவற்றை நிர்வகிக்கும் பொது நிறுவனங்களும் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

- தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் 28 உறுப்பு நாடுகள் உள்ளன. பிரெஸல்ஸ் (பெல்ஜியம்) நகரைத் தலைமையகமாகக் கொண்டு இது செயல்பட்டு வருகிறது.

15. ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூகத்தைச் சேர்ந்த ஆறு நாடுகள் யாவை?

- பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம், ஹாலந்து, லக்ஸம்பர்க்

16. அணிசேரா இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகள் யாவை?

- அமைதியோடு இணைந்திருத்தல்
- அமைதியையும் பாதுகாப்பையும் முன்னிறுத்தப் பாடுபடல்
- எந்த அணியோடும் இராணுவக் கூட்டுறவு கொள்ளாமல் இருத்தல்.
- எந்த வல்லரசுக்கும் தத்தம் நாட்டிற்குள் இராணுவ நிலைகள் ஏற்படுத்த அனுமதி வழங்காமல் இருத்தல்.

17. அபினிப்போர்கள் பற்றி உமக்கு யாது தெரியும்?

- ஆங்கிலேயர்கள் அபினிச் செடியை இந்தியாவில் வளர்த்து அதனைச் சட்ட விரோதமாக சீனாவில் விற்று வந்தனர்.
- 1800 ஆம் ஆண்டில் சீனப்பேரரசு அபினி வணிகத்தைத் தடை செய்தது. இதன் விளைவை அபினிப் போர்கள் நடைபெற்றது.
- 1832 மற்றும் 1848 இல் இரண்டு அபினிப் போர்கள் நடைபெற்றன.
- அபினிப் போர்களில் தோல்வியை சந்தித்த சீனா, மேற்கத்திய நாடுகளுக்கு தனது துறைமுகங்களைத் திறந்து விட வேண்டியதாயிற்று. இதனால் சீனா மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரச் சுரண்டலுக்கு உட்பட்டது.

18. க்ளாஸ்நாஸ்ட் பற்றி நீ அறிந்தவற்றைக் கூறு.

- க்ளாஸ் நாஸ்ட் (திறவு நிலை) என்ற கொள்கை மிக்கேல் கோர்பசேவால் பெரிஸ்ட்ரோய்காவோடு அறிமுகப்படுத்தப்பட்டது.
- பிரஸ்னேவ்வின் காலத்தில் விமர்சனங்களையும் எதிர்ப்புகளையும் அடக்கியொடுக்கும் போக்கு இருந்தது.
- இது சிந்தனைத் திறனையும் கலாச்சார சூழலையும் பாதித்தது.
- க்ளாஸ்நாஸ்ட் என்ற திறவுநிலை எழுத்தாளர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தி அரசையும், அரசியலையும் விமர்சிக்க உரிமை வழங்கியது.

VI. ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. பனிப்போர்

அ) இரண்டாம் உலகப் போருக்குப் பின் உருவான இரு இராணுவப்பிரிவுகளைப் பற்றிக் கூறுக.

- அமெரிக்க ஐக்கிய நாடு
- சோவியத் நாடு

ஆ) பனிப்போர் என்ற சொல்லாடலை உருவாக்கியவர் யார்? அதை முதலில் பயன்படுத்தியவர் யார்?

ஜார்ஜ் ஆர்வெல் என்ற ஆங்கில எழுத்தாளர் பனிப்போர் என்ற சொல்லாடலை உருவாக்கி முதலில் பயன்படுத்தினார்.

இ) நேட்டோவின் உருவாக்கத்திற்கு சோவியத் ரஷ்யாவின் பதிலடி யாது?

நேட்டோவிற்கு எதிராக சோவியத் நாடு தன் ஆதரவு நாடுகளைக் கொண்டு வார்சா ஒப்பந்தத்தை உருவாக்கியது.

ஈ) எவ்வகைப் போட்டியில் வார்சா உடன்படிக்கை கலைக்கப்பட்டது?

சோவியத்தின் பிளவு, வார்சா ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தது.

2. **கொரியப்போர்**

அ) கொரியப்போரின் போது வட கொரியாவின் அதிபர் யார்?
இரண்டாம் கிம் ஆவார்.

ஆ) வடகொரிய அதிபரின் தெற்குப்புற எதிரி யார்?
சிங்மென் ரீ.

இ) கொரியப்போர் எத்தனை காலம் நீடித்தது?
மூன்று ஆண்டுகள்.

ஈ) போரின் விளைவாக ஏற்பட்ட மனித உயிரிழப்பு எவ்வளவு?
இப்போரால் ஏற்பட்ட மனித உயிரிழப்பு எண்ணிக்கையில் அளவிட முடியாததாய் இருந்தது.

3. **அணிசேரா இயக்கம்**

அ) அணிசேரா இயக்கத்தின் முதல் மாநாடு எங்கே எப்போது நடைபெற்றது?
பெல்கிரேட்டில் – 1961ல் நடைபெற்றது.

ஆ) முதல் மாநாட்டில் கலந்து கொண்ட முக்கியப் பிரமுகர்கள் யாவர்?
- டிட்டோ (யுகோஸ்லோவியா)
- நாசர் (எகிப்து)
- நேரு (இந்தியா)
- நுக்ருமா (கானா)
- சுகர்ணோ (இந்தோனேசியா)

இ) அணிசேரா இயக்கத்தின் குறிக்கோள்கள் என்ன?
- இருவல்லரசுகளின் அணிகளிலும் சேரக் கூடாது.
- காலனிய ஆதிக்கமும் ஏகாதிபத்தியமும் எவ்வடிவம் எடுத்தாலும் அதை எதிர்த்து நிற்பது.

ஈ) பெல்கிரேட் அணிசேரா இயக்கத்தின் மாநாட்டில் கொண்டு வரப்பட்ட இரு அடிப்படைக் கொள்கைகளைக் கூறு.
- அமைதியோடு இணைந்திருத்தல், அமைதியையும் பாதுகாப்பையும் முன்னிறுத்தப் பாடுபடல்.
- எந்த அணியோடும் இராணுவக் கூட்டுறவு கொள்ளாமல் இருத்தல், எந்த வல்லரசுக்கும் தத்தம் நாட்டிற்குள் இராணுவ நிலைகள் ஏற்படுத்த அனுமதி வழங்காமல் இருத்தல் போன்றவையாகும்.

கூடுதல் வினாக்கள்

4. **சீனப்புரட்சி**

அ) நீண்ட காலமாக சீனாவை ஆட்சி செய்த அரச வம்சம் எது?
மஞ்சு வம்சம்.

ஆ) எத்தனை ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர்?
ஏறக்குறைய 1650 ஆண்டுகள்.

இ) ஞானம் கொண்ட அதிகாரிகளாகக் கருதப்பட்டவர்கள் யாவர்?
மாண்டரின்கள் எனும் நிலவுடைமையாளர்கள்.

ஈ) விவசாயிகளின் நிலை எவ்வாறு இருந்தது?
ஏழை விவசாயிகள் அதிகமான வரிவிதிப்பினாலும் மிதமிஞ்சிய குத்தகை வசூலிப்பாலும் குறைந்த நிலம் கொண்டவர்களாக விளங்கியதாலும் கடுமையான பாதிப்புகளுக்குட்பட்டு வறுமையின் பிடியில் சிக்கித் தவித்தனர்.

5. அரபு - இஸ்ரேல் போர்

அ) "துருக்கிய அரபு பேரரசு" உருவாகக் காரணமாக அமைந்த உடன்படிக்கை எது?

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை (1919)

ஆ) பிரான்ஸ் எந்நாடுகளை இணைக்க ஏற்பாடாயின?

சிரியா, லெபனான்.

இ) பாலஸ்தீனத்தின் பகுதிகளை யூதக்குடியிருப்புகளுக்கு வழங்க உறுதியளித்த நாடு எது?

பிரிட்டன்

ஈ) யூதத் திரைமறைவு அமைப்புகள் யாவை?

- இர்கூன் ஸ்வாய் லூமி (சீயோனியத் துணை இராணுவ அமைப்பு)
- ஸ்டென் காங் (சீயோனிய பயங்கரவாத அமைப்பு)

6. சீயோனிய இயக்கம்

அ) யூதர்களின் பூர்வீகப் பகுதி எது?

பாலஸ்தீனம்.

ஆ) யூத இன மக்கள் எங்கெல்லாம் பரவிக் கிடந்தனர்?

ஐரோப்பாவிலும், வடக்கு அமெரிக்காவிலும் பரவிக் கிடந்தனர்.

இ) யூதர்களை உச்சக்கட்ட கொடுமைக்கு உள்ளாக்கிய நாடுகள் எவை?

- ஜெர்மனி
- ரஷ்யா
- பிரான்ஸ்

ஈ) யூத நாடு என்ற பெயரில் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டவர் யார்?

வியன்னாவில் பத்திரிக்கையாளராக இருந்த தோடோர் ஹெர்சல்.

VII. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மா சே துங்கின் பங்களிப்பை அளவிடுக. **PTA**

மா சே துங்:

- மா சே துங் தென்கிழக்கு சீனாவில் உள்ள ஹுனான் நகரில் பிறந்தார்.
- ஹுனான் நகரை மையமாகக் கொண்டு தனது அரசியல் வாழ்க்கையைத் துவக்கிய அவர் ஒரு முழு பொதுவுடைமைவாதியாக மாறியிருந்தார்.
- கோமிங்டாங்கின் தலைவராக ஷியாங் கை–ஷேக் இருந்தபோது பொதுவுடைமைக் கட்சியின் தலைவர்களாக சூ – யென் – லாயும், மா சே – துங்கும் இருந்தனர்.

விவசாயிகளை வழிநடத்திய மாவோ:

- கோமிங்டாங்கின் கட்டுப்பாடு நகரங்களின் மீது கடுமையாக இருந்ததை மாவோ உணர்ந்தார். அதனால் அவர் விவசாயிகளை ஒன்றிணைக்க முயன்றார்.
- கோமிங்டாங்கிற்கும் பொதுவுடைமை கட்சிக்கும் இடையே நிலவிய உறவு முறிந்ததும் மாவோவின் தலைமையில் சில நூறு விவசாயிகள் காடுகள் சூழ்ந்த மலைப்பகுதிகளில் ஏழு ஆண்டுகள் பதுங்கியிருந்தனர்.

- கோமிங்டாங்கால் அக்காட்டு மலைப்பகுதியில் நுழைய முடியாத அதே வேளையில் மாவோவின் படை பெருகிக்கொண்டே சென்றது.
- ஷியாங்கை சேக் பொதுவுடைமைவாதிகளைச் சுற்றி முற்றுகையிட்டார்.

நீண்ட பயணம்:

- 1933 ஆம் ஆண்டுவாக்கில் சீனப் பொதுவுடைமை கட்சியின் மீது முழுக்கட்டுப்பாடும் மாவோ வசம் வந்து சேர்ந்தது.
- அவர் 1934 இல் 1,00,000 இராணுவத்தினருடன் ஒரு நீண்ட பயணத்தை முன்னெடுத்தார். அப்பயணம் ஒரு சகாப்தமாக மாறியது.
- இப்பயணத்தில் பங்கு பெற்றோர் தொடர்ச்சியாக கடும் தொந்தரவிற்கும் அச்சுறுத்தலுக்கும் உட்பட்டனர்.
- இறுதியில் 6,000 மைல்களைக் கடந்து 1935 இன் பிற்பகுதியில் ஷேனிப் பகுதியை சென்றடைந்தனர்.
- 1937 ஆம் ஆண்டில் ஏறக்குறைய ஒரு கோடி மக்களின் தலைவராக மாவோ அங்கீகரிக்கப்பட்டார்.
- ஷேன்ஷி, கான்சூப் பகுதிகளின் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் குழுக்களாக நிர்வகித்து அவர்களின் மூலமாக பொதுவுடைமைவாதிகள் சீனாவை தம்வசப்படுத்த மாவோ அடித்தளமிட்டார்.
- கோமிங்டாங் அரசு விவசாயிகளை உள்ளடக்கிய போர் வீரர்களின் அதிருப்தியை சம்பாதித்த வேளையில் மாவோ நடுத்தர வர்க்கத்தின் ஆதரவைப் பெற கடுமையாக முயற்சித்தார்.

மாவோவின் வெற்றி:

- மாவோ ஒருபுறம் கொரில்லாப் போர் முறையைக் கடைபிடித்துக் கொண்டே மறுபுறம் பெயரளவிலான இராணுவ நகர்வையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.
- ஷியாங் கே – ஷேக்கின் இராணுவம் வேகமாக உதிரத் துவங்கியது. சீனாவின் பெருவாரியான பகுதிகள் 1948 இல் பொதுவுடைமைவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

சீன மக்கள் குடியரசு:

- 1949 இல் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு பீகிங் நகரில் கூடியது. அம்மாநாடு நடுவண் ஆட்சிக்குழுவைத் தேர்ந்தெடுத்து அதற்கு மா சே – துங்கை தலைவராக நியமித்தது.
- சீனாவில் மா சே – துங்கின் தலைமையில் சீன மக்கள் குடியரசு ஆட்சி நிறுவப்பட்டது.

2. அரேபியர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்குமிடையே மூண்ட 1967 மற்றும் 1973 ஆம் ஆண்டு போர்களைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

அரபு - இஸ்ரேல் போர் (1967):

- பாலஸ்தீனிய விடுதலை அமைப்பு உருவானது முதல் சிரியா, லெபனான், ஜோர்டான் ஆகிய நாடுகளில் பதுங்கியிருந்த பாலஸ்தீனிய கொரில்லாப் படைகள் இஸ்ரேலைத் தாக்கி வந்தன. இஸ்ரேல் பதிலடி கொடுத்து வந்தது.
- இஸ்ரேல் ஜோர்டானின் அல் – சமூ என்ற கிராமத்தின் மீது விமானத் தாக்குதல் நடத்தியது.
- சிரியாவுடன் நடந்த வான்வெளித் தாக்குதலில் ஆறு சிறிய மிக் ரகப் போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.
- சிரியாவுக்கு ஆதரவு கொடுக்க விழைந்த நாசர் எகிப்தின் படைகளை சினாய் மலையில் கொண்டு வந்து நிறுத்தினார்.
- மேலும் அக்கபா வளைகுடாவை வளைத்து அங்கு இஸ்ரேலியக் கப்பல்கள் நுழைய முடியாதபடி நாசர் செய்தார்.
- ஜோர்டானின் மன்னர் ஹுசைன் எகிப்தோடு இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டார். சிறிது காலத்தில் ஈராக்கும் இக்கூட்டணியில் இணைந்தது.

இஸ்ரேலின் தாக்குதல்:

- அரபு நாடுகளை நாசர் ஒன்றிணைக்க மேற்கொண்ட முயற்சியைத் தொடர்ந்து, இஸ்ரேல் எதிர்பாராத தாக்குதல் ஒன்றை தொடுத்து எகிப்தின் 90 சதவீத விமானப் படையை தரைமட்டமாக்கியது.
- மற்றொரு தாக்குதலில் சிரியாவின் விமானப் படையும் கடும் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தது.
- மூன்றே நாட்களில் இஸ்ரேலியர்கள் காஸா பகுதியையும் சினாய் தீபகற்பத்தின் முழுமையையும் கைப்பற்றி பெரும் வெற்றியைக் குவித்தனர்.
- ஐ.நா தலையிட்டு போரை நிறுத்த வலியுறுத்தியது. சிரியா அதற்கு சம்மதிக்கவில்லை. இஸ்ரேல் சிரியாவுக்குச் சொந்தமான கோலன் ஹைட்னைத் தாக்கிக் கைப்பற்றியது. இதனால் சிரியா போர் நிறுத்தத்திற்கு ஒப்புக் கொண்டது.

அரபு இஸ்ரேல் போர் (1973):

- தங்களின் படைகளை ஒரே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்கோடு எகிப்தின் அதிபர் எகிப்தின் அதிபர் அன்வர் சாதத்தும், சிரியாவின் அதிபர் ஹபீஸ் அல் அன்வர்சதாத்தும் சிரியாவின் அதிபர் ஹபீஸ் அல் – ஆஸாத்தும் ஒரு இரகசிய ஒப்பந்தத்தை 1973 ல் ஏற்படுத்திக் கொண்டனர்.
- ஆஸாத், கோலன் ஹைட்ஸைத் திரும்பப் பெற முனைந்த வேளையில், சாதத் சினாய் மலையை விட்டு இஸ்ரேல் விலகினால் தாம் அமைதி உடன்படிக்கைக்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். இதற்கு இஸ்ரேல் இணங்கவில்லை.
- ஆகவே எகிப்தும் சிரியாவும் யோம்கிப்பூர் சமய விடுமுறையன்று ஒரு எதிர்பாராத திடீர் தாக்குதலை இஸ்ரேல் மீது தொடுத்தனர்.
- இத்தாக்குதலில் இஸ்ரேல் கடும் பின்னடைவைச் சந்தித்தபோதும் அதனால் அரபுப்படைகளைப் புறந்தள்ள முடிந்தது.
- இம்முறை ஐ.நா. வின் தலையீடு இஸ்ரேலை 1967 ஆம் ஆண்டுக்கு முந்தைய நிலைக்குச் செல்ல வலியுறுத்தியது.
- இப்போரினால் அரேபியர்கள் எந்த லாபமும் பெற முடியவில்லை.
- இப்பிரச்சனையில் நடுவராகச் செயல்படும் போர்வையில் அமெரிக்க ஐக்கிய நாடு தனது ஆதிக்கத்தை அரபு நாடுகள் மீதும் அங்குள்ள எண்ணெய்க் கிணறுகள் மீதும் நிறுவியது.

3. ஐரோப்பியக் குழு எவ்வாறு ஐரோப்பிய இணைவானது என்ற வரலாற்றை எடுத்தியம்புக.

ஐரோப்பிய குழுமம்:

- 1949 இல் பத்து நாடுகள் லண்டனில் கூடி ஐரோப்பிய சமூகத்தை உருவாக்க கையொப்பமிட்டன. இதன் தலைமையகம் ஸ்ட்ராஸ்பர்க் நகரில் அமைந்துள்ளது.
- அதன்மூலம் ஐரோப்பியர்களுக்கிடையே மூண்ட போர்களைத் தவிர்க்கவும், ஒருங்கிணைந்த ஐரோப்பாவைக் கொண்டு சோவியத் நாட்டின் அச்சுறுத்தல்களை எதிர் கொள்ளவும், அமெரிக்க ஐக்கிய நாட்டின் படைகளுக்குச் சமமாக ஒரு படை பலத்தை நிறுவவும், கண்டங்களில் பொருளாதார மற்றும் இராணுவ வளங்களையும் திறன்களையும் முழுவதுமாகப் பயன்படுத்தவும் முடியும் என்று கருதப்பட்டது.

ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூகம்:

- ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூகத்தைச் சேர்ந்த ஆறு நாடுகள் கூடி ரோம் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது.
- அதன் மூலம் ஐரோப்பியப் பொதுச்சந்தையை பிரெஸெல்ஸ் நகரைத் தலைமையகமாகக் கொண்டு ஏற்படுத்தின.

ஐரோப்பிய பொருளாதார சமூகம்:

- இச்சமூகம் பண்டங்கள், சேவைகள், முதலீடு, தொழிலாளர் போன்றவற்றின் நகர்வை எல்லைகள் கொண்டு நிறுத்துவதை மாற்றியது.
- சந்தைப் போட்டியைக் கட்டுக்குள் கொண்டுவர முயன்றபோது கொள்கைகளையும் தனியார் ஒப்பந்தங்களையும் புறக்கணித்தது.
- பொதுவான விவசாயக் கொள்கையையும், பொதுவான வெளிநாட்டு வணிகத்தையும் இவ்வமைப்பு உருவாக்கியது.

ஒற்றை ஐரோப்பியச் சட்டம்:

- ஒற்றை ஐரோப்பியச் சட்டம் 1987 இல் நடைமுறைக்கு வந்தது. அது ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் எல்லைகளை விரிவாக்கி அதற்கு சட்ட வடிவம் கொடுத்தது.
- மேலும் அது உறுப்பு நாடுகளை வெளியுறவுக் கொள்கையில் அதிகமான ஒத்துழைப்பை நாடியது.

ஐரோப்பிய இணைவு:

- 1992ல் கையெழுத்திடப்பட்ட மாஸ்டிரிக்ட் (நெதர்லாந்து) ஒப்பந்தம் ஐரோப்பிய ஒன்றியத்தை ஏற்படுத்தியது.
- பொதுவான நிதிக் கொள்கையும், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பணமும் (யூரோ) முதலில் நடைமுறைப்படுத்தப்பட்டு பின்னர் அவற்றை நிர்வகிக்கும் பொது நிறுவனங்களும் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.
- தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் 28 உறுப்பு நாடுகள் உள்ளன. அது பிரெஸெல்ஸ் (பெல்ஜியத்தின்) நகரைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

கூடுதல் வினாக்கள்

4. டாக்டர் சன் யாட் சென் பற்றி விவரி.

- ஒரு ஏழ்மையான குடும்பத்தில் காண்டன் நகரத்திற்கு அருகே டாக்டர் சன்யாட் சென் பிறந்தார்.
- ஒரு கிறித்தவப் பள்ளியில் கல்வி பெற்றதோடு கிறித்தவராகவும் மாறினார்.
- ஹாங்காங் நகரில் மருத்துவப் பயிற்சி பெற்றார். அரசியலில் ஆர்வம் கொண்டிருந்த அவர் 1895 இல் மஞ்சுக்களுக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டார்.
- அவ்வெழுச்சி தோற்றதால் அடுத்த பதினாறு ஆண்டுகளுக்கு அவர் நாடு துறந்து வாழும் நிலை ஏற்பட்டது.
- இக்காலத்தை சீனாவிற்கு வெளியே கல்வி பயின்று கொண்டிருந்த சீன மாணவர்களிடையேயும் அயல்நாட்டில் வசித்தோரிடமும் தேசியச் சிந்தனையை வளர்த்தெடுக்கப் பயன்படுத்திக் கொண்டார்.
- அவர் 1905 ஆம் ஆண்டு டோக்கியோவில் வைத்து ஒரு அரசியல் கட்சியைத் துவக்கினார். அதுவே கோமிங்டாங் என்றும் தேசிய மக்கள் கட்சி என்றும் உருவெடுத்தது.
- தேசியம், ஜனநாயகம், மக்களின் வாழ்க்கை முறை ஆகிய மூன்று கூறுகளைக் கொண்ட அவர்தம் கொள்கை சோஷியலிஸச் சிந்தனையையே உச்சக்கருத்தில் கொண்டது.
- அவர் நவீன சீனாவின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

5. அணிசேரா இயக்கம் பற்றி விவரி.

பாண்டுங் மாநாடு:

- இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஏற்பட்ட காலனியாதிக்க வெளியேற்றத்தின் பின்னணியில் அணிசேரா இயக்கம் உருப்பெற்றது.
- புதிதாக அரசியல் சுதந்திரம் பெற்ற ஆசிய, ஆப்பிரிக்க, நாடுகள் 1955 இல் பாண்டுங்கில் (இந்தோனேசியா) கூடி இரு வல்லரசுகளின் அணிகளிலும் சேரக்கூடாது என்பதை தீவிரமாக வலியுறுத்தின.

- மேலும் அவை காலனிய ஆதிக்கமும் ஏகாதிபத்தியமும் எவ்வடிவம் எடுத்தாலும் அதை எதிர்த்து நிற்பது என்று முடிவு செய்தன.

பெல்கிரேட் மாநாடு:

- அணிசேரா இயக்கம் 1961 இல் டிட்டோ (யுகோஸ்லோவியா), நாசர் (எகிப்து), நேரு (இந்தியா), நுக்ருமா (கானா), சுகர்ணோ (இந்தோனேசியா) ஆகிய தலைவர்களை முன்னிறுத்தி பெல்கிரேடில் ஒரு மாநாட்டைக் கூட்டியது.

அடிப்படைக் கொள்கைகள்:

- அமைதியோடு இணைந்திருத்தல், அமைதியையும், பாதுகாப்பையும் முன்னிறுத்தப் பாடுபடுதல்
- எந்த அணியோடும் இராணுவக் கூட்டுறவு கொள்ளாமல் இருத்தல்.
- எந்த வல்லரசுக்கும் தத்தம் நாட்டிற்குள் இராணுவ நிலைகள் ஏற்படுத்த அனுமதி வழங்காமல் இருத்தல் போன்றவை ஆகும்.
- சோவியத் வீழ்ச்சிக்குப் பிறகு அணிசேரா இயக்கத்தின் தேவை மங்கியது.

காலக்கோடு (முக்கிய நிகழ்வுகள்)

1832	–	முதல் அபினி போர்
1848	–	இரண்டாவது அபினி போர்
1850 - 1864	–	தைபிங் கலகம்
1897	–	உலக சீயோனிய அமைப்பு உருவாக்கப்பட்டது.
1898	–	நூறு நாட்கள் சீர்திருத்தம்
1911	–	சீனப்புரட்சி
1912	–	தேசிய மக்கள் கட்சி உருவானது.
1917	–	ரஷ்யப் புரட்சி
1918	–	மார்க்ஸியத்தை கற்கும் விதமாக பீகிங் பல்கலைக்கழகத்தில் ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது.
1925	–	ஷியாங் - கே - ஷேக், ஹான்கோ முற்றுகை
1928	–	ஷியாங் - கே - ஷேக், பீகிங் நகரைக் கைப்பற்றினார்
1933	–	சீன பொதுவுடைமை கட்சியின் மீது முழுக் கட்டுப்பாடும் மாவோ வசம் வந்து சேர்ந்தது.
1934	–	நீண்ட பயணம்
1945	–	1. அரேபிய கூட்டமைப்பு கெய்ரோவில் உருவாக்கப்பட்டது. 2. ஜப்பான் சரணடைந்தது
1949	–	1. நேட்டோ ஒப்பந்தம் 2. மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு பீகிங் நகரில் கூடியது. 3. சோவியத் நாட்டின் ஆக்கிரமிப்பு போக்கை ஐரோப்பாவில் தடைசெய்ய முற்பட்டன
1954	–	1. சீட்டோ ஒப்பந்தம் 2. ஜெனிவா மாநாடு

1955	–	1. வார்சா ஒப்பந்தம் 2. பாக்தாத் ஒப்பந்தம் 3. பாண்டுங் மாநாடு
1956	–	சூயஸ்கால்வாய் சிக்கல்
1961	–	1. பெல்கிரேட் மாநாடு 2. கியூபா ஏவுகணை சிக்கல் 3. பெர்லின் சுவர் நிறுவப்படுதல்
1967	–	அரபு - இஸ்ரேல் போர்
1973	–	அரபு - இஸ்ரேல் போர்
1982	–	இஸ்ரேல் லெபனான் மீது படையெடுத்தது.
1987	–	ஒற்றை ஐரோப்பிய சட்டம்,
1988	–	அர்மீனியாவில் பெரும் எழுச்சி
1989	–	பெர்லின் சுவர் தகர்ப்பு
1990	–	ஜெர்மனி இணைக்கப்பட்டது.
1991	–	1. சோவியத் நாடு வீழ்ந்தது 2. அமெரிக்க ஐக்கிய நாடு ஈராக் மீது போர் தொடுத்தது 3. சோவியத் ஐக்கியம் முழுமையாக கலைக்கப்பட்டது.
1992	–	மாஸ்டிரிக் ஒப்பந்தத்தால் ஐரோப்பிய இணைவு ஏற்பட்டது.

அலகு 5 வரலாறு

19 ஆம் நூற்றாண்டில் சமூக சமய சீர்திருத்த இயக்கங்கள்

மனவரைபடம்





இந்து புத்தெழுச்சி இயக்கம்

- சுவாமி தயானந்த சரஸ்வதி மற்றும் ஆரிய சமாஜம் 1875
- இராமகிருஷ்ண பரமஹம்சர்
- சுவாமி விவேகானந்தர்
- பிரம்ம ஞான இயக்கம்
- அன்னிபெசன்டின் பங்களிப்பு

நினைவில் கொள்க

- **எழுத்தர்களை** உருவாக்கும் நோக்கில் அறிமுகம் செய்யப்பட்டதே ஆங்கிலக் கல்வியாகும்.
- பொருளற்ற சமயச் சடங்குகளையும், கேடு விளைவிக்கும் சமூக மரபுகளையும் எதிர்த்தவர் **ராஜா ராம்மோகன் ராய்.**
- "நவீன வங்காள உரைநடையின் முன்னோடி" என்று அழைக்கப்பட்டவர் **ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்.**
- பஞ்சாபில், சீர்திருத்த இயக்கங்களுக்குத் தலைமையேற்றது **ஆரியசமாஜம்** ஆகும்.
- ஆரிய சமாஜத்தின் முக்கியக் குறிக்கோள் **எதிர்மத மாற்றம்** என்பதாகும்.
- மனிதனுக்குச் செய்யப்படும் சேவையே கடவுளுக்குச் செய்யும் சேவை என்று கூறியவர் **இராமகிருஷ்ண பரமஹம்சர்** ஆவார்.
- இராமகிருஷ்ண பரமஹம்சரின் முதன்மைச் சீடர் **சுவாமி விவேகானந்தர்.**
- கிறித்தவசமயப் பரப்பு நிறுவனங்களின் நிர்வாகக் கட்டமைப்பைப் பின்பற்றி விவேகானந்தர் **ராமகிருஷ்ணா மிஷன்** என்ற அமைப்பை நிறுவினார்.
- 1893 இல் உலக சமய மாநாடு நடைபெற்ற இடம் **சிகாகோ**
- வங்கப் பிரிவினையைத் தொடர்ந்து நடைபெற்ற இயக்கம் **சுதேசி இயக்கம்.**
- தன்னாட்சி இயக்கத்தை அமைத்தவர் **அன்னிபெசன்ட் அம்மையாராவார்.**
- பிராமண எதிர்ப்பியக்கத்தின் தொடக்ககாலத் தலைவர் **ஜோதிபா பூலே** ஆவார்.
- சாது ஜன பரிபாலன சங்கம் (ஏழை மக்களின் பாதுகாப்புச் சங்கம்) என்ற அமைப்பை நிறுவியர் **அய்யன்காளி.**
- அகாலி இயக்கத்தின் முன்னோடி அமைப்பு **சிங்சிங்சபா** ஆகும்.
- வள்ளலார் எனப் பிரபலமாக அறியப்பட்டவர் **ராமலிங்க சுவாமிகள்** (ராமலிங்க அடிகள்)

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. எந்த ஆண்டில் உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிக்கப்பட்டது?
   அ) 1827 ஆ) 1829 இ) 1826 ஈ) 1927

2. தயானந்த சரஸ்வதியால் நிறுவப்பெற்ற சமாஜத்தின் பெயர் யாது?
   அ) ஆரிய சமாஜம் ஆ) பிரம்ம சமாஜம்
   இ) பிரார்த்தனை சமாஜம் ஈ) ஆதி பிரம்ம சமாஜம்

3. யாருடைய பணியும் இயக்கமும், 1856 ஆம் ஆண்டு விதவை மறுமண சீர்திருத்தச் சட்டம் இயற்றப்படுவதற்கு வழிகோலியது?
   அ) ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் ஆ) ராஜா ராம்மோகன் ராய்
   இ) அன்னிபெசன்ட் ஈ) ஜோதிபா பூலே

4. 'ராஸ்ட் கோப்தார்' யாருடைய முழக்கம்? **PTA**
   அ) பார்சி இயக்கம் ஆ) அலிகார் இயக்கம்
   இ) ராமகிருஷ்ணர் ஈ) திராவிட மகாஜன சபை

5. நாம்தாரி இயக்கத்தை உருவாக்கியவர் யார்?
   அ) பாபா தயாள் தாஸ் ஆ) பாபா ராம்சிங்
   இ) குருநானக் ஈ) ஜோதிபா பூலே

6. சுவாமி ஸ்ரத்தானந்தா என்பவர் யார்?
   அ) சுவாமி விவேகானந்தரின் சீடர் ஆ) இந்திய பிரம்ம சமாஜத்தில் பிளவை ஏற்படுத்தியவர்
   இ) ஆரிய சமாஜத்தில் பிளவை ஏற்படுத்தியவர் ஈ) சமத்துவ சமாஜத்தை நிறுவியவர்

7. விதவை மறுமணச் சங்கத்தை ஏற்படுத்தியவர் யார்? **PTA**
   அ) M.G. ரானடே ஆ) தேவேந்திரநாத் தாகூர்
   இ) ஜோதிபா பூலே ஈ) அய்யன்காளி

8. 'சத்யார்த்தபிரகாஷ்' எனும் நூலின் ஆசிரியர் யார்? **PTA**
   அ) தயானந்த சரஸ்வதி ஆ) வைகுண்டசாமி
   இ) அன்னிபெசன்ட் ஈ) சுவாமி சாரதாநந்தா

கூடுதல் வினாக்கள்

9. மேலைநாட்டுக் கருத்துக்களால் கவரப்பட்ட தொடக்ககாலச் சீர்திருத்தவாதி
   அ) ராஜா ராம்மோகன் ராய் ஆ) தயானந்த சரஸ்வதி
   இ) ரானடே ஈ) கேசவ் சந்திர சென்

10. ராஜா ராம்மோகன் ராயின் தாய்மொழி
    அ) இந்தி ஆ) தெலுங்கு
    இ) வங்காளம் ஈ) உருது

11. சதி எனும் உடன்கட்டையேறும் பழக்கத்தை ஒழித்து சட்டம் இயற்றியவர்
    அ) வாரன்ஹேஸ்டிங்ஸ் ஆ) டல்ஹௌசி
    இ) ரிப்பன் ஈ) வில்லியம் பெண்டிங்

12. ராஜா ராம்மோகன்ராய் நிறுவிய இயக்கம்
    அ) ஆரிய சமாஜம் ஆ) பிராத்தன சமாஜம்
    இ) பிரம்ம சமாஜம் ஈ) சாதாரண சமாஜ்

13. கேசவ் சந்திரசென்னை பெருமளவில் கவர்ந்த சமயம்
    அ) இந்து சமயம் ஆ) கிறித்தவ சமயம்
    இ) இஸ்லாம் சமயம் ஈ) பௌத்த சமயம்

14. இந்து மறை நூல்களே முற்போக்கானவை என வாதிட்டவர்
அ) ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் ஆ) ஆத்மராம் பாண்டுரங்
இ) கேசவ் சந்திர சென் ஈ) R.C. பண்டர்கர்

15. விதவைகள் மறுமணச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு
அ) 1865 ஆ) 1856 இ) 1885 ஈ) 1858

16. ஆத்மராம் பாண்டுரங் என்பவரால் நிறுவப்பட்டது
அ) ஆரிய சமாஜம் ஆ) பிரம்ம சமாஜம்
இ) பிரார்த்தனை சமாஜம் ஈ) ஆதிபிரம்ம சமாஜம்

17. பஞ்சாபில் சீர்திருத்த இயக்கங்களுக்கு தலைமையேற்ற அமைப்பு
அ) தக்காண கல்விக் கழகம் ஆ) ராமகிருஷ்ணா மிஷன்
இ) சுத்தி இயக்கம் ஈ) ஆரிய சமாஜம்

18. மதம் மாறிய இந்துக்களை மீண்டும் இந்துக்களாக மாற்றிட வகுக்கப்பட்ட சடங்கு
அ) குலாம்கிரி ஆ) சுத்தி
இ) குருகுலம் ஈ) சத்யார்த்த பிரகாஷ்

19. இராமகிருஷ்ண பரமஹம்சர் அர்ச்சகராக பணியாற்றிய இடம்
அ) தட்சிணேசுவரம் ஆ) தானேஸ்வரம்
இ) தட்சசீலம் ஈ) ராமேஸ்வரம்

20. இராமகிருஷ்ண பரமஹம்சரின் முதன்மைச் சீடர்
அ) சுவாமி தயானந்தர் ஆ) சுவாமி தேவேந்திர நாத்
இ) சுவாமி விவேகானந்தர் ஈ) சுவாமி ராமலிங்க அடிகள்

21. 1893 இல் உலக சமய மாநாடு நடைபெற்ற இடம்
அ) மாஸ்கோ ஆ) சான் பிரான்ஸிஸ்கோ
இ) லண்டன் ஈ) சிகாகோ

22. 1886 இல் சென்னை அடையாறுக்கு மாற்றப்பட்ட சபை
அ) சத்தியசோகத் சமாஜ் ஆ) தர்ம பரிபாலன யோகம்
இ) பிரம்ம ஞான சபை ஈ) ராமகிருஷ்ண மிஷன்

23. தன்னாட்சி இயக்கத்தை அமைத்தவர்
அ) ஜோதிபா பூலே ஆ) சாவித்திரி பாய்
இ) விவேகானந்தர் ஈ) அன்னிபெசன்ட்

24. பிராமண எதிர்ப்பியக்கத்தின் தொடக்ககாலத் தலைவர்
அ) ஜோதிபா பூலே ஆ) நாராயண குரு
இ) அய்யன்காளி ஈ) வைகுண்ட சுவாமிகள்

25. நாராயண குரு பிறந்த மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரா
இ) கேரளா ஈ) கர்நாடகம்

26. மேலைநாட்டு அறிவியலையும், அரசுப் பணிகளையும் ஏற்றுக்கொள்ளும்படி இஸ்லாமியர்களை வற்புறுத்தியவர்
அ) முகமது குவாசிம் ஆ) முகமத் – உல் – ஹசன்
இ) சர் சையத் அகமத்கான் ஈ) ரஷித் அகமத்

27. இந்திய தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்ட ஆண்டு
அ) 1885 ஆ) 1905 இ) 1858 ஈ) 1857

28. பார்சி சீர்திருத்த இயக்கம் தொடங்கப்பட்ட இடம்
அ) சென்னை ஆ) கல்கத்தா
இ) டெல்லி ஈ) பம்பாய்

29. அனைத்து மக்களுக்குமான இலவச உணவகத்தை இராமலிங்க அடிகள் நிறுவிய இடம்
அ) வடலூர் ஆ) கடலூர்
இ) மேலூர் ஈ) தஞ்சாவூர்

30. ஆங்கில ஆட்சியையும் திருவிதாங்கூர் அரசரின் ஆட்சியையும் முறையே "வெள்ளைப் பிசாசுகளின் ஆட்சியென்றும்" "கருப்பு பிசாசுகளின் ஆட்சியென்றும்" விமர்சித்தவர்
அ) அய்யன்காளி ஆ) நாராயண குரு
இ) வைகுண்ட சுவாமிகள் ஈ) அயோத்திதாசர்

விடைகள்

1. ஆ) 1829	2. அ) ஆரிய சமாஜம்	3. அ) ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்
4. அ) பார்சி இயக்கம்	5. ஆ) பாபா ராம்சிங்	6. இ) ஆரிய சமாஜத்தில் பிளவை ஏற்படுத்தியவர்
7. அ) M. G. ரானடே	8. அ) தயானந்த சரஸ்வதி	9. அ) ராஜா ராம்மோகன் ராய்
10. இ) வங்காளம்	11. ஈ) வில்லியம் பெண்டிங்	12. இ) பிரம்ம சமாஜம்
13. ஆ) கிறித்தவ சமயம்	14. அ) ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்	15. ஆ) 1856
16. இ) பிரார்த்தனை சமாஜம்	17. ஈ) ஆரிய சமாஜம்	18. ஆ) சுத்தி
19. அ) தட்சிணேசுவரம்	20. இ) சுவாமி விவேகானந்தர்	21. ஈ) சிகாகோ
22. இ) பிரம்ம ஞான சபை	23. ஈ) அன்னிபெசன்ட்	24. அ) ஜோதிபா பூலே
25. இ) கேரளா	26. இ) சர் சையத் அகமத்கான்	27. அ) 1885
28. ஈ) பம்பாய்	29. அ) வடலூர்	30. இ) வைகுண்ட சுவாமிகள்

II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. __________ சமரச வேத சன்மார்க்க சங்கத்தை நிறுவினார்.
2. புனே சர்வஜனிக் சபாவை நிறுவியவர் __________.
3. சத்யசோதக் சமாஜத்தைத் தொடங்கியவர் __________ ஆவார்.
4. குலாம்கிரி நூலை எழுதியவர் __________.
5. சத்யார்த்த பிரகாஷ் எனும் நூல் __________ நேர்மறைக் கொள்கைகளைப் பட்டியலிடுகிறது.
6. ராமகிருஷ்ணா மிஷன் __________ ஆல் நிறுவப்பட்டது.
7. __________ அகாலி இயக்கத்தின் முன்னோடியாகும்.
8. __________ கேரளாவின் சாதியக் கட்டுமானத்தில் வியத்தகு மாற்றங்களைக் கொண்டு வந்தது.
9. 'ஒரு பைசா தமிழன்' பத்திரிகையைத் துவக்கியவர் __________ ஆவார்.

கூடுதல் வினாக்கள்

10. பொருளற்ற சமயச் சடங்குகளையும், கேடு விளைவிக்கும் சமூக மரபுகளையும் எதிர்த்தவர் __________
11. கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் தந்தை __________
12. தேவேந்திரநாத் தாகூரின் அமைப்பு __________
13. நவீன வங்காள உரைநடையின் முன்னோடி என்று அழைக்கப்பட்டவர் __________
14. முதல் முறை திருமண வயதுச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு __________
15. பிரம்ம சமாஜத்திற்கு இணையாக நிறுவப்பட்ட அமைப்பு __________
16. தக்காணக் கல்விக் கழகம் நிறுவப்பட்ட ஆண்டு __________

17. ஜோதிபா பூலே எழுதிய முக்கிய நூல் __________
18. "வேதங்களுக்குத் திரும்புவோம்' என்பது __________ இயக்கத்தின் முழக்கமாகும்.
19. 'மனிதர்களுக்குச் செய்யப்படும் சேவையே கடவுளுக்குச் செய்யப்படும் சேவையாகும்' என்றுரைத்தவர் __________
20. சுவாமி விவேகானந்தரின் இயற்பெயர் __________
21. அன்னிபெசன்ட் __________, __________ செய்தித்தாள்கள் மூலம் பிரம்மஞானக் கருத்துகளைப் பரப்பினார்.
22. ஸ்ரீநாராயண குரு உருவாக்கிய அமைப்பு __________
23. ஒடுக்கப்பட்ட சாதியினருக்கு மட்டும் மறுக்கப்பட்ட, உயர் சாதியினர் மட்டுமே அணியும் ஆடைகளை அணிந்தவர் __________
24. பழமைவாத முஸ்லீம் உலோமாக்களால் தொடங்கப்பட்ட ஒரு மீட்பியக்கம் __________
25. நிரங்கரி இயக்கத்தின் நிறுவனர் __________
26. சீக்கியர்களின் அடையாளங்களை அணிய வற்புறுத்திய இயக்கம் __________
27. சீக்கியர்களுக்கென கால்சா கல்லூரி உருவாக்கப்பட்ட இடம் __________
28. வைகுண்ட சுவாமிகளின் இயற்பெயர் __________
29. வைகுண்ட சுவாமிகளின் கருத்துக்கள் அடங்கிய நூல் __________
30. ஒடுக்கப்பட்டோரின் கோயில் நுழைவுக்கு ஆதரவாக பண்டிதர் அயோத்திதாசர் நிறுவிய அமைப்பு __________

விடைகள்

1. இராமலிங்க அடிகள்
2. மகாதேவ் கோவிந்த் ரானடே
3. ஜோதிபா பூலே
4. ஜோதிபா பூலே
5. ஒரு கடவுள் வழிபாடு, உருவ வழிபாட்டைநிராகரித்தல், பிராமணர் மேலாதிக்கம் செலுத்தும் சடங்குகள் சமூக நடைமுறைகள் ஆகியவற்றை மறுத்தல்
6. சுவாமி விவேகானந்தர்
7. சிங்சபா
8. நாராயண குரு, அய்யன்காளி
9. அயோத்தி தாசர்
10. ராஜா ராம் மோகன்ராய்
11. தேவேந்திரநாத் தாகூர்
12. ஆதி பிரம்ம சமாஜம்
13. ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்
14. 1860
15. பிரார்த்தனை சமாஜம்
16. 1884
17. குலாம்கிரி
18. ஆரிய சமாஜம்
19. இராமகிருஷ்ண பரமஹம்சர்
20. நரேந்திரநாத் தத்தா
21. நியூ இந்தியா, காமன்வீல்
22. ஸ்ரீநாராயண குரு தர்ம பரிபாலன யோகம்
23. அய்யன்காளி
24. தியோபந்த்
25. பாபா தயாள்தாஸ்
26. நாம்தாரி இயக்கம்
27. அமிர்தசரஸ்
28. முடிசூடும் பெருமாள்
29. அகிலத்திரட்டு
30. அத்வைதானந்தா சபா

III. சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. i) ராஜா ராம் மோகன் ராய் ஒருகடவுள் கோட்பாட்டை போதித்தார்.
ii) அவர் உருவ வழிபாட்டை ஆதரித்தார்.
iii) சமூகத் தீமைகளைக் கண்டனம் செய்வதை எதிர்த்து அவர் சிற்றேடுகளை வெளியிட்டார்.
iv) ராஜா ராம்மோகன் ராய் கவர்னர் வில்லியம் பெண்டிங்கால் ஆதரிக்கப்பட்டார்.
அ) i) சரி
ஆ) i), ii) ஆகியன சரி
இ) i), ii), iii) ஆகியன சரி
ஈ) i), iii) ஆகியன சரி

PTA

2. i) பிரார்த்தனை சமாஜம் டாக்டர் ஆத்மாராம் பாண்டுரங்கால் நிறுவப்பெற்றது.
   ii) இந்த சமாஜம் அனைத்துச் சாதியினரும் பங்கேற்கும் சமபந்திகளையும் சாதிக்கலப்புத் திருமணங்களையும் ஊக்குவித்தது.
   iii) ஜோதிபா பூலே ஆண்களின் மேம்பாட்டிற்காகப் பணியாற்றினார்.
   iv) பிரார்த்தனை சமாஜம் பஞ்சாபைப் பிறப்பிடமாகக் கொண்டது.
   அ) i) சரி ஆ) ii) சரி
   இ) i), ii) ஆகியன சரி ஈ) iii), iv) ஆகியன சரி

3. i) ராமகிருஷ்ணா மிஷன் கல்வி, உடல் நலம், பேரிடர்களின் போது நிவாரணப் பணி செய்தல் போன்ற சமூகப்பணிகளில் செயலூக்கத்துடன் ஈடுபட்டது.
   ii) பேரின்பநிலை எய்தும் பழக்கங்களின் மூலம் ஆன்ம ரீதியாக இறைவனோடு இணைவதை ராமகிருஷ்ணர் வலியுறுத்தினார்.
   iii) ராமகிருஷ்ணர் ராமகிருஷ்ணாமிஷனை ஏற்படுத்தினார்.
   iv) ராமகிருஷ்ணர் வங்கப்பிரிவினையை எதிர்த்தார்.
   அ) i) சரி ஆ) i) மற்றும் ii) சரி இ) iii) சரி ஈ) iv) சரி

4. கூற்று (A) : ஜோதிபா பூலே ஆதரவற்றோருக்கான விடுதிகளையும், விதவைகளுக்கான விடுதிகளையும் திறந்தார்.
   காரணம் (R) : ஜோதிபா பூலே குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவை மறுமணத்தை ஆதரித்தார்.
   அ) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக இல்லை.
   ஆ) கூற்று சரி. காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக உள்ளது.
   இ) இரண்டுமே தவறு.
   ஈ) காரணம் சரி. ஆனால் கூற்று பொருத்தமற்றதாக உள்ளது.

கூடுதல் வினாக்கள்

5. i) தேவேந்திரநாத் ஒரு தீவிரவாதச் சீர்திருத்தவாதி ஆவார்.
   ii) கேசவ் சந்திர சென் விரைவான மாற்றங்களை விரும்பினார்.
   iii) கேசவ் சந்திர சென் இஸ்லாம் மதத்தால் பெருமளவில் கவரப்பட்டார்.
   iv) பிரம்மசமாஜத்தின் உறுப்பினர்களிடையே பிளவு ஏற்பட்டது.
   அ) i) , ii) சரி ஆ) ii) , iv) சரி இ) i) , iii) சரி ஈ) iii), iv) சரி

6. i) பிரம்மஞான சபை மேடம் பிளாவட்ஸ்கி மற்றும் கர்னல் ஆல்காட் ஆகியோரால் நிறுவப்பட்டது.
   ii) இச்சபை 1875 இல் அமெரிக்காவில் நிறுவப்பட்டது.
   iii) இச்சபை இந்தியாவில் சென்னை அடையாறுக்கு மாற்றப்பட்டது.
   iv) பிரம்மஞான சபை சமணம் புத்துயிர் பெறுவதில் முக்கியப் பங்காற்றியது.
   அ) i) ,ii) மற்றும் iii) சரி ஆ) i) , ii) மற்றும் iv) சரி
   இ) ii) ,iii) மற்றும் iv) சரி ஈ) i) , iii) மற்றும் iv) சரி

7. i) சர் சையத் அகமத்கான் ஆங்கிலக் கல்வியை வெறுத்தார்.
   ii) அவர் இஸ்லாமியர்களை அரசுப்பணிகளை ஏற்றுக் கொள்ள வற்புறுத்தினார்.
   iii) அவர் அறிவியல் கழகம் ஒன்றை நிறுவினார்.
   iv) அவர் உருது நூல்களை ஆங்கில மொழியில் மொழியாக்கம் செய்தார்.
   அ) i) ,ii) சரி ஆ) iii) , iv) சரி இ) i) ,iv) சரி ஈ) ii) ,iii) சரி

8. கூற்று : "துயரப்படும் உயிரினங்களைப் பார்த்து இரக்கம் கொள்ளாதவர்கள் கல் நெஞ்சக்காரர்கள், அவர்களின் ஞானம் மேகங்களால் மூடப்பட்டிருக்கும்' என்றார் வள்ளலார்.
   காரணம் : அவர் இயற்றிய பாடல்கள் திருவருட்பா என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டன.
   அ) கூற்று, சரி, ஆனால் காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக இல்லை.
   ஆ) கூற்று சரி காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக உள்ளது.
   இ) இரண்டுமே தவறு.
   ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று பொருத்தமற்றதாக உள்ளது.

9. கூற்று : "இந்து சமூகத்திற்குப் புத்துயிரளிக்க இந்திய இளைஞர்களுக்கு விவேகானந்தர் அறைகூவல் விடுத்தார்.

காரணம் : விவேகானந்தர் பண்பாட்டுத் தேசியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

அ) கூற்று, சரி, காரணம் தவறு.
ஆ) கூற்று தவறு காரணம் சரி.
இ) இரண்டுமே தவறு.
ஈ) இரண்டும் சரி

10. கூற்று : சர் சையத் அகமத்கான், இந்திய முஸ்லிம்கள் ஆங்கிலக் கல்வியை ஏற்றுக் கொள்வதை வற்புறுத்தினார்.

காரணம் : நவீன கல்வியறிவின்மையே இஸ்லாமியர்களுக்கு பெருந்தீங்கு விளைவித்து, அவர்களைக் கீழ் நிலையில் வைத்துவிட்டது.

அ) காரணம் சரி, கூற்று, தவறு.
ஆ) கூற்று சரி காரணம் தவறு.
இ) கூற்று சரி காரணம் கூற்றை துல்லியமாக விளக்குகிறது.
ஈ) காரணம், கூற்றிற்குச் சரியான விளக்கமல்ல.

விடைகள்

1. ஈ) i) , iv) சரி
2. இ) i), ii) ஆகியன சரி
3. ஆ) i) மற்றும் ii) சரி
4. அ) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக இல்லை
5. ஆ) ii) , iv) சரி
6. அ) i) ,ii) மற்றும் iii) சரி
7. ஈ) ii) ,iii) சரி
8. அ) கூற்று, சரி, ஆனால் காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக இல்லை
9. ஈ) இரண்டும் சரி
10. இ) கூற்று சரி காரணம் கூற்றை துல்லியமாக விளக்குகிறது

IV. பொருத்துக:

பாடநூல் வினா

அ)

				விடை
1.	அய்யா வழி	அ)	விதவை மறுமண சீர்திருத்தச் சட்டம்	1) ஈ
2.	திருவருட்பா	ஆ)	நிரங்கரி இயக்கம்	2) உ
3.	பாபா தயாள்தாஸ்	இ)	ஆதி பிரம்ம சமாஜம்	3) ஆ
4.	ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்	ஈ)	வைகுண்ட சுவாமிகள்	4) அ
5.	தேவேந்திரநாத்	உ)	ஜீவகாருண்யப் பாடல்கள்	5) இ

கூடுதல் வினாக்கள்

ஆ)

				விடை
1.	ஜோதிபா பூலே	அ)	தமிழகம்	1) ஆ
2.	நாராயண குரு	ஆ)	புனே	2) இ
3.	ராமலிங்க அடிகள்	இ)	கேரளா	3) அ
4.	ஆத்மராம் பாண்டுரங்	ஈ)	பஞ்சாப்	4) உ
5.	தயானந்த சரஸ்வதி	உ)	மகாராஷ்டிரம்	5) ஈ

இ)

				விடை
1.	பிரம்ம சமாஜம்	அ)	கேசவ் சந்திர சென்	1) இ
2.	ஆரிய சமாஜம்	ஆ)	ஜோதிபா பூலே	2) உ
3.	பிரார்த்தனை சமாஜம்	இ)	ராஜா ராம்மோகன் ராய்	3) ஈ
4.	சாதாரண சமாஜ்	ஈ)	ஆத்மராம் பாண்டுரங்	4) அ
5.	சத்தியசோதக் சமாஜ்	உ)	சுவாமி தயானந்த சரஸ்வதி	5) ஆ

ஈ) 1. 1829	அ) தக்காண கல்விக் கழகம்	விடை
2. 1875	ஆ) இந்திய தேசிய காங்கிரஸின் தோற்றம்	1) உ
3. 1884	இ) அலிகார் இயக்கம்	2) இ
4. 1885	ஈ) சிகாகோ உலக சமய மாநாடு	3) அ
5. 1893	உ) சதி ஒழிப்பு	4) ஆ
		5) ஈ

உ) 1. நியூ இந்தியா	அ) ஜோதிபா பூலே	விடை
2. குலாம் கிரி	ஆ) வைகுண்ட சுவாமிகள்	1) உ
3. சத்யார்த்த பிரகாஷ்	இ) அன்னிபெசன்ட்	2) இ
4. திருவருட்பா	ஈ) சுவாமி தயானந்த சரஸ்வதி	3) அ
5. அகிலத்திரட்டு	உ) ராமலிங்க சுவாமிகள்	4) ஆ
		5) ஈ

V.கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. மகரிஷி தேவேந்திரநாத் தாகூர் முன்வைத்த நம்பிக்கையின் நான்கு கூறுகளைக் குறிப்பிடுக. PTA

- தொடக்கத்தில் எதுவுமில்லை, எல்லாம் வல்ல ஒரு கடவுள் மட்டுமே உள்ளார். அவரே இவ்வுலகத்தைப் படைத்தார்.
- அவர் ஒருவரே உண்மையின், எல்லையற்ற ஞானத்தின், நற்பண்பின், சக்தியின் கடவுளாவார். அவரே நிலையானவர், எங்கும் நிறைந்திருப்பவர் அவருக்கு இணை யாருமில்லை.
- நம்முடைய வீடுபேறு, இப்பிறவியிலும் அடுத்த பிறவியிலும் அவரை நம்புபவதையும் அவரை வணங்குவதையும் சார்ந்துள்ளது.
- அவரை நம்புவதென்பது, அவரை நேசிப்பதிலும் அவர் விருப்பத்தைச் செயல்படுத்துவதிலும் அடங்கியுள்ளது.

2. சமூக சீர்திருத்தங்களுக்கு மகாதேவ் ரானடேயின் பங்களிப்பைக் குறிப்பிடுக.

- நீதிபதி மகாதேவ் கோவிந்த ரானடே (M.G. ரானடே) சாதி மறுப்பு, சமபந்தி, சாதிமறுப்புத் திருமணம், விதவை மறுமணம், பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றம் போன்ற நடவடிக்கைகளுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.
- ரானடே விதவை மறுமணச் சங்கம் (1861), புனே சர்வஜனிக் சபா (1870), தக்காண கல்விக் கழகம் (1884) ஆகிய அமைப்புகளை நிறுவினார்.

3. ஒடுக்கப்பட்டோரின் நலன்களுக்காகப் போராடிய அய்யன் காளியின் பாத்திரத்தை மதிப்பீடு செய்க.

- அய்யன்காளி குழந்தையாய் இருக்கும்போதே அவர் சந்தித்த சாதியப்பாகுபாடு அவரை சாதி எதிர்ப்பியக்கத்தின் தலைவராக மாற்றியது.
- அவர் பொது இடங்களுக்குச் செல்லுதல், பள்ளிகளில் கல்வி கற்க இடம் பெறுதல் போன்ற அடிப்படை உரிமைகளுக்காகப் போராடினார்.
- ஆடை அணிவது உட்பட பல மரபுசார்ந்த பழக்கங்களை அவர் எதிர்த்தார். ஒடுக்கப்பட்ட சாதியினருக்கு மட்டும் மறுக்கப்பட்ட, உயர் சாதியினர் மட்டுமே அணியும் ஆடைகளை இவர் அணிந்தார்.
- உயர் சாதியினர் பயன்படுத்தியதும் ஒடுக்கப்பட்ட சாதியினருக்கு மறுக்கப்பட்டிருந்ததுமான பொதுச்சாலைகளில், சவால் விடும் வகையில் காளைகள் பூட்டப்பெற்ற வண்டியில் அவர் பயணம் செய்தார்.
- ஸ்ரீநாராயண குருவால் ஊக்கம் பெற்ற அய்யங்காளி 'சாது ஜன பரிபாலன சங்கம்' (ஏழை மக்கள் பாதுகாப்புச் சங்கம்) எனும் அமைப்பை நிறுவினார். புலையர் சமூக மக்களின் கல்விக்காக இது நிதி திரட்டியது.

4. ராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.

- ராமலிங்க சுவாமிகள் உயிர்களிடையே நம்பிக்கை, இரக்கம் எனும் பிணைப்புகள் இருக்கவேண்டுமென்றார்.
- அவர் தன்னுடைய அன்பையும் இரக்கத்தையும் செடிகொடிகள் உட்பட அனைத்து உயிரினங்களிடமும் காட்டினார். இதை அவர் ஜீவகாருண்யம் என்றார்.
- அவர் 1856 இல் சமரச வேத சன்மார்க்க சங்கம் எனும் அமைப்பை நிறுவினார். பின்னர் அது சமரசசுத்த சன்மார்க்க சத்ய சங்கம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 1866 இல் தென்னிந்தியாவில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தைக் கணக்கில் கொண்டு 1867 இல் சாதி எல்லைகளைத் தாண்டி அனைத்து மக்களுக்குமான இலவச உணவகத்தை வடலூரில் நிறுவினார்.

5. சுவாமி விவேகானந்தரின் "செயல்பாட்டாளர்" சித்தாந்தத்தின் தாக்கமென்ன?

- சுவாமி விவேகானந்தர் பண்பாட்டுத் தேசியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார்.
- அவர் இந்து சமூகத்திற்குப் புத்துயிரளிக்க இந்திய இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தார்.
- விவேகானந்தரின் செயலாக்கமிக்க கருத்துகள் மேற்கத்திய கல்வி பயின்ற வங்காள இளைஞர்களிடையே அரசியல் மாற்றங்களுக்கான நாட்டத்தை ஏற்படுத்தியது.
- வங்காளப் பிரிவினையைத் தொடர்ந்து நடைபெற்ற சுதேசி இயக்கத்தின்போது இளைஞர்களில் பலர் விவேகானந்தரால் ஊக்கம் பெற்றனர்.

6. சீர்திருத்த இயக்கங்களுக்கும், சமய இயக்கங்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

சீர்த்திருத்த இயக்கங்கள்:

- இதன் நோக்கம் சமூகத்தில் படிப்படியாக மாற்றத்தைக் கொண்டு வருவது ஆகும்.
- இது பொருளற்ற சமயச்சடங்குகளையும் சமூக மரபுகளையும் எதிர்த்தது.
- பிரம்மசமாஜம், பிரார்த்தனை சமாஜம் மற்றும் அலிகார் இயக்கம் போன்றவை சீர்திருத்த இயக்கங்களாகும்.

சமய இயக்கங்கள்:

- இதன் நோக்கம் இந்து மதத்திலுள்ள நேர்மறையான கொள்கைகளை நீக்கி தூய்மைப்படுத்துதல்.
- சமயத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவது மற்றும் மூட நம்பிக்கைகளை ஒழித்தல் போன்றவை இதன் நோக்கங்கள் ஆகும்.
- ஆரிய சமாஜம், இராம கிருஷ்ண மிஷன், தியோபந்த் இயக்கம் போன்றவை சமய இயக்கங்கள் ஆகும்.

7. பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத் தீமைகள் யாவை? PTA

- உடன்கட்டை ஏறுதல் (சதி)
- குழந்தைத் திருமணம்
- பலதாரமணம்.

8. ஏழைகள் மற்றும் அடித்தட்டு மக்களின் நலன்களுக்காக ஜோதிபா பூலே ஆற்றிய பணிகளைக் கோடிட்டுக் காட்டுக.

- அவர் 1852 இல் ஒடுக்கப்பட்டோருக்கான முதல் பள்ளியை புனேயில் திறந்தார்.
- சத்தியசோதக் சமாஜ் (உண்மையை நாடுவோர் சங்கம்) எனும் அமைப்பை, பிராமணரல்லாத மக்களும் சுயமரியாதையோடும், குறிக்கோளோடும் வாழத் தூண்டுவதற்காய் நிறுவினார்.
- பூலே குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவை மறுமணத்தை குறிப்பாக மறுமணம் மறுக்கப்பட்ட உயர்சாதி இந்துக்களின் மறுமணத்தை ஆதரித்தார்.
- ஜோதிபா பூலே பெற்றோரில்லா குழந்தைகளுக்கென்று விடுதிகளையும் விதவைகளுக்கென காப்பகங்களையும் உருவாக்கினார்.
- பெற்றோரில்லாத குழந்தைகளுக்கான விடுதிகளையும், விதவைகளுக்கான காப்பகங்களையும் நிறுவினார்.

9. அயோத்தி தாசர் இலங்கை சென்ற போது நடந்த நிகழ்வு என்ன?

- 1898 இல் அயோத்திதாசர் இலங்கை சென்றார். அவர் அங்கே பௌத்த சமயத்தைத் தழுவினார்.
- அதே ஆண்டில் பௌத்த மதத்தின் வழியே பகுத்தறிவின் அடிப்படையிலான சமயத் தத்துவத்தை கட்டமைப்பதற்காக "சாக்கிய பௌத்த சங்கம்' எனும் அமைப்பை சென்னையில் நிறுவினார்.
- பிராமணியத்தால் ஒடுக்கப்பட்டவர்களே உண்மையான பௌத்தர்கள் என அவர் வாதிட்டார்.

கூடுதல் வினாக்கள்

10. ஒடுக்குமுறைப் பாங்குடைய சமூகக் கட்டமைப்பை எதிர்த்தவர்கள் யாவர்?

- புனேயில் ஜோதிபா பூலே.
- கேரபாளாவில் ஸ்ரீநாராயணகுரு, அய்யங்காளி
- தமிழகத்தில் ராமலிங்க அடிகள், வைகுண்ட சுவாமிகள், அயோத்திதாசர்.

11. ராமகிருஷ்ணா மிஷனின் சமூகப் பணிகள் யாவை?

- கல்வியறிவு வழங்குவது.
- மருத்துவ உதவி
- இயற்கைச் சீற்றங்களின்போது நிவாரணப் பணிகளை மேற்கொள்வது என்பனவாகும்.

12. அலிகார் இயக்கம் பற்றி குறிப்பு வரைக.

- சர் சையத் அகமத்கான் 1875 ஆம் ஆண்டு அலிகார் நகரில் முகமதிய ஆங்கிலோ–ஓரியண்டல் கல்லூரியை நிறுவினார்.
- அலிகார் எனப்பட்ட அவரது இயக்கம் கல்லூரியை மையப்படுத்தி நடைபெற்றதால் அப்பெயரைப் பெற்றது.
- இக்கல்லூரி 1920 இல் தரம் உயர்த்தப்பட்டு அலிகார் பல்கலைக் கழகமானது
- இது இந்திய முஸ்லீம்களின் கல்வி வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.

13. தியோபந்த் பள்ளி பற்றி சிறுகுறிப்பு வரைக

- தியோபந்த் பள்ளியின் பாடத்திட்டம் ஆங்கிலக் கல்வியையும், மேலைப்பண்பாட்டையும் புறக்கணித்தது.
- இப்பள்ளியில் உண்மையான இஸ்லாமிய மதம் கற்றுத் தரப்பட்டது.
- இதன் நோக்கம் இஸ்லாமிய சமூகத்தின் ஒழுக்கத்தையும் மதத்தையும் மீட்டெடுப்பதாய் அமைந்தது.
- இப்பள்ளி மாணவர்களை அரசுப் பணிகளுக்குத் தயார் செய்யவில்லை. மாறாக இஸ்லாம் மத நம்பிக்கையைப் பரப்புரை செய்யத் தயார் செய்தது.

VI. ஒவ்வொரு தலைப்பின் கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. அலிகார் இயக்கம்:

அ) இவ்வியக்கத்தின் முக்கியக் குறிக்கோள் என்ன?

- முஸ்லீம் சமூகம் முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டுமானால் ஆங்கிலக் கல்வியை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆ) இவ்வியக்கத்தின் ஆன்மாவாகக் கருதப்படுபவர் யார்?

- சர் சையத் அகமத்கான்.

இ) ஆங்கில நூல்கள் ஏன் உருது மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டன?

- மேலை நாட்டு அறிவியலையும், ஆங்கிலக் கல்வியையும் ஏற்றுக் கொள்வதற்காக உருது மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டன.

ஈ) பல்கலைக்கழகமாக தரம் உயர்த்தப்பட்ட கல்லூரியின் பெயரைக் குறிப்பிடுக.

- அலிகார் முகமதிய ஆங்கிலோ – ஓரியண்டல் கல்லூரி.

2. ராமலிங்க சுவாமிகள்:

அ) ஜீவகாருண்யம் என்றால் என்ன?

- அன்பையும் இரக்கத்தையும் செடி கொடிகள் உள்ளிட்ட அனைத்து உயர்களிடமும் காட்டுதல்.

ஆ) அருட்பா என்றால் என்ன?

- இராமலிங்க சுவாமிகளின் பாடல்களின் தொகுப்பு அருட்பா எனப்பட்டது.

இ) சமரச வேத சன்மார்க்க சங்கத்தின் முக்கிய பங்களிப்பைக் குறிப்பிடுக?

- இது சாதி எல்லைகளைத் தாண்டி அனைத்து மக்களுக்குமான உணவகத்தை நிறுவியது.

ஈ) தனது இலவச உணவகத்தை அவர் எங்கே அமைந்திருந்தார்?

- வடலூரில் அமைத்திருந்தார்.

3. தியோபந்த் இயக்கம்:

அ) இவ்வியக்கத்தைத் திட்டமிட்டு நடத்தியவர்கள் யார்?

- பழமைவாத முஸ்லீம் உலேமாக்கள்.

ஆ) இவ்வியக்கத்தின் இரண்டு முக்கியக் குறிக்கோள்கள் யாவை?

- குரான் மற்றும் ஷரியத்தின் உண்மையான போதனைகளைப் பரப்புரை செய்தல்.
- இஸ்லாமல்லாத அயல் கூறுகளுக்கு எதிராகப் புனிதப்போர் செய்யும் உணர்வுகளை ஊக்குவித்தல்.

இ) தியோபந்த் பள்ளியை நிறுவியவர் யார்?

- முகமது குவாசிம் நானாதவி மற்றும் ரஷீத் அகமத் கங்கோகி ஆகியோரின் தலைமையில் உலேமாக்கள் நிறுவினர்.

ஈ) யாருக்கு எதிராக தியோபந்த் உலேமாக்கள் சமய ஆணையைப் பிறப்பித்தனர்?

- சையத் அகமத்கானுடைய அமைப்புகளான தி யுனைடெட் பேட்ரியாட்டிக் அசோசியேசன் மற்றும் முகமதன் ஆங்கிலோ – ஓரியண்டல் அசோசியேசன் ஆகியவற்றுக்கு எதிராக சமய ஆணையைப் பிறப்பித்தனர்.

கூடுதல் வினாக்கள்

சுவாமி விவேகானந்தர்:

அ) சுவாமி விவேகானந்தரின் இயற்பெயர் என்ன?

- சுவாமி விவேகானந்தரின் இயற்பெயர் நரேந்திரநாத் தத்தா.

ஆ) சுவாமி விவேகானந்தரின் குரு யார்?

- சுவாமி விவேகானந்தரின் குரு இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆவார்.

இ) விவேகானந்தர் நிறுவிய அமைப்பின் பெயர் என்ன?

- ராமகிருஷ்ணா மிஷன்

ஈ) 1893 ல் சுவாமி விவேகானந்தர் எந்த மாநாட்டில் சொற்பொழிவாற்றினார்?

- 1893 ல் சிகோகோவில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் சொற்பொழிவாற்றினார்.

வைகுண்ட சுவாமிகள்:

அ) வைகுண்ட சுவாமிகள் எங்கே பிறந்தார்?

- வைகுண்ட சாமிகள், கன்னியாகுமரிக்கு அருகில் இன்று சாமித்தோப்பு என்றழைக்கப்படும் சாஸ்தா கோவில் விளை எனும் கிராமத்தில் பிறந்தார்.

ஆ) வைகுண்ட சாமிகளின் இயற்பெயர் என்ன?
- முடிசூடும் பெருமாள்

இ) அவர் எங்கு தெய்வீக அனுபவம் பெற்றார்?
- திருச்செந்தூர் கோவிலில் தெய்வீக அனுபவம் பெற்றார்.

ஈ) அவர் நிறுவிய அமைப்பு யாது?
- சமத்துவ சமாஜம்

அயோத்தி தாசர்:

அ) பண்டிதர் அயோத்தி தாசரின் பல பரிமாணங்கள் என்ன?
- பண்டிதர் அயோத்திதாசர் தீவிர தமிழ் அறிஞரும், சித்த மருத்துவரும், பத்திரிக்கையாளரும், சமூக அரசியல் செயல்பாட்டாளரும் ஆவார்.

ஆ) அயோத்திதாசர் எங்கு பிறந்தார்?
- அயோத்தி தாசர் சென்னையில் பிறந்தார்.

இ) அயோத்தி தாசர் வெளியிட்ட வாராந்திரப் பத்திரிக்கையின் பெயர் என்ன?
- அயோத்தி தாசர் வெளியிட்ட வாராந்திரப் பத்திரிக்கையின் பெயர் 'ஒரு பைசா தமிழன்'

ஈ) அவர் தீண்டத்தகாதவர்களை எவ்வாறு அழைத்தார்?
- சாதிபேதமற்ற திராவிடர் என்று அழைத்தார்.

VII. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. மீட்பியக்கத்தின் பங்களிப்பை சமய சீர்திருத்த இயக்கங்களின் பங்களிப்போடு ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காட்டுக.

மீட்பியக்கம்:
- இதன் நோக்கம் சமூகத்தில் படிப்படியாக மாற்றத்தைக் கொண்டு வருவது ஆகும்.
- இது பொருளற்ற சமயச்சடங்குகளையும் சமூக மரபுகளையும் எதிர்த்தது.
- பிரம்மசமாஜம், பிரார்த்தனை சமாஜம் மற்றும் அலிகார் இயக்கம் போன்றவை சீர்திருத்த இயக்கங்களாகும்.

சமய இயக்கங்கள்:
- இதன் நோக்கம் இந்து மதத்திலுள்ள நேர்மறையான கொள்கைகளை நீக்கி தூய்மைப்படுத்துதல்.
- சமயத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவது மற்றும் மூட நம்பிக்கைகளை ஒழித்தல் போன்றவை இதன் நோக்கங்கள் ஆகும்.
- ஆரிய சமாஜம், இராம கிருஷ்ண மிஷன், தியோபந்த் இயக்கம் போன்றவை சமய இயக்கங்கள் ஆகும்.

ஒற்றுமைகள்:
- 19 ஆம் நூற்றாண்டில் புதிய விழிப்புணர்ச்சியை உருவாக்குவதில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்களின் பங்களிப்பு முக்கியமானதாகும்.
- அனைத்து இயக்கங்களும் சமுதாய, மற்றும் சமயத்துறைகளில் ஏற்பட்ட போட்டிகள், உடன்கட்டை ஏறுதல் (சதி), குழந்தைத் திருமணம், பலதார மணம், பெண்ணடிமை முறை, சாதிய முறை, உருவ வழிபாடு, பொருளற்ற சமயச் சடங்குகள் மூட நம்பிக்கைகள் ஆகியனவற்றை எதிர்த்தன.
- அனைத்து இயக்கங்களும் விதவை மறுமணம், சாதி மறுப்பு, சமபந்தி, சாதிமறுப்புத் திருமணம், பெண்கல்வி, பெண்களின் முன்னேற்றம், மேற்கத்திய சிந்தனைகள் ஆகியனவற்றை வலியுறுத்துவதில் இணைந்து நின்றன.
- மேலும் இந்துமதத்தைச் சீர்திருத்திடவும், மதம் மாறியவர்களை மீட்பதிலும், கட்டுப்பாடான கடவுள் வழிபாடு ஆகியனவற்றிலும் இணைந்து செயல்பட்டன.

வேறுபாடுகள்:

- பிரம்மசமாஜம், அலிகார் இயக்கம் போன்ற மீட்பியக்கங்கள் மேலை நாட்டுக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து. ஆனால், ஆரியசமாஜம் போன்ற சமய இயக்கங்கள் வேதக்கல்விக்கு முக்கியத்துவம் அளித்தது.
- மீட்பியக்கம் அப்போதைய நிலையில் மாற்றங்களைக் கொண்டு வர விரும்பியது. ஆனால், ஆரிய சமாஜம் 'வேதங்களை நோக்கிச் செல்' என்பதை வலியுறுத்தியது.
- மீட்பியக்கம் மதமாற்றம் பற்றி எதுவும் கூறவில்லை. ஆனால், சமய இயக்கம் மதமாற்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முயற்சிகள் எடுத்தது.

2. 19 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.

- 19 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் சமூகம் மற்றும் சமயத்தில் பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- மேலை நாட்டுக் கல்வியினால் மக்கள் மேற்கத்திய கருத்துக்களான பகுத்தறிதல், சமத்துவம், சுதந்திரம், தேசியம் மற்றும் மனிதாபிமானம் போன்ற கருத்துகளால் மிகவும் கவரப்பட்டனர்.
- இவர்கள் மீது கிறிஸ்துவ மதத்தின் தாக்கமும் ஏற்பட்டது.
- இராஜா ராம்மோகன் ராய், பங்கிம் சந்திர சட்டர்ஜி, K.C.சென் போன்ற சீர்திருத்தவாதிகள் மக்களுக்கு உற்சாக மூட்டினர்.
- மேற்கத்திய தாராள சிந்தனைகள் பரவியதும் சமூக பண்பாட்டு விழிப்புணர்வு தோன்றியது.
- இந்திய பண்பாட்டில் இருந்த குறைகளை களைந்து, இந்தியாவின் பழம்பெரும் கலாச்சார புகழை மீண்டும் கொண்டுவர விரும்பினர்.
- அவர்கள் பல்வேறு சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்களைத் தோற்றுவித்தனர்.
- இதன் மூலம் இந்திய சமுதாயத்திலிருந்த குறைகளை களைய முற்பட்டனர்.
- இத்தகைய சூழலில் தோன்றிய சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் இந்தியாவின் மறுமலர்ச்சி இயக்கங்கள் என அழைக்கப்பட்டன.

3. இந்தியச் சமூகத்தின் புத்தெழுச்சிக்கு ராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகானந்தரும் ஆற்றிய தொண்டினைத் திறனாய்வு செய்க. **PTA**

ராமகிருஷ்ண பரமஹம்சர்:

- இராமகிருஷ்ண பரமஹம்சர் பஜனைப் பாடல்களை மனமுருகிப் பாடுவதைப் போன்ற வழிமுறைகள் மூலம் பேரின்ப நிலையை அடைந்து அந்நிலையில் ஆன்மரீதியாக கடவுளோடு ஒன்றிணைவதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்.
- அவர் கடவுளின் திருவிளையாடல்கள் முடிவற்றவை என அறிவித்தார்.
- அவருடைய கருத்தின்படி அனைத்து மதங்களும் உலகளாவிய, எல்லோருக்குமான மூலக்கூறுகளைக் கொண்டுள்ளன. அவற்றைப் பின்பற்றினால் அவை வீடுபேற்றிற்கு இட்டுச் செல்லும்.
- சேவையே தேவை; மனிதர்களுக்குச் செய்யப்படும் சேவையே கடவுளுக்குச் செய்யப்படும் சேவையாகும் என்றார்.
- இராமகிருஷ்ணருடைய முதன்மையான சாதனை பகுத்தறிவுக் கருத்துக்களின்பால் அதிருப்தியுற்றிருந்த கல்வியறிவு பெற்ற இளைஞர்களைத் தன்பால் ஈர்த்தது ஆகும்.

சுவாமி விவேகானந்தர்:

- சுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ணரின் கருத்துக்களால் கவரப்பட்டார்.
- அவர் நடைமுறை வேதாந்தமான மனிதகுலத்திற்கு தொண்டுசெய்தல் எனும் கோட்பாட்டினைப் பரிந்துரைத்தார்.
- பண்பாட்டுத் தேசியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த அவர் இந்து சமூகத்திற்குப் புத்துயிர் அளிக்க இந்திய இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தார்.
- அவருடைய சிந்தனைகள் மேலைநாடுகளின் சாதனைகளைக் கண்டு தாழ்வு மனப்பான்மை கொண்டிருந்த இந்தியர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டுவதாய் அமைந்தது.
- 1893 இல் சிகாகோவில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் இந்து சமயம் பற்றியும் பக்திமார்க்கத் தத்துவம் குறித்தும் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் அவருக்குப் பெரும்புகழ் தந்தது.

- விவேகானந்தரின் செயலாக்கமிக்க கருத்துகள் மேற்கத்திய கல்வி பயின்ற வங்காள இளைஞர்களிடையே அரசியல் மாற்றங்களுக்கான நாட்டத்தை ஏற்படுத்தியது.
- சுவாமி விவேகானந்தர் 'ராமகிருஷ்ணா மிஷன்' எனும் அமைப்பை உருவாக்கினார். இவ்வியக்கம் மக்களுக்குக் கல்வியறிவு வழங்குவது, மருத்துவ உதவி, இயற்கைச் சீற்றங்களின்போது நிவாரணப் பணிகளை மேற்கொள்வது போன்ற சமூகப்பணிகளிலும் செயலூக்கத்துடன் ஈடுபட்டுள்ளது.

4. பெண்களின் மேம்பாட்டிற்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

இராஜா ராம்மோகன்ராய்:

- சமூகத்தில் நிலவி வரும் உடன்கட்டை ஏறுதல் (சதி) குழந்தைத் திருமணம், பலதாரமணம் போன்ற பழக்கங்கள் குறித்து பெரிதும் கவலை கொண்டார். மேலும் அவற்றிற்கு எதிராகச் சட்டங்கள் இயற்றும்படி ஆங்கில அரசாங்கத்திற்கு விண்ணப்பித்தார்.
- விதவைப் பெண்கள் மறுமணம் செய்து கொள்ள உரிமையுடையவர்கள் எனும் கருத்தை முன் வைத்தார்.
- பலதார மணத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமென்றார்.
- உடன்கட்டை ஏறும் வழக்கத்தை எதிர்த்தார்.
- 1829 இல் தலைமை ஆளுநர் வில்லியம் பெண்டிங் 'சதி' எனும் உடன்கட்டையேறும் பழக்கத்தை ஒழித்துச் சட்டம் இயற்றியதில் ராஜா ராம்மோகன்ராய் முக்கியப் பங்குவகித்தார்.
- பெண்ணடிமைத் தனத்தைக் கண்டனம் செய்தார். மேலும் பெண்களுக்குக் கல்வி வழங்கப்பட வேண்டும் எனும் கருத்தை வலுவாக முன் வைத்தார்.

ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்: PTA

- வித்யாசாகர் விதவைப் பெண்களை எரிப்பதும் விதவை மறுமணத்தைத் தடைசெய்வதும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதற்கு மறை நூல்களிலிருந்தே சான்றுகளை முன்வைத்தார்.
- விளைவாக இவரது முயற்சியினால் 1856 இல் மறுமண சீர்திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது.
- பெண்கல்வியை மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றினார். அவர் பெண்களுக்கான பள்ளிகள் நிறுவப்பட உதவிகள் செய்தார்.

M.G ரானடே:

- ரானடே சாதிமறுப்புத் திருமணம், விதவை மறுமணம், பெண்களின் முன்னேற்றம் போன்ற நடவடிக்கைகளுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். மேலும் 1861 இல் விதவை மறுமணச் சங்கம் என்ற அமைப்பையும் நிறுவினார்.

சுவாமி தயானந்த சரஸ்வதி:

- குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவைகள் திருமணத்தை ஆதரித்தார்.

ஜோதிபா பூலே:

- பூலே குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவை மறுமணத்தைக் குறிப்பாக மறுமணம் மறுக்கப்பட்ட உயர் சாதி இந்துக்களின் மறுமணத்தை ஆதரித்தார்.
- ஜோதிபாவும் அவருடைய மனைவி சாவித்திரிபாயும் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தனர்.
- ஜோதிபா பெற்றோரில்லா குழந்தைகளுக்கென்று விடுதிகளையும், விதவைகளுக்கென காப்பகங்களையும் உருவாக்கினார்.

கூடுதல் வினாக்கள்

5. ஸ்ரீ நாராயண குரு பற்றி விவரி.

- 1854 இல் கேரளாவில் ஏழைப் பெற்றோருக்கு மகனாக ஸ்ரீநாராயணகுரு பிறந்தார்.
- அவர் மலையாளம், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் அறிஞராகவும் கவிஞராகவும் திகழ்ந்தார்.
- அந்நாட்களில் ஒடுக்கப்பட்ட மக்கள் கோவில்களுக்கும், உயர்சாதி மக்கள் வாழும் தெருக்களுக்கும் செல்ல முடியாது.
- பொது நீர் நிலைகளிலோ, கிணறுகளிலோ நீரெடுக்க முடியாது.
- ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் மேலாடையணிய அனுமதிக்கப்படவில்லை.
- இதுபோன்ற சாதிக்கொடுமைகளையும், ஒடுக்கப்பட்ட மக்கள் படும் துயரங்களையும் கண்டு மனம் வெதும்பிய நாராயணகுரு அம்மக்களின் மேம்பாட்டிற்காக தனது வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்தார்.
- அவர்களின் மேம்பாட்டிற்குப் பணியாற்றுவதற்காக 'ஸ்ரீநாராயண தர்ம பரிபாலன யோகம்' எனும் அமைப்பை உருவாக்கினார்.
- அருவிபுரம் எனும் ஊரில் ஒரு பெரிய கோவிலைக் கட்டிய அவர் அதை அனைவருக்கும் அர்ப்பணித்தார்.
- அவருடைய இயக்கம் கேரள சமூகத்தில் குறிப்பாக ஈழவர்களுக்கிடையில் பெரும் மாற்றங்கள் நிகழ உந்து சக்தியாய்த் திகழ்ந்தது.

6. அயோத்திதாசரின் சமுதாயத் தொண்டினை விவரி.

- பண்டிதர் அயோத்தி தாசர் ஒரு தீவிரத் தமிழ் அறிஞரும் சித்த மருத்துவரும் பத்திரிக்கையாளரும் சமூக அரசியல் செயல்பாட்டாளரும் ஆவார்.
- அவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பாலி ஆகிய மொழிகளில் புலமை பெற்று சரளமாகப் பேசக் கூடியவர்.
- உயர்சாதியினரின் ராஜ்ஜியமாக விளங்கிய இதழியலைத் தனது கருவியாகக் கொண்டு அவர் புதிய அறிவைப் பரப்பும் முறையை முன்னெடுத்தார்.
- சமூக நீதிக்காக இயக்கம் நடத்திய அவர், சாதியத்தின் கொடிய பிடியிலிருந்து ஒடுக்கப்பட்டோர் விடுதலைபெறப் பாடுபட்டார்.
- சாதிகளற்ற அடையாளத்தை நிறுவ முயன்ற அவர் சாதிய மேலாதிக்கத்திற்கும் தீண்டாமைக்கும் எதிராக கண்டனக்குரல் எழுப்பினார்.
- கல்வியை வலிமை பெறுவதற்கான கருவியாகக் கருதிய அவர் தமிழகத்தில் ஒடுக்கப்பட்டோருக்கென பல பள்ளிகள் உருவாக்கப்படுவதற்கு உந்து சக்தியாகத் திகழ்ந்தார்.
- ஒடுக்கப்பட்டோரின் கோயில் நுழைவுக்கு ஆதரவாகக் குரல் எழுப்புவதற்காக அயோத்திதாசர் 'அத்வைதானந்தா சபா' எனும் அமைப்பை நிறுவினார்.
- 1882 இல் 'திராவிடர் கழகம்' எனும் அமைப்பையும் 1885 இல் 'திராவிட பாண்டியன்' எனும் இதழையும் 1907 இல் 'ஒரு பைசா தமிழன்' எனும் வாராந்திர பத்திரிக்கையையும் தொடங்கினார்.
- அயோத்திதாசர் சாதியத்தைப் பரப்புரை செய்யவும் அதை நியாயப்படுத்தவும் அடித்தளமாக விளங்கிய இந்து தர்மத்தின்பால் மனக் கசப்புற்றார்.

காலக்கோடு (முக்கிய நிகழ்வுகள்)

1828 – பிரம்மசமாஜம் நிறுவப்பட்டது.

1829 – சதி எனும் உடன்கட்டையேறும் பழக்கம் ஒழிக்கப்பட்டது.

1833 – ராம்மோகன்ராய் இயற்கை எய்தினார்.

1852 – ஒடுக்கப்பட்டோருக்கான முதல் பள்ளி புனேயில் ஜோதிபா பூலேவால் திறக்கப்பட்டது.

1856 – விதவை மறுமணச் சட்டம் இயற்றப்பட்டது.

1860 – திருமண வயதுச் சட்டம் இயற்றப்பட்டது

1861 – விதவை மறுமணச் சங்கம் நிறுவப்பட்டது.

1866 – பிரம்மசமாஜத்தில் உறுப்பினர்களுக்கிடையே பிளவு.

1867 – இராமலிங்க அடிகளார் இலவச உணவகத்தை வடலூரில் நிறுவினார்.

1870 – 1. சத்யா ஞான சபா
2. புனே சர்வஜனிச் சபா

1875 – 1. ஆரிய சமாஜம் உருவானது.
2. பிரம்மஞான இயக்கம்
3. பெருங்கலகம்
4. அலிகார் இயக்கம்.

1882 – திராவிடர் கழகம் நிறுவப்பட்டது.

1884 – தக்காணக் கல்விக் கழகம் நிறுவப்பட்டது.

1893 – சுவாமி விவேகானந்தா உலக சமய மாநாட்டில் இந்து சமயம் பற்றி சொற்பொழிவு.

1897 – ராமகிருஷ்ணா மிஷன்

1907 – சாது ஜன பரிபாலன சங்கம்

1927 – மகத் பேரணி

ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள்

மனவரைபடம்

- ஆங்கிலேயருக்கு எதிரான மண்டல சக்திகளின் எதிர்ப்பு
- பாளையக்காரர்கள் (புரட்சி 1755 - 1801)
- வேலூர் புரட்சி 1806

பூலித்தேவர் (1755-1767)
- மருதநாயகம்
- ஒண்டிவீரன்

வேலுநாச்சியார் (1730-1796)
- குயிலி

வீரபாண்டியகட்டபொம்மன் (1790-1799)
- பாஞ்சாலங்குறிச்சி

மருது சகோதரர்கள் (1800-1801)
- 1801 ஆம் ஆண்டு பேரறிக்கை
- 1801 ஆம் ஆண்டு கர்நாடக உடன்படிக்கை

தீரன் சின்னமலை (1756-1805)

நினைவில் கொள்க

- "**பாளையம்**" என்ற சொல் ஒரு பகுதியையோ, ஒரு இராணுவ முகாமையோ அல்லது சிற்றரசையோ குறிப்பதாகும்.
- தமிழகத்தில் பாளையக்காரர் முறையை அறிமுகப்படுத்தியவர் **விஸ்வநாத நாயக்கர்** ஆவார்.
- தமிழ் நாட்டில் 72 பாளையங்களை உருவாக்கியவர்கள் **நாயக்க மன்னர்கள்.**
- ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போரிட பாளையக்காரர்களின் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தியவர் **பூலித்தேவர்**.
- பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரராக தனது முப்பதாவது வயதில் பொறுப்பேற்றவர் **வீரபாண்டிய கட்டபொம்மன்**.
- கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம் **கயத்தாறு**.
- காளையார்கோயில் போரில் முத்துவடுகநாதர் இறந்தபின் வேலுநாச்சியாருக்கு அரசுரிமையை மீட்டுக்கொடுக்க அரும்பாடுபட்டவர்கள் **மருது சகோதரர்கள்**.
- பிரிட்டிஷ் காலனியாதிக்க அதிகாரத்தை எதிர்த்த முதல் பெண் ஆட்சியாளர் **வேலுநாச்சியார்** ஆவார்.
- மருது சகோதரர்கள் ஜூன் 1801–இல் **திருச்சிராப்பள்ளி பேரறிக்கையை** வெளியிட்டனர்.
- மருது சகோதரர்களின் கலகம் "**தென்னிந்தியப் புரட்சி**" என்று அழைக்கப்படுகிறது.
- தீரன் சின்னமலையின் இயற்பெயர் **தீர்த்தகிரி** ஆகும்.
- திப்புவின் இறப்பிற்குப் பிறகு ஒரு கோட்டையை எழுப்பிய தீரன் சின்னமலை அவ்விடத்தை விட்டு வெளியேறாமல் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினார். அவ்விடம் "**ஓடாநிலை**" என்று அழைக்கப்படுகிறது.
- 1806ஆம் ஆண்டு **வேலூர் புரட்சி**, அந்நிய ஆட்சியை தூக்கி எறிவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.
- வேலூர் புரட்சிக்குக் காரணமான புதிய இராணுவ விதிமுறையை வெளியிட்டவர் **சர் ஜான் கிரடாக்**.
- புரட்சிக்காரர்களால் வேலூர் கோட்டையின் புதிய சுல்தானாக அறிவிக்கப்பட்டவர் **ஃபதே ஹைதர்**.
- 1857ஆம் ஆண்டு பெருங்கலகத்திற்கான அனைத்து முன் அறிகுறிகளையும், எச்சரிக்கைகளையும் **வேலூர் புரட்சி** கொண்டிருந்தது.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. கிழக்கிந்திய கம்பெனியின் நாடுபிடிக்கும் ஆசையை எதிர்த்து நின்ற முதல் பாளையக்காரர் யார்?
   அ) மருது சகோதரர்கள் ஆ) பூலித்தேவர்
   இ) வேலுநாச்சியார் ஈ) வீரபாண்டிய கட்டபொம்மன்

2. கர்நாடகப் போர்களில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட செலவினங்களுக்காக கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து கடனாக பணத்தை வாங்கியவர் யார்?
   அ) வேலுநாச்சியார் ஆ) பூலித்தேவர்
   இ) ஆற்காட்டு நவாப் ஈ) திருவிதாங்கூர் மன்னர்

3. சந்தா சாகிப்பின் மூன்று முகவர்களோடும் நெருங்கிய நட்பினை ஏற்படுத்திக் கொண்டவர் யார்?
   அ) வேலுநாச்சியார் ஆ) கட்டபொம்மன்
   இ) பூலித்தேவர் ஈ) ஊமைத்துரை

4. சிவசுப்ரமணியனார் எங்கு தூக்கிலிடப்பட்டார்?
அ) கயத்தாறு ஆ) நாகலாபுரம் இ) விருப்பாட்சி ஈ) பாஞ்சாலங்குறிச்சி

5. திருச்சிராப்பள்ளி சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டவர் யார்?
அ) மருது சகோதரர்கள் ஆ) பூலித்தேவர்
இ) வீரபாண்டிய கட்டபொம்மன் ஈ) கோபால நாயக்கர்

6. வேலூர் புரட்சி எப்போது வெடித்தது?
அ) 1805 மே 24 ஆ) 1805 ஜூலை 10 இ) 1806 ஜூலை 10 ஈ) 1806 செப்டம்பர் 10

7. வேலூர் கோட்டையில் புதிய இராணுவ விதிமுறைகளை அறிமுகப்படுத்த காரணமாயிருந்த தலைமை தளபதி யார்?
அ) கர்னல் பேன்கோர்ட் ஆ) மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங் இ) சர் ஜான் கிரடாக் ஈ) கர்னல் அக்னியூ

8. வேலூர் புரட்சிக்குப் பின் திப்பு சுல்தானின் மகன்கள் எங்கு அனுப்பப்பட்டார்கள்? **PTA**
அ) கல்கத்தா ஆ) மும்பை இ) டில்லி ஈ) மைசூர்

கூடுதல் வினாக்கள்

9. பூலித்தேவர் ஆட்சி புரிந்த இடம்
அ) மதுரை ஆ) நெற்கட்டும்செவல் இ) வாரங்கல் ஈ) சிவகிரி

10. நாயக்க மன்னர்களால் உருவாக்கப்பட்ட பாளையங்களின் எண்ணிக்கை
அ) 62 ஆ) 52 இ) 82 ஈ) 72

11. ஆற்காட்டு நவாபின் சகோதரர்
அ) மாபூஸ்கான் ஆ) மியானா இ) நபீகான் ஈ) சந்தா சாகிப்

12. ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போரிட பாளையக்காரர்களின் கூட்டமைப்பை ஏற்படுத்தியவர்
அ) கட்டபொம்மன் ஆ) சின்னமருது இ) பூலித்தேவர் ஈ) தீரன் சின்னமலை

13. மாபூஸ்கானின் படைகள் தோற்கடிக்கப்பட்ட போர்
அ) களக்காடு போர் ஆ) திண்டுக்கல் போர்
இ) ஓடாநிலை போர் ஈ) காளையார்கோயில் போர்

14. சின்ன மருதுவின் தலைமையிடம்
அ) திருப்பத்தூர் ஆ) சிவகிரி இ) வேலூர் ஈ) சிறுவயல்

15. பூலித்தேவர் நெற்கட்டும்செவலை மீண்டும் கைப்பற்றிய ஆண்டு
அ) 1776 ஆ) 1867 இ) 1786 ஈ) 1767

16. வேலுநாச்சியார் கோபாலநாயக்கரின் பாதுகாப்பில் எட்டு ஆண்டுகள் வாழ்ந்த இடம்
அ) மணப்பாறை ஆ) தேவதானம்பட்டி இ) விருப்பாட்சி ஈ) ஆனைமலை

17. பிரிட்டிஷ் காலனியாதிக்க அதிகாரத்தை எதிர்த்த முதல் பெண் ஆட்சியாளர்
அ) லட்சுமிபாய் ஆ) லெட்சுமி நாயக்கர் இ) குயிலி ஈ) வேலுநாச்சியார்

18. வேலுநாச்சியாரின் நம்பிக்கைக்குரிய தோழி
அ) குயிலி ஆ) உடையாள் இ) லெட்சுமி ஈ) வெள்ளச்சி நாச்சியார்

19. கட்டபொம்மன் ஜாக்சனைச் சந்தித்த இடம்
அ) பாஞ்சாலங்குறிச்சி ஆ) இராமநாதபுரம் இ) குற்றாலம் ஈ) ஸ்ரீவில்லிபுத்தூர்

20. கலெக்டர் ஜாக்சனை பணி இடைநீக்கம் செய்த ஆளுநர்
அ) இராபர்ட் கிளைவ் ஆ) லூஷிங்டன் இ) எட்வர்ட் கிளைவ் ஈ) வில்லியம் ப்ரௌன்

21. பாளையங்களை உள்ளடக்கிய தென்னிந்தியக் கூட்டமைப்பின் தலைவர்
அ) பூலித்தேவர் ஆ) தீரன் சின்னமலை இ) கட்டபொம்மன் ஈ) மருதுபாண்டியர்

22. திருச்சிராப்பள்ளி பேறிக்கை வெளியிடப்பட்ட ஆண்டு
அ) 1801 ஆ) 1802 இ) 1805 ஈ) 1806

23. மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்ட இடம்
அ) சங்ககிரி கோட்டை ஆ) திருப்பத்தூர் கோட்டை
இ) வேலூர் கோட்டை ஈ) பாஞ்சாலங்குறிச்சி கோட்டை

24. ஆங்கிலேயர்கள் தீரன் சின்னமலையையும் அவரது சகோதரர்களையும் கைதுசெய்து சிறைவைத்த இடம்
அ) சங்ககிரி ஆ) ஏலகிரி இ) சிவகிரி ஈ) நீலகிரி

25. வேலூர் புரட்சி நிகழ்ந்த ஆண்டு
அ) 1805 ஆ) 1806 இ) 1807 ஈ) 1808

விடைகள்

1. ஆ) பூலித்தேவர்	2. இ) ஆற்காட்டு நவாப்	3. இ) பூலித்தேவர்
4. ஆ) நாகலாபுரம்	5. அ) மருதுசகோதரர்கள்	6. இ) 1806 ஜூலை 10
7. இ) சர் ஜான் கிரடாக்	8. அ) கல்கத்தா	9. ஆ) நெற்கட்டும்செவல்
10. ஈ) 72	11. அ) மாபூஸ்கான்	12. இ) பூலித்தேவர்
13. அ) களக்காடு போர்	14. ஈ) சிறுவயல்	15. ஈ) 1767
16. இ) விருப்பாட்சி	17. ஈ) வேலுநாச்சியார்	18. அ) குயிலி
19. ஆ) இராமநாதபுரம்	20. இ) எட்வர்ட் கிளைவ்	21. ஈ) மருதுபாண்டியர்
22. அ) 1801	23. ஆ) திருப்பத்தூர் கோட்டை	
24. அ) சங்ககிரி	25. ஆ) 1806	

II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. பாளையக்காரர் முறை தமிழகத்தில் __________ என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
2. __________ பாளையக்காரரைத் தவிர மேற்குப்பகுதியில் வீற்றிருந்த பாளையக்காரர்கள் அனைவரும் பூலித்தேவரை ஆதரித்தனர்.
3. வேலுநாச்சியாரும் அவரது மகளும் எட்டாண்டுகளாக __________ பாதுகாப்பில் இருந்தனர்.
4. கட்டபொம்மனை சரணடையக் கோரும் தகவலை தெரிவிக்க பானெர்மென் __________ என்பவரை அனுப்பிவைத்தார்.
5. கட்டபொம்மன் __________ என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டார்.
6. மருது சகோதரர்களின் புரட்சி பிரிட்டிஷ் குறிப்புகளில் __________ என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.
7. __________ என்பவர் புரட்சிக்காரர்களால் வேலூர் கோட்டையின் புதிய சுல்தானாக அறிவிக்கப்பட்டார்.
8. வேலூர் கோட்டையில் புரட்சியை ஒடுக்கியவர் __________ ஆவார்.

கூடுதல் வினாக்கள்

9. பாளையக்காரர்களை, ஆங்கிலேயர்கள் __________ என்று குறிப்பிட்டனர்.
10. __________ என்பது இறையாண்மை கொண்ட ஒரு பேரரசுக்கு கப்பம் கட்டும் குறுநில அரசைக் குறிக்கிறது.
11. வாரங்கல்லை சார்ந்த __________ ஆட்சி காலத்தில் பாளையக்காரர் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.
12. ஆங்கிலேயர்கள் __________ மற்றும் __________ மன்னர்களின் ஆதரவினைப் பெற்று பூலித்தேவருக்கு எதிராகப் போரிட்டனர்.
13. யூசுப்கான் தூக்கிலிடப்பட்ட ஆண்டு __________ .
14. ஒண்டிவீரன் __________ ன் படைப்பிரிவு ஒன்றிற்கு தலைமையேற்றார்.
15. இராமநாதபுரத்தின் அரசர் __________ .
16. திண்டுக்கல் கூட்டமைப்பின் தலைவர் __________ .

17. வேலுநாச்சியார் __________ மற்றும் __________ இராணுவ உதவியோடு சிவகங்கையை மீண்டும் கைப்பற்றினார்.
18. வேலுநாச்சியார், அரசியாக முடிசூட்டிக் கொள்ள உதவியவர்கள் __________ .
19. குயிலி __________ என்ற பெண்களின் படைப்பிரிவிற்கு தலைமையேற்று வழிநடத்தினார்.
20. கட்டபொம்மனின் தந்தை __________ .
21. கட்டபொம்மனின் அமைச்சர் __________ .
22. மருது சகோதரர்களை கட்டபொம்மன் சந்திப்பதை தடுக்க முயன்ற ஆங்கில ஆட்சியர் __________ .
23. கட்டபொம்மன் தப்பிச் சென்ற இடம் __________ .
24. முத்துவடுகநாதரின் திறமையான படைத்தளபதிகள் __________ .
25. கட்டபொம்மனின் சகோதரர்கள் __________, __________.
26. திருச்சிராப்பள்ளி பேரறிக்கை __________ கோவிலின் சுற்றுச் சுவரில் ஒட்டப்பட்டது.
27. மருது சகோதரர்களின் கலகம் __________ என்று அழைக்கப்படுகிறது.
28. கர்நாடக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட ஆண்டு __________ .
29. தென்னிந்தியக் கூட்டமைப்பை ஏற்படுத்தியவர் __________ .
30. ஊமைத்துரையின் தலை துண்டிக்கப்பட்ட இடம் __________ .

விடைகள்

1. விஸ்வநாத நாயக்கர்
2. சிவகிரி
3. கோபால நாயக்கர்
4. இராமலிங்கர்
5. கயத்தார்
6. இரண்டாவது பாளையக்காரர் போர்
7. ஃபதே ஹைதர்
8. ஜில்லஸ்பி
9. போலிகார்
10. பாளையம்
11. பிரதாபருத்ரன்
12. இராமநாதபுரம், புதுக்கோட்டை
13. 1764
14. பூலித்தேவரின்
15. செல்லமுத்து சேதுபதி
16. கோபால நாயக்கர்
17. கோபால நாயக்கர், ஹைதர்அலி
18. மருது சகோதரர்கள்
19. உடையாள்
20. ஜெகவீரபாண்டிய கட்டபொம்மன்
21. சிவசுப்ரமணியன்
22. லூஷிங்டன்
23. புதுக்கோட்டை
24. மருது சகோதரர்கள்
25. ஊமைத்துரை, செவத்தையா
26. ஸ்ரீரங்கம்
27. தென்னிந்திய புரட்சி
28. 1801
29. மருதுபாண்டியர்
30. பாஞ்சாலங்குறிச்சி

III. சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

i)பாளையக்காரர் முறை காகத்தீயப் பேரரசின் நடைமுறையில் இருந்தது.
ii) கான் சாகிப்பின் இறப்பிற்குப் பின் பூலித்தேவர் நெற்கட்டும்செவலை 1764இல் மீண்டும் கைப்பற்றினார்.
iii) கம்பெனி நிர்வாகத்திற்கு தகவல் அளிக்காமல் பாளையக்காரர்களோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதால் யூசுப் கான் துரோகி என்று குற்றம் சுமத்தப்பட்டு 1764இல் தூக்கிலிடப்பட்டார்.
iv) ஒண்டிவீரன் கட்டபொம்மனின் படைப்பிரிவுகளில் ஒன்றைத் தலைமையேற்று வழிநடத்தினார். **PTA**

அ) (i), (ii) மற்றும் (iv) ஆகியவை சரி
ஆ) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை சரி
இ) (iii) மற்றும் (iv) மட்டும் சரி
ஈ) (i) மற்றும் (iv) மட்டும் சரி

31. i) கர்னல் கேம்ப்பெல் தலைமையின் கீழ் ஆங்கிலேயப் படைகள் மாபூஸ்கானின் படைகளோடு இணைந்து சென்றன. **PTA**

ii) காளையார்கோவில் போரில் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டப் பின் வேலுநாச்சியார் மீண்டும் அரியணையைப் பெறுவதற்கு மருது சகோதரர்கள் துணைபுரிந்தனர்.

iii) திண்டுக்கல் கூட்டமைப்புக்கு கோபால நாயக்கர் தலைமையேற்று வழி நடத்தினார்.

iv) காரன்வாலிஸ் மே 1799இல் கம்பெனிப் படைகளை திருநெல்வேலி நோக்கிச் செல்ல உத்தரவிட்டார்.

அ) (i) மற்றும் (ii) ஆகியவை சரி
ஆ) (ii) மற்றும் (iii) ஆகியவை சரி
இ) (ii), (iii) மற்றும் (iv) ஆகியவை சரி
ஈ) (i) மற்றும் (iv) ஆகியவை சரி

32. கூற்று : பூலித்தேவர், ஹைதர் அலி மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் உதவியைப் பெற முயன்றார்.
காரணம் : மராத்தியர்களோடு ஏற்கனவே தொடர் போர்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் ஹைதர் அலியால் பூலித்தேவருக்கு உதவ முடியாமல் போனது.

அ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி எனினும் காரணம், கூற்றைச் சரியாக விளக்கவில்லை.
ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டுமே தவறானவை.
இ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி .காரணம், கூற்றைச் சரியாக விளக்குகிறது.
ஈ) கூற்று தவறானது, காரணம் சரியானது.

33. கூற்று : புதிய இராணுவ நெறிமுறை மட்டுமல்லாமல் தலைப்பாகையில் வைக்கப்படும் தோலிலான இலட்சினையும் கடும் எதிர்ப்பை விளைவித்தது.
காரணம் : தோல் இலட்சினை விலங்குகளின் தோலில் செய்யப்பட்டது.

அ) கூற்று தவறானது காரணம் சரியானது.
ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி, காரணம் கூற்றைச் சரியாகவே விளக்குகிறது.
இ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டுமே தவறானவை.
ஈ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி எனினும் காரணம், கூற்றைச் சரியாக விளக்கவில்லை.

கூடுதல் வினாக்கள்

34. i) ஆற்காட்டு நவாப் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து கடன்பெற்றிருந்தார்.

ii) ஆற்காட்டு நவாபின் சகோதரர் மாபூஸ்கான்.

iii) மேற்குப் பகுதியிலிருந்த பாளையக்காரர்களிடம் பூலித்தேவர் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார்.

iv) விசாரணையின்போது தன்மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளையும் கட்டபொம்மன் மறுத்தார்.

அ) (i) மற்றும் (ii) ஆகியவை சரி
ஆ) (i) மற்றும் (iv) ஆகியவை சரி
இ) (ii) மற்றும் (iv) ஆகியவை சரி
ஈ) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை சரி

35. கூற்று : கர்நாடக உடன்படிக்கையின்படி பிரிட்டிஷார் நேரடியாக தமிழகத்தின் மீது தங்கள் கட்டுப்பாட்டை ஏற்படுத்தினர்.
காரணம் : பாளையக்காரர்கள் முறை முடிவுக்கு வந்ததுடன் அனைத்து கோட்டைகளும் இடிக்கப்பட்டு அவர்களது படைகளும் கலைக்கப்பட்டன.

அ) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டுமே தவறானவை.
ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி. காரணம், கூற்றைச் சரியாக விளக்குகிறது.
இ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி. எனினும் காரணம், கூற்றைச் சரியாக விளக்கவில்லை.
ஈ) கூற்று சரியானது, காரணம் தவறானது.

விடைகள்

1. ஆ) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை சரி
2. ஆ) (ii) மற்றும் (iii) ஆகியவை சரி
3. அ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி எனினும் காரணம், கூற்றைச் சரியாக விளக்கவில்லை.
4. ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி. காரணம், கூற்றைச் சரியாகவே விளக்குகிறது.
5. ஈ) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை சரி
6. இ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி. எனினும் காரணம் கூற்றைச் சரியாக விளக்கவில்லை.

IV. பொருத்துக:

பாடநூல் வினா

அ)

		விடை
1. தீர்த்தகிரி	அ) வேலூர் புரட்சி	1) உ
2. கோபால நாயக்கர்	ஆ) இராமலிங்கனார்	2) இ
3. பானெர்மென்	இ) திண்டுக்கல்	3) ஆ
4. சுபேதார் ஷேக் ஆதம்	ஈ) வேலூர் கோட்டை	4) அ
5. கர்னல் பேன்கோர்ட்	உ) ஓடாநிலை	5) ஈ

கூடுதல் வினாக்கள்

ஆ)

		விடை
1. ஒண்டிவீரன்	அ) ஹைதர் அலி	1) ஆ
2. குயிலி	ஆ) பூலித்தேவர்	2) ஈ
3. ஊமைத்துரை	இ) அமைச்சர்	3) உ
4. சிவசுப்ரமணியன்	ஈ) வேலுநாச்சியார்	4) இ
5. தாண்டவராயனார்	உ) கட்டபொம்மனின் சகோதரர்	5) அ

இ)

		விடை
1. கோபால நாயக்கர்	அ) மணப்பாறை	1) ஈ
2. லெட்சுமி நாயக்கர்	ஆ) ஆனைமலை	2) அ
3. பூஜை நாயக்கர்	இ) மதுரை	3) உ
4. யதுல் நாயக்கர்	ஈ) திண்டுக்கல்	4) ஆ
5. விஸ்வநாத நாயக்கர்	உ) தேவதானப்பட்டி	5) இ

ஈ)

		விடை
1. வேலூர் புரட்சி	அ) 1799	1) இ
2. கர்நாடக உடன்படிக்கை	ஆ) 1857	2) உ
3. பெருங்கலகம்	இ) 1806	3) ஆ
4. ஆங்கிலேய–மைசூர் போர்	ஈ) 1800	4) அ
5. இரண்டாம் பாளையக்காரர் போர்	உ) 1801	5) ஈ

V. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. பாளையக்காரர்களின் கடமைகள் யாவை?

- வரி வசூலிப்பது.
- நிலப்பகுதிகளை நிர்வகிப்பது.
- வழக்குகளை விசாரிப்பது.
- சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பது.
- காவல் காப்பது (படிக்காவல் மற்றும் அரசுக் காவல்).
- நாயக்க ஆட்சியாளர்கள் தங்கள் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள உதவுதல்.

2. கிழக்கு மற்றும் மேற்கில் அமையப்பெற்ற பாளையங்களைக் கண்டறிந்து எழுதுக. **PTA**

கிழக்கில் அமையப்பெற்ற பாளையங்கள்:
சாத்தூர், நாகலாபுரம், எட்டையபுரம் மற்றும் பாஞ்சாலங்குறிச்சி.

மேற்கில் அமையப்பெற்ற பாளையங்கள்:

ஊத்துமலை, தலைவன்கோட்டை, நடுவக்குறிச்சி, சிங்கம்பட்டி மற்றும் சேத்தூர்.

3. ஹெரான் ஏன் நிரந்தரப் பணிநீக்கம் செய்யப்பட்டார்?

- தொடர்ந்து கம்பெனிக்குக் கீழ்ப்படிய மறுத்து வந்த பூலித்தேவரை அடக்க கர்னல் ஹெரான் பணிக்கப்பட்டார்.
- மேற்குப் பகுதியில் இருந்த பாளையக்காரர்களிடம் பூலித்தேவர் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார்.
- பீரங்கிகளின் தேவையும் துணைக்கலப் பொருட்கள் மற்றும் படைவீரர்களின் ஊதியம் உள்ளிட்ட காரணங்களினால் ஹெரான் தனது திட்டத்தைக் கைவிட்டு மதுரைக்குத் திரும்பினார்.
- எனவே கம்பெனி நிர்வாகம் அவரைத் திரும்ப அழைத்ததோடு நிரந்தரப் பணிநீக்கம் செய்தும் உத்தரவிட்டது.

4. களக்காடு போரின் முக்கியத்துவம் யாது?

- ஆற்காட்டு நவாப் கூடுதல் படைகளை மாபூஸ்கானுக்கு அனுப்பி திருநெல்வேலிக்குச் செல்லும் படையை பலப்படுத்தினார்.
- கம்பெனியின் 1000 சிப்பாய்களோடு நவாபால் அனுப்பப்பட்ட 600க்கும் மேற்பட்ட படைவீரர்களையும் மாபூஸ்கான் பெற்றார்.
- மேலும் கர்நாடகப் பகுதியிலிருந்து குதிரைப்படை மற்றும் காலாட்படையின் ஆதரவும் மாபூஸ்கானுக்கு இருந்தது.
- மாபூஸ்கான் களக்காடு பகுதியில் தனது படைகளை நிலைநிறுத்தும் முன்பாக திருவிதாங்கூரின் 2000 வீரர்கள் பூலித்தேவரின் படைகளோடு இணைந்தனர்.
- களக்காட்டில் நடைபெற்ற போரில் மாபூஸ்கானின் படைகள் தோற்கடிக்கப்பட்டன.

5. கம்பெனியாருக்கும் கட்டபொம்மனுக்கும் இடையே சர்ச்சை ஏற்படக் காரணமாக விளங்கியது எது?

- பாஞ்சாலங்குறிச்சியிடமிருந்து வரி வசூலிக்கும் உரிமையை கம்பெனி பெற்றிருந்தது.
- அனைத்துப் பாளையங்களிலிருந்தும் வரிகளை வசூலிக்க கம்பெனி அதன் ஆட்சியர்களை நியமித்தது.
- ஆட்சியர்கள் பாளையக்காரர்களை அவமானப் படுத்தியதோடு வரிகளை வசூலிக்க படையினைப் பயன்படுத்தினர்.
- இதுவே கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே பெரும் பகை ஏற்பட அடிப்படையானது.

6. திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின் (1801) முக்கியக் கூறுகளைத் தருக.

- மருது சகோதரர்கள் ஜூன் 1801 இல் நாட்டின் விடுதலையை முன்னிறுத்திய ஒரு பிரகடனத்தை வெளியிட்டனர். இதுவே "திருச்சிராப்பள்ளி பேரறிக்கை" என்று அழைக்கப்படுகிறது.
- பிரிட்டிஷாருக்கு எதிராக மண்டல, சாதி, சமய, இன வேறுபாடுகளைக் கடந்து நிற்பதற்காக முதலில் விடுக்கப்பட்ட அறைகூவலே இப்பேறிக்கை ஆகும்.
- இப்பேறிக்கை திருச்சியில் அமையப்பெற்ற நவாபின் கோட்டையின் முன் சுவரிலும், ஸ்ரீரங்கம் கோவிலின் சுற்றுச் சுவரிலும் ஒட்டப்பட்டது.
- ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்பட விழைந்த தமிழக பாளையக்காரர்கள் பலரும் ஒன்று திரண்டனர்.
- சின்ன மருது ஏறத்தாழ 20,000 ஆட்களை ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் திரட்டினார்.
- வங்காளம், சிலோன், மலேயா ஆகிய இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் படைகள் விரைந்து வந்தன.
- புதுக்கோட்டை, எட்டையபுரம் மற்றும் தஞ்சாவூரின் அரசர்கள் பிரிட்டிஷாருடன் கைகோர்த்தார்கள்.
- ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை என்ற உத்தி விரைவில் பாளையக்காரர்களின் படைகளில் பிரிவினையை ஏற்படுத்தியது.

7. 1801 ஆம் ஆண்டு கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை விளக்குக. **PTA**

- 1801 ஜூலை 31 இல் ஏற்பட்ட கர்நாடக உடன்படிக்கையின் விதிகளின்படி, பிரிட்டிஷார் நேரடியாக தமிழகத்தின்மீது தங்கள் கட்டுப்பாட்டை ஏற்படுத்தினர்.
- அதனால் பாளையக்காரர்கள் முறை முடிவுக்கு வந்தது. அனைத்து கோட்டைகளும் இடிக்கப்பட்டு அவர்களது படைகளும் கலைக்கப்பட்டன.

கூடுதல் வினாக்கள்

8. ஆங்கிலேயர்களை தமிழகத்தில் எதிர்த்த பாளையக்காரர்கள் யாவர்?

- பூலித்தேவர்
- வேலுநாச்சியார்
- வீரபாண்டிய கட்டபொம்மன்
- மருது சகோதரர்கள்
- தீரன் சின்னமலை

9. "பாளையம்" என்றால் என்ன?

- பாளையம் என்ற சொல் ஒரு பகுதியையோ, ஒரு இராணுவ முகாமையோ அல்லது ஒரு சிற்றரசையோ குறிப்பதாகும்.
- பாளையக்காரர்கள் என்ற தமிழ்ச்சொல் இறையாண்மை கொண்ட ஒரு பேரரசுக்குக் கப்பம் கட்டும் குறுநில அரசைக் குறிக்கிறது.

10. நவாப் சந்தாசாகிப்பின் முகவர்களாகச் செயல்பட்டவர்கள் யாவர்?

- மியானா, முடிமையா, நபீகான் கட்டாக் எனும் மூன்று பத்தாணிய அதிகாரிகள் மதுரை மற்றும் திருநெல்வேலி பகுதிகளில் நவாப் சந்தாசாகிப்பின் முகவர்களாகச் செயல்பட்டு வந்தனர்.

11. பூலித்தேவரின் முக்கியக் கோட்டைகள் யாவை?

- நெற்கட்டும் செவல்
- வாசுதேவநல்லூர்
- பனையூர்

12. வேலுநாச்சியாரின் திறமைகளைக் குறிப்பிடுக.

- வேலுநாச்சியார் வளரி, சிலம்பம் போன்ற தற்காப்புகலைகளிலும், போர்க் கருவிகளைக் கையாளுவதற்கும் பயிற்சி பெற்றிருந்தார்.
- ஆங்கிலம், பிரெஞ்சு, உருது போன்ற மொழிகளில் அவர் வல்லமை பெற்றிருந்தார்.
- அவர் குதிரையேற்றத்திலும், வில்வித்தையிலும் திறமையானவராக விளங்கினார்.

13. கோபால நாயக்கர் பற்றி குறிப்பு வரைக.

- கோபால நாயக்கர் திண்டுக்கல் கூட்டமைப்பின் தலைவராக விளங்கினார்.
- இவ்வமைப்பில் மணப்பாறையின் லெட்சுமி நாயக்கரும், தேவதானம்பட்டியின் பூஜை நாயக்கரும் இடம் பெற்றிருந்தனர்.
- தனது நட்பை வெளிப்படுத்தும் விதமாக ஒரு நல்லுறவுக் குழுவை அனுப்பிவைத்த திப்பு சுல்தானால் கோபால நாயக்கர் ஈர்க்கப்பட்டார்.
- கோயம்புத்தூரை மையமாகக் கொண்டு பிரிட்டிஷாரை எதிர்த்த அவர், பின்னாட்களில் கட்டபொம்மனின் சகோதரரான ஊமைத் துரையோடு இணைந்தார்.
- உள்ளூர் விவசாயிகளின் ஆதரவுடன் ஆனை மலையில் கடும் போர் புரிந்தார்.
- தனது மகளோடு தப்பிவந்த வேலுநாச்சியாருக்கு பாதுகாப்பு வழங்கினார்.
- வேலுநாச்சியார் மீண்டும் சிவகங்கையைக் கைப்பற்றிட இராணுவ உதவியளித்தார்.

14. குயிலி பற்றி கூறுக.

- வேலுநாச்சியாரின் நம்பிக்கைக்குரிய தோழியாகத் திகழ்ந்தவர் குயிலி ஆவார்.
- இவர் உடையாள் என்ற பெண்களின் படைப்பிரிவைத் தலைமையேற்று வழி நடத்தினார்.
- உடையாள் என்பது குயிலி பற்றி உளவு கூறமறுத்ததால் கொல்லப்பட்ட மேய்த்தல் தொழில் புரிந்த பெண்ணின் பெயராகும்.
- குயிலி தனக்குத்தானே நெருப்பு வைத்துக் கொண்டு அப்படியே சென்று பிரிட்டிஷாரின் ஆயுதக்கிடங்கிலிருந்த அனைத்துத் தளவாடங்களையும் அழித்தார்.

15. **1801இல் ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றி கூறுக.**

1801இல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, ஆற்காட்டு நவாப் வட ஆற்காடு, தென்ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களை அவற்றை நிர்வகிக்கும் அதிகாரத்தோடு ஒப்படைத்துவிட வேண்டும் என்பதாகும்.

16. **ஒண்டி வீரன் பற்றி உமக்கு யாது தெரியும்?**

- ஒண்டிவீரன் பூலித்தேவரின் படைப் பிரிவுகளில் ஒன்றிற்குத் தலைமையேற்றிருந்தார்.
- பூலித்தேவரோடு சேர்ந்து கம்பெனிப் படைகளுக்கு பெரும் சேதங்களை ஏற்படுத்தினார்.
- செவி வழிச் செய்தியின் படி ஒரு போரில் அவரது கை துண்டிக்கப்பட்டதாகவும் அதற்காக பூலித்தேவர் பெரிதும் மனம் வருந்தியதாகவும் தெரிகிறது.
- ஆனால் ஒண்டி வீரன், எதிரியின் கோட்டையில் தான் நுழைந்து பல தலைகளைக் கொய்தமைக்காகத் தனக்குக் கிடைத்த பரிசு என்று கூறியுள்ளார்.

VI. ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. **வேலுநாச்சியார்**

அ) வேலுநாச்சியாரின் இராணுவ தளபதி யார்?

வேலுநாச்சியாரின் இராணுவ தளபதி (துளவாய்) தாண்டவராயனார் ஆவார்.

ஆ) அவர் தேர்ச்சி பெற்றிருந்த தற்காப்புக் கலைகள் எவை?

- வளரி
- சிலம்பம்

இ) அவர் யாரை மணமுடித்தார்?

சிவகங்கை மன்னரான முத்துவடுகநாதரை வேலுநாச்சியார் மணமுடித்தார்.

ஈ) அவரது மகளின் பெயர் என்ன?

வேலுநாச்சியாரின் மகள் வெள்ளச்சி நாச்சியார்.

2. **தீரன் சின்னமலை**

அ) தீரன் சின்னமலை எப்போது பிறந்தார்?

தீரன் சின்னமலை 1756ஆம் ஆண்டு பிறந்தார்.

ஆ) "சின்னமலை" என்ற பட்டப்பெயரை அவர் எவ்வாறு பெற்றார்?

- திப்புவின் திவான் முகம்மது அலி, வசூலிக்கப்பட்ட வரிப்பணத்தோடு மைசூருக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது, தீர்த்தகிரி அவரை வழிமறித்து வரிப்பணம் முழுவதையும் பறித்துக் கொண்டார்.
- இவர் முகம்மது அலியிடம் சிவமலைக்கும், சென்னிமலைக்கும் இடையே இருந்த "சின்னமலையே" வரிப்பணத்தைப் பிடுங்கிக் கொண்டதாக சுல்தானுக்குப் போய்ச் சொல் என்று அறிவுறுத்தினார்.
- அதன் பிறகே "தீரன் சின்னமலை" என்று அவர் அழைக்கப்படலானார்.

இ) திப்பு சுல்தானின் திவானின் பெயர் யாது?

திப்பு சுல்தானின் திவானின் பெயர் முகம்மது அலி என்பதாகும்.

ஈ) அவர் எங்கு, ஏன் தூக்கிலிடப்பட்டார்?

- தீரன் சின்னமலை, ஆங்கிலேய ஆட்சியை ஏற்க வற்புறுத்தப்பட்டபோது, அவரும் அவரது சகோதரர்களும் அதற்கு இணங்க மறுத்தனர்.
- அதனால் 1805 ஜூலை 31 அன்று சங்ககிரி கோட்டையின் உச்சியில் அவர் தூக்கிலிடப்பட்டார்.

கூடுதல் வினாக்கள்

3. **வீரபாண்டிய கட்டபொம்மன்:**

அ) வீரபாண்டிய கட்டபொம்மனின் தந்தையார் பெயர் என்ன?
ஜெகவீரபாண்டிய கட்டபொம்மன்.

ஆ) அவர் எந்த வயதில் பாளையக்காரராகப் பொறுப்பேற்றார்?
முப்பதாவது வயதில்.

இ) இவரை அமைதியை விரும்பும் மனம் கொண்டவராக கருதியவர்கள் யாவர்?
ஜேம்ஸ் லண்டன் மற்றும் காலின் ஜாக்சன்.

ஈ) கட்டபொம்மனின் சகோதரர்கள் யாவர்?
ஊமைத்துரை மற்றும் செவத்தையா.

4. **மருது சகோதரர்கள்:**

அ) மருது சகோதரர்கள் யாவர்?
சிவகங்கையின் ஆட்சியாளர்கள் முத்துவடுக நாதரின் தளபதிகள்.

ஆ) யாருடைய அரசுரிமையை மீட்டுக் கொடுக்க இவர்கள் அரும்பாடுபட்டனர்?
வேலுநாச்சியாருடைய அரசுரிமையை மீட்டுக் கொடுக்க இவர்கள் அரும்பாடுபட்டனர்.

இ) திருச்சிராப்பள்ளி பேரறிக்கை எந்த ஆண்டு வெளியிடப்பட்டது?
1801ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

ஈ) பாளையக்காரர்களின் படைகளில் பிரிவினையை ஏற்படுத்தியது எது?
ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை.

VII. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. **கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.**

வீரபாண்டிய கட்டபொம்மன்:

- தனது தந்தையாரான ஜெகவீரபாண்டிய கட்டபொம்மனின் இறப்பிற்குப் பின் பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரராக தனது முப்பதாவது வயதில் கட்டபொம்மன் பொறுப்பேற்றார்.

பெரும் பகை:

- பாஞ்சாலங்குறிச்சியிடமிருந்து வரிவசூலிக்கும் உரிமையை கம்பெனி பெற்றிருந்தது.
- அனைத்து பாளையங்களிலிருந்தும் வரிகளை வசூலிக்க கம்பெனி அதன் ஆட்சியர்களை நியமித்தது.
- ஆட்சியர்கள் பாளையக்காரர்களை அவமானப்படுத்தியதோடு வரிகளை வசூலிக்க படையினைப் பயன்படுத்தினர்.
- இதுவே கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே பெரும் பகை ஏற்பட அடிப்படையானது.

ஜாக்சனோடு ஏற்பட்ட மோதல்:

- கட்டபொம்மனிடமிருந்து வசூலிக்க வேண்டிய நிலவரி நிலுவை 3310 பகோடாக்களாக இருந்தது.
- இவற்றை வசூலிக்க ஜாக்சன் இராணுவத்தை அனுப்ப முனைந்தபோது மதராஸ் அரசாங்கம் அதற்கு அனுமதியளிக்க மறுத்தது.
- 1798 ஆகஸ்ட் 18இல் இராமநாதபுரத்தில் வந்து தன்னைச் சந்திக்குமாறு ஜாக்சன் கட்டபொம்மனுக்கு ஆணை பிறப்பித்தார்.

- 1798 செப்டம்பர் 19இல் கட்டபொம்மன் இராமநாதபுரத்தில் ஜாக்சனைச் சந்தித்தார். அவர் ஜாக்சனின் முன்பு மூன்று மணி நேரம் நிற்க வைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.
- ஆபத்தை உணர்ந்த கட்டபொம்மன் ஊமைத்துரை உதவியுடன் தப்பிச் சென்றார். கட்டபொம்மனின் அமைச்சர் சிவசுப்ரமணியனார் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.
- 1798 டிசம்பர் 15 அன்று கட்டபொம்மன் மதராஸ் ஆட்சிக்குழுவின் முன்பாக ஆஜராகி இராமநாதபுரத்தில் நிகழ்ந்தவற்றை விளக்கினார்.
- அக்குழு கட்டபொம்மன் குற்றவாளி அல்ல என்று முடிவு செய்தது. ஜாக்சன் நிரந்தரப் பணி நீக்கம் செய்யப்பட்டார்.
- கட்டபொம்மன் நிலுவைத் தொகையில் 1080 பகோடாக்கள் நீங்கலாக பிற நிலுவைத் தொகையினைச் செலுத்தினார்.

கட்டபொம்மனும் பாளையக்காரர்களின் கூட்டமைப்பும்:

- சிவகங்கையில் மருதுபாண்டியர் ஏற்படுத்திய தென்னிந்தியக் கூட்டமைப்பு கட்டபொம்மனின் ஆர்வத்தைத் தூண்டியது.
- மருது சகோதரர்களும், கட்டபொம்மனும் இணைந்து ஆங்கிலேயரை எதிர்ப்பது என்று முடிவெடுத்தார்கள்.
- கட்டபொம்மன் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி சிவகிரி பாளையக்காரரைத் தங்களோடு இணைக்க முயன்றார். அவர் அதற்கு மறுத்ததால் சிவகிரியை நோக்கி கட்டபொம்மன் முன்னேறினார்.
- கட்டபொம்மனின் சிவகிரி நோக்கிய படை நகர்வை தங்களுக்கு விடப்பட்ட சவாலாகவே கம்பெனியார் கருதினர்.

பாஞ்சாலங்குறிச்சி முற்றுகை:

- 1799இல் வெல்லஸ்லி பிரபு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் மதுரை பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படைகளை திருநெல்வேலி நோக்கிச் செல்ல உத்தரவிட்டார்.
- கட்டபொம்மனை சரணடையக் கோரிய நிபந்தனையொன்று 1799 செப்டம்பர் 1 அன்று வழங்கப்பட்டது.
- கட்டபொம்மனின் பிடிகொடுக்காத பதிலால் பானெர்மென் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை தாக்கினார். மேலும் செப்டம்பர் 5 அன்று முழுபடையையும் பாஞ்சாலங்குறிச்சியில் கொண்டுவந்து நிறுத்தினார்,
- அவர்கள் கோட்டையின் அனைத்துத் தொடர்புகளையும் துண்டித்தனர். பானெர்மென் இராமலிங்கரை தூதனுப்பி கட்டபொம்மனை சரணடையுமாறு கேட்டுக்கொண்டார். கட்டபொம்மன் மறுத்தார்.
- கோட்டையின் இரகசியங்கள் அனைத்தையும் இராமலிங்கர் சேகரித்தார். அவரது அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பானெர்மென் தாக்குதல் உத்திகளை வடிவமைத்தார்.

கட்டபொம்மன் தூக்கிலிடப்படல்:

- கட்டபொம்மன் புதுக்கோட்டைக்கு தப்பிச்சென்றார். எட்டையபுரம் மற்றும் புதுக்கோட்டை அரசர்களால் துரோகமிழைக்கப்பட்ட கட்டபொம்மன் இறுதியில் பிடிபட்டார்.
- பானெர்மென் விசாரணயின்போது கட்டபொம்மன் தன்மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளையும் ஏற்றுக் கொண்டார்.
- திருநெல்வேலிக்கு மிக அருகேயுள்ள கயத்தாறின் பழைய கோட்டைக்கு முன்பாக இருந்த புளியமரத்தில் சக பாளையக்காரர்களின் முன்னிலையில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்,

2. **சிவகங்கையின் துன்பகரமான வீழ்ச்சிக்குக் காரணமானவற்றை ஆய்ந்து அதன் விளைவுகளை எடுத்தியம்புக.**

சிவகங்கையின் வீழ்ச்சிக்கான காரணங்கள்:

- கட்டபொம்மனின் சகோதரர்களான ஊமைத்துரையும், செவத்தையாவும் பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து தப்பி கமுதியில் பதுங்கியிருப்பதை அறிந்த சின்ன மருது அவர்களைத் தமது தலைமையிடமான சிறுவயலுக்கு அழைத்துச் சென்றார்.
- காலின் மெக்காலே தலைமையிலான பிரிட்டிஷ் படைகள் மீண்டும் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை முற்றுகையிட்டதால் கட்டபொம்மனின் சகோதரர்கள், மருது சகோதரர்களிடம் சிவகங்கையில் அடைக்கலம் கோரினர்.
- தப்பியோடியவர்களை ஒப்படைக்கும்படி மருது சகோதரர்கள் பிரிட்டிஷாரால் வலியுறுத்தப்பட்டனர். ஆனால் அவர்கள் மறுத்து விட்டார்கள்.
- இதனால் கர்னல் அக்னியூவும், கர்னல் இன்னஸும் சிவகங்கையை நோக்கி படைநடத்திச் சென்றனர்.
- மருது சகோதரர்கள் 1801இல் நாட்டின் விடுதலையை முன்னிறுத்தி "திருச்சிராப்பள்ளி பேரறிக்கையை" வெளியிட்டனர்.
- ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்பட விழைந்த தமிழகப் பாளையக்காரர்கள் பலரும் ஒன்று திரண்டனர்.
- சின்ன மருது ஏறத்தாழ 20,000 ஆட்களை ஆங்கிலேயருக்கு எதிராகத் திரட்டினார்.
- வங்காளம், சிலோன், மலேயா ஆகிய இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் படைகள் விரைந்து வந்தன.
- புதுக்கோட்டை, எட்டையபுரம் மற்றும் தஞ்சாவூரின் அரசர்கள் பிரிட்டிஷாருடன் கைகோர்த்தார்கள்.
- ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை என்ற உத்தி விரைவில் பாளையக்காரர்களின் படைகளில் பிரிவினையை ஏற்படுத்தியது.

சிவகங்கையின் வீழ்ச்சி:

- ஆங்கிலேயர்கள் மே 1801இல் தஞ்சாவூரிலும் திருச்சியிலும் இருந்த கலகக்காரர்களைத் தாக்கினார்கள்.
- கலகக்காரர்கள் பிரான்மலையிலும், காளையார் கோவிலிலும் தஞ்சம் புகுந்தனர்.
- இறுதியாக வலுவான இராணுவமும், சிறப்பான தலைமைத்துவமும் கொண்ட ஆங்கிலேய கம்பெனி விஞ்சி நின்றது.
- கலகம் தோற்றதால் 1801இல் சிவகங்கை இணைக்கப்பட்டது.

விளைவுகள்:

- இராமநாதபுரத்தின் அருகே அமைந்த திருப்பத்தூர் கோட்டையில் 1801 அக்டோபர் 24ல் மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டனர்.
- ஊமைத்துரையும், செவத்தையாவும் பிடிக்கப்பட்டு 1801 நவம்பர் 16ல் பாஞ்சாலங்குறிச்சியில் தலை துண்டிக்கப்பட்டனர்.
- கலகக்காரர்களில் 73 பேர் பிடிக்கப்பட்டு மலேயாவின் பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்டார்கள்.
- பாளையக்காரர்களின் கலகம் அடக்கப்பட்டது.
- 1801 ஜூலை 31 ல் ஏற்பட்ட கர்நாடக உடன்படிக்கையின்படி பிரிட்டிஷார் தமிழகத்தின் மீது நேரடிக்கட்டுப்பாட்டை ஏற்படுத்தினர்.
- பாளையக்காரர் முறை முடிவுக்கு வந்தது.
- அனைத்துக் கோட்டைகளும் இடிக்கப்பட்டு அவர்களது படைகள் கலைக்கப்பட்டன.

3. வேலூரில் 1806இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக. **PTA**

புரட்சிக்கான காரணங்கள்.

இந்திய வீரர்களின் மனக்குறை:

- பிரிட்டிஷாரின் இராணுவத்தில் சிப்பாயாகப் பணியாற்றிய இந்தியர்களுக்கு குறைவான ஊதியமே வழங்கப்பட்டது.
- பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் குறைவாகவே இருப்பதும், தங்களின் சமூக மற்றும் சமய நம்பிக்கைகளுக்கு ஆங்கிலேய அதிகாரிகள் குறைவான மதிப்பளித்ததும் இந்திய வீரர்களின் கோபத்தை வலுப்படுத்தியது.
- விவசாய பின்னணி கொண்ட வீரர்களின் வேளாண் சிக்கலும் அவர்களை மேலும் சிரமப்படுத்தியது.
- நிலக்குத்தகை முறையில் ஒரு நிலையற்ற தன்மை காணப்பட்டதாலும், 1805 இல் பஞ்சம் ஏற்பட்டதாலும் பல சிப்பாய்களின் குடும்பங்கள் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தன.
- திப்புவின் மகன்களும் அவர்தம் குடும்பத்தினரும் வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்ட வேளையில் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தும் வாய்ப்பு கூடிவந்தது.

புதிய இராணுவ விதிமுறை:

- சர் ஜான் கிரடாக் வெளியிட்ட புதிய இராணுவ விதிமுறைகளின்படி, இந்திய வீரர்கள் சீருடையிலிருக்கும்போது சாதி அடையாளங்களையோ, காதணிகளையோ அணியக்கூடாது என கேட்டுக் கொள்ளப்பட்டனர்.
- அவர்கள் தாடியை முழுமையாகச் சவரம் செய்யவும் மீசையை ஒரே பாணியில் வைத்துக் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டனர்.
- விலங்கு தோலினால் ஆன இலச்சினையை கொண்ட புதிய தலைப்பாகையை அணிந்திட வற்புறுத்தப்பட்டனர்.
- புதிய தலைப்பாகையை அணிவதில் தங்களுக்கு உடன்பாடில்லை என்பதை இந்திய சிப்பாய்கள் போதுமான முன்னெச்சரிக்கை விடுத்தனர். ஆனால் கம்பெனி நிர்வாகம் அதனை கவனத்தில் கொள்ளவில்லை.

புரட்சி வெடித்தல்:

- 1806 ஜூலை 10 அன்று அதிகாலையிலேயே இந்திய சிப்பாய்கள் புரட்சியில் இறங்கினர்.
- கோட்டைக் காவற்படையின் உயர்பொறுப்பு வகித்த பேன்கோர்ட் என்பவர் முதல் பலியானார்.
- அடுத்ததாக இருபத்திமூன்றாம் படைப்பிரிவைச் சேர்ந்த கர்னல் மீக்காரஸ் கொல்லப்பட்டார்.
- கோட்டையைக் கடந்து சென்று கொண்டிருந்த மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங் சூழலை விசாரித்தறிய முற்பட்டபோது அவரது உடல் தோட்டாக்களால் துளைக்கப்பட்டது.
- ஏறத்தாழ பனிரெண்டுக்கும் அதிகமான அதிகாரிகள் அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் கொல்லப்பட்டார்கள்.

ஜில்லஸ்பியின் கொடுங்கோன்மை:

- கேப்டன் யங்கின் தலைமையிலான குதிரைப் படைப்பிரிவுடன் காலை 9 மணியளவில் கர்னல் ஜில்லஸ்பி கோட்டையை வந்தடைந்தார்.
- இதற்கிடையில் புரட்சிக்காரர்கள் திப்புவின் மூத்த மகனான ஃபதே ஹைதரை புதிய மன்னராக பேரறிக்கை செய்து மைசூர் சுல்தானின் புலிக் கொடியை கோட்டையில் ஏற்றியிருந்தனர்.
- போர் விதிமுறைகள் எதையும் பொருட்படுத்தாத ஜில்லஸ்பி வீரர்களின் புரட்சியை வன்மையாக ஒடுக்கினார்.
- கோட்டையில் மட்டும் எண்ணூறு வீரர்கள் பிணமாகக் கிடந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளியிலும், வேலூரிலும் அறுநூறு வீரர்கள் விசாரணையை எதிர்நோக்கி சிறையிலடைக்கப் பட்டனர்.

புரட்சியின் பின்விளைவுகள்:

- திப்புவின் மகன்களை கல்கத்தாவுக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது.
- புதிய இராணுவ விதிமுறைகள் திரும்பப் பெறப்பட்டன.

கூடுதல் வினா

4. **வேலுநாச்சியார் பிரிட்டிஷ் காலனியாதிக்க அதிகாரத்தை எதிர்த்த விதத்தினை விவரி.**

- முத்துவடுகநாதர் காளையார்கோயில் போரில் கொல்லப்பட்ட பின், வேலுநாச்சியார் தனது மகளோடு தப்பிச் சென்று கோபால நாயக்கரின் பாதுகாப்பில் திண்டுக்கல் அருகே உள்ள விருப்பாட்சியில் எட்டு ஆண்டுகள் வாழ்ந்தார்.
- மறைந்து வாழ்ந்த காலத்தில் வேலுநாச்சியார் ஒரு படைப்பிரிவை உருவாக்கியதோடு கோபால நாயக்கர் மற்றும் ஹைதர் அலியோடு ஒரு கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டார்.
- வேலுநாச்சியாரின் சார்பில் ஹைதர்அலிக்கு தளவாய் தாண்டவராயனார் எழுதிய கடிதத்தில் ஆங்கிலேயரைத் தோற்கடிக்கும் பொருட்டு 5000 காலாட்படைகளும் 5000 குதிரைப் படைகளும் அனுப்பும்படி அவரிடம் கோரினார்.
- வேலுநாச்சியார் உருது மொழியில் தனக்கு கிழக்கிந்திய கம்பெனியோடு இருந்த பிணக்குகளை கடிதத்தில் விவரித்திருந்தார்.
- மேலும் தான் ஆங்கிலேயரோடு மோதுவதில் தீவிரமாக இருப்பதைத் தெளிவுபடுத்தியிருந்தார்.
- அவரது மன உறுதியைப் பார்த்து வியந்த ஹைதர் அலி தனது திண்டுக்கல் கோட்டை படைத்தலைவரான சையத்திடம் அவருக்கு வேண்டிய இராணுவ உதவிகளை வழங்குமாறு ஆணையிட்டார்.
- வேலுநாச்சியார் பிரிட்டிஷாரின் ஆயுதங்கள் குவிக்கப்பட்டிருக்கும் இடத்தை அறிந்துகொள்ள உளவாளிகளை நியமித்தார்.
- கோபால நாயக்கர் மற்றும் ஹைதர் அலியின் இராணுவ உதவியோடு அவர் சிவகங்கையை மீண்டும் கைப்பற்றினார்.
- மருது சகோதரர்களின் உதவியினால் அவர் அரசியாக முடிசூட்டிக் கொண்டார்.
- இந்திய நாட்டில் பிரிட்டிஷ் காலனியாதிக்க அதிகாரத்தை எதிர்த்த முதல் பெண் அரசி என்ற பெருமை அவருக்கே உரித்தானதாகும்.

காலக்கோடு (முக்கிய நிகழ்வுகள்)

1529	-	விஸ்வநாத நாயக்கர், மதுரை நாயக்கராக பதவியேற்றார்.
1730 - 1796	-	1. வேலுநாச்சியார் பிறந்தார். 2. வேலுநாச்சியார் காலம்.
1748 - 1801	-	பெரியமருது காலம்
1753 - 1801	-	சின்னமருது காலம்
1755 - 1767	-	பூலித்தேவரின் புரட்சி
1755 - 1801	-	பாளையக்காரர்களின் புரட்சி

1756 - 1805 - தீரன் சின்னமலையின் காலம்

1760 - ஹைதர் அலி மற்றும் மராத்தியார்களின் பீரங்கிபடைகள் வந்த காலம்.

1761 - பூலித்தேவரின் மூன்று பெரிய கோட்டைகள் யூசப்கானின் ஆதிக்கத்தின் கீழ் வந்தன.

1764 - 1. பூலித்தேவர் நெற்கட்டும்செவலை மீண்டும் கைப்பற்றினார்.
2. யூசுப்கான் தூக்கிலிடப்பட்டார்.

1767 - பூலித்தேவர் திரும்பி வந்து நாடிழந்த நிலையில் காலமானார்.

1772 - காளையார்கோவில் போரில் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டார்.

1790 - 1799 - வீரபாண்டிய கட்டபொம்மனின் எதிர்ப்பு.

1792 - திப்பு சுல்தான் உடன் ஏற்பட்ட போர் முடிவுக்கு வந்தது.

1798 - 1. கட்டபொம்மன் இராமநாதபுரத்தில் ஜாக்சனைச் சந்தித்தார்.
2. மதராஸ் ஆட்சிக்குழுவின் முன்பாக ஆஜராதல்.

1799 - 1. பாஞ்சாலங்குறிச்சி முற்றுகை.
2. கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்.
3. கோயம்புத்தூர் இணைக்கப்பட்டது.

1799 - ஆங்கிலேய–மைசூர் போர்.

1800 - 1801 - மருது சகோதரர்களின் கலகம்.

1800 - இரண்டாம் பாளையக்காரர் போர்.

1801 - 1. மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டனர்.
2. திருச்சிராப்பள்ளி பேரறிக்கை.
3. சிவகங்கை இணைக்கப்பட்டது.
4. கர்நாடக உடன்படிக்கை.
5. கோபால நாயக்கர் பிரிட்டிஷ் படைகளால் வெற்றிக் கொள்ளப்பட்டார்.

1805 - தீரன் சின்னமலை தூக்கிலிடப்பட்டார்.

1806 - 1. வேலூர் புரட்சி.
2. வேலூர் புரட்சி வெடித்தது.

1857 - பெருங்கலகம்.

வரைபடங்கள்

ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகளின் மையங்கள்



காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும்

மனவரைபடம்



நினைவில் கொள்க

- 1757 இல் நடைபெற்ற **பிளாசிப் போரில்** வங்காள நவாபான சிராஜ்–உத்–தௌலா ஆங்கிலேய கிழக்கிந்திய கமபெனியால் தோற்கடிக்கப்பட்டார்.
- "நிலம் கடவுளுக்குச் சொந்தம்" நிலத்தின்மீது வரிவிதிப்பதோ, வாடகை வசூலிப்பதோ இறைச் சட்டத்திற்கு எதிரானது என்று கூறியவர் **டுடு மியான்.**
- பழங்குடியினக் கிளர்ச்சிகளில் மிக முக்கியமானதாக அறியப்படுவது ராஞ்சியில் நடைபெற்ற **உலுகுலன் கிளர்ச்சியாகும்.**
- ஆங்கிலேய ஆட்சிக்கு பெரும் சவாலாக அமைந்த கலகம் **1857ல்** ஏற்பட்ட **பெருங்கலகம்** ஆகும்.
- கடல் கடந்து சென்றால் தங்களது சாதியை இழக்க நேரிடும் என நம்பிய **பராக்பூர் சிப்பாய்கள்** கடல் வழியாக பர்மா செல்ல மறுத்தனர்.
- முகலாய மாமன்னர் **இரண்டாம் பகதூர் ஷா** தங்கள் தலைவராக வேண்டும் என்று கோருவதற்காக 1857ல் மீரட்டிலிருந்து தில்லி செங்கோட்டை நோக்கி சிப்பாய்கள் அணிவகுத்துச் சென்றனர்.
- கடைசி பேஷ்வா மன்னரான இரண்டாம் பாஜிராவின் தத்துப் பிள்ளையான **நானா சாகிப்** கான்பூர் பகுதியில் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.
- இந்திய மக்களின் மதம் தொடர்பான விஷயங்களில் ஆங்கிலேய அரசு தலையிடாது என்று அறிவித்தவர் **விக்டோரியா பேரரசியார்** ஆவார்.
- பல ஐரோப்பியர்கள் இந்தியாவில் **இண்டிகோ** தோட்டக்காரர்களாக மாறுவதன் மூலம் தங்கள் செல்வத்தை ஈட்ட முயன்றார்.
- "நீல் தர்பன்" (இண்டிகோவின் கண்ணாடி) என்ற தலைப்பில் ஒரு நாடகத்தை **தீன பந்து மித்ரா** என்பவர் எழுதினார்.
- 1885ல் இந்திய தேசிய காங்கிரஸ் அமைப்பை உருவாக்க, தனது சேவைகளை வழங்கியவர் **A.O.ஹியூம்.**
- இந்துக்கள், முஸ்லிம்களிடையே பிளவை உருவாக்க 1905 ஆம் ஆண்டு **கர்சன்பிரபுவால்** 'வங்கப்பிரிவினை' வகுக்கப்பட்டது.
- **வ.உ.சிதம்பரனார்** சுதேசி கப்பல் நிறுவனத்தை தூத்துக்குடியில் தொடங்கினார்.
- இந்தியாவின் தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கம் தனது பெரும்பான்மையான கொள்கைகளை **அயர்லாந்தின்** தன்னாட்சி இயக்கத்திலிருந்து பெற்றது.
- **லக்னோ ஒப்பந்தத்தின்** (1916) போது காங்கிரஸ் கட்சியும், முஸ்லிம் லீக்கும் இந்தியாவில் விரைவில் தன்னாட்சி வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டன.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. 1818ஆம் ஆண்டு கிழக்கு வங்காளத்தில் ஹாஜி ஷரியத்துல்லா கீழ்க்கண்டவற்றில் எதனைத் தொடங்கினார்?
   அ) வஹாபி கிளர்ச்சி ஆ) ஃபராசி இயக்கம்
   இ) பழங்குடியினர் எழுச்சி ஈ) கோல் கிளர்ச்சி
2. 'நிலம் கடவுளுக்குச் சொந்தம்' என்று அறிவித்ததுடன் நிலத்தின் மீது வரிவிதிப்பதோ வாடகை வசூலிப்பதோ இறைச் சட்டத்திற்கு எதிரானது என்று கூறியவர் யார்?
   அ) டிடு மீர் ஆ) சித்து இ) டுடு மியான் ஈ) ஷரியத்துல்லா
3. நிரந்தரக் குடியிருப்பின் கீழ் ஜமீன்களை உருவாக்கும் திட்டத்தின்படி தங்கள் சொந்த நிலத்தை விட்டு விரட்டப்பட்டவர்கள் யார்?
   அ) சாந்தலர்கள் ஆ) டிடு மீர் இ) முண்டா ஈ) கோல்

4. கீழ்க்காண்போரில் தீவிர தேசியவாதி யார்?
அ) தாதாபாய் நௌரோஜி ஆ) நீதிபதி கோவிந்த் ரானடே
இ) பிபின் சந்திர பால் ஈ) ரொமேஷ் சந்திரா

5. வங்கப்பிரிவினை எந்த நாளில் நடைமுறைக்கு வந்தது?
அ) 1905 ஜூன் 19 ஆ) 1906 ஜூலை 18 இ) 1907 ஆகஸ்ட் 19 ஈ) 1905 அக்டோபர் 16

6. சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் எந்தப் பின்னணியில் நிறைவேற்றப்பட்டது?
அ) கோல் கிளர்ச்சி ஆ) இண்டிகோ கிளர்ச்சி
இ) முண்டா கிளர்ச்சி ஈ) தக்காண கலவரங்கள்

7. 1916ஆம் ஆண்டு ஏப்ரலில் தன்னாட்சி இயக்கத்தை முதலில் தொடங்கியவர் யார்?
அ) அன்னிபெசன்ட் அம்மையார் ஆ) பிபின் சந்திர பால்
இ) லாலா லஜபதி ராய் ஈ) திலகர்

8. நீல் தர்பன் நாடகம் மூலமாக இண்டிகோ பயிரிடும் விவசாயிகளின் இன்னல்கள் குறித்து ஆங்கிலேயரின் கவனத்துக்கு கொண்டு சென்றவர் யார்?
அ) தீன பந்து மித்ரா ஆ) ரொமேஷ் சந்திர தத்
இ) தாதாபாய் நௌரோஜி ஈ) பிர்சா முண்டா

கூடுதல் வினாக்கள்

9. பிளாசிப் போரில் ஈடுபட்ட வங்காள நவாப்
அ) சிராஜ்–உத்–தௌலா ஆ) மீர் காசிம் இ) மீர் ஜாபர் ஈ) தௌலத் கான்

10. பிளாசிப் போரில் ஈடுபட்ட ஆங்கில படைத்தளபதி
அ) வெல்லெஸ்லி ஆ) ராபர்ட் கிளைவ்
இ) டல்ஹௌசி ஈ) கர்சன்

11. பிளாசிப் போருக்குப் பின் கொள்ளையடிக்கப்பட்ட பகுதி
அ) பீகார் ஆ) அயோத்தி இ) வங்காளம் ஈ) ஒரிசா

12. வஹாபி போதனைகளால் ஈர்க்கப்பட்ட இசுலாமிய மதபோதகர்
அ) டுடு மியான் ஆ) டிடு மீர்
இ) ஹாஜி ஷரியத்துல்லா ஈ) நோவா மியான்

13. உலுகுலன் கிளர்ச்சி நடைபெற்ற இடம்
அ) லக்னோ ஆ) மீரட் இ) கல்கத்தா ஈ) ராஞ்சி

14. பெருங்கலகம் ஏற்பட்ட ஆண்டு
அ) 1857 ஆ) 1875 இ) 1806 ஈ) 1905

15. 1806ஆம் ஆண்டில் சிப்பாய்கள் கலகம் செய்த இடம்
அ) மேலூர் ஆ) பேளூர் இ) வேலூர் ஈ) காந்தலூர்

16. 1824ஆம் ஆண்டு பராக்பூரில் சிப்பாய்கள் கடல் வழியாக எங்கு செல்ல மறுத்தனர்?
அ) மலேயா ஆ) இலங்கை இ) பர்மா ஈ) சிங்கப்பூர்

17. 1857 ஆம் ஆண்டு இந்துஸ்தானத்தின் மாமன்னராக பதவியேற்றவர்
அ) ஆலம் ஷா ஆ) முகம்மது ஷா இ) செர்ஷா ஈ) இரண்டாம் பகதூர் ஷா

18. சக்தி வாய்ந்த ஆங்கிலேயருக்கு எதிராக போரைத் துவக்கிய ராணி
அ) லட்சுமிபாய் ஆ) பூலான் தேவி
இ) பேகம் ஹஸ்ரத் மகால் ஈ) விக்டோரியா

19. வாரிசு இழப்புக் கொள்கையைக் கொண்டுவந்தவர்
அ) டல்ஹௌசி பிரபு ஆ) ரிப்பன் பிரபு இ) லிட்டன் பிரபு ஈ) கர்சன் பிரபு

20. சிறைபிடிக்கப்பட்ட பகதூர் ஷா நாடு கடத்தப்பட்ட இடம்
அ) மலேசியா ஆ) பர்மா இ) தாய்லாந்து ஈ) சிங்கப்பூர்

21. உணவு தானியப் பயிர்களுக்குப் பதிலாக எதை பயிரிட விவசாயிகள் வற்புறுத்தப்பட்டனர்?
அ) தேயிலை ஆ) காப்பி இ) பருத்தி ஈ) இண்டிகோ

22. இந்திய தேசிய காங்கிரஸ் உருவான ஆண்டு
அ) 1880 ஆ) 1885 இ) 1900 ஈ) 1947

23. இந்திய தேசிய காங்கிரஸின் முதல் தலைவர்
அ) வல்லபாய் பட்டேல் ஆ) திலகர்
இ) உமேஷ் சந்திர பானர்ஜி ஈ) கோகலே

24. சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர்
அ) வ.உ.சிதம்பரனார் ஆ) பாரதியார்
இ) லாலா லஜபதிராய் ஈ) பால கங்காதர திலகர்

25. மாண்டேகு-செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தம் கொண்டுவரப்பட்ட ஆண்டு
அ) 1939 ஆ) 1909 இ) 1929 ஈ) 1919

விடைகள்

1. ஆ) ஃபராசி இயக்கம்	2. இ) டுடு மியான்	3. அ) சாந்தலர்கள்
4. இ) பிபின் சந்திர பால்	5. ஈ) 1905 அக்டோபர் 16	6. இ) முண்டா
7. ஈ) திலகர்	8. அ) தீன பந்து மித்ரா	9. அ) சிராஜ்–உத்–தௌலா
10. ஆ) ராபர்ட் கிளைவ்	11. இ) வங்காளம்	12. ஆ) டிடு மீர்
13. ஈ) ராஞ்சி	14. அ) 1857	15. இ) வேலூர்
16. இ) பர்மா	17. ஈ) இரண்டாம் பகதூர் ஷா	18. அ) லட்சுமிபாய்
19. அ) டல்ஹௌசி பிரபு	20. ஆ) பர்மா	21. ஈ) இண்டிகோ
22. ஆ) 1885	23. இ) உமேஷ் சந்திர பானர்ஜி	24. அ) வ.உ.சிதம்பரனார்
25. ஈ) 1919		

II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. 1757ஆம் ஆண்டு ராபர்ட் கிளைவுக்கு __________ என்று அழைக்கப்பட்ட வங்காளத்தின் கடன் வழங்குவோர் நிதி ஆதரவு தந்தனர்.
2. மன்னராட்சிக்கும் நிலசுவான்தாரர்களுக்கும் எதிரான __________ இயக்கம் 1827ஆம் ஆண்டுவாக்கில் தொடங்கப்பட்டது.
3. சோட்டாநாக்பூர் பகுதியில் நடந்த மிகப்பெரிய பழங்குடியினர் கிளர்ச்சி __________ .
4. __________ சட்டம் பழங்குடியினரல்லாத மக்களை பழங்குடி நிலத்தில் நுழைய தடைவிதித்தது.
5. 1854ஆம் ஆண்டுவாக்கில் __________ தலைமையில் சமூகக் கொள்ளை நடவடிக்கைகள் நடந்தன.
6. 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சியில் கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்ட ஆங்கிலேய தளபதி __________ .
7. சோட்டா நாக்பூர் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு __________ .
8. W.C.பானர்ஜி இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு __________ .

கூடுதல் வினாக்கள்

9. பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு __________ .
10. வங்காளத்தின் புதிய நவாபாக நியமிக்கப்பட்டவர் __________ .
11. ஷரியத்துல்லாவின் மகனான __________ வரி செலுத்த வேண்டாம் என்று விவசாயிகளைக் கேட்டு கொண்டார்.

12. இந்திய பழங்குடியினர் பின்பற்றிய வேளாண்மை முறை __________ .
13. 1855இல் கிளர்ச்சியைத் தலைமையேற்று நடத்திய சாந்தல சகோதரர்கள் __________ மற்றும் __________.
14. தம்மை கடவுளின் தூதர் என்று அறிவித்த பழங்குடியினத் தலைவர் __________ .
15. தங்களை வானளாவிய அதிகாரங்கள் கொண்ட உயர் அதிகார அமைப்பாகக் கருதியவர்கள் __________ .
16. புதிய __________ துப்பாக்கிக்கு வழங்கப்பட்ட தோட்டாக்கள் பெரும்புரட்சிக்கு வித்திட்டது.
17. 1857 மார்ச் 29ஆம் தேதி தனது மேலதிகாரியைத் தாக்கியவர் __________ .
18. 1857 மே 11ஆம் நாள் மீரட்டிலிருந்து __________ நோக்கி சிப்பாய்கள் அணிவகுத்துச் சென்றனர்.
19. இரண்டாம் பாஜிராவின் தத்துப்பிள்ளையான __________ கான்பூர் பகுதியில் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.
20. மதம் தொடர்பான விஷயங்களில் ஆங்கில அரசு தலையிடாது என உறுதியளித்தவர் __________ .
21. இண்டிகோ கிளர்ச்சி தொடங்கிய ஆண்டு __________ .
22. தக்காணத்தில் வட்டிக்கு பணம் வழங்குவோருக்கு எதிரான கலவரங்கள் முதன் முதலாக வெடித்த கிராமம் __________ .
23. இந்திய தேசிய காங்கிரஸ் அமைப்பை உருவாக்க தமது சேவைகளை வழங்கியவர் __________ .
24. 1899இல் இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர் __________ .
25. வங்கப் பிரிவினைக்குக் காரணமானவர் __________ .
26. சுதேசி இயக்கத்தின் மிகமுக்கிய தளமாக விளங்கிய இடம் __________ .
27. 1914ஆம் ஆண்டு பிரிட்டன் __________க்கு எதிராக போர் பிரகடனம் செய்தது.
28. இந்தியாவின் தன்னாட்சி இயக்கம் தனது பெரும்பான்மையான கொள்கைகளை __________ நாட்டின் தன்னாட்சி இயக்கத்திலிருந்து பெற்றது.
29. லக்னோ ஒப்பந்தம் ஏற்பட்ட ஆண்டு __________ .
30. தன்னிச்சையான கைது மற்றும் கடும் தண்டனை வழங்க வழிவகுக்கும் சட்டம் __________ .

விடைகள்

1. ஜகத் சேத்துகள்	2. வஹாபி	3. கோல் கிளர்ச்சி
4. சோட்டா நாக்பூர் குத்தகை	5. பீர் சிங்	6. மேஜர் ஜெனரல் ஹக் வீலர்
7. 1908	8. 1885	9. 1757
10. மீர் ஜாபர்	11. டுடு மியான்	12. இடம் பெயர் வேளாண்மை
13. சித்து, கணு	14. பிர்சா முண்டா	15. ஆங்கிலேயர்கள்
16. என்ஃபீல்டு	17. மங்கள் பாண்டே	18. தில்லி செங்கோட்டை
19. நானா சாகிப்	20. விக்டோரியா பேரரசியார்	21. 1859
22. சூபா	23. A.O.ஹியூம்	24. கர்சன் பிரபு
25. கர்சன் பிரபு	26. தூத்துக்குடி	27. ஜெர்மனி
28. அயர்லாந்து	29. 1916	30. ரௌலட் சட்டம்

III. சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. i) மீர் ஜாபரிடம் இருந்து 2 கோடியே 25 லட்ச ரூபாயை வாங்கிய கிழக்கு இந்திய கம்பெனி அதனை பிரிட்டனில் தொழிற்புரட்சி மேம்பட முதலீடு செய்தது.
   ii) 1831 – 1832ஆம் ஆண்டு அரசு அதிகாரிகள் மற்றும் கடன்கொடுப்போருக்கு எதிரான கிளர்ச்சியைக் கோல் மக்கள் ஒருங்கிணைத்தனர்.

iii) 1855ஆம் ஆண்டில் சாந்தலர் கிளர்ச்சிக்கு சித்து, கனு ஆகிய இரண்டு சாந்தலர் சகோதரர்கள் தலைமை ஏற்றனர்.

iv) 1879ஆம் ஆண்டில் சாந்தலர்கள் வசம் இருந்த பகுதிகளை ஒழுங்குமுறைப்படுத்த ஒரு சட்டம் இயற்றப்பட்டது.

அ) (i), (ii) மற்றும் (iii) சரியானவை ஆ) (ii) மற்றும் (iii) சரியானவை
இ) (iii) மற்றும் (iv) சரியானவை ஈ) (i) மற்றும் (iv) சரியானவை

2. i) இஸ்லாமிய மதத்தின் சமத்துவ இயல்பை வலியுறுத்திய டுடு மியான் நிலம் கடவுளுக்குச் சொந்தமானது என்று அறிவித்தார்.

ii) ஊழல்கறை படிந்த இந்திய ஆட்சியாளர்களின் வசம் இருந்த பகுதிகள் வாரிசு இழப்புக் கொள்கையின்படி ஆங்கிலேய ஆட்சியின் கீழ் இணைக்கப்பட்டன.

iii) 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சி ஒடுக்கப்பட்ட பிறகு சட்டத்தைப் பின்பற்றாமல் இந்தியர்கள் பற்றிய வழக்குகளை விசாரித்து அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கவும் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

iv) 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சி தோல்வி அடைந்ததற்கு ஆங்கிலேயருக்கு இந்திய இளவரசர்களும் ஜமீன்தாரர்களும் விசுவாசமாக இருந்ததும் அதற்கான பல்வேறு காரணங்களில் ஒன்றாகும்.

அ) (ii), (iii) மற்றும் (iv) சரியானவை ஆ) (i), (ii) மற்றும் (iv) சரியானவை
இ) (i), (iii) மற்றும் (iv) சரியானவை ஈ) (i), (ii) மற்றும் (iii) சரியானவை

3. i) காலனி ஆட்சி பற்றியப் பொருளாதார விமர்சனத்தைச் செய்தது ஆரம்பகால இந்திய தேசியவாதிகளின் மிக முக்கியமான பங்களிப்புகளில் ஒன்றாகும்.

ii) இந்தியாவில் வறுமை அதிகரிக்க சமய ரீதியிலான சுரண்டலே மிக முதன்மையான காரணம் என்று ஆரம்பகால காங்கிரஸ் தலைவர்கள் தெரிவித்தனர்.

iii) சுயராஜ்ஜியம் அல்லது தன்னாட்சியை எட்டுவதே மிதவாத காங்கிரஸ் தலைவர்களின் குறிக்கோள்களில் ஒன்றாக இருந்தது.

iv) வங்காளத்தின் ஆதிக்கத்தை குறைப்பதையும் தேசியவாத இயக்கத்தை வலுவிழக்கச் செய்வதையும் குறிக்கோளாகக் கொண்டு வங்கப் பிரிவினை நடந்தது.

அ) (i) மற்றும் (iii) சரியானவை ஆ) (i), (iii) மற்றும் (iv) சரியானவை
இ) (ii) மற்றும் (iii) சரியானவை ஈ) (iii) மற்றும் (iv) சரியானவை

4. கூற்று : இந்திய வரலாற்றில் முதன்முறையாக காலனி ஆட்சியின் கீழ் அரசு வனங்களின் மீது நேரடி தனியுரிமையைக் கோரியது. **PTA**

காரணம் : இண்டிகோ விவசாயம் செய்யுமாறு விவசாயிகளை நிர்ப்பந்திக்க தொழில் செய்வோர் மிரட்டல் மற்றும் வன்முறையைக் கையாண்டனர்.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி; ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு.
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி; அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஈ) கூற்று தவறு காரணம் சரி.

5. கூற்று : பிரிட்டிஷ் அரசு 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது.

காரணம் : மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் இல்லாததால் கிளர்ச்சி தோல்வி கண்டது. **PTA**

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு.
ஆ) கூற்று தவறு காரணம் சரி.
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி; அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.

கூடுதல் வினாக்கள்

6. i) பெருங்கலகம் தொடக்கத்தில் பம்பாய் மாகாணத்தில் சிப்பாய் கலகமாக உருவெடுத்தது.
ii) கல்கத்தா அருகே பராக்பூரில் சிப்பாய்கள் கடல் கடந்து செல்ல மறுத்தனர்.
iii) இராணுவ வீரர்களுடன் ஆயுதமேந்திய படைகளும் இணைந்து நடந்த முதல் மாபெரும் புரட்சி 1857 பெருங்கலகமாகும்.
iv) நானா சாகிப்பிற்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தைத் தர கம்பெனி மறுத்து விட்டது.
அ) (i), (ii) மற்றும் (iii) சரி.
ஆ) (ii) மற்றும் (iv) மட்டும் சரி.
இ) (i) மற்றும் (iii) மட்டும் சரி.
ஈ) (ii), (iii) மற்றும் (iv) சரி.

7. கூற்று : மங்கள் பாண்டே என்பவரை அவரது சக சிப்பாய்கள் கைது செய்தனர். பின்பு அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.
காரணம் : மங்கள் பாண்டே என்ற சிப்பாய் தனது ஐரோப்பிய அதிகாரியைத் தாக்கினார்.
அ) கூற்று சரி, காரணம் தவறு. ஆ) கூற்று தவறு, காரணம் சரி.
இ) கூற்றும், காரணமும் சரி. இ) கூற்றும், காரணமும் தவறு

விடைகள்

1. அ) (i), (ii) மற்றும் (iii) சரியானவை
2. இ) (i), (iii) மற்றும் (iv) சரியானவை
3. ஆ) (i), (iii) மற்றும் (iv) சரியானவை
4. அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி; ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.
5. இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி; அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
6. ஈ) (ii), (iii) மற்றும் (iv) சரி.
7. ஆ) கூற்று தவறு, காரணம் சரி.

IV. பொருத்துக:

பாடநூல் வினா

அ)

1. வஹாபி கிளர்ச்சி	அ) லக்னோ		விடை
2. முண்டா கிளர்ச்சி	ஆ) பேஷ்வா இரண்டாம் பாஜி ராவ்		1) இ
3. பேகம் ஹஸ்ரத் மகால்	இ) டிடு மீர்		2) ஈ
4. கன்வர் சிங்	ஈ) ராஞ்சி		3) அ
5. நானா சாகிப்	உ) பீகார்		4) உ
			5) ஆ

கூடுதல் வினாக்கள்

ஆ)

1. சிராஜ்–உத்–தௌலா	அ) ஃபராசி இயக்கம்		விடை
2. மீர் ஜாபர்	ஆ) தம்மை கடவுளின் தூதர் என்றார்		1) ஈ
3. ஹாஜிஷரியத்துல்லா	இ) நிலம் கடவுளுக்குச் சொந்தமானது		2) உ
4. டுடு மியான்	ஈ) வங்காள நவாப்		3) அ
5. பிர்சா முண்டா	உ) வங்காள புதிய நவாப்		4) இ
			5) ஆ

					விடை
இ)	1. இராபர்ட் கிளைவ்	அ)	இந்திய தேசிய காங்கிரஸ்		1) உ
	2. கர்சன் பிரபு	ஆ)	வாரிசு இழப்புக் கொள்கை		2) இ
	3. A.O.ஹியூம்	இ)	வங்கப்பிரிவினை		3) அ
	4. டல்ஹெளசி	ஈ)	லண்டன் டைம்ஸ்		4) ஆ
	5. வில்லியம் ஹோவார்ட் ரஸ்ஸல்	உ)	பிளாசிப் போர்		5) ஈ

				விடை
ஈ)	1. கோல்கிளர்ச்சி	அ)	ராஞ்சி	1) ஆ
	2. சாந்தலர் கிளர்ச்சி	ஆ)	ஜார்க்கண்ட்	2) ஈ
	3. முண்டா கிளர்ச்சி	இ)	மீரட்	3) அ
	4. இண்டிகோ கிளர்ச்சி	ஈ)	ராஜ்மஹால்	4) உ
	5. பெரும்புரட்சி	உ)	வங்காளம்	5) இ

				விடை
உ)	1. 1852	அ)	கிழக்கிந்திய அமைப்பு	1) உ
	2. 1870	ஆ)	பம்பாய் மாகாண சங்கம்	2) ஈ
	3. 1885	இ)	சென்னை மகாஜன சபை	3) ஆ
	4. 1866	ஈ)	பூனா சர்வஜனிக் சபை	4) அ
	5. 1884	உ)	சென்னை வாரிசுகள் சங்கம்	5) இ

				விடை
ஊ)	1. 1875	அ)	வேலூர் புரட்சி	1) இ
	2. 1905	ஆ)	ரௌலட் சட்டம்	2) ஈ
	3. 1916	இ)	தக்காண கலவரம்	3) உ
	4. 1806	ஈ)	வங்கப்பிரிவினை	4) அ
	5. 1919	உ)	லக்னோ ஒப்பந்தம்	5) ஆ

V. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **ஆங்கிலேய இந்தியாவில் விவசாயிகளின் கிளர்ச்சி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?** **PTA**

- மறுசீரமைத்தலுக்கான கிளர்ச்சிகள்
- சமய இயக்கங்கள்
- சமூகக் கொள்கை
- மக்களின் கிளர்ச்சி.

2. **1857ஆம் ஆண்டின் கான்பூர் படுகொலை பற்றி குறிப்பு வரைக.**

- 1857ஆம் ஆண்டு கிளர்ச்சியின் முக்கிய அத்தியாயமாக இருப்பது கான்பூர் முற்றுகை ஆகும்.
- கான்பூரில் சுற்றி வளைக்கப்பட்ட கம்பெனி படைகளும் இராணுவ வீரர்களும் நீட்டிக்கப்பட்ட சுற்றி வளைப்புக்கு தயாராக இல்லாததால் நானா சாகிப் தலைமையிலான கிளர்ச்சிப் படைகளின் கீழ் சரணடைந்தனர்.
- அவர்கள் அலாகாபாத்துக்கு திரும்பிச் செல்ல பாதுகாப்பான வழிஅமைக்கப்பட்டது.
- அவர்கள் பயணம் செய்த படகுகள் தீயிட்டு எரிக்கப்பட்டது. அதில் பயணித்த கான்பூரின் தளபதி மேஜர் ஜெனரல் ஹக்வீலர் உட்பட அனைவரும் உயிரிழந்தனர்.

3. **வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளைப் பட்டியலிடுக.**

- சதாரா
- நாக்பூர்
- சம்பல்பூர்
- பஞ்சாபின் சில பகுதிகள்
- ஜான்சி

4. **வளங்கள் சுரண்டப்படுவது (செல்வச் சுரண்டல்) பற்றி தங்களின் கருத்து என்ன?** **PTA**

- இந்தியா பொருளாதார ரீதியாக கட்டுப் படுத்தப்பட்டதோடு பிரிட்டனின் தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருட்களை அனுப்பும் ஒரு அனுப்புனராக மாற்றம் பெற்றது.
- ஒரே நேரத்தில் பிரிட்டிஷாரின் மூலதனத்தை முதலீடு செய்யவும், ஆங்கிலேய உற்பத்திப் பொருட்களை கொண்டு சேர்க்கும் ஒரு சந்தையாகவும் இந்தியா உருவானது.
- இந்தியாவுக்கு எவ்வித ஆதாயமுமின்றி இந்தியாவில் இருந்து பிரிட்டனுக்கு தொடர்ந்து வளங்களை பரிமாற்றம் செய்யும் விதமாக காலனி ஆட்சியின்கீழ் பொருளாதாரம் அமைந்தது.
- இதுவே வளங்களின் சுரண்டலாக (செல்வச் சுரண்டல்) அறியப்பட்டது.

5. **ஆக்கப்பூர்வ சுதேசி இயக்கம் பற்றிய கொள்கையை விவரிக்கவும்.**

- சுதேசி தொழில்கள், தேசிய பள்ளிகள், நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் கிராமங்களில் ஆக்கபூர்வமான திட்டங்கள் மூலம் சுய உதவியில் ஆக்கபூர்வ சுதேசி இயக்கம் கவனம் செலுத்தியது. இவை பெரும்பாலும் அரசியல் சாராமல் இருந்தது.
- ஆங்கிலேய ஆட்சியின் கட்டுப்பாட்டில் சிக்காமல் சுதந்திரமாகச் செயல்படக்கூடிய உள்ளாட்சி அமைப்புக்களை மாற்றாக உருவாக்குவது குறித்து அது கவனம் செலுத்தியது.
- மக்களை சுயமாக வலுவாக்க வேண்டிய அவசியம் குறித்து அது வலியுறுத்தியது.
- அதனால் அரசியல் ஆர்ப்பாட்டம் நடைபெறுவதற்கு முன் ஒரு மதிப்பு வாய்ந்த குடிமகனை உருவாக்க முடியுமென நம்பியது.
- துணிகள், கைத்தறி ஆடைகள், சவக்காரம் (சோப்புகள்), மண்பாண்டங்கள், தீப்பெட்டி, தோல் பொருட்கள் ஆகியன எங்கும் பரவியிருந்த சுதேசி கடைகளில் விற்கப்பட்டன.

6. **தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கத்தின் குறிக்கோள்களை விவரிக்கவும்.**

- அரசியலமைப்பு வழிகளைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் பேரரசிற்குள் தன்னாட்சியை அடைவது.
- தன்னாட்சி பகுதி (டொமினியன்) என்ற தகுதியை அடைவது. ஆஸ்திரேலியா, கனடா, தென்னாப்பிரிக்கா மற்றும் நியூசிலாந்து ஆகியவற்றுக்கு பின்னர் இந்த அரசாட்சி சாராத நிலை வழங்கப்பட்டது.
- அவர்களின் இலக்குகளை அடைய வன்முறையல்லாத அரசியல் சாசன வழிமுறைகளைக் கையாள்வது என்பனவாகும்.

7. **லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களைத் தொகுத்து வழங்கவும்.**

- தன்னாட்சி இயக்கமும் அதனையடுத்து மித தேசியவாதிகள் மற்றும் தீவிர தேசியவாதிகளின் மறு இணைப்பு காரணமாக முஸ்லிம்களுடன் புதிய பேச்சுகளுக்கான சாத்தியக்கூறு லக்னோ ஒப்பந்தத்தின்போது ஏற்பட்டது.
- லக்னோ ஒப்பந்தத்தின் (1916) போது காங்கிரஸ் கட்சியும், முஸ்லிம் லீக்கும் இந்தியாவில் விரைவில் தன்னாட்சி வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டது.
- இதற்குப் பதிலாக முஸ்லிம்களுக்கு தனித் தொகுதிகளை வழங்கும் திட்டத்தை காங்கிரஸ் தலைமை ஏற்றது.

கூடுதல் வினாக்கள்

8. **பிளாசிப் போருக்குப்பின் ஆங்கிலேயர்கள் கொண்டுவந்த மாற்றங்கள் யாவை?**

- ➢ பிளாசிப் போருக்குப் பின் எல்லையை விரிவாக்கும் கொள்கையை ஆங்கிலேயர்கள் பின்பற்றினர். வெகு விரைவில் இந்திய துணைக்கண்டத்தின் எஞ்சிய பகுதிகள் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன.
- ➢ நில வருவாய் நிர்வாகம், இராணுவம், காவல்துறை, நீதிமுறை மற்றும் ஆட்சி சார்ந்த இதர நிறுவனங்களில் ஆங்கிலேயர்கள் முறையான மாற்றங்களைக் கொண்டுவந்தனர்.

9. **நிலத்தைக் கீழ்க்குத்தகைக்கு விடுவது என்றால் என்ன?**

- ➢ நிலத்தைக் குத்தகைக்கு விடுவதும், கீழ்க் குத்தகைக்கு விடுவதும் விவசாய உறவுகளை பெரிதும் சிக்கலாக்கியது.
- ➢ ஜமீன்தார் தன்னிடமிருந்த நிலத்தைப் பெரும்பாலும் தன்னைச் சார்ந்திருந்த நிலப்பிரபுக்களுக்கு கீழ்க்குத்தகைக்கு விட்டார்.
- ➢ பதிலுக்கு நிலப்பிரபு விவசாயிகளிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை வசூலித்துக் கொடுப்பார். இதனால் விவசாயிகள் மீதான வரிச்சுமை அதிகரித்தது.

10. **வஹாபி கிளர்ச்சி பற்றி குறிப்பு வரைக.**

- ➢ வஹாபி கிளர்ச்சி என்பது ஆங்கிலேய ஆட்சிக்கும் நிலப்பிரபுக்களுக்கும் எதிராக துவக்கப்பட்டதாகும்.
- ➢ வங்காளத்தில் பரசத் பகுதியில் 1827 வாக்கில் இக்கிளர்ச்சி தோன்றியது.
- ➢ வஹாபி போதனைகளால் பெரிதும் ஆழமாக ஈர்க்கப்பட்டவராக திகழ்ந்த இசுலாமிய மதபோதகர் டிடு மீர் என்பவர் இக்கிளர்ச்சிக்குத் தலைமையேற்றார்.
- ➢ ஜமீன்தாரி முறையால் ஒடுக்கப்பட்ட குறிப்பாக இசுலாமிய விவசாயிகள் மத்தியில் அவர் செல்வாக்குமிக்க நபராகத் திகழ்ந்தார்.
- ➢ எனினும் பெரும்பான்மையான ஜமீன்தார்கள் இந்துக்களாக இருந்ததால் இந்த கிளர்ச்சிக்கு இந்து எதிர்ப்புச் சாயம் பூசப்பட்டது.
- ➢ 1831இல் புர்னியா நகரில் முதல் பெரும் தாக்குதல் நடத்தப்பட்டது. டிடு மீர் உடனடியாக ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றதாக அறிவித்தார்.
- ➢ உடனடியாக ஆங்கிலப்படையிடமிருந்து பதிலடி கிடைத்தது. போராட்டத்தின்போது ஐம்பது வீரர்களுடன் டிடு மீர் கொல்லப்பட்டார்.

11. **1857–1858 ஆம் ஆண்டுகளில் நடந்த நிகழ்வுகள் எக்காரணங்களால் முக்கியத்துவம் பெற்றன?**

- ➢ இராணுவ வீரர்களுடன் ஆயுதமேந்திய படைகளும் இணைந்து நடந்த முதல் மாபெரும் புரட்சி இதுவாகும்.
- ➢ இருதரப்புகளிலும் தூண்டப்பட்டதால் முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு கிளர்ச்சியில் வன்முறை வெடித்தது.
- ➢ கிழக்கிந்தியக் கம்பெனியின் பணியினை புரட்சி முடிவுக்குக் கொண்டுவந்ததுடன் இந்திய துணைக் கண்டத்தை நிர்வகிக்கும் பொறுப்பை பிரிட்டிஷ் அரசு கையில் எடுத்தது.

12. **இந்தியா ஆங்கிலேய அரசுக் காலனியாக எவ்வாறு மாறியது?**

- ➢ 1857ஆம் ஆண்டின் நிகழ்வுகளை அறிந்து ஆங்கிலேயர்கள் அதிர்ந்தனர்.
- ➢ 1858ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்திய அரசுச் சட்டத்தை பிரிட்டிஷ் நாடாளுமன்றம் ஏற்றுக் கொண்டது.
- ➢ அதன்படி நாடாளுமன்றத்தால் நேரடியாக ஆட்சி அதிகாரம் செலுத்தப்படும் ஆங்கிலேய அரசின் காலனிகளில் ஒன்றாக இந்தியா அறிவிக்கப்பட்டது.
- ➢ அமைச்சரவை உறுப்பினர் ஒருவரிடம் பொறுப்பு வழங்கப்பட்டது. அவர் இந்தியாவிற்கான அரசுச் செயலராக பதவி வகிப்பார்.
- ➢ கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து பிரிட்டிஷ் அரச குடும்பத்திற்கான அதிகாரப்பகிர்வு, இந்திய விவகாரங்கள் குறித்து நாடாளுமன்ற கண்காணிப்பு நிரந்தரமாக இருந்ததை வெளிப்படுத்தியது.

13. **சுதேசி இயக்கத்தின் முக்கிய அம்சங்கள் யாவை?**

- அந்நியப் பொருட்களைப் புறக்கணிப்பது.
- அரசுப்பள்ளிகள், கல்லூரிகளைப் புறக்கணிப்பது.
- நீதிமன்றங்கள், பட்டங்கள் மற்றும் அரசு வேலைகளைப் புறக்கணிப்பது.
- சுதேசி தொழிற்சாலைகளை மேம்படுத்துவது.
- பொறுத்துக்கொள்ளும் அளவைத் தாண்டி ஆங்கிலேயரின் அடக்குமுறை இருக்குமேயானால் ஆயுதம் ஏந்திய போராட்டத்திற்கு ஆயத்தமாவது என்பனவாகும்.

14. **வாரிசு இழப்புக் கொள்கை பற்றி சிறு குறிப்பு வரைக.**

- சுதேச மன்னர்கள் தனக்குப் பிறகு தன் நாட்டை ஆட்சி செய்ய ஆண்வாரிசு இன்றி இறந்துவிட்டால், அவர்களின் இறப்புக்குப்பிறகு அந்தப்பகுதி ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்படும். இதுவே வாரிசு இழப்புக் கொள்கையாகும்.
- சதாரா, ஜான்சி, நாக்பூர், சம்பல்பூர் பஞ்சாபின் சில பகுதிகள் வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் ஆங்கிலப்பேரரசோடு இணைக்கப்பட்டன.

15. **பெரும்புரட்சியில் ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்ட சில தலைவர்களைக் குறிப்பிடுக.**

- நானா சாகிப்
- ஹஸ்ரத் மகால்
- கான் பகதூர்
- ராணி லட்சுமி பாய்
- பகதூர் ஷா
- கன்வர்சிங்

VI. ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. **தக்காணக் கலவரங்கள்:**

அ) தக்காணத்தில் கடன் வழங்கியோருக்கு எதிராக முதல் கலவரச் சம்பவம் எங்கு மற்றும் எப்பொழுது நடந்ததாகப் பதிவாகியுள்ளது?

பூனா அருகேயுள்ள சூபா என்ற கிராமத்தில் 1875ஆம் ஆண்டு மே மாதத்தில் தக்காணத்தில் கடன் வழங்கியோருக்கு எதிராக முதல் கலவரச் சம்பவம் நடந்ததாகப் பதிவாகியுள்ளது.

ஆ) பிரிட்டிஷாரின் புதிய சட்டத்தின் கீழ் கடன் வழங்கியோருக்கு கொடுக்கப்பட்ட புதிய உரிமை என்ன?

- புதிய சட்டப்படி எந்த நிலத்தை அடமானம் வைத்து கடன் வாங்கப்பட்டதோ அந்த நிலத்தை எடுத்துக் கொண்டு ஏலம் விட்டு கடன் தொகையை எடுத்துக்கொள்ள கடன்வழங்கியோருக்கு அனுமதி கிடைத்திருந்தது.

இ) அதனால் ஏற்பட்ட விளைவு என்ன?

- உழும் வர்க்கத்திடமிருந்து நிலம் உழாத வர்க்கத்திடம் கைமாறத் தொடங்கியது.
- கடன் என்னும் மாய வலையில் சிக்கிய விவசாயிகள் நிலுவைத் தொகையைச் செலுத்த இயலாமல் பயிரிடுதலையும், விவசாயத்தையும் கைவிடவேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஈ) தக்காண கலவரங்கள் யாருக்கு எதிராக குறிவைத்து நடத்தப்பட்டன?

குஜராத்தில் வட்டிக்குப் பணம் வழங்குவோரை குறிவைத்துதான் இந்த கலவரங்கள் நடத்தப்பட்டன.

2. **1857ஆம் ஆண்டின் கிளர்ச்சி:**

அ) 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சி ஏற்படக் காரணமாக அமைந்த நிகழ்வில் தனது அதிகாரியை தாக்கியவர் யார்?

மங்கள் பாண்டே.

ஆ) தில்லியில் ஷாஹின்ஷா இ-ஹிந்துஸ்தான் என்று அழைக்கப்பட்டவர் யார்?
இரண்டாம் பகதூர் ஷா.

இ) 1857ஆம் ஆண்டின் கொடுமைகளைப் பற்றிய செய்தியை லண்டன் டைம்ஸ் நாளேட்டில் வெளியிட்ட பத்திரிக்கையாளர் யார்?
வில்லியம் ஹோவர்ட் ரஸ்ஸல்.

ஈ) அரசியின் பேரறிக்கையில் சமயம் தொடர்பான விஷயங்கள் பற்றி என்ன கூறப்பட்டது?
விக்டோரியா பேரரசியாரின் பேரறிக்கையில், மதம் தொடர்பான விஷயங்களில் அரசு தலையிடாது என்று கூறப்பட்டுள்ளது.

3. **இந்திய தேசிய காங்கிரஸ்:**

அ) தமது முறையீடுகள் தீர்க்கப்படுவதற்கு காங்கிரஸ் கட்சி கையாண்ட வழிமுறைகள் என்ன?
- பிரிட்டனிடம் மேல்முறையீடுகள் செய்வது.
- மனுக்கள் கொடுப்பது.

ஆ) லால்-பால்-பால் ஆகிய மூவர் பற்றி அறிந்தது என்ன?
லாலா லஜ்பதிராய், பால கங்காதர திலகர், பிபின் சந்திர பால் ஆகிய மூன்று தலைவர்களையும் எப்போதும் லால்–பால்–பால் மூவர் என்று குறிப்பிட்டனர்.

இ) இந்திய தேசிய காங்கிரஸின் முதலாவது அமர்வு எங்கு நடந்தது?
பம்பாய்.

ஈ) சுதேசி இயக்கம் மீது ஆங்கிலேயர் எவ்வாறு பதில் நடவடிக்கை எடுத்தனர்?
- சுதேசி இயக்கத்தை இரும்புக்கரம் கொண்டு ஆங்கிலேய ஆட்சி அடக்கியது.
- முக்கியத் தலைவர்கள் சிறைகளில் நீண்ட காலத்திற்கு அடைக்கப்பட்டார்கள்.
- புரட்சியாளர்கள் தூக்கில் தொங்கவிடப்பட்டனர்.
- பத்திரிக்கைச் சுதந்திரம் முடக்கப்பட்டது.

கூடுதல் வினாக்கள்

4. **பிளாசிப் போர்:**

அ) பிளாசிப்போர் எப்பொழுது நடைபெற்றது?
1757 ஜுன் 23இல் பிளாசிப்போர் நடைபெற்றது.

ஆ) பிளாசிப்போர் யார் யாருக்கிடையே நடைபெற்றது?
பிளாசிப்போர் வங்காள நவாபான சிராஜ்–உத்–தௌலாவிற்கும், ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனிக்குமிடையே நடைபெற்றது.

இ) வங்காள நவாப்பின் படைக்குத் தலைமையேற்றவர் யார்?
மீர் ஜாபர்.

ஈ) இப்போரினை நடத்திய ஆங்கிலேயப் படையின் தலைமைத் தளபதி யார்?
ராபர்ட் கிளைவ்.

5. **ஃபராசி இயக்கம்:**

அ) ஃபராசி இயக்கம் யாரால் எப்பொழுது தொடங்கப்பட்டது?
ஃபராசி இயக்கம் ஹாஜி ஷரியத்துல்லா என்பவரால் 1818ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

ஆ) இவ்வியக்கம் எங்கு தொடங்கப்பட்டது?
வங்காளத்தின் கிழக்குப் பகுதிகளில் இவ்வியக்கம் தொடங்கப்பட்டது.

இ) ஹாஜி ஷரியத்துல்லா. உறுப்பினர்களிடம் என்ன வேண்டுகோள் விடுத்தார்?
அவர் இஸ்லாத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

ஈ) ஹாஜி ஷரியத்துல்லா மறைவிற்குப் பிறகு இந்த கிளர்ச்சிக்கு தலைமையேற்றவர் யார்?
ஹாஜி ஷரியத்துல்லாவின் மறைவிற்குப் பிறகு அவரது மகன் டுடு மியான் தலைமையேற்றார்.

6. **பெரும்புரட்சி:**

அ) பெரும்புரட்சி எப்போது வெடித்தது?
பெரும்புரட்சி 1857 ஆம் ஆண்டு வெடித்தது.

ஆ) நானாசாகிப் தனது வெறுப்பை ஆங்கிலேயர் மீது அதிகப்படுத்தியது ஏன்?
அவருக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வுதியத்தைத் தர கம்பெனி மறுத்துவிட்டது.

இ) ராணி லட்சுமி பாய் ஏன் ஆங்கிலேயரை எதிர்த்தார்?
அவரது கணவரின் மரணத்திற்குப் பின் தனது வாரிசாக ஒரு ஆண்பிள்ளையைத் தத்து எடுத்துக்கொள்ள அனுமதி மறுக்கப்பட்டது.

ஈ) புரட்சி ஏற்படுவதற்கான உடனடிக் காரணம் யாது?
புதிய என்பீல்டு துப்பாக்கிக்கு வழங்கப்பட்ட தோட்டாக்கள் பற்றிய வதந்தியே முக்கிய காரணமாகும்.

VII. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. **1857ஆம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் மற்றும் பின்விளைவுகள் குறித்து விரிவாக ஆராயவும்.**

காரணங்கள்: PTA

அ) ஆங்கிலேய இந்தியாவின் இணைப்புக் கொள்கை:

- 1840 மற்றும் 1850களில் இரண்டு முக்கியக் கொள்கைகளின் மூலம் அதிக நிலப்பகுதிகள் இணைத்துக் கொள்ளப்பட்டன.

மேலதிகாரக் கொள்கை:

- ஆங்கிலேயர் தங்களை வானளாவிய அதிகாரங்கள் கொண்ட உயர் அதிகார அமைப்பாக கருதினார்கள்.
- உள்நாட்டு ஆட்சியாளர்கள் ஊழல்வாதிகள் மற்றும் திறனற்றவர்கள் என்ற அடிப்படையில் புதிய நிலப்பகுதிகள் இணைக்கப்பட்டன.

வாரிசு இழப்புக் கொள்கை:

- அரசுக்கட்டிலில் அரியணை ஏற தமக்கு பிறந்த ஆண் வாரிசை உருவாக்க உள்நாட்டு ஆட்சியாளர்கள் தவறினால் அந்த ஆட்சியாளரது இறப்பிற்குப்பின் அந்தப் பகுதி ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- சதாரா, சம்பல்பூர், பஞ்சாபின் சில பகுதிகள், ஜான்சி மற்றும் நாக்பூர் ஆகியன இந்த வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் ஆங்கிலேய ஆட்சியின்கீழ் கொண்டு வரப்பட்டன.

ஆ) இந்திய கலாச்சார உணர்வுகள் பற்றிய தீவிரத்தன்மை இல்லாதது:

- 1806ஆம் ஆண்டில் வேலூரில் சிப்பாய்கள் மதக்குறியீடுகளை நெற்றியில் அணிவதற்கும், தாடி வைத்துக் கொள்வதற்கும், தடைவிதிக்கப்பட்டதோடு தலைப்பாகைகளுக்குப் பதிலாக வட்டவடிவிலான தொப்பிகளை அணியுமாறு பணிக்கப்பட்டனர். அதனை எதிர்த்து அவர்கள் கிளர்ச்சி செய்தனர்.
- இத்தகைய ஆடைக்கட்டுப்பாடுகள் சிப்பாய்களை கிறித்துவ மதத்திற்கு மாறச் செய்வதற்கான ஒரு முயற்சியாக அவர்கள் அஞ்சினார்கள்.
- அதேபோன்று 1824ஆம் ஆண்டு கல்கத்தா அருகே பராக்பூரில் சிப்பாய்கள் கடல்வழியாக பர்மா செல்ல மறுத்தனர். கடல் கடந்து சென்றால் தங்களது சாதியை இழக்க நேரிடும் என்று அவர்கள் நம்பினார்கள்.
- ஊதியம் மற்றும் பதவி உயர்வில் பாரபட்சம் காட்டப்படுவது குறித்தும் சிப்பாய்கள் கவலை அடைந்தனர்.
- ஐரோப்பிய சிப்பாய்களுடன் ஒப்பிடுகையில் இந்திய சிப்பாய்களுக்கு மிகக் குறைந்த அளவில் ஊதியம் வழங்கப்பட்டது.
- அவர்கள் தரக்குறைவாக நடத்தப்பட்டதோடு மூத்த படையினரால் இனக்குறியிடப்பட்டு அவமதிக்கப் பட்டார்கள்.

உடனடிக்காரணம்:

- புதிய என்ஃபீல்டு துப்பாக்கிக்கு வழங்கப்பட்ட தோட்டா பற்றிய வதந்தியே புரட்சிக்கு உடனடிக் காரணமாகும்.
- பசு மற்றும் பன்றிக் கொழுப்பினால் தயாரிக்கப்பட்ட பசை இத்தோட்டாக்களில் பயன்படுத்தப்பட்டதாக வதந்தி பரவியது. அத்தோட்டாவினை வாயால் கடிக்க வேண்டியிருந்தது.
- பசு இந்துக்களுக்கு புனிதமானதாகவும், பன்றி முஸ்லீம்களுக்கு தடைசெய்யப்பட்ட உணவாகவும் இருந்ததால் சிப்பாய்கள் இவற்றை உபயோகிக்க மறுத்தனர்.

பின்விளைவுகள்:

அ) இந்தியா ஆங்கில அரசுக் காலனியாக மாறுதல்:

- 1858ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி இந்தியா பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் நேரடியான ஆட்சியின் கீழ் வந்தது.

ஆ) நிர்வாகத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள்:

- இந்திய மக்களுக்கு விக்டோரியா அரசியார் செய்த அறிவிப்பில், பாரம்பரிய நிறுவனங்கள் மற்றும் மதம் தொடர்பான விஷயங்களில் ஆங்கிலேய அரசு தலையிடாது என்று தெரிவித்தார்.
- அரசுப் பணிகளில் இந்தியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று உறுதி மொழி கூறப்பட்டது.
- இந்திய இராணுவத்தில் இந்தியர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டது.
- இராணுவத்தில் முக்கியமான பதவிகள் மற்றும் பொறுப்புகள் வகிப்பதிலிருந்து இந்தியர்கள் விலக்கி வைக்கப்பட்டனர்.

2. 1905ஆம் ஆண்டு நிகழ்ந்த வங்காளப் பிரிவினையின்போது வங்காள மக்கள் எவ்விதம் நடந்து கொண்டனர்?

வங்கப்பிரிவினை:

- கர்சன் பிரபு 1905ஆம் ஆண்டு வங்கப்பிரிவினையினை நடைமுறைப்படுத்தினார். இது மிகவும் அதிருப்தியினை சம்பாதித்த நிகழ்வாகும்.
- இந்துக்கள், முஸ்லிம்களிடையே பிளவை உருவாக்கி வங்காளத்தில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக நடந்த அரசியல் நடவடிக்கைகளை அடக்க வங்கப்பிரிவினை வகுக்கப்பட்டது.
- வங்காளிகளின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தி தேசியவாத இயக்கத்தை வலுவிழக்கச் செய்வதே வங்கப்பிரிவினைக்கான நோக்கம் என்று வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டது.
- வங்காளத்தைப் பிரித்து இரண்டு நிர்வாகப் பிரிவுகளின் கீழ் வைத்ததன் மூலம் வங்காள மொழி பேசும் மக்களை, ஒரு மொழி சிறுபான்மையினர் என்ற தகுதிக்கு கர்சன் பிரபு குறைத்துவிட்டார்.
- இந்தியா முழுவதும் விரிவான போராட்டங்கள் பரவ இந்தப் பிரிவினை வழிவகுத்ததன் மூலம் இந்திய தேசிய இயக்கத்துக்கு புதிய அத்தியாயத்தை உருவாக்கியது.
- மத அடிப்படையில் வங்காள மக்களை பிரிக்கவேண்டிய பிரிவினைச் செயலானது அவர்களைப் பிரிப்பதற்குப் பதிலாக ஒன்றிணைத்தது.

பிரிவினைக்கு எதிரான இயக்கம்:

- பிரிவினை பற்றி யோசனை கூறப்பட்ட நிலையிலேயே மித தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகள் ஆகிய இரு பிரிவு தலைவர்கள் குழுக்களும் விமர்சனம் செய்தன.
- ஆரம்பகாலப் பிரிவினைவாத எதிர்ப்பு பிரச்சாரம் இங்கிலாந்தின் பொதுக்கருத்தை மாற்றும் குறிக்கோளில் மட்டுமே பயன்படுத்தப்பட்டது.
- அதனால் வேண்டுகோள்கள், செய்திப்பிரச்சாரங்கள், மனுக்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றின் மூலமாக பிரிவினைக்கு எதிராக அவர்கள் போராட்டம் நடத்தினார்கள்.
- விரிவான ஆர்ப்பாட்டங்கள் நடந்தபோதிலும் 1905ஆம் ஆண்டு ஜூலை 19ஆம் நாள் வங்கப்பிரிவினை அறிவிக்கப்பட்டது.

- வங்கப் பிரிவினையை தடுக்கத்தவறிய மித தேசியவாதத் தலைவர்கள், புதிய யுக்தியாக அந்நியப் பொருட்களை புறக்கணிக்கும் நோக்கத்தோடு சுதேசி இயக்கத்தைத் தொடங்கினர்.
- முழுமையான மறைமுக எதிர்ப்பைத் துவங்குவதற்கு பிரச்சாரத்தைப் பயன்படுத்த மித தேசியவாதிகள் ஆதரவாக இல்லை.
- மற்றொரு புறம் தீவிர தேசியவாதிகள் வங்காளத்தை தாண்டி இந்த இயக்கத்தை விரிவு செய்வதற்கு மிகப்பெரிய அளவில் பொதுமக்கள் போராட்டத்தை துவங்க ஆதரவாக இருந்தனர்.
- 1905 அக்டோபர் 16இல் வங்காளம் அதிகாரபூர்வமாகப் பிரிவினையானபோது அந்த நாள் துக்க நாளாக அறிவிக்கப்பட்டது.
- ஆயிரக்கணக்கானவர்கள் கங்கை நதியில் புனித நீராடியதோடு வந்தே மாதரம் பாடலை பாடியபடி கல்கத்தாவின் சாலைகளில் அணிவகுத்துச் சென்றார்கள். வங்காளத்தில் புறக்கணிப்பும் சுதேசி இயக்கமும் எப்பொழுதும் ஒன்றுடன் ஒன்று இணைந்தே இருந்தன.

3. தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கத்தைத் தொடங்கியதன் மூலம் திலகரும் அன்னிபெசன்ட் அம்மையாரும் இந்திய சுதந்திரப் போராட்டத்தை 1916ஆம் ஆண்டுக்குப் பின் எவ்வாறு தக்க வைத்தனர்?

தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கம்:

- லோக்மானிய பாலகங்காதர திலகர், அன்னிபெசன்ட் அம்மையார் ஆகியோர் தலைமையிலான தன்னாட்சி இயக்கத்தின் போது இந்திய தேசிய இயக்கம் புத்துயிரூட்டப்பட்டு தீவிரப்படுத்தப்பட்டது.
- முதல் உலகப்போரும், இந்தியா அந்தப்போரில் பங்கேற்றதும்தான் தன்னாட்சி இயக்கத்துக்கான பின்னணியாகும்.
- 1914ஆம் ஆண்டில் ஜெர்மனிக்கு எதிராக பிரிட்டன் போர் அறிவித்த நிலையில் மித இந்தியா பிரிட்டனுக்கு ஆதரவைத் தந்தது.
- அதற்குப் பதில் பிரிட்டிஷ் அரசு போருக்குப் பிறகு தன்னாட்சியை இந்தியாவிற்கு வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இதுபற்றி ஆங்கிலேயர் எந்த கருத்தும் கூறவில்லை.

கருத்து :

- இந்தியாவுக்கு தன்னாட்சி வழங்காமல் ஆங்கிலேய அரசு ஏமாற்றியதால் ஆங்கிலேய அரசுக்கு நெருக்கடி தரும் புதிய மக்கள் இயக்கத்துக்கான அழைப்பாக தன்னாட்சி இயக்கம் உருவெடுத்தது,
- தன்னாட்சி இயக்கத்தின் வளர்ச்சிக்கு அன்னிபெசன்ட் அம்மையாரின் அதிகரித்து வரும் புகழ் ஒரு முக்கியக் காரணமாகும்.
- லக்னோவில் நடந்த காங்கிரஸ் அமர்வில் தீவிர தேசியவாத குழுவினரையும் கட்சியில் சேர்க்க அனுமதிக்கப்பட்டது.

திலகர் மற்றும் அன்னிபெசன்ட்:

- 1916 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திலகர் முதலாவது தன்னாட்சி இயக்கத்தை நிறுவினார்.
- 1916ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பொறுமையற்ற தனது ஆதரவாளர்களின் தொடர் கோரிக்கைகளை அடுத்து அன்னிபெசன்ட் அம்மையார் காங்கிரஸ் கட்சியின் ஆதரவின்றி தன்னாட்சி இயக்கத்தை ஆரம்பிக்க முடிவு செய்தார்.
- இரண்டு அமைப்புகளும் சுதந்திரமாகச் செயல்பட்டன. பத்திரிக்கை, உரைகள், பொதுக்கூட்டங்கள், விரிவுரைகள், விவாதங்கள் மற்றும் தன்னாட்சிக்கு ஆதரவான சுற்றுப் பயணம் ஆகியவை மூலமாக தீவிரப் பிரச்சார இயக்கத்தை நடத்த தன்னாட்சி இயக்கங்கள் பயன்பட்டன.
- இளைஞர்களை அதிக எண்ணிக்கையில் சேர்ப்பதிலும் இவ்வியக்கங்களை ஊரகப் பகுதிகளுக்குக் கொண்டு சேர்ப்பதிலும் இரண்டு அமைப்புகளுமே வெற்றி பெற்றன.

கூடுதல் வினாக்கள்

4. 1857ஆம் ஆண்டு கிளர்ச்சியின் தோல்விக்கான காரணங்கள் யாவை? **PTA**

- 1857ஆம் ஆண்டு நடந்த கிளர்ச்சி முறையாக ஒருங்கிணைக்கப்படவில்லை. சரியாக திட்டமிடப்படவில்லை. அது தானாக நடந்தது.
- ஆனால் தில்லி முற்றுகையிடப்பட்ட பிறகு அண்டை மாநிலங்களின் ஆதரவைப் பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டது.
- ஒரு சில இந்திய மாநிலங்களைத் தவிர, இந்தக் கிளர்ச்சியில் பங்கேற்க இந்திய இளவரசர்களிடம் பொதுவாக ஆர்வம் குறைந்து காணப்பட்டது.
- காலனி அரசுக்கு விசுவாசமாக அல்லது ஆங்கிலேய அதிகாரத்தை அறிந்து அச்சப்பட்டு இந்திய அரசர்களும், ஜமீன்தாரர்களும் ஒதுங்கியிருந்தனர்.
- கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களும் குறைந்த அளவே ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் கிடைத்தும் அல்லது கிடைக்காமலும் இருந்தனர்.
- ஆங்கில அறிவு பெற்ற நடுத்தர வகுப்பும் கிளர்ச்சிக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.
- மத்திய தலைமை இல்லாததும் கிளர்ச்சி தோல்வியடைய முக்கிய காரணமாக அமைந்தது.
- ஆங்கிலேய அரசுக்கு எதிராக சண்டையிட்ட பல்வேறு சக்திகளை ஒன்றிணைக்க பொதுவான செயல்திட்டம் ஏதுமில்லாமல் போனது.
- இந்தியர்களுக்கு போதிய ஆயுதங்கள் கிடைக்கவில்லை.
- முறையான அமைப்பாற்றல் இல்லை.
- இந்திய வீரர்களிடையே ஒழுக்கம் இல்லை.
- உதவியாளர்களாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டனர்.
- ஆங்கில இராணுவம் கிளர்ச்சியைக் கடுமையாக ஒடுக்கியது.

5. இந்திய தேசிய காங்கிரஸின் ஆரம்பகால கோரிக்கைகள் யாவை? **PTA**

- மாகாண மற்றும் மத்திய அளவில் சட்ட மேலவைகளை உருவாக்குவது.
- சட்ட மேலவைகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது.
- நிர்வாகத்துறையிலிருந்து நீதித்துறையைப் பிரிப்பது.
- இராணுவச் செலவுகளைக் குறைப்பது.
- உள்நாட்டு வரிகளைக் குறைப்பது.
- நீதிபதி மூலமாக விசாரணையை விரிவு செய்வது.
- ஒரே நேரத்தில் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஆட்சிப்பணித் தேர்வுகளை நடத்துவது.
- காவல்துறை சீர்திருத்தங்கள்.
- வனச்சட்டத்தை மறுபரிசீலனை செய்தல்.
- இந்தியத் தொழிற்சாலைகளின் மேம்பாடு மற்றும் முறையற்ற கட்டணங்கள் மற்றும் கலால் வரிகளை முடிவுக்குக் கொண்டுவருவது.

காலக்கோடு (முக்கிய நிகழ்வுகள்)

1757 – பிளாசிப் போர்

1806 – வேலூர் புரட்சி

1818 – ஃபராசி இயக்கம் தொடங்கப்பட்டது

1824	–	பாரக்பூர் சிப்பாய்கள் கடல் வழியாக பர்மா செல்ல மறுத்தனர்.
1827	–	வஹாபி கிளர்ச்சி.
1831 - 1832	–	கோல் கிளர்ச்சி.
1852	–	சென்னை வாசிகள் சங்கம்.
1854	–	சமூகக் கொள்ளை நடவடிக்கைகளை பீர்சிங் நடத்தினார்.
1855	–	1. சாந்தலர் கிளர்ச்சி 2. மகாஜன்கள், ஜமீன்தார்கள், ஆங்கிலேய அதிகாரிகளுக்கு எதிரான புரட்சி.
1857	–	1. பெருங்கலகம் (பெரும்புரட்சி) 2. மீரட்டிலிருந்து செங்கோட்டை நோக்கிய சிப்பாய்கள் அணிவகுப்பு. 3. இரண்டாம் பகதூர்ஷா இந்துஸ்தானத்தின் மாமன்னராக பதவியேற்ப்பு 4. கான்பூர் முற்றுகை. 5. கிளர்ச்சி ஒடுக்கப்பட்டது. 6. தில்லி ஆங்கிலேய துருப்புகளால் கைப்பற்றப்பட்டது.
1858	–	இந்திய அரசுச்சட்டத்தை பிரிட்டிஷ் நாடாளுமன்றம் ஏற்றுக் கொண்டது.
1859	–	இண்டிகோ கிளர்ச்சி
1860	–	நீல தர்ப்பன் நாடகத்தை தீனபந்து மித்ரா எழுதினர்.
1866	–	கிழக்கிந்திய அமைப்பு
1870	–	புனா சர்வஜினிக் சபா
1875	–	தக்காண கலவரங்கள்
1884	–	சென்னை மாகாஜன சபா
1885	–	1. இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப்பட்டது 2. பம்பாய் மாகாண சங்கம்.
1899	–	இந்தியாவின் அரசுப் பிரதிநிதியாக கர்சன் பிரபு நியமனம்.
1900	–	பிர்சா முண்டா கைது
1905	–	வங்கப் பிரிவினை
1905 - 1911	–	சுதேசி இயக்கம்
1906	–	சுதேசி நீராவி கப்பல் கம்பெனி தொடங்கப்பட்டது
1908	–	சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம்.
1914	–	முதல் உலகப்போர் துவக்கம்
1916	–	1. தன்னாட்சி இயக்கம் 2. லக்னோ ஒப்பந்தம்
1919	–	மாண்டேகு-செம்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தம் ரௌலட் சட்டம்

வரைபடங்கள்

1857இல் பெருங்கலகம் நடைபெற்ற மையங்கள்



தேசியம் : காந்திய காலகட்டம்

மனவரைபடம்

மகாத்மா காந்தி

1915 ல் தென்னாப்பிரிக்காவில் இருந்து தாயகம் திரும்பினார்

- செயல் உத்தியாக சத்தியாகிரகத்தை மேம்படுத்துதல்
  - சம்பரான் சத்தியாகிரகம்
  - ரௌலட் சத்தியாகிரகம்
  - ஜாலியன்வாலா பாக் படுகொலை
- கிலாபத் இயக்கம்
- ஒத்துழையாமை இயக்கம்
  - வரிகொடா இயக்கம்
  - சௌரி சௌரா சம்பவம்
  - சைமன் குழு புறக்கணிப்பு
- சட்ட மறுப்பு இயக்கம்
  - உப்புச் சத்தியாகிரகம்
  - வட்டமேசை மாநாடு
  - காந்தி – இர்வின் ஒப்பந்தம்
- வெள்ளையனே வெளியேறு இயக்கம்
  - கிரிப்ஸ் தூதுக்குழு
  - "செய் அல்லது செத்துமடி" முழக்கம்
  - இந்திய தேசிய ராணுவம்
- விடுதலையை நோக்கி
  - சிம்லா மாநாடு
  - அமைச்சரவைத் தூதுக்குழு
  - நேரடி நடவடிக்கை நாளுக்கு முஸ்லிம் லீக் அழைப்பு விடுத்தல்
  - மவுண்ட்பேட்டன் திட்டம்

நினைவில் கொள்க

- மகாத்மா காந்தி, தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களின் சமூக உரிமைகளுக்காக சுமார் 20 ஆண்டுகள் போராடினார்.
- அனைவரும் பின்பற்றத்தக்க "சத்தியாகிரகம்" என்ற புதிய வழிமுறையை காந்தியடிகள் அறிமுகம் செய்தார்.
- காந்தியடிகள் முதன்முறையாக இனவெறியை எதிர்கொண்ட இடம் தென்னாப்பிரிக்கா.
- ரஸ்கின் அவர்களால் பெரிதும் ஈர்க்கப்பட்ட காந்தியடிகள் பீனிக்ஸ் குடியிருப்பையும், டால்ஸ்டாய் பண்ணையையும் நிறுவினார்.
- காந்தியடிகளால் தனது அரசியல் குருவாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர் கோபால கிருஷ்ண கோகலே ஆவார்.
- காந்தியடிகள் தமது வழக்கமான ஆடைகளை விடுத்து சாதாரண வேட்டிக்கு மாறிய இடம் தமிழகம்.
- காந்தியடிகளால் "கருப்புச் சட்டம்" என்று அழைக்கப்பட்டது ரௌலட் சட்டம்.
- இரபீந்திரநாத் தாகூர் "வீரத்திருமகன்" (knight hood) என்ற அரசுப் பட்டத்தையும் காந்தியடிகள் கெய்சர்–இ–ஹிந்த் என்ற பதக்கத்தையும் திருப்பிக் கொடுத்தனர்.
- கிலாபத் இயக்க மாநாட்டில் சௌகத் அலி முழங்கிய தேசிய முழக்கங்கள் "அல்லாஹு அக்பர், வந்தே மாதரம், இந்து–முஸ்லிம் வாழ்க" என்பதாகும்.
- 1923ஆம் ஆண்டு மோதிலால் நேருவும், சி.ஆர். தாஸும் இணைந்து தொடங்கிய கட்சி சுயராட்சியக் கட்சியாகும்.
- இந்து–முஸ்லிம் ஒற்றுமையின் தூதராகப் பாராட்டப்பட்டவர் முகம்மது அலி ஜின்னா. பின்னர் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு முஸ்லிம்களுக்கு தனிநாடு என வலியுறுத்தினார்.
- இந்திய சுதந்திரத் திருநாளாக அறிவிக்கப்பட்ட நாள் 1930 ஜனவரி 26.
- காந்தியடிகள் 1930ஆம் ஆண்டு சபர்மதி ஆசிரமத்திலிருந்து தனது புகழ்பெற்ற "தண்டி யாத்திரையைத்" தொடங்கினார்.
- "செய் அல்லது செத்து மடி" என்ற முழக்கத்தை வெளியிட்டவர் காந்தியடிகள்.
- இந்திய தேசிய இராணுவத்தைத் தொடங்கி "டெல்லிக்குப் புறப்படு" (தில்லி சலோ) என்று முழங்கியவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. அமிர்தசரஸில் ரௌலட் சட்ட எதிர்ப்புப் போராட்டங்களின் போது கைது செய்யப்பட்டவர் யார்?
அ) மோதிலால் நேரு ஆ) சைஃபுதீன் கிச்லு இ) முகம்மது அலி ஈ) ராஜ்குமார் சுக்லா

2. இந்திய தேசிய காங்கிரசின் எந்த அமர்வில் ஒத்துழையாமை இயக்கத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது?
அ) பம்பாய் ஆ) மதராஸ் இ) லக்னோ ஈ) நாக்பூர்

3. விடுதலை நாளாக கீழ்க்கண்டவற்றில் எந்த நாள் அறிவிக்கப்பட்டது?
அ) 1930 ஜனவரி 26 ஆ) 1929 டிசம்பர் 26 இ) 1946 ஜூன் 16 ஈ) 1947 ஜனவரி 15

4. முதலாவது வனங்கள் சட்டம் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது? PTA
அ) 1858 ஆ) 1911 இ) 1865 ஈ) 1936

5. 1933 ஜனவரி 8 எந்த நாளாக அனுசரிக்கப்பட்டது?
அ) கோவில் நுழைவு நாள் ஆ) மீட்பு நாள் (டெலிவரன்ஸ் டே)
இ) நேரடி நடவடிக்கை நாள் ஈ) சுதந்திரப் பெருநாள்

6. மாகாண தன்னாட்சியை அறிமுகம் செய்த சட்டம் எது? PTA
அ) 1858ஆம் ஆண்டு சட்டம் ஆ) இந்திய கவுன்சில் சட்டம், 1909
இ) இந்திய அரசுச் சட்டம், 1919 ஈ) இந்திய அரசுச் சட்டம், 1935

7. காந்தியின் வேட்பாளரான பட்டாபி சீதாராமய்யாவை வீழ்த்தி 1939ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைவராக பதவிக்கு வந்தவர் யார்?
அ) ராஜேந்திர பிரசாத் ஆ) ஜவகர்லால் நேரு
இ) சுபாஷ் சந்திர போஸ் ஈ) மௌலானா அபுல் கலாம் ஆசாத்

8. 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாள் இந்தியா சுதந்திரம் அடைந்தபோது காந்தியடிகள் எங்கிருந்தார்?
அ) புதுதில்லி ஆ) அகமதாபாத் இ) வர்தா ஈ) நவகாளி

கூடுதல் வினாக்கள்

9. மகாத்மா காந்தி, இந்தியர்களின் சமூக உரிமைகளுக்காக எந்த நாட்டில் போராடினார்?
அ) தென் அமெரிக்கா ஆ) தென்னாப்பிரிக்கா இ) மலேசியா ஈ) பர்மா

10. காந்தியடிகள் சட்டம் பயில்வதற்காகச் சென்ற நாடு
அ) அமெரிக்கா ஆ) ஜப்பான் இ) ரஷ்யா ஈ) இங்கிலாந்து

11. காந்தியடிகள் வழக்குரைஞராகப் பணியாற்றிய இடம்
அ) பம்பாய் ஆ) கல்கத்தா இ) சென்னை ஈ) தில்லி

12. மகாத்மா காந்தி தமது வழக்கமான ஆடைகளை விடுத்து சாதாரண வேட்டிக்கு மாறிய இடம்
அ) குஜராத் ஆ) வங்காளம் இ) தமிழகம் ஈ) பீகார்

13. "தீன் காதியா" முறை பின்பற்றப்பட்ட இடம்
அ) சம்பரான் ஆ) பாட்னா இ) மீரட் ஈ) காசி

14. இந்தியாவின் முதலாவது குடியரசுத் தலைவர்
அ) அம்பேத்கார் ஆ) இராதாகிருஷ்ணன் இ) ராஜேந்திர பிரசாத் ஈ) இராஜாஜி

15. "கருப்புச் சட்டம்" என்று காந்தியடிகளால் அழைக்கப்பட்டது
அ) இந்திய அரசுச் சட்டம் ஆ) ரௌலட் சட்டம்
இ) மிண்டோ–மார்லி சட்டம் ஈ) மாண்டேகு–செம்ஸ்போர்டு சட்டம்

16. "வீரத்திருமகன்" என்ற அரசுப் பட்டத்தை திருப்பிக் கொடுத்தவர்
அ) தேவேந்திரநாத் தாகூர் ஆ) காந்தியடிகள்
இ) சுபாஷ் சந்திர போஸ் ஈ) இரபீந்திரநாத் தாகூர்

17. துருக்கியில் இருந்த கலிபா பதவியை மீட்பதற்காகத் தொடங்கப்பட்ட இயக்கம்
அ) வஹாபி இயக்கம் ஆ) கிலாபத் இயக்கம்
இ) தன்னாட்சி இயக்கம் ஈ) ஒத்துழையாமை இயக்கம்

18. மோதிலால் நேருவும், C.R.தாஸும் இணைந்து தொடங்கிய கட்சி
அ) சுயராஜ்ய கட்சி ஆ) பார்வர்டு பிளாக் கட்சி
இ) கம்யூனிஸ்ட் கட்சி ஈ) சோஸியலிசக் கட்சி

19. சைமன் குழு புறக்கணிப்பின் போது காவல்துறையின் கடுமையான தாக்குதலால் உயிரிழந்தவர்
அ) சுக்தேவ் ஆ) பகத்சிங் இ) லாலா லஜ்பதிராய் ஈ) ராஜகுரு

20. 1929இல் நேரு தலைமையில் காங்கிரஸ் அமர்வு நடைபெற்ற இடம்
அ) லாகூர் ஆ) சூரத் இ) அமிர்தசரஸ் ஈ) பம்பாய்

21. தமிழ் நாட்டில் வேதாரண்யம் கடற்கரையில் உப்பு சத்தியாகிரகம் செய்தவர்
அ) காமராஜர் ஆ) வ.உ.சிதம்பரனார் இ) பாரதியார் ஈ) சி.ராஜாஜி

22. இந்தியா சந்தித்த மக்கள் இயக்கங்களிலேயே மிகப்பெரியது
அ) ஒத்துழையாமை இயக்கம் ஆ) வெள்ளையனே வெளியேறு இயக்கம்
இ) உப்புச் சத்தியாகிரகம் ஈ) கிலாபத் இயக்கம்

23. காந்தியடிகள் மற்றும் அம்பேத்கரிடையே எட்டப்பட்ட ஒப்பந்தம்
அ) லாகூர் ஒப்பந்தம் ஆ) பூனா ஒப்பந்தம்
இ) சிம்லா ஒப்பந்தம் ஈ) காஷ்மீர் ஒப்பந்தம்

24. காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவி விலகிய நாளை "மீட்பு நாள்" என்று அறிவித்தவர்
அ) சௌகத் அலி ஆ) ரஹ்மத் அலி இ) முகமது இக்பால் ஈ) ஜின்னா

25. 1946ஆம் ஆண்டு இடைக்கால அரசின் பிரதமர்
அ) ஜவகர்லால் நேரு ஆ) முகமது அலி ஜின்னா
இ) வல்லபாய் படேல் ஈ) லியாகத் அலிகான்

விடைகள்

1. ஆ) சைஃபுதீன் கிச்லு 2. ஈ) நாக்பூர் 3. அ) 1930 ஜனவரி 26
4. இ) 1865 5. அ) கோவில் நுழைவு நாள்
6. ஈ) இந்திய அரசுச் சட்டம், 1935 7. இ) சுபாஷ் சந்திர போஸ்
8. ஈ) நவகாளி 9. ஆ) தென்னாப்பிரிக்கா 10. ஈ) இங்கிலாந்து
11. அ) பம்பாய் 12. இ) தமிழகம் 13. அ) சம்பரான்
14. இ) ராஜேந்திர பிரசாத் 15. ஆ) ரௌலட் சட்டம் 16. ஈ) இரபீந்திரநாத் தாகூர்
17. ஆ) கிலாபத் இயக்கம் 18. அ) சுயராஜ்ய கட்சி 19. இ) லாலா லஜ்பதிராய்
20. அ) லாகூர் 21. ஈ) சி.ராஜாஜி 22. இ) உப்புச் சத்தியாகிரகம்
23. ஆ) பூனா ஒப்பந்தம் 24. ஈ) ஜின்னா 25. அ) ஜவகர்லால் நேரு

II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. காந்தியடிகள் முதல் வகுப்பு ரயில் பெட்டியில் இருந்து __________ ரயில் நிலையத்தில் கீழிறக்கப்பட்டார்.
2. காந்தியடிகளின் அரசியல் குரு __________ ஆவார்.
3. கிலாபத் இயக்கத்துக்கு __________ தலைமை ஏற்றார்.
4. 1919ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் மாகாணங்களில் __________ அறிமுகம் செய்தது.
5. வடமேற்கு எல்லை மாகாணத்தில் சட்டமறுப்பு இயக்கத்தை தலைமையேற்று நடத்தியவர் __________ .
6. சிறுபான்மையினர் மற்றும் ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு தனித் தொகுதிகளை வழங்கும் __________ ஐ ராம்சே மெக்டொனால்டு அறிவித்தார்.
7. __________ என்பவர் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது காங்கிரஸ் வானொலியை திரைமறைவாக செயல்படுத்தினார்.
8. 'பாகிஸ்தான்' என்ற வார்த்தைப் பதத்தை __________ உருவாக்கினார்.

கூடுதல் வினாக்கள்

9. அனைவரும் பின்பற்றத்தக்க "சத்தியாகிரகம்" என்ற புதிய வழிமுறையை அறிமுகம் செய்தவர் __________ .
10. காந்தியடிகள் குஜராத்தின் __________ என்ற ஊரில் பிறந்தார்.
11. காந்தியடிகளின் தந்தை __________ தாய் __________ .
12. காந்தியடிகள் முதன் முதலாக இனவெறியை __________ நாட்டில் எதிர்கொண்டார்.
13. காந்தியடிகள் நிறுவிய குடியிருப்பு __________ பண்ணை __________.
14. சம்பரான் அமைந்துள்ள மாநிலம் __________.
15. ஒப்பந்தத் தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்ட தலைவரி __________ ஒப்பந்தத்தின்படி ரத்து செய்யப்பட்டது.
16. பிடி உத்தரவு இல்லாமல் கைது நடவடிக்கை செய்ய காவல்துறையினருக்கு அதிகாரம் வழங்கிய சட்டம் __________ .
17. கிலாபத் இயக்கத் தலைவர்கள் __________ மற்றும் __________.

18. காங்கிரஸ் உறுப்பினர்கள் கதர் ஆடை அணிவதை கட்டாயமாக்கியவர் __________ .
19. இந்து மகாசபை __________ தலைமையில் பிரபலம் அடைந்தது.
20. இந்தியாவில் இருந்த பல்வேறு அரசியல் கட்சிகளை __________ புறக்கணிப்பு ஒன்றிணைத்தது.
21. 1930ஆம் ஆண்டு இந்திய அரசப்பிரதிநிதியாக இருந்தவர் __________ .
22. காந்தியடிகள் தண்டியாத்திரையை __________ ஆசிரமத்திலிருந்து தொடங்கினார்.
23. செஞ்சட்டைகள் என்றழைக்கப்பட்ட "குடைகிட்மட்கர்" என்ற இயக்கத்தை நடத்தியவர் __________ .
24. வனவாசிகளின் நலனுக்காகப் போராடிய தியாகி __________ .
25. உப்புச்சத்தியாகிரகத்தின் போது கைது செய்யப்பட்ட காந்தியடிகள் __________ சிறையில் அடைக்கப்பட்டார்.
26. முதல் வட்டமேசை மாநாடு நடைபெற்ற இடம் __________ .
27. ரஷ்யப்புரட்சி நடைபெற்ற ஆண்டு __________ .
28. 1925 ஆம் ஆண்டு கான்பூரில் நடந்த அகில இந்திய பொதுவுடைமை மாநாட்டில் தலைமையுரை ஆற்றியவர் __________ .
29. இந்துஸ்தான் குடியரசு இராணுவம் உருவாக்கப்பட்ட இடம் __________ .
30. லாலா லஜ்பதிராயின் உயிரிழப்புக்குக் காரணமான தடியடியை நடத்திய ஆங்கிலேய காவல்துறை அதிகாரி __________ .
31. 1930இல் சிட்டகாங் ஆயுதக்கிடங்கு மீதான தாக்குதலை நடத்தியவர் __________ .
32. 1934ஆம் ஆண்டு முஸ்லிம் லீக்கிற்கு புத்துயிர் ஊட்டியவர்__________ .
33. 1940ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு தனிநாடு வேண்டும் என்று வலியுறுத்தியவர்__________ .
34. நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தொடங்கிய கட்சி __________ .
35. 1940 ஆகஸ்ட் மாதம் இந்தியர்களின் ஆதரவைப் பெறுவதற்காக ஒரு சலுகையை வழங்க முன்வந்த அரசப் பிரதிநிதி __________ .
36. 1940ஆம் ஆண்டு தனிநபர் சத்தியாகிரகப் போராட்டத்தை முதன் முதலாக ஆரம்பித்தவர் __________ .
37. "செய் அல்லது செத்துமடி" என்ற முழக்கத்தை வெளியிட்டவர் __________ .
38. மலேயா மற்றும் பர்மாவில் இருந்த ஜப்பானியர்களின் ஆதரவோடு இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கியவர் __________ .
39. இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்கிட விரும்பிய பிரிட்டிஷ் பிரதமர் __________ .
40. ஆட்சி மாற்றத்தை உறுதி செய்யும் பொறுப்புடன் இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட அரசுப்பிரதிநிதி__________ .

விடைகள்

1. பீட்டர் மாரீட்ஸ் பெர்க்
2. கோபால கிருஷ்ண கோகலே
3. அலி சகோதரர்கள்
4. இரட்டை ஆட்சிமுறை
5. கான் அப்துல் கஃபார்கான்
6. வகுப்புவாரி ஒதுக்கீட்டை
7. உஷா மேத்தா
8. சௌத்ரி ரஹ்மத் அலி
9. காந்தியடிகள்
10. போர்பந்தர்
11. காபா காந்தி, புத்லி பாய்
12. தென்னாப்பிரிக்கா
13. பீனிக்ஸ், டால்ஸ்டாய்
14. பீகார்
15. ஸ்மட்ஸ்–காந்தி
16. ரௌலட் சட்டம்
17. முகமது அலி, சௌகத் அலி
18. காந்தியடிகள்
19. பண்டித மதன்மோகன் மாளவியா
20. சைமன் குழு
21. இர்வின் பிரபு
22. சபர்மதி
23. கான் அப்துல் கஃபார்கான்
24. அல்லூரி சீதாராமராஜு
25. எரவாடா
26. லண்டன்
27. 1917
28. சிங்காரவேலர்
29. கான்பூர்
30. சாண்டர்ஸ்
31. சூர்யா சென்
32. முகமது அலி ஜின்னா
33. முகமது அலி ஜின்னா
34. பார்வர்டு பிளாக்
35. லின்லித்தோ
36. வினோபா பாவே
37. காந்தியடிகள்
38. ஜெனரல் மோகன் சிங்
39. கிளெமன்ட் அட்லி
40. மவுண்ட்பேட்டன்

III. சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. i) இந்திய பொதுவுடைமை கட்சி 1920ஆம் ஆண்டு தாஷ்கண்டில் தொடங்கப்பட்டது.
   ii) எம். சிங்காரவேலர் கான்பூர் சதித்திட்ட வழக்கில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.
   iii) ஜெயப்பிரகாஷ் நாராயண், ஆச்சார்ய நரேந்திர தேவ், மினு மசானி ஆகியோர் தலைமையில் காங்கிரஸ் சமதர்ம கட்சி உருவானது.
   iv) வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் சமதர்மவாதிகள் பங்கேற்கவில்லை.
   அ) (i) மற்றும் (ii) சரியானது ஆ) (ii) மற்றும் (iii) சரியானது
   இ) (iv) சரியானது ஈ) (i), (ii) மற்றும் (iii) சரியானது

2. i) இந்துஸ்தான் குடியரசு ராணுவம் 1924ஆம் ஆண்டு கான்பூரில் உருவானது.
   ii) காகோரி சதித்திட்ட வழக்கில் ராம் பிரசாத் பிஸ்மில் விசாரிக்கப்பட்டார்.
   iii) இந்துஸ்தான் சமதர்ம குடியரசு அமைப்பு சூர்யா சென் என்பவரால் உருவாக்கப்பட்டது.
   iv) சிட்டகாங் ஆயுதக்கிடங்குத் தாக்குதல் B.K.தத்தால் நடத்தப்பட்டது
   அ) (i) மற்றும் (ii) சரியானது ஆ) (i) மற்றும் (iii) சரியானது
   இ) (iii) சரியானது ஈ) (iii) மற்றும் (iv) சரியானது

3. கூற்று : காங்கிரஸ் முதலாவது வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டது.
   காரணம் : காங்கிரஸ் இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் கலந்துகொள்ள காந்தி–இர்வின் ஒப்பந்தம் வழிசெய்தது.
   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது. ஆனால் காரணம் சரியான விளக்கம் இல்லை,
   ஆ) கூற்று சரியானது, ஆனால் காரணம் தவறானது.
   இ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரியானது.
   ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது மற்றும் காரணம் சரியான விளக்கம் ஆகும்.

4. கூற்று : காங்கிரஸ் அமைச்சரவைகள் 1939ஆம் ஆண்டு பதவி விலகின. **PTA**
   காரணம் : காங்கிரஸ் அமைச்சரவைகளை ஆலோசிக்காமல் இந்தியாவின் காலனி ஆதிக்க அரசு போரில் பங்கேற்றது.
   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது. ஆனால் காரணம் சரியான விளக்கம் இல்லை.
   ஆ) கூற்று சரியானது ஆனால் காரணம் தவறானது,
   இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறானது.
   ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது மற்றும் காரணம் சரியான விளக்கம் ஆகும்.

கூடுதல் வினாக்கள்

5. i) பீகாரில் உள்ள சம்பரானில் "தீன்காதியா" முறை பின்பற்றப்பட்டது.
   ii) இந்திய விவசாயிகள் தங்கள் நிலத்தில் அவுரி (இண்டிகோ) பயிரிட வேண்டும் என்று ஐரோப்பிய பண்ணையாளர்கள் அவர்களைக் கட்டாயப்படுத்தினர்.
   iii) ஜெர்மானிய செயற்கைச் சாயங்களால் இண்டிகோ எனப்படும் நீலச்சாயம் சந்தையில் விற்கப்படுவது குறைந்தது.
   iv) சம்பரானுக்குச் செல்ல காந்தியடிகள் அனுமதிக்கப்படவில்லை.
   அ) (i) மற்றும் (ii) சரி ஆ) (iii) மற்றும் (iv) சரி
   இ) (i) மற்றும் (iii) சரி ஈ) (ii) மற்றும் (iv) சரி

6. கூற்று : 1919ஆம் ஆண்டு தில்லியில் நடைபெற்ற அகில இந்திய கிலாபத் மாநாட்டிற்கு காந்தியடிகள் தலைமையேற்றார்.

காரணம் : 1920ஆம் ஆண்டு அலகாபாத்தில் கூடிய கிலாபத் குழுவின் கூட்டம் காந்தியடிகளின் அகிம்சை மற்றும் ஒத்துழையாமை இயக்கத்தை ஏற்றுக் கொண்டது.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது.
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறானது.
இ) கூற்று சரியானது ஆனால் காரணம் தவறானது.
ஈ) கூற்று தவறானது, காரணம் சரியானது.

விடைகள்

1. ஈ) (i), (ii) மற்றும் (iii) சரியானது.
2. அ) (i) மற்றும் (ii) சரியானது.
3. அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது. ஆனால் காரணம் சரியான விளக்கம் இல்லை.
4. ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது மற்றும் காரணம் சரியான விளக்கம் ஆகும்.
5. இ) (i), (ii) மற்றும் (iii) சரி.
6. அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது.

IV. பொருத்துக:

பாடநூல் வினா

அ)

				விடை
1.	ரௌலட் சட்டம்	அ)	பட்டங்களைத் திரும்ப ஒப்படைத்தல்	1) உ
2.	ஒத்துழையாமை இயக்கம்	ஆ)	இரட்டை ஆட்சி	2) அ
3.	1919ஆம் ஆண்டின் இந்திய அரசு சட்டம்	இ)	M.N.ராய்	3) ஆ
4.	இந்திய பொதுவுடைமைக் கட்சி	ஈ)	நேரடி நடவடிக்கை நாள்	4) இ
5.	16 ஆகஸ்ட் 1946	உ)	கருப்புச் சட்டம்	5) ஈ

கூடுதல் வினாக்கள்

ஆ)

				விடை
1.	கடவுளின் அரசாங்கம் உன்னில் உள்ளது	அ)	தாகூர்	1) இ
2.	அண்டூ திஸ் லாஸ்ட்	ஆ)	உஷா மேத்தா	2) ஈ
3.	வீரத்திருமகன்	இ)	டால்ஸ்டாய்	3) அ
4.	கெய்சர்–இ–ஹிந்த்	ஈ)	ஜான் ரஸ்கின்	4) உ
5.	காங்கிரஸ் வானொலி	உ)	காந்தியடிகள்	5) ஆ

இ)

				விடை
1.	தீன் காதியா	அ)	வன்முறை	1) ஈ
2.	பைசாகி	ஆ)	பல்கலைக் கழகம்	2) இ
3.	சௌரி சௌரா	இ)	அறுவடைத் திருநாள்	3) அ
4.	வீட்டோ	ஈ)	சுரண்டல் முறை	4) உ
5.	கேம்பிரிட்ஜ்	உ)	அதிகாரம்	5) ஆ

				விடை
ஈ) 1. 1932	அ)	வெள்ளையனே வெளியேறு		1) இ
2. 1942	ஆ)	காந்தி–இர்வின் ஒப்பந்தம்		2) அ
3. 1922	இ)	பூனா ஒப்பந்தம்		3) உ
4. 1931	ஈ)	கிலாபத் இயக்கம்		4) ஆ
5. 1920	உ)	சௌரி சௌரா சம்பவம்		5) ஈ

			விடை
உ) 1. தண்டிபயணம்	அ)	1947	1) ஆ
2. ரௌலட் சட்டம்	ஆ)	1930	2) ஈ
3. மவுண்ட்பேட்டன் திட்டம்	இ)	1946	3) அ
4. கிரிப்ஸ் தூதுக்குழு	ஈ)	1919	4) உ
5. அமைச்சரவை தூதுக்குழு	உ)	1942	5) இ

			விடை
ஊ) 1. ஜெனரல் ரெஜினால்டு டயர்	அ)	ஆகஸ்ட் நன்கொடை	1) ஈ
2. இர்வின் பிரபு	ஆ)	அமைச்சரவைத் தூதுக்குழு	2) இ
3. ராம்சே மெக்டொனால்டு	இ)	இரண்டாம் வட்டமேசை மாநாடு	3) உ
4. லின்லித்தோ	ஈ)	ஜாலியன் வாலாபாக் படுகொலை	4) அ
5. பெதிக் லாரன்ஸ்	உ)	வகுப்புவாரி ஒதுக்கீடு	5) ஆ

V. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **ஜாலியன்வாலாபாக் படுகொலை பற்றி விவரிக்கவும்.** **PTA**

- அமிர்தசரஸில் உள்ள ஜாலியன்வாலாபாக்கில் 1919 ஏப்ரல் 13ஆம் நாள் ரௌலட் சட்டத்திற்கு எதிரான ஒரு பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது.
- ஆயிரக்கணக்கான கிராம மக்கள் அங்கு கூடியிருந்தனர்.
- இக்கூட்டம் பற்றி அறிந்தவுடன் அந்த இடத்தை பீரங்கி வண்டி மற்றும் ஆயுதமேந்திய வீரர்களுடன் ஜெனரல் ரெஜினால்டு டயர் சுற்றி வளைத்தார்.
- உயர்ந்த மதில்களுடன் அமைந்த அந்த மைதானத்துக்கு இருந்த ஒரே வாயில் பகுதியை ஆக்கிரமித்த ஆயுதமேந்திய வீரர்கள் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி கண்மூடித்தனமாக சுடத்தொடங்கினர்.
- துப்பாக்கிக் குண்டுகள் தீரும் வரை தொடர்ந்து 10 மணித்துளிகளுக்கு இந்தத் துப்பாக்கிச் சூடு நிகழ்ந்தது. 379 பேர் இந்த துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். ஓராயிரத்திற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.
- இது ஜாலியன் வாலாபாக் படுகொலை என்று அழைக்கப்படுகிறது. இது இந்தியர்களைக் கொதித்தெழச் செய்தது.

2. **கிலாபத் இயக்கம் பற்றி குறிப்பு வரைக.**

- இசுலாமிய மதத்தலைவர் என உலகம் முழுவதும் போற்றப்பட்ட துருக்கியின் கலிபா கடுமையாக நடத்தப்பட்டார்.
- அவருக்கு ஆதரவாக தோற்றுவிக்கப்பட்ட இயக்கமே கிலாபத் இயக்கம் என்று அழைக்கப்பட்டது.
- கலிபா அகத்துக்கு இருந்த அதிகாரம் மற்றும் பெருமைகளை நிலை நிறுத்தும் குறிக்கோளுடன் மௌலானா முகமது அலி மற்றும் மௌலானா சௌகத் அலி எனும் அலி சகோதரர்கள் தலைமையில் இவ்வியக்கம் நடந்தது.
- இந்த இயக்கத்துக்கு ஆதரவளித்த காந்தியடிகள், இந்த இயக்கத்தை இந்து முஸ்லிம்களை இணைக்க ஒரு வாய்ப்பாகக் கருதினார்.

3. **ஒத்துழையாமை இயக்கத்தை ஏன் காந்தியடிகள் திரும்பப்பெற்றார்?**

- ஒத்துழையாமை இயக்கம், ரௌலட் சட்டம் மற்றும் ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு எதிராகக் குரல் கொடுக்க 1920 ஆகஸ்ட் முதல் நாளில் காந்தியடிகளால் தொடங்கப்பட்டது.
- ஒத்துழையாமை இயக்கம் உச்சத்தில் இருந்தபோது உத்திரப்பிரதேசத்தில் சௌரி சௌரா என்ற இடத்தில் 1922இல் நடைபெற்ற வன்முறை நிகழ்வால் காந்தியடிகள் மனம் வருந்தினார்.
- ஒத்துழையாமை இயக்கம் வன்முறை இயக்கமாக மாறுவதைத் தடுக்க, அதனை 1922ஆம் ஆண்டு திரும்பப் பெற்றார்.

4. **சுயராஜ்ஜியம் வேண்டியோர் மற்றும் மாற்றத்தை விரும்பாதவர்கள் இடையே மோதல் ஏன் இருந்தது?**

- காங்கிரஸ் கட்சி, மாற்றத்தை விரும்புவோர்கள் மற்றும் மாற்றத்தை விரும்பாதவர்கள் என இரண்டாகப் பிளவுபட்டது.
- மோதிலால் நேரு, சி.ஆர்.தாஸ் ஆகியோர் தலைமையிலான காங்கிரசார் தேர்தலில் போட்டியிட்டு சட்டப்பேரவைக்குள் நுழைய வேண்டும் என்று விரும்பினார்கள்.
- சட்டப்பேரவையில் பங்கேற்று பணியாற்றுவதன் மூலமே தேசநலன் மேம்படும் என்றும் இரட்டை ஆட்சியில் பங்கேற்பதன் மூலம் தான் காலனி ஆதிக்க அரசை பாதிப்படைய வைக்க முடியும் என்றும் அவர்கள் வாதிட்டனர். இவர்கள் மாற்றத்தை விரும்புவோர்கள் ஆவர்.
- வல்லபாய் பட்டேல், சி.ராஜாஜி உள்ளிட்ட காந்தியடிகளைத் தீவிரமாகப் பின்பற்றிய பலர் அரசுடன் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடர விரும்பினார்கள். இவர்கள் மாற்றத்தை விரும்பாதவர்கள் ஆவர்.

5. **சைமன்குழு புறக்கணிக்கப்பட்டது ஏன்?**

- சர் ஜான் சைமன் தலைமையிலான இந்தக் குழுவில் ஏழு உறுப்பினர்கள் இடம் பெற்றனர். இக்குழுவில் இந்தியர்கள் எவரும் இடம்பெறாமல் அனைவரும் வெள்ளையர்களாகவே இடம் பெற்றனர்.
- இந்தியர் ஒருவர் கூட உறுப்பினராக இல்லாத காரணத்தால் இந்தியர்கள் ஆத்திரமும் அவமானமும் அடைந்தனர். தங்கள் அரசியல் சாசனத்தை நிர்ணயிக்க தங்களுக்கு உரிமை இல்லாத நிலை கண்டு கொதித்தனர்.
- காங்கிரஸ் மற்றும் முஸ்லிம்லீக் உள்ளிட்ட அனைத்து இந்தியப் பிரிவுகளும் சைமன் குழுவினை புறக்கணிப்பது என முடிவு செய்தது.

6. **முழுமையான சுயராஜ்ஜியம் என்றால் என்ன?** **PTA**

- டொமினியன் எனப்படும் தன்னாட்சிப் பகுதியின் தகுதி குறித்து திருப்தி அடையாத காங்கிரசார் சிலர், முழுமையான சுதந்திரம் வேண்டி கோரிக்கை வைத்தனர்.
- 1929 டிசம்பர் மாதம் லாகூரில் ஜவகர்லால் நேரு தலைமையில் நடந்த காங்கிரஸ் அமர்வில் முழுமையான சுதந்திரம் என்பது இலக்காக அறிவிக்கப்பட்டது.
- முழுமையான சுயராஜ்ஜியம் என்பது முழுமையான சுதந்திரம் பெறுவது ஆகும்.

7. **பகத்சிங் பற்றி குறிப்பு வரைக.**

- பஞ்சாபில் பகத்சிங், சுக்தேவ் மற்றும் அவரது தோழர்கள் இந்துஸ்தான் குடியரசு ராணுவத்தை மீண்டும் அமைத்தனர்,
- பொதுவுடைமை கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு அந்த அமைப்புக்கு இந்துஸ்தான் சமதர்மவாத குடியரசு அமைப்பு என்று பெயர் மாற்றம் செய்தனர்.
- லாலா லஜ்பதிராயின் உயிரிழப்புக்குக் காரணமான தடியடியை நடத்திய ஆங்கிலேய காவல்துறை அதிகாரி சாண்டர்ஸ் படுகொலை செய்யப்பட்டார்.
- 1929இல் மத்திய சட்டப் பேரவையில் புகைக்குண்டு ஒன்றை பகத்சிங்கும் B.K.தத்தும் வீசினார்கள். எவரையும் காயப்படுத்தும் நோக்கில் அந்தக் குண்டு எறியப்படவில்லை.
- ராஜகுருவும், பகத்சிங்கும் கைதுசெய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டது. பகத்சிங்கின் அசாத்தியமான துணிச்சல் இந்தியா முழுவதும் வாழ்ந்த இளைஞர்களை ஈர்த்ததால் அவர் பிரபலமடைந்தார்.

8. **பூனா ஒப்பந்தத்தின் கூறுகள் யாவை?**

- 1932 ஆம் ஆண்டு காந்தியடிகள் மற்றும் அம்பேத்கர் இடையே ஒப்பந்தம் ஒன்று எட்டப்பட்டது. இது பூனா ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்டது.

முக்கிய விதிமுறைகள்:

- தனித் தொகுதிகள் பற்றிய கொள்கைகள் கைவிடப்பட்டன. மாறாக, ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கும் கூட்டுத்தொகுதிகள் பற்றிய யோசனை ஏற்கப்பட்டது.
- ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கான இடங்கள் 71லிருந்து 148ஆக அதிகரிக்கப்பட்டது. மத்திய சட்டப்பேரவையில் 18 சதவீத இடங்கள் ஒதுக்கப்பட்டன.

கூடுதல் வினாக்கள்

9. **காந்தியடிகளை பெரும் தாக்கத்திற்குள்ளாக்கிய எழுத்தாளர்கள் யாவர்?**

- டால்ஸ்டாய் – "கடவுளின் அரசாங்கம் உன்னில் உள்ளது" (The Kingdom of God is within you).
- ஜான் ரஸ்கின் – "அண்டூ திஸ் லாஸ்ட்" (Unto this Last).
- தாரோ – "சட்ட மறுப்பு" (Civil Disobedience).

10. **ரௌலட் சட்டம் பற்றி குறிப்பு வரைக.**

- ரௌலட்சட்டம் 1919ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.
- இச்சட்டம், பிடிஉத்தரவு இல்லாமல் கைது நடவடிக்கை, விசாரணை இல்லாமல் சிறையிலடைப்பது என காவல்துறையினருக்கு அதீத அதிகாரங்களை வழங்கியது.
- இந்த சட்டத்தை "கருப்புச் சட்டம்" என்று காந்தியடிகள் அழைத்தார். மேலும் அதனை எதிர்த்து நாடு தழுவிய சத்தியாகிரகப் போராட்டத்திற்கு காந்தியடிகள் அழைப்பு விடுத்தார்.

11. **"வரிகொடா இயக்கம்" பற்றி குறிப்பு வரைக.**

- 1922ஆம் ஆண்டு பர்தோலியில் வரிகொடா இயக்கப் பிரச்சாரத்தை காந்தியடிகள் அறிவித்தார். இது தேசியத் தலைவராக காந்தியடிகளின் நற்பெயரை பெரிதும் மேம்படுத்தியது.
- இது விவசாயிகளின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தது. விவசாயிகள் மத்தியில் ஒரு மாபெரும் தலைவராக அவரது மரியாதையை உயர்த்தியது.
- காந்தியடிகள் நாடுதழுவிய சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். அவர் பயணம் மேற்கொண்ட இடங்களில் எல்லாம் அந்நியத் துணிகள் குவிக்கப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.
- மாணவர்கள் உட்பட அனைத்து தரப்பினரும் இதற்கு ஆதரவு அளித்தனர்.
- எனினும் சௌரி சௌரா நிகழ்வைத் தொடர்ந்து காந்தியடிகள் உடனடியாக இந்த இயக்கத்தைத் திரும்பப் பெற்றார்.

12. **சௌரி சௌரா சம்பவம் பற்றி எழுதுக.**

- 1922 பிப்ரவரி 5ஆம் நாள் உத்திரப்பிரதேசத்திலுள்ள கோரக்பூர் அருகே சௌரி சௌரா என்ற கிராமத்தில் தேசியவாதிகள் நடத்திய பேரணி காவல்துறையின் தூண்டுதலில் வன்முறையாக மாறியது.
- தாம் குறைந்த எண்ணிக்கையில் இருப்பதை உணர்ந்த காவல்துறையினர் பாதுகாப்புக்காக தங்களை காவல் நிலையத்துக்குள் அடைத்துக் கொண்டனர்.
- ஆனால் ஆத்திரம் கொண்ட கூட்டத்தினர் 22 காவலர்களுடன் காவல் நிலையத்தைத் தீயிட்டுக் கொளுத்தினர். இதில் 22 காவலர்களும் உயிரிழந்தனர். காந்தியடிகள் உடனடியாக ஒத்துழையாமை இயக்கத்தைத் திரும்பப் பெற்றார்.

13. **1919ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் அறிமுகம் செய்தவை யாவை? (அல்லது) இரட்டை ஆட்சி என்பதனை விளக்குக.**

- 1919ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் மூலமாக இரட்டை ஆட்சி என்பது அறிமுகம் செய்யப்பட்டது. இதன் மூலம் மாகாண அரசின் அதிகாரங்கள் ஒதுக்கப்பட்ட மற்றும் மாற்றப்பட்ட துறைகள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டது.

- நிதி, பாதுகாப்பு, காவல்துறை, நீதித்துறை, நிலவருவாய் மற்றும் நீர்ப்பாசனம் ஆகிய துறைகள் ஆங்கிலேயர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டன.
- மாற்றப்பட்ட துறைகளில் உள்ளாட்சி, கல்வி, பொது சுகாதாரம், பொதுப்பணி, வேளாண்மை, வனங்கள் மற்றும் மீன்வளத் துறை ஆகியன இந்திய அமைச்சர்களின் கட்டுப்பாட்டின் கீழ் விடப்பட்டன.

14. **1930ஆம் ஆண்டு அரசுப் பிரதிநிதி இர்வின் பிரபுவிடம் கொடுக்கப்பட்ட மனுவில் அடங்கிய கோரிக்கைகள் யாவை?**
- ராணுவம் மற்றும் ஆட்சிப்பணி சேவைகளுக்கான செலவுகளை 50 சதவிகிதம் வரை குறைப்பது.
- முழுமையான புறக்கணிப்பை அறிமுகம் செய்வது.
- அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வது.
- நிலவருவாயை 50 சதவிகிதமாகக் குறைப்பது.
- உப்பு வரியை ரத்து செய்வது.

15. **அமைச்சரவை தூதுக்குழுவில் இடம்பெற்றவர்கள் யாவர்?**
- பெதிக் லாரன்ஸ்
- சர் ஸ்டராஃப்போர்ட் கிரிப்ஸ்
- A.V.அலெக்ஸாண்டர்

16. **1929 ஆம் ஆண்டு லாகூர் காங்கிரஸ் அமர்வின் முக்கியத்துவம் யாது?**
- 1929 ஆம் ஆண்டு லாகூர் காங்கிரஸ் அமர்வு ஜவஹர்லால் நேரு தலைமையில் நடைபெற்றது.
- அதில் முழுமையான சுதந்திரம் என்பது இலக்காக அறிவிக்கப்பட்டது.
- வட்டமேசை மாநாட்டைப் புறக்கணிப்பது என்றும், சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கவும் முடிவு செய்யப்பட்டது.
- 1930 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் சுதந்திர நாளாக அறிவிக்கப்பட்டது.

17. **காந்தி இர்வின் ஒப்பந்தம் பற்றி சிறு குறிப்பு வரைக.**
- காந்தி இர்வின் ஒப்பந்தம் 1931 ஆம் ஆண்டு ஏற்பட்டது.
- இவ்வொப்பந்தத்தின் படி வன்முறையில் ஈடுபடாத அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்வதற்கு ஆங்கிலேய அரசு ஒப்புக் கொண்டது.
- சட்ட மறுப்பு இயக்கத்தை ரத்து செய்து விட்டு இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ள காங்கிரஸ் கட்சி ஒப்புக் கொண்டது.

18. **கிரிப்ஸ்தூதுக் குழு எவற்றை வழங்க முன்வந்தது?**
- போருக்குப் பின் தன்னாட்சி வழங்குவது
- பாகிஸ்தான் உருவாக்கக் கோரிக்கையை ஏற்கும் விதமாக இந்திய இளவரசர்கள் பிரிட்ஷாருடன் தனி ஒப்பந்தத்தில் கையெழுத்திடலாம்.
- போரின்போது பாதுகாப்புத் துறை பிரிட்டிஷாரின் கட்டுப்பாட்டில் இருப்பது.

VI. ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. **காந்தி மற்றும் மக்கள் தேசியம்:**

அ) காந்தியடிகளின் வாழ்க்கையில் திருப்புமுனையை ஏற்படுத்திய சம்பவம் எது?
- காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் எதிர்கொண்ட இனவெறியாகும்.
- காந்தியடிகள் டர்பனில் இருந்து பிரிட்டோரியாவுக்கு ரயில் பயணம் மேற்கொண்டபோது பீட்டர் மாரிட்ஸ்பர்க் ரயில் நிலையத்தில் முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட சம்பவம் ஆகும்.

ஆ) காந்தியடிகளின் வாழ்க்கையில் மாற்றத்தை உருவாக்கிய படைப்புகள் யாவை?

- டால்ஸ்டாய் – "கடவுளின்அரசாங்கம் உன்னில் உள்ளது"
- ஜான் ரஸ்கின் – "அண்டு திஸ் லாஸ்ட்"
- தாரோ – "சட்ட மறுப்பு"

இ) தென்னாப்பிரிக்காவில் சத்தியாகிரகத்தை காந்தியடிகள் எவ்வாறு ஒரு செயல் உத்தியாகப் பயன்படுத்தினார்?

- காந்தியடிகள் உண்மையின் வடிவமாக சத்தியாகிரகத்தை மேம்படுத்தினார். நியாயமற்ற சட்டங்களுக்கு எதிராக அமைதிப் பேரணிகள், கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்.
- காவல் துறையினர் வன்முறையை கட்டவிழ்த்து விட்டபோதிலும் சத்தியாகிரகிகள் எந்த எதிர்ப்பையும் காட்டவில்லை.

ஈ) சம்பரான் சத்தியாகிரகம் பற்றி தாங்கள் அறிவது என்ன? PTA

- பீகாரில் உள்ள சம்பரானில் "தீன் காதியா" முறை பின்பற்றப்பட்டது. இந்த சுரண்டல் முறையில் இந்திய விவசாயிகள் சிரமங்களை சந்தித்தனர்.
- காந்தியடிகள் சம்பரான் சென்று சத்தியாகிரக முறையில் போரிட்டார். அதன்பிறகு துணை நிலை ஆளுநர் ஒரு குழுவை உருவாக்கினார். காந்தியடிகள் அக்குழுவின் ஒரு உறுப்பினராவார்.
- இண்டிகோ பண்ணையாளர்கள் விவசாயிகள் மீது நடத்திய அடக்குமுறையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் "தீன் காதியா" முறை ரத்து செய்ய அக்குழு பரிந்துரைத்தது.

2. காந்தியடிகளின் ஆக்கப்பூர்வ திட்டம்:

அ) ஆக்கப்பூர்வ திட்டம் என்றால் என்ன?

காதி மேம்பாடு, இந்து–முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு என்பது காந்தியடிகளின் ஆக்கப்பூர்வ திட்டமாகும்.

ஆ) காங்கிரசார் என்ன செய்ய வேண்டும் என்று காந்தியடிகள் அறிவுறுத்தினார்?

"உங்கள் மாவட்டங்களுக்குச் செல்லுங்கள். கதர், இந்து–முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு ஆகியன பற்றிய செய்திகளைப் பரப்புங்கள். இளைஞர்களை ஒன்று திரட்டி அவர்களை சுயராஜ்யத்தின் உண்மையான வீரர்களாக உருமாற்றுங்கள்" என்று காந்தியடிகள் காங்கிரசாருக்கு அறிவுறுத்தினார்.

இ) இந்து-முஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்த காந்தியடிகள் செய்தது என்ன?

வகுப்புவாத அரசியலில் ஈடுபட்ட இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் இதயங்களை ஈர்க்கும் வகையில் 1924இல் 21 நாட்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.

ஈ) தீண்டாமையை ஒழிக்க காந்தியடிகளின் பங்களிப்பு என்ன?

- தீண்டாமையை ஒழிக்க "அரிஜனர்களுக்கான பயணம்" என்ற நாடுதழுவிய பயணத்தை காந்தியடிகள் மேற்கொண்டார்.
- "அரிஜனர் சேவை சங்கத்தை" அமைத்து சமூகத்தில் உள்ள பாரபட்சங்களை முழுமையாக அகற்றுவதற்காகப் பணியாற்றினார்.
- கல்வி, சுத்தம் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை மேம்படுத்தவும், ஒடுக்கப்பட்ட மக்களிடையே மதுப்பழக்கத்தைக் கைவிடவும் அவர் பணியாற்றினார்.

3. சுபாஷ் சந்திர போஸ் மற்றும் இந்திய தேசிய ராணுவம்:

அ) சுபாஷ் சந்திர போஸ் ஜப்பானை எப்படி சென்றடைந்தார்?

நீர்மூழ்கிக் கப்பல் மூலமாக சுபாஷ் சந்திர போஸ் ஜப்பான் சென்றடைந்தார்.

ஆ) இந்திய தேசிய ராணுவத்தின் பெண்கள் பிரிவுக்குத் தலைமை ஏற்றவர் யார்?

கேப்டன் லட்சுமி செகல்.

இ) சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய ராணுவத்தை எவ்வாறு மறுசீரமைப்பு செய்தார்?

காந்தி பிரிகேட், நேரு பிரிகேட், பெண்கள் பிரிவாக ராணி லட்சுமிபாய் பிரிகேட் என மூன்று படையணிகளை சுபாஷ் சந்திர போஸ் மறுசீரமைத்தார்.

ஈ) சுபாஷ் சந்திர போஸ் வழங்கிய முழக்கம் என்ன?

"தில்லிக்கு புறப்படு" (தில்லி சலோ) என்ற முழக்கத்தை சுபாஷ் சந்திர போஸ் வழங்கினார்.

கூடுதல் வினாக்கள்

4. **வகுப்புவாரி ஒதுக்கீடு:**

அ) வகுப்புவாரி ஒதுக்கீட்டை அறிவித்தவர் யார்?
ராம்சே மெக்டொனால்டு.

ஆ) தனித்தொகுதிகள் யார் யாருக்கு வழங்கப்பட்டது?
முஸ்லிம்கள், சீக்கியர்கள், இந்திய கிறித்துவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள், பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர்.

இ) காந்தியடிகள் எதனை எதிர்த்தார்?
ஒடுக்கப்பட்ட வகுப்பினரை சிறுபான்மையினர் பட்டியலில் சேர்ப்பதை காந்தியடிகள் எதிர்த்தார்.

ஈ) ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவராகக் கருதப்பட்டவர் யார்?
பி.ஆர்.அம்பேத்கர்.

5. **மவுண்ட்பேட்டன் திட்டம்:**

அ) இடைக்கால அரசு எப்பொழுது யார் தலைமையில் அமைக்கப்பட்டது?
இடைக்கால அரசு 1946ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஜவகர்லால் நேரு தலைமையில் அமைக்கப்பட்டது.

ஆ) அதன் நிதி உறுப்பினராக நியமிக்கப்பட்டவர் யார்?
லியாகத் அலிகான் நியமிக்கப்பட்டார்.

இ) அதிகாரமாற்றம் 1948ஆம் ஆண்டு ஏற்படும் என்று அறிவித்தவர் யார்?
பிரிட்டிஷ் பிரதமர் கிளெமண்ட் அட்லி.

ஈ) இந்தியாவிற்கு அரசப்பிரதிநிதியாக அனுப்பப்பட்டவர் யார்?
மவுண்ட்பேட்டன் பிரபு அனுப்பப்பட்டார்.

6. **ஜாலியன் வாலாபாக் படுகொலை:**

அ) கைது செய்யப்பட்ட முக்கிய தலைவர்கள் யார்?
டாக்டர் சத்யபால் மற்றும் டாக்டர் சைஃபுதீன் கிட்ச்லு.

ஆ) மக்கள் எங்கு கூடினர்?
அமிர்தசரசிலுள்ள ஜாலியன் வாலாபாக்கில் கூடினர்.

இ) அமிர்தசரஸின் ஆங்கில இராணுவ தளபதி யார்?
ஜெனரல் ரெஜினால்டு டயர்

ஈ) இரபீந்திரநாத் தாகூர் மற்றும் காந்தியடிகள் செய்தது என்ன?
இரபீந்திரநாத் 'வீரத்திருமகன்' என்ற பட்டத்தைத் திருப்பிக் கொடுத்தார். காந்தியடிகள் "கெய்சர் – இ – ஹிந்த்' பதக்கத்தைத் திருப்பிக் கொடுத்தார்.

VII. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. **காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் என்ன என்று ஆராயவும்.**

தென்னாப்பிரிக்காவில் சத்தியாகிரகம்: **PTA**

- டிரான்ஸ்வாலில் வசித்த இந்தியர்கள் தலைவரியாக 3 பவுண்டுகளை செலுத்தவேண்டியிருந்தது. அவர்களுக்கென குறிக்கப்பட்ட பகுதிகளை விடுத்து வேறு இடங்களில் அவர்கள் நிலத்தை சொந்தமாக வைத்துக்கொள்ள முடியாத நிலை இருந்தது. மேலும் இரவு 9 மணிக்குப் பிறகு அனுமதியின்றி வெளியிடங்களுக்கு செல்லமுடியாத நிலையும் இருந்தது. இத்தகைய நியாயமற்ற சட்டங்களை எதிர்த்து அவர் போராட்டத்தை தொடங்கினார்.

- தென்னாப்பிரிக்காவில் குடியேற்றம் மற்றும் இனவேறுபாடு ஆகிய பிரச்சனைகளுக்காகப் போராட சத்தியாகிரக சோதனைகளை அவர் மேற்கொண்டார்.
- குடிபெயர்ந்தோரை பதிவு செய்யும் அலுவலகங்கள் முன் கூட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடத்தினார். காவல்துறையினர் வன்முறையை கட்டவிழ்த்துவிட்டபோதிலும் அவர் எவ்வித எதிர்ப்பையும் காட்டவில்லை. காவல்துறையினரின் கடுமையான நடவடிக்கையையும் பொருட்படுத்தாமல் போராட்டத்தைத் தொடர்ந்தார்.
- இறுதியாக ஒப்பந்தத் தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்ட தலைவரி ஸ்மட்ஸ்–காந்தி ஒப்பந்தத்தின்படி ரத்து செய்யப்பட்டது.

இந்தியாவில் காந்தியடிகளின் தொடக்ககால சத்தியாகிரகங்கள்:

- இந்திய வருகையின்போது காந்தியடிகள் தான் சந்தித்த கோபால கிருஷ்ண கோகலே மீது பெரும் மரியாதை கொண்டு அவரையே தமது அரசியல் குருவாக ஏற்றார்.
- கோகலேயின் அறிவுரையின்படி, அரசியலில் ஈடுபடுவதற்குமுன் நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் காந்தியடிகள் பயணம் மேற்கொண்டார். இதனால் மக்களின் நிலையை அவர் அறிந்துகொள்ள வழி பிறந்தது.
- இதுபோன்ற ஒரு பயணத்தின்போதுதான் தமிழகத்தில் தமது வழக்கமான ஆடைகளை விடுத்து சாதாரண வேட்டிக்கு காந்தியடிகள் மாறினார்.

சம்பரான் சத்தியாகிரகம்:

- பீகாரில் உள்ள சம்பரானில் "தீன் காதியா" முறை பின்பற்றப்பட்டது. இந்த சுரண்டல் முறையில் இந்திய விவசாயிகள் தங்களின் நிலத்தில் இருபதில் மூன்று பங்கு பகுதியில் அவுரி (இண்டிகோ) பயிரிட ஐரோப்பிய பண்ணையாளர்களால் கட்டாயப்படுத்தப்பட்டனர். இந்த வகையில் விவசாயிகள் அதிக சிரமங்களைச் சந்தித்தனர்.
- காந்தியடிகள் சம்பரானுக்குச் சென்றார். காவல்துறையினர் அவரை அங்கிருந்து வெளியேறுமாறு கேட்டுக் கொண்டனர். இச்செய்தி பரவியதையடுத்து ஆயிரக்கணக்கானோர் அவருக்கு ஆதரவாகக் கூடினர்.
- ராஜேந்திர பிரசாத் மற்றும் பிரஜ்கிஷோர் பிரசாத் ஆகியோர் காந்தியடிகளுக்குத் துணையாக செயல்பட்டனர். அதன்பிறகு துணைநிலை ஆளுநர் ஒரு குழுவை உருவாக்கினார். காந்தியடிகள் அக்குழுவில் ஒரு உறுப்பினர் ஆனார்.
- இண்டிகோ பண்ணையாளர்கள், விவசாயிகள் மீது நடத்திய அடக்குமுறையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் "தீன் காதியா" முறையை ரத்து செய்ய அந்தக் குழு பரிந்துரைத்தது.
- சம்பரான் சத்தியாகிரகத்தின் வெற்றியை அடுத்து 1918இல் அகமதாபாத் மில் வேலைநிறுத்தம், 1918இல் கேதா சத்தியாகிரகம் ஆகியன காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருவாக்கின.

2. **காந்திய இயக்கத்தின் ஒரு சிறந்த உதாரணமான சட்டமறுப்பு இயக்கம் குறித்து விரிவாக ஆராயவும்.**

லாகூர் காங்கிரஸ் அமர்வு:

- 1929இல் டிசம்பர் மாதம் லாகூரில் ஜவகர்லால் நேரு தலைமையில் காங்கிரஸ் அமர்வு நடந்தது. அதில் முழுமையான சுதந்திரம் என்பது இலக்காக அறிவிக்கப்பட்டது. வட்டமேசை மாநாட்டை புறக்கணிப்பது என்றும் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கவும் முடிவு செய்யப்பட்டது. இந்த இயக்கத்தை தொடங்க இந்திய தேசிய காங்கிரஸ் காந்தியடிகளுக்கு அங்கீகாரம் அளித்தது.

சட்ட மறுப்பு இயக்கம்:

- 1930 ஜனவரி 31ஆம் நாளுக்குள் நிறைவேற்ற வேண்டும் என்ற காலக்கெடுவுடன் அரசப் பிரதிநிதி இர்வின் பிரபுவிடம் கோரிக்கைகள் அடங்கிய மனு கொடுக்கப்பட்டது. கோரிக்கை மனுவிற்கு அரசப்பிரதிநிதி பதில் தெரிவிக்காத நிலையில் காந்தியடிகள் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார்.

உப்பு சத்தியாகிரகம்:

- உப்பு மீதான வரியை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை ஒரு அறிவுபூர்வமான முடிவாகும். ஏனெனில் சமூகத்தில் ஒவ்வொரு பிரிவினரையும் பாதிக்கும் விஷயமாக உப்பு இருந்தது. இதில் பெண்கள் உட்பட அனைத்து பிரிவு மக்களும் பங்கேற்றது சட்டமறுப்பு இயக்கத்தை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றியது.

- காந்தியடிகள் 1930 மார்ச் 12ஆம் நாள் 78 பேர்களுடன் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தனது புகழ் பெற்ற தண்டி யாத்திரையைத் தொடங்கினார். இந்த யாத்திரையில் நூற்றுக்கணக்கானோர் சேரச்சேர அது நீண்டு கொண்டே போனது.
- காந்தியடிகள் தனது 61ஆவது வயதில் 24 நாட்களில் 241மைல் தொலைவு யாத்திரையாக நடந்து சென்று 1930 ஏப்ரல் 5ஆம் நாள் மாலை தண்டி கடற்கரையை அடைந்தார். அடுத்தநாள் காலை ஒரு கைப்பிடி உப்பை கையில் எடுத்து உப்புச் சட்டத்தை மீறினார்.
- தமிழ் நாட்டில் திருச்சிராப்பள்ளியிலிருந்து வேதாரண்யம் வரை இது போன்ற ஒரு யாத்திரையை C.ராஜாஜி மேற்கொண்டார். கேரளா, ஆந்திரா மற்றும் வங்காளத்திலும் உப்பு சத்தியாகிரக யாத்திரைகள் நடந்தன. வடமேற்கு எல்லை மாகாணத்தில் கான் அப்துல் கஃபார்கான் இந்த இயக்கத்திற்குத் தலைமை ஏற்றார்.
- காந்தியடிகள் நள்ளிரவில் கைது செய்யப்பட்டு எரவாடா சிறையில் அடைக்கப்பட்டார். ஜவகர்லால் நேரு, கான் அப்துல் கஃபார்கான் மற்றும் இதர தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்.
- அந்நிய துணிகள் புறக்கணிப்பு, மதுக்கடைகள் முன் ஆர்ப்பாட்டங்கள், வரிகொடா இயக்கம், வனச்சட்டங்களை பின்பற்ற மறுப்பது ஆகியன உள்ளிட்ட பல சட்ட மறுப்பு இயக்கங்கள் நடைபெற்றன.
- பெண்கள், விவசாயிகள், பழங்குடியினர், மாணவர்கள் மற்றும் குழந்தைகள் என சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களும் நாடு தழுவிய போராட்டத்தில் பங்கேற்றனர்.
- இந்தியா சந்தித்த மக்கள் இயக்கங்களிலேயே இது மிகப்பெரியது. ஆனால் எங்கும் எந்த வன்முறையும் நடைபெறவில்லை. 90,000க்கும் மேற்பட்டோர் கைதானார்கள்.

3. **இந்தியாவின் பிரிவினைக்குப் பின்னால் இருந்த காரணங்களை விவாதிக்கவும்.**

- கிலாபத் இயக்கம், ஒத்துழையாமை இயக்கம் ஆகியவற்றின் போது இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் ஒத்துழைப்பு இருந்தபோதிலும் அந்த ஒற்றுமை விரிசலடையக் கூடியதாகவே இருந்தது.
- 1920களின் காலம் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் இடையே தொடர்ச்சியான வகுப்பு மோதல்கள் நடந்து கொண்டே இருந்தன.
- இந்து மகாசபை பண்டித மதன் மோகன் மாளவியா தலைமையிலும், முஸ்லிம்லீக் அலி சகோதரர்கள் தலைமையிலும் பிரபலம் அடைந்து கொண்டிருந்தன.
- காந்தியடிகளும், முகம்மது அலி ஜின்னாவும் மேற்கொண்ட தீவிர முயற்சிகள் வகுப்புவாத கலவரங்களை அடியோடு அழிக்கத் தவறிவிட்டன.
- மத்திய சட்டப்பேரவையில் இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து ஜின்னா சட்டதிருத்தத்தைக் கொண்டுவந்தார். மூன்றில் ஒரு பங்கு இடங்கள் முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று கோரினார். பின்னர் 14 அம்சங்கள் என்ற தீர்மானத்தை முன் மொழிந்தார் எனினும் அனைத்தும் தோல்விகண்டது.
- முஸ்லிம்களுக்கு தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியபடி 1934ஆம்ஆண்டு முஸ்லிம் லீக்கிற்கு புத்துயிர் ஊட்டினார்.
- அமைச்சரவைகளை கடுமையாக விமர்சித்த ஜின்னா, அமைச்சரவைகள் பதவி விலகிய நாளை "மீட்பு நாள்" என்று அறிவித்தார்.
- சுதந்திர இந்தியாவில் தங்களது அனைத்து அரசியல் அதிகாரங்களையும் முஸ்லிம்கள் இந்துக்களிடம் இழந்துவிடுவர் என்று வாதிட்ட ஜின்னா 1940 ஆண்டு முஸ்லிம்களுக்கு தனிநாடு வேண்டும் என்று வலியுறுத்தினார்.
- காங்கிரஸ் ஒரு இந்து அமைப்பு என்று குறைகூறிய முஸ்லிம்லீக், இந்தியாவில் முஸ்லிம்களின் ஒரேயொரு பிரதிநிதியாக தாம் மட்டுமே விளங்குவதாக அறிவித்தது.
- இந்து மகாசபை மற்றும் ராஷ்டிரிய சுவயம் சேவக் சங் (RSS) ஆகியன முஸலிம்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தன.
- இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் நலன்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை மற்றும் எதிரானவை என்று இந்து மகாசபையும், முஸ்லிம் லீக்கும் கோரின.

- ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கையின் சில நடவடிக்கைகளான வங்கப்பிரிவினை, தனித் தொகுதிகள் ஆகியன மத வேறுபாடுகளைத் தூண்டின.
- 1933இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மாணவரான ரஹ்மத் அலி பாகிஸ்தானை உருவாக்கும் எண்ணத்தினை வெளிப்படுத்தினார்.
- இந்து முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தி வந்த முகம்மது இக்பால் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு முஸ்லிம்களுக்கு தனிநாடு வேண்டும் என்று பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார்.
- சிம்லா மாநாட்டில் காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் ஓர் ஒப்பந்தத்தை எட்ட முடியவில்லை. அனைத்து முஸ்லிம் உறுப்பினர்களும் முஸ்லிம் லீக்கிலிருந்துதான் இடம்பெற வேண்டும் என்று ஜின்னா கோரினார்.
- இடைக்கால அரசு நிறுவப்படும்போது மாகாணங்களைப் பிரிப்பது தற்காலிகமாக இருக்க வேண்டும் என்று காங்கிரசும், நிரந்தர அமைப்பாக இருக்க வேண்டும் என்று முஸ்லிம்லீக்கும் முரண்பட்டன.
- 1946ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16ஆம் நாளை நேரடி நடவடிக்கை நாளாக ஜின்னா அறிவித்தார். ஆர்ப்பாட்டங்களும் கடையடைப்புப் போராட்டங்களும் நடந்தது விரைவில் அது இந்து முஸ்லிம் மோதலாக உருவெடுத்தது.
- இது வங்காளத்தின் இதர மாவட்டங்களுக்கும் பரவியது. நவகாளி மாவட்டம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டது.
- மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு காந்தியடிகள் நடைபயணம் செய்து மோதல்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார்.
- ஆயினும் பிரிவினை என்பது தவிர்க்க முடியாத ஒன்றாயிற்று.
- 1947ஆம் ஆண்டு ஜுலை 18ஆம் நாள் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இந்திய விடுதலைச் சட்டத்தை இயற்றியதையடுத்து. மவுண்ட்பேட்டன் திட்டப்படி இந்தியா மற்றும் பாகிஸ்தான் என இரண்டு பகுதிகளாக இந்தியா பிரிக்கப்பட்டது.

கூடுதல் வினாக்கள்

4. **ஒத்துழையாமை இயக்கத்தின் கூறுகளைப் பட்டியலிடுக.**

- பட்டங்கள் மற்றும் மரியாதை நிமித்தமான பதவிகள் அனைத்தையும் திரும்ப ஒப்படைப்பது.
- அரசின் செயல்பாடுகளில் ஒத்துழைக்காமல் இருப்பது.
- நீதிமன்ற வழக்குகளில் வழக்குரைஞர்கள் ஆஜராகாமல் இருப்பது. நீதிமன்றத்தில் இருந்த வழக்குகளுக்கு தனியார் மத்தியஸ்தம் மூலமாக தீர்வு காண்பது.
- அரசு பள்ளிகளை குழந்தைகளும் அவர்களின் பெற்றோர்களும் புறக்கணிப்பது.
- 1919ஆம் ஆண்டின் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டப் பேரவைகளை புறக்கணிப்பது.
- அரசு விருது நிகழ்ச்சிகள் மற்றும் இதர அரசு விழாக்களில் பங்கேற்பதில்லை என்ற முடிவு.
- குடிமைப்பணி (சிவில்) அல்லது ராணுவப் பதவிகளை ஏற்க மறுப்பது.
- அந்நியப் பொருட்களின் புறக்கணிப்பு மற்றும் உள்ளூர் பொருட்களுக்கு ஊக்கம் தரும் சுதேசி இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்புவது.

5. **மவுண்ட் பேட்டன் திட்டம் பற்றி விவரி.**

- ஜவகர்லால் நேரு தலைமையில் இடைக்கால அரசு 1946ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அமைக்கப்பட்டது.
- சில தயக்கங்களுக்குப் பிறகு முஸ்லிம்லீக் இந்த இடைக்கால அரசில் இணைந்தது. அதன் பிரதிநிதி லியாகத் அலிகான் நிதிஉறுப்பினராக்கப்பட்டார்.
- 1948ஆம் ஆண்டு ஜுன் மாத வாக்கில் அதிகார மாற்றம் ஏற்படும் என்று 1947 ஆம் ஆண்டு கிளெமண்ட் அட்லி அறிவித்தார்.
- இந்த ஆட்சி மாற்றத்தை உறுதி செய்யும் பொறுப்புடன் மவுண்ட்பேட்டன் பிரபு இந்தியாவுக்கு அரசப்பிரதிநிதியாக அனுப்பப்பட்டார்.

- 1947ஆம் ஆண்டு ஜுன் மாதம் 3ஆம் நாள் மவுண்ட்பேட்டன் திட்டம் அறிவிக்கப்பட்டது.

அதில் கூறப்பட்ட அம்சங்கள்:

- இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு, பிரிட்டனின் தன்னாட்சிப் பகுதி (டொமினியன்) என்ற தகுதியுடன் அதிகார மாற்றம் நடைபெறும்.
- சிற்றரசுகள் இந்தியா அல்லது பாகிஸ்தானில் சேர வேண்டும்.
- ராட்கிளிஃப் பிரவ்ன் தலைமையில் எல்லைகளை நிர்ணயிக்கும் ஆணையம் அமைக்கப்பட்டு அதிகார மாற்றத்திற்குப் பிறகு இந்த ஆணையத்தின் முடிவு அறிவிக்கப்படும்.
- பஞ்சாப் மற்றும் வங்காள சட்டப் பேரவைகள் பிரிக்கப்பட வேண்டும் என்பது பற்றி வாக்கெடுப்பு நடத்தப்படும்.

6. **இந்திய விடுதலை இயக்கத்தில் சுபாஷ் சந்திர போஸ் மற்றும் இந்திய தேசிய இராணுவத்தின் பங்களிப்பு யாது?** **PTA**

- சுபாஷ் சந்திர போஸ் காங்கிரசை விட்டு விலகிய பின் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.
- பிரிட்டிஷாரின் எதிரிகளோடு கைகோர்த்து பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக தாக்குதல் நடத்த அவர் விரும்பினார்.
- 1941 ஆம் ஆண்டு மாறுவேடமணிந்து தப்பித்து ஆப்கானிஸ்தான் சென்றடைந்தார்.
- பின் அங்கிருந்து ஜெர்மனிக்குச் சென்றார்.
- அங்கிருந்து ஜப்பான் சென்ற சுபாஷ், இந்திய தேசிய ராணுவத்தின் கட்டுப்பாட்டைக் கையில் எடுத்தார்.
- அதனை காந்தி பிரிகேட், நேரு பிரிகேட் மற்றும் பெண்கள் பிரிவாக ராணி லட்சுமி பாய் பிரிகேட் என மூன்று பிரிவுகளாகப் பிரித்து மறுசீரமைத்தார்.
- சுபாஷ் சந்திர போஸ் சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தை நிறுவினார்.
- 'தில்லிக்கு புறப்படு' (தில்லி சலோ) என்ற முழக்கத்தை அவர் வெளியிட்டார்.
- ஜப்பானிய படைகளின் ஒரு பகுதியாக இந்திய தேசிய இராணுவம் பணியில் ஈடுபடுத்தப்பட்டது.
- ஆயினும் ஜப்பான் தோல்வி அடைந்த பின் இந்திய தேசிய ராணுவம் முன்னேறுவது தடைபட்டது.
- சுபாஷ் சந்திர போஸ் பயணம் செய்த விமானம் விபத்துக்குள்ளானதால் சுதந்திரத்திற்காகப் போராடிய அவரது தீவிரப் பணிகள் முடிவுக்கு வந்தன.

காலக்கோடு (முக்கிய நிகழ்வுகள்)

1919 - 1. ரௌலட் சட்டம்.
2. ஜாலியன் வாலா பாக் படுகொலை.

1920 - 1. கிலாபத் இயக்கம்.
2. ஒத்துழையாமை இயக்கம்.

1922 - சௌரி சௌரா வன்முறை.

1923 - சுயராஜ்ஜிய கட்சியின் தோற்றம்.

1924 - இந்திய குடியரசு படையின் தோற்றம்.

1927 - சைமன் குழு புறக்கணிப்பு.

1929 - லாகூர் காங்கிரஸ் அமர்வு.

1930 - 1. உப்பு சத்தியாகிரகம்/தண்டி பயணம்/சட்டமறுப்பு இயக்கம்.
2. முதல் வட்டமேசை மாநாடு.

1931 - 1. காந்தி-இர்வின் ஒப்பந்தம்.
2. இரண்டாம் வட்டமேசை மாநாடு.

1932 - 1. பூனா ஒப்பந்தம்.
2. மூன்றாம் வட்டமேசை மாநாடு.
3. வகுப்புவாரி ஒதுக்கீடு.

1935 - இந்திய அரசுச் சட்டம்.

1937 - பொதுத் தேர்தல்.

1939 - இரண்டாம் உலகப் போர் துவக்கம்.

1940 - 1. ஆகஸ்ட் நன்கொடை.
2. தனிநபர்(வினோ பாவே) சத்தியாகிரகம்.
3. தனிநாடு (பாகிஸ்தான்) கோரிக்கை.

1942 - கிரிப்ஸ் தூதுக்குழு வருகை

1946 - ராயல் இந்திய கடற்படை கிளர்ச்சி

1947 - 1. மவுண்ட்பேட்டன் திட்டம்.
2. இந்திய சுதந்திரச் சட்டம்.
3. இந்திய விடுதலை.

வரைபடங்கள்

இந்திய தேசிய இயக்கம் (1900 – 1947)



இந்திய தேசிய இயக்கம் (1900 – 1947)



9 தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம்

மனவரைபடம்



நினைவில் கொள்க

- காலனியாட்சியை எதிர்ப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்த மாநிலம் **தமிழ்நாடு** ஆகும்.
- தமிழ்நாட்டில் தங்கள் அரசியல் ஆதிக்கத்தை நிறுவ முயன்ற ஆங்கிலேயர்களின் முயற்சிகளை எதிர்த்தவர்கள் **பாளையக்காரர்கள்**.
- 1806இல் இந்திய வீரர்களும், அதிகாரிகளும் ஓர் எழுச்சியைத் திட்டமிட்டு நடத்திய இடம் **வேலூர் கோட்டை**.
- சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதியாக நியமிக்கப்பட்டவர் **T. முத்துசாமி**.
- **வங்கப்பிரிவினை'** (1905) சுதேசி இயக்கத்திற்கு இட்டுச் சென்று விடுதலைப் போராட்டத்தின் போக்கை மாற்றியமைத்தது.
- மக்களின் நாட்டுப் பற்று உணர்வுகளைத் தன் தேசபக்திப் பாடல்கள் மூலம் தட்டி எழுப்பியவர் **சுப்பிரமணிய பாரதியார்**.
- சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியை தொடங்கியவர் **வ.உ.சிதம்பரனார்**.
- தமிழ்நாட்டைச் சேர்ந்த புரட்சிகர தேசியவாதிகளுக்குப் பாதுகாப்பான புகலிடமாக விளங்கியது **பாண்டிச்சேரி**.
- இந்திய தேசிய இயக்கம் தளர்வுற்று இருந்த நிலையில் 1916இல் தன்னாட்சி இயக்கத்தைத் தொடங்கியவர் அயர்லாந்து பெண்மணி **அன்னிபெசன்ட்**.
- "அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதைவிட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது" என கூறியவர் **அன்னிபெசன்ட்**.
- பிராமணர் அல்லாதோர் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஒரு அரசியல் அமைப்பாக அணிதிரட்டி கொண்டனர். அதனால் **சென்னை திராவிடர் கழகம்** உருவாக்கப் பெற்றது.
- தமிழ்நாட்டில் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கிய அம்சமாகத் திகழ்ந்தது **கள்ளுக்கடைகளுக்கு** எதிரான போராட்டங்களாகும்.
- ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து காங்கிரஸ் "மாற்றத்தை விரும்பாதோர்" "மாற்றத்தை விரும்புவோர்" எனப் பிரிந்தது.
- உப்புச் சட்டங்களை மீறியதற்காக அபராதம் கட்டிய முதல் பெண்மணி **ருக்மணி லட்சுமிபதியாவார்**.
- "வைக்கம் வீரர்" என பாராட்டப்பட்டவர் **ஈ.வெ.ராமசாமி பெரியார்**.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **சென்னை மகாஜன சபையின் முதல் தலைவர் யார்?**
   அ) T.M. நாயர் ஆ) P. ரங்கையா நாயுடு இ) G. சுப்பிரமணியம் ஈ) G.A. நடேசன்
2. **இந்திய தேசியக் காங்கிரசின் மூன்றாவது மாநாடு/அமர்வு எங்கே நடைபெற்றது?**
   அ) மெரினா ஆ) மைலாப்பூர் இ) புனித ஜார்ஜ் கோட்டை ஈ) ஆயிரம் விளக்கு
3. **"அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதைவிட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது" எனக் கூறியவர் யார்?**
   அ) அன்னிபெசன்ட் ஆ) M.வீரராகவாச்சாரி இ) B.P.வாடியா ஈ) G.S.அருண்டேல்
4. **கீழ்க்காண்பனவற்றில் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் அதிகாரபூர்வமான ஆங்கிலச் செய்தித்தாள் எது?**
   அ) திராவிடன் ஆ) ஆந்திரப் பிரகாசிகா இ) ஜஸ்டிஸ் ஈ) நியூ இண்டியா
5. **கீழ்காண்பவர்களுள் சுயராஜ்ஜியவாதி யார்?**
   அ) S. சத்தியமூர்த்தி ஆ) கஸ்தூரிரங்கர் இ) P. சுப்பராயன் ஈ) பெரியார் ஈ.வெ.ரா

PTA

6. சென்னைக்கருகேயுள்ள உதயவனத்தில் சத்தியாகிரக முகாமை அமைத்தவர் யார்?
அ) K. காமராஜ் ஆ) C. ராஜாஜி இ) K. சந்தானம் ஈ) T. பிரகாசம்

7. இந்தி எதிர்ப்பு மாநாடு எங்கே நடத்தப்பெற்றது?
அ) ஈரோடு ஆ) சென்னை இ) சேலம் ஈ) மதுரை

8. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது ராணுவத்துடனான காங்கிரஸ் தொண்டர்களின் மோதல் நடைபெற்ற இடம் எது?
அ) ஈரோடு ஆ) சென்னை இ) சேலம் ஈ) மதுரை

கூடுதல் வினாக்கள்

9. காலனியாட்சியை எதிர்ப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்த மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) கேரளா இ) ஆந்திரா ஈ) கர்நாடகம்

10. 1806இல் இந்திய வீரர்களும் அதிகாரிகளும் ஓர் எழுச்சியை திட்டமிட்டு நடத்திய இடம்
அ) மைசூர் கோட்டை ஆ) பாஞ்சாலங்குறிச்சி கோட்டை
இ) வேலூர் கோட்டை ஈ) சிவகங்கை கோட்டை

11. சென்னைவாசிகள் சங்கம் நிறுவப்படக் காரணமாயிருந்தவர்
அ) T. முத்துசாமி ஆ) P. அனந்தாசார்லு இ) P. ரங்கையா ஈ) கஜுலு லட்சுமிநரசு

12. 1878ல் தொடங்கப்பட்ட செய்திப் பத்திரிக்கை
அ) சுதேசமித்திரன் ஆ) தி இந்து இ) சூர்யோதயம் ஈ) தேசாபிமானி

13. சென்னை மகாஜன சபையின் முதல் செயலாளர்
அ) P. ரங்கையா ஆ) P. அனந்தாசார்லு இ) G. சுப்பிரமணியம் ஈ) G.A. நடேசன்

14. இந்திய தேசிய காங்கிரசின் முதற்கூட்டம் நடைபெற்ற இடம்
அ) பம்பாய் ஆ) சென்னை இ) கல்கத்தா ஈ) தில்லி

15. இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது மாநாட்டிற்குத் தலைமையேற்றவர்
அ) ஜவகர்லால் நேரு ஆ) கோபால கிருஷ்ண கோகலே
இ) பால கங்காதர திலகர் ஈ) தாதாபாய் நௌரோஜி

16. சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கியவர்
அ) சுப்பிரமணிய பாரதியார் ஆ) உ.வே. சாமிநாதர்
இ) வ.உ.சிதம்பரனார் ஈ) சுப்பிரமணிய சிவா

17. திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் நூற்பாலைத் தொழிலாளர்களை அணிதிரட்டியவர்
அ) சுப்பிரமணிய சிவா ஆ) பிபின் சந்திரபால்
இ) பாரதியார் ஈ) வ.உ.சிதம்பரனார்

18. காவல் நிலையம், நீதிமன்ற மற்றும் நகராட்சி அலுவலகக் கட்டிடங்கள் தீக்கிரையாக்கப்பட்ட கலவரம்
அ) மதுரை கலவரம் ஆ) சென்னை கலவரம்
இ) திருப்பூர் கலவரம் ஈ) திருநெல்வேலி கலவரம்

19. இளைஞர்களுக்கு எழுச்சியூட்டிய இயக்கம்
அ) கிலாபாத் இயக்கம் ஆ) சட்டமறுப்பு இயக்கம்
இ) சுதேசி இயக்கம் ஈ) வெள்ளையனே வெளியேறு இயக்கம்

20. தமிழ்நாட்டின் புரட்சிகர தேசியவாதிகளுக்குப் பாதுகாப்பான புகலிடமாக இருந்தது
அ) பாண்டிச்சேரி ஆ) ஏனாம் இ) மாஹே ஈ) திருவிதாங்கூர்

21. தன்னாட்சி இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1914 ஆ) 1916 இ) 1918 ஈ) 1920

22. நீதிக்கட்சியின் முதலாவது முதலமைச்சர்
அ) S. சத்தியமூர்த்தி ஆ) G. சுப்பிரமணியம் இ) A. சுப்புராயலு ஈ) C. ராஜாஜி

23. **1919 மார்ச் 18இல் காந்தியடிகள் சென்னையில் உரையாற்றிய இடம்**
அ) மைலாப்பூர் ஆ) சாந்தோம் இ) அடையாறு ஈ) மெரினா

24. **தமிழ்நாட்டில் வரிகொடா இயக்கம் நடைபெற்ற இடம்**
அ) சேலம் ஆ) திருச்சிராப்பள்ளி இ) கோயம்புத்தூர் ஈ) தஞ்சாவூர்

25. **"வைக்கம் வீரர்" என்று அழைக்கப்பட்டவர்**
அ) ஜார்ஜ் ஜோசப் ஆ) காமராஜர் இ) ஈ.வெ.ராமசாமி ஈ) C.N.அண்ணாத்துரை

26. **V.V.சுப்பிரமணியனாரால் ஒரு குருகுலம் நிறுவப்பட்ட இடம்**
அ) களக்காடு ஆ) சேரன்மாதேவி இ) அம்பாசமுத்திரம் ஈ) சங்கரன்கோயில்

27. **1929இல் காங்கிரஸ் மாநாடு நடைபெற்ற இடம்**
அ) லாகூர் ஆ) சூரத் இ) லக்னோ ஈ) அலகாபாத்

28. **1930 ஜனவரி 26ல் ஜவகர்லால் நேரு சுதந்திரத்தை அறிவிக்கும் விதமாக தேசியக் கொடியை ஏற்றிய இடம்**
அ) ராவி நதிக்கரை ஆ) சட்லெஜ் நதிக்கரை இ) கங்கை நதிக்கரை ஈ) யமுனை நதிக்கரை

29. **உப்புச் சட்டங்களை மீறியதற்காக அபராதம் கட்டிய முதல் பெண்மணி**
அ) முத்து லட்சுமி ரெட்டி ஆ) ருக்மணி லட்சுமிபதி
இ) லட்சுமிபாய் ஈ) லட்சுமி தேவி

30. **ராஜாஜி மதுவிலக்கை பரிசோதனை செய்த இடம்**
அ) திருப்பூர் ஆ) சிதம்பரம் இ) சேலம் ஈ) திருச்செந்தூர்

விடைகள்

1. ஆ) P. ரங்கையா நாயுடு
2. ஈ) ஆயிரம் விளக்கு
3. அ) அன்னிபெசன்ட்
4. இ) ஜஸ்டிஸ்
5. அ) S. சத்தியமூர்த்தி
6. ஈ) T. பிரகாசம்
7. இ) சேலம்
8. ஈ) மதுரை
9. அ) தமிழ்நாடு
10. இ) வேலூர் கோட்டை
11. ஈ) கஜுலு லட்சுமிநரசு
12. ஆ) தி இந்து
13. ஆ) P. அனந்தாசார்லு
14. அ) பம்பாய்
15. ஈ) தாதாபாய் நௌரோஜி
16. இ) வ.உ.சிதம்பரனார்
17. அ) சுப்பிரமணிய சிவா
18. ஈ) திருநெல்வேலி கலவரம்
19. இ) சுதேசி இயக்கம்
20. அ) பாண்டிச்சேரி
21. ஆ) 1916
22. இ) A. சுப்புராயலு
23. ஈ) மெரினா
24. ஈ) தஞ்சாவூர்
25. இ) ஈ.வெ.ராமசாமி
26. ஆ) சேரன்மாதேவி
27. அ) லாகூர்
28. அ) ராவி நதிக்கரை
29. ஆ) ருக்மணி லட்சுமிபதி
30. இ) சேலம்

II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியமர்த்தப்பட்ட முதல் தென்னிந்தியர் __________ ஆவார்.
2. தனது எழுத்துகளின் வாயிலாக ஆங்கிலேயரின் பொருளாதாரச் சுரண்டலை __________ அம்பலப்படுத்தினார்.
3. __________ எனும் ரகசிய அமைப்பை நீலகண்ட பிரம்மச்சாரி தொடங்கினார்..
4. சென்னையில் தொழிற்சங்கங்களைத் தொடங்குவதில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் __________ ஆவார்.
5. பிராமணரல்லாத மாணவர்களுக்காக தங்கும் விடுதியை நிறுவியவர் __________ ஆவார்.
6. சென்னையில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தவர் __________.
7. __________ முஸ்லிம் லீக்கின் சென்னைக் கிளையை உருவாக்கியவராவார்.
8. 1932 ஜனவரி 26இல் __________ புனித ஜார்ஜ் கோட்டையின் உச்சியில் தேசியக் கொடியை ஏற்றினார்.

கூடுதல் வினாக்கள்

9. 18ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தமிழ்நாட்டில் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடியவர்கள் __________ .
10. __________ அமைப்பு மேற்கொண்ட முயற்சியால் சித்திரவதை ஆணையம் நிறுவப்பட்டது.
11. தென்னிந்தியாவில் தெளிவான தேசிய நோக்கங்களுடன் துவங்கப்பெற்ற தொடக்ககால அமைப்பு __________.
12. இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மாநாடு __________ தலைமையில் நடைபெற்றது.
13. __________ (1905) சுதேசி இயக்கத்திற்கு இட்டுச் சென்று விடுதலைப் போராட்டத்தின் போக்கை மாற்றியமைத்தது.
14. மக்களின் நாட்டுப்பற்று உணர்வுகளை தனது தேசபக்தி பாடல்கள் மூலம் தட்டியெழுப்பியவர் __________ .
15. வ.உ.சிதம்பரனார் விலைக்கு வாங்கிய கப்பல்கள் __________ மற்றும் __________ .
16. வ.உ.சிதம்பரனார் தூத்துக்குடிக்கும் __________ க்கும் இடையே கப்பல்களை ஓட்டினார்.
17. கோரல் நூற்பாலை வேலை நிறுத்தத்திற்குத் தலைமை ஏற்றவர் __________ .
18. சிறையில் செக்கிழுத்தவர் __________ (செக்கிழுத்த செம்மல்).
19. சிறைத் தண்டனையைத் தவிர்ப்பதற்காக சுப்பிரமணிய பாரதியார் __________ க்கு இடம் பெயர்ந்தார்.
20. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ராபர்ட் W.D.E. ஆஷ் என்பவரை சுட்டுக் கொன்றவர் __________ .
21. அன்னிபெசன்ட் தொடங்கிய செய்தித்தாள்கள் __________ மற்றும் __________ .
22. 1917இல் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டவர் __________ .
23. ஜாலியன்வாலாபாக் படுகொலைக்குக் காரணமான ஆங்கிலேய அதிகாரி __________ .
24. கலீபா பதவியை மீட்பதற்காகத் தொடங்கப்பட்ட இயக்கம் __________ .
25. சௌரி சௌரா நிகழ்வின்போது கொல்லப்பட்ட காவலர்களின் எண்ணிக்கை __________ .
26. கள்ளுண்பதற்கு தனது எதிர்ப்பைக் காட்டும் வகையில் தனக்குச் சொந்தமான தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தியவர் __________ .
27. காங்கிரசிலிருந்து விலகிய ஈ.வெ.ரா அவர்கள் தொடங்கிய இயக்கம் __________ .
28. காந்தியடிகள் முன்வைத்த கோரிக்கைகளை வைசிராய் ஏற்றுக்கொள்ளாததால் அவர் தொடங்கிய இயக்கம் __________ .
29. காந்தியடிகளின் உப்பு சத்தியாகிரகம் நடைபெற்ற இடம் __________ .
30. "கத்தியின்றி, ரத்தமின்றி, யுத்தமொன்று வருகுது...." எனும் பாடலைப் புனைந்தவர் __________ .
31. இந்திய சட்டபூர்வ ஆணையம் 1927இல் __________ தலைமையில் அமைக்கப்பெற்றது.
32. கொடிகாத்த குமரன் என்று அழைக்கப்பட்டவர் __________ .
33. 1935ஆம் ஆண்டு மாநில சுயாட்சிக்கு வழிவகுத்த சட்டம் __________ .
34. மதுரை ஹரிஜன சேவா சங்கத்தின் தலைவர் __________ .
35. தமிழ் நாட்டில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்திற்காக மக்களைத் திரட்டும் பணியினை மேற்கொண்டவர் __________ .

விடைகள்

1. T.முத்துசாமி	2. G.சுப்ரமணியம்	3. பாரத மாதா சங்கம்
4. B.P.வாடியா	5. C.நடேசனார்	6. C.ராஜாஜி
7. யாகுப் ஹசன்	8. ஆரியா என்ற பாஷ்யம்	9. பாளையக்காரர்கள்
10. சென்னைவாசிகள் சங்கம்	11. சென்னை மகாஜன சபை	12. பக்ருதீன் தியாப்ஜி
13. வங்கப் பிரிவினை	14. சுப்பிரமணிய பாரதியார்	15. காலியா, லாவோ
16. கொழும்பு	17. சுப்பிரமணிய சிவா	18. வ.உ.சிதம்பரனார்
19. பாண்டிச்சேரி	20. வாஞ்சிநாதன்	21. நியூ இந்தியா, காமன் வீல்
22. அன்னிபெசன்ட்	23. ஜெனரல் டயர்	24. கிலாபத் இயக்கம்

விடைகள்

25. 22	26. ஈ.வெ.ராமசாமி	27. சுயமரியாதை இயக்கம்
28. சட்டமறுப்பு இயக்கம்	29. தண்டி	30. நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார்
31. சர் ஜான் சைமன்	32. திருப்பூர் குமரன்	33. இந்திய அரசுச் சட்டம்
34. வைத்தியநாதர்	35. காமராஜர்	

III. சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. i) சென்னைவாசிகள் சங்கம் 1852இல் நிறுவப்பட்டது.
   ii) தமிழில் வெளிவந்த தேசியப் பருவ இதழான சுதேசமித்திரன் 1891இல் தொடங்கப்பட்டது.
   iii) குடிமைப் பணித் தேர்வுகள் இந்தியாவில் மட்டுமே நடத்தப்படவேண்டுமென சென்னை மகாஜன சபை கோரியது.
   iv) V.S.சீனிவாசனார் ஒரு தீவிர தேசியவாதியாவார்.
   அ) (i) மற்றும் (ii) ஆகியவை சரி ஆ) (iii) சரி
   இ) (iv) சரி ஈ) அனைத்தும் சரி

2. i) ஒத்துழையாமை இயக்கத்தில் பெரியார் பங்கேற்கவில்லை.
   ii) முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த யாகூப் ஹசனுடன் ராஜாஜி நெருக்கமாகப் பணியாற்றினார்.
   iii) ஒத்துழையாமை இயக்கத்தில் தொழிலாளர்கள் கலந்து கொள்ளவில்லை.
   iv) தமிழ்நாட்டில் கள்ளுக் கடைகளுக்கு முன்பாக மறியல் செய்யப்படவில்லை.
   அ) (i) மற்றும் (ii) ஆகியவை சரி ஆ) (i) மற்றும் (iii) ஆகியவை சரி
   இ) (ii) சரி ஈ) (i) (iii) மற்றும் (iv) ஆகியவை சரி

3. கூற்று : நீதிக்கட்சி தன்னாட்சி இயக்கத்தை எதிர்த்தது.
   காரணம் : தன்னாட்சி இயக்கம் பிராமணர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கிவிடுமென நீதிக்கட்சி அஞ்சியது.
   அ) காரணமும், கூற்றும் சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
   ஆ) கூற்று சரி, காரணம் தவறு.
   இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் தவறு.
   ஈ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்.

4. கூற்று : பிராமணர் அல்லாதவர்க்கு சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற பிரச்சினையைப் பெரியார் எழுப்பினார்.
   காரணம் : காங்கிரசின் முதல் அமைச்சரவையின் போது ராஜாஜி விற்பனை வரியை ரத்துச் செய்தார்.
   அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி. ஆனால் காரணம் சரியான விளக்கமல்ல.
   ஆ) கூற்று சரி, காரணம் தவறு.
   இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் தவறு.
   ஈ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்.

கூடுதல் வினாக்கள்

5. i) பாரதியின் பாடல்கள் அரசுக்கு எதிரானதென தடைசெய்யப்பட்டன.
   ii) புரட்சிகர தேசியவாதிகளுக்கு அமெரிக்காவிலும் ஜெர்மனியிலும் பயிற்சியளிக்கப்பட்டது.
   iii) புரட்சிவாதச் செய்தித்தாள்கள் பர்மாவிலிருந்து வெளிவந்தன.
   iv) புரட்சிகர தேசியவாதிகளுக்கு பாண்டிச்சேரி பாதுகாப்பான புகலிடமாக இருந்தது.
   அ) (i) மற்றும் (ii) ஆகியன சரி. ஆ) (ii) மற்றும் (iii) ஆகியன சரி.
   இ) (iii) மற்றும் (iv) ஆகியன சரி. ஈ) (i) மற்றும் (iv) ஆகியன சரி.

6. கூற்று : காங்கிரசிலிருந்து வெளியேறிய ஈ.வெ.ராமசாமி சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.
காரணம் : வைக்கம் கோயில் நுழைவுப் போராட்டத்திற்கு ஆதரவாக ஈ.வெ.ரா போராட்டத்தில் ஈடுபட்டார்.
அ) கூற்றும், காரணமும் சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
ஆ) கூற்று சரி, காரணம் தவறு.
இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் தவறு.
ஈ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

விடைகள்

1. அ) (i) மற்றும் (ii) ஆகியவை சரி
2. இ) (ii) சரி
3. ஈ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்.
4. ஆ) கூற்று சரி, காரணம் தவறு.
5. ஈ) (i) மற்றும் (iv) சரி.
6. அ) கூற்றும், காரணமும் சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

IV. பொருத்துக:

பாடநூல் வினா

அ)

1.	சென்னை வாசிகள் சங்கம்	அ)	இந்தி எதிர்ப்புப் போராட்டம்
2.	ஈ.வெ.ரா	ஆ)	நீல் சிலையை அகற்றுதல்
3.	S.N.சோமையாஜுலு	இ)	உப்புச் சத்தியாகிரகம்
4.	வேதாரண்யம்	ஈ)	சித்திரவதை ஆணையம்
5.	தாளமுத்து	உ)	வைக்கம் வீரர்

விடை: 1) ஈ 2) உ 3) ஆ 4) இ 5) அ

கூடுதல் வினாக்கள்

ஆ)

1.	மக்கிஸ் தோட்டம்	அ)	ரயில் நிலையம்
2.	சுதேசமித்திரன்	ஆ)	நூற்பாலை
3.	காலியா	இ)	ஆயிரம் விளக்கு
4.	கோரல்	ஈ)	தேசிய பருவ இதழ்
5.	மணியாச்சி	உ)	கப்பல்

விடை: 1) இ 2) ஈ 3) உ 4) ஆ 5) அ

இ)

1.	ராயலசீமா	அ)	ஒடிசா
2.	பெல்லாரி	ஆ)	ஆந்திரப்பிரதேசம்
3.	மலபார்	இ)	தமிழ்நாடு
4.	கஞ்சம்	ஈ)	கேரளா
5.	சென்னை	உ)	கர்நாடகா

விடை: 1) ஆ 2) உ 3) ஈ 4) அ 5) இ

ஈ)

1.	வ.உ.சி	அ)	புரட்சிப் பாடல்கள்
2.	ஈ.வெ.ரா	ஆ)	நீதிபதி
3.	பாரதி	இ)	வைக்கம் வீரர்
4.	T.முத்துசாமி	ஈ)	மாவட்ட ஆட்சியர்
5.	ராபர்ட் ஆஷ்	உ)	செக்கிழுத்த செம்மல்

விடை: 1) உ 2) இ 3) அ 4) ஆ 5) ஈ

உ)

				விடை
1.	1920	அ)	வங்கப்பிரிவினை	1) இ
2.	1930	ஆ)	சைமன் குழு புறக்கணிப்பு	2) ஈ
3.	1942	இ)	ஒத்துழையாமை இயக்கம்	3) உ
4.	1905	ஈ)	சட்டமறுப்பு இயக்கம்	4) அ
5.	1927	உ)	வெள்ளையனே வெளியேறு இயக்கம்	5) ஆ

ஊ)

				விடை
1.	கலீபா	அ)	கப்பல்	1) ஆ
2.	ரௌலட்	ஆ)	பதவி	2) இ
3.	இந்தியா: ஒரு தேசம்	இ)	சட்டம்	3) உ
4.	லாவோ	ஈ)	கட்சி	4) அ
5.	ஜஸ்டிஸ்	உ)	நூல்	5) ஈ

V. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. மிதவாத தேசியவாதிகளின் பங்களிப்பைப் பட்டியலிடுக.

- தொடக்ககாலத்தில் மிதவாத தேசியவாதிகள் தங்கள் கண்ணோட்டங்களை பெருந்தன்மை வாய்ந்த மொழி நடையில் வேண்டுகோள்களாகவும், மனுச்செய்தல், இறைஞ்சுதல், குறிப்பாணைகள் மூலமாக அரசுக்கு சமர்ப்பித்தனர்.
- ஆங்கிலேயர்கள் தங்களை தாராளமானவர்கள் என உரிமை கொண்டாடியதில் உள்ள தவறுகளை அம்பலப்படுத்தியதே மிதவாதிகள் செய்த முக்கியப் பங்களிப்பாகும்.
- ஆங்கிலேயர்கள் எவ்வாறு இந்தியாவைச் சுரண்டினார்கள் என்பதை அம்பலப்படுத்தினர்.
- இங்கிலாந்தில் ஜனநாயகக் கொள்கைகளைப் பின்பற்றும் ஆங்கிலேயர்கள், காலனிகளில் பிரதிநிதித்துவமற்ற அரசை திணித்து நாடகமாடுகின்றனர் என்பதையும் வெட்ட வெளிச்சமாக்கினர்.

2. திருநெல்வேலி எழுச்சி பற்றி ஒரு குறிப்பு வரைக. **PTA**

- திருநெல்வேலியிலும், தூத்துக்குடியிலும் நூற்பாலைத் தொழிலாளர்களை அணி திரட்டுவதில் வ.உ.சி, சுப்பிரமணிய சிவாவின் தோளோடுதோள் நின்றார்.
- சிவா 1908இல் ஐரோப்பியருக்குச் சொந்தமான கோரல் நூற்பாலையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்குத் தலைமையேற்றார்.
- இந்நிகழ்வு நடைபெற்ற அதே சமயத்தில் பிபின் சந்திரபால் விடுதலை செய்யப்பட்டார். பிபின் விடுதலையைக் கொண்டாடுவதற்காகப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்த வ.உ.சியும் சிவாவும் கைது செய்யப்பட்டனர்.
- தலைவர்கள் இருவரும் அரச துரோகக் குற்றம் சாட்டப்பட்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டனர். வ.உ.சிக்கு கொடுமையான வகையில் இரண்டு ஆயுள் தண்டனைகள் வழங்கப்பட்டன.
- மக்கள் செல்வாக்குப் பெற்ற இவ்விரு தலைவர்களும் கைது செய்யப்பட்ட செய்தி பரவியதில் திருநெல்வேலி கலவரம் வெடித்தது.
- காவல் நிலைய, நீதிமன்ற, நகராட்சி அலுவலகக் கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. காவலர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நான்கு நபர்கள் கொல்லப்பட்டனர்.
- தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டனர்.

3. இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் அன்னிபெசன்ட்டின் பங்களிப்பு யாது?

- தேசிய இயக்கம் தளர்வுற்று இருந்த நிலையில் அன்னிபெசன்ட் 1916இல் தன்னாட்சி இயக்கத்தைத் தொடங்கினார்.
- அவர் அகில இந்திய அளவில் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையை முன்னெடுத்துச் சென்றார். இச்செயல் திட்டத்தில் G.S. அருண்டேல், B.P. வாடியா மற்றும் C.P. ராமசாமி ஆகியோர் அவருக்குத் துணை நின்றனர்.

- தன்னுடைய திட்டத்தை மக்களிடையே கொண்டு செல்வதற்காக அன்னிபெசன்ட் நியூ இந்தியா, காமன் வீல் எனும் இரண்டு செய்தித்தாள்களைத் தொடங்கினார்.
- அன்னிபெசன்ட் "விடுதலை பெற இந்தியா எப்படித் துயருற்றது", "இந்தியா: ஒரு தேசம்" எனும் இரண்டு புத்தகங்களையும் சுயாட்சி குறித்த துண்டு பிரசுரத்தையும் எழுதினார்.
- பெரும் எண்ணிக்கையில் மாணவர்கள் இவ்வியக்கத்தில் சேர்ந்து தன்னாட்சி இயக்க வகுப்புகளில் பயிற்சி பெற்றனர். அம்மாணவர்கள் சாரணர் இயக்கக் குழுக்களாகவும், தொண்டர்களாகவும் மாற்றப்பட்டனர்.
- அன்னிபெசன்ட்டும் அவருடன் பணியாற்றுவோரும் பொது மேடைகளில் பேசுவதும், எந்த ஒரு அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவதும் தடைசெய்யப்பட்டிருந்தது.
- 1917இல் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு அன்னிபெசன்ட் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

4. நீதிக்கட்சி அமைச்சரவையால் அறிமுகம் செய்யப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

- உள்ளாட்சித் துறைகளிலும் கல்வி நிலையங்களிலும் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- பணியாளர் தேர்வுக்குழு நிறுவப்பெற்றது. இது பின்னர் பொதுப்பணியாளர் தேர்வாணையமானது.
- இந்து சமய அறநிலையத்துறை சட்டமும் சென்னை அரசு தொழில் உதவிச் சட்டமும் இயற்றப்பட்டன.
- தேவதாசிமுறை ஒழிக்கப்பட்டது.
- ஏழை எளிய மக்கள் வீடுகட்டிக் கொள்வதற்காகப் புறம்போக்கு நிலங்கள் பட்டா செய்து வழங்கப்பட்டன.
- வசதியற்ற மக்கள் பிரிவினரிடையே கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காக கல்வி கட்டணச் சலுகை, கல்வி உதவித் தொகை வழங்குதல், மதிய உணவுத்திட்டம் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

5. ஆக்கப்பூர்வச் செயல்பாடுகளில் ஈ,வெ,ரா. வின் பங்களிப்பு குறித்து சுருக்கமாய் எழுதுக.

- தமிழ் நாட்டு அரசியலில் ஈ.வெ.ரா முக்கிய பங்கு வகித்தார். அவர் கதரின் பயன்பாட்டை மேம்படுத்தி அதன் விற்பனையை அதிகரிக்கத் தீவிரமாகச் செயல்பட்டார்.
- கள்ளுண்பதற்கு தனது எதிர்ப்பைக் காட்டும் வகையில் தனக்குச் சொந்தமான தோப்பிலிருந்த தென்னை மரங்கள் அனைத்தையும் வெட்டி வீழ்த்தினார்.
- திருவாங்கூர் அரசின் ஆட்சியிலிருந்த வைக்கம் எனும் ஊரில் நடைபெற்ற கோயில் நுழைவுக்கான சத்தியாகிரகத்தில் முக்கியப் பங்கு வகித்தார்.
- கேரளாவின் முக்கியத் தலைவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் ஈ.வெ.ரா அங்கு சென்று அவ்வியக்கத்திற்கு புத்துயிர் ஊட்டினார்.
- அவர் கைது செய்யப்பட்டு ஒரு மாத கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. விடுதலை செய்யப்பட்ட பின்னரும் வைக்கத்தைவிட்டு வெளியேற மறுத்தார்.
- 1925 ஜூன் மாதத்தில் வைக்கம் கோயிலைச் சுற்றியிருந்த வீதிகளில் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது.
- சாதிப் பாகுபாட்டுக்கு எதிராகவும், கோயில் நுழைவுப் போராட்டத்திற்கு ஆதரவாகவும் அவர் செய்த பங்களிப்பிற்காக "வைக்கம் வீரர்" என பாராட்டப்பட்டார்.

6. சேரன்மாதேவி குருகுலம் குறித்த கருத்துமாறுபாடு என்றால் என்ன?

- தேசியக் கல்வியை முன்னெடுக்கும் பொருட்டு ஒரு குருகுலமானது V.V.சுப்பிரமணியரால் சேரன்மாதேவியில் நிறுவப்பெற்றது. இது காங்கிரசிடமிருந்து நிதியினைப் பெற்றது.
- இருந்தபோதிலும் சாதியின் அடிப்படையில் மாணவர்கள் பாகுபடுத்தப்பட்டனர். பிராமண மாணவர்களுக்கும் பிராமணர் அல்லாத மாணவர்களுக்கும் தனித்தனியே உணவு பரிமாறப்பட்டது. உணவிலும் வேறுபாடுகள் இருந்தன.
- இது ஈ.வெ.ராவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டபோது அவர் மற்றொரு தலைவரான P.வரதராஜுலுவுடன் இணைந்து இப்பழக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கி கடுமையாக விமர்சித்தார்.
- சேரன்மாதேவி குருகுலப் பிரச்சனையும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தொடர்பாக காங்கிரசுக்குள்ளே ஏற்பட்ட கருத்துவேறுபாடும் ஈ.வெ.ராவை காங்கிரசை விட்டு வெளியேற வைத்தன.

7. இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஏன் பிரபலமானது?

- பள்ளிகளில் இந்தி மொழி கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்யப்பட்டது, ராஜாஜியால் மேற்கொள்ளப்பட்ட ஒரு சர்ச்சைக்குரிய நடவடிக்கை ஆகும்.

- தமிழ் மொழிக்கும் பண்பாட்டிற்கும் தீங்கு விளைவிக்க, ஆரிய வட இந்தியர்களால் சுமத்தப்பட்ட ஏற்பாடாக இது கருதப்பட்டதால் மக்களிடையே பெரும் மனக்கசப்பை ஏற்படுத்தியது.
- இதற்கு எதிராக ஈ.வெ.ரா மிகப்பெரிய பரப்புரையை மேற்கொண்டார். அவர் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்றை சேலத்தில் நடத்தினார்.
- இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்கு ஒடுக்கப்பட்டோர் கூட்டமைப்பும், முஸ்லிம்லீக்கும் ஆதரவளித்தன.
- திருச்சியிலிருந்து சென்னைக்கு ஊர்வலமொன்று திட்டமிடப்பட்டது. ஈ.வெ.ரா.பெரியார் உட்பட 1200 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர்.
- காங்கிரஸ் அரசு பதவி விலகியதைத் தொடர்ந்து இந்தி கட்டாயப் பாடம் என்பது நீக்கப்பட்டது.

8. **தமிழ்நாட்டில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளைக் கோடிட்டுக் காட்டுக.**
   - 1942ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு காந்தியடிகள் "செய் அல்லது செத்துமடி" எனும் முழக்கத்தை வழங்கினார்.
   - தலைவர்கள் கைது செய்யப்படுவதை அறிந்த காமராஜர் தலைமறைவாகி வெள்ளையனே வெளியேறு இயக்கத்திற்காக மக்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டார்.
   - துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்து கொண்டிருந்தபோது ராஜாஜியும், சத்தியமூர்த்தியும் கைது செய்யப்பட்டனர்.
   - தமிழ்நாட்டில் இவ்வியக்கம் பரந்துபட்ட அளவில் நடைபெற்றது. மேலும் அஞ்சல் அலுவலகங்களை தீக்கிரையாக்குவது, தந்திக் கம்பங்களின் கம்பிகளை வெட்டிவிடுவது, ரயில் போக்குவரத்திற்கு ஊறு விளைவிப்பது போன்ற வன்முறை நிகழ்வுகள் அரங்கேறின.
   - பெருமளவிலான தொழிலாளர்கள் மற்றும் மாணவர்கள் இப்போராட்டத்தில் தீவிரப் பங்காற்றினர்.
   - மதுரையில் காங்கிரஸ் தொண்டர்கள் இராணுவத்துடன் மோதினர். எனினும் இவ்வியக்கம் இரக்கமற்ற முறையில் வன்முறை மூலம் ஒடுக்கப்பட்டது.

கூடுதல் வினாக்கள்

9. **சென்னை மகாஜன சபையின் நோக்கம் என்ன?**
   - மாகாணத்தின் பல பகுதிகளில் வாழும் மக்களிடையே பல்வேறு பொதுப்பிரச்சனைகள் குறித்த ஒருமித்த கருத்தை உருவாக்கி அதை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்துவதே சென்னை மகாஜன சபையின் நோக்கமாகும்.

10. **இந்தியர்களின் எண்ணங்களை வெளிப்படுத்திய பத்திரிக்கைகள் யாவை?**
   - தி இந்து
   - தேசாபிமானி
   - சுதேசமித்திரன்
   - விஜயா
   - இந்தியன் பேட்ரியாட்
   - சூர்யோதயம்
   - சவுத் இந்தியன் மெயில்
   - இந்தியா
   - மெட்ராஸ் ஸ்டாண்டர்ட்

11. **சென்னை மகாஜன சபையின் கோரிக்கைகள் யாவை?**
   - குடிமைப் பணிகளுக்கான தேர்வுகள் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே சமயத்தில் நடத்தப்பட வேண்டும்.
   - லண்டனிலுள்ள இந்தியாக் கவுன்சிலை மூடுவது, வரிகளைக் குறைப்பது, இராணுவக் குடியியல் நிர்வாகச் செலவுகளைக் குறைப்பது ஆகியன இவ்வமைப்பின் கோரிக்கைகளாகும்.

12. **சென்னையைச் சேர்ந்த மிதவாதத் தலைவர்கள் யாவர்?**
   - V.S. சீனிவாச சாஸ்திரி
   - G.A. நடேசன்
   - P.S. சிவசாமி
   - T.M. மாதவராவ்
   - V. கிருஷ்ணசாமி
   - S. சுப்பிரமணியர்
   - T.R. வெங்கட்ராமனார்

13. **சென்னை மாகாணத்தில் அடங்கியிருந்த பகுதிகள் யாவை?**
   - சென்னை மாகாணம் என்பது இன்றைய ஆந்திரப்பிரதேசத்தின் பெரும்பகுதிகளையும் (கடற்கரை மாவட்டங்கள் மற்றும் ராயலசீமா) கர்நாடகாவையும் (பெங்களூரு, பெல்லாரி, தெற்கு கனரா) கேரளாவையும் (மலபார்) மற்றும் ஒடிசாவின் (கஞ்சம்) சில பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருந்தது.

14. **கிலாபத் இயக்கம் பற்றி குறிப்பு எழுதுக.**

- முதல் உலகப்போருக்குப் பின்னர் துருக்கியின் கலீபா அவமரியாதை செய்யப்பட்டதுடன் அவரது அனைத்து அதிகாரங்களும் பறிக்கப்பட்டன.
- கலீபா பதவியை மீட்பதற்காகக் கிலாபத் இயக்கம் தொடங்கப்பட்டது. மௌலானா முகமத் அலி மற்றும் மௌலானா சௌகத் அலி என்ற அலி சகோதரர்களால் இவ்வியக்கம் இந்தியாவில் தொடங்கப்பட்டது.
- பெரும்பாலும் தேசிய இயக்கத்திலிருந்து ஒதுங்கியிருந்த முஸ்லிம்கள் தற்போது இவ்வியக்கத்தால் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்கத் தொடங்கினர்.
- தமிழ்நாட்டில் 1920 ஏப்ரல் 17இல் மௌலானா சௌகத் அலி தலைமையேற்ற ஒரு பொதுக் கூட்டத்துடன் கிலாபத் நாள் கடைபிடிக்கப்பட்டது.
- இதைப்போன்ற ஒரு மாநாடு ஈரோட்டிலும் நடத்தப்பட்டது. வாணியம்பாடி கிலாபத் எழுச்சி நடவடிக்கைகளின் முக்கிய மையமாகத் திகழ்ந்தது.

15. **திருப்பூர் குமரனின் வீரமரணம் பற்றி கூறுக.**

- 1932 ஜனவரி 11இல் திருப்பூரில் கொடிகளை ஏந்திய வண்ணம் நாட்டுப்பற்று மிகுந்த பாடல்களைப் பாடிச் சென்ற ஊர்வலத்தினர் காவல் துறையினரால் இரக்கமின்றி அடித்து உதைக்கப்பட்டனர்.
- எல்லோராலும் திருப்பூர் குமரன் என்று அழைக்கப்படும் O.K.S.R.குமாரசாமி தேசியக் கொடியை உயர்த்திப் பிடித்தவாறே விழுந்து இறந்தார். ஆகையால் இவர் "கொடி காத்த குமரன்" எனப்புகழப்படுகிறார்.

VI. ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. **தமிழ் நாட்டில் தொடக்ககால தேசியவாத இயக்கம்:**

அ) சென்னைவாசிகள் சங்கத்தின் நோக்கங்கள் யாவை?

- தனிப்பட்ட குழுக்களின் விருப்பங்களைக் காட்டிலும் பொதுமக்களின் தேவைகளை அனைவருக்கும் தெரிவிப்பது.
- தனது உறுப்பினர்களின் நலன்களை முன்னெடுப்பது மற்றும் வரிகளைக் குறைக்க கோரிக்கை வைப்பது போன்ற நோக்கங்களை இவ்வமைப்பு கொண்டிருந்தது.

ஆ) தமிழ்நாட்டில் தேசியவாதப் பத்திரிக்கைகள் உருவாவதற்கு எது காரணமாய் அமைந்தது?

- T. முத்துசாமி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.
- ஒரு இந்தியர் நீதிபதியாகப் பணியமர்த்தப்பட்டதை சென்னையைச் சேர்ந்த அனைத்து பத்திரிக்கைகளும் விமர்சனம் செய்தன.
- எதிர்ப்புத் தெரிவித்த அனைத்துப் பத்திரிக்கைகளும் ஐரோப்பியர்களால் நடத்தப்படுவதை கல்வி கற்ற இளைஞர்கள் உணர்ந்தனர். இது குறித்து இந்தியரின் எண்ணங்களை வெளிப்படுத்த ஒரு செய்திப் பத்திரிக்கை தேவை என்பது உணரப்பட்டது.

இ) சென்னை மகாஜன சபையின் நோக்கங்கள் யாவை?

- மாகாணத்தின் பல பகுதிகளில் வாழும் மக்களிடையே பல்வேறு பொதுப்பிரச்சனைகள் குறித்த ஒருமித்த கருத்தை உருவாக்கி அதை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்துவதே சென்னை மகாஜன சபையின் நோக்கங்களாகும்.

ஈ) தமிழ்நாட்டின் தொடக்ககாலத் தேசியத் தலைவர்கள் யாவர்?

- V.S. சீனிவாசனார்
- G.A. நடேசன்
- P.S. சிவசாமி
- T.M. மாதவராவ்
- V. கிருஷ்ணசாமி
- S. சுப்பிரமணியர்
- T.R. வெங்கட்ராமனார்

2. **தமிழ்நாட்டில் புரட்சிகர தேசியவாத இயக்கம்:**

அ) தமிழ் நாட்டை சேர்ந்த சில புரட்சிகர தேசியவாதிகளைப் பட்டியலிடுக.

- M.P.T. ஆச்சாரியா
- V.V. சுப்பிரமணியனார்
- T.S.S. ராஜன்
- வ.உ. சிதம்பரனார்
- சுப்பிரமணிய பாரதியார்

ஆ) சுப்பிரமணிய பாரதியார் பாண்டிச்சேரிக்குச் சென்றது ஏன்?

- சிறைத் தண்டனையைத் தவிர்ப்பதற்காக சுப்பிரமணிய பாரதியார் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்த பாண்டிச்சேரிக்குச் சென்றார்.

இ) சில புரட்சிவாதப் பத்திரிக்கைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

இந்தியா, விஜயா, சூர்யோதயம் ஆகியன புரட்சிவாதப் பத்திரிக்கைகளாகும்.

ஈ) வாஞ்சிநாதன் செய்தது என்ன?

வாஞ்சிநாதன், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ராபர்ட் W.D.E.ஆஷ் என்பவரை மணியாச்சி ரயில் சந்திப்பில் சுட்டுக்கொன்றார்.

3. **பிராமணரல்லாதோர் இயக்கம்:**

அ) தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் ஏன் உருவாக்கப்பட்டது?

பிராமணரல்லாதோரின் நலன்களை மேம்படுத்துவதற்காக தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது.

ஆ) பிராமணரல்லாதோர் அறிக்கை என்றால் என்ன?

நீதிக்கட்சி தனது நோக்கங்களை கோடிட்டுக் காட்டி பிராமணரல்லாதோரின் அறிக்கையை வெளியிட்டது. அவை: அரசுப்பணியிடங்களில் பிராமணரல்லாதோருக்கு இடஒதுக்கீடு மற்றும் பிரதிநிதித்துவ அமைப்புகளில் இட ஒதுக்கீடு என்பனவாகும்.

இ) ஈ.வெ.ரா ஏன் பிராமணரல்லாதோர் இயக்கத்தில் இணைந்தார்?

காங்கிரஸ் பிராமணர்களின் நலன்களை மட்டுமே மேம்படுத்துவதாக ஈ.வே.ரா உணர்ந்தார் எனவே அவர் காங்கிரசைவிட்டு வெளியேறி பிராமணரல்லாதோர் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

ஈ) இந்தி எதிர்ப்பு போராட்டம் குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

- பள்ளிகளில் இந்திமொழி கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்யப்பட்டது. இது ராஜாஜியால் மேற்கொள்ளப்பட்ட ஒரு சர்ச்சைக்குரிய நடவடிக்கையாகும்.
- தமிழ் மொழிக்கும் பண்பாட்டிற்கும் தீங்கு விளைவிக்குமென மக்கள் எண்ணினர்.
- இதற்கு எதிராக ஈ.வெ.ரா மிகப்பெரிய பரப்புரையை மேற்கொண்டார். மேலும் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்றை சேலத்தில் நடத்தினார்.
- காங்கிரஸ் பதவி விலகியதைத் தொடர்ந்து இந்தி கட்டாயப்பாடம் என்பது நீக்கப்பட்டது.

கூடுதல் வினாக்கள்

4. **சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி:**

அ) சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி எங்கு தொடங்கப்பட்டது?

தூத்துக்குடி.

ஆ) அதனைத் தொடங்கியவர் யார்?

வ.உ.சிதம்பரனார்.

இ) அவரிடமிருந்த கப்பல்களின் பெயரென்ன?

காலியா மற்றும் லாவோ.

ஈ) அவர் எவ்விரு இடங்களுக்கிடையே கப்பல்களை ஓட்டினார்?
தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே கப்பல்களை ஓட்டினார்.

5. **தன்னாட்சி இயக்கம்:**

அ) தன்னாட்சி இயக்கம் யாரால், எப்பொழுது தொடங்கப்பட்டது?
தன்னாட்சி இயக்கம் அன்னிபெசன்ட் என்பவரால் 1916ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

ஆ) அவர் நடத்திய பத்திரிக்கைகள் யாவை?
- நியூ இந்தியா
- காமன் வீல்

இ) அவர் எழுதிய புத்தகங்கள் யாவை?
- "விடுதலைபெற இந்தியா எப்படித் துன்புற்றது"
- "இந்தியா: ஒரு தேசம்"

ஈ) இவ்வியக்கம் ஒளிமங்கிடக் காரணமென்ன?
காந்தியடிகள் தேசியத் தலைவராக எழுச்சி பெற்ற நிலையில் அன்னிபெசன்ட்டும் தன்னாட்சி இயக்கமும் ஒளிமங்கின.

6. **கிலாபத் இயக்கம்:**

அ) முதல் உலகப் போருக்குப்பின் அவமரியாதை செய்யப்பட்டவர் யார்?
துருக்கியின் கலீபா

ஆ) கிலாபத் இயக்கம் ஏன் தோற்றுவிக்கப்பட்டது?
துருக்கி கலீபாவின் பதவியை மீட்பதற்காகத் தொடங்கப்பட்டது.

இ) கிலாபத்நாள் மாநாட்டுக்குத் தலைமை வகித்தவர் யார்?
மௌலானா சவுகத் அலி

ஈ) கிலாபத் எழுச்சி நடவடிக்கைகளின் மையமாகத் திகழ்ந்த இடம் எது?
வாணியம்பாடி

VII. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. **தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது என்பதை விவாதிக்கவும்.**

- சுதேசி இயக்கம் தமிழ்நாட்டில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்நியப் பண்டங்களைப் புறக்கணித்தல் தொடர்பாக காங்கிரஸ் தீவிரமான இயக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது.
- வ.உ.சிதம்பரனார், V. சர்க்கரையார், சுப்பிரமணிய பாரதி, சுரேந்திரநாத் ஆரியா ஆகியோர் தமிழ் நாட்டைச் சேர்ந்த சிறந்த தலைவர்களாவர்.
- தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கலந்து கொண்ட பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மக்களைத் திரட்டுவதற்கு முதன் முதலாகத் தமிழ் பயன்படுத்தப்பட்டது.
- மக்களின் நாட்டுப் பற்று உணர்வுகளைத் தட்டி எழுப்பியதில் சுப்பிரமணிய பாரதியின் தேசபக்திப் பாடல்கள் மிக முக்கியமானவையாகும்.
- சுதேசி கருத்துக்களைப் பரப்புரை செய்ய பல இதழ்கள் தோன்றின. சுதேசமித்திரன், இந்தியா ஆகிய இரண்டும் முக்கிய இதழ்களாகும்.
- தீவிர தேசியவாதத் தலைவரான பிபின் சந்திரபால் சென்னையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது ஆற்றிய சொற்பொழிவுகள் இளைஞர்களைக் கவர்ந்தன.
- சுதேசி இயக்கத்தில் மாணவர்களும் இளைஞர்களும் பெருமளவில் பங்கேற்றனர்.
- சுதேசியைச் செயல்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட துணிகரமான நடவடிக்கைகளில் ஒன்று தூத்துக்குடியில் வ.உ.சிதம்பரனார் தொடங்கிய சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி ஆகும்.

- இவர் காலியா மற்றும் லாவோ எனும் இரு கப்பல்களை விலைக்கு வாங்கி அவற்றை தூத்துக்குடிக்கும் கொழும்புவிற்குமிடையே ஓட்டினார்.
- எனினும் ஐரோப்பியக் கம்பெனிகளின் முறையற்ற கழுத்தறுப்பு போட்டியினாலும் அரசாங்கத்தின் ஒருதலைப்பட்சமான போக்கினாலும் வ.உ.சியின் முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.
- மக்கள் செல்வாக்குப் பெற்ற தலைவர்களான வ.உ.சியும், சிவாவும் கைது செய்யப்பட்ட செய்தி பரவியதில் திருநெல்வேலியில் கலவரம் வெடித்தது.
- காவல் நிலைய, நீதிமன்ற, நகராட்சி அலுவலகக் கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. காவலர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நான்கு நபர்கள் கொல்லப்பட்டனர்.
- வ.உ.சி சிறையில் கடுமையாக நடத்தப்பட்டதோடு செக்கிழுக்க வைக்கப்பட்டார். கைது செய்யப்படவேண்டிய பிற தலைவர்கள் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்த பாண்டிச்சேரிக்கு இடம் பெயர்ந்தனர்.
- சுதேசி இயக்கத் தலைவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரமான அடக்குமுறை தமிழ் நாட்டில் சுதேசி இயக்கத்தை ஓர் முடிவுக்குக் கொண்டுவந்தது.

2. **தமிழ் நாட்டில் பிராமணரல்லாதோர் இயக்கம் தோன்றி வளர்ந்ததை ஆய்வு செய்க.**

கல்வியறிவு பெற்ற பிராமணரல்லாதோர்:

- சென்னை மாகாணத்தில் கல்வி வேகமாக வளர்ந்தது. கல்வியறிவு பெற்ற பிராமணரல்லாதோர் எண்ணிக்கை அதிகமானது.
- தீவிர அரசியல் மற்றும் சமூக நடவடிக்கைகள் படித்த பிராமணரல்லாதவர்களை அரசியலில் ஈடுபடவைத்தது.
- பிராமணர்களின் மேலாதிக்கத்தில் இருந்த அரசுப்பணிகளிலும், தேர்வு செய்யப்பட்ட அமைப்புகளின் பிரதிநிதித்துவத்திலும், அரசு வாய்ப்புகளிலும் சமநிலையற்ற தன்மை இருப்பதாகவும் சாதியப்பாகுபாடு குறித்தும் அவர்கள் பிரச்சனைகளைக் கிளப்பினர்.

சென்னை திராவிடர் கழகம்:

- பிராமணரல்லாதோர் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தங்களை ஒரு அரசியல் அமைப்பாக அணிதிரட்டிக் கொண்டனர்.
- 1912இல் 'சென்னை திராவிடர் கழகம்' உருவாக்கப்பட்டது. அதன் செயலராக C. நடேசனார் செயலூக்க வகையில் பங்காற்றினார்.
- 1916 ஜூன் மாதத்தில் அவர் பிராமணர் அல்லாத மாணவர்களுக்காக 'திராவிடர் சங்க தங்கும் விடுதியை' நிறுவினார். மேலும் பிராமணரல்லாதோரின் தலைவர்களான T.M. நாயர், P. தியாகராயர் ஆகிய இருவரிடையே நிலவிய கருத்து வேற்றுமையைச் சரிசெய்து இணக்கத்தை ஏற்படுத்தினார்.

தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்:

- 1916 நவம்பர் 20இல் P. தியாகராயர், T.M. நாயர், C. நடேசனார் ஆகியோர் தலைமையில் முப்பது பிராமணரல்லாதவர்கள் சென்னை விக்டோரியா பொது அரங்கில் கூடினர்.
- பிராமணரல்லாதோரின் நலன்களை மேம்படுத்துவதற்காக "தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்" எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது.
- அவர்கள் ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ் (Justice) தமிழில் திராவிடன். தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா எனும் மூன்று செய்தித்தாள்களைத் தொடங்கினர்.

ஜஸ்டிஸ் கட்சி:

- விரைவில் இவ்வமைப்பு நடத்திய ஆங்கில நாளிதழின் பெயரான ஜஸ்டிஸ் என்பதே அவ்வமைப்பின் பெயராகி "ஜஸ்டிஸ் கட்சி" (நீதிக்கட்சி) என அழைக்கப்படலாயிற்று.
- மாகாணம் முழுவதிலும் ஜஸ்டிஸ் கட்சி பல மாநாடுகளை நடத்தியது.

இடஒதுக்கீட்டுக்கான கோரிக்கை:

- அரசுப் பணியிடங்களில் பிராமணரல்லாதோருக்கு இட ஒதுக்கீடு மற்றும் பிரதிநிதித்துவ அமைப்புகளில் இட ஒதுக்கீடு என்பது நீதிக்கட்சியின் நோக்கமாகும்.
- இவ்வமைப்பு தன்னாட்சி இயக்கத்தை பிராமணர்களின் இயக்கமெனவும், காங்கிரசை பிராமணர்களின் கட்சியெனவும் விமர்சித்தது.
- பாராளுமன்ற அரசியல் சீர்திருத்தங்கள் குறித்து 1917இல் மாண்டேகுவின் அறிவிப்பைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் அரசியல் விவாதங்கள் தீவிரமடைந்தன.
- நீதிக்கட்சி வகுப்புவாத பிரதிநிதித்துவத்தைக் கோரியது. சென்னை அரசாங்கம் நீதிக் கட்சியை ஆதரித்தது.
- ஆங்கிலேயரின் ஆட்சி பிராமணர் அல்லாதோரின் முன்னேற்றத்திற்கு துணைபுரியும் என நீதிக்கட்சி நம்பியது. 1919ஆம் ஆண்டுச் சட்டம் பிராமணர் அல்லாதோருக்கு தேர்தலில் இடஒதுக்கீடு வழங்கியது.

நீதிக்கட்சி அமைச்சரவை:

- 1920இல் நடந்த தேர்தலில் நீதிக்கட்சி வெற்றி பெற்றது, A.சுப்புராயலு முதலாவது முதலமைச்சரானார். 1923இல் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சியைச் சேர்ந்த பனகல் அரசர் அமைச்சரவையை அமைத்தார்.

3. **சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பாத்திரத்தை விவரி.**

- காந்தியடிகள் முன்வைத்த கோரிக்கைகளை வைஸ்ராய் ஏற்றுக் கொள்ளாததைத் தொடர்ந்து அவர் சட்டமறுப்பு இயக்கத்தைத் துவங்கினார்.

தமிழ்நாட்டில் சட்டமறுப்பு இயக்கம்:

- சட்டமறுப்பு இயக்கமானது மாணவர்கள், கடைகள் வைத்திருப்போர், தொழிலாளர், பெண்கள் ஆகியோரின் பங்கேற்புடன் மக்கள் பெருவாரியான எண்ணிக்கையில் கலந்து கொண்ட போராட்டமாகும்.
- கிராமப்புறங்களிலும் நகரங்களிலும் பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள், கடையடைப்பு ஆகியனவும் சுதேசி நாடகங்களை மேடையேற்றுவது, சுதேசிப் பாடல்கள் பாடுவது ஆகியனவும் அன்றாட நிகழ்வுகளாயின.
- சென்னை நகரில் கடைகளுக்கு முன்பாக மறியல்கள் நடத்தப்பட்டதுடன் அந்நியப் பண்டங்கள் புறக்கணிக்கப்பட்டன.

உப்புச் சத்தியாகிரகம்:

- ராஜாஜி உப்புச் சத்தியாகிரகம் ஒன்றினை ஏற்பாடு செய்து தலைமையேற்று வேதாரண்யம் நோக்கி அணிவகுத்துச் சென்றார்.
- 1930 ஏப்ரல் 13ல் திருச்சிராப்பள்ளியிலிருந்து தொடங்கி ஏப்ரல் 28இல் தஞ்சாவூர் மாவட்டத்தின் வேதாரண்யத்தை அணிவகுப்பு சென்றடைந்தது.
- இவ்வணிவகுப்புக்கென்றே "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்" எனும் சிறப்புப் பாடலை நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார் புனைந்திருந்தார்.
- காவல் துறையின் கொடூரமான நடவடிக்கைகளைப் பொருட்படுத்தாமல் அணிவகுத்துச் சென்ற சத்தியாகிரகிகளுக்கு பயணித்த பாதையெங்கும் எழுச்சியமிகு வரவேற்பு அளிக்கப்பட்டது.
- வேதாரண்யம் சென்றடைந்த பின்னர் ராஜாஜியின் தலைமையில் 12 தொண்டர்கள் உப்புச் சட்டத்தை மீறி உப்பை அள்ளினர். உப்புச் சட்டங்களை மீறியதற்காக ராஜாஜி கைது செய்யப்பட்டார்.

தமிழக மாவட்டங்களில் பரவலான போராட்டங்கள்:

- T.பிரகாசம், K. நாகேஸ்வர ராவ் ஆகியோர் தலைமையில் சத்தியாகிரகிகள் சென்னைக்கு அருகேயுள்ள உதயவனம் என்ற இடத்தில் ஒரு முகாமை அமைத்தனர். ஆனால் அவர்கள் காவல் துறையால் கைது செய்யப்பட்டனர். இந்நிகழ்வு சென்னை கடையடைப்பிற்கு வழிகோலியது.

- 1930 ஏப்ரல் 27இல் திருவல்லிக்கேணியில் காவல்துறையினருடன் மோதல் ஏற்பட்டது. மூன்று மணிநேரம் நடைபெற்ற மோதலில் மூன்று நபர்கள் உயிரிழந்தனர்.
- ராமேஸ்வரத்தில் உப்புச் சத்தியாகிரகம் மேற்கொள்ள முயன்ற தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.
- உவரி, அஞ்செங்கோ, வேப்பலோடை, தூத்துக்குடி மற்றும் தருவைக்குளம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட இதுபோன்ற முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட்டன.
- மாகாணம் முழுவதிலும் நூற்பாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். உப்புச் சட்டங்களை மீறியதற்காக அபராதம் கட்டிய முதல் பெண்மணி ருக்மணி லட்சுமிபதியாவார்.
- சத்திய மூர்த்தி அந்நியத் துணிகளை விற்பனை செய்யும் கடைகளை மறியல் செய்தார். ஊர்வலங்களைத் திட்டமிட்டார், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார். N.M.R. சுப்பராமன் மற்றும் கு.காமராஜ் ஆகியோரும் முக்கியப் பங்கு வகித்தனர்.
- 1932 ஜனவரி 26இல் ஆரியா என அழைக்கப்படும் பாஷ்யம் புனித ஜார்ஜ் கோட்டையின் உச்சியில் தேசியக் கொடியை ஏற்றினார்.

கூடுதல் வினா

4. **ஜார்ஜ் ஜோசப் பற்றி விவரி:**

- வழக்கறிஞரும் நன்கு சொற்பொழிவாற்றும் திறன் படைத்தவருமான ஜார்ஜ் ஜோசப் மதுரையில் தன்னாட்சி இயக்கத்தை ஏற்படுத்தியதிலும், அதன் நோக்கத்தை மக்களின் கவனத்திற்கு கொண்டு சென்றதிலும் முக்கியப் பங்குவகித்தார்.
- செங்கண்ணூரில் (கேரளா) பிறந்திருந்தாலும் மதுரையில் வசிப்பதையே விரும்பி மக்களின் வழக்கறிஞராகப் பணி செய்தார்.
- தனது நீண்ட பொதுவாழ்வின் போது, அவர் கேரளாவில் வைக்கம் சத்தியாகிரகத்தை வழிநடத்தினார். ஏனெனில் இது இந்தியாவின் அனைத்து குடிமக்களுக்கும் சமூக உரிமைகள் தொடர்பான பிரச்சனையாக அவர் கருதினார்.
- தமிழ் நாட்டின் குற்றப்பரம்பரைச் சமூகங்களின் பாதுகாவலராக விளங்கினார். பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு இவர் ஆற்றிய சேவைகளின் காரணமாக மதுரை மக்கள் இவரை "ரோசாப்புதுரை" என அன்புடன் அழைத்தனர்.
- மதுரை தொழிலாளர் சங்கம் எனும் அமைப்பை ஏற்படுத்துவதற்கு, ஹார்வி மில் தொழிலாளர்களுக்கு உதவினார்.
- இச்சங்கத்தின் தொடக்ககால போராட்டங்கள் நூற்பாலைத் தொழிலாளர்களுககு ஊதிய உயர்வையும் வேலைநேரக் குறைப்பையும் பெற்றுத்தந்தன.

காலக்கோடு (முக்கிய நிகழ்வுகள்)

1806 – *வேலூர் புரட்சி.*

1852 – *சென்னைவாசிகள் சங்கம்.*

1877 – *T.முத்துசாமி, சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதியாக நியமனம்.*

1878 – *'தி இந்து' – நாளிதழ் தொடக்கம்*

1884 – *சென்னை மகாஜன சபை.*

1885 – *இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாடு.*

1886 – *இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது மாநாடு.*

1887 – *இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மாநாடு.*

1890	–	சுதேசிமித்திரன் வெளியிடு
1904	–	பாரத மாதா சங்கம் துவக்கம்
1905	–	வங்காள பிரிவினை
1908	–	ஐரோப்பியர்களுக்கு சொந்தமான கோரல் நூற்பாலை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்.
1910	–	பத்திரிக்கை சட்டம்
1911	–	ராபர்ட் W.D.E.ஆஷ், வாஞ்சிநாதனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
1912	–	சென்னை திராவிடர் கழகம்.
1916	–	பிராமனரல்லாதோர் இயக்கம்.
1917	–	காங்கிரஸ் மாநாட்டின் தலைவராக அன்னிபெசன்ட் தேர்வு.
1918	–	மதுரை தொழிலாளர் சங்கம் எனும் அமைப்பு உருவாதல்.
1919	–	ரௌலட் சட்டம்
1920	–	1. ஒத்துழையையாமை இயக்கம் 2. கிலாபத் தினம்
1922	–	1. வேல்ஸ் இளவரசரின் வருகை புறக்கணிப்பு 2. ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டது
1925	–	வைக்கத்தில் நடைபெற்ற கோவில் நுழைவு போராட்டம்.
1927	–	1. நீல் சிலையை அகற்கும் போராட்டம், 2. சைமன் குழு அமைதல்
1928	–	சைமன் குழு இந்தியா வருகை.
1929	–	லாகூர் காங்கிரஸ்
1930	–	1. தண்டி நடைபயணம் 2. சட்ட மறுப்பு இயக்கம் 3. உப்பு சத்தியாகிரகம் 4. முதல் வட்ட மேஜை மாநாடு
1935	–	இந்திய அரசாங்க சட்டம்
1942	–	வெள்ளையனே வெளியேறு இயக்கம்

அலகு 10

வரலாறு

தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள்

மனவரைபடம்



நினைவில் கொள்க

- இந்திய சமூக சீர்திருத்தவாதிகளின் முன்னோடியாகத் திகழ்ந்தவர் **ராஜா ராம்மோகன்ராய்.**
- ஐரோப்பிய மொழிகள் தவிர்த்து அச்சில் ஏறிய மொழிகளில் முதல் மொழி **தமிழ்மொழி** ஆகும்.
- பனையோலைகளில் கையால் எழுதப்பெற்றிருந்த பல தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைப் பதிப்பித்தவர் **சி.வை.தாமோதரனார்.**
- தமிழ்மொழி வாழ்த்துப் பாடல் இடம் பெற்றிருந்த நாடக நூல் **மனோன்மணியம்** ஆகும், அதனை எழுதியவர் **பி.சுந்தரனார்** ஆவார்.
- தமிழ் இசை வரலாறு குறித்து நூல்களை வெளியிட்டு தமிழ் இசைக்குச் சிறப்புச் செய்தவர் **ஆபிரகாம் பண்டிதர்.**
- 14 வரிச் செய்யுள் வடிவத்தை தமிழுக்கு அறிமுகம் செய்தவர் **பரிதிமாற் கலைஞர்** (வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரி)
- தமிழ் மொழியியல் தூய்மைவாதத்தின் தந்தை என்றும் தனித்தமிழ் இயக்கத்தை உருவாக்கியவர் எனவும் கருதப்படுபவர் **மறைமலை அடிகள்.**
- பிராமண மேலாதிக்கத்திற்கு எதிராகப் பிராமணர் அல்லாதவர்களைப் பாதுகாக்கும் இயக்கமாக உருவானது **திராவிட இயக்கம்.**
- **நீதிக்கட்சி** தேர்தலில் வெற்றிபெற்று இந்தியாவின் முதல் அமைச்சரவையை சென்னையில் அமைத்தது.
- தமிழ்நாட்டில் பிராமணர் அல்லாதவர்களின் மூலாதாரமாய் விளங்கியது **நீதிக்கட்சி.**
- இந்தியாவின் முதல் சட்டமன்ற பெண் உறுப்பினர் **முத்துலட்சுமி அம்மையார்.**
- சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர் **ஈ.வெ.ராமசாமி பெரியார்.**
- இரட்டைமலை சீனிவாசனின் தன்னலமற்ற சேவைக்காக வழங்கப்பட்ட பட்டங்கள் **ராவ்சாகிப்' ராவ் பகதூர்' திவான் பகதூர்** என்பனவாகும்.
- 1923இல் முதல் முதலாக மே தின விழாவை ஏற்பாடு செய்தவர் **ம.சிங்காரவேலர்.**
- 1918இல் இந்தியாவின் முதல் தொழில் சங்கமான 'சென்னை தொழிலாளர் சங்கம்' உருவாக்கப்பட்டது.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **இந்தியாவைச் சேர்ந்த சமூக சீர்திருத்தவாதிகளின் முன்னோடி __________ ஆவார்.**
   அ) சி.வை. தாமோதரன் ஆ) பெரியார் இ) ராஜா ராம்மோகன்ராய் ஈ) மறைமலையடிகள்

2. **1709இல் தரங்கம்பாடியில் __________ ஒரு முழுமையான அச்சகத்தை நிறுவினார்.**
   அ) கால்டுவெல் ஆ) எப்.டபிள்யூ. எல்லிஸ்
   இ) சீகன்பால்கு ஈ) மீனாட்சி சுந்தரம்

3. **__________ சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரப்பூர்வச் செய்தித்தாள் ஆகும்.**
   அ) குடியரசு ஆ) புரட்சி இ) விடுதலை ஈ) பகுத்தறிவு

4. **சமயம் அகற்றப்பட்டு அவ்விடத்தில் __________ வைக்கப்பட வேண்டுமென பெரியார் விரும்பினார்.**
   அ) தேசியவாதம் ஆ) உருவ வழிபாடு மறுப்பு
   இ) பகுத்தறிவுவாதம் ஈ) ஆன்மீகம்

5. **1893இல் ஆதி திராவிட மகாஜன சபையை __________ நிறுவினார்.**
   அ) இரட்டைமலை சீனிவாசன் ஆ) B.R.அம்பேத்கர்
   இ) ராஜாஜி ஈ) எம்.சி.ராஜா

6. இந்தியாவின் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட தொழிற்சங்கம் ________இல் உருவாக்கப்பட்டது.
அ) 1918 ஆ) 1917 இ) 1916 ஈ) 1914

7. அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய ________ நீதிக் கட்சியால் நிறுவப் பெற்றது. PTA
அ) பணியாளர் தேர்வு வாரியம் ஆ) பொதுப்பணி ஆணையம்
இ) மாநிலப் பணியாளர் ஆளெடுப்பு வாரியம் ஈ) பணியாளர் தேர்வாணையம்

8. சென்னை மாகாணத்தில். ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து முதன் முறையாகச் சட்டமேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்.
அ) எம்.சி. ராஜா ஆ) இரட்டை மலை சீனிவாசன்
இ) டி.எம். நாயர் ஈ) பி. வரதராஜுலு

கூடுதல் வினாக்கள்

9. ஐரோப்பிய மொழிகள், தவிர்த்து அச்சில் ஏறிய மொழிகளில் முதல் மொழி
அ) தமிழ் ஆ) மலையாளம் இ) கன்னடம் ஈ) தெலுங்கு

10. 1578இல் 'தம்பிரான் வணக்கம்' எனும் தமிழ் புத்தகம் வெளியிடப்பட்ட இடம்
அ) கல்கத்தா ஆ) பாண்டிச்சேரி இ) சென்னை ஈ) கோவா

11. "வள்ளலார்" என பிரபலமாக அறியப்பட்டவர்
அ) பாரதிதாசன் ஆ) ராமலிங்க அடிகள்
இ) அயோத்திதாசர் ஈ) ஈ.வெ. ராமசாமி

12. தமிழ் இசை வரலாறு குறித்து நூல்களை வெளியிட்டவர்
அ) சூரிய நாராயண சாஸ்திரி ஆ) மறைமலையடிகள்
இ) ஆபிரகாம் பண்டிதர் ஈ) பரிதிமாற் கலைஞர்

13. 14 வரிச் செய்யுள் வடிவத்தை தமிழுக்கு அறிமுகம் செய்தவர்
அ) பரிதிமாற்கலைஞர் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) கண்ணதாசன்

14. தனித்தமிழ் இயக்கத்தை உருவாக்கியவர்
அ) ராமலிங்க அடிகள் ஆ) மறைமலையடிகள் இ) சி. நடேசனார் ஈ) மு. வரதராசனார்

15. மறைமலையடிகள் தமிழாசிரியராகப் பணியாற்றிய கல்லூரி
அ) பச்சையப்பா கல்லூரி ஆ) மாநிலக் கல்லூரி இ) கிறித்துவக் கல்லூரி ஈ) இந்துக் கல்லூரி

16. டாக்டர் சி. நடேசனார் 'திராவிடர் இல்லம்' என்ற பெயரில் மாணவர்கள் தங்கும் விடுதியை நிறுவிய இடம்
அ) மயிலாப்பூர் ஆ) கோடம்பாக்கம் இ) மந்தைவெளி ஈ) திருவல்லிக்கேணி

17. நீதிக்கட்சியின் சென்னை மாகாணத்தின் முதல் முதலமைச்சர்
அ) சி. நடேசனார் ஆ) டி.எம். நாயர் இ) தியாகராயர் ஈ) A. சுப்பராயலு

18. இந்தியாவின் முதல் சட்டமன்ற பெண் உறுப்பினர்
அ) முத்துலட்சுமி அம்மையார் ஆ) அலமேலு மங்கை
இ) மூவலூர் இராமாமிர்தம் ஈ) சிவகாமி சிதம்பரனார்

19. நீதிக்கட்சி இந்து சமய அறநிலைய சட்டத்தை இயற்றிய ஆண்டு
அ) 1926 ஆ) 1916 இ) 1918 ஈ) 1928

20. சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்
அ) அண்ணாதுரை ஆ) காமராஜர் இ) பெரியார் ஈ.வெ.ரா ஈ) ராஜாஜி

21. "வைக்கம் வீரர்" என்று பாராட்டப்பட்டவர்
அ) ஜார்ஜ் ஜோசப் ஆ) இரட்டைமலை சீனிவாசன்
இ) எம்.சி. ராஜா ஈ) பெரியார் ஈ.வெ.ரா

22. பெரியார் ஈ.வெ.ரா காங்கிரசை விட்டு வெளியேறிய ஆண்டு
அ) 1920 ஆ) 1930 இ) 1925 ஈ) 1935

23. நீதிக்கட்சியும் சுயமரியாதை இயக்கமும் இணைந்து உருவான புதிய கட்சி
அ) திராவிடர் கழகம் ஆ) திராவிட முன்னேற்றக் கழகம்
இ) ஜனநாயகக் கட்சி ஈ) பொதுவுடைமைக் கட்சி

24. ராஜாஜியின் பதவி விலகலுக்குப் பின் சென்னை மாநிலத்தின் முதலமைச்சரானவர்
அ) G. சுப்ரமணியம் ஆ) கு. காமராஜர்
இ) C.N. அண்ணாதுரை ஈ) கக்கன்

25. தன்னலமற்ற சேவைக்காக பல பட்டங்களால் சிறப்பு செய்யப்பட்டவர்
அ) இரட்டைமலை சீனிவாசன் ஆ) ஜார்ஜ் ஜோசப்
இ) எம்.சி. ராஜா ஈ) A. சுப்பராயலு

26. அகில இந்திய தொழிலாளர் சங்கத்தின் முதல் மாநாடு 1920இல் நடைபெற்ற இடம்
அ) சென்னை ஆ) தில்லி இ) பம்பாய் ஈ) கல்கத்தா

27. சென்னை மாகாண தொழிலாளர் இயக்க நடவடிக்கைகளில் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தவர்
அ) எம்.சி. ராஜா ஆ) கல்யாண சுந்தரம் இ) பி.பி. வாடியா ஈ) ம. சிங்காரவேலர்

28. முதல் தமிழிசை மாநாடு நடத்தப்பட்ட ஆண்டு
அ) 1947 ஆ) 1943 இ) 1946 ஈ) 1941

29. நீதிக்கட்சி நிறுவப்பட்ட ஆண்டு
அ) 1906 ஆ) 1911 இ) 1916 ஈ) 1929

30. தேவதாசி முறையை ஒழிக்கப் பாடுபட்டவர்களில் முதலிடம் வகிப்பவர்
அ) டாக்டர். முத்துலட்சுமி அம்மையார் ஆ) ருக்மணி அம்மாள்
இ) மூவலூர் இராமாமிர்தம் ஈ) தாயாரம்மாள்

விடைகள்

1. இ) ராஜா ராம் மோகன்ராய் 2. இ) சீகன்பால்கு 3. அ) குடியரசு
4. இ) பகுத்தறிவுவாதம் 5. அ) இரட்டைமலை சீனிவாசன்
6. அ) 1918 7. அ) பணியாளர் தேர்வு வாரியம்
8. அ) எம்.சி.ராஜா 9. அ) தமிழ் 10. ஈ) கோவா
11. ஆ) ராமலிங்க அடிகள் 12. இ) ஆபிரகாம் பண்டிதர்
13. அ) பரிதிமாற்கலைஞர் 14. ஆ) மறைமலையடிகள் 15. இ) கிறித்துவக் கல்லூரி
16. ஈ) திருவல்லிக்கேணி 17. ஈ) A.சுப்பராயலு 18. அ) முத்துலட்சுமி அம்மையார்
19. அ) 1926 20. இ) பெரியார் ஈ.வெ.ரா 21. ஈ) பெரியார் ஈ.வே.ரா
22. இ) 1925 23. அ) திராவிடர் கழகம் 24. ஆ) கு.காமராஜர்
25. அ) இரட்டைமலை சீனிவாசன் 26. இ) பம்பாய் 27. ஈ) ம.சிங்காரவேலர்
28. அ) 1943 29. இ) 1916 30. அ) டாக்டர். முத்துலட்சுமி அம்மையார்

II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. முதன் முதலாக அச்சேறிய ஐரோப்பிய மொழி அல்லாத மொழி __________ ஆகும்.
2. புனித ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியை உருவாக்கியவர் __________ ஆவார்.
3. __________ தமிழ் மொழியியல் தூய்மை வாதத்தின் தந்தையெனக் கருதப்படுகிறார்.
4. தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை முதலில் அங்கீகரித்தது __________ ஆகும்.
5. சூரியநாராயண சாஸ்திரி எனும் பெயர் __________ என மாற்றம் பெற்றது.
6. __________ தமிழ் இசைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.
7. இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் __________ ஆவார்.

கூடுதல் வினாக்கள்

8. 1709இல் முழுமையான அச்சகத்தை தரங்கம்பாடியில் நிறுவியவர் __________ .
9. திருக்குறள் வெளியிடப்பட்ட ஆண்டு __________ .
10. பனையோலைகளில் கையால் எழுதப் பெற்றிருந்த பல தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைப் பதிப்பித்தவர் __________ .
11. தமிழறிஞர் மீனாட்சி சுந்தரனாரின் மாணவர் __________ .
12. தமிழ் மொழி வாழ்த்துப் பாடல் இடம் பெற்ற நாடக நூல் __________ .
13. பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு ஆகியவற்றிற்கு விளக்கவுரை எழுதியவர் __________ .
14. மறைமலை அடிகளாரின் மகள் __________ .
15. மனோன்மணியம் என்ற நாடக நூலை இயற்றியவர் __________ .
16. பிராமணர் அல்லாதவர்களின் மூலாதாரமாய் விளங்கிய கட்சி __________ .
17. பகுத்தறிவும் சுயமரியாதையும் அனைத்து மனிதர்களின் பிறப்புரிமை என பிரகடனம் செய்த இயக்கம் __________ .
18. மதுவிலக்கு இயக்கத்திற்கு ஆதரவாக தனது தோப்பிலிருந்த 500 தென்னை மரங்களை வெட்டியவர் __________ .
19. சேரன்மாதேவி குருகுலப் பள்ளியைத் தொடங்கியவர் __________ .
20. பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கிய ஆண்டு __________ .
21. பெரியார் __________ எனும் புனைப் பெயரில் கட்டுரைகளை எழுதினார்.
22. தென்னிந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதி __________ .
23. தமிழ் நாட்டில் குலக்கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் __________ .
24. பெரியார் எழுதிய முக்கியமான நூல் __________ .
25. 'சாதி ஒழிப்பு' என்ற நூலை எழுதியவர் __________ .
26. இரட்டைமலை சீனிவாசன் எழுதிய சுயசரிதை நூல் __________ .
27. ஆதிதிராவிட மகாஜன சபை எனும் அமைப்பை உருவாக்கியவர் __________ .
28. இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் __________ .
29. முதன் முதலாக மே தின விழாவை 1923இல் ஏற்பாடு செய்தவர் __________ .
30. மதராஸ் தேவதாசி சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு __________ .

விடைகள்

1. தமிழ்	2. எப்.டபள்யூ.எல்லிஸ்	3. மறைமலை அடிகள்
4. நீதிக்கட்சி	5. பரிதிமாற்கலைஞர்	6. ஆபிரகாம் பண்டிதர்
7. முத்துலட்சுமி அம்மையார்	8. சீகன் பால்கு	9. 1812
10. சி.வை.தாமோதரனார்	11. உ.வே.சாமிநாதர்	12. மனோன்மணியம்
13. மறைமலை அடிகள்	14. நீலாம்பிகை	15. சுந்தரனார்
14. நீதிக்கட்சி	17. சுயமரியாதை இயக்கம்	18. பெரியார் ஈ.வெ.ரா.
19. வ.வே.சுப்ரமணியம்	20. 1925	21. சித்திரபுத்திரன்
22. சிங்காரவேலர்	23. ராஜாஜி	24. பெண் ஏன் அடிமையானாள்?
25. B.R.அம்பேத்கார்	26. ஜீவிய சரித்திர சுருக்கம்	27. இரட்டைமலை சீனிவாசன்
28. முத்துலட்சுமி அம்மையார்	29. சிங்காரவேலர்	30. 1947

III. சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. i) மிக முன்னதாகவே வெளியிடப்பட்ட தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான திருக்குறள் 1812இல் வெளியிடப்பட்டது.
   ii) பனையோலைகளில் எழுதப்பெற்ற பல்வேறு தமிழ் இலக்கண இலக்கிய கையெழுத்துப் பிரதிகளை மறைமலையடிகள் சேகரித்துத் தொகுத்தார்.
   iii) இராபர்ட் கால்டுவெல் திராவிட மொழிகளுக்கும் சமஸ்கிருதத்திற்கும் இடையில் இல்லாத ஒப்புமை திராவிட மொழிகளுக்கிடையே நெருக்கமாக நிலவுவதை நிரூபித்தார். தமிழின் தொன்மையையும் நிரூபித்தார்.
   iv) திரு.வி.கல்யாணசுந்தரம் தொழில் சங்க இயக்கத்தின் தொடக்ககால முன்னோடியாக இருந்தார்.
   அ) (i), (ii) ஆகியன சரி. ஆ) (i), (iii) ஆகியன சரி.
   இ) (iv) சரி. ஈ) (ii), (iii) ஆகியன சரி.

2. i) இந்தியப் பெண்கள் சங்கத்தைத் தோற்றுவித்ததில் மார்கரெட் கசினும் ஒருவராவார்.
   ii) பெரியார் தன் வாழ்நாள் முழுவதையும் தானே உருவாக்கிய சிந்தனையாளர்கள், பகுத்தறிவாளர்கள் அமைப்புகளின் மூலமாக மூட நம்பிக்கைகளுக்கு எதிரான பிரச்சாரத்தை மேற்கொள்வதில் செலவழித்தார்.
   iii) சிங்காரவேலர் இந்து மகாசபையின் தீவிர ஆதரவாளர் ஆவார்.
   iv) தென்னிந்தியாவிலுள்ள சாதிமுறை வடக்கேயிருந்து வந்த பிராமணர்களின் வருகையோடு தொடர்புடையது என பெரியார் உறுதிபடக் கூறினார்.
   அ) (iii), (iv) ஆகியன சரி. ஆ) (ii), (iii), (iv) ஆகியன சரி.
   இ) (i), (ii), (iv) ஆகியன சரி. ஈ) (ii), (iii) ஆகியன சரி.

3. கூற்று : சென்னை மாகாணத்தில் 1920 முதல் 1937 வரை நீதிக்கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருந்தது.
   காரணம் : இக்காலக்கட்டத்தில் இரட்டையாட்சிக்கு எதிராக காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தைப் புறக்கணித்தது.
   அ) காரணம், கூற்று ஆகியவை சரி.
   ஆ) காரணம் சரி ஆனால் கூற்று சரியான விளக்கமல்ல.
   இ) காரணம், கூற்று இரண்டுமே தவறு.
   ஈ) கூற்று சரி ஆனால் காரணத்துடன் பொருந்தவில்லை.

   கூற்று : முதல் உலகப்போர் நடந்து கொண்டிருந்தபோது, ஆங்கில அரசாங்கம் இந்தியாவில் போருக்கும் பின்னர், பிரதிநிதித்துவ நிறுவனங்களை அறிமுகம் செய்வது குறித்துப் பரிசீலனை செய்து கொண்டிருந்தது. **PTA**
   காரணம் : 1920இல் இரட்டையாட்சியானது ஒரு அரசுமுறையாக மாகாணங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது.
   அ) கூற்று சரி, ஆனால் காரணம் சரியானதல்ல.
   ஆ) காரணம், கூற்று ஆகிய இரண்டுமே தவறு.
   இ) காரணம், கூற்று இரண்டுமே சரி.
   ஈ) கூற்று தவறு, காரணத்துடன் பொருந்தவில்லை.

கூடுதல் வினாக்கள்

4. i) வி.கோ. சூரிய சாஸ்திரி சென்னை அருகே ஒரு கிராமத்தில் பிறந்தார்.
   ii) அவர் தனக்குத்தானே பரிதிமாற் கலைஞர் என தூய தமிழ்ப் பெயரை சூட்டிக் கொண்டார்.
   iii) ஆபிரகாம் பண்டிதர் கர்நாடக இசைக்கு சிறப்புச் செய்தார்.
   iv) மனோன்மணியம் சுந்தரனாரால் தமிழ்மொழி வாழ்த்துப்பாடல் இயற்றப்பட்டது.
   அ) (i) மற்றும் (ii) ஆகியன சரி. ஆ) (iii) மற்றும் (iv) ஆகியன சரி.
   இ) (i) மற்றும் (iii) ஆகியன சரி. ஈ) (ii) மற்றும் (iv) ஆகியன சரி.

5. கூற்று : வள்ளலார் என பிரபலமாக அறியப்பட்ட ராமலிங்க அடிகள் நடைமுறையிலிருந்த இந்து சமய பழைமைவாதத்தை கேள்விக்குள்ளாக்கினார்.

காரணம் : வள்ளலார் பௌத்த சமயத்திற்குப் புத்துயிரளித்த ஒரு தொடக்ககால முன்னோடியாகத் திகழ்ந்தார்.

அ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
ஆ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.
இ) கூற்று மற்றும் காரணம் சரி.
ஈ) கூற்று மற்றும் காரணம் தவறு.

விடைகள்

1. ஆ) (i), (iii) ஆகியன சரி.
2. இ) (i), (ii), (iv) ஆகியன சரி.
3. அ) காரணம் கூற்று ஆகியவை சரி.
4. இ) காரணம் கூற்று இரண்டுமே சரி.
5. ஈ) (ii) மற்றும் (iv) ஆகியன சரி.
6. அ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

IV. பொருத்துக:

பாடநூல் வினா

அ)

				விடை
1.	திராவிடர் இல்லம்	அ)	மறைமலையடிகள்	1) ஈ
2.	தொழிலாளன்	ஆ)	இரட்டைமலை சீனிவாசன்	2) இ
3.	தனித்தமிழ் இயக்கம்	இ)	சிங்காரவேலர்	3) அ
4.	ஜீவிய சரித சுருக்கம்	ஈ)	நடேசனார்	4) ஆ

கூடுதல் வினாக்கள்

ஆ)

				விடை
1.	சீவகசிந்தாமணி	அ)	1898	1) இ
2.	சிலப்பதிகாரம்	ஆ)	1889	2) உ
3.	மணிமேகலை	இ)	1887	3) அ
4.	பத்துப்பாட்டு	ஈ)	1894	4) ஆ
5.	புறநானூறு	உ)	1892	5) ஈ

இ)

				விடை
1.	நடேசனார்	அ)	சுயமரியாதை இயக்கம்	1) ஈ
2.	பெரியார் ஈ.வெ.ரா	ஆ)	ஆதிதிராவிட மகாஜனசபை	2) அ
3.	எம்.சி.ராஜா	இ)	சமூக சீர்திருத்த இயக்கம்	3) உ
4.	ராஜா ராம் மோகன்ராய்	ஈ)	மதராஸ் ஐக்கியக் கழகம்	4) இ
5.	இரட்டைமலை சீனிவாசன்	உ)	அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கம்	5) ஆ

ஈ)

				விடை
1.	சி.வை. தாமோதரனார்	அ)	மனோன்மணியம்	1) உ
2.	ராபர்ட் கால்டுவெல்	ஆ)	தமிழிசை வரலாறு	2) ஈ
3.	சுந்தரனார்	இ)	14 வரிச் செய்யுள்	3) அ
4.	ஆபிரகாம் பண்டிதர்	ஈ)	ஒப்பீட்டு இலக்கணம்	4) ஆ
5.	பரிதிமாற் கலைஞர்	உ)	ஓலைச்சுவடி	5) இ

உ)
1. ராஜாஜி	அ) வைக்கம் வீரர்	விடை 1) ஈ
2. வ.வே.சுப்ரமணியம்	ஆ) நீதிக்கட்சி	2) இ
3. முத்துலட்சுமி	இ) குருகுலப்பள்ளி	3) உ
4. பெரியார் ஈ.வெ.ரா.	ஈ) குலக்கல்வித் திட்டம்	4) அ
5. சுப்பராயலு	உ) சட்டமன்ற உறுப்பினர்	5) ஆ

ஊ)
1. சீகன்பால்கு	அ) முதலமைச்சர்	விடை 1) ஆ
2. காமராஜர்	ஆ) முழுமையான அச்சகம்	2) அ
3. சிங்காரவேலர்	இ) செய்தித்தாள்	3) ஈ
4. சித்திரபுத்திரன்	ஈ) பொதுவுடைமைவாதி	4) உ
5. குடியரசு	உ) பெரியார் ஈ.வெ.ரா.	5) இ

V. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **தமிழ் மறுமலர்ச்சி குறித்து சிறுகுறிப்பு வரைக.**
   - ➢ காலனியத்தின் பண்பாட்டு ஆதிக்கமும் மனித நேயத்தின் எழுச்சியும் இந்தியத் துணைக்கண்டத்தின் சமூகப் பண்பாட்டு வாழ்வில் பல மாற்றங்களைக் கொண்டுவந்தது.
   - ➢ நவீனத் தமிழ்நாடும் அத்தகைய வரலாற்று மாற்றத்தை அனுபவித்தது. தமிழ்மொழி மற்றும் கலாச்சாரம் அவர்களின் அடையாள கட்டுமானத்தில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தன.
   - ➢ அச்சு இயந்திரத்தின் அறிமுகமும், திராவிட மொழிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட மொழியியல் ஆய்வுகளும் மற்றும் பலவும் தமிழ் மலர்ச்சி செயல்பாடுகளுக்கு அடியுரமாய் விளங்கின.
   - ➢ அச்சு இயந்திரத்தின் வருகைக்குப் பின்னர் வந்த தொடக்க ஆண்டுகளில் சமயம் சார்ந்த நூல்களை வெளியிடும் முயற்சிகளே பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன.
   - ➢ நாளடைவில் படிப்படியாக நிலைமைகள் மாறின. சமயச் சார்பற்ற எனச் சொல்லத்தகுந்த நூல்களும் வெளியிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

2. **தென்னிந்திய மொழிகளுக்காக கால்டுவெல்லின் பங்களிப்பினை நன்கு புலப்படுத்துக.**
   - ➢ "தென்னிந்திய மொழிகள் தனிப்பட்ட மொழிக்குடும்பத்தை சார்ந்தவை, அவை இந்தோ–ஆரிய குடும்ப மொழிகளோடு தொடர்பில்லாதவை" எனும் கோட்பாட்டை எப்.டபள்யூ.எல்லிஸ் உருவாக்கினார்.
   - ➢ ராபர்ட் கால்டுவெல், திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம் எனத் தலைப்பிட்ட நூலில் எல்லிஸின் கோட்பாட்டை விரிவுபடுத்தினர்.
   - ➢ திராவிட மொழிகளுக்கிடையில் நெருக்கமான ஒப்புமை இருப்பதையும் அடிப்படையான ஒப்புமை சமஸ்கிருதத்துடன் இல்லை என்பதையும் நிறுவினார். மேலும் தமிழின் தொன்மையையும் நிலைநாட்டினர்.

3. **தங்களுடைய எழுத்துகளின் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்துயிருக்குப் பங்களிப்புச் செய்த ஆளுமைகளைப் பட்டியலிடவும்.**
   - ➢ சி.வை. தாமோதரனார், உ.வே. சாமிநாதர், பரிதிமாற் கலைஞர், மறைமலையடிகள், சுப்பிரமணிய பாரதி, ச.வையாபுரி, கவிஞர் பாரதிதாசன் ஆகியோர் தங்களின் எழுத்துகள் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்துயிர்ப்புக்குப் பங்களிப்புச் செய்தனர்.

4. **நீதிக்கட்சியால் நிறைவேற்றப்பட்ட இந்துசமய அறநிலைய சட்டத்தின் முக்கியத்துவத்தை விவாதிக்கவும்.**

- நீதிக்கட்சி 1926இல் இந்துசமய அறநிலையச் சட்டத்தை இயற்றியது. அதன்படி எந்தவொரு தனிநபரும், சாதிவேறுபாடின்றி கோயில்களின் நிர்வாகக்குழுக்களில் உறுப்பினராகவும் கோவிலின் சொத்துக்களை நிர்வகிக்கும் உரிமை பெறவும் வழிவகை செய்யப்பட்டது.

5. **சேரன்மகாதேவி குருகுல நிகழ்ச்சி குறித்து நீங்கள் அறிந்ததென்ன?**

- சேரன்மாதேவி குருகுலப் பள்ளியானது வ.வே. சுப்பிரமணியம் எனும் காங்கிரஸ் தலைவரால் நடத்தப் பெற்றது.
- இக்குருகுலம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிதியுதவியுடன் நடத்தப்பட்டது.
- குருகுலப் பள்ளியில், உணவு உண்ணும் அறையில் சாதி அடிப்படையிலான பாகுபாடு நிலவியது.
- இதனை கேள்வியுற்ற பெரியார் ஈ.வெ. ராமசாமி மனவருத்தமடைந்தார். இதனை பெரியார் கண்டித்து எதிர்த்தார்.
- அவரது கடுமையான எதிர்ப்பிற்குப் பின்னரும் காங்கிரஸ், குருகுலத்தில் நடைபெறும் சாதிப்பாகுபாட்டை தொடர்ந்து ஆதரித்ததால் மனமுடைந்த பெரியார் 1925 இல் காங்கிரஸ் கட்சியைவிட்டு வெளியேறினார்.

6. **தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

- தமிழில் "திராவிடன்"
- ஆங்கிலத்தில் "ஜஸ்டிஸ்"
- தெலுங்கில் "ஆந்திர பிரகாசிகா"

7. **பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக.**

- 1929 முதல் சுயமரியாதை மாநாடுகளில் பெண்களின் மோசமான நிலை குறித்து பெரியார் குரல் கொடுக்கத் தொடங்கினார்.
- பெண்களுக்கு விவாகரத்து பெறுவதற்கும் சொத்தில் பங்கு பெறுவதற்கும் உரிமை உண்டு என ஆணித்தரமாக வலியுறுத்தினார்.
- "திருமணம் செய்து கொடுப்பது" எனும் வார்த்தைகளை மறுத்த பெரியார் அவை பெண்களைப் பொருட்களாக நடத்துகின்றன என்றார். அவைகளுக்கு மாற்றாக திருக்குறளிலிருந்து எடுக்கப்பட்ட "வாழ்க்கைத்துணை" என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டினார்.
- பெண்ணியம் குறித்து பெரியார் எழுதிய மிக முக்கியமான நூல் "பெண் ஏன் அடிமையானாள்?" என்பதாகும்.
- பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படுவது அவர்களுக்குச் சமூகத்தில் நன்மதிப்பையும், பாதுகாப்பையும் வழங்கும் என பெரியார் நம்பினார்.
- சொத்துக்கள், பாதுகாவலர்களாக இருத்தல் மற்றும் தத்தெடுத்தல் ஆகியவற்றில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை வேண்டுமென்றார்.
- குடும்பக் கட்டுப்பாடு, கருத்தடை ஆகியவற்றை வலுவாக ஆதரித்த அவர் தாய்மை என்பது பெண்ணுக்கு பெருஞ்சுமையாக உள்ளது என்றார்.

8. **1920இல் நடத்தப்பட்ட அகில இந்திய தொழில் சங்க காங்கிரசின் நடவடிக்கைகளை விளக்குக.**

- அகில இந்திய தொழிலாளர் சங்கத்தின் முதல் மாநாடு 1920 அக்டோபர் 31இல் பம்பாயில் நடைபெற்றது. பல தீர்மானங்கள் குறித்து பிரதிநிதிகள் விவாதித்தனர்.

நடவடிக்கைகள்:

- தொழிலாளர்களின் பிரச்சனைகளில் காவல்துறை தலையிடுவதிலிருந்து பாதுகாப்பு.
- வேலையில்லாதவர்களுக்கென ஒரு பதிவேட்டைப் பராமரித்தல்.
- உணவுப் பண்டங்களின் ஏற்றுமதி மீதான கட்டுப்பாடு.
- காயமடைந்தோர்க்கு ஈட்டுத்தொகை.
- உடல் நலக்காப்பீடு.
- தொழில் முதலாளிகளுக்கு சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்படுவது போல தொழிலாளர்களுக்கும் அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென மாநாட்டின் பிரதிநிதிகள் கோரினர்.

கூடுதல் வினாக்கள்

9. உ.வே.சாமிநாதர் வெளியிட முயன்ற தமிழ் செவ்வியல் இலக்கிய நூல்கள் யாவை?

- சீவகசிந்தாமணி
- சிலப்பதிகாரம்
- மணிமேகலை
- புறநானூறு
- புறப்பொருள் வெண்பாமாலை
- பத்துப்பாட்டு
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து

10. பரிதிமாற் கலைஞர் பற்றி குறிப்பு வரைக.

- வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரி தனக்குத்தானே பரிதிமாற் கலைஞர் என தூய தமிழ் பெயரைச் சூட்டிக் கொண்டார்.
- அவர் தமிழின் மீது சமஸ்கிருதம் கொண்டிருந்த செல்வாக்கை அடையாளம் கண்ட தொடக்ககாலத் தமிழ் அறிஞர்களில் ஒருவராவார்.
- தமிழ் மொழி ஒரு செம்மொழி என்றும், எனவே சென்னைப் பல்கலைக்கழகம் தமிழை ஒருவட்டார மொழியென அழைக்கக்கூடாதென முதன்முதலாக வாதாடியவர் இவராவார்.
- மேற்கத்திய இலக்கிய மாதிரிகள் மீது இவர் கொண்டிருந்த தாக்கத்தின் விளைவாக 14 வரிச் செய்யுள் வடிவத்தை தமிழுக்கு அறிமுகம் செய்தார்.
- மேலும் இவர், அதிக எண்ணிக்கையிலான நாவல்களையும், நாடகங்களையும் அறிவியல் கட்டுரைகளையும் எழுதினார்.

11. பெரியாரின் இந்தி எதிர்ப்பு நிலைப்பாட்டிற்குக் காரணம் என்ன?

- தென்னிந்தியாவிலுள்ள சாதிமுறையானது வடஇந்தியப் பிராமணர்களின் வருகையோடு தொடர்புடையது எனப் பெரியார் வலியுறுத்தினார்.
- பண்டையத் தமிழ்ச் சமூகம் திணைகளை (நிலப்பகுதிகள்) அடிப்படையாகக் கொண்ட வேறு வகைப்பட்ட அடுக்கமைவைக் கொண்டிருந்ததாக அவர் கூறினார்.
- அம்முறை சுற்றுச் சூழல், வாழ்வாதாரத்திற்கான வழிகள், மக்கள் மேற்கொண்ட தொழில் ஆகியவற்றால் தீர்மானிக்கப்பட்டிருந்தது என்று கூறினார்.
- வட இந்திய எதிர்ப்பானது பெரியாரை இந்தி எதிர்ப்பு நிலைப்பாட்டை மேற்கொள்ள வைத்தது.

12. பெண்கள் விடுதலை இயக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றியவர்களின் பெயர்களைப் பட்டியலிடுக.

- முத்துலட்சுமி அம்மையார்
- ருக்மணி அம்மாள்
- நாகம்மை
- அலமேலு மங்கை தாயாரம்மாள்
- கண்ணம்மா
- நீலாம்பிகை
- நீலாவதி
- சிவகாமி சிதம்பரனார்
- மூவலூர் இராமாமிர்தம்

13. பெரியார் நடத்திய செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிக்கைகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக.

- குடி அரசு
- ரிவோல்ட்
- புரட்சி
- விடுதலை
- பகுத்தறிவு

14. **மறைமலை அடிகள் விளக்கவுரை எழுதிய சங்க நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

பட்டினப்பாலை மற்றும் முல்லைப்பாட்டு

15. **தேவதாசி முறை பற்றி சிறு குறிப்பு வரைக.**

- தமிழ்நாட்டில் கடவுளுக்கு இறைப்பணி செய்வதற்காக இளம் பெண்களை இந்து கோவில்களுக்கு அர்ப்பணிக்கும் வழக்கம் இருந்தது. இவர்கள் தேவதாசிகள் எனப்பட்டனர்.
- நாளடைவில் கடவுளுக்குச் செய்யும் சேவை என்ற நோக்கிலிருந்து இம்முறை பெரும் ஒழுக்கக் கேட்டிற்கும் பெண்களைத் தவறாகப் பயன்படுவதற்கும் இட்டுச் சென்றது.
- முத்துலட்சுமி அம்மையார் தேவதாசி முறை ஒழிப்பிற்கு அரும்பாடு பட்டு வெற்றி பெற்றார்.

VI. ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. **பெரியார் ஈ.வெ.ரா:**

அ) பெரியார் எப்போது திராவிடர் கழகத்தைத் தோற்றுவித்தார்?

1944ஆம் ஆண்டு பெரியார் திராவிடர் கழகத்தைத் தோற்றுவித்தார்.

ஆ) பெரியார் நடத்திய செய்தித்தாள்கள். பத்திரிகைகள் ஆகியவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக.

- குடியரசு, ரிவோல்ட், புரட்சி, பகுத்தறிவு, விடுதலை போன்ற செய்தித்தாள்களையும், இதழ்களையும் பெரியார் நடத்தினார்.

இ) பெரியார் ஏன் "வைக்கம் வீரர்" என அறியப்பட்டார்? PTA

- திருவாங்கூர் சமஸ்தானத்திலிருந்த வைக்கம் என்ற இடத்தில் சாதி தர்மம் என்ற பெயரில் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கோவிலுக்குள்ளும் அதைச் சுற்றியுள்ள வீதிகளிலும் நுழைவது மறுக்கப்பட்டிருந்தது.
- அதனை எதிர்த்து பெரியார் சத்தியாகிரகப் போராட்டத்தை நடத்தி அதில் வெற்றி பெற்றார். எனவே அவர் வைக்கம் வீரர் என அழைக்கப்பட்டார்.

ஈ) பெரியாரின் மிக முக்கியப் பணியாக கருதப்படுவது எது?

- ராஜாஜியால் கொண்டுவரப்பட்ட குலக்கல்வித் திட்டத்தை பெரியார் முழுமையாக எதிர்த்து போராட்டங்களை மேற்கொண்டார். இது ராஜாஜியின் பதவி விலகலுக்கு இட்டுச் சென்றது. இது பெரியாரின் மிக முக்கியப் பணியாகக் கருதப்படுகிறது.

2. **தமிழகத்தில் தொழிலாளர் இயக்கம்:**

அ) மதராசில் தொழில் சங்க இயக்கம் தோன்றியதற்குக் காரணமாயிருந்த சூழலை முதன்மைப்படுத்திக் காட்டவும்.

- தொழிற்சாலைகளில் நடைபெற்ற ஆட்குறைப்பும், விலைவாசி ஏற்றமும் தொழிலாளர் இயக்கங்கள் தோன்றுவதற்கு உந்துசக்தியாக அமைந்தன.

ஆ) சென்னை தொழிலாளர் சங்கத்துடன் தொடர்புடைய மிகமுக்கியமான மூவரை அடையாளம் காண்க.

- பி.பி.வாடியா
- ம. சிங்காரவேலர்
- திரு.வி. கல்யாணசுந்தரம்

இ) அகில இந்திய தொழில் சங்க காங்கிரசின் முதல் மாநாடு எங்கு நடைபெற்றது?

அகில இந்திய தொழில் சங்க காங்கிரஸ் முதல் மாநாடு 1920இல் பம்பாயில் நடைபெற்றது.

ஈ) முதன் முதலாக மதராசில் மே தின விழாவை நடத்தியது யார்? எந்த ஆண்டில் நடந்தது?

- முதன்முதலாக மதராசில் மே தின விழாவை நடத்தியவர் ம. சிங்காரவேலர். அது 1923இல் நடந்தது.

3. **மறைமலை அடிகள்:**

அ) மறைமலை அடிகள் விளக்கவுரை எழுதிய சங்க நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

- பட்டினப்பாலை
- முல்லைப்பாட்டு

ஆ) இளைஞராக இருந்தபோது மறைமலை அடிகள் பணியாற்றிய பத்திரிகையின் பெயரைக் குறிப்பிடுக.

சித்தாந்த தீபிகா

இ) இந்தித் திணிப்பை அவர் ஏன் எதிர்த்தார்?

- இந்திமொழி அறிமுகம் செய்யப்பட்டால் தமிழ்மொழி பாதிப்புக்குள்ளாகும் என மறைமலை அடிகள் சுட்டிக்காட்டினார்.

ஈ) மறைமலை அடிகளின் வாழ்க்கையின்மீது செல்வாக்குச் செலுத்தியவர்களில் முக்கியமானவர்கள் யாவர்?

- மறைமலை அடிகளின் ஆசிரியர்களான பி.சுந்தரனார் மற்றும் சோமசுந்தர நாயகர் ஆகிய இருவரும் அவருடைய வாழ்க்கையில் முக்கிய செல்வாக்கு செலுத்தியோராவர்.

கூடுதல் வினாக்கள்

4. **இரட்டைமலை சீனிவாசன்:**

அ) இரட்டைமலை சீனிவாசன் எங்கு எப்பொழுது பிறந்தார்?

இரட்டைமலை சீனிவாசன் காஞ்சிபுரத்தில் 1859ஆம் ஆண்டு பிறந்தார்.

ஆ) அவருக்கு வழங்கப்பட்ட பட்டங்கள் யாவை?

- ராவ்சாகிப்
- ராவ்பகதூர்
- திவான் பகதூர்

இ) அவருக்கு பட்டங்கள் வழங்கப்படக் காரணமென்ன?

அவரது தன்னலமற்ற சேவையே ஆகும்.

ஈ) அவரால் உருவாக்கப்பட்ட அமைப்பு யாது?

ஆதிதிராவிட மகாஜன சபை

5. **ஆபிரகாம் பண்டிதர்:**

அ) ஆபிரகாம் எதனை மீட்டுருவாக்கம் செய்ய முயன்றார்?

ஆபிரகாம் பண்டிதர் தமிழ் இசைவரலாற்றை முறையாகக் கற்றாய்ந்து, பழந்தமிழர் இசை முறையை மீட்டுருவாக்கம் செய்தார்.

ஆ) அவர் ஏற்படுத்திய அமைப்பு எது?

தஞ்சாவூர் சங்கீதா வித்தியா மகாஜன சங்கம்.

இ) இவ்வியக்கம் எதற்கு முக்கியத்துவம் வழங்கியது?

இசை நிகழ்வுகளில் தமிழில் பாடல்கள் பாடப்படுவதற்கு இவ்வியக்கம் முக்கியத்துவம் வழங்கியது.

ஈ) முதல் தமிழிசை மாநாடு எப்பொழுது நடத்தப்பட்டது?

1943இல் தமிழிசையின் நிலைகுறித்து விவாதிக்க முதல் தமிழிசை மாநாடு நடத்தப்பட்டது.

VII. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. தமிழ் மறுமலர்ச்சியின் தோற்றம், வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை எழுதவும்.

தமிழ் மறுமலர்ச்சியின் தோற்றம்:

- அச்சு இயந்திரத்தின் அறிமுகமும், திராவிட மொழிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட மொழியியல் ஆய்வுகளும் மற்றும் பலவும் மறுமலர்ச்சி செயல்பாடுகளுக்கு அடியுரமாய் விளங்கின.
- அச்சு இயந்திரத்தின் வருகைக்குப் பின்னர் வந்த தொடக்க ஆண்டுகளில் சமயம் சார்ந்த நூல்களை வெளியிடும் முயற்சிகளே பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன.
- நாளடைவில் படிப்படியாக நிலைமைகள் மாறின.
- சமயச் சார்பற்ற எனச் சொல்லத்தகுந்த நூல்களும் வெளியிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

தமிழ் மறுமலர்ச்சியின் வளர்ச்சி:

அச்சுத் தொழில் நுட்பத்தின் வருகை:

- ஐரோப்பிய மொழிகள், தவிர்த்து அச்சில் ஏறிய மொழிகளில் முதல் மொழி தமிழ் மொழியாகும்.
- 1578இல் தம்பிரான் வணக்கம் எனும் தமிழ் புத்தகமும், 1812இல் தொடக்ககால தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான திருக்குறளும் வெளியிடப்பட்டன.
- இதன் விளைவாக மிகவும் பழமையான செவ்வியல் தமிழ் இலக்கியங்களை வெளியிடுவதில் தமிழ் அறிஞர்களிடையே புத்தெழுச்சி ஏற்பட்டது.

தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களைக் கண்டறிதல்:

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் அறிஞர்களான சி.வை. தாமோதரனார், உ.வே. சாமிநாதர் போன்றவர்கள் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களை மீண்டும் கண்டறிவதற்காகத் தங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவழித்தனர்.
- சி.வை. தாமோதரனார் பனையோலைகளில் கையால் எழுதப் பெற்றிருந்த பல தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார். அவர் பதிப்பித்த நூல்களில் தொல்காப்பியம் வீரசோழியம் மற்றும் பல அடங்கும்.
- உ.வே. சாமிநாதர் பத்திற்கும் மேற்பட்ட செவ்வியல் தமிழ் இலக்கிய நூல்களை வெளியிடும் முயற்சிகளை மேற்கொண்டார். அவற்றுள் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை மற்றும் பல அடங்கும்.
- இது தமிழ் மக்களுக்கு தங்களது பாரம்பரியம் குறித்து வியப்பைத் தந்தது. ஆகவே இவற்றை தமிழ் மறுமலர்ச்சியின் அடித்தளமாகக் கருதலாம்.

விழிப்புணர்வு ஏற்படுதல்:

- பழம்பெரும் நூல்கள் வெளியிடப்பட்டது. தமிழ் மக்களிடையே தங்கள் வரலாற்று மரபு, மொழி, இலக்கியம் மற்றும் சமயம் ஆகியவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது.
- நவீனத் தமிழர்கள் தங்களது சமூகப் பண்பாட்டு அடையாளங்களை, பண்டைய தமிழ் செவ்வியல் இலக்கியங்கள் வாயிலாகக் கண்டறிந்தனர்.
- மொழியியலாளர்களும், வரலாற்று அறிஞர்களும் தமிழ் அறிஞர்களும் தமிழ் பண்பாட்டின் தனித் தன்மையை அங்கீகரித்துள்ளனர்.

தமிழின் தொன்மை நிலைநாட்டப்படல்:

- புனித ஜார்ஜ் கோட்டையில் கல்லூரியினை நிறுவிய எப். டபள்யூ. எல்லிஸ், தென்னிந்திய மொழிகள் தனிப்பட்ட மொழிக்குடும்பத்தை சார்ந்தவை, அவை இந்தோ–ஆரியக்குடும்ப மொழிகளோடு தொடர்பில்லாதவை எனும் கோட்பாட்டை உருவாக்கினார்.

- ராபர்ட் கால்டுவெல் திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம் எனத் தலைப்பிடப் பட்ட நூலில் இக்கோட்பாட்டை விரிவுபடுத்தினார்.
- கால்டுவெல் திராவிட மொழிகளுக்கிடையில் நெருக்கமான ஒப்புமை இருப்பதையும் அப்படியொரு ஒப்புமை சமஸ்கிருதத்துடன் இல்லை என்பதையும் நிறுவினார். மேலும் தமிழின் தொன்மையையும் நிலைநாட்டினார்.
- அறிவார்ந்த தமிழர்கள் தமிழ்மொழியே திராவிடர்களின் மொழியென்றும் தமிழர்கள் பிராமணர்கள் அல்ல என்றும் அடையாளம் கண்டுகொண்டனர்.
- தமிழ் நாட்டில் திராவிட உணர்வு தோன்றி வளர்வதற்கு தமிழ் மறுமலர்ச்சி பங்களிப்பைச் செய்தது. இச்சிந்தனைகள் பி. சுந்தரனாரால் எழுதப்பெற்ற மனோன்மணியம் எனும் நாடக நூலில் இடம்பெற்றுள்ள தமிழ்மொழி வாழ்த்துப் பாடலில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கியத்தின் புத்தெழுச்சிக்கு பங்களிப்பு செய்தவர்கள்:

- வள்ளலார் எனப்படும் ராமலிங்க அடிகள், ஆபிரகாம் பண்டிதர், சி.வை. தாமோதரனார், உ.வே. சாமிநாதர், திரு.வி. கல்யாண சுந்தரம், பரிதிமாற் கலைஞர், மறைமலையடிகள், சுப்பிரமணிய பாரதி, ச.வையாபுரி, கவிஞர் பாரதிதாசன் ஆகியோர் தங்களுக்கே உரித்தான வழிகளில் தங்களின் எழுத்துகள் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்தெழுச்சிக்குப் பங்களிப்புச் செய்தனர்.
- இதே சமயத்தில் ம.சிங்காரவேலர், பண்டிதர் அயோத்தி தாசர், பெரியார் ஈ.வெ. ராமசாமி ஆகியோர் சமூக ரீதியாக உரிமைகள் மறுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்களுக்காகப் பகுத்தறிவுச் சித்தாந்தத்தை உயர்த்திப் பிடித்தனர்.
- மேலும் தமிழ் மொழி இயக்கங்களான தனித் தமிழ் இயக்கம் மற்றும் தமிழ் இசை இயக்கம் போன்றவைகள் சமஸ்கிருதத்தின் செல்வாக்கிற்கு ஆட்படாத தூய தமிழை உருவாக்குவதில் தாக்கத்தை ஏற்படுத்தின.

2. **நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான பின்புலத்தை விளக்கி சமூக நீதிக்கான அதன் பங்களிப்பைச் சுட்டிக் காட்டவும்.** **PTA**

நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான பின்புலங்கள்:

- முதல் உலகப்போர் நடந்து கொண்டிருந்த நிலையில் ஆங்கில அரசாங்கம் போருக்குப் பின்னர் இந்தியாவில் பிரதிநிதித்துவ அமைப்புகளை அறிமுகம் செய்வது குறித்து பரிசீலனை செய்து கொண்டிருந்தது.
- அப்படிப்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் பிராமணர்களின் அரசியல் அதிகாரத்தை மேலும் வலுவடையச் செய்யும் என அஞ்சிய கல்வி கற்ற பிராமணர் அல்லாதவர்கள் தங்களை அரசியல் ரீதியாக அணிதிரட்டிக் கொள்ள முடிவு செய்தனர்.
- 1916 நவம்பர் 20இல் டாக்டர் நடேசனார், சர்பிட்டி தியாகராயர், டி.எம். நாயர் மற்றும் அலமேலுமங்கை தாயாரம்மாள் உட்பட பல முக்கிய பிராமணர் அல்லாத தலைவர்கள் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை உருவாக்க ஒருங்கிணைந்தனர்.
- இதே சமயம் 1916 டிசம்பரில் விக்டோரியா பொது அரங்கில் நடைபெற்ற கூட்டமொன்றில் பிராமணர் அல்லாதோர் அறிக்கை வெளியிடப்பட்டது.
- கட்சியின் கொள்கைகளைப் பரப்புரை செய்வதற்காகத் தமிழில் திராவிடன், ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ், தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா ஆகிய பத்திரிகைகளை வெளியிட்டது.

நீதிக் கட்சியின் ஆட்சி:

- மாகாண அரசுகளில் இரட்டையாட்சிமுறை அறிமுகம் செய்தபின்னர் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் அடிப்படையில் 1920இல் முதல் தேர்தல் நடைபெற்றது.
- நீதிக்கட்சி தேர்தலில் வெற்றிபெற்று இந்தியாவின் முதல் அமைச்சரவையை சென்னையில் அமைத்தது. A.சுப்பராயலு சென்னை மாகாணத்தின் முதலமைச்சரானார். மேலும் நீதிக்கட்சி 1920 முதல் 1937 வரை ஆட்சியில் தொடர்ந்து நீடித்தது.

திட்டங்களும் செயல்பாடுகளும்:

- நீதிக்கட்சி அரசாங்கம் மக்கள் தொகையில் பெரும்பாலானவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்தி அரசியல் தளத்தில் அவர்களுக்கென இடத்தை உருவாக்கியது.
- சாதிமறுப்புத் திருமணங்களைக் கட்டுப்படுத்திய சட்டச் சிக்கல்களை நீதிக்கட்சியினர் அகற்றியதோடு பொதுக் கிணறுகளையும் நீர் நிலைகளையும் ஒடுக்கப்பட்ட பிரிவு மக்கள் பயன்படுத்துவதை தடுத்த தடைகளைத் தகர்த்தனர்.
- ஒடுக்கப்பட்ட பிரிவு குழந்தைகள் பொதுப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என நீதிக்கட்சியின் அரசு ஆணை பிறப்பித்தது. இச்சமூகக் குழுக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கென தங்கும் விடுதிகள் உருவாக்கப்பட்டன.
- நீதிக்கட்சி முதன்முதலாக பெண்கள் தேர்தல் அரசியலில் பங்கேற்பதை அங்கீகரித்தது. 1926இல் முத்துலட்சுமி அம்மையார் இந்தியாவின் முதல் சட்டமன்ற பெண் உறுப்பினரானார்.
- பல்வேறு சாதிகளையும் சமூகங்களையும் சார்ந்தவர்களுக்கு அரசு பணிகளில் சேர்வதற்கு சமமான வாய்ப்புகளை உறுதி செய்யும் பொருட்டு இரண்டு வகுப்புவாரி அரசாணைகள் இயற்றப்பட்டன.
- அரசு அதிகாரிகளை தேர்வு செய்ய 1924ல் பணியாளர் தேர்வு வாரியத்தை நீதிக்கட்சி அமைத்தது.
- நீதிக்கட்சி 1926 இல் இந்து சமய அறநிலையச் சட்டத்தை இயற்றியது. அதன்படி எந்தவொரு தனிநபரும், சாதிவேறுபாடின்றி கோயில்களின் நிர்வாகக் குழுக்களின்உறுப்பினராகவும் கோவிலின் சொத்துக்களை நிர்வகிக்கவும் வழிவகை செய்யப்பட்டது.

3. **தமிழ் நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்கு ஈ.வெ.ரா. பெரியாரின் தீர்மானகரமான பங்களிப்பை மதிப்பீடு செய்யவும்.**

கோயில் நுழைவு உரிமைப் போராட்டம்:

- தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக பெரியார் பதவி வகித்தபோது ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை குறித்த தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார்.
- சாதி தர்மம் என்ற பெயரில் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கோவிலுக்குள்ளும் அதைச் சுற்றியுள்ள வீதிகளிலும் நுழைவது மறுக்கப்பட்டிருந்தது.
- இதனை எதிர்த்து கேரளாவிலுள்ள வைக்கம் எனும் ஊரில் நடைபெற்ற போராட்ட இயக்கத்திற்கு தலைமையேற்று வெற்றி பெற்றார்.

சேரன்மாதேவி குருகுல நிகழ்ச்சி:

- சேரன்மாதேவியில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிதியுதவியில் வ.வே. சுப்பிரமணியம் எனும் காங்கிரஸ் தலைவரால் குருகுலப்பள்ளி ஒன்று நடத்தப்பெற்றது.
- குருகுலப்பள்ளியில், உணவு உண்ணும் அறையில் சாதி அடிப்படையிலான பாகுபாடு நிலவுவதைக் கேள்வியுற்று மனவருத்தமடைந்த பெரியார் இதனைக் கண்டித்து எதிர்த்துப் போராடினார்.

பிராமணர் அல்லாதவர்களுக்கு இடஒதுக்கீடு:

- சட்டசபை போன்ற பிரதிநிதித்துவ அமைப்புகளில் பிராமணர் அல்லாதவர்களுக்கு இட ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதில் பெரியார் முனைப்புடன் இருந்தார்.
- இது தொடர்பான ஒரு தீர்மானத்தை 1925இல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் குழுவின் வருடாந்திர மாநாட்டில் அவர் நிறைவேற்ற முயற்சி செய்தார்.

பகுத்தறிவு கருத்துக்களை பரப்புதல்:

- பகுத்தறிவுக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதற்காக பல செய்தித்தாள்களையும் இதழ்களையும் பெரியார் தொடங்கினார். சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரபூர்வ செய்தித்தாள் "குடி அரசு" ஆகும்.
- பிராமணர் அல்லாதோர், பெண்கள், சமயத்தில் சிறுபான்மையினர் ஆகியோரின் எண்ணங்களையும் சமூகப் பிரச்சனைகள் தொடர்பான தனது கருத்துக்களையும் பெரியார் வழக்கமான கட்டுரைகளாக எழுதினார்.

இந்தி எதிர்ப்பு:

- பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்ததற்கு எதிராகப் பெரியார் மக்கள் செல்வாக்குப் பெற்ற இயக்கத்தை நடத்தினார். இந்தி எதிர்ப்புப் போராட்டமானது தமிழ்நாட்டு அரசியலில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த போராட்டத்திற்காக அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

குலக்கல்வித் திட்ட எதிர்ப்பு:

- பள்ளிக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்திய தொழில்கல்வி பயிற்சித்திட்டமானது, மாணவர்களுக்கு அவர்களின் தந்தையார் செய்து வந்த தொழில்களில் பயிற்சியளிப்பதாக இருந்தது.
- இதைக் குலக்கல்வித் திட்டம் என்று விமர்சித்த பெரியார் இத்திட்டத்தை முழுமையாக எதிர்த்தார். இதற்கு எதிராக அவர் மேற்கொண்ட போராட்டங்கள் ராஜாஜியின் பதவி விலகலுக்கு இட்டுச் சென்றது.

சமயம் குறித்து பெரியார்:

- பெரியார் தன் வாழ்நாள் முழுவதையும் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் பரப்புரை செய்வதில் செலவளித்தார். சமயத்தின் இடத்தில் பகுத்தறிவு வைக்கப்பட வேண்டும் என்றார்.
- கோவில்களில் நிலவிய பரம்பரை அர்ச்சகர்கள் முறையை அவர் எதிர்த்தார். சாதி அடிப்படையில் இல்லாமல் முறையான சமய அறிவைப் பெற்றுள்ள தகுதியுடைய நபர்களும் அர்ச்சகராகலாம் என அவர் வாதிட்டார்.
- சடங்குகளற்ற சாதிமறுப்பு, சுயமரியாதைத் திருமணங்களைப் பரிந்துரைத்தார்.

பெரியார் ஒரு பெண்ணியவாதி:

- பெரியார், குழந்தைத் திருமணத்தையும், தேவதாசி முறையையும் கண்டனம் செய்தார். பெண்களுக்கு விவாகரத்து பெறுவதற்கும் சொத்தில் பங்கு பெறுவதற்கும் உரிமை உண்டு என ஆணித்தரமாக வலியுறுத்தினார்.
- சொத்துக்கள், பாதுகாவலர்களாக இருத்தல், மற்றும் தத்தெடுத்தல் ஆகியவற்றில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை வேண்டுமென்றார்.
- குடும்பக்கட்டுப்பாடு, கருத்தடை ஆகியவற்றை வலுவாக ஆதரித்த அவர் தாய்மை என்பது பெண்ணுக்குப் பெருஞ்சுமையாக உள்ளது என்றார்.
- பெரியாரின் சுயமரியாதை இயக்கம் பெண்கள் விடுதலைக்காகப் பாடுபட்டது.

கூடுதல் வினாக்கள்

4. **தனித்தமிழ் இயக்கம் பற்றி விவரி:**

- தூய தமிழ் வார்த்தைகளைப் பயன்படுத்துவதையும் சமஸ்கிருதத்தின் செல்வாக்கு தமிழ் மொழியிலிருந்து அகற்றப்படுவதையும் மறைமலையடிகள் ஊக்குவித்தார்.
- இவ்வியக்கம் தமிழ்ப் பண்பாட்டின்மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தமிழ் மொழியின் மீது செல்வாக்கைச் செலுத்தும் வேற்று மொழிவார்த்தைகளை அடையாளம் கண்டுகொண்டு அவற்றை அகற்றுகின்ற செயல்பாடு 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே தொடங்கப்பட்டிருந்தாலும் தனித் தமிழ் இயக்கம் தொடங்கியது 1916 எனக் கூறப்படுகிறது.

- மறைமலை அடிகளாரின் மகள் நீலாம்பிகை இவ்வியக்கம் உருவாக்கப்பட்டதில் முக்கியப் பங்கு வகித்தார். தமிழ் சொற்களுக்குள் புகுந்துவிட்ட சமஸ்கிருதச் சொற்களுக்கு இணையான பொருள்தரக்கூடிய தமிழ் சொற்களடங்கிய அகராதி ஒன்றை நீலாம்பிகை தொகுத்தார்.
- மறைமலை அடிகள், வேதாச்சலம் என்ற தனது பெயரை தூய தமிழில் மறைமலை அடிகள் என மாற்றிக் கொண்டார். அவருடைய ஞானசாகரம் எனும் பத்திரிக்கை அறிவுக்கடல் எனவும் சமரச சன்மார்க்க சங்கம் எனும் நிறுவனம் பொது நிலைக் கழகம் எனவும் பெயரிடப்பட்டன.
- இவ்வியக்கம் தமிழ் சமுதாயத்திலிருந்த இந்தி, சமஸ்கிருதம் மற்றும் பிராமண மேலாதிக்கத்தை விமர்சித்தது. பிற்காலத்தில் தமிழ் சமூகத்திலிருந்த பிராமணிய மற்றும் சமஸ்கிருத மரபுகளை எதிர்கொண்ட சமூக இயக்கங்களுக்கு வழிவகுத்தது.

5. **சுயமரியாதை இயக்கம் பற்றி விவரி.**

- சுயமரியாதை இயக்கம் அன்று நிலவிய சமூக, அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளில் இருந்த சீர்கேடுகளை விமர்சனம் செய்ததோடு தமிழ் நாட்டில் பிராமணர்கள் அல்லாதவர்களின் மேம்பாட்டிற்கான ஒரு திட்டத்தையும் அறிமுகம் செய்தது.
- சமூகத்தின் ஒதுக்கப்பட்ட மக்கள் பிரிவினரின் மீது அக்கறை கொண்ட இவ்வியக்கம் பிராமணர்களையும் அவர்களின் பண்பாட்டு மேலாதிக்கத்தையும் விமர்சனம் செய்தது.
- சடங்குகளும் சம்பிரதாயங்களும் இல்லாத சாதிகளற்ற பிறப்பின் அடிப்படையிலான பாகுபாடற்ற ஒரு சமூகத்தை இவ்வியக்கம் ஆதரித்தது.
- பகுத்தறிவும் சுயமரியாதையும் அனைத்து மனிதர்களின் பிறப்புரிமை என பிரகடனம் செய்த இவ்வியக்கம் சுயாட்சியைக் காட்டிலும் இவை முக்கியமானவை எனும் கருத்தை உயர்த்தி பிடித்தது.
- பெண்களின் தாழ்வான நிலைக்கு எழுத்தறிவின்மையே காரணம் என அறிவித்த அவ்வியக்கம் அனைவருக்கும் கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்கும் பணிகளை மேற்கொண்டது.
- பெண்களை அதிகாரம் உள்ளவர்களாக மாற்றுவதற்கு இயக்கம் நடத்திய சுயமரியாதை இயக்கத்தினர் சமூகத்தில் நிலவிய மூட நம்பிக்கைகளைக் கேள்விகளுக்கு உட்படுத்தினர்.
- இவ்வியக்கம் பெண்விடுதலை கோருதல், மூடநம்பிக்கைகளை நீக்குதல் மற்றும் பகுத்தறிவை வலியுறுத்துதல் போன்ற கோரிக்கைகளைக் கோரியது. மேலும் இவ்வியக்கம் சீர்திருத்தத் திருமணம் அல்லது சுயமரியாதைத் திருமணங்களை ஆதரித்தது.
- சுயமரியாதை இயக்கச் சொற்பொழிவுகளின் மையப்பொருளாக இருந்தது இனம் ஆகும். திராவிட மக்களுடைய நீண்டகால வரலாற்றின் போக்கில் திராவிட மக்கள் ஆரிய பிராமணர்களால் திட்டமிட்டு ஒடுக்கப்பட்டதாக அச்சொற்பொழிவுகளில் விவாதிக்கப்பட்டன.
- சுயமரியாதை இயக்கம் பிராமணர் அல்லாத இந்துக்களின் நலன்களுக்காக மட்டுமல்லாமல் இஸ்லாமியர்களின் நலனுக்காகவும் போராடியது. இஸ்லாமின் மேன்மை மிகுந்த கோட்பாடுகளான சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை சுயமரியாதை இயக்கம் பாராட்டியது.

காலக்கோடு (முக்கிய நிகழ்வுகள்)

1709 – முழுமையான அச்சகம் நிறுவப்பட்டது.

1816 – புனித ஜார்ஜ் கோட்டையில் கல்லூரி நிறுவப்பட்டது.

1893 – ஆதிதிராவிட மகாஜன சபை

1909 – மதராஸ் பிராமணரல்லாதோர் சங்கம்

1912 – 1. மதராஸ் ஐக்கிய கலகம்
2. தமிழிசை இயக்கம்
3. தஞ்சாவூர் சங்கீத வித்யா மகாஜன சங்கம்

1916 – 1. தென்னிந்திய நல உரிமை சங்கம்
2. பிராமணரல்லாதோர் அறிக்கை

1917 – 1. இந்தியப் பெண்கள் சங்கம்
2. அகில இந்தியப் பெண்கள் மாநாடு

1918 – 1. மதராஸ் தொழிலாளர் சங்கம்
2. இந்தியாவின் முதல் ஒழுங்கமைக்கப்பட்ட தொழிற்சங்கம்

1920 – அகில இந்திய தொழிலாளர் சங்க முதல் மாநாடு.

1921 – முதன் முதலாக தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பு

1923 – 1. சென்னை சட்டசபை நீதிக்கட்சி
2. முதலாவது மே தின விழா

1924 – பணியாளர் தேர்வு வாரியம்

1925 – சுயமரியாதை இயக்கம்.

1926 – இந்து சமய அறநிலையச் சட்டம்

1928 – 1. ரிவோல்ட் (செய்தித்தாள்)
2. அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கம்

1932 – 1. சுயமரியாதை இயக்கம்
2. பூனா ஒப்பந்தம்
3. மே தினம்

1933 – புரட்சி (செய்தித்தாள்)

1934 – பகுத்தறிவு (செய்தித்தாள்)

1935 – விடுதலை (செய்தித்தாள்)

1943 – முதல் தமிழிசை மாநாடு

1944 – நீதிக்கட்சி திராவிட கழகமாக பெயர் மாற்றப்பட்டது

1947 – மதராஸ் தேவதாசி சட்டம்.

1989 – தமிழ்நாடு இந்து வாரிசு உரிமை சீர்திருத்தச் சட்டம்

அலகு புவியியல்

1 இந்தியா – அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு

மனவரைபடம்

இந்தியாவின் முக்கிய இயற்கையமைப்பு பிரிவுகள்



ஆறுகள்

இமாலய ஆறுகள்
- சிந்து
- கங்கை
- பிரம்மபுத்திரா

தீபகற்ப ஆறுகள்
- மகாநதி
- கோதாவரி
- கிருஷ்ணா
- காவேரி
- நர்மதை
- தபதி

நினைவில் கொள்க

- பரப்பளவில் உலகில் ஏழாவது பெரிய நாடாகவும், ஆசியக் கண்டத்தின் இரண்டாவது பெரிய நாடாகவும் உள்ளது **இந்தியா** ஆகும்.
- இந்தியாவையும் இலங்கையையும் பிரிக்கும் குறுகிய ஆழமற்ற கடல்பகுதி **பாக் நீர்ச்சந்தி** ஆகும்.
- அட்ச தீர்க்க பரவல்படி இந்தியா முழுமையும் **வடகிழக்கு அரைக்கோளத்தில்** அமைந்துள்ளது.
- இந்தியத் திட்ட நேரமானது கீரின்விச் சராசரி நேரத்தைவிட **5 மணி 30 நிமிடம்** முன்னதாக உள்ளது.
- இந்திய நிலப்பகுதியின் தென்கோடி **குமரிமுனை** ஆகும். வடமுனை **இந்திரா கோல்** (ஜம்மு காஷ்மீரில் அமைந்துள்ளது) ஆகும்.
- நிர்வாக வசதிக்காக இந்தியா **27 மாநிலங்களாகவும் 7 யூனியன் பிரதேசங்களாகவும்** பிரிக்கப்பட்டுள்ளது.
- உலகின் இளமையான மற்றும் மிக உயரமான மலைத்தொடர் **இமயமலைகள்** ஆகும்.
- "உலகின் கூரை" என அழைக்கப்படுவது **பாமீர் முடிச்சு** ஆகும்.
- இமாலயா என்ற சொல் சமஸ்கிருத மொழியில் **பனி உறைவிடம்** என அழைக்கப்படுகிறது.
- இந்தியாவிலேயே மிகப்பழமையான மடிப்பு மலைத்தொடர் **ஆரவல்லி மலைத்தொடராகும்.**
- உலகிலேயே வளமான சமவெளி **சிந்து, கங்கை, பிரம்மப்புத்திரா சமவெளி** (வடபெரும் சமவெளிகள்) ஆகும்.
- உலகின் இரண்டாவது பெரிய கடற்கரை **மெரினா கடற்கரை** (சென்னை) ஆகும்.
- இந்தியாவின் மிகப்பெரிய காயல் ஏரி **சில்கா ஏரி** ஆகும்.
- தீபகற்ப இந்தியாவில் பாயும் மிக நீளமான ஆறு **கோதாவரி** ஆகும். இது **விருத்தகங்கா** எனவும் அழைக்கப்படுகிறது.
- உலகிலுள்ள 14 உயரமான சிகரங்களில் 9 சிகரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள மலைத்தொடர் **இமயமலை** ஆகும்.

இடங்களும் அதன் முக்கியத்துவமும்

- ஆந்திர பிரதேசத்தின் தலைநகரம் அமராவதி நகர் ஆகும். ஆந்திர பிரதேச மறுசீரமைப்புச் சட்டத்தின்படி 2024 வரை ஐதராபாத் நகரம் ஆந்திர பிரதேசம் மற்றும் தெலுங்கானா மாநிலங்களின் தலைநகரமாக இருக்கும்.
- இமயமலை பல சிகரங்களின் இருப்பிடமாக உள்ளது. உலகிலுள்ள ஏனைய மலைத்தொடர்களைக் காட்டிலும் அதிகமான சிகரங்களைக் கொண்டுள்ளது. உலகிலுள்ள 14 உயரமான சிகரங்களில் 9 சிகரங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.
- காரகோரம் கணவாய் (ஜம்மு காஷ்மீர்), ஜொஷிலா கணவாய், சிப்கிலா கணவாய் (இமாச்சல் பிரதேசம்) பொமிடிலா கணவாய் (அருணாச்சல பிரதேசம்) நாதுலா மற்றும் ஜெலிப்லா கணவாய் (சிக்கிம்) ஆகியன இமயமலையின் முக்கியக் கணவாய்களாகும். பாகிஸ்தானையும், ஆப்கானிஸ்தானையும் இணைக்கும் கைபர் கணவாய் மற்றும் பாகிஸ்தானிலுள்ள போலன் கணவாயும் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள முக்கியக் கணவாய்களாகும்.

வரைபட வினாக்களுக்கான முக்கிய பகுதிகள்

தலைப்பு	முக்கிய பகுதிகள்
நதிகள்	சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா, நர்மதை, தப்தி, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி
ஏரிகள்	மானசரோவர் ஏரி, ஊலார் ஏரி, சாம்பார் உப்பு ஏரி, சில்கா ஏரி, கொல்லேறு ஏரி, புலிகாட் ஏரி, வேம்பநாடு ஏரி.
மலைகள்	இமயமலை, காரகோரம், பட்காய், லடாக், ஜாஷ்கர், சிவாலிக், ஆரவல்லி, விந்திய மலை, சாத்பூரா, மேற்குத்தொடர்ச்சி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலை, நீலகிரி.
சிகரங்கள்	நங்கபர்வதம், மலை K2, நந்ததேவி, தவளகிரி, எவரெஸ்ட், கஞ்ஜன் ஜங்கா, குருசிகார், அபு, தொட்டபெட்டா, ஆனைமுடி
மலைவாழிடங்கள்	சிம்லா, முசௌரி, அல்மோரா, நைனிடால், டார்ஜிலிங், ஊட்டி, கொடைக்கானல்
சமவெளிகள் & பீடபூமிகள்	வடஇந்தியப் பெரும் சமவெளி (சிந்து – கங்கைச் சமவெளி) மேற்குக் கடற்கரைச் சமவெளி கிழக்குக் கடற்கரைச் சமவெளி மாளவப்பீடபூமி, சோட்டாநாகபுரி, பீடபூமி, தக்காண பீடபூமி.
கடற்கரைப் பிரதேசங்கள்	ராணா கட்ச், கட்ச் வளைகுடா, காம்பே, வளைகுடா, கொங்கணக் கடற்கரை, கனரா கடற்கரை, மலபார் கடற்கரை, குமரிமுனை, மன்னார் வளைகுடா, பாக் நீரிணைப்பு, வடசர்க்கார், கங்கை டெல்டா, கோதாவரி டெல்டா, காவேரி டெல்டா, மகாநதி டெல்டா.
பாலைவனம், தீவுகள், எல்லைகள்.	தார்பாலைவனம், அந்தமான் – நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவுகள், இமயமலை, இந்தியப் பெருங்கடல், அரபிக்கடல், வங்காள விரிகுடா, கடகரேகை.

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. இந்தியாவின் வடக்கு தெற்கு பரவல்
   அ) 2,500 கி.மீ ஆ) 2,933 கி.மீ இ) 3,214 கி.மீ ஈ) 2,814 கி.மீ

2. இந்தியாவின் தென்கோடி முனை
   அ) அந்தமான் ஆ) கன்னியாகுமரி
   இ) இந்திராமுனை ஈ) காவரட்தி

3. இமயமலையின் கிழக்கு மேற்கு பரவல்
   அ) 2,500 கி.மீ ஆ) 2,400 கி.மீ இ) 800 கி.மீ ஈ) 2,200 கி.மீ

4. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு
   அ) நர்மதா ஆ) கோதாவரி இ) கோசி ஈ) தாமோதர்

5. தக்காண பீடபூமியின் பரப்பளவு ______ சதுர கி.மீ ஆகும்.
   அ) 6 லட்சம் ஆ) 8 லட்சம் இ) 5 லட்சம் ஈ) 7 லட்சம்

6. மூன்று பக்கம் நீரால் சூழப்பட்ட பகுதி ______ என அழைக்கப்படுகிறது. **PTA**
   அ) கடற்கரை ஆ) தீபகற்பம்
   இ) தீவு ஈ) நீர்ச்சந்தி

7. பாக் நீர்சந்தி மற்றும் மன்னார் வளைகுடா ______ ஐ இந்தியாவிடமிருந்து பிரிக்கிறது. **PTA**
   அ) கோவா ஆ) மேற்கு வங்காளம்
   இ) ஸ்ரீலங்கா ஈ) மாலத்தீவு

8. தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் **PTA**
   அ) ஊட்டி ஆ) ஆனை முடி
   இ) கொடைக்கானல் ஈ) ஜின்டா கடா

9. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி
   அ) பாபர் ஆ) தராய் இ) பாங்கர் ஈ) காதர்

10. பழவேற்காடு ஏரி ______ மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ளது. **PTA**
    அ) மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா ஆ) கர்நாடகா மற்றும் கேரளா
    இ) ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம்

கூடுதல் வினாக்கள்

11. பரப்பளவில் உலகின் ஏழாவது பெரிய நாடு
    அ) அமெரிக்கா ஆ) சீனா இ) இந்தியா ஈ) ரஷ்யா

12. அட்ச தீர்க்க பரவல்படி இந்தியா முழுமையும் அமைந்துள்ள பகுதி
    அ) வட அரைக்கோளம் ஆ) தென் அரைக்கோளம்
    இ) வடமேற்கு அரைக்கோளம் ஈ) வடகிழக்கு அரைக்கோளம்

13. இந்திய திட்ட நேரத்திற்கும் கீரின்விச் சராசரி நேரத்திற்குமான வித்தியாசம்
    அ) 5 மணி 30 நிமிடம் அதிகம் (முன்னதாக) ஆ) 5 மணி 30 நிமிடம் குறைவு (பிந்தியதாக)
    இ) 3 மணி 30 நிமிடம் அதிகம் ஈ) 3 மணி 30 நிமிடம் குறைவு

14. உலகின் இளமையான மற்றும் மிக உயரமான மலைத்தொடர்
    அ) ஆல்ப்ஸ் ஆ) இமயமலை
    இ) யூரல் மலை ஈ) ராக்கி மலை

15. உலகத்தின் மிக உயரமான சிகரம்
அ) எவரெஸ்ட் ஆ) கஞ்சன் ஜங்கா
இ) மலை k_2 ஈ) நங்கபர்வதம்

16. பாகிஸ்தானையும் ஆப்கானிஸ்தானையும் இணைக்கும் கணவாய்
அ) போலன் கணவாய் ஆ) சிப்கிலா கணவாய்
இ) தால்காட் கணவாய் ஈ) கைபர் கணவாய்

17. ஆனைமலையில் அமைந்துள்ள உயரமான சிகரம்
அ) அபு ஆ) ஆனைமுடி
இ) தொட்டபெட்டா ஈ) நந்ததேவி

18. குருசிகார் சிகரம் அமைந்துள்ள மலைத்தொடர்
அ) விந்திய மலை ஆ) சாத்பூரா மலை
இ) ஆரவல்லி மலை ஈ) பழனி மலை

19. பழனி மலையில் அமைந்துள்ள மலைவாழிடம்
அ) குன்னூர் ஆ) கோத்தகிரி
இ) ஊட்டி ஈ) கொடைக்கானல்

20. மேற்குத் தொடர்ச்சி மலைகளும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் சந்திக்குமிடம்
அ) நீலகிரி மலை ஆ) பழனி மலை இ) ஆனை மலை ஈ) கொல்லி மலை

21. மேற்குக் கடற்கரையின் வட பகுதி
அ) வடசர்க்கார் ஆ) மலபார் கடற்கரை
இ) கொங்கணக் கடற்கரை ஈ) சோழமண்டலக் கடற்கரை

22. இந்தியாவின் மிகப்பெரிய காயல் ஏரி
அ) கொல்லேறு ஏரி ஆ) சிலிகா ஏரி
இ) மானசரோவர் ஏரி ஈ) ஊலார் ஏரி

23. சிந்துநதி உற்பத்தியாகுமிடம்
அ) கங்கோத்ரி ஆ) சாங்போ இ) விருத்தகங்கா ஈ) மானசரோவர் ஏரி

24. தென் இந்தியாவின் கங்கை என அழைக்கப்படுவது
அ) காவேரி ஆ) கிருஷ்ணா இ) வைகை ஈ) கோதாவரி

25. மேற்குநோக்கிப் பாயும் ஆறுகளில் நீளமானது
அ) வைகை ஆ) தபதி
இ) காவேரி ஈ) நர்மதை

விடைகள்

1 இ) 3,214 கி.மீ 2 ஆ) கன்னியாகுமரி 3 அ) 2,500 கி.மீ
4 இ) கோசி 5 ஈ) 7 லட்சம் 6 ஆ) தீபகற்பம்
7 இ) ஸ்ரீலங்கா 8 ஆ) ஆனைமுடி 9 இ) பாங்கர்
10 ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திர பிரதேசம் 11 இ) இந்தியா
12 ஈ) வடகிழக்கு அரைக்கோளம்
13 அ) 5 மணி 30 நிமிடம் அதிகம் (முன்னதாக) 14 ஆ) இமயமலை
15 அ) எவரெஸ்ட் 16 ஈ) கைபர் கணவாய்
17 ஆ) ஆனைமுடி 18 இ) ஆரவல்லி மலை
19 ஈ) கொடைக்கானல்
20 அ) நீலகிரி மலை 21 இ) கொங்கணக் கடற்கரை
22 ஆ) சிலிகா ஏரி 23 ஈ) மானசரோவர் ஏரி
24 அ) காவேரி 25 ஈ) நர்மதை

II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

கூடுதல் வினாக்கள்

1. இந்தியாவையும் இலங்கையையும் பிரிக்கும் கடல் பகுதி __________
2. இந்திய நிலப்பகுதியின் வடமுனை __________ என அழைக்கப்படுகிறது.
3. ஆந்திரப்பிரதேசம் மற்றும் தெலுங்கானா மாநிலங்களின் தலைநகராக இருப்பது __________
4. "உலகின் கூரை" என அழைக்கப்படுவது __________
5. இமாலயா என்ற சமஸ்கிருத சொல்லின் பொருள் __________ ஆகும்.
6. இந்தியாவிலேயே மிகப் பழமையான மலைத்தொடர் __________
7. __________ கடல் மடிக்கப்பட்டு இமயமலை உருவானது.
8. எவரெஸ்ட் சிகரம் __________ நாட்டில் அமைந்துள்ளது.
9. இமயமலையில் காணப்படும் இரண்டு முக்கிய பனியாறுகள் ________, ________
10. புதிய வண்டல் படிவுகளைக் கொண்ட நிலத்தோற்றம் __________
11. வண்டல் சமவெளியில் உயர்நிலப்பகுதி __________ என்று அழைக்கப்படுகிறது.
12. இந்தியாவின் மேற்கு பகுதியிலுள்ள மத்திய உயர்நிலங்கள் __________ எனப்படுகிறது.
13. கனிம வளத்திற்குப் புகழ்பெற்ற பீடபூமி __________
14. மேற்குத் தொடர்ச்சி மலையின் வடபகுதி __________ என்று அழைக்கப்படுகிறது.
15. பெரிய இந்திய பாலைவனம் என அழைக்கப்படுவது __________
16. மேற்குக் கடற்கரை சமவெளி __________ முதல் கன்னியாகுமரிவரை நீண்டு காணப்படுகிறது.
17. மேற்குக் கடற்கரையின் தென்பகுதி __________ என்று அழைக்கப்படுகிறது.
18. மேற்குக் கடற்கரையில் உள்ள ஒரு முக்கியமான ஏரி __________
19. மகாநதிக்கும் கிருஷ்ணா நதிக்கும் இடைப்பட்ட பகுதி __________ எனப்படும்.
20. கிருஷ்ணா மற்றும் காவேரி ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதி __________ என அழைக்கப்படுகிறது.
21. கோதாவரி ஆற்றுக்கும் கிருஷ்ணா ஆற்றுக்கும் இடையே அமைந்துள்ள ஏரி __________
22. இந்தியாவில் உள்ள ஒரே செயல்படும் எரிமலை அமைந்துள்ள தீவு __________
23. இலட்சத்தீவுகள் __________ பாறைகளால் உருவானவை.
24. நிகோபரின் தென்கோடி முனை __________ என்று அழைக்கப்படுகிறது.
25. அந்தமான், நிகோபார் தீவுக்கூட்டங்களின் நிர்வாகத் தலைநகரம் __________
26. கங்கை நதி, கங்கோத்ரி எனும் பனியாற்றிலிருந்து __________ என்னும் பெயருடன் உற்பத்தியாகிறது.
27. வங்கதேசத்தில் கங்கை நதி __________ என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.
28. சாங்போ (தூய்மை) என்ற பெயரில் அழைக்கப்படும் ஆறு __________
29. தென் இந்தியாவில் பாயும் ஆறுகள் __________ ஆறுகள் எனப்படுகின்றன.
30. கோதாவரி நதி __________ எனவும் அழைக்கப்படுகிறது

விடைகள்

1. பாக்நீர்ச்சந்தி	2. இந்திரா கோல்	3. ஐதராபாத்
4. பாமீர் முடிச்சு	5. பனி உறைவிடம்	6. ஆரவல்லி மலைத்தொடர்
7. டெத்தீஸ்	8. நேபாளம்	9. கங்கோத்திரி, சியாச்சின்
10. காதர் சமவெளி	11. சார்ஸ்	12. மாளவப் பீடபூமி
13. சோட்டா நாகபுரி பீடபூமி	14. சயாத்ரி	15. தார்பாலைவனம்

16. ரானாப் கட்ச்	17. மலபார் கடற்கரை	18. வேம்பநாடு ஏரி
19. வட சர்க்கார்	20. சோழமண்டலக் கடற்கரை	21. கொல்லேறு ஏரி
22. பாரன் தீவு	23. முருகை	24. இந்திரா முனை
25. போர்ட் பிளேயர்	26. பாகிரதி	27. பத்மா
28. பிரம்மபுத்திரா	29. தீபகற்ப ஆறுகள்	30. விருத்தகங்கா

III. பொருத்துக:

பாடநூல் வினா

அ)
1. சாங்போ — அ) கங்கை ஆற்றின் துணை ஆறு
2. யமுனை — ஆ) இந்தியாவின் உயர்ந்த சிகரம்
3. புதிய வண்டல் படிவுகள் — இ) பிரம்மபுத்திரா
4. காட்வின் ஆஸ்டின் (K2) — ஈ) தென்கிழக்கு கடற்கரைச் சமவெளி
5. சோழ மண்டலக்கடற்கரை — உ) காதர்

விடை: 1) இ 2) அ 3) உ 4) ஆ 5) ஈ

கூடுதல் வினாக்கள்

ஆ)
1. இந்திரா முனை — அ) கன்னியாகுமரி
2. குமரி முனை — ஆ) இமயமலை
3. உலகின் கூரை — இ) அந்தமான் – நிகோபார் தீவுகள்
4. பனி உறைவிடம் — ஈ) ஆரவல்லி
5. பழமையான மடிப்பு மலை — உ) பாமீர் முடிச்சு

விடை: 1) இ 2) அ 3) உ 4) ஆ 5) ஈ

இ)
1. பீர்பாஞ்சல் — அ) தீவு
2. கங்கை — ஆ) மலை
3. தக்காணம் — இ) சமவெளி
4. அந்தமான் — ஈ) பாலைவனம்
5. தார் — உ) பீடபூமி

விடை: 1) ஆ 2) இ 3) உ 4) அ 5) ஈ

ஈ)
1. சிகரம் — அ) பட்காய்
2. கணவாய் — ஆ) சிம்லா
3. குன்று — இ) சட்லஜ்
4. மலைவாழிடம் — ஈ) எவரெஸ்ட்
5. நதி — உ) போலன்

விடை: 1) ஈ 2) உ 3) அ 4) ஆ 5) இ

உ)
1. பாபர் சமவெளி — அ) கங்கை ஆறு
2. பாங்கர் சமவெளி — ஆ) படிவுகள்
3. காதர் சமவெளி — இ) ஓதப்பகுதி (சேறும், சகதியும்)
4. டெல்டா சமவெளி — ஈ) பழைய வண்டல்
5. தராய் — உ) புதிய வண்டல்

விடை: 1) ஆ 2) ஈ 3) உ 4) அ 5) இ

ஊ) 1. கொங்கண்	அ) ஏரி		விடை
2. மெரினா	ஆ) தீவு		1) இ
3. சில்கா	இ) சமவெளி		2) உ
4. நிக்கோபார்	ஈ) நீரிணைப்பு		3) அ
5. பாக்	உ) கடற்கரை		4) ஆ 5) ஈ

எ) 1. சிந்து நதி	அ) கங்கோத்ரி	விடை
2. கங்கை நதி	ஆ) மகாபலேஸ்வர்	1) உ
3. கோதாவரி நதி	இ) தலைக்காவேரி	2) ஆ
4. கிருஷ்ணா நதி	ஈ) விருத்தகங்கா	3) ஈ
5. காவேரி நதி	உ) மானசரோவர் ஏரி	4) ஆ 5) இ

IV. காரணம் கூறுக.

பாடநூல் வினாக்கள்

1. இமயமலைகள் மடிப்பு மலைகள் என அழைக்கப்படுகின்றன.
காரணம்: இமயமலைகள், புவிமேலோட்டு பேரியக்க விசைகள் காரணமாக புவி மேலோடு மடிக்கப்பட்டு, மடிப்பு மலைகளாக உருவாகின.

2. வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்.
காரணம்: வட இந்திய ஆறுகள், கோடையில் இமய மலைகளிலுள்ள பனியாறுகள் உருகுவதாலும், பருவமழைக் காலங்களில் மழையிலிருந்தும் நீரைப் பெறுவதால் வற்றாத ஆறுகளாய் உள்ளன.

3. சோட்டா நாகபுரி பீடபூமி கனிமவளம் நிறைந்தது.
காரணம்: சோட்டா நாகபுரி பீடபூமி எரிமலை வெடிப்பின் காரணமாக உருவானது. மேலும் இது அதிக கனிமவளங்களை (இரும்புத்தாது, நிலக்கரி) உள்ளடக்கிய பாறைக்குழம்பை கொண்டுள்ளது.

4. இந்திய பெரும் பாலைவனம் மருஸ்தலி என்று அழைக்கப்படுகிறது.
காரணம்: மருஸ்தலி என்ற சொல்லிற்கு "இறந்த நிலம்" (Land of Dead) என்று பொருள். இப்பாலைவனத்தின் கிழக்குப்பகுதியில் மணல் மேடுகள் நிறைந்துள்ளன. எனவே இப்பாலைவனம் மருஸ்தலி என்று அழைக்கப்படுகிறது.

5. வடகிழக்கு மாநிலங்கள் 'ஏழுசகோதரிகள்' என அழைக்கப்படுகின்றன.
காரணம்: இந்தியாவின் வடகிழக்கிலுள்ள ஏழு மாநிலங்களும் ஒரே மாதிரியான புவி தோற்றத்தைக் கொண்டுள்ளதாலும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் அமைப்புகளில் ஒன்றையொன்று சார்ந்து காணப்படுவதாலும் அவை ஏழு சகோதரிகள் என்று அழைக்கப்படுகின்றன.

6. கோதாவரி ஆறு விருத்த கங்கா என அழைக்கப்படுகிறது.
காரணம்: தீபகற்ப இந்தியாவில் பாயும் மிக நீளமான ஆறு என்பதாலும் 3.13 இலட்சம் சதுர கி.மீ பரப்பளவு வடிநிலத்தை கொண்டுள்ளதாலும் மிகப்பெரிய டெல்டாவை உருவாக்கியுள்ளதாலும் கோதாவரி ஆறு விருத்த கங்கா என அழைக்கப்படுகிறது.

புவியியல்

கூடுதல் வினாக்கள்

7. இந்தியா ஒரு துணைக்கண்டம் என அழைக்கப்படுகிறது.
காரணம்: இயற்கை நில அமைப்பு, காலநிலை, இயற்கைத் தாவரம், கனிமங்கள் மற்றும் மனித வளங்கள் போன்றவற்றில் ஒரு கண்டத்தில் காணப்படக் கூடிய வேறுபாடுகளைக் கொண்டுள்ளதால் இந்தியா ஒரு துணைக்கண்டம் என அழைக்கப்படுகிறது.

8. இமயமலை ஒரு இளம் மடிப்பு மலையாகும்
காரணம்: இமயமலைகள் சில மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்தான் உருவாகியவை என்பதால் இளம் மடிப்பு மலை என்று அழைக்கப்படுகிறது.

9. தராய் மண்டலம் காடுகள் வளர்வதற்கும் வனவிலங்குகள் வாழ்வதற்கும் ஏற்றதாக உள்ளது.
காரணம்: தராய் மண்டலம் அதிகப்படியான ஈரப்பதம் கொண்ட பகுதியாகும்.

10. தென்னிந்திய ஆறுகள் போக்குவரத்துக்குப் பயன்படுவதில்லை.
காரணம் தென்னிந்திய ஆறுகள் பெரும்பாலும் செங்குத்துச் சரிவுடன் கூடிய பள்ளத்தாக்கு வழியாகப் பாய்கின்றன.

V. வேறுபடுத்துக.

பாடநூல் வினாக்கள்

1. இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள். **PTA**

இமயமலை ஆறுகள்	தீபகற்ப ஆறுகள்
➤ இமயமலையில் உற்பத்தியாகின்றன.	➤ மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன.
➤ நீளமானவை மற்றும் அகலமானவை.	➤ குறுகலான மற்றும் நீளம் குறைந்தவை
➤ வற்றாத நதிகள்	➤ வற்றும் ஆறுகள்
➤ மின்உற்பத்தி செய்ய இயலாத நிலை	➤ நீர்மின் உற்பத்திக்கு ஏற்றது
➤ ஆற்றின் மத்திய மற்றும் கீழ்நிலைப் பகுதிகள் போக்குவரத்திற்கு ஏற்றது.	➤ நீர்வழி போக்குவரத்திற்குப் பயன்படாதவை

2. மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள். **PTA**

மேற்குத் தொடர்ச்சி மலைகள்	கிழக்குத் தொடர்ச்சி மலைகள்
➤ மேற்குத் தொடர்ச்சி மலைகள் தீபகற்ப பீடபூமியின் மேற்கு விளிம்பு பகுதியில் காணப்படுகிறது.	➤ கிழக்குத் தொடர்ச்சி மலைகள் தீபகற்ப பீடபூமியின் கிழக்கு விளிம்பு பகுதியில் காணப்படுகிறது.
➤ இவை மேற்குக் கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது.	➤ இவை கிழக்குக் கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது.
➤ இது தொடர்ச்சியான மலைகள்	➤ இது தொடர்ச்சியான மலைகள் அல்ல.
➤ இதன் வடபகுதி சயாத்ரி என்று அழைக்கப்படுகிறது.	➤ இத்தொடர் பூர்வாதிரி என்று அழைக்கப்படுகிறது

3. இமாத்ரி மற்றும் இமாச்சல்.

இமாத்ரி	இமாச்சல்
➤ இது பெரிய மலைகள் என்று அழைக்கப்படுகிறது.	➤ இது சிறிய மலைகள் என்று அழைக்கப்படுகிறது.
➤ இதன் சராசரி அகலம் 25 கி.மீ ஆகும்.	➤ இதன் சராசரி அகலம் 80 கி.மீ ஆகும்.
➤ இதன் சராசரி உயரம் 6000 மீட்டர் ஆகும்.	➤ இதன் சராசரி உயரம் 3500 மீ முதல் 4500 மீ ஆகும்.
➤ உயர்ந்த சிகரங்களான எவரெஸ்ட், கஞ்சன் ஜங்கா ஆகியன இம்மலைத் தொடரில் அமைந்துள்ளன.	➤ புகழ்பெற்ற கோடை வாழிடங்களான சிம்லா, முசௌரி, நைனிடால் அல்மோரா, ரானிகட் மற்றும் டார்ஜிலிங் ஆகியன இம்மலைத் தொடரில் அமைந்துள்ளன.
➤ இங்கு கங்கோத்திரி, சியாச்சின் போன்ற பனியாறுகள் காணப்படுகின்றன.	➤ வெண்கற்பாறைகள், சுண்ணாம்புப் பாறைகள் மற்றும் மணற்பாறைகள் இத்தொடரில் காணப்படுகின்றன.

4. மேற்குக் கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்குக் கடற்கரைச் சமவெளி.

மேற்குக் கடற்கரைச் சமவெளி	கிழக்குக் கடற்கரைச் சமவெளி
➤ மேற்குக் கடற்கரைச் சமவெளி, மேற்கு தொடர்ச்சி மலைக்கும் அரபிக்கடலுக்கும் இடையே அமைந்துள்ளது.	➤ கிழக்குக் கடற்கரைச் சமவெளி கிழக்குத் தொடர்ச்சி மலைக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடையே அமைந்துள்ளது.
➤ இது ரானாப் கட்ச் முதல் கன்னியாகுமரி வரை பரவியுள்ளது.	➤ இது மேற்குவங்காளம் முதல் தமிழ்நாடு வரை நீண்டுள்ளது.
➤ இதன் வடபகுதி கொங்கணக் கடற்கரை என்றும் தென்பகுதி மலபார் கடற்கரை என்றும் அழைக்கப்படுகிறது.	➤ இதன் வடபகுதி வடசர்க்கார் என்றும் தென்பகுதி சோழமண்டலக் கடற்கரை என்றும் அழைக்கப்படுகிறது.
➤ இதன் தென்பகுதிக்கு மலபார் கடற்கரை என்று பெயர்.	➤ இதன் தென்பகுதிக்கு சோழமண்டலக் கடற்கரை என்று பெயர்.
➤ வேம்பநாடு ஏரி இப்பகுதியில் உள்ள முக்கிய ஏரியாகும்.	➤ சிலிகா ஏரி, கொல்லேறு ஏரி மற்றும் பழவேற்காடு (புலிகாட்) ஏரி ஆகியன இச்சமவெளியில் அமைந்துள்ள முக்கிய ஏரிகளாகும்.
➤ பல காயல்கள், உப்பங்கழிகள் மற்றும் டெரிஸ் போன்றவைகள் இக்கடற்கரைப் பகுதியில் காணப்படுகின்றன.	➤ இச்சமவெளி புதிய வண்டல் படிவுகளால் நன்கு வரையறுக்கப்பட்ட கடற்கரையைக் கொண்டது.

கூடுதல் வினாக்கள்

5. பாங்கர் சமவெளி மற்றும் காதர் சமவெளி

பாங்கர் சமவெளி	காதர் சமவெளி
➤ மேட்டுநில வண்டல் படிவுகளைக் கொண்ட நிலத்தோற்றம் பாங்கர் சமவெளியாகும்.	➤ ஆறுகளால் கொண்டு வரப்பட்டு படியவைக்கப்படும் நிலத்தோற்றம் காதர் சமவெளியாகும்.
➤ இங்குள்ள படிவுகள் யாவும் பழைய வண்டல் மண்ணால் ஆனவை.	➤ இங்குள்ள படிவுகள் யாவும் புதிய வண்டல் மண்ணால் ஆனவை.
➤ இம்மண்ணானது கருமை நிறத்துடன், வளமான இலைமக்குகளைக் கொண்டும், நல்ல வடிகாலமைப்பையும் கொண்டுள்ளதால் இது வேளாண்மைக்கு உகந்த சமவெளியாகும்.	➤ காதர் சமவெளியானது சேறு, களிமண் மற்றும் வண்டலைக் கொண்ட வளமிக்க சமவெளியாகும்.

6. அந்தமான் நிகோபர் தீவுகள் மற்றும் இலட்சத் தீவுகள்

அந்தமான் நிகோபர் தீவுகள்	இலட்சத் தீவுகள்
➤ இத்தீவுக் கூட்டங்கள் வங்காள விரிகுடா கடலில் அமைந்துள்ளன.	➤ இத்தீவுக் கூட்டங்கள் அரபிக்கடலில் அமைந்துள்ளன.
➤ இதன் நிர்வாகத் தலைநகரம் போர்ட் பிளேயர் ஆகும்.	➤ இதன் நிர்வாகத் தலைநகரம் காவராத்தி ஆகும்.
➤ இது 572 தீவுகளைக் கொண்டுள்ளது.	➤ இது 27 தீவுகளைக் கொண்டுள்ளது.
➤ இத்தீவுகள் புவி உள் இயக்க விசைகள் மற்றும் எரிமலைகளால் உருவானவை.	➤ இத்தீவுகள் முருகைப் பாறைகளால் உருவானவை.

7. கீரின்வீச் நேரம் மற்றும் இந்தியத் திட்டநேரம்.

கிரீன்வீச் நேரம்	இந்தியத் திட்ட நேரம்
➢ இது உலகப் பொது நேரம்	➢ இது இந்தியாவின் திட்ட நேரம்
➢ 0º தீர்க்கக் கோட்டை அடிப்படையாகக் கொண்டு கிரின்வீச் தீர்க்க நேரம் கணக்கிடப்படுகிறது.	➢ இந்தியத் திட்ட நேரம் 82º30' கிழக்குத் தீர்க்கக் கோட்டை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது.
➢ 0º தீர்க்கக் கோடு கீரின்வீச் வழியாக செல்வதால் அது கிரின்விச் தீர்க்கக் கோடு என்று அழைக்கப்படுகிறது.	➢ இக்கோடு இந்தியாவின் நடுவே அலகாபாத் வழியாகச் செல்கிறது.
➢ கிரீன்வீச் நேரம் இந்திய நேரத்தை விட 5 மணி 30 நிமிடம் குறைவாக இருக்கும்.	➢ இந்தியத் திட்ட நேரம் கிரீன்வீச் 0º தீர்க்க நேரத்தை விட 5 மணி 30 நிமிடம் முன்னதாக இருக்கும்.

VI. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.

மேற்கு – பாகிஸ்தான்
வடமேற்கு – ஆப்கானிஸ்தான்
வடக்கு – சீனா, நேபாளம், பூடான்
கிழக்கு – வங்காளதேசம், மியான்மர்
தெற்கு – இலங்கை

2. இந்திய திட்டநேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக. **PTA**

- இந்தியாவின் கிழக்கிலுள்ள அருணாச்சல பிரதேசத்தில் மேற்கிலுள்ள குஜராத்தைக் காட்டிலும் இரண்டு மணி முன்னதாகவே சூரியன் உதயமாகிறது.
- இதனால் இந்த இரண்டு பகுதிகளுக்கும் உள்ள தலநேர வேறுபாடு 1 மணி 57 நிமிடம் 12 வினாடிகள் ஆகும்.
- இந்த நேர வேறுபாட்டை தவிர்ப்பதற்காக, இந்தியாவின் மத்திய தீர்க்கரேகையான 82º30’ கிழக்குத் தீர்க்கரேகையின் தலநேரம் இந்தியத் திட்டநேரமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.
- இத்தீர்க்கரேகை மிர்சாபூர் (அலகாபாத்) வழியாக செல்கிறது.
- இந்தியத் திட்ட நேரமானது, கிரீன்விச் சராசரி நேரத்தை விட 5 மணி 30 நிமிடம் முன்னதாக உள்ளது.

3. தக்காண பீடபூமி குறிப்பு வரைக.

- தக்காண பீடபூமி, தீபகற்ப பீடபூமியில் அமைந்துள்ள மிகப் பெரிய இயற்கை அமைப்பைக் கொண்டதாகும். இது தோராயமாக முக்கோண வடிவம் கொண்டது.
- வடமேற்கு திசையில் விந்திய, சாத்பூரா மலைத்தொடர்களையும் வடக்கில் மகாதேவ், மைக்காலா குன்றுகளையும், வடகிழக்கில் இராஜ்மகால் குன்றுகளையும், மேற்கில் மேற்கு தொடர்ச்சி மலைகளையும், கிழக்கில் கிழக்கு தொடர்ச்சி மலைகளையும் எல்லைகளாகக் கொண்டது.
- இது சுமார் 7 லட்சம் சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டது. கடல் மட்டத்திலிருந்து 500மீ முதல் 1000 மீ உயரம் வரையும் அமைந்துள்ளது.

4. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி கூறுக.

- தீபகற்ப இந்திய ஆறுகளில் நர்மதை, தபதி மற்றும் மாஹி ஆகிய மூன்று ஆறுகள் மட்டுமே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிப் பாய்கின்றன.

நர்மதை:

- மத்தியப் பிரதேசத்தில் உள்ள அமர்கண்ட் பீடபூமியில் உற்பத்தியாகி மேற்கு நோக்கிப் பாய்ந்து காம்பே வளைகுடா வழியாக அரபிக் கடலில் கலக்கிறது.
- இது மேற்குநோக்கிப் பாயும் ஆறுகளிலேயே நீளமானதாகும்.

தபதி:

- இது மத்திய பிரதேசத்தில் உள்ள முல்டாய் என்ற இடத்திலிருந்து உற்பத்தியாகி மேற்கு நோக்கிப் பாய்ந்து காம்பே வளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது.

மாஹி:

- மத்திய பிரதேசத்தில் தோன்றி குஜராத் வழியாக அரபிக்கடலில் கலக்கிறது.

5. இலட்சத்தீவுக் கூட்டங்கள் பற்றி விவரி. **PTA**

- 27 தீவுகளைக் கொண்ட இலட்சத்தீவுகள் அரபிக்கடலில் அமைந்துள்ளன.
- இலட்சத்தீவுகள் முருகைப் பாறைகளால் உருவானவை ஆகும்.
- இத்தீவுகள் சுமார் 32 ச.கி.மீ பரப்பளவைக் கொண்டதாகும்.
- இங்குள்ள மனிதர்கள் வசிக்காத பீட் தீவு பறவைகள் சரணாலயத்திற்குப் பெயர் பெற்றது ஆகும்.
- 1973 ஆம் ஆண்டு முதல் இலட்சத்தீவு, மினிக்காய் தீவு மற்றும் அமினித் தீவு அனைத்தும் இலட்சத் தீவுகள் என அழைக்கப்படுகின்றன.
- இதன் நிர்வாகத் தலைநகரம் காவராத்தி ஆகும்.

கூடுதல் வினாக்கள்

6. இந்தியா ஒரு துணைக்கண்டம் என அழைக்கப்படுவது ஏன்?

- பாகிஸ்தான், மியான்மர், வங்காளதேசம், நேபாளம், பூடான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுடன் இணைந்து இந்தியா ஒரு துணைக் கண்டம் என அழைக்கப்படுகிறது.
- இயற்கை நில அமைப்பு, காலநிலை, இயற்கைத் தாவரம், கனிமங்கள் மற்றும் மனித வளங்கள் போன்றவற்றில் ஒரு கண்டத்தில் காணப்படக்கூடிய வேறுபாடுகளைக் கொண்டுள்ளதால் இந்தியா ஒரு துணைக்கண்டம் என அழைக்கப்படுகிறது.

7. இந்தியாவின் இயற்கை அமைப்பின் 6 பெரும் பிரிவுகளைக் குறிப்பிடுக.

- வடக்கு மலைகள்
- வட பெரும் சமவெளிகள்
- தீபகற்ப பீடபூமிகள்
- இந்தியப் பாலைவனம்
- கடற்கரைச் சமவெளிகள்
- தீவுகள்

8. இமயமலையின் மூன்று பிரிவுகள் யாவை?

- பெரிய இமயமலைகள் – இமாத்ரி
- சிறிய இமயமலைகள் – இமாச்சல்
- வெளி இமயமலைகள் – சிவாலிக்

9. இமயமலையில் காணப்படும் சிகரங்களில் சிலவற்றைக் குறிப்பிடுக.

- எவரெஸ்ட்
- காட்வின் ஆஸ்டின் (K2)
- கஞ்சன் ஜங்கா
- தௌலகிரி
- நங்கபர்வதம்
- நந்ததேவி

10. இமயமலையில் காணப்படும் புகழ்பெற்ற கோடை வாழிடங்கள் யாவை?

- சிம்லா
- முசௌரி
- நைனிடால்
- டார்ஜிலிங்
- அல்மோரா
- ராணிகட்

11. பாங்கர் சமவெளி பற்றி குறிப்பு வரைக.

- பெரும் சமவெளியில் காணப்படும் பாங்கர் என்பது மேட்டு நில வண்டல் படிவுகளைக் கொண்ட நிலத்தோற்றமாகும்.
- இங்குள்ள படிவுகள் யாவும் பழைய வண்டல் மண்ணால் ஆனவை.
- இவை வெள்ளப்பெருக்கு ஏற்படா உயர் நிலப்பகுதிகளில் அமைந்துள்ளன.
- இம்மண்ணானது கருமை நிறத்துடன், வளமான இலைமக்குகளைக் கொண்டும், நல்ல வடிகால் அமைப்பையும் கொண்டுள்ளதால் இது வேளாண்மைக்கு உகந்ததாக உள்ளது.

12. இந்தியாவிலுள்ள முக்கியமான ஏரிகளைக் குறிப்பிடுக.

- உலர் ஏரி
- சாம்பார் உப்பு ஏரி
- சிலிக்கா ஏரி
- கொல்லேறு ஏரி
- பழவேற்காடு (புலிகாட்) ஏரி
- வேம்பநாடு ஏரி

13. தீபகற்ப இந்திய ஆறுகள் யாவை?

கிழக்கு நோக்கிப் பாயும் ஆறுகள்:

- மகாநதி
- கோதாவரி
- கிருஷ்ணா
- வைகை
- தாமிரபரணி

மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகள்: **PTA**

- நர்மதை
- தபதி
- மாஹி
- ஷராவதி

14. தென்னிந்திய ஆறுகளின் சிறப்பியல்புகள் யாவை?

- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உற்பத்தியாகின்றன.
- குறுகலானவை மற்றும் நீளம் குறைந்தவை
- வற்றும் ஆறுகள்
- நீர்மின் உற்பத்திக்கு ஏற்றவை.
- நீர்வழிப் போக்குவரத்திற்குப் பயன்படாதவை

15. இமயமலையில் தோன்றும் ஆறுகள் யாவை?

- சிந்து நதி – மானசரோவர் ஏரி
- கங்கை நதி – கங்கோத்ரி
- பிரம்மபுத்திரா – மானசரோவர் ஏரி

16. இந்தியாவின் அட்ச, தீர்க்க ரேகைப் பரவலைக் கூறு. **PTA**

- இந்தியா 8°4' வட அட்சம் முதல் 37°6' வட அட்சம் வரையிலும், 68°7' கிழக்குத் தீர்க்கம் முதல் 97°25' கிழக்குத் தீர்க்கம் வரையிலும் பரவியுள்ளது.

17. இமயமலையின் தோன்றும் ஆறுகளின் சிறப்பியல்புகள் யாவை?

- இவை இமயமலைகளின் உற்பத்தியாகின்றன.
- இவை நீளமானவை மற்றும் அகலமானவை.
- இவை வற்றாத நதிகள் ஆகும்.
- நீர்மின் சக்தி உற்பத்தி செய்ய இயலாது.
- ஆற்றின் மத்திய மற்றும் கீழ் நிலைப்பகுதிகள் போக்குவரத்திற்கு ஏற்றது.

18. கிளையாறு என்றால் என்ன?

- ஒரு முதன்மை ஆறானது அதன் கடைப் பகுதியில் பலகிளைகளாகப் பிரிந்து கடலில் கலந்தால் அது கிளையாறு எனப்படுகிறது.
- இதற்கு எடுத்துக்காட்டாக ஹீக்ளி ஆற்றிணைக் கூறலாம். இது கங்கை நதியின் இணையாறு ஆகும்.

VII. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி. **PTA**

இமயமலையின் மூன்று பெரும் உட்பிரிவுகள்:

1) ட்ரான்ஸ் இமயமலைகள் (மேற்கு இமய மலைகள்)
2) இமயமலைகள் (மத்திய இமயமலைகள்)
3) பூர்வாஞ்சல் குன்றுகள் (கிழக்கு இமய மலைகள்)

1. ட்ரான்ஸ் இமயமலை:

- இம்மலைகள் மேற்கு இமயமலைகள் என்றும் அழைக்கப்படுகின்றன.
- இவை ஜம்மு – காஷ்மீர் மற்றும் திபெத் பீடபூமியில் அமைந்துள்ளது.
- இதன் பரப்பளவு திபெத்தில் அதிகமாக இருப்பதால் இவை திபெத்தியான் பீடபூமி என்றும் அழைக்கப்படுகின்றன.
- சாஸ்கர், லடாக், கைலாஸ் மற்றும் காரகோரம் ஆகியவை இங்குள்ள முக்கியமான மலைத்தொடர்கள் ஆகும்.

2. இமயமலை:

- இமயமலைகள் இளம் மடிப்பு மலைகள். இது மூன்று உட்பிரிவுகளைக் கொண்டது.

i) பெரிய இமயமலைகள் / இமாத்ரி:

- முக்கியமான சிகரங்களான எவரெஸ்ட், கஞ்சன்ஜங்கா ஆகியவை இங்கு அமைந்துள்ளன.
- இவை நிரந்தர பனியால் சூழப்பட்டுள்ளதால் இங்கு பனியாறுகள் காணப்படுகின்றன.

ii) சிறிய இமயமலை / இமாச்சல்:

- இது இமயமலையின் மத்தியத் தொடராகும்.
- இத்தொடரில் வெண்கற்பாறைகள், சுண்ணாம்புப்பாறைகள் மற்றும் மணற்பாறைகள் காணப்படுகின்றன.
- சிம்லா, முசௌரி, நைனிடால், அல்மோரா மற்றும் டார்ஜிலிங் போன்ற மலைவாழிடங்கள் இங்கு அமைந்துள்ளன.

iii) வெளிஇமயமலை / சிவாலிக்:

- இது மிகவும் தொடர்ச்சியற்ற மலைத்தொடராகும்.
- இப்பகுதிகள் குடியிருப்பு வளர்ச்சிக்கு ஏற்றது.

3. கிழக்கு இமயமலை அல்லது பூர்வாஞ்சல்:

- இவை இமய மலையின் கிழக்குக் கிளையாகும்.
- இது வடகிழக்கு மாநிலங்களில் பரவியுள்ளது. பெரும்பாலான குன்றுகள் இந்திய–மியான்மர் எல்லையிலும் மற்றவை இந்தியாவின் உட்பகுதியிலும் காணப்படுகின்றன.

இமயமலையின் முக்கியத்துவம்:

- தென்மேற்கு பருவக்காற்றைத் தடுத்து வட இந்தியப் பகுதிக்கு கனமழையைக் கொடுக்கிறது.
- இந்திய துணைக் கண்டத்திற்கு இயற்கை அரணாக அமைந்துள்ளது.
- வற்றாத நதிகளின் பிறப்பிடமாக உள்ளது.
- இயற்கை அழகின் காரணமாக வடக்கு மலைகள் சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கமாகத் திகழ்கிறது.
- பல கோடை வாழிடங்களும், புனிதத் தலங்களான அமர்நாத், கேதர்நாத், பத்ரிநாத் மற்றும் வைஷ்ணவி தேவி கோயில்களும் இம்மலைத் தொடரில் அமைந்துள்ளன.
- வனப்பொருட்கள் சாா்ந்த தொழிலகங்களுக்கு மூலப்பொருட்களை அளிக்கிறது.
- மத்திய ஆசியாவிலிருந்து வீசும் கடும் குளிர் காற்றைத் தடுத்து இந்தியாவை குளிரிலிருந்து பாதுகாக்கிறது.
- இமயமலைகள் பல்லுயிர் மண்டலத்திற்கு பெயர் பெற்றவை ஆகும்.

2. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.

தீபகற்ப இந்திய ஆறுகள்:

- தென் இந்தியாவில் பாயும் ஆறுகள் தீபகற்ப ஆறுகள் எனப்படுகின்றன.
- பெரும்பாலான ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உற்பத்தியாகின்றன.
- இவை பருவகால ஆறுகள் அல்லது வற்றும் ஆறுகள் எனப்படுகின்றன.
- நீரின் அளவு மழைப்பொழிவிற்கு ஏற்றாற்போல் மாறுபடுகிறது.
- இவ்வாறுகள் செங்குத்து சரிவுடன் கூடிய பள்ளத்தாக்கு வழியே பாய்கிறது.
- தீபகற்ப ஆறுகளை அவை பாயும் திசையின் அடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.அவை
  1. கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள்
  2. மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்

கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள்:

மகாநதி, கிருஷ்ணா, கோதாவரி, காவேரி

அ) மகாநதி:

- இந்நதி சத்தீஸ்கார் மாநிலத்திலுள்ள சிகாவிற்கு அருகில் உற்பத்தியாகி ஒடிசா மாநிலத்தின் வழியாக 851 கி.மீ நீளத்திற்குப் பாய்கிறது.
- மகாநதி பல கிளையாறுகளாகப் பிரிந்து இந்தியாவின் மிகப்பெரிய டெல்டாக்களை உருவாக்குகிறது. இந்நதி வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

ஆ) கோதாவரி:

- தீபகற்ப இந்தியாவில் பாயும் மிக நீளமான ஆறு கோதாவரியாகும்.
- இது மகாராஷ்ட்ரா மாநிலம் நாசிக் மாவட்டத்தில் அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது.
- இந்நதி விருத்தகங்கா எனவும் அழைக்கப்படுகிறது.
- இது ஆந்திரபிரதேசம் வழியாக பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

இ) கிருஷ்ணா:

- இது தீபகற்ப ஆறுகளில் இரண்டாவது பெரிய நதியாகும்.
- இந்நதி மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள மகா பலேஷ்வர் என்ற பகுதியில் ஊற்றாக உருவாகிறது.
- இந்நதி ஆந்திரப்பிரதேசத்தின் வழியாகப் பாய்ந்து ஹம்சலாதேவி என்ற இடத்தில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

ஈ) காவேரி:

- காவேரி ஆறு, கர்நாடக மாநிலத்தில் குடகு மலையிலுள்ள தலைக்காவேரியில் உற்பத்தியாகிறது.
- இது தென் இந்தியாவின் கங்கை என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்நதி கர்நாடகாவில் இரண்டாகப் பிரிந்து சிவசமுத்திரம் மற்றும் ஸ்ரீரங்கப்பட்டினம் ஆகிய புனித ஆற்றுத் தீவுகளை உருவாக்குகிறது.
- பின்பு தமிழ்நாட்டில் நுழைந்து தொடர்ச்சியான மற்றும் குறுகலான மலையிடுக்குகள் வழியாக கொள்ளிடம், மற்றும் காவேரி என இரண்டு பிரிவுகளாக பிரிந்து இறுதியில் பூம்புகார் என்ற இடத்திற்கு அருகில் வங்கக் கடலில் கலக்கிறது.

மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்:

அ) நர்மதை:

- மத்தியபிரதேசத்தில் உள்ள அமர்கண்டாக் பீடபூமியில் உற்பத்தியாகிறது.
- இது 27 கி.மீ நீளத்திற்கு ஒரு நீண்ட கழிமுகத்தை உருவாக்கி காம்பே வளைகுடா வழியாக அரபிக் கடலில் கலக்கிறது.
- இது மேற்கு நோக்கி பாயும் ஆறுகளிலேயே நீளமானதாகும்.

ஆ) தபதி:

- தபதி ஆறு தீபகற்ப இந்தியாவின் முக்கிய ஆறுகளில் ஒன்றாகும்.
- இந்நதி மத்தியப் பிரதேசத்திலுள்ள முல்டாய் என்ற இடத்தில் உற்பத்தியாகிறது.
- பின்பு காம்பே வளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது.
- தீபகற்ப இந்திய ஆறுகளில் நர்மதை, தபதி மற்றும் மாஹி ஆகிய மூன்று ஆறுகள் மட்டுமே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி பாய்கின்றன.

3. கங்கை ஆற்று வடிநிலம் குறித்து விரிவாக எழுதுக. **PTA**

- கங்கையாற்றின் தொகுப்பு 8,61,404 ச.கி.மீ பரப்பளவில் பாயும் இந்தியாவின் மிகப்பெரிய வடிகால் அமைப்பைக் கொண்டதாகும்.
- கங்கைச் சமவெளியில் பல நகரங்கள் ஆற்றங்கரையையொட்டி, அமைந்துள்ளன.
- கங்கைச் சமவெளி அதிக மக்களடர்த்தி கொண்டதாகும்.
- கங்கை ஆறு உத்தரகாண்ட் மாநிலத்திலுள்ள கங்கோத்ரி பனியாற்றிலிருந்து பாகிரதி என்னும் பெயருடன் உற்பத்தியாகிறது.
- இந்நதியின் நீளம் சுமார் 2525 கி.மீ ஆகும்.
- வடபகுதியிலிருந்து கோமதி, காக்ரா, கண்டாக், கோசி மற்றும் தென்பகுதியிலிருந்து யமுனை சோன், சாம்பல் போன்ற துணையாறுகள் கங்கையுடன் இணைகின்றன.
- வங்க தேசத்தில், கங்கை நதி பத்மா என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.
- கங்கை மற்றும் பிரம்மபுத்திரா ஆறுகள் சேர்ந்து உலகிலேயே மிகப்பெரிய டெல்டாவை உருவாக்கி பின் வங்காள விரிகுடாவில் கலக்கின்றன.

கூடுதல் வினாக்கள்

4. இந்தியாவின் வட இந்திய பெரும் சமவெளியைக் காலநிலை மற்றும் நிலப்பரப்பின் பண்புகளைக் கொண்டு வகைப்படுத்துக.

இராஜஸ்தான் சமவெளி:

- இச்சமவெளி ஆரவல்லி மலைத்தொடருக்கு மேற்கில் பரவியுள்ளது. இது லூனி மற்றும் சரஸ்வதி ஆறுகளின் படிவுகளால் உருவாகியுள்ளது.
- பல உப்பு ஏரிகள் இச்சமவெளியில் காணப்படுகின்றன. அவற்றுள் ஜெய்பூருக்கு அருகில் உள்ள சாம்பார் ஏரி (அ) புஷ்கர் ஏரி குறிப்பிடத்தக்கதாகும்.

பஞ்சாப் - ஹரியானா சமவெளி:

- பஞ்சாப் – ஹரியானா சமவெளிகள் இந்தியப் பாலைவனத்தின் வடகிழக்கே அமைந்துள்ளன.
- இச்சமவெளி சட்லெஜ், பியாஸ் மற்றும் ராவி ஆறுகளினால் ஏற்படும் படிவுகளால் உருவானது.
- இச்சமவெளி நீர்பிரி மேடாகவும், கங்கை – யமுனை, யமுனை – சட்லெஜ் ஆற்றிடைச் சமவெளியாகவும் உள்ளது.

கங்கைச் சமவெளி:

- கங்கைச் சமவெளி மேற்கிலுள்ள யமுனை ஆற்றிலிருந்து கிழக்கிலுள்ள வங்காளதேசம் வரை பரவியுள்ளது.
- கங்கையும் அதன் துணை ஆறுகளும் அதிக அளவில் வண்டல் படிவுகளைப் படிய வைத்து இந்தியாவின் மிகப்பெரிய சமவெளியை உருவாக்கியுள்ளன.
- கங்கைச் சமவெளி கிழக்கு மற்றும் தென்கிழக்கு நோக்கி மென் சரிவாக அமைந்துள்ளது.

பிரம்மபுத்திரா சமவெளி:

- பிரம்மபுத்திரா சமவெளியின் பெரும்பகுதி அஸ்ஸாமில் அமைந்துள்ளது.
- பிரம்மபுத்திரா ஆற்றினால் உருவாக்கப்பட்ட ஒரு தாழ்நில சமவெளியாக வடபெரும் சமவெளியின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது.
- இச்சமவெளி வண்டல் விசிறிகளாகவும் தராய் எனப்படும் சதுப்புநிலக் காடுகளாகவும் காணப்படுகிறது.

5. பெரிய இந்திய பாலைவனம் பற்றி விவரி.

- பெரிய இந்திய பாலைவனம், தார் பாலைவனம் என்றும் அழைக்கப்படுகிறது.
- இது இந்திய துணைக்கண்டத்தின் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ள மிகப்பெரிய வறண்ட நிலப்பகுதியாக உள்ளது.
- இது 2 இலட்சம் ச.கி.மீ பரப்பளவில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் இயற்கை எல்லையாக அமைந்துள்ளது.
- இது உலகின் 17வது மிகப்பெரிய பாலைவனமாகவும், உப அயன மண்டல பாலைவனங்களில் உலக அளவில் 9ஆவது பெரிய பாலைவனமாகவும் அமைந்துள்ளது.
- இப்பாலைவனம் ஆரவல்லி மலைத்தொடருக்கு மேற்கே, இராஜஸ்தான் மாநிலத்தின் மூன்றில் இரண்டு பங்கு நிலப்பரப்பைப் கொண்டுள்ளது.
- இந்த பாலைவனப்பகுதி மருஸ்தலி என்றும் அரைப் பாலைவனப்பகுதி பாங்கர் என்றும் இரு பகுதிகளாக அழைக்கப்படுகின்றன.
- இப்பாலைவனப் பகுதியில் பல உப்பு ஏரிகளும் மணல் திட்டுகளும் உள்ளன.

புவியியல்

VIII. உயர் சிந்தனை வினா

கூடுதல் வினாக்கள்

1. இமயமலையின் உயர்ந்த சிகரங்கள் எப்பொழுதும் பனி மூடியே இருக்கின்றன, ஏன்?

சிகரங்கள், கடல்மட்டத்திலிருந்து 4000மீ க்கு மேல் இருப்பதால் குளிராகவும், மழைப்பொழிவை விட பனிப்பொழிவு அதிகமாகவும் இருக்கிறது. மேலும் இங்கு அதிக பனிப்பொழிவும் குறைந்த வெப்பநிலையும் நிலவுவதால் சிகரங்கள் எப்பொழுதும் பனி மூடியே இருக்கின்றன.

2. பாங்கர் சமவெளி வேளாண்மைக்கு உகந்ததாக உள்ளது. ஏன்?

இவை பழைய வண்டல் மண்ணால் ஆனவை. இவை வெள்ளப்பெருக்கு ஏற்படாத உயர்நிலப் பகுதிகளில் அமைந்துள்ளது. வளமான இலைமக்குகளையும், நல்ல வடிகாலமைப்பையும் கொண்டுள்ளதால் பாங்கர் சமவெளி வேளாண்மைக்கு உகந்ததாக உள்ளது.

வரைபடம்

உலக வரைபடத்தில் இந்தியா



இந்தியா – மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள்

இந்தியா இயற்கை அமைப்பு

இந்தியா ஆறுகள் மற்றும் ஏரிகள்



அலகு புவியியல்

2 இந்தியா – காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள்

மனவரைபடம்

காலநிலையை நிர்ணயிக்கும் காரணிகள்

- அட்சங்கள்
- உயரம்
- கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு
- பருவகால காற்று
- நிலத்தோற்றம்
- ஜெட் காற்றோட்டம்

பருவக்காலங்கள்

- குளிர்காலம் (ஜனவரி முதல் பிப்ரவரி வரை)
- கோடைக்காலம் (மார்ச் முதல் மே வரை)
- தென்மேற்குப் பருவக்காற்று அல்லது மழைக்காலம் (ஜூன் முதல் செப்டம்பர் வரை)
- வடகிழக்குப் பருவக்காற்று காலம் (அக்டோபர் முதல் டிசம்பர் வரை)

மழைப்பரவல்

- இந்தியாவின் ஆண்டு சராசரி மழையளவு – 118 செ.மீ
- சீரற்ற மழைவீழ்ச்சி
- அதிகமான ஆண்டு மழைபொழிவு
- 200 செ.மீ. மேல் – 11%
- 200 –செ.மீ – 21%
- 75 – 125 செ.மீ –37%
- 35–75 செ.மீ –24%
- 35 செ.மீ க்கும் குறைவு – 7%

இயற்கைத் தாவரங்கள்

- அயன மண்டல பசுமை மாறாக் காடுகள்
- அயன மண்டல இலையுதிர்க் காடுகள்
- அயன மண்டல வறண்டக் காடுகள்
- மலைக்காடுகள்
- i) கிழக்கு இமயமலைக் காடுகள்
  ii) மேற்கு இமயமலைக் காடுகள்
- அல்பைன் காடுகள்
- ஒத அலைக் காடுகள்
- கடற்கரையோரக் காடுகள்
- நதி வனப்பகுதி அல்லது ஆற்றங்கரைக் காடுகள்

வன உயிரினங்கள்

- காடுகளை வாழிடமாகக் கொண்ட விலங்குகள்
- இரு பிரிவுகள்
  - i) முதுகெலும்பு உள்ளவை
  - ii) முதுகெலும்பு இல்லாதவை
- உலகிலுள்ள வனவிலங்கு உயிரினங்கள் – 1.5 மில்லியன்
- இந்தியாவில் உள்ளவை – 81,251

உயிர்க்கோள பெட்டகம் அல்லது காப்பகங்கள்

- இந்தியாவில் உள்ள உயிர்க்கோள காப்பகங்கள் – 18
- 18 உயிர்க்கோள காப்பகங்களில் காப்பகங்கள் யுனெஸ்கோவின் (UNESCO) மனித மற்றும் உயிர்க்கோள காப்பகத் திட்டத்தின் கீழ் செயல்படுகின்றன.

நினைவில் கொள்க

- சமச்சீர் காலநிலை என்பது **'பிரிட்டிஷ் காலநிலை'** என்றும் அழைக்கப்படுகிறது.
- ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள வளிமண்டலத்தின் தன்மையைக் குறிப்பது **வானிலை** எனப்படும்.
- ஒரு குறிப்பிட்ட பகுதியின் சுமார் 30–35 ஆண்டு சராசரி வானிலையைக் குறிப்பது **காலநிலை** எனப்படும்.
- இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் மிக முக்கியக்காரணி **பருவக் காற்று** ஆகும்.
- இந்திய காலநிலை **அயன மண்டல பருவக்காற்றுக் காலநிலை** என வரையறுக்கப்படுகிறது.
- மத்திய ஆசியாவிலிருந்து வீசும் கடும் குளிர்காற்றைத் தடுத்து, இந்திய துணைக் கண்டத்தை வெப்பப் பகுதியாக வைத்திருப்பது **இமயமலை** ஆகும்.
- வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் குறுகிய பகுதிகளில் வேகமாக நகரும் காற்றுகளை **ஜெட்காற்றுகள்** எனப்படும்.
- **"மான்சூன்"** என்ற சொல் மௌசீம் என்ற அரபுச் சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் பருவகாலம் ஆகும்.
- பருவங்களுக்கேற்றவாறு தங்களது திசைகளை மாற்றிக்கொண்டு வீசும் கோள் காற்றுகளைப் **பருவக்காற்று** என்கிறோம்.
- கேரளா மற்றும் கர்நாடக கடற்கரைப் பகுதிகளில் விளையும் மாங்காய்கள் விரைவில் முதிர்வதற்கு உதவும் இடியுடன் கூடிய மழை **மாஞ்சாரல்** என்று அழைக்கப்படுகிறது.
- ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வடமேற்கு திசையிலிருந்து வீசும் தலக்காற்று **நார்வெஸ்டர்** அல்லது **கால்பைசாகி** என்று அழைக்கப்படுகிறது.
- தென்மேற்குப் பருவக்காற்று, **கேரளாவிலுள்ள** மலபார் கடற்கரையை அடையும்போது பலத்த இடி மின்னலுடன் கூடிய மழையை அளிக்கிறது. இதனை **"பருவமழை வெடிப்பு"** என்பர்.
- உலகின் மிக அதிக அளவு மழைபெறும் (1141 செ.மீ) பகுதியான **மௌசின்ராம்** மேகாலயாவில் அமைந்துள்ளது.
- மனிதனின் நேரடி அல்லது மறைமுகத் தலையீடின்றி இயற்கைச் சூழலில் வளரும் தாவர இனத்தை **இயற்கைத் தாவரங்கள்** என்கிறோம்.
- **உயிர்க்கோள காப்பகங்கள்** என்பது நிலம் மற்றும் கடலோரப்பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட சுற்றுச்சூழல் மண்டலங்களாகும்.

இடங்களும் அதன் முக்கியத்துவமும்

- அடகாமா பாலை வனம் பூமியிலேயே வறண்ட பகுதியாகும்.
- உலகில் மிக அதிக அளவு மழைப் பெறும் (1141 செ.மீ) பகுதியான மௌசின்ராம் (Mawsynram) மேகாலயாவில் அமைந்துள்ளது.
- இந்தியாவில் உள்ள 18 உயிர்க்கோள காப்பகங்கள் யுனெஸ்கோவின் (UNESCO) மனித மற்றும் உயிர்க்கோள காப்பக திட்டத்தின் கீழ் செயல்படுகின்றன.
- கலைமான் ஆந்திர மாநிலத்திற்கும் ஹரியனாவிற்கும் பஞ்சாபிற்கும் மாநில விலங்காக திகழ்கிறது.

வரைபட வினாக்களுக்கான முக்கிய பகுதிகள்:

தலைப்பு	முக்கிய பகுதிகள்
பருவக்காற்று மற்றும் மழைப்பரவல்	தென்மேற்குப் பருவக்காற்று வீசும் திசை, வடகிழக்குப் பருவக்காற்று வீசும் திசை. அதிக மழை பெறும் பகுதி (200 செ.மீக்கு மேல்) மித மழை பெறும் பகுதி (100 செ.மீ – 200 செ.மீ) மிகக் குறைந்த மழைபெறும் பகுதி (50 செ.மீக்கும் குறைவு)
இயற்கைத் தாவரங்கள்	பசுமைமாறாக் காடுகள், இலையுதிர்க் காடுகள், மலைக்காடுகள், பாலைவனக் காடுகள், சுந்தரவனக் காடுகள் (மாங்குரோவ்)
தேசிய பூங்காக்கள்	காசிரங்கா, பண்டிப்பூர், கிர், கிண்டி, ராந்தம்பூர், பன்னா, சுந்தரவனம், மானாஸ், ராஜாஜி, சஞ்சய் காந்தி, கார்பெட், தத்வார்
வனவிலங்கு காப்பிடங்கள் (சரணாலயங்கள்)	முதுமலை, பெரியார், சந்திரபிரபா, போச்சரம், மகாநதி, சண்டாக்கா, எட்டுமாகரம்.
பறவைகள் காப்பகங்கள் (சரணாலயங்கள்)	கோபிந்த் சாகர், சுல்தான்பூர், சில்கா ஏரி, புலிகாட், வேடந்தாங்கல், ரங்கநாததிட்டு, மயானி, சலிம் அலி, குமரகம்
கடல் பூங்காக்கள்	துவாரகா, இராமேஸ்வரம்.
உயிர்க்கோள காப்பகங்கள்	அகஸ்தியமலை, டிகாங், டிபாங், மன்னார் வளைகுடா, கட்ச், பன்னமனாஸ், நீலகிரி, சுந்தரவனம், நந்ததேவி, கஞ்ஜன் ஜங்கா, கிரேட் நிகோபார், குளிர் பாலைவனம்.

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **வானிலையியல் ஒரு ________ அறிவியலாகும்.**
   அ) வானிலை ஆ) சமூக இ) அரசியல் ஈ) மனித
2. **நாம் பருத்தி ஆடைகளை ________ காலத்தில் அணிகிறோம்.**
   அ) கோடைகாலம் ஆ) குளிர்காலம்
   இ) மழைக்காலம் ஈ) வடகிழக்கு பருவக்காற்று காலம்
3. **மேற்கத்திய இடையூறுகளால் மழைப்பொழிவைப் பெறும் பகுதி ________**
   அ) தமிழ்நாடு ஆ) கேரளா இ) பஞ்சாப் ஈ) மத்தியப்பிரதேசம்
4. **கேரளா மற்றும் கர்நாடக கடற்கரைப் பகுதிகளில் விளையும் மாங்காய்கள் விரைவில் முதிர்வதற்கு ________ காற்றுகள் உதவுகின்றன.**
   அ) லூ ஆ) நார்வெஸ்டர்ஸ் இ) மாஞ்சாரல் ஈ) ஜெட் காற்றோட்டம்
5. **ஒரே அளவுமழை பெறும் இடங்களை இணைக்கும் கோடு ________ ஆகும்.**
   அ) சமவெப்ப கோடுகள் ஆ) சம மழைக்கோடுகள்
   இ) சம அழுத்தக் கோடுகள் ஈ) அட்சக் கோடுகள்
6. **இந்தியாவின் காலநிலை ________ ஆக பெயரிடப்பட்டுள்ளது.**
   அ) அயன மண்டல ஈரக் காலநிலை ஆ) நிலநடுக்கோட்டுக் காலநிலை
   இ) அயனமண்டல பருவக்காற்றுக் காலநிலை ஈ) மித அயனமண்டலக் காலநிலை

7. பருவக்காற்று காடுகள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.
அ) அயனமண்டல பசுமை மாறாக்காடுகள் ஆ) இலையுதிர்க்காடுகள்
இ) மாங்குரோவ் காடுகள் ஈ) மலைக்காடுகள்

8. இமயமலையில் 2400 மீ உயரத்திற்கு மேல் காணப்படும் காடுகள்
அ) இலையுதிர்க்காடுகள் ஆ) ஆல்பைன்காடுகள்
இ) மாங்குரோவ் காடுகள் ஈ) ஓதக்காடுகள்

9. சேஷாசலம் உயிர்க்கோள பெட்டகம் அமைந்துள்ள மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரப்பிரதேசம்
இ) மத்தியப்பிரதேசம் ஈ) கர்நாடகா

10. யுனெஸ்கோவின் (UNESO) உயிர்க்கோளப் பாதுகாப்பு பெட்டகத்தின் ஒரு அங்கமாக இல்லாதது
அ) நீலகிரி ஆ) அகத்திய மலை
இ) பெரிய நிக்கோபார் ஈ) கட்ச்

கூடுதல் வினாக்கள்

11. சமச்சீர் காலநிலை என்பது
அ) பிரிட்டிஷ் காலநிலை ஆ) அமெரிக்க காலநிலை
இ) இந்தியக் காலநிலை ஈ) ரஷ்ய காலநிலை

12. இந்தியாவை இரு சமபாகங்களாக பிரிப்பது
அ) மகரரேகை ஆ) கடகரேகை
இ) நிலநடுக்கோடு ஈ) ஆர்க்டிக் வட்டம்

13. இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் மிக முக்கிய காரணி
அ) மலை ஆ) மழை
இ) கடல் ஈ) பருவக்காற்று

14. வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் குறுகிய பகுதிகளில் வேகமாக நகரும் காற்றுகள்
அ) எல்நினோ ஆ) லூ
இ) ஜெட்காற்றுகள் ஈ) கொரியாலிஸ்

15. பூமியிலேயே வறண்ட பகுதி
அ) தார் பாலைவனம் ஆ) சஹாரா பாலைவனம்
இ) கோபி பாலைவனம் ஈ) அடகாமா பாலைவனம்

16. மேற்கத்திய இடையூறுகள் உருவாகும் பகுதி
அ) மத்திய தரைக்கடல் பகுதி ஆ) அரபிக்கடல் பகுதி
இ) செங்கடல் பகுதி ஈ) அட்லாண்டிக் கடல் பகுதி

17. இந்திய காலநிலையின் முக்கிய அம்சமாக விளங்கும் பருவக்காற்று
அ) தென் மேற்கு பருவக்காற்று ஆ) வடமேற்கு பருவக்காற்று
இ) தென் கிழக்கு பருவக்காற்று ஈ) வடகிழக்குப் பருவக்காற்று

18. தென்மேற்கு பருவக்காற்றின் அரபிக்கடல் கிளை மோதும் மலைச்சரிவு
அ) கிழக்குத் தொடர்ச்சி மலை ஆ) ஆரவல்லி மலை
இ) மேற்குத் தொடர்ச்சி மலை ஈ) விந்திய மலை

19. தென்மேற்கு பருவகாற்று வீசும் திசைக்கு இணையாக அமைந்துள்ள மலை
அ) சாத்பூரா மலை ஆ) ஆரவல்லி மலை
இ) நீலகிரி மலை ஈ) விந்திய மலை

20. வங்கக் கடலில் உருவாகும் புயலால் மழைபெறும் மாநிலம்
அ) குஜராத் ஆ) கேரளா
இ) தமிழ்நாடு ஈ) மகாராஷ்டிரம்

21. உலகில் மிக அதிக அளவு மழை பெறும் பகுதியான மௌசின்ராம் அமைந்துள்ள மாநிலம்
   அ) அஸ்ஸாம் ஆ) அருணாச்சல பிரதேசம்
   இ) மேகாலயா ஈ) மேற்கு வங்காளம்

22. ஆண்டு சராசரி மழைப்பொழிவு அளவு சுமார் 200 செ.மீட்டருக்கு மேல் உள்ள பகுதிகளில் காணப்படும் காடுகள்
   அ) பசுமை மாறாக் காடுகள் ஆ) இலையுதிர் காடுகள்
   இ) வறண்ட காடுகள் ஈ) அல்பைன் காடுகள்

23. சந்தன மரங்கள் அதிகமாகக் காணப்படும் காடுகள்
   அ) மலைக்காடுகள் ஆ) ஓத அலைக்காடுகள்
   இ) அல்பைன் காடுகள் ஈ) இலையுதிர்க் காடுகள்

24. மாநில விலங்காக கலைமானைக் கொண்டுள்ள மாநிலம்
   அ) தமிழ்நாடு ஆ) கேரளா
   இ) ஆந்திரா ஈ) கர்நாடகம்

25. இந்திய அரசு வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தை இயற்றிய ஆண்டு
   அ) 1927 ஆ) 1972
   இ) 1926 ஈ) 1962

விடைகள்

1. அ) வானிலை	2. அ) கோடைக்காலம்
3. இ) பஞ்சாப்	4. இ) மாஞ்சாரல்
5. ஆ) சம மழைக்கோடுகள்	6. இ) அயன மண்டல பருவக்காற்றுக் காலநிலை
7. ஆ) இலையுதிர்க்காடுகள்	8. ஆ) ஆல்பைன் காடுகள்
9. ஆ) ஆந்திரப்பிரதேசம்	10. அ) நீலகிரி
11. அ) பிரிட்டிஷ் காலநிலை	12. ஆ) கடகரேகை
13. ஈ) பருவக்காற்று	14. இ) ஜெட்காற்றுகள்
15. ஈ) அடகாமா பாலைவனம்	16. அ) மத்திய தரைக் கடல் பகுதி
17. அ) தென் மேற்கு பருவக்காற்று	18. இ) மேற்கு தொடர்ச்சி மலை
19. ஆ) ஆரவல்லி மலை	20. இ) தமிழ் நாடு
21. இ) மேகாலயா	22. அ) பசுமை மாறாக் காடுகள்
23. ஈ) இலையுதிர்க் காடுகள்	24. இ) ஆந்திரா
25. ஆ) 1972	

II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

கூடுதல் வினாக்கள்

1. புவிப்பரப்பிலிருந்து உயரே செல்லச் செல்ல வெப்பநிலை குறைவதற்கு ________ என்று பெயர்.
2. தென்கிழக்கு இந்தியாவின் காலநிலை ________ பருவக்காற்றின் ஆதிக்கத்திற்கு உட்படுகிறது.
3. ________ என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள வளிமண்டலத்தின் தன்மையைக் குறிப்பதாகும்.
4. ________ என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியின் சுமார் 30–35 ஆண்டு சராசரி வானிலையைக் குறிப்பதாகும்.
5. மான்சூன் என்ற சொல் ________ என்ற அரபு சொல்லிலிருந்து பெறப்பட்டது.
6. குளிர்காலத்தில் சூரியனின் செங்குத்து கதிர்கள் ________ மீது விழுகிறது.
7. பருவங்களுக்கேற்ப தங்களது திசைகளை மாற்றிக் கொண்டு வீசும் கோள் காற்றுகளை ________ என்கிறோம்.
8. கால்பைசாகி என்று அழைக்கப்படும் தலக்காற்று ________

9. உலகளாவிய காலநிலை நிகழ்வு __________ ஆகும்.

10. இடி மின்னலுடன் கூடிய தென்மேற்கு பருவக் காற்றின் துவக்கம் __________ எனப்படுகிறது.

11. இந்தியாவின் ஒட்டுமொத்த மழைப்பொழிவில் 75 சதவீத மழைப்பொழிவானது _______ பருவக் காற்று காலத்தில் கிடைக்கிறது.

12. மனிதனின் உதவியில்லாமல் வளரும் தாவரங்களை __________ என்கிறோம்.

13. ஆண்டு சராசரி மழைப்பொழிவு அளவு சுமார் 100 செ.மீ முதல் 200 செ.மீ வரை உள்ள பகுதிகளில் காணப்படும் காடுகள் ____________

14. பாலைவன மற்றும் அரைப்பாலைவனத் தாவரக் காடுகளை ________ என்றும் அழைப்பர்.

15. சுமார் 2400 மீட்டருக்கு மேலுள்ள இமயமலைகளின் உயரமான பகுதிகளில் காணப்படும் காடுகள் ________

16. ஓதக்காடுகள் ____________ என்றும் அழைக்கப்படுகின்றன.

17. இயற்கைச் சூழ்நிலை அல்லது காடுகளை வாழிடமாக கொண்டு வாழும் விலங்குகள் __________ எனப்படுகின்றன.

18. __________ என்பது நிலம் மற்றும் கடலோர சுற்றுச் சூழலைப் பாதுகாக்க ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும்.

19. இந்திய அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள உயிர்கோள காப்பகங்களின் எண்ணிக்கை ____________

20. புலிகள் பாதுகாப்புத் திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு ____________

விடைகள்

1.	இயல்பு வெப்ப வீழ்ச்சி	2.	வடகிழக்கு
3.	வானிலை	4.	காலநிலை
5.	மௌசிம்	6.	மகரரேகை
7.	பருவக்காற்று	8.	நார்வெஸ்டர்
9.	எல்நினோ	10.	பருவமழை வெடிப்பு
11.	தென்மேற்கு	12.	இயற்கைத் தாவரம்
13.	இலையுதிர்க் காடுகள்	14.	முட்புதர் காடுகள்
15.	அல்பைன் காடுகள்	16.	மாங்குரோவ் காடுகள்
17.	வன உயிரினங்கள்	18.	உயிர்க்கோள பெட்டகம்
19.	18	20.	1973

III.பொருத்துக

பாடநூல் வினா

அ) 1. யானை பாதுகாப்புத் திட்டம் — அ) பாலை மற்றும் அரைப் பாலைவனத் தாவரங்கள்
2. உயிர் பன்மைச் சிறப்புப் பகுதிகள் — ஆ) அக்டோபர், டிசம்பர்
3. வடகிழக்குப்பருவக்காற்று — இ) கடற்கரைக்காடுகள்
4. அயன மண்டல முட்புதர் காடுகள் — ஈ) யானைகள் பாதுகாப்பு
5. கடலோரக்காடுகள் — உ) இமயமலைகள்

விடை:
1) ஈ
2) உ
3) ஆ
4) அ
5) இ

புவியியல்

கூடுதல் வினாக்கள்

அ) 1. நார்வெஸ்டர் — அ) பருவக்காற்று
2. எல்நினோ — ஆ) உலகின் அதிகமழை பெறும்பகுதி
3. மௌசின்ராம் — இ) வறண்ட பாலைவனம்
4. அடகாமா — ஈ) வங்காளவிரிகுடா
5. புயல் சின்னம் — உ) உள்ளூர் புயல்

விடை: 1) உ 2) அ 3) ஆ 4) இ 5) ஈ

இ) 1. பசுமை மாறாக் காடுகள் — அ) ஓக்
2. இலையுதிர்க்காடுகள் — ஆ) எபானி
3. மலைக்காடுகள் — இ) சுந்தரவனக் காடுகள்
4. பாலைவனக் காடுகள் — ஈ) தேக்கு
5. மாங்குரோவ் காடுகள் — உ) ஈச்சமரம்

விடை: 1) ஆ 2) ஈ 3) அ 4) உ 5) இ

ஈ) 1. 50 செ.மீக்கும் குறைவான மழை — அ) பசுமை மாறாக் காடுகள்
2. 100 செ.மீ முதல் 200 செ.மீ மழை — ஆ) ஆல்பைன் காடுகள்
3. 50 செ.மீ முதல் 100 செ.மீ மழை — இ) பாலைவனக் காடுகள்
4. 200 செ.மீ க்கும் அதிகமான மழை — ஈ) வெப்பமண்டல வறண்ட காடுகள்
5. 2400 மீ உயரத்திற்கு மேல் — உ) மழைக்காடுகள்

விடை: 1) இ 2) உ 3) ஈ 4) அ 5) ஆ

ஈ) 1. சுந்தரவனம் — அ) தமிழ்நாடு
2. குளிர் பாலைவனம் — ஆ) குஜராத்
3. பன்னா — இ) இமாச்சலபிரதேசம்
4. கட்ச் — ஈ) மேற்கு வங்காளம்
5. மன்னார் வளைகுடா — உ) மத்தியப் பிரதேசம்

விடை: 1) ஈ 2) இ 3) உ 4) ஆ 5) அ

IV. காரணம் கூறுக.

பாடநூல் வினாக்கள்

1. கூற்று A : பருவக்காற்றுகள் எளிதில் புரிந்துகொள்ள இயலாத வானிலை நிகழ்வாகும்.
காரணம் R : வானிலை வல்லுநர்கள் பருவக்காற்றின் தோற்றத்தைப் பற்றி பல்வேறு கருத்துக்களைக் கூறியுள்ளனர்.
அ) A மற்றும் R இரண்டும் சரி கூற்றுக்கான காரணம் சரி
ஆ) A மற்றும் R இரண்டும் சரி கூற்றுக்கான காரணம் தவறு
இ) கூற்று சரி காரணம் தவறு
ஈ) கூற்று தவறு காரணம் சரி

2. கூற்று A : இமயமலையானது ஒரு காலநிலை அரணாகச் செயல்படுகிறது. **PTA**
காரணம் R : இமயமலை மத்திய ஆசியாவிலிருந்து வீசும் குளிர்க்காற்றை தடுத்து இந்தியத் துணைக்கண்டத்தை மிதவெப்பமாக வைத்திருக்கிறது.
அ) A மற்றும் R இரண்டும் சரி கூற்றுக்கான காரணம் சரி
ஆ) A மற்றும் R இரண்டும் சரி கூற்றுக்கான காரணம் தவறு
இ) கூற்று சரி காரணம் தவறு
ஈ) கூற்று தவறு காரணம் சரி

கூடுதல் வினாக்கள்

3. கூற்று A : சமவெளிப் பகுதிகளைக் காட்டிலும் மலைப்பகுதிகள் குளிராக இருக்கும்.
காரணம் R : புவிப்பரப்பிலிருந்து உயரே செல்லச் செல்ல வளிமண்டலத்தின் வெப்பநிலை கூடுகிறது.
அ) A மற்றும் R இரண்டும் சரி
ஆ) A மற்றும் R இரண்டும் தவறு
இ) A சரி R தவறு
ஈ) A தவறு R சரி

4. கூற்று A : இராஜஸ்தான் பகுதி தென்மேற்கு பருவக் காற்றினால் அதிக மழையை பெறுவதில்லை
காரணம் R : ஆரவல்லி மலைத்தொடர் தென்மேற்கு பருவக் காற்று வீசும் திசைக்கு இணையாக அமைந்துள்ளது.
அ) A மற்றும் R இரண்டும் சரி கூற்றுக்கான காரணம் தவறு
ஆ) A மற்றும் R சரி, கூற்றுக்கான காரணம் சரி
இ) கூற்று சரி, காரணம் தவறு
ஈ) கூற்று தவறு காரணம் சரி

5. கூற்று A : வலிமைமிக்க யானை போன்ற பல வன விலங்குகளின் வாழிடமாக இந்தியா திகழ்கிறது.
காரணம் R : பல வன உயிரினங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன.
அ) கூற்று சரி, காரணம் தவறு
ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) A மற்றும் R இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் சரி
ஈ) A மற்றும் R இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் தவறு

விடைகள்

1. அ) A மற்றும் R இரண்டும் சரி. கூற்றுக்கான காரணம் சரி
2. அ) A மற்றும் R இரண்டும் சரி. கூற்றுக்கான காரணம் சரி
3. இ) A சரி R தவறு
4. ஆ) A மற்றும் R சரி, கூற்றுக்கான காரணம் சரி
5. ஈ) A மற்றும் R இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் தவறு

V. பொருந்தாத விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

புவியியல்

பாடநூல் வினாக்கள்

1. ஓதக்காடுகள் இதனைச் சுற்றி காணப்படுகிறது.
அ) பாலைவனம் ஆ) கங்கைபிரம்மபுத்திரா டெல்டா
இ) கோதாவரி டெல்டா ஈ) மகாநதி டெல்டா

2. இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் காரணிகள் **PTA**
அ) அட்ச பரவல் ஆ) உயரம்
இ) கடலிலிருந்து அமைந்துள்ள தூரம் ஈ) மண்

கூடுதல் வினாக்கள்

3. இமய மலையில் அமைந்துள்ள கோடை வாழிடம் ________
அ) சிம்லா ஆ) முசௌரி இ) உதகை ஈ) டார்ஜிலிங்

4. கால்பைசாகியால் மழைபெறும் மாநிலம்
அ) பஞ்சாப் ஆ) பீகார் இ) மேற்கு வங்காளம் ஈ) அசாம்

5. வங்கக்கடலில் உருவாகும் புயலால் மழைபெறும் மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரா இ) கர்நாடகம் ஈ) மத்தியப்பிரதேசம்

6. **தென்மேற்குப் பருவக்காற்றின் வங்காளவிரிகுடா கிளையை தடுக்கும் மலைக்குன்று**

அ) காசி ஆ) காரோ இ) ஆரவல்லி ஈ) ஜெயந்தியா

7. **பசுமைமாறாக் காடுகளில் காணப்படாத மரம்**

அ) இரப்பர் ஆ) ஈச்சமரம் இ) எபனி ஈ) மூங்கில்

விடைகள்

1. அ) பாலைவனம்	2. ஈ) மண்	3. இ) உதகை	
4. அ) பஞ்சாப்	5. ஈ) மத்தியப்பிரதேசம்	6. இ) ஆரவல்லி	7. ஆ) ஈச்சமரம்

VI. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. 'வானிலையியல்' வரையறு.

- வானிலையின் பல்வேறு கூறுகளைப் பற்றி, குறிப்பாக வானிலை முன்னறிவிப்பு பற்றிய ஒரு அறிவியல் பிரிவு வானிலையியல் என்று அழைக்கப்படுகிறது.

2. "இயல்பு வெப்ப வீழ்ச்சி" என்றால் என்ன?

- புவிப்பரப்பிலிருந்து உயரே செல்ல செல்ல வளிமண்டலத்தில் ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் 6.5°C என்ற அளவில் வெப்ப நிலை குறைகிறது. இதற்கு "இயல்பு வெப்ப வீழ்ச்சி" என்று பெயர்.

3. "ஜெட் காற்றோட்டங்கள் " என்றால் என்ன? **PTA**

- வளிமண்டத்தின் உயர் அடுக்குகளில் குறுகிய பகுதிகளில் வேகமாக நகரும் காற்றுகள் "ஜெட் காற்றுகள்" எனப்படும்.
- ஜெட் காற்றோட்ட கோட்பாட்டின் படி, உப அயன மேலை காற்றோட்டம் வடபெரும் சமவெளிகளிலிருந்து திபெத்திய பீடபூமியை நோக்கி இடம் பெயர்வதால் தென்மேற்குப் பருவக்காற்று உருவாகின்றது.
- கீழை ஜெட் காற்றோட்டங்கள் தென்மேற்கு மற்றும் பின்னடையும் பருவக்காற்றுக் காலங்களில் வெப்ப மண்டல தாழ்வழுத்தங்களை உருவாக்குகின்றன.

4. பருவக்காற்று குறித்து ஒரு சிறு குறிப்பு வரைக.

- பருவங்களுக்கேற்றவாறு தங்களது திசைகளை மாற்றிக்கொண்டு வீசும் கோள் காற்றுகளைப் பருவக்காற்று என்கிறோம்.
- இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் மிக முக்கியமான காரணி பருவக்காற்றாகும்.
- இக்காற்று கோடைக் காலத்தில் தென்மேற்கு திசையிலிருந்து வடகிழக்கை நோக்கியும், குளிர்காலத்தில் வடகிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு நோக்கியும் வீசுகிறது.
- இந்தியாவிற்கு மழைப்பொழிவினைத்தரும் பருவக்காற்றுகள், தென்மேற்குப் பருவக்காற்று மற்றும் வடகிழக்குப் பருவக் காற்று என்பனவாகும்.

5. இந்தியாவின் நான்கு பருவக் காலங்களைக் குறிப்பிடுக. **PTA**

- குளிர்காலம் : ஜனவரி முதல் பிப்ரவரி வரை
- கோடைக்காலம் : மார்ச் முதல் மே வரை
- தென்மேற்குப் பருவக்காற்று காலம் : ஜூன் முதல் செப்டம்பர் வரை
- வடகிழக்குப் பருவக்காற்று காலம் : அக்டோபர் முதல் டிசம்பர் வரை

6. 'பருவமழை வெடிப்பு' என்றால் என்ன? **PTA**

- தென்மேற்கு பருவக்காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் (தென்னிந்தியாவில்) 'பருவமழை வெடிப்பு' எனப்படுகிறது.

- இது இந்தியாவின் வெப்பநிலையை பெருமளவில் குறைக்கிறது.

7. அதிக மழைபெறும் பகுதிகளைக் குறிப்பிடுக.

- மேற்குக் கடற்கரை
- அசாம்
- மேகாலயாவின் தென்பகுதி
- நாகலாந்து
- திரிபுரா
- அருணாச்சலப்பிரதேசம்

8. இந்தியாவில் சதுப்புநிலக்காடுகள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.

- கங்கை, பிரம்மபுத்திரா டெல்டா பகுதிகள் (உலகின் மிகப்பெரிய சதுப்பு நிலக் காடுகள்)
- மகாநதி, கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகளின் டெல்டா பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன.

9. அயன மண்டல பசுமைமாறாக் காடுகளிலுள்ள மரங்களை எழுதுக.

- இரப்பர்
- எபனி
- ரோஸ் மரம்
- தென்னை
- மூங்கில்
- சின்கோனா
- சிடார்

10. இந்தியாவிலுள்ள உயிர்க்கோள காப்பகங்கள் ஏதேனும் ஐந்தினை எழுதுக. PTA

- மன்னார் வளைகுடா – தமிழ்நாடு
- நீலகிரி – தமிழ்நாடு
- அகத்திய மலை – கேரளா
- கட்ச் – குஜராத்
- சுந்தரவனம் – மேற்குவங்காளம்

11. "புலிகள் பாதுகாப்புத் திட்டம்" என்றால் என்ன?

- "புலிகள் பாதுகாப்புத் திட்டம்" இந்தியாவில் 1973 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- புலிகளை பாதுகாக்கவும் அதன் எண்ணிக்கையை அதிகரிக்கவும் புலிகள் பாதுகாப்பகங்கள் தொடங்கப்பட்டன.
- இத்திட்டத்தின் மூலம் புலிகளின் எண்ணிக்கை 60 சதவீதம் உயர்ந்துள்ளது.

புவியியல்

கூடுதல் வினாக்கள்

12. சமச்சீர் காலநிலை என்றால் என்ன?

- சமச்சீர் காலநிலை என்பது "பிரிட்டிஷ் காலநிலை" என்று அழைக்கப்படுகிறது.
- இக்காலநிலை அதிக வெப்பமுடையதாகவோ அல்லது மிகக் குளிருடையதாகவோ இருக்காது.

13. இந்திய காலநிலையை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?

- அட்சப் பரவல்
- கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு
- கடல் மட்டத்திலிருந்து உயரம்
- பருவக்காற்று
- நிலத்தோற்றம்

- ஜெட் காற்றுகள்

14. வானிலை மற்றும் காலநிலை என்றால் என்ன?

வானிலை

- வானிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள வளிமண்டலத்தின் தன்மையைக் குறிக்கும்.

காலநிலை:

- காலநிலை என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியின் சுமார் 30–35 ஆண்டு சராசரி வானிலையைக் குறிப்பதாகும்.

15. "மான்சூன்" என்றால் என்ன?

- "மான்சூன்" என்ற சொல் "மௌசிம்" என்ற அரபுச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இதன் பொருள் பருவகாலம் ஆகும்.
- பருவகாலம் என்ற சொல் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அரபு மாலுமிகளால் இந்தியப் பெருங்கடல் கடற்கரைப்பகுதிகளில் குறிப்பாக அரபிக்கடலில் பருவங்களுக்கு ஏற்ப மாறி வீசும் காற்றுகளைக் குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்பட்டது.

16. "மாஞ்சாரல்" குறிப்பு வரைக.

- வளிமண்டல அழுத்த நிலையின் வேறுபாட்டால் அரபிக்கடல் மற்றும் வங்கக் கடல் பகுதிகளில் காற்றானது தென்மேற்கிலிருந்து வடகிழக்கு நோக்கி வீசுகிறது.
- இக்காற்றுகள் மே மாதத்தில் மேற்கு கடற்கரைப் பகுதிகளுக்கு முன்பருவகால மழையைத் தருகின்றன.
- "மாஞ்சாரல்" என்ற இடியுடன் கூடிய மழையானது கேரளா மற்றும் கர்நாடக கடற்கரை பகுதிகளில் விளையும் "மாங்காய்கள்" விரைவில் முதிர்வதற்கு உதவுகிறது.

17. இயற்கைத் தாவரம் என்றால் என்ன?

- நேரடியாகவோ மறைமுகமாகவோ மனித உதவியில்லாமல் இயற்கையாக வளர்ந்துள்ள மரங்கள், புதர்கள், செடிகள், கொடிகள் போன்ற அனைத்து தாவர உயிரினங்களையும் இயற்கைத் தாவரங்கள் என்கிறோம்.

18. ஓத அலைக்காடுகள் பற்றி குறிப்பிடுக.

- இக்காடுகள் டெல்டாக்கள், பொங்கு முகங்கள் மற்றும் கடற்கழிமுகப் பகுதிகளில் காணப்படுகின்றன.
- இவை ஓதங்களின் ஆதிக்கத்திற்கு உள்ளாவதால் சதுப்பு நிலக்காடுகள் மற்றும் டெல்டா காடுகள் எனவும் அழைக்கப்படுகின்றன.
- கங்கை–பிரம்மபுத்திரா டெல்டா பகுதிகளில் உலகில் மிகப்பெரிய சதுப்பு நிலக்காடுகள் உள்ளன. மகாநதி, கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகளின் டெல்டா பகுதிகளிலும் இவ்வகை ஓதக்காடுகள் காணப்படுகின்றன.
- இவை "மாங்குரோவ் காடுகள்" என்றும் அழைக்கப்படுகின்றன.

19. நதி வனப்பகுதி என்றால் என்ன?

- இக்காடுகள் கங்கை, யமுனை நதி பாயும் பகுதிகளில் குறிப்பாக காதர் பகுதிகளில் காணப்படுகின்றன.
- இது பசுமையான புதர் தாவரங்கள் மற்றும் புளியமரம் போன்றவற்றிற்கு பெயர் பெற்றவை.
- வடபெரும் சமவெளி பகுதிகளிலுள்ள ஆற்றுப்பகுதிகளில் இவ்வகைத் தாவரங்கள் அதிகம் காணப்படுகின்றன.

20. உயிர்க்கோளப் பெட்டகம் பற்றி குறிப்பு வரைக.

- உயிர்க்கோளப் பெட்டகம் என்பது நிலம் மற்றும் கடலோர சுற்றுச்சூழலைப் பாதுகாக்க ஏற்படுத்தப்பட்ட ஒன்று. மக்கள் இவற்றின் ஒருங்கிணைந்த அங்கமாகும்.
- இந்திய அரசாங்கம் 18 உயிர்க்கோள காப்பகங்களை ஏற்படுத்தியுள்ளது.
- இவற்றின் பணி இயற்கை வாழ்விடத்தின் பெரும்பகுதிகளைப் பாதுகாத்தல், தேசிய பூங்காக்களைப் பாதுகாத்தல், மேலும் இவைகளின் பொருளாதார பயன்பாட்டு பகுதிகளைப் பாதுகாத்தல் போன்றனவாகும்.

VII. வேறுபடுத்துக.

பாடநூல் வினாக்கள்

1. வானிலை மற்றும் காலநிலை

வானிலை	காலநிலை
வானிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள வளி மண்டத்தின் தன்மையைக் குறிப்பதாகும்.	காலநிலை என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியின் சுமார் 30 – 35 ஆண்டு சராசரி வானிலையைக் குறிப்பதாகும்.
வெப்பம், அழுத்தம், காற்று, ஈரப்பதம் மற்றும் மழை ஆகியன வானிலையின் முக்கிய கூறுகள் ஆகும்.	அட்சப் பரவல், கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு, கடல் மட்டத்திலிருந்து உயரம், பருவக்காற்று, நிலத்தோற்றம், ஜெட் காற்றுகள் போன்றவை காலநிலையை பாதிக்கும் காரணிகளாகும்.

2. அயன மண்டல பசுமைமாறாக் காடுகள் மற்றும் இலையுதிர் காடுகள் PTA

அயன மண்டல பசுமைமாறாக் காடுகள்	இலையுதிர்காடுகள்
ஆண்டு சராசரி மழைப் பொழிவு அளவு 200 செ.மீட்டருக்கு மேல் உள்ள பகுதிகளில் இவ்வகைக்காடுகள் காணப்படுகின்றன.	ஆண்டு சராசரி மழைப்பொழிவு 100 செ. மீ முதல் 200 செ, மீ வரையுள்ள பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன.
இக்காடுகளிலுள்ள மரங்கள் எப்பொழுதும் பசுமையாகக் காணப்படுகின்றன.	இக்காடுகளிலுள்ள மரங்கள் வசந்த காலத்திலும் கோடை காலத்தின் முற்பகுதியிலும் வறட்சியின் காரணமாக இலைகளை உதிர்த்து விடுகின்றன.
ஆண்டு வெப்பநிலை 22°C க்கு அதிகமாக இருக்கும்.	ஆண்டு வெப்பநிலை 27°C ஆக இருக்கும்.
இக்காடுகள் கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா, அந்தமான் நிக்கோபர் தீவுகள், அசாம், மேகலாயா, நாகலாந்து, மேற்கு வங்காளம், திரிபுரா, மணிப்பூர், மிசோரம் ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன.	இக்காடுகள் பஞ்சாப், ஹரியானா ஆந்திரப் பிரதேசம், பீகார், தமிழ் நாடு, மத்தியப் பிரதேசம், சதீஸ்கர் போன்ற பகுதிகளில் காணப்படுகின்றன.
இரப்பர், எபனி, ரோஸ் மரம், தென்னை, மூங்கில், சின்கோனா, சிடார் போன்ற மரங்கள் இங்கு காணப்படுகின்றன.	தேக்கு, சால், சந்தனம், ரோஸ் மரம், ஆம்லா, மூங்கில், படாக், பாலாங், குசம், சிசம், மற்றும் மாகு போன்ற மரங்கள் இங்கு காணப்படுகின்றன.

3. வடகிழக்கு பருவக்காற்று மற்றும் தென்மேற்கு பருவக்காற்று

வடகிழக்கு பருவக்காற்று	தென்மேற்கு பருவக்காற்று
வடகிழக்குப் பருவக்காற்றின் காலம் அக்டோபர் முதல் டிசம்பர் வரையாகும்.	தென்மேற்குப் பருவக் காற்றின் காலம் ஜூன் முதல் செப்டம்பர் வரையாகும்.
இக்காற்று நிலப்பகுதியிலிருந்து வங்காள விரிகுடா கடலை நோக்கி வீசுகிறது.	இக்காற்று இந்தியப் பெருங்கடலிலிருந்து நிலத்தை நோக்கி வீசுகிறது.
இப்பருவக்காற்றின் மூலம் கேரளா, ஆந்திரா, தமிழ்நாடு, கர்நாடகாவின் உட்பகுதிகள் நல்ல மழையைப் பெறுகின்றன.	இப்பருவக்காற்றின் மூலம் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் மேற்கு சரிவுகள், வடகிழக்கு இந்தியப் பகுதிகள் குறிப்பாக மேகாலயா நல்ல மழையைப் பெறுகின்றன.

கூடுதல் வினாக்கள்

4. குளிர்காலம், கோடைக்காலம்

குளிர்காலம்	கோடைக்காலம்
ஜனவரி முதல் பிப்ரவரி வரை இந்தியாவின் குளிர் காலமாகும்.	மார்ச் முதல் மே வரை இந்தியாவின் கோடைக்காலமாகும்.
இக்காலத்தில் சூரியனின் செங்குத்துக் கதிர்கள் மகர ரேகையின் மீது செங்குத்தாக விழுகின்றன.	இக்காலத்தில் சூரியனின் செங்குத்துக் கதிர்கள் கடகரேகையில் செங்குத்தாக விழுகின்றன.
இதனால் இந்தியப்பகுதிகள் சாய்வான சூரியக்கதிர்களை பெறுகின்றன.	இதனால் இந்தியப் பகுதிகள் செங்குத்தான சூரியக் கதிர்களைப் பெறுகின்றன.
இதுவே குறைந்த வெப்பத்திற்குக் காரணமாகிறது.	இதுவே நாடுமுழுவதும் வெப்பமான வறண்ட வானிலை நிலவக் காரணமாகிறது.
இப்பருவத்தில் மேற்கு இமயமலை, தமிழ்நாடு, கேரளா ஆகிய பகுதிகள் மழையைப் பெறுகின்றன.	இப்பருவத்தில் பீகார், மேற்கு வங்காளம் மற்றும் அசாம் மாநிலங்கள் இடியுடன் கூடிய குறுகிய கால மழையைப் பெறுகின்றன.

5. கிழக்கு இமயமலைக்காடுகள் மற்றும் மேற்கு இமயமலைக்காடுகள்.

கிழக்கு இமயமலைக்காடுகள்	மேற்கு இமயமலைக்காடுகள்
வடகிழக்கு இந்திய மாநிலங்களில் உள்ள கிழக்கு இமயமலைச் சரிவுகளில் இவை காணப்படுகின்றன.	ஜம்மு–காஷ்மீர், இமாச்சலப்பிரதேசம், உத்ரகாண்ட் போன்ற மாநிலங்களில் இக்காடுகள் காணப்படுகின்றன.
200 செ.மீட்டருக்கும் அதிகமான மழைப் பொழிவைப் பெறுகின்றன.	மிதமான மழைப்பொழிவையே பெறுகின்றன.
இவை பசுமை மாறாக் காடுகள் வகையைச் சார்ந்தவை ஆகும்.	இவை அரை பாலைவன தாவரக் காட்டு வகையைச் சார்ந்தவையாகும்.
இங்கு சால், ஓக், லாரஸ், சில்வர், பெர், பைன், ஸ்புரூஸ், செஸ்ட்நெட் போன்ற மரங்கள் காணப்படுகின்றன.	சால், சீமொல், டாக், ஜாமுன், ஜீஜீபி ஆகியன இங்குள்ள முக்கிய மரங்களாகும்.

VIII. காரணம் கூறுக.

பாடநூல் வினாக்கள்

1. மேற்குக் கடற்கரைச் சமவெளி குறுகலானது

காரணம்:

- கடற்கரை ஓரமாக உள்ள உப்பங்கழிகளும் (காயல்கள்), உப்பங்கழிகளை ஒட்டிய மணல் மேடுகளும், ஏரிகளும், மேலும் வண்டல் படிவுகள் இல்லாமையும் காரணமாகும்.

2. இந்தியா அயன மண்டலப் பருவக் காற்றுக் காலநிலையைப் பெற்றுள்ளது.

காரணம்:

- இந்தியாவின் பெரும் பகுதி அயன மண்டலப்பகுதியில் அமைந்துள்ளது.
- இமயமலைகள் மத்திய ஆசியாவிலிருந்து வீசும் கடும் குளிர்காற்றை தடுத்து, இந்திய துணைக் கண்டத்தை வெப்பப்பகுதியாக வைத்திருக்கிறது.
- இதனால் இந்தியா அயன (வெப்ப) மண்டல பருவக்காற்றுக் காலநிலையைப் பெற்றுள்ளது.

3. மலைப்பகுதிகள் சமவெளிகளை விட குளிரானவை. **PTA**

காரணம்:

- புவிப்பரப்பிலிருந்து உயரே செல்ல செல்ல வளிமண்டலத்தில் ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் 6.5°என்ற அளவில் வெப்பநிலை குறைகிறது. எனவே சமவெளிப் பகுதிகளைக் காட்டிலும் மலைப்பகுதிகள் குளிராக உள்ளன.

கூடுதல் வினாக்கள்

4. தீபகற்ப இந்தியப் பகுதி முழுவதும் நிலவும் காலநிலை கடல்சார் ஆதிக்கத்தைக் கொண்டுள்ளது.

காரணம்:

- தீபகற்ப இந்தியா கடலிலிருந்து வெகுதொலைவில் இல்லை என்பதே இதற்குக் காரணம் ஆகும்.

5. தமிழ்நாடு தென்மேற்குப் பருவக்காற்றால் அதிக மழையைப் பெறுவதில்லை.

காரணம்:

- தமிழ்நாடு தென்மேற்குப் பருவகாற்றின் மழை மறைவுப் பகுதியில் அமைந்துள்ளதே இதற்குக் காரணம் ஆகும்.

IX. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. தென்மேற்குப் பருவக்காற்று குறித்து எழுதுக. **PTA**

காலம்:

- இந்திய காலநிலையின் முக்கிய அம்சமான விளங்கும் தென்மேற்கு பருவக்காற்று காலம் ஜுன் முதல் செப்டம்பர் வரையாகும்.

பருவக்காற்றின் துவக்கம்:

- இப்பருவக்காற்று பொதுவாக ஜுன் முதல் வாரத்தில் இந்தியாவின் தென்பகுதியில் தொடங்கி கொங்கணக் கடற்கரைக்கு ஜுன் இரண்டாம் வாரத்திலும், அனைத்து இந்தியப் பகுதிகளுக்கும் ஜுலை 15 லும் முன்னேறுகிறது.
- இப்பருவக் காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் "பருவமழை வெடிப்பு" எனப்படுகிறது. இது இந்தியாவின் வெப்பநிலையை பெருமளவில் குறைக்கிறது.
- இக்காற்று இந்தியாவின் தென்முனையை அடையும் பொழுது இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. அவை அரபிக்கடல் கிளை மற்றும் வங்காளவிரிகுடா கிளை என்பனவாகும்.

அரபிக்கடல் கிளை:

- தென்மேற்கு பருவக்காற்றின் அரபிக்கடல் கிளை மேற்குத் தொடர்ச்சி மலையின் மேற்குச் சரிவுகளில் மோதி பலத்த மழைப் பொழிவைத் தருகிறது.
- இக்கிளையானது வடக்கு நோக்கி நகர்ந்து இமயமலையால் தடுக்கப்பட்டு வட இந்தியா முழுவதும் கனமழையைக் கொடுக்கிறது.
- ஆரவல்லி மலைத் தொடர் இக்காற்று வீசும் திசைக்கு இணையாக அமைந்துள்ளதால் இராஜஸ்தான் மற்றும் வட இந்தியாவின் மேற்குப் பகுதிக்கு மழைப்பொழிவை தருவதில்லை.

வங்காள விரிகுடா கிளை:

- வங்காள விரிகுடா கிளை, வடகிழக்கு இந்தியா மற்றும் மியான்மரை நோக்கி வீசுகிறது.
- இது காசி, காரோ, ஜெயந்தியா குன்றுகளால் தடுக்கப்பட்டு மேகாலயாவில் உள்ள மௌசின்ராமில் மிக கனமழையைத் தருகிறது.
- பிறகு இக்காற்று கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நகரும் போது மழைப்பொழிவின் அளவு குறைந்து கொண்டே செல்கிறது.
- இந்தியாவின் ஒட்டுமொத்த மழைப்பொழிவில் 75% மழைப்பொழிவானது இப்பருவக்காற்று காலத்தில் கிடைக்கிறது.
- தமிழ்நாடு மழை மறைவுப் பகுதியில் அமைந்துள்ளதால் குறைவான மழையைப் பெறுகிறது.

2. இந்திய காடுகள் பற்றி விவரிக்கவும். **PTA**

அயன மண்டல பசுமைமாறாக் காடுகள்:

- ஆண்டு மழைப்பொழிவு 200 செ.மீட்டருக்கும் மேலும் ஆண்டு வெப்பநிலை 22 °C க்கு அதிகமாகவும் உள்ள பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன.
- கேரளா, கர்நாடகா, மகாராஷ்ட்ரா, அந்தமான் நிக்கோபர் தீவுகள், அசாம், மேற்குவங்காளம், நாகலாந்து, திரிபுரா, மிசோரம், மணிப்பூர் மற்றும் மேகாலயா ஆகிய பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன.
- இரப்பர், எபனி, ரோஸ்மரம், தென்னை, மூங்கில், சின்கோனா, சிடார் போன்ற மரங்கள் இங்கு காணப்படுகின்றன.

அயன மண்டல இலையுதிர்க் காடுகள்:

- ஆண்டு சராசரி மழைப்பொழிவு சுமார் 100 செ.மீ முதல் 200 செ.மீ வரையுள்ள பகுதிகளில் இக்காடுகள் காணப்படுகின்றன.
- இக்காடுகளிலுள்ள மரங்கள் வசந்த காலத்திலும் கோடைகாலத்தின் முற்பகுதியிலும் வறட்சியின் காரணமாக இலைகளை உதிர்த்து விடுகின்றன. எனவே இக்காடுகள் இலையுதிர்க் காடுகள் என அழைக்கப்படுகின்றன.
- இமயமலைக்கு அருகில் உள்ள பஞ்சாப் முதல் அசாம் வரையிலான பகுதிகள் வடசமவெளிகள், மத்திய இந்தியா மற்றும் தென் இந்தியா போன்ற பகுதிகளில் இக்காடுகள் காணப்படுகின்றன.
- தேக்கு, சால், சந்தனமரம், ரோஸ்மரம், குசம், மாகு, பாலாங், ஆம்லா, மூங்கில், சிசம் மற்றும் படாக் போன்ற பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மரங்கள் இக்காடுகளில் வளர்கின்றன.

அயன மண்டல வறண்ட காடுகள்:

- ஆண்டு மழைப்பொழிவு 50 செ.மீ முதல் 100 செ.மீ வரை உள்ள பகுதிகளில் அயன மண்டல வறண்ட காடுகள் காணப்படுகின்றன. இவை ஒரு இடைநிலை வகைக் காடுகளாகும்.
- இக்காடுகளில் இலுப்பை, ஆலமரம், பலா, மஞ்சக்கடம்பு, கருவேலம் மற்றும் மூங்கில் ஆகியவை முக்கிய மரவகைகளாகும்.

முட்புதர் காடுகள்:

- பாலைவன மற்றும் அரைப் பாலைவனத் தாவரங்களை"முட்புதர் காடுகள்" என்றும் அழைப்பர்.
- இவை ஆண்டு சராசரி மழைப்பொழிவு 50 செ.மீட்டருக்கு குறைவாகவும், அதிக வெப்பமும் குறைவான ஈரப்பதமும் கொண்ட பகுதிகளில் காணப்படுகின்றன.
- கருவேல மரம், ஈச்சமரம் போன்ற மரங்கள் இக்காடுகளில் வளர்கின்றன.

மலைக்காடுகள்:

- உயரம் மற்றும் மழையளவின் அடிப்படையில் இக்காடுகள் மேற்கு இமயமலைக் காடுகள் மற்றும் கிழக்கு இமயமலைக்காடுகள் என இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளன.
- கிழக்கு இமயமலைக் காடுகள், வட கிழக்கு இந்திய மாநிலங்களிலுள்ள இமயமலைச் சரிவுகளில் காணப்படுகின்றன. இவை 200 செ.மீட்டருக்கும் அதிகமான மழைப் பொழிவைப் பெறுகின்றன.
- மேலும் இவை பசுமை மாறாக் காடுகள் வகையை சார்ந்தவை.
- மேற்கு இமயமலைக்காடுகள் ஜம்மு–காஷ்மீர், இமாச்சல பிரதேசம், உத்ரகாண்ட் போன்ற மாநிலங்களில் மிதமான மழைப்பொழிவுள்ள பகுதிகளில் காணப்படுகின்றன.

அல்பைன் காடுகள்:

- சுமார் 2400 மீட்டருக்கு மேல் உள்ள இமயமலைகளின் உயரமான பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன.
- இவை ஊசியிலை மரங்களைக் கொண்டுள்ளன. கிழக்கு இமயமலைப் பகுதியில் இவ்வகையான காடுகள் பரந்த அளவில் உள்ளன.

ஓத அலைக்காடுகள்:

- இக்காடுகள் டெல்டாக்கள், பொங்கு முகங்கள் மற்றும் கடற்கழிமுகப் பகுதிகளில் காணப்படுகின்றன.
- இவை ஓதங்களின் ஆதிக்கத்திற்கு உள்ளாவதால் சதுப்பு நிலக்காடுகள் மற்றும் டெல்டா காடுகள் எனவும் அழைக்கப்படுகின்றன.
- இவ்வகை ஓதக்காடுகள் 'மாங்குரோவ் காடுகள்' என்றும் அழைக்கப்படுகின்றன.

கடற்கரையோரக் காடுகள்:

- இவை கடற்கரைக் காடுகள் எனவும் அழைக்கப்படுகின்றன. இங்கு சவுக்கு, பனை, தென்னை ஆகியவை முதன்மையானதாகும்.
- இவை இந்தியாவின் மேற்கு மற்றும் கிழக்கு கடற்பகுதியின் கரைப்பகுதிகளிலும் காணப்படுகின்றன. குறிப்பாக கேரளா மற்றும் கோவா பகுதிகளில் இவ்வகைக் காடுகள் அதிகமாக உள்ளன.

நதிவனப்பகுதி (ஆற்றங்கரைக் காடுகள்)

- இக்காடுகள் கங்கை, யமுனை நதிபாயும் பகுதிகளில் குறிப்பாக காதர் பகுதிகளில் காணப்படுகின்றன.
- இவை பசுமையான புதர் தாவரங்கள் மற்றும் புளியமரம் போன்றவற்றிற்கு பெயர் பெற்றவை.
- வடபெரும் சமவெளி பகுதிகளிலுள்ள ஆற்றுப்பகுதிகளில் இவ்வகைத் தாவரங்கள் அதிகம் காணப்படுகின்றன.

3. இந்தியாவில் உள்ள உயிர்கோள பெட்டகங்கள் மற்றும் அவைகளின் அமைவிடங்களை எழுதுக.

உயிர்க்கோள பெட்டகம்:

- உயிர்க்கோள பெட்டகம் என்பது நிலம் மற்றும் கடலோர சுற்றுச்சூழலைப் பாதுகாக்க ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும்.
- இந்திய அரசாங்கம் 18 உயிர்க்கோள பெட்டகங்களை (காப்பகங்கள்) ஏற்படுத்தியுள்ளது.
- இவற்றின் பணி இயற்கை வாழ்விடத்தில் பெரும்பகுதிகளைப் பாதுகாத்தல், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தேசிய பூங்காக்களைப் பாதுகாத்தல் போன்றவற்றை ஆகும்.

உயிர்க்கோள பெட்டகங்களும் அவற்றின் அமைவிடங்களும்:

வரிசை எண்	உயிர்க்கோள காப்பகங்கள்	மாநிலம்
1.	அகத்தியமலை	கேரளா
2.	மன்னார் வளைகுடா	தமிழ்நாடு
3.	நீலகிரி	தமிழ்நாடு
4.	கட்ச்	குஜராத்
5.	சுந்தரவனம்	மேற்குவங்காளம்
6.	பெரிய நிக்கோபர்	அந்தமான் நிக்கோபர் தீவுகள்
7.	கஞ்சன்ஜங்கா	சிக்கிம்
8.	நந்தா தேவி	உத்ரகாண்ட்
9.	குளிர்பாலைவனம்	இமாச்சலப்பிரதேசம்
10.	பன்னா	மத்தியப்பிரதேசம்
11.	மானாஸ்	அசாம்
12.	திப்ரு செய்கொவா	அசாம்
13.	திகேங்திபங்	அருணாச்சலபிரதேசம்
14.	நாக்ரெக்	மேகாலயா
15.	பச்மாரி	மத்தியபிரதேசம்
16.	சிம்லிபால்	ஒடிசா
17.	சேஷாசலம் குன்றுகள்	ஆந்திரப்பிரதேசம்
18.	அச்சனக்மர், அமர்கண்டாக்	மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கர்

கூடுதல் வினாக்கள்

4. வடகிழக்குப் பருவக்காற்றினை விவரி.

- வடகிழக்குப் பருவக்காற்று அக்டோபர் முதல் டிசம்பர் வரை வீசுகிறது.
- செப்டம்பர் மாத இறுதியில் அழுத்த மண்டலமானது புவியின் தெற்குநோக்கி நகர ஆரம்பிப்பதால் தென்மேற்குப் பருவக்காற்று பின்னடையும் பருவக்காற்றாக நிலப்பகுதியிலிருந்து வங்காள விரிகுடா கடலை நோக்கி வீசுகிறது.
- பூமி சுழல்வதால் ஏற்படும் விசையின் காரணமாக காற்றின் திசை மாற்றப்பட்டு வடகிழக்கிலிருந்து வீசுகிறது. எனவே இக்காற்று வடகிழக்குப் பருவக்காற்று என அழைக்கப்படுகிறது.
- இப்பருவக்காற்றின் மூலம் கேரளா, ஆந்திரா, தமிழ்நாடு மற்றும் தென் கர்நாடகாவின் உட்பகுதிகள் நல்ல மழைப்பொழிவைப் பெறுகின்றன.
- இப்பகுதிகள் மொத்த மழைப்பொழிவில் 35 சதவீதத்தைப் பெறுகின்றன. வங்கக் கடலில் உருவாகும் புயலால் தமிழ்நாட்டின் பல பகுதிகளும் ஆந்திரா மற்றும் கர்நாடகாவின் சில பகுதிகளும் மழையைப் பெறுகின்றன.
- கடற்கரைப் பிரதேசங்களில் கன மழையுடன் கூடிய பலத்த புயல்காற்று, பெரும் உயிர்ச்சேதத்தையும் பொருட்சேதத்தையும் ஏற்படுத்துகிறது.

5. வன உயிரினங்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

- இயற்கை சூழ்நிலை அல்லது காடுகளை வாழிடமாகக் கொண்டு வாழும் விலங்குகள் வன உயிரினங்கள் எனப்படுகின்றன.
- வன உயிரினங்கள் இரு பிரிவுகளை உள்ளடக்கியது. அவை முதுகெலும்பு உள்ளவை மற்றும் முதுகெலும்பு இல்லாதவை என்பனவாகும்.
- இந்தியா அதிக வன உயிரினங்களையும், வன உயிரின வகைகளையும் கொண்ட நாடு ஆகும்.
- உலகிலுள்ள 1.5 மில்லியன் வன விலங்கு வகை உயிரினங்களில் இந்தியாவில் மட்டும் 81,251 க்கும் மேற்பட்ட வனவிலங்கு வகைகள் உள்ளன.
- புலி, சிங்கம், சிறுத்தை, பனி சிறுத்தை, மலைப்பாம்பு, நரி, ஓநாய், கரடி, முதலை, காண்டாமிருகம், நீர்யானை, ஒட்டகம், வரிக்குதிரை, காட்டுநாய், குரங்கு, பாம்பு, மான்வகை, காட்டு எருமை வகை, வலிமை மிக்க யானை வகை போன்ற வனவிலங்குகளின் வாழிடமாக இந்தியா திகழ்கிறது.
- வேட்டையாடுதல், காடழிப்பு மற்றும் மனித குறுக்கீட்டால், வன விலங்குகளின் வாழிடங்கள் அழிக்கப்பட்டு பல உயிரினங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன.
- இச்சூழலில் வன உயிரினங்களின் பன்மைத் தன்மையைப் பாதுகாப்பது நம் நாட்டிற்கு அத்தியாவசியமான ஒன்றாகும்.

X. உயர் சிந்தனை வினா

பாடநூல் வினா

1. மௌசின்ராம் உலகிலேயே மிக அதிக மழை பெறும் பகுதியாக உள்ளது. ஏன்?

- மௌசின்ராம், ஷில்லாங் நகரிலிருந்து 60 கிமீ தொலைவில் உள்ளது, காசி மலைத்தொடரிலிருந்து சுமார் 2000 அடி உயரத்தில் உள்ளது,
- ஆண்டின் சராசரி மழையளவு 11,871 மி.மீ வங்காள விரிகுடாவில் இருந்து வடக்கு நோக்கி நகரும் ஈரப்பதமான பருவக்காற்று காசி மலைதொடரில் குவிந்து மேக மூட்டத்தை ஏற்படுத்துகிறது. பின் குளிர்ந்து மழையாக பொழிகிறது. ஆண்டு முழுவதும் மழைபொழிவு இருந்து கொண்டே இருப்பதால் மௌசின்ராம் உலகிலேயே மிக அதிக மழை பெறும் பகுதியாக உள்ளது.

வரைபடம்

இந்தியா – தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவகாற்று





இந்தியா – இயற்கை தாவரங்கள்



இந்தியா – வனவிலங்கு சரணாலயம்



புவியியல்

இந்தியா – உயிர்க்கோள காப்பகங்கள்



அலகு புவியியல்

3 வேளாண்மைக் கூறுகள்

கூட்டு வேளாண்மை



இளம் புரட்சியின் உற்பத்தி

வெங்காயம்

மருந்துபொருட்கள்

இறால்

மஞ்சள் புரட்சியின் உற்பத்திகள்

கடுகு

எண்ணெய் வித்துக்கள்

சூரியகாந்தி

மண்ணின் அமைப்பு மற்றும் அதன் செல்வாக்கு → மண் வகைகளில் நீர் கொள்திறன்

இந்திய அரசாங்கம்
- நீர் பயன்பாடு அதிகரிக்க
- பொருத்தமான ஊக்குவிப்பு மூலம்
- தொழில்நுட்ப கண்டுபிடிப்பு
- நவீன நீர்ப் பாசன முறைகள்
  - சொட்டுநீர்ப் பாசனம்
  - தெளிப்புப் பாசனம்
  - மையச்சுழற்சி நீர்ப்பாசனம்

கரும்பு உற்பத்தியாளர் சந்திக்கும் பிரச்சனைகள்
- நீர்ப்பாசனமின்மை
- நிலப்பற்றாக்குறை
- நீர்த்தட்டுப்பாடு
- அதிக உள்ளீடு முதலீடு தேவை

நினைவில் கொள்க

- வளங்களில் மிக முக்கிய வளமாகக் கருதப்படுவது **மண் வளம்** ஆகும்.
- தக்காணப் பகுதியில் உள்ள பசால்ட் பாறைகளிலிருந்து உருவான மண் **கரிசல் மண்.**
- வேளாண் பயிர்களுக்கு செயற்கை முறையில் நீரைக்கொண்டு செல்லும் முறைக்கு **நீர்ப்பாசனம்** என்று பெயர்.
- நம் நாட்டின் மலிவான மற்றும் நம்பகமான நீர்ப்பாசன ஆதாரமாக உள்ளது **கிணற்றுப் பாசனம்** ஆகும்.
- ஆறுகளின் குறுக்கே பல்வேறு நோக்கங்களுக்காக அணைகளைக் கட்டுவதால் இவை **பல்நோக்கு ஆற்றுப்பள்ளத்தாக்குத் திட்டங்கள்** என்று அழைக்கப்படுகின்றன.
- உலகின் மிக நீளமான அணை **ஹிராகுட்** (மகாநதி) ஆகும். உலகின் பெரிய புவி ஈர்ப்பு அணை **பக்ரா நங்கல்** (சட்லஜ்) ஆகும்.
- **காரிஃப், ராபி** மற்றும் **சையத்** போன்றவை இந்தியாவின் முக்கிய வேளாண் பயிர் பருவங்களாகும்.
- இயந்திரங்கள் மற்றும் பல்வேறு நவீன யுக்திகள் மூலம் பயிர் உற்பத்தியை அதிகப்படுத்துவது **தீவிர வேளாண்மை** எனப்படும்.
- இந்தியாவின் பூர்வீகப் பயிர் **நெல்.** நெல் உற்பத்தியில் உலகளவில் சீனாவிற்கு அடுத்தபடியாக **இந்தியா** இரண்டாமிடம் வகிக்கிறது.
- ஏழைகளின் மலிவான உணவாக விளங்கும் சோளம், கம்பு, ஆகியவை **ஆப்பிரிக்காவை** பூர்வீகமாகக் கொண்ட பயிர்களாகும்.
- பருப்பு வகைகள் அவரை இனத்தைச் சார்ந்த பல பயிர்களை உள்ளடக்கியது. உலகில் அதிக பருப்பு உற்பத்தி செய்யும் நாடு **இந்தியா.**
- தங்க இழைப்பயிர் என அழைக்கப்படுவது **சணல்.** சணல் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மாநிலம் **மேற்கு வங்காளம்.**
- தேயிலை உற்பத்தியில் **அசாம்**, காப்பி உற்பத்தியில் **கர்நாடகம்** முதலிடம் வகிக்கின்றன.
- "ஏழைகளின் பசு" என்று அழைக்கப்படுவது **வெள்ளாடு**
- கடல்மீன் உற்பத்தியில் முதன்மையானதாக விளங்கும் மாநிலம் **கேரளா.**

வரைபட வினாக்களுக்கான முக்கிய பகுதிகள்

தலைப்பு	முக்கிய பகுதிகள்
மண் வகைகள்	வண்டல் மண், கரிசல் மண், செம்மண், சரளை மண், மலை மண், பாலை மண்.
நீர்த்தேக்கங்கள் (பல்நோக்குத் திட்டங்கள்)	பக்ராநங்கல், ஹிராகுட், மேட்டூர், இடுக்கி, சம்பல், தாமோதர், நாகார்ஜுன சாகர், துங்கபத்ரா, நர்மதா.
வேளாண் பயிர்கள்	கோதுமை, நெல், கரும்பு, சணல், தேயிலை, காப்பி, ரப்பர், பருத்தி
மீன் பிடி மையங்கள்	தூத்துக்குடி, சென்னை, கொச்சி, மும்பை, மசூலிப்பட்டினம், மங்களூர், கோவா, பாம்பன், காண்ட்லா, விசாகப்பட்டினம், சில்கா ஏரி.

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. __________ மண்ணில் இரும்பு ஆக்ஸைடு அதிகமாக காணப்படுகிறது.
   அ) வண்டல் ஆ) கரிசல் இ) செம்மண் ஈ) உவர் மண்

2. எந்த நிறுவனம் இந்தியாவில் உள்ள மண் வகைகளை 8 பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளது?
   அ) இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் ஆ) இந்திய வானியல் துறை
   இ) இந்திய மண் அறிவியல் நிறுவனம் ஈ) இந்திய மண் ஆய்வு நிறுவனம்

3. ஆறுகளின் மூலம் உருவாகும் மண்
   அ) செம்மண் ஆ) கரிசல் மண் இ) பாலைமண் ஈ) வண்டல் மண்

4. இந்தியாவின் உயரமான புவிஈர்ப்பு அணை
   அ) ஹிராகுட் அணை ஆ) பக்ராநங்கல் அணை
   இ) மேட்டூர் அணை ஈ) நாகர்ஜுனா சாகர் அணை

5. __________ என்பது ஒரு வாணிபப்பயிர்.
   அ) பருத்தி ஆ) கோதுமை
   இ) அரிசி ஈ) மக்காச் சோளம்

6. கரிசல் மண் __________ எனவும் அழைக்கப்படுகிறது.
   அ) வறண்ட மண் ஆ) உவர் மண்
   இ) மலை மண் ஈ) பருத்தி மண்

7. உலகிலேயே மிக நீளமான அணை
   அ) மேட்டூர் அணை ஆ) கோசி அணை
   இ) ஹிராகுட் அணை ஈ) பக்ராநங்கல் அணை

8. இந்தியாவில் அதிகம் நெல் விளையும் மாநிலம்
   அ) பஞ்சாப் ஆ) மகாராஷ்டிரா
   இ) உத்தரப்பிரதேசம் ஈ) மேற்கு வங்காளம்

9. இந்தியாவில் தங்க இழைப் பயிர் என அழைக்கப்படுவது **PTA**
   அ) பருத்தி ஆ) கோதுமை
   இ) சணல் ஈ) புகையிலை

10. காபி அதிகம் உற்பத்தி செய்யும் மாநிலம்
   அ) மேற்கு வங்கம் ஆ) கர்நாடகா
   இ) ஒடிசா ஈ) பஞ்சாப்

கூடுதல் வினாக்கள்

11. வளங்களில் மிக முக்கிய வளமாகக் கருதப்படுவது
   அ) மண்வளம் ஆ) காட்டுவளம்
   இ) தாதுவளம் ஈ) நீர் வளம்

12. நெல் மற்றும் கோதுமை விளைவதற்கு ஏற்ற மண்
   அ) கரிசல் மண் ஆ) செம்மண்
   இ) வண்டல் மண் ஈ) சரளை மண்

13. கரிசல் மண் அதிகமாகக் காணப்படும் பகுதி
   அ) பஞ்சாப் ஆ) மகாராஷ்டிரம்
   இ) கேரளா ஈ) பீகார்

14. புவியில் செங்குத்தாக தோண்டப்படும் பள்ளம்
   அ) ஏரி ஆ) கால்வாய்
   இ) அணை ஈ) கிணறு

15. இந்தியாவின் மிகப் பழமையான பாசன முறை
   அ) கிணற்றுப் பாசனம் ஆ) ஏரிப் பாசனம்
   இ) கால்வாய் பாசனம் ஈ) சொட்டு நீர்ப்பாசனம்

16. இந்திரா காந்தி கால்வாய் திட்டம் அமைந்திருக்கும் நதி
அ) தாமோதர் நதி ஆ) மகாநதி
இ) நர்மதை நதி ஈ) சட்லஜ் நதி

17. "பீகாரின் துயரம்" என அழைக்கப்படும் ஆறு
அ) கோசி ஆ) கண்டகி
இ) சம்பல் ஈ) யமுனை

18. காவேரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணை
அ) மேட்டூர் ஆ) வைகை
இ) பக்ரா நாங்கல் ஈ) சர்தார் சரோவர்

19. மலைப்பிரதேசங்களில் பின்பற்றப்படும் வேளாண்மை முறை
அ) தீவிர வேளாண்மை ஆ) கலப்பு வேளாண்மை
இ) படிக்கட்டு முறை ஈ) இடப்பெயர்வு வேளாண்மை

20. காய்கறிகள், பழங்கள் பயிரிட ஏற்ற பருவம்
அ) காரிஃப் பருவம் ஆ) ராபி பருவம்
இ) குளிர் பருவம் ஈ) சையத் பருவம்

21. நெல் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு
அ) சீனா ஆ) இந்தியா
இ) பிரேசில் ஈ) ஜப்பான்

22. நெல் பயிருக்கு அடுத்தாற்போல் இரண்டாவது முக்கிய உணவுப்பயிராக விளங்குவது
அ) சோளம் ஆ) கோதுமை
இ) வாற்கோதுமை ஈ) கம்பு

23. உலகில் அதிக பருப்பு உற்பத்தி செய்யும் நாடு
அ) இந்தியா ஆ) சீனா
இ) பாகிஸ்தான் ஈ) கொரியா

24. இந்தியாவின் மிக முக்கியமான வாணிபப்பயிர்
அ) புகையிலை ஆ) கரும்பு
இ) பருத்தி ஈ) சணல்

25. கரும்பு உற்பத்தியில் இந்தியாவின் முதன்மை மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) பீகார்
இ) கர்நாடகா ஈ) உத்திரப்பிரதேசம்

26. மேற்கு வங்காளத்தில் பயிரிடப்படும் முக்கிய பயிர்
அ) பருத்தி ஆ) கரும்பு
இ) சணல் ஈ) காப்பி

27. இந்தியாவில் தேயிலை உற்பத்தி செய்யும் முதன்மை மாநிலம்
அ) அசாம் ஆ) கேரளா
இ) தமிழ்நாடு ஈ) பீகார்

28. முதன் முதலில் இரப்பர் தோட்டம் உருவாக்கப்பட்ட மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரப் பிரதேசம்
இ) கேரளா ஈ) கர்நாடகா

29. கடல்மீன் உற்பத்தியில் முதன்மையான மாநிலம்
அ) கேரளா ஆ) ஆந்திரப்பிரதேசம்
இ) குஜராத் ஈ) மேற்கு வங்காளம்

30. உள்நாட்டு மீன் பிடித்தலில் முதன்மை மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரப்பிரதேசம்
இ) குஜராத் ஈ) ஒடிசா

விடைகள்

1. இ) செம்மண்	2. அ) இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்
3. ஈ) வண்டல் மண்	4. ஆ) பக்ராநங்கல் அணை
5. அ) பருத்தி	6. ஈ) பருத்தி மண்
7. இ) ஹிராகுட் அணை	8. ஈ) மேற்கு வங்காளம்
9. இ) சணல்	10. ஆ) கர்நாடகா
11. அ) மண் வளம்	12. இ) வண்டல் மண்
13. ஆ) மகாராஷ்டிரம்	14. ஈ) கிணறு
15. ஆ) ஏரிப்பாசனம்	16. ஈ) சட்லஜ் நதி
17. அ) கோசி	18. அ) மேட்டூர்
19. இ) படிக்கட்டு முறை	20. ஈ) சையத் பருவம்
21. அ) சீனா	22. ஆ) கோதுமை
23. அ) இந்தியா	24. ஆ) கரும்பு
25. ஈ) உத்திரப்பிரதேசம்	26. இ) சணல்
27. அ) அசாம்	28. இ) கேரளா
29. அ) கேரளா	30. ஆ) ஆந்திரப்பிரதேசம்

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

கூடுதல் வினாக்கள்

1. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் தொடங்கப்பட்ட ஆண்டு ___________
2. ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்க வைத்துக் கொள்ளும் தன்மையுடைய மண் ___________
3. காப்பி, இரப்பர் பயிரிட ஏற்ற மண் ___________
4. வேளாண் பயிர்களுக்கு செயற்கை முறையில் நீரைக் கொண்டு செல்லும் முறைக்கு ___________ என்று பெயர்.
5. நமது நாட்டின் மலிவான மற்றும் நம்பகமான நீர்ப்பாசன முறை ___________
6. புவியின் மேற்பகுதியில் மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு தாழ்வான நீர் தேங்கும் பள்ளம் ___________ எனப்படும்.
7. தாவரங்களின் வேர்ப்பகுதிகளுக்கு பாய்ச்சும் பாசன முறை ___________
8. தெகிரி அணை ___________ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
9. பழங்குடி இன மக்களால் காடுகளில் செய்யப்படும் சாகுபடி முறைக்கு ___________ என்று பெயர்.
10. இந்தியாவின் பூர்வீகப் பயிர் ___________
11. ஆப்பிரிக்காவை பூர்வீகமாகக் கொண்ட பயிர்கள் ___________ மற்றும் ___________
12. சர்க்கரை உற்பத்தியில் உலகில் முதலிடம் வகிக்கும் நாடு ___________
13. இந்தியர்களின் உணவில் கொழுப்பு சத்தை அதிகம் அளிப்பது ___________ ஆகும்.
14. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மாநிலம் ___________
15. காப்பி உற்பத்தியில் முதன்மையான உற்பத்தியாளராகத் திகழும் மாநிலம் ___________
16. மீன் உற்பத்தியைக் குறிக்கும் புரட்சி ___________
17. அனைத்து வேளாண் உற்பத்தியை குறிக்கும் புரட்சி ___________
18. ஆற்றுச் சமவெளியில் காணப்படும் புதிய வண்டல் மண் ___________
19. புவிப்பரப்பின் மேல் அடுக்கு மண் அகற்றப்படுதல் ___________ எனப்படும்.
20. பல்வேறு நோக்கங்களுக்காக ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதை ___________ என்கிறோம்.

விடைகள்

1. 1953	2. கரிசல் மண்
3. சரளை மண்	4. நீர்ப்பாசனம்
5. கிணற்றுப் பாசனம்	6. ஏரி
7. சொட்டு நீர் பாசனம்	8. பகிரதி
9. இடப்பெயர்வு வேளாண்மை	10. நெல்
11. சோளம், கம்பு	12. கியூபா
13. எண்ணெய் வித்துக்கள்	14. குஜராத்
15. கர்நாடகம்	16. நீலப்புரட்சி
17. பசுமைப்புரட்சி	18. காதர்
19. மண் அரிப்பு	20. பல்நோக்குத் திட்டம்

III. சரியான கூற்றை கண்டுபிடிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. கூற்று : பழங்கள் காய்வகைகள் மற்றும் பூக்கள் பயிரிடலில் ஈடுபடுவது தோட்டக்கலை துறையாகும்.
   காரணம் : உலகளவில் இந்தியா மா, வாழை மற்றும் சிட்ரஸ் பழவகை உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது. **PTA**
   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
   ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கம் அல்ல.
   இ) கூற்று சரி, காரணம் தவறு
   ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

2. கூற்று : வண்டல் மண் ஆறுகளின் மூலம் அரிக்கப்பட்டு படியவைக்கப்பட்ட, மக்கிய பொருட்களால் ஆன ஒன்று.
   காரணம் : நெல் மற்றும் கோதுமை வண்டல் மண்ணில் நன்கு வளரும்.
   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
   ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கம் அல்ல.
   இ) கூற்று சரி, காரணம் தவறு
   ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

கூடுதல் வினாக்கள்

3. கூற்று : சிவப்பு நிறமுடைய செம்மண்
   காரணம் : இரும்பு மற்றும் மக்னீசியம் அதிகமாகக் காணப்படுகிறது.
   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
   ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கம் அல்ல.
   இ) கூற்று சரி, காரணம் தவறு
   ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

4. கூற்று : வெள்ளக் கால்வாய்களில் ஆற்றிலிருந்து நேரடியாக எவ்வித தடுப்பணைகளுமின்றி கால்வாய் மூலம் தண்ணீர் எடுக்கப்படுகிறது.
   காரணம் : வெள்ளக் காலங்களில் தண்ணீரை திசை திருப்ப பயன்படுகின்றன.
   அ) கூற்று சரி, காரணம் தவறு
   ஆ) கூற்று தவறு, காரணம் சரி
   இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
   ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்லை.

5. கூற்று : இந்தியாவில் கணிசமான அளவு விவசாயிகள் தன்னிறைவு வேளாண்மை முறையைப் பின்பற்றுகிறார்கள்.

காரணம் : தன்னிறைவு வேளாண்மையில் இயந்திரங்கள் மற்றும் நவீன யுத்திகளை பயன்படுத்த முடிகிறது.

அ) கூற்று மற்றும் காரணம் சரி
ஆ) கூற்று மற்றும், காரணம் தவறு
இ) கூற்று சரி, காரணம் தவறு
ஈ) கூற்று தவறு, காரணம் சரி

விடைகள்

1. இ) கூற்று சரி, காரணம் தவறு
2. அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்
3. அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
4. இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
5. இ) கூற்று சரி, காரணம் தவறு

IV. பொருந்தாத விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

பாடநூல் வினாக்கள்

1. அ) கோதுமை ஆ) நெல் இ) தினை வகைகள் ஈ) காபி
2. அ) காதர் ஆ) பாங்கர் இ) வண்டல் மண் ஈ) கரிசல் மண்
3. அ) வெள்ளப் பெருக்கு கால்வாய் ஆ) வற்றாத கால்வாய் இ) ஏரிப்பாசனம் ஈ) கால்வாய்

கூடுதல் வினாக்கள்

4. அ) சாக்குப்பை ஆ) ஜமுக்காளம் இ) கயிறு ஈ) துடைப்பான்
5. அ) ஆடு ஆ) எருமைமாடு இ) பன்றி ஈ) மயில்
6. அ) கோழிப்பண்ணை ஆ) மீன்பண்ணை இ) கால்நடை ஈ) தோல்பதனிடும் சாலை
7. அ) டீ ஆ) காபி இ) ரப்பர் ஈ) கோதுமை

விடைகள்

1. ஈ) காபி
2. ஈ) கரிசல் மண்
3. இ) ஏரிப்பாசனம்
4. ஈ) துடைப்பான்
5. ஈ) மயில்
6. ஈ) தோல்பதனிடும் சாலை
7. ஈ) கோதுமை

V. பொருத்துக:

பாடநூல் வினா

1. இந்தியாவின் சர்க்கரை கிண்ணம்	அ) மகாநதி		1) ஈ
2. காபி	ஆ) தங்கப் புரட்சி		2) இ
3. டெகிரி அணை	இ) கர்நாடகா		3) உ
4. ஹிராகுட்	ஈ) உத்திரப்பிரதேசம் மற்றும் பீகார்		4) அ
5. தோட்டக் கலை	உ) இந்தியாவின் உயரமான அணை		5) ஆ

அ) (விடை)

புவியியல்

கூடுதல் வினாக்கள்

ஆ)

1.	வண்டல் மண்	அ)	இரப்பர்
2.	கரிசல் மண்	ஆ)	ஆற்றுப் படுகைகள்
3.	செம்மண்	இ)	தீப்பாறைகள் சிதைவுறுதல்
4.	பாலை மண்	ஈ)	இரும்பு ஆக்ஸைடு
5.	மலை மண்	உ)	மணல்

விடை: 1) ஆ 2) இ 3) ஈ 4) உ 5) அ

இ)

1.	நெல்	அ)	பஞ்சாப்
2.	பருத்தி	ஆ)	கர்நாடகம்
3.	காப்பி	இ)	உத்திரப்பிரதேசம்
4.	கோதுமை	ஈ)	மகாராஷ்டிரம்
5.	கரும்பு	உ)	மேற்கு வங்காளம்

விடை: 1) உ 2) ஈ 3) ஆ 4) அ 5) இ

ஈ)

1.	பக்ரா நங்கல்	அ)	கிருஷ்ணா
2.	ஹிராகுட்	ஆ)	பெரியாறு
3.	நாகார்ஜுன சாகர்	இ)	சட்லஜ்
4.	மேட்டூர்	ஈ)	மகாநதி
5.	இடுக்கி	உ)	காவேரி

விடை: 1) இ 2) ஈ 3) அ 4) உ 5) ஆ

உ)

1.	ஆப்பிள்	அ)	தமிழ்நாடு
2.	ஆரஞ்சு	ஆ)	உத்திரகாண்ட்
3.	வாழைப்பழம்	இ)	இமாச்சலபிரதேசம்
4.	திராட்சைப்பழம்	ஈ)	கேரளா
5.	அன்னாசிப்பழம்	உ)	மகாராஷ்டிரம்

விடை: 1) இ 2) உ 3) அ 4) ஆ 5) ஈ

ஊ)

1.	நீலப்புரட்சி	அ)	வெங்காயம்
2.	வெண்புரட்சி	ஆ)	உணவு தானியங்கள்
3.	பசுமைப்புரட்சி	இ)	பால்
4.	செம்புரட்சி	ஈ)	மீன்
5.	இளஞ்சிவப்பு புரட்சி	உ)	தக்காளி

விடை: 1) ஈ 2) இ 3) ஆ 4) உ 5) அ

எ)

1.	தங்கபுரட்சி	அ)	எண்ணெய் வித்துக்கள்
2.	வெள்ளி புரட்சி	ஆ)	சணல்
3.	மஞ்சள் புரட்சி	இ)	பருத்தி
4.	தங்க இழைப் புரட்சி	ஈ)	முட்டை
5.	வெள்ளி இழைப்புரட்சி	உ)	தேன்

விடை: 1) உ 2) ஈ 3) அ 4) ஆ 5) இ

VI.கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. 'மண்' – வரையறு. **PTA**

- மண் என்பது கனிமங்களின் கூட்டுப் பொருட்கள், மக்கிய தாவரங்கள், விலங்கினப் பொருட்கள், காற்று மற்றும் நீர் ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும்.
- இது புவியின் மேற்பரப்பில் காணப்படும் நுண்ணிய துகள்களாலான ஒரு அடுக்காகும்.
- பல்வேறு காலநிலை சூழலில் பாறைகள் சிதைவடைவதால் மண் உருவாகிறது. இது பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபடும்.

2. இந்தியாவில் காணப்படும் மண் வகைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.

- வண்டல் மண்
- கரிசல் மண்
- செம்மண்
- சரளை மண்
- காடு மற்றும் மலை மண்
- வறண்ட பாலை மண்
- உப்பு மற்றும் காரமண்
- களிமண் மற்றும் சதுப்புநில மண்

3. கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளை எழுதுக.

- தக்காணப் பகுதியில் உள்ள பசால்ட் பாறைகளிலிருந்து உருவானது.
- கால்சியம், மக்னீசியம், கார்போனேட்டுகள், இரும்பு, அலுமினியம், சுண்ணாம்பு மற்றும் மாங்கனீசு ஆகியவை காணப்படுகின்றன.
- ஈரமாக இருக்கும்போது சேறாகவும், ஈரப்பதத்தை நீண்டநேரம் தக்கவைத்துக்கொள்ளும் தன்மையும் உடையது.
- பருத்தி விளைச்சலுக்கு மிகவும் ஏற்ற மண்.

4. பல்நோக்குத் திட்டம் என்றால் என்ன?

- பல்நோக்குத்திட்டம் என்பது ஒரு அறிவியல் முறையிலான நீர்வள மேலாண்மைத் திட்டமாகும்.
- ஆற்றின் குறுக்கே பல்வேறு நோக்கங்களுக்காக அணையைக் கட்டுவதால் இது பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டம் என்று அழைக்கப்படுகின்றன.
- நீர்ப்பாசனம், நீர்மின் உற்பத்தி, குடிநீர், வெள்ளத்தடுப்பு, தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்குதல், மீன்வள மேம்பாடு மற்றும் நீர் வழிப் போக்குவரத்து போன்றவை இதன் பல்வேறு நோக்கங்களாகும்.

5. 'வேளாண்மை' – வரையறு.

- வேளாண்மை என்பது குறிப்பிட்ட பயிர்களை உற்பத்தி செய்தும் கால்நடைகளை வளர்த்தும் மக்களுக்கு உணவையும் கால்நடைகளுக்கு தீவனத்தையும், நார் மற்றும் தேவையான இதர பொருட்களையும் வழங்குவதாகும்.

6. இந்தியாவின் வேளாண்மை முறைகளை குறிப்பிடுக.

- தன்னிறைவு வேளாண்மை
- இடப்பெயர்வு வேளாண்மை
- தீவிர வேளாண்மை
- வறண்ட நில வேளாண்மை
- கலப்பு வேளாண்மை
- படிக்கட்டு முறை வேளாண்மை

7. இந்திய வேளாண் பருவங்களைக் குறிப்பிடுக. PTA

1	காரிஃப் பருவம்	ஜூன் – செப்டம்பர்
2	ராபி பருவம்	அக்டோபர் – மார்ச்
3	சையத் பருவம்	ஏப்ரல் – ஜூன்

8. இந்தியாவின் தோட்டப் பயிர்களைக் குறிப்பிடுக. PTA

- தேயிலை, காபி, இரப்பர் மற்றும் வாசனை பொருட்கள்.

9. கால்நடைகள் என்றால் என்ன? PTA

- கால்நடைகள் இந்தியாவின் விவசாயத்தோடு ஒருங்கிணைந்த கூறுகள் ஆகும். கால்நடைகளின் பல்வேறு வகைப் பயன்பாடுகள் காரணமாக இவை சமூக மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகின்றன.
- ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை அளிப்பதன் மூலம் இவை உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்துகிறது.
- வேளாண்மை பொய்க்கும் பொழுது வேலை வாய்ப்பையும், வருவாயையும் அளிக்கின்றன. மேலும் நிலத்தை உழுவதற்கும், பயிர்களுக்கு உரம் அளிப்பவையாகவும் அவை விளங்குகின்றன.

10. இந்தியாவில் மீன்வளர்ப்பு பிரிவுகளைப் பற்றி ஒரு சுருக்கமான குறிப்பு தருக.

கடல் மீன்பிடிப்பு

- கடற்கரைப் பகுதி, கடற்கரையை ஒட்டிய பகுதி மற்றும் ஆழ்கடல் பகுதிகளில் 200 மீட்டர் ஆழம் வரை உள்ள கண்டத்திட்டு பகுதிகளில் மீன்பிடித்தல் நடைபெறுகிறது. இது கடல் மீன்பிடிப்பு எனப்படும். கேரளா கடல்மீன் உற்பத்தியில் முதன்மையானதாக உள்ளது.

உள்நாட்டு மீன்பிடிப்பு

- நீர்த்தேக்கங்களான ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள் குளங்கள் மற்றும் கண்மாய்கள் போன்ற நீர்நிலைகளில் நடைபெறும் நன்னீர் மீன்பிடிப்பு இவற்றில் அடங்கும்.
- நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் சுமார் 50 சதவீதம் உள்நாட்டு மீன் பிடித்தல் மூலம் கிடைக்கிறது.

கூடுதல் வினாக்கள்

11. இந்திய மண் வகைகள் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை?

- மண்ணரிப்பு
- மண் சீரழிவு
- நீர் தேங்குதல்
- உவர்ப்பு மற்றும் காரத்தன்மை
- உப்பு படிவுகள்.

12. மண்வளப் பாதுகாப்பு முறைகள் யாவை?

- காடுகளை உருவாக்குதல்
- அணைகள் மற்றும் குறுக்கணைகள் கட்டுதல்
- அதிக மேய்ச்சலைத் தடுத்தல்
- மேம்பட்ட பயிர்ச்சாகுபடி முறைகளைப் பின்பற்றுதல்
- நிலைத்த வேளாண் நுட்பத்தையும் மண் மேலாண்மைக்கு உகந்த பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றுதல் என்பனவாகும்.

13. மேம்பட்ட பயிர்ச்சாகுபடி முறைகள் யாவை?

- சம உயரம் உழுதல்
- படிக்கட்டு வேளாண்மை
- பயிர் சுழற்சி முறை
- பட்டை பயிரிடல்
- கரைகள் கட்டுதல்
- காற்றெதிர் திசையில் மரங்கள் நடல்

14. ஆழ்துளைக் கிணறு – குறிப்பு வரைக.

- ஆழ்துளைக் கிணற்றுப் பாசனம், நிலத்தடி நீர்மட்டம் குறைவாக உள்ள பகுதிகள், மின் மிகைப் பகுதிகள் மற்றும் மென்பாறைகள் கொண்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படுகிறது.
- குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப், மத்தியப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இப்பாசனம் அதிக அளவில் காணப்படுகிறது.

15. கலப்பு வேளாண்மை என்றால் என்ன?

- கலப்பு வேளாண்மை என்பது பயிரிடுதலுடன் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு போன்றவற்றை உள்ளடக்கியதாகும். விவசாயிகளின் பல தேவைகளை இது பூர்த்தி செய்கிறது.

16. இந்தியாவில் சாகுபடியாகும் முக்கியப் பயிர்கள் யாவை?

- உணவுப்பயிர்கள்: கோதுமை, நெல், கம்பு, கேழ்வரகு, சோளம், மக்காச்சோளம், தினைப் பயிர்கள், பருப்புவகைகள்.
- வாணிபப்பயிர்கள்: கரும்பு, புகையிலை, பருத்தி, சணல், எண்ணெய் வித்துக்கள்.
- தோட்டப்பயிர்கள்: காப்பி, தேயிலை, இரப்பர்
- தோட்டக்கலைப்பயிர்கள்: பழங்கள் காய்கறிகள், மலர்கள்.

17. சணலால் தயாரிக்கப்படும் பொருள்கள் யாவை?

- கோணிப்பைகள்
- கம்பளங்கள்
- கயிறு
- நூலிழைகள்
- போர்வைகள்
- துணிகள்
- தார்பாலின்
- திரைச்சீலைகள்

18. இந்தியாவில் பயிரிடப்படும் நறுமணப் பொருள்கள் யாவை?

- மிளகு
- மிளகாய்
- மஞ்சள்
- இஞ்சி
- ஏலக்காய்
- இலவங்கம்
- பட்டை
- பாக்கு.

19. இந்திய வேளாண்மையை நிர்ணயிக்கும் காரணிகளைத் தொகுத்தெழுதுக.

- இயற்கைக் காரணிகள்: நிலத்தோற்றம், காலநிலை மற்றும் மண்
- அமைப்புசார் காரணிகள்: வேளாண் நிலத்தின் அளவு, நிலவாரம் முறை மற்றும் நிலச்சீர்திருத்தங்கள்
- உட்கட்டமைப்பு காரணிகள்: நீர்ப்பாசனம், மின்சாரம், போக்குவரத்து, வரவு, சந்தை, காப்பீடு மற்றும் சேமிப்பு வசதிகள்
- தொழில்நுட்பக் காரணிகள்: வீரிய விதைகள், இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் இயந்திரங்கள்.

20. இந்தியாவின் முக்கிய எண்ணெய் வித்துக்கள் யாவை?

- நிலக்கடலை
- கடுகு
- எள்
- ஆளிவிதை
- சூரியகாந்தி
- ஆமணக்கு
- பருத்தி விதைகள்
- நைஜர் விதைகள்

VII. காரணம் கூறுக.

பாடநூல் வினாக்கள்

1. வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு.

காரணம்:

- இந்திய வேளாண்மை 50 சதவீதத்திற்கும் மேலான மக்களுக்கு வேலைவாய்ப்பையும், நாட்டின் மொத்த வருமானத்தில் 25 சதவீதத்தையும் நாட்டிற்கு அளிக்கிறது.

2. மழைநீர் சேமிப்பு அவசியம்.

காரணம்:

- இந்தியா அதிக வெப்பத்தையும் சீரற்ற பருவகால மழைப்பொழிவையும் கொண்டிருப்பதால் மழை பெய்யும் காலங்களில் கிடைக்கும் நீரை சேமிப்பது அவசியம்.

3. சிறிய வேளாண் பண்ணைகள் இந்தியாவில் அதிகம்.

காரணம்:

- குடியிருப்பு கட்டடங்கள் அதிகமாக கட்டப்பட்டு வருவதால் விவசாய நிலத்தின் பரப்பளவு குறைந்து கொண்டே வருகிறது. ஆனால், விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது.
- விவசாயிகளில் பெரும்பாலானோர் ஏழைகளாக உள்ளனர். எனவே இந்தியாவில் சிறிய பண்ணைகளே அதிகம்.

கூடுதல் வினாக்கள்

4. வறண்ட பாலை நிலங்களில் மேல் மண் வறண்டு காணப்படுகிறது.

காரணம்:

- வறண்ட காலநிலை, அதிக வெப்பம் காரணமாக ஆவியாதல் அதிகமாக இருப்பதால் வறண்டு காணப்படுகிறது.

5. பழங்குடி இன மக்கள் காடுகளில் தங்கள் வாழ்விடத்தை கைவிட்டு வேறொரு புதிய இடத்திற்குச் செல்வர்.

காரணம்:

- காடுகளில் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் சாகுபடிக்குப் பிறகு, மண்ணின் வளம் குறைகிறது.

6. வேளாண் நடவடிக்கைகளை மேற்கொள்ள நீர்ப்பாசனம் அத்தியாவசிமான ஒன்றாக உள்ளது.

- இந்தியா அதிக வெப்பத்தையும், சீரற்ற மழைப்பொழிவையும் கொண்டிருப்பதால் நீர்ப்பாசனம் அவசியமாக உள்ளது.

VIII. வேறுபடுத்துக.

பாடநூல் வினாக்கள்

1. ராபி பருவம் மற்றும் காரிஃப் பருவம்

ராபி பருவம்	காரிஃப் பருவம்
ராபி பயிர்கள் பயிரிடப்படும் காலம் அக்டோபர் – மார்ச் ஆகும்.	காரிஃப் பயிர்கள் பயிரிடப்படும் காலம் ஜுன்–செப்டம்பர் ஆகும்.
வடமாநிலங்களில் கோதுமை, பருப்பு, ஆளிவிதைகள், கடுகு, பார்லி ஆகியன இப்பருவத்தில் பயிரிடப்படுகின்றன.	வட மாநிலங்களில் நெல், பருத்தி, மக்காச் சோளம், சோளம், கம்பு, உளுந்து ஆகியன இப்பருவத்தில் பயிரிடப்படுகின்றன.

2. வெள்ளப் பெருக்கு கால்வாய் மற்றும் வற்றாத கால்வாய்

வெள்ளப் பெருக்கு கால்வாய்	வற்றாத கால்வாய்
➢ இவ்வகை கால்வாய்களில் ஆற்றிலிருந்து நேரடியாக எவ்வித தடுப்பணைகளும் இன்றி தண்ணீர் கால்வாய் மூலம் எடுக்கப்படுகிறது.	➢ இவ்வகை கால்வாய்கள் வற்றாத நதிகளின் குறுக்கே அணைகளை கட்டி நீரின் போக்கை சீர்படுத்தி பயன்பாட்டிற்கு கொண்டு வருவதாகும்.
➢ இவ்வகை கால்வாய்கள் வெள்ளக் காலங்களில் தண்ணீரை திசை திருப்பப் பயன்படுவதோடு மழைக் காலங்களில் மட்டுமே பயன்பாட்டில் இருக்கும்.	➢ நம் நாட்டில் பெரும்பாலான கால்வாய்கள் இந்தபிரிவின் கீழ் வருகின்றன. இவ்வகை கால்வாய்கள் நீர்ப்பாசனத்திற்கு பயனுள்ளதாக இருக்கிறது.

3. கடல் மீன் பிடிப்பு மற்றும் உள்நாட்டு மீன்பிடிப்பு **PTA**

கடல் மீன்பிடிப்பு	உள்நாட்டு மீன்பிடிப்பு
➢ கடற்கரைப்பகுதி, கடற்கரையை ஒட்டியபகுதி, மற்றும் ஆழ்கடல் போன்ற பகுதிகளில் 200 மீட்டர் ஆழம் வரை உள்ள கண்டத்திட்டுப் பகுதிகளில் மீன் பிடித்தல் நடைபெறுவதை கடல் மீன் பிடிப்பு என்கிறோம்.	➢ நீர் தேக்கங்கள் ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள், குளங்கள் மற்றும் கண்மாய்கள் போன்ற நீர்நிலைகளில் நடைபெறும் மீன்பிடிப்பு உள்நாட்டு மீன்பிடிப்பு எனப்படும்.
➢ இந்தியாவில் கடல்மீன் பிடிப்பில் கேரள மாநிலம் முதலிடம் வகிக்கிறது.	➢ இந்தியாவில் ஆந்திரப்பிரதேச மாநிலம் உள்நாட்டு, மீன்பிடித்தலில் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

4. வண்டல் மண் மற்றும் கரிசல் மண்

வண்டல் மண்	கரிசல் மண்
➢ சிற்றோடைகள் மற்றும் ஆறுகளின் வேகம் குறையும் பொழுது படிய வைத்தலினால் வண்டல் மண் உருவாகின்றது.	➢ தக்காணப் பகுதியில் உள்ள பசால்ட் பாறைகளிலிருந்து கரிசல் மண் உருவாகிறது.
➢ புதிய வண்டலான காதர் வெளிர் நிறமும், பழைய வண்டலான பாங்கர் அடர் நிறமும் கொண்டது.	➢ கரிசல்மண் கருப்பு நிறமாக உள்ளது.

➤ சமவெளிப் பகுதிகளிலும், ஆற்றுப் பள்ளத்தாக்கு களிலும் வண்டல் மண் காணப்படுகிறது.	➤ பீடபூமிப் பகுதிகளில் கரிசல் மண் காணப்படுகிறது.
➤ நெல், கோதுமை, கரும்பு மற்றும் எண்ணெய் வித்துக்கள் பயிரிட ஏற்றமண் இதுவாகும்.	➤ பருத்தி, புகையிலை, கரும்பு மற்றும் தினை வகைகள் பயிரிட ஏற்றமண் இதுவாகும்.

கூடுதல் வினாக்கள்

5. கிணற்றுப் பாசனம் மற்றும் ஏரிப்பாசனம்

கிணற்றுப்பாசனம்	ஏரிப்பாசனம்
➤ கிணறு என்பது புவியில் செங்குத்தாக தோண்டப்படும் பள்ளம் அல்லது ஆழ்துளை மூலம் நிலத்தடி நீரை புவியின் மேற்பரப்பிற்கு கொண்டுவருதல் ஆகும்.	➤ ஏரி என்பது புவியின் மேற்பகுதியில் இயற்கையாக அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு தாழ்வான நீர் தேங்கும் பகுதியாகும்.
➤ கிணற்றுப் பாசனம் நம் நாட்டின் மலிவான மற்றும் நம்பகமான நீர்ப்பாசன முறையாகும்.	➤ ஏரிப்பாசனம் இந்தியாவில் மிகப்பழமையான நீர் பாசன முறையாகும்.
➤ மழைப்பொழிவு குறைவான பகுதிகளிலும் கால்வாய் மற்றும் ஏரிகள் இல்லாத பகுதிகளிலும் இப்பாசனம் அவசியமாகிறது.	➤ இம்முறை ஏரிகள் மற்றும் குளங்களையும் உள்ளடக்கியது ஆகும்.

6. தேயிலை மற்றும் காபி

தேயிலை	காப்பி
➤ தேயிலை அயன மண்டல மற்றும் உப அயனமண்டல காலநிலைகளில் வளரும் ஒரு பசுமையான தாவரமாகும்.	➤ காப்பி கடல் மட்டத்திலிருந்து சுமார் 1000மீ முதல் 1500 மீ உயரம் கொண்ட மலைச் சரிவுகளில் நன்றாக வளரும் தாவரமாகும்.
➤ மிதமான நிழலும் அதிக மழையும் தேவை. ஆனால் வேர்களில் நீர் தேங்காமல் இருக்க வேண்டும்.	➤ நிழல் தரும் மரங்களும் மிதமான மழையும் தேவை.
➤ தேயிலை, பூகி மற்றும் அசாமிகா என இரண்டு வகைப்படும்.	➤ காப்பி, அராபிகா மற்றும் ரொபஸ்டா என இரண்டு வகைப்படும்.
➤ இந்தியாவில் தேயிலை உற்பத்தி செய்யும் முதன்மை மாநிலம் அசாம் ஆகும்.	➤ இந்தியாவில் காப்பி உற்பத்தி செய்யும் முதன்மை மாநிலம் கர்நாடகா ஆகும்.

7. தன்னிறைவு வேளாண்மை மற்றும் தீவிர வேளாண்மை:

தன்னிறைவு வேளாண்மை	தீவிர வேளாண்மை
➤ இம்முறையில் விவசாயிகள் ஏழ்மையாக இருப்பதால் நிலத்தின் அளவு சிறியதாக உள்ளது. எனவே அதிக செலவு கொண்ட நவீன யுத்திகளைப் பயன்படுத்த முடியாது.	➤ இம்முறையில் இயந்திரங்கள் மற்றும் நவீன யுக்திகள் பயன்படுத்தப்படுகின்றன.
➤ தானியங்கள் சிறிய அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, அதன் பெரும்பகுதி குடும்ப உறுப்பினர்களால் நுகரப்படுகிறது.	➤ தானியங்கள், அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.
➤ பஞ்சாப், இராஜஸ்தான், உத்திரப்பிரதேசம் மற்றும் மத்தியப்பிரதேசத்தில் இவ்வகை வேளாண்மை பின்பற்றப்படுகிறது.	➤ பஞ்சாப், இராஜஸ்தான், உத்திரப்பிரதேசம் மற்றும் மத்தியப்பிரதேசத்தில் இவ்வகை வேளாண்மை பின்பற்றப்படுகிறது.

IX. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. இந்திய மண் வகைகளைக் குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.

இந்திய மண் வகைகள்:

- வண்டல் மண்
- கரிசல் மண்
- செம்மண்
- சரளை மண்
- காடு மற்றும் மலைமண்
- வறண்ட பாலை மண்
- உப்பு மற்றும் காரமண்
- களிமண் மற்றும் சதுப்பு மண்

வண்டல் மண்:

- சிற்றோடைகள் மற்றும் ஆறுகளின் வேகம் குறையும் பொழுது படியவைத்தலால் உருவாகும் மண் வண்டல் மண் ஆகும்.
- வெளிர் நிறம் கொண்ட புதிய வண்டல் காதர் என்றும், அடர் நிறம் கொண்ட பழைய வண்டல் பாங்கர் என்றும் அழைக்கப்படுகிறது.
- இம்மண் கங்கை மற்றும் பிரம்மபுத்திரா ஆற்றுப்பள்ளத்தாக்குகள், உத்திரப் பிரதேசம், உத்திரகாண்ட், பஞ்சாப், ஹரியானா, மேற்கு வங்காளம் மற்றும் பீகார் மாநிலங்களிலுள்ள சமவெளிப் பகுதிகளில் காணப்படுகின்றது.

கரிசல் மண்:

- தக்காணப் பகுதியிலுள்ள பசால்ட் பாறைகளிலிருந்து உருவானது கரிசல் மண் ஆகும்.
- இம்மண் டைட்டானியம் மற்றும் இரும்பு தாதுக்களால் கருப்பு நிறமாக உள்ளது.
- இலை மக்குகள் இம்மண்ணில் குறைவாக உள்ளன. ஈரமாக இருக்கும்போது சேறாகவும், ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்கவைத்துக்கொள்ளும் தன்மையும் உடையது.

- இம்மண், மகாராஷ்டிரா மற்றும் மாளவப் பீடபூமி, கத்தியவார் தீபகற்பம், தெலுங்கானா, ஆந்திரப்பிரதேத்தில் உள்ள ராயல சீமா மற்றும் கர்நாடகா மாநிலத்தின் வடபகுதி ஆகிய பகுதிகளில் காணப்படுகிறது.

செம்மண்:

- பழமையான படிக பாறைகளான கிரானைட், நைஸ் போன்ற பாறைகள் சிதைவடைவதால் உருவாகிறது.
- இரும்பு ஆக்ஸைடு அதிகமாகக் காணப்படுவதால் சிவப்பு நிறமாகக் காணப்படுகிறது.
- தக்காண பீடபூமியின் கிழக்குப் பகுதி, கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, ஜார்கண்ட் மற்றும் சோட்டா நாகபுரி பீடபூமி ஆகிய பகுதிகளில் காணப்படுகிறது.

சரளை மண்:

- வெப்பம் மற்றும் குளிர் அடுத்தடுத்து நிகழும் போது மண் சுவரல் காரணமாக இம்மண் உருவாகிறது.
- இரும்பு மற்றும் அலுமினியத்தின் நீரேற்ற ஆக்ஸைடுகளால் உருவானது ஆகும்.
- உயரமான மலைப்பகுதிகளில் அதிகமாக காணப்படுகிறது. பொதுவாக இது ஈரப்பதத்தை தக்கவைத்துக் கொள்வதில்லை.
- அசாம், குன்றுகள், கேரளா மற்றும் கர்நாடகாவில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரப் பகுதிகள், ஒடிசா மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் இவ்வகைமண் காணப்படுகிறது.

காடு மற்றும் மலை மண்:

- பனிமழை, வெப்பநிலை வேறுபாடுகளால் பௌதீகச் சிதைவின் காரணமாக உருவாகிறது. மேலும் காலநிலைக்கு ஏற்ப இடத்திற்கு இடம் மாறுபடுகிறது.
- இம்மண்ணில் மென்மையான மணல் மற்றும் பாறைத் துகள்கள் கலந்து காணப்படுகிறது.
- ஜம்மு–காஷ்மீர், இமாச்சலபிரதேசம், உத்தரகாண்ட், சிக்கிம், போன்ற மாநிலங்களில் உள்ள ஊசியிலைக்காட்டு பகுதிகள், மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் ஆகிய பகுதிகளில் மலைமண் காணப்படுகிறது.

வறண்ட பாலை மண்:

- வறண்ட கால நிலை, அதிக வெப்பம் காரணமாக ஆவியாதல் அதிகமாக இருப்பதால் மேல்மண் வறண்டு காணப்படுகிறது.
- வெளிர் நிறம், குறைந்த இலை மக்குசத்து, மற்றும் குறைந்த ஈரப்பதம் உடைய மண் பாலை மண்ணாகும்.
- இவ்வகை மண் இராஜஸ்தான், குஜராத்தின் வடபகுதி, பஞ்சாப் மாநிலத்தின் தென்பகுதி ஆகிய இடங்களில் காணப்படுகின்றது.

உப்பு மற்றும் காரமண்:

- சிதைக்கப்படாத பாறைகள் மற்றும் சிதைவுற்ற கனிமங்களை உடையது இம்மண்.
- வடிகாலமைப்பு இல்லாமையால் நீர்பிடிப்புக் காரணமாக தீங்கு விளைவிக்கக்கூடிய உப்புகள் மண்ணின் கீழ் அடுக்கிலிருந்து மேற்பரப்பிற்கு கடத்தப்படுகிறது. இதனால் உப்பு மற்றும் காரத்தன்மையுடன் காணப்படுகிறது.
- ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், பீகார், உத்திரப் பிரதேசம், ஹரியானா, பஞ்சாப், இராஜஸ்தான் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களின் வறண்ட பகுதிகளில் இம்மண் காணப்படுகிறது.

களிமண் மற்றும் சதுப்பு மண்:

- அதிக மழையும் அதிக ஈரப்பதமும் கொண்ட பகுதிகளில் இம்மண் காணப்படுகிறது.
- இம்மண் கருமை நிறம் மற்றும் அதிக காரத்தன்மையுடையது.
- கேரளாவில் கோட்டயம் மற்றும் ஆலப்புழை மாவட்டங்கள், ஒடிசா, தமிழ்நாடு கடற்கரைப் பகுதிகள், மேற்கு வங்காளத்திலுள்ள சுந்தரவனப் பகுதிகள், பீகார், உத்தரகாண்ட் மாநிலத்தின் பல மாவட்டங்கள் ஆகியன இம்மண் காணப்படும் பகுதிகளாகும்.

2. ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக.

பல்நோக்கு திட்டம்:

- பல்நோக்குத்திட்டம் என்பது ஒரு அறிவியல் முறையிலான நீர்வள மேலாண்மைத் திட்டமாகும்.
- ஆற்றின் குறுக்கே பல்வேறு நோக்கங்களுக்காக அணையைக் கட்டுவதால் இது பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டம் என்று அழைக்கப்படுகின்றன.
- நீர்ப்பாசனம், நீர்மின் உற்பத்தி, குடிநீர், வெள்ளத்தடுப்பு, தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்குதல், மீன்வள மேம்பாடு மற்றும் நீர் வழிப் போக்குவரத்து போன்றவை இதன் பல்வேறு நோக்கங்களாகும்.

ஹிராகுட் திட்டம்:

- இத்திட்டம் மகாநதியின் மீது 1948 ல் தொடங்கப்பட்டு 1957ல் முடிக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ 83 கோடியாகும்.
- இத்திட்டத்தின் கீழ் மகாநதியின் மீது ஒரிசாவில் ஒரு நீண்ட அணை கட்டப்பட்டது. அது 4.8 கி.மீ நீளமும், 61 மீட்டர் உயரமும் உடையது. இந்த அணைக்கட்டுதான் உலகின் மிக நீண்ட அணைக்கட்டு ஆகும்.
- இந்த அணை சுமார் 810 கோடி கியூபிக் மீட்டர் நீரைத் தேக்கிவைக்கும் திறன் கொண்டது. இத்திட்டத்தின் இத்திட்டத்தின் மூலம் 9 மின்நிலையங்கள் கட்டப்பட்டு 347.5 மெகாவாட் நீர்மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது.
- வெள்ளத் தடுப்பு, ஒரிசாவின் இயற்கை வளபாதுகாப்பு, நீர்ப்பாசனம் மற்றும் நீர்மின் உற்பத்தியை நோக்கமாகக் கொண்டது இத்திட்டமாகும்.
- இத்திட்டத்தின் மூலம் 52,609 சதுரகிலோமீட்டர் பரப்பளவு நிலம் நீர்ப்பாசன வசதி பெறுகிறது.

பக்ரா நங்கல் திட்டம்:

- பக்ராநங்கல் இந்தியாவின் மிகப்பெரிய பல்நோக்குத்திட்டம் ஆகும். சிந்து நதியின் துணையாறாகிய சட்லஜ் ஆற்றின் குறுக்கே பக்ரா என்னும் இடத்தில் ஒரு அணை கட்டப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தினால் பஞ்சாப், ஹரியானா, இமாச்சலபிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் பயன்பெறுகின்றன.
- பக்ரா நங்கல் திட்டம் உலகின் பெரிய புவி ஈர்ப்பு அணை ஆகும்.
- பக்ரா அணைக்குக் கீழாக நங்கல் என்னுமிடத்தில் ஒரு அணை கட்டப்பட்டுள்ளது. இதுவும் சட்லஜ் ஆற்றின் மீதே அமைந்துள்ளது.
- பக்ராவில் 2 மின்சக்தி நிலையங்களும், நங்கலில் 2 மின்சக்தி நிலையங்களும் உள்ளன.
- பக்ராநங்கல் திட்டத்தினால் 52,609 சதுரகிலோ மீட்டர் பரப்பளவுள்ள விவசாய நிலம் நீர்ப்பாசன வசதி பெறுகிறது.
- 1500 மெகாவாட் நீர்மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது.

3. தீவிர வேளாண்மை மற்றும் தோட்ட வேளாண்மையின் பண்புகளை வெளிக்கொணர்க.

- தீவிர வேளாண்மை எனப்படுவது இயந்திரங்கள் மற்றும் பல்வேறு நவீன யுக்திகள் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துவதாகும்.
- சிறிய நிலத்தில் பூச்சிக் கொல்லிகள், களைக்கொல்லிகள் மற்றும் இரசாயன உரங்களை அதிகமாக பயன்படுத்தி அதிகபட்ச விளைச்சலை பெறுவது இதன் நோக்கமாகும்.
- இந்த இயந்திரமயமாக்கல் மற்றும் தீவிரப்படுத்துதல் மூலம் சிறிய அளவில் வளர்க்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கையை குறிப்பாக பசுக்கள், பன்றிகள், கோழிகள் போன்ற விலங்குகளை பெரிய பண்ணைகள் மூலம் வளர்க்க வழிவகை செய்கிறது.
- இந்தியாவில் பஞ்சாப், இராஜஸ்தானின் சில பகுதிகள், உத்திரபிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசப் பகுதிகளில் இத்தீவிர வேளாண்மை முறை பின்பற்றப்படுகிறது.

தோட்டவேளாண்மை

- தோட்ட வேளாண்மை மலைச்சரிவுகளில் பெரிய எஸ்டேட் பண்ணைகளாக நடைபெறுகிறது.
- இந்தியாவின் வேளாண்பயிர்கள் காப்பி, தேயிலை, இரப்பர் மற்றும் வாசனைப் பொருட்கள் என்பனவாகும். இவை ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் பயிரிடப்படுகின்றன.
- இப்பயிர்கள் அசாம், கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு, மேற்கு வங்காளம் மற்றும் அந்தமான் நிக்கோபர் தீவுகள் போன்ற பகுதிகளில் பயிரிடப்படுகின்றன.

4. நெல் மற்றும் கோதுமை பயிரிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழ்நிலைகள் பற்றி விவரி.

நெல்

- நெல் இந்தியாவின் பூர்வீகப் பயிராகும். உலகளவில் நெல் உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாம் இடத்தை வகிக்கிறது. இது அயனமண்டலப் பயிராகும்.
- நெல் 24^0 C சராசரி வெப்பநிலையும், 150 செ.மீ ஆண்டு மழையளவும் உள்ள பகுதிகளில் பயிரிடப்படுகிறது.
- வளமான களிமண் அல்லது வண்டல் மண் நெல் சாகுபடிக்கு ஏற்றது. இந்தியாவில் நெல் மூன்று முறைகளில் பயிரிடப்படுகிறது.
    * விதைத் தூவல் முறை
    * ஏர் உழுதல் (அ) துளையிடும் முறை
    * நாற்று நடுதல் முறை
- அதிக விளைச்சல் தரும் விதைகளின் வரவு காரணமாக பல பழமையான நெல் வகைகள் மறைந்து போயிற்று.
- மேற்கு வங்காளம், உத்திரப்பிரதேசம், பஞ்சாப், தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், பீகார், சத்தீஸ்கர், ஒடிசா, அசாம், மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களில் நெல் அதிகம் உற்பத்தி செய்யப்படுகிறது.

கோதுமை

- நெற்பயிருக்கு அடுத்தாற் போல் இரண்டாவது முக்கிய உணவுப் பயிராக விளங்குவது கோதுமை ஆகும்.
- இப்பயிர் விதைக்கும் பருவத்தில் 10 –15^0 C வெப்பமும், முதிரும் பருவத்தில் 20 – 25^0 C வெப்பநிலையும் தேவைப்படுகிறது.
- நாட்டின் பயிர் சாகுபடி பரப்பில் 24 சதவீதமும், மொத்த உணவுப் பயிர் உற்பத்தியில் 54 சதவீத பங்கையும் கோதுமை வகிக்கிறது.
- சுமார் 85 சதவீதத்திற்கும் மேலான கோதுமை உற்பத்தி உத்திரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்களிலிருந்து கிடைக்கிறது.
- மேலும் மகாராஷ்ட்ரா மற்றும் குஜராத் மாநிலங்களின் கரிசல் மண் பிரதேசங்களிலும் கோதுமை பயிராகிறது.

கூடுதல் வினாக்கள்

5. நவீன நீர்ப்பாசன முறைகளை விவரி.

சொட்டு நீர்ப்பாசனம்:

- சொட்டுநீர்ப் பாசனம் என்பது தாவரங்களின் வேர்ப்பகுதிகளுக்கு சொட்டுநீராகப் பாய்ச்சுவதாகும்.
- தாவர வேர்களின் சிறிய பகுதிகளுக்கு பாய்ச்சப்பட்டு பெரிய மரங்கள், தோட்டப்பயிர்கள் போன்றவைகள் வளர்க்கவும் பயன்படுத்தப்படுகிறது.

தெளிப்புப் பாசனம்:

- தெளிப்புப் பாசனம் என்பது பெயருக்கேற்றவாறு மழைப் பொழிவைப் போன்றே பயிர்களுக்கு நீர்த்துளிகளைத் தெளிப்பதாகும்.

- தெளிப்பான் பயிர்களின் உயரத்திற்கேற்றவாறு மாற்றி 4 மீட்டருக்கும் அதிக உயரமான பயிர்களுக்குக் கூட பயன்படுத்தலாம்.
- குறிப்பாக கரும்பு மற்றும் சோளப் பயிர்களுக்கு இவ்வகைப் பாசனம் பயன்படுத்தப்படுகிறது.

மைய சுழற்சி நீர்ப்பாசனம்:

- இது நீர்ச்சக்கரம் அல்லது வட்ட சுழற்சி நீர்ப்பாசனம் என்றும் அழைக்கப்படுகிறது. இம்முறையில் கருவியின் மையப்பகுதி சுழன்று கொண்டும் தெளிப்பான்கள் மூலம் பயிர்களுக்கு நீர்த் தெளிப்புமுறை மேற்கொள்ளப்படுகிறது.

6. இந்திய விவசாயிகள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களை விளக்குக. **PTA**

- இந்திய வேளாண்மை மற்றும் இந்திய விவசாயிகள் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். அவற்றில் சில இயற்கைக் காரணிகளாகவும் வேறு சில செயற்கைக் காரணிகளாகவும் உள்ளன அவை

சிறிய மற்றும் குறுநில உடமை:

- இந்தியாவில் மக்கள் அடர்த்தி மிகுந்த மற்றும் தீவிர பயிர் சாகுபடி செய்யும் மாநிலங்களில் சிறிய மற்றும் துண்டாக்கப்பட்ட நில உரிமையாளர்கள் அதிகம் உள்ளனர். இந்தியாவில் 67 சதவீதம் நில உடமையாளர்கள் [1 ஹெக்டேருக்கும் குறைவு] குறு விவசாயிகளாக உள்ளனர்.

அதிக செலவின் உள்ளீடுகள்:

- அதிக விளைச்சலுக்கு தொடர் வேளாண் உற்பத்திக்கும் விதைகள் அடிப்படையான ஒரு உள்ளீடாகும். அதிக விலையின் காரணமாக நல்ல தரமான விதைகள் சிறு – குறு விவசாயிகளுக்கு எட்டாக் கனியாக உள்ளது.

வளமற்ற மண்:

- இந்திய மண் பல்லாயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து வளம் கூட்டல் மற்றும் புதுப்பித்தல் செயல்பாடின்றி வேளாண்மைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதால் மண்ணின் வளம் குன்றி அதன் உற்பத்தித் திறன் பாதிக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன பற்றாக்குறை:

- இந்தியாவில் மூன்றில் ஒரு பங்கு வேளாண் நிலப்பகுதியே பாசன வசதியைப் பெற்றிருக்கின்றது. வேளாண்மையின் நம்பகத்தன்மைக்கு, நீர்ப்பாசன வசதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

இயந்திரமயமாக்க பற்றாக்குறை:

- பெரும்பாலான பகுதிகளில் மனிதர்களைக் கொண்டு எளிய மற்றும் பழமையான கருவிகள் மூலமே வேளாண்மை செய்யப்படுகிறது.

மண் அரிப்பு:

- காற்று மற்றும் நீரின் மூலமான மண் அரிப்பில் பெரும் நிலப்பரப்பு பாதிக்கப்பட்டுள்ளது.

வேளாண் சந்தை:

- தரமான உள்கட்டமைப்பு வசதிகள் இன்மையால் விவசாயிகள் உள்ளூர் வியாபாரிகளிடமும், தரகர்களிடமும் விவசாயப் பொருட்களைக் குறைந்த விலைக்கு விற்பனை செய்கிறார்கள். மேலும் விவசாயப் பொருட்களின் விலையில் அதிகமாக ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

சேமிப்பு கிடங்கு வசதியில்லாமை:

- கிராமப்புற பகுதிகள் விவசாய சேமிப்பு கிடங்கு வசதியற்றோ அல்லது முழுமை பெறா நிலையிலோ காணப்படுகிறது. இத்தகைய சூழலில் விவசாயிகள் அறுவடை முடிந்தவுடன் வேளாண் உற்பத்திப் பொருட்களை சந்தையில் விற்கும் கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

போக்குவரத்து வசதியின்மை:

➤ இந்திய வேளாண்மையின் முக்கிய சவால்களில் ஒன்று மலிவான மற்றும் போதுமான போக்குவரத்து வசதியின்மையாகும். தற்சூழலில் இலட்சக்கணக்கான கிராமங்களில் பிரதான இணைப்புச் சாலைகள் இல்லாமலோ அல்லது சந்தை மையங்களுடன் இணைக்கப்படாமலோ உள்ளது.

மூலதனப் பற்றாக்குறை:

➤ வேளாண்மை அதிக மூலதனம் தேவைப்படும் தொழில்களில் ஒன்றாகும். மேம்படுத்தப்பட்ட பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க போதுமான மூலதனம் விவசாயிகளிடம் இல்லை.

X. உயர் சிந்தனை வினாக்கள்

பாடநூல் வினாக்கள்

1. விவசாயம் இல்லாத உலகத்தை கற்பனை செய்து பார்க்க முடியுமா?

➤ விவசாயம் இல்லாத உலகத்தை நினைத்துப் பார்க்கவே முடியாது. நூறு வருடத்திற்கு முன்னாடி, ஐந்துக்கு 4 பேர் விவசாயத்தில் இருந்தார்கள்.

➤ தற்போது பணக்கார நாடுகளில் விவசாயம் செய்கின்ற விவசாயிகள் மிகவும் குறைவு.

➤ அதுமட்டும் அல்லாமல் அமெரிக்காவில் இன்று விவசாயிகளை விட அதிகமாக வழக்கறிஞர்கள் உள்ளனர். பண்ணையை விட அதிக உலர்நிலமே உள்ளது.

➤ உலகத்தில் விவசாயம் இல்லாமல் போய்விட்டால் அது உலக பொருளாதாரத்தையே மாற்றி அதன் கட்டமைப்பு மாறி உண்மையில் அது ஒரு தீவிரவாத அமைப்பாகிவிடும்.

➤ 2007ல் இருந்து உலக சந்தையில் விவசாய பொருள்கள் நிரந்தர விலை இல்லாமல் மாறிகொண்டு இருக்கிறது.

➤ கிராமப்புறங்களில் ஆற்றல் வாய்ந்த விவசாயம் கிராம மக்களின் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் இதனால் வறுமை சிறிது சிறிதாக நீக்கப்படும். ஆனால் இதன் முக்கியத்துவம் இல்லாததால் திருப்திபடுத்த முடியாமல் போய்விட்டது. ஏனென்றால் தொழிற்சாலை பெருகியதால் விவசாயம் தெரியாமல் போய்விட்டது. மக்கள் கிராமப்புறங்களில் இருந்து நகர்புறங்களுக்கு குடிபெயர ஆரம்பித்துவிட்டனர். இதைவிட ஒரு கொடுமை என்னவென்றால் வறட்சி மற்றும் வெள்ளத்தினால் பயிர்கள் அழிவதால் விவசாயிகள் தற்கொலை செய்கின்றனர். விவசாய கடன் கொடுத்தால் மட்டும் போதாது அரசாங்கம் மேலும் கூட்டு நடவடிக்கை எடுத்தால் மட்டுமே விவசாயம் அழியாமல் இருக்கும்.

2. தென் இந்தியாவில் நிலவும் நீர் விநியோகத்திற்கு காரணங்களை கொடுக்கவும்:

அ) நீர் நிலைகளை கட்டுவது

ஆ) நீர் நிலைகளை உயர்த்துவது

இ) குளங்களை தூர்வார்வது

➤ நல்ல தரமான நீர் விநியோகங்களை அளிப்பதில் அரசாங்கம் அக்கறை காட்ட வேண்டும். அரசாங்கம் பரிசீலனை செய்து திறமையுள்ள தீர்பாய்வுகள், அமைப்புகள் மூலம் நீர் விநியோகம் செய்ய வேண்டும்.

➤ நீர் நிலைகளில் வெள்ளத்தில் அதிகபடியான நீர் வெளியேறுவதை தடுக்க சம்பந்தப்பட்ட சமூகம், பொறுப்பு நீர் நிர்வாகிகள் மூலம் முரண்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்படுகிறது.

➤ கடலில் கலக்கும் ஆற்றுநீரை புதிய நீர்தேக்கம் கட்டி அதன்மூலம் தீர்வு காணலாம்.

➤ மழை நீரை சேமிக்க பல வழிகள் இருக்கிறது. இதற்காக பக்கத்து மாநிலங்களுடன் சண்டையிட தேவையில்லை.

- அதிகமான மழைபெறும் இடங்களை கண்டறிந்து அதன் அருகே புதிய நீர் தேக்கங்களை அமைத்து நீரை சேமிக்க புதிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.
- தமிழ்நாட்டில் குழு அமைத்து ஆய்வு செய்து புதிய நீர்தேக்க நிலைகளை கட்ட வேண்டும். இவையே நீர் வினியோகத்தின் காரணங்களாகும்.

கூடுதல் வினா

3. இன்றைய நாட்களில் மீனவர்களின் பிரச்சனை என்ன?

- வருமானமின்மை, சேமிக்க இடமில்லாமை, சீக்கிரம் விநியோகம் செய்தல், பனிக்கட்டி இல்லாமை, சந்தையைப் பற்றிய தகவல்களை தெரியாமல் இருப்பது, விலையுயர்ந்த மீன்களைப் பற்றி நிச்சயமற்று இருத்தல், சந்தை அமைப்பு இல்லாமை, உற்பத்தி தேவைகளுக்கு இடையே சமநிலையற்று இருப்பது இது மீனவர்களிடையே காணப்படும் பிரச்சனையாகும்.
- இந்திய மீனவர்களுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையே மோதல்.
- இந்திய மீனவர்கள் IMBI கோட்டை மீறுவது வழக்கமாகிவிட்டது. இந்தியா, இலங்கை, நீர்நிலைக்கிடையே தப்பிப் பிழைக்க அவர்கள் போராடுகிறார்கள்.
- கடல் எல்லையை தாண்டுவதால் இந்த சின்ன நிகழ்வு காரணமாக தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைதாகின்றனர்.
- 1974 மற்றும் 1976 ஆகிய நாட்களில் இந்திய விசைப்படகு வங்கக்கடல், பாக்நீர்சந்து, மன்னார் வளைகுடா ஆகிய இடங்களில் சுதந்திரமாக மீன் பிடித்துக் கொண்டிருந்து இப்போ இரு நாடுகளுக்கிடையே கடல் எல்லைகளில், எல்லை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
- ஆனால் இலங்கை கடற்படையினர், இந்திய மீனவர்களின் வலைகளை அழிப்பதிலும், கைது செய்வதிலும் எச்சரிக்கையாக இருக்கின்றனர்.

வரைபடம்

இந்தியா – முக்கிய மண் வகைகள்



இந்தியா – பல்நோக்கு ஆற்று பள்ளத்தாக்கு திட்டம்



இந்தியா – நெல் மற்றும் கோதுமை விளையும் இடங்கள்

இந்தியா கோதுமை விளையும் இடங்கள்



இந்தியா நெல் விளையும் இடங்கள்



இந்தியா – முக்கிய பணப் பயிர்கள்



இந்தியா – மீன்பிடி மையங்கள்



அலகு 4 புவியியல்

வளங்கள் மற்றும் தொழிலகங்கள்

மனவரைபடம்



நினைவில் கொள்க

- பூமியிலிருந்து இயற்கையாக பெறக்கூடிய மூலப்பொருட்கள் **இயற்கை வளம்** எனப்படும்.
- மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய வளங்கள் **புதுப்பிக்கக்கூடிய வளங்கள்** எனப்படும்.
- ஒருமுறை பயன்படுத்தினால் மீண்டும் பயன்படுத்த முடியாதவளம் **புதுப்பிக்க இயலா வளம்** ஆகும்.
- புவியின் மேலோட்டில் அதிகம் பரவிக்கிடக்கும் தாது **இரும்புத்தாது** ஆகும். இது தீப்பாறைகள் மற்றும் உருமாறிய பாறைகளின் கலவையாகும்.
- வரலாற்றுக்கு முந்தைய காலத்திலேயே மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட முதல் உலோகம் **தாமிரம்** ஆகும்.
- "கருப்புத் தங்கம்" என அழைக்கப்படுவது **நிலக்கரி**
"நீர்மத்தங்கம்" என அழைக்கப்படுவது **பெட்ரோலியம்**
- பெட்ரோலியம் என்ற சொல் "பெட்ரோ" (பாறை) மற்றும் "ஓலியம்" (எண்ணெய்) என்ற **இலத்தீன்** சொற்களிலிருந்து பெறப்பட்டது.
- அணுக்கரு பிளவு அல்லது இணையும்போது வெளிப்படும் ஆற்றலைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுவது **அணுமின்சாரம்** ஆகும்.
- இந்தியாவிலேயே அதிக அளவு காற்றாலைகளைக் கொண்டுள்ள மாநிலம் **தமிழ்நாடு** (முப்பந்தல்– பெருங்குடி) ஆகும்.
- "இந்தியாவின் மான்செஸ்டர்" என்று அழைக்கப்படுவது **மும்பை**. "தென்னிந்தியாவின் மான்செஸ்டர்" என்று அழைக்கப்படுவது **கோயம்புத்தூர்.**
- "தங்க இழைப்பயிர்" என்று அழைக்கப்படுவது **சணல்** ஆகும்.
- "ஆசியாவின் டெட்ரோய்ட்" என்று அழைக்கப்படுவது **சென்னை.**
- "இந்தியாவின் மின்னியல் தலைநகரம்" என்று அழைக்கப்படுவது **பெங்களூரு.**
- இந்திய பொருளாதார வளர்ச்சியில் ஒரு மிகப்பெரிய வெற்றியை இந்திய **மென்பொருள் தொழிலகங்கள்** அடைந்துள்ளன.

இடங்களும் அதன் முக்கியத்துவமும்

இரும்பு எஃகு உற்பத்தியில் முன்னணி	–	ஜார்கண்ட்
அதிக அளவு மாங்கனீசு படிவுகள்	–	ஒடிசா
தாமிரப் படிவு அதிகம் உள்ள மாநிலம்	–	இராஜஸ்தான்
அதிக அளவு பாக்சைட் உற்பத்தி செய்யும் மாநிலம்	–	ஒடிசா
அதிக அளவு மைக்கா படிவு கொண்ட மாநிலம்	–	ஆந்திரபிரதேசம்
சுண்ணாம்புக்கல் உற்பத்தியில் முதலிடம்	–	கர்நாடகா
அதிக அளவு ஜிப்சம் உற்பத்தி செய்யும் மாநிலம்	–	இராஜஸ்தான்
பட்டு உற்பத்தி – முன்னணி மாநிலம்	–	கர்நாடகா
உலகிலேயே அதிக அளவு கரும்பு உற்பத்தி செய்யும் நாடு	–	பிரேசில்
"இந்தியாவின் மின்னியல் தலைநகரம்"	–	பெங்களூரு

வரைபட முக்கியக் குறிப்புகள்

தலைப்பு	முக்கிய பகுதிகள்
தாதுப்பொருள்கள்	: இரும்பு, மாங்கனீஸ், செம்பு, பாக்சைட், ஜிப்சம், மைகா, தங்கம், பெட்ரோலியம், நிலக்கரி, இயற்கை எரிவாயு
அனல்மின் நிலையங்கள்	: தூத்துக்குடி, நெய்வேலி, எண்ணூர்.
அணுமின் நிலையங்கள்	: தாராப்பூர், கோட்டா, கல்பாக்கம், கூடங்குளம், நரோரா, கைகா.
ஓதமின் நிலையங்கள்	: கட்ச் வளைகுடா, காம்பே வளைகுடா, விழிஞ்சம் (திருவனந்தபுரம்) அந்தமான் & நிகோபார்.
நீர்மின் திட்டங்கள்	: இடுக்கி, கோதையாறு, நாகார்ஜுனசாகர், ஹிராகுட், துங்கபத்திரா, பக்ராநங்கல்
காற்றாலைகள்	: முப்பந்தல் (கன்னியாகுமரி), தூத்துக்குடி, ரத்னகிரி (மகாராஷ்டிரா) ஓகா (குஜராத்)

தொழில் மையங்கள்

இரும்பு எஃகு	: ஜாம்ஷெட்பூர், பிலாய், ரூர்கேலா, பர்ன்பூர், பொகாரா, துர்காபூர், பத்ராவதி, சேலம், விசாகப்பட்டினம்.
கனரக வாகனம்	: சென்னை, மும்பை
மென்பொருள்	: பெங்களூரு, சென்னை, கோயம்புத்தூர், திருவனந்தபுரம், ஹைதராபாத், மும்பை, கொல்கத்தா.
பருத்தி நெசவு	: மும்பை, கோயம்புத்தூர்
சணல் நெசவு	: கொல்கத்தா
பட்டு நெசவு	: கர்நாடகம்.
சர்க்கரை	: உத்திரப்பிரதேசம், பீகார்.
காகிதம்	: நேபா நகர் (மத்தியப் பிரதேசம்)

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. மாங்கனீசு இவற்றில் பயன்படுத்தப்படுகிறது.
   அ) சேமிப்பு மின்கலன்கள் ஆ) எஃகு தயாரிப்பு
   இ) செம்பு உருக்குதல் ஈ) பெட்ரோலிய சுத்திகரிப்பு
2. ஆந்த்ரசைட் நிலக்கரி __________ கார்பன் அளவை கொண்டுள்ளது.
   அ) 80% – 95% ஆ) 70% க்கு மேல்
   இ) 60% – 70% ஈ) 50% க்கு குறைவு
3. பெட்ரோலியத்தில் உள்ள முக்கிய கனிமங்கள் ஹைட்ரஜன் மற்றும் __________. **PTA**
   அ) ஆக்ஸிஜன் ஆ) நீர் இ) கார்பன் ஈ) நைட்ரஜன்
4. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் நகரம்
   அ) சேலம் ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோயம்புத்தூர்
5. இந்தியாவில் முதல் சணல் ஆலை நிறுவப்பட்ட இடம் **PTA**
   அ) கொல்கத்தா ஆ) மும்பை இ) அகமதாபாத் ஈ) பரோடா
6. இந்தியாவில் முதல் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட மாநிலம் **PTA**
   அ) குஜராத் ஆ) இராஜஸ்தான் இ) மகாராஷ்டிரம் ஈ) தமிழ்நாடு
7. மிக அதிகமாக கிடைக்கக்கூடிய ஆற்றல் வளம்
   அ) உயிரி சக்தி ஆ) சூரியன் இ) நிலக்கரி ஈ) எண்ணெய்
8. புகழ் பெற்ற சிந்திரி உரத் தொழிலகம் அமைந்துள்ள மாநிலம்
   அ) ஜார்கண்ட் ஆ) பீகார் இ) இராஜஸ்தான் ஈ) அசாம்
9. சோட்டா நாக்பூர் பீடபூமி பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு கருவாக இருப்பது
   அ) போக்குவரத்து ஆ) கனிமப்படிவுகள்
   இ) பெரும் தேவை ஈ) மின்சக்தி கிடைப்பது

PTA

10. இந்திய கடற்கரை பகுதி இரும்பு எஃகு தொழிலகங்களுள் ஒன்று அமைந்துள்ள இடம்
அ) கொல்கத்தா ஆ) தூத்துக்குடி
இ) கோவா ஈ) விசாகப்பட்டினம்

கூடுதல் வினாக்கள்

11. புவியின் மேலோட்டில் அதிகம் பரவிக்காணப்படும் தாது
அ) இரும்பு ஆ) மாங்கனீசு இ) பாக்சைட் ஈ) தாமிரம்

12. மேக்னடைட் படிவுகள் அதிகமாகக் கொண்டுள்ள மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) கர்நாடகம்
இ) கேரளா ஈ) ஆந்திரப்பிரதேசம்

13. இரும்புத்தாது உற்பத்தியில் முதன்மையான உற்பத்தியாளராகத் திகழும் மாநிலம்
அ) ஒடிசா ஆ) மேற்கு வங்காளம்
இ) ஜார்கண்ட் ஈ) அசாம்

14. இரும்பு எஃகு மற்றும் உலோகக்கலவை உற்பத்திக்கு அடிப்படையான மூலப்பொருள்
அ) ஜிப்சம் ஆ) சுண்ணாம்புக்கல்
இ) மைகா ஈ) மாங்கனீசு

15. தாமிரப்படிவு அதிகமுள்ள மாநிலம்
அ) ஜார்கண்ட் ஆ) குஜராத் இ) பீகார் ஈ) இராஜஸ்தான்

16. வரலாற்றுக்கு முந்தைய காலத்திலேயே மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட உலோகம்
அ) இரும்பு ஆ) வெள்ளி
இ) தாமிரம் ஈ) தங்கம்

17. விமானக் கட்டுமானங்களில் பயன்படுத்தப்படுவது
அ) மைகா ஆ) பாக்ஸைட்
இ) ஜிப்சம் ஈ) இரும்பு

18. பண்டைய காலத்தில் ஆயுர்வேத மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்ட அலோகக் கனிமம்
அ) மைக்கா ஆ) சுண்ணாம்புக்கல்
இ) ஜிப்சம் ஈ) பாக்சைட்

19. கால்சியம் சல்ஃபேட்டின் நீர்மகனிமம்
அ) ஜிப்சம் ஆ) மைக்கா இ) பெட்ரோல் ஈ) டீசல்

20. "கருப்புத் தங்கம்" என்று அழைக்கப்படுவது
அ) இரும்பு ஆ) வெள்ளி
இ) கரிசல் மண் ஈ) நிலக்கரி

21. இந்தியாவில் அதிக நிலக்கரி உற்பத்தி செய்யும் மாநிலம்
அ) உத்தரகாண்ட் ஆ) ஜார்கண்ட் இ) தெலுங்கானா ஈ) பீகார்

22. இந்தியாவின் முதல் அணுமின் நிலையம்
அ) கோட்டா ஆ) கல்பாக்கம் இ) தாராப்பூர் ஈ) நரோரா

23. இந்தியாவின் முதல் நீர்மின் நிலையம் (1897) அமைக்கப்பட்ட இடம்
அ) சிம்லா ஆ) ஊட்டி இ) டார்ஜிலிங் ஈ) முசௌரி

24. கப்பல்களை இயக்குவதற்கு பயன்படுத்தப்படும் சக்தி
அ) அலை சக்தி ஆ) சூரிய சக்தி இ) காற்று சக்தி ஈ) உயிரி சக்தி

25. இந்தியாவிலேயே அதிக அளவு காற்றாலைகளைக் கொண்டுள்ள மாநிலமாக விளங்குவது
அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரப்பிரதேசம் இ) கேரளா ஈ) மகாராஷ்டிரம்

26. "இந்தியாவின் மான்செஸ்டர்" என்று அழைக்கப்படுவது
அ) கொல்கத்தா ஆ) சென்னை இ) டெல்லி ஈ) மும்பை

27. "தங்க இழைப்பயிர்' என்று அழைக்கப்படுவது
அ) பட்டு ஆ) சணல் இ) பருத்தி ஈ) கற்றாழை

28. சணல் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மாநிலம்
அ) ஹரியானா ஆ) தமிழ்நாடு இ) பஞ்சாப் ஈ) வங்காளதேசம்

29. சர்க்கரை உற்பத்தியில் முதலிடம் வகிப்பது
அ) அருணாச்சலப் பிரதேசம் ஆ) ஆந்திரப்பிரதேசம்
இ) உத்திரப்பிரதேசம் ஈ) மத்தியப்பிரதேசம்

30. டாட்டா இரும்பு எஃகு ஆலை தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1907 ஆ) 1909 இ) 1911 ஈ) 1913

31. தமிழ்நாட்டில் முதன்முதலில் (1830) இரும்பு எஃகு தொழிற்சாலை அமைக்கப்பட்ட இடம்
அ) சேலம் ஆ) போர்டோநாவோ இ) திருச்சி ஈ) கோயம்புத்தூர்

32. "ஆசியாவின் டெட்ராய்ட்" என்று அழைக்கப்பட்ட நகரம்
அ) மும்பை ஆ) விசாகப்பட்டினம் இ) சென்னை ஈ) கொச்சி

33. கர்நாடகாவிலுள்ள இரும்பு எஃகு நிறுவனம்
அ) டாடா இரும்பு எஃகு ஆலை ஆ) இந்துஸ்தான் எஃகு நிறுவனம்
இ) சேலம் எஃகு ஆலை ஈ) விஸ்வேஷ்வரையா இரும்பு எஃகு ஆலை

34. "இந்தியாவின் மின்னியல் தலைநகரம்" என்று வருணிக்கப்படுவது
அ) ஹைதராபாத் ஆ) பெங்களூரு இ) சென்னை ஈ) மும்பை

35. இந்தியாவின் முதல் மென்பொருள் தொழிலகம்
அ) டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் ஆ) இன்போடெக்
இ) காக்னிசன்ட் ஈ) கேலக்ஸி சொல்யுசன்ஸ்

விடைகள்

1. ஆ) எஃகு தயாரிப்பு	2. அ) 80% – 90%	3. இ) கார்பன்
4. ஈ) கோயம்புத்தூர்	5. அ) கொல்கத்தா	6. இ) மகாராஷ்டிரா
7. ஆ) சூரியன்	8. அ) ஜார்கண்ட்	9. ஆ) கனிமப் படிவுகள்
10. ஈ) விசாகப்பட்டினம்	11. அ) இரும்பு	12. ஆ) கர்நாடகம்
13. இ) ஜார்கண்ட்	14. ஈ) மாங்கனீசு	15. ஈ) இராஜஸ்தான்
16. இ) தாமிரம்	17. ஆ) பாக்ஸைட்	18. அ) மைக்கா
19. அ) ஜிப்சம்	20. ஈ) நிலக்கரி	21. ஆ) ஜார்கண்ட்
22. இ) தாராப்பூர்	23. இ) டார்ஜிலிங்	24. இ) காற்று சக்தி
25. அ) தமிழ்நாடு	26. ஈ) மும்பை	27. ஆ) சணல்
28. ஈ) வங்காளதேசம்	29. இ) உத்திரப்பிரதேசம்	30. அ) 1907
31. ஆ) போர்டோநாவோ	32. இ) சென்னை	
33. ஈ) விஸ்வேஷ்வரையா இரும்பு எஃகு ஆலை		34. ஆ) பெங்களூரு
35. அ) டாடா கன்சல்டன்சி சர்வீசஸ்		

புவியியல்

II. பொருத்துக:

பாடநூல் வினாக்கள்

அ) 1. பாக்சைட் — அ) சிமெண்ட்
2. ஜிப்சம் — ஆ) வானூர்தி
3. கருப்பு தங்கம் — இ) மின்சாதனப் பொருட்கள்
4. இரும்பு தாது — ஈ) நிலக்கரி
5. மைக்கா — உ) மேக்னடைட்

விடை
1) ஆ
2) அ
3) ஈ
4) உ
5) இ

ஆ)	1. இந்தியாவின் டெட்ராய்ட்	அ) குஜராத்	விடை
	2. அனல் மின்நிலையம்	ஆ) திருவனந்தபுரம்	1) உ
	3. காற்றாலை பண்ணை	இ) ஆந்திரப்பிரதேசம்	2) ஈ
	4. ஓத சக்தி	ஈ) 1975	3) அ
	5. சூரிய சக்தி	உ) சென்னை	4) ஆ
			5) இ

கூடுதல் வினாக்கள்

இ)	1. மாங்கனீசு	அ) அலுமினியம்	விடை
	2. தாமிரம்	ஆ) இரசாயன உரம்	1) இ
	3. பாக்சைட்	இ) இரும்பு எஃகு தொழில்	2) ஈ
	4. மைகா	ஈ) முதல் உலோகம்	3) அ
	5. ஜிப்சம்	உ) ஆயுர்வேத மருத்துவம்	4) உ
			5) ஆ

ஈ)	1. தூத்துக்குடி	அ) நீர்மின்சக்தி	விடை
	2. தாராப்பூர்	ஆ) அனல் மின்சக்தி	1) ஆ
	3. கோதையார்	இ) காற்று சக்தி	2) ஈ
	4. அந்தமான்–நிகோபார்	ஈ) அணு மின்சக்தி	3) அ
	5. முப்பந்தல்	உ) ஓத சக்தி	4) உ
			5) இ

உ)	1. மும்பை	அ) சணல் நெசவு ஆலை	விடை
	2. கொல்கத்தா	ஆ) சர்க்கரை ஆலை	1) இ
	3. பெங்களூரு	இ) பருத்தி நெசவு ஆலை	2) அ
	4. உத்திரப் பிரதேசம்	ஈ) இரும்பு எஃகு ஆலை	3) உ
	5. பிலாய்	உ) பட்டு நெசவு	4) ஆ
			5) ஈ

ஊ)	1. டாடா இரும்பு எஃகு ஆலை	அ) கர்நாடகா	விடை
	2. சேலம் இரும்பு எஃகு ஆலை	ஆ) மேற்கு வங்காளம்	1) உ
	3. விஸ்வேஸ்வரையா இரும்பு எஃகு நிறுவனம்	இ) தமிழ்நாடு	2) இ
	4. இந்திய இரும்பு எஃகு குழுமம்	ஈ) ஆந்திரப்பிரதேசம்	3) அ
	5. விசாகப்பட்டினம் எஃகு ஆலை	உ) ஜார்கண்ட்	4) ஆ
			5) ஈ

எ)	1. நிலக்கரி	அ) இந்தியாவின் மான்செஸ்டர்	விடை
	2. பெட்ரோலியம்	ஆ) தென்னிந்தியாவின் மான்செஸ்டர்	1) ஈ
	3. மும்பை	இ) நீர்மத்தங்கம்	2) இ
	4. சென்னை	ஈ) கருப்புத் தங்கம்	3) அ
	5. கோயம்புத்தூர்	உ) ஆசியாவின் டெட்ராய்ட்	4) உ
			5) ஆ

III.கோடிட்ட இடங்களை நிரப்புக.

கூடுதல் வினாக்கள்

1. புவியிலிருந்து கனிமங்களை அகழ்ந்தெடுக்கும் முறைக்கு ______ என்று பெயர்.
2. இந்திய நிலவியல் கள ஆய்வு நிறுவனத்தின் தலைமையிடம் _______
3. கனிமங்கள் ______, ______ என இரு வகைப்படும்.
4. வெளிர் சாம்பல் நிறமுடைய கனிமம் ______
5. இந்திய மாங்கனீசு தாது நிறுவனத்தின் தலைமையிடம் அமைந்துள்ள இடம் _______
6. தாமிரத்தை துத்தநாகத்துடன் கலந்து உருவாக்கப்படுவது _______
7. அலுமினியம் _______ தாதுவிலிருந்து பெறப்படுகிறது.
8. பாக்சைட் உற்பத்தியில் இந்தியாவின் முதன்மை மாநிலம் ______
9. 82 சதவீதம் ஜிப்சத்தை உற்பத்தி செய்யும் மாநிலம் ______
10. மின்சாரம் உற்பத்தி செய்ய பயன்படும் வளங்களை ______ என்று அழைக்கிறோம்.
11. இந்தியாவில் காணப்படும் நிலக்கரி வயல்கள் _______ பாறைகளோடு தொடர்புடையவை.
12. தமிழ்நாட்டில் பழுப்பு நிலக்கரி கிடைக்குமிடம் ______
13. "நீர்மத்தங்கம்" என அழைக்கப்படுவது ______
14. இயற்கை எரிவாயு பொதுவாக _______ பகுதிகளுடன் இணைந்து காணப்படுகிறது.
15. கெயில் (GAIL) நிறுவனத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம் _______
16. அதிக அளவிலான இயற்கை எரிவாவு _______ மற்றும் ______ எண்ணெய் வயல் பகுதிகளில் காணப்படுகிறது.
17. இயற்கை எரிவாயு உற்பத்தியில் முன்னோடியாகத் திகழும் நிறுவனம் ______
18. ______ மற்றும் ______ தாதுவிலிருந்து அணுசக்தி பெறப்படுகிறது.
19. தமிழ்நாட்டில் அணுமின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் ______ மற்றும் ______
20. அலை சக்தி ஆலை திருவனந்தபுரத்திற்கு அருகில் நிறுவப்பட்டுள்ள இடம் ______
21. பருத்தி இழையிலிருந்து விதைகளைப் பிரித்தெடுக்கும் முறைக்கு ______ என்று பெயர்.
22. ______ என்பது குறைவான விலையில் கிடைக்கக்கூடிய இழை நார் ஆகும்.
23. பட்டு உற்பத்தியில் இந்தியாவில் முதன்மை மாநிலமாக உள்ளது ______
24. இந்தியாவில் காகித உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலம் ______ ஆகும்.
25. இந்தியாவின் முதல் நவீன இரும்பு எஃகு ஆலை ______

விடைகள்

1. சுரங்கத்தொழில்	2. கொல்கத்தா	3. உலோகக் கனிமங்கள், அலோகக்கனிமங்கள்
4. மாங்கனீசு	5. நாக்பூர்	6. பித்தளை
7. பாக்சைட்	8. ஒடிசா	9. இராஜஸ்தான்
10. எரிசக்தி வளங்கள்	11. கோண்டுவானா தொடர்	
12. நெய்வேலி	13. பெட்ரோலியம்	14. பெட்ரோலிய
15. புதுடெல்லி	16. மும்பை ஹை மற்றும் பேஸ்ஸைம்	
17. இந்திய இயற்கை எரிவாயு நிறுவனம்		18. யுரேனியம், தோரியம்
19. கல்பாக்கம், கூடங்குளம்	20. விழிஞ்சம்	21. ஜின்னிங்
22. சணல்	23. கர்நாடகம்	24. மேற்கு வங்காளம்
25. டாட்டா இரும்பு எஃகு தொழிற்சாலை		

IV. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. வளத்தை வரையறுத்து அதன் வகைகளைக் குறிப்பிடுக.

- இயற்கையிலிருந்து பெறப்பட்டு உயிரினங்களால் பயன்படுத்தப்படும் அனைத்து வளங்களும் "இயற்கை வளம்" என்று அழைக்கப்படுகிறது.

வகைகள்:

1. புதுப்பிக்கக் கூடிய வளங்கள்
2. புதுப்பிக்க இயலா வளங்கள்

2. இந்தியாவில் இரும்பு தாது உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் மாநிலங்களைக் குறிப்பிடுக.

ஹேமடைட் தாது படிவுகள் காணப்படும் மாநிலங்கள்:

- அசாம்
- பீகார்
- சத்தீஸ்கர்
- ஜார்கண்ட்
- ஒடிசா
- உத்திரப்பிரதேசம்

மேக்னடைட் தாதுப்படிவுகள் காணப்படும் மாநிலங்கள்

- ஆந்திரப்பிரதேசம்
- கோவா
- கர்நாடகா
- கேரளா
- தமிழ்நாடு

3. கனிமங்கள் மற்றும் அதன் வகைகள் யாவை?

கனிமங்கள்

- ஒரு குறிப்பிட்ட வேதியியல் மற்றும் இயற்பியல் பண்புகளைக் கொண்ட உயிருள்ள மற்றும் உயிரற்ற இயற்கை மூலங்கள் கனிமங்கள் ஆகும். இவை புவியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்படுகிறது.

வகைகள்

- வேதியியல் மற்றும் இயற்பியல் பண்புகளின் அடிப்படையில் கனிமங்கள் இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை,
  i. உலோகக் கனிமங்கள்
  ii. அலோகக் கனிமங்கள்

4. மெக்னீசியத்தின் பயன்களை குறிப்பிடுக. PTA

- உருகிய இரும்புக் குழம்போடு மக்னீசியத்தைச் சேர்க்க இரும்பின் பயன்பாடு மேம்படுகிறது. அதனால் இரும்பின் கட்டமைப்பு பட்டறைப் பயன்பாடு மேலும் சிறப்பாகிறது.
- மக்னீசியம் அணு உலைகளின் உட்சுவர்களை கட்டமைக்கப் பயன்படுகிறது.
- தூய சிலிகான் மற்றும் போரானை அவற்றின் நிலையான ஆக்ஸைடுகளிலிருந்து பிரித்தெடுக்க மெக்னீசியம் உதவுகிறது.

5. இயற்கை எரிவாயு என்றால் என்ன?

- இயற்கை எரிவாயு என்பது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் அழிந்து புதையுண்ட தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் அதிக வெப்பம் மற்றும் அழுத்தம் காரணமாக மக்குவதன் மூலம் உண்டாகக்கூடிய ஒரு வாயு ஆகும்.
- இயற்கை எரிவாயு பொதுவாக பெட்ரோலிய பகுதிகளுடன் இணைந்து காணப்படுகிறது.
- இது வெப்பப்படுத்தலுக்கும், சமையலுக்கும் மின் உற்பத்திக்கும் வாகனங்களுக்கு எரிபொருளாகவும் விளங்குகிறது.

6. நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக. PTA

நிலக்கரி:

- நிலக்கரி என்பது எளிதில் எரியக்கூடிய உயிரின படிமங்கள் கொண்ட ஒரு நீரக கனிமம் ஆகும். இது படிவுப் பாறைகளில் கிடைக்கிறது.
- நிலக்கரி ஒரு நாட்டின் தொழிற்சாலை வளர்ச்சிக்கு மிக இன்றியமையாததாக இருப்பதால் இது 'கருப்பு தங்கம்' (Black gold) என அழைக்கப்படுகிறது.

வகைகள்		கரிம அளவு
i. ஆந்தரசைட்	:	80 முதல் 90 சதவீதம்.
ii. பிட்டுமினஸ்	:	60 முதல் 80 சதவீதம்.
iii. பழுப்பு நிலக்கரி	:	40 முதல் 60 சதவீதம்.
iv. மரக்கரி	:	40 சதவீதத்திற்கும் குறைவு.

7. இந்தியாவில் சணல் உற்பத்தி செய்யும் முக்கிய பகுதிகளைக் குறிப்பிடுக.

- சணல் உற்பத்தி பகுதிகள் மேற்கு வங்கத்தில் உள்ள ஹுக்ளி ஆற்றங்கரை நெடுகிலும் அமைந்துள்ளது.
- டிட்டகார், ஜகட்டட், பட்ஜ் – பட்ஜ், ஹவுரா மற்றும் பத்ரேஸ்வர் ஆகியன முதன்மை சணல் பொருள்கள் உற்பத்தி மையங்களாகும்.
- ஆந்திரப்பிரதேசம், பீகார், அசாம், உத்திரப்பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் ஒடிசா ஆகியன சணல் பொருள் உற்பத்தி பொருட்களின் பிற மாநிலங்களாகும்.

புவியியல்

8. இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகளைக் குறிப்பிடுக. PTA

மேற்குக் கடற்கரையிலுள்ள எண்ணெய் வயல்கள்:

- பேஸ்ஸைம் எண்ணெய் வயல்
- மும்பை ஹை
- குஜராத் கடற்கரை
- அங்கலேஸ்வர்
- காம்பே–லூனி பகுதிகள்
- அகமதாபாத் – கலோல் பகுதி

கிழக்குக் கடற்கரையிலுள்ள எண்ணெய் வயல்கள்:

- பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு (அசாம்)
- திக்பாய்

- நாகர்காட்டியா
- மோரான் ஹக்ரிஜன்
- ருத்ரசாகர் – லாவா
- சர்மா பள்ளத்தாக்கு
- அந்தமான், நிகோபாரின் உட்பகுதிகள்
- மன்னார் வளைகுடா
- பலேஷ்வர் கடற்கரை

கூடுதல் வினாக்கள்

9. புதுப்பிக்கக்கூடிய மற்றும் புதுப்பிக்க இயலாத வளங்களைப் பட்டியலிடுக.

புதுபிக்கக்கூடிய வளங்கள்

- சூரிய ஆற்றல்
- காற்று சக்தி
- உயிரி வளம்
- ஓத சக்தி
- அலை சக்தி

புதுப்பிக்க இயலாத வளங்கள்

- நிலக்கரி
- பெட்ரோலியம்
- இயற்கை வாயு

10. இந்தியாவில் காணப்படும் மதிப்புமிக்க உலோகங்கள் யாவை?

- இரும்பு
- மாங்கனீசு
- தாமிரம்
- பாக்சைட்
- நிக்கல்
- துத்தநாகம்
- காரீயம்
- தங்கம்

11. அலோகக் கனிமங்கள் யாவை?

- மைக்கா
- சுண்ணாம்புக்கல்
- ஜிப்சம்
- நைட்ரேட்
- பொட்டாஷ்
- டோலமைட்
- நிலக்கரி
- பெட்ரோலியம்

12. கெயில் (GAIL) நிறுவனம் பற்றி குறிப்பு வரைக.

- கெயில் நிறுவனம் என்பது இந்திய இயற்கை எரிவாயு நிறுவனமாகும். இது மாநில நிர்வாகத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இதன் தலைமையகம் புதுடெல்லியில் உள்ளது.
- இது இயற்கை எரிவாவு உற்பத்தி மற்றும் விநியோகம் செய்யும் நிறுவனங்களுள் மிகப்பெரிய நிறுவனமாகும்.

13. இந்தியாவிலுள்ள அணுமின் நிலையங்களைக் குறிப்பிடுக.

- தாராப்பூர் – மும்பை
- கோட்டா – இராஜஸ்தான்
- கல்பாக்கம் – தமிழ்நாடு
- கூடங்குளம் – தமிழ்நாடு
- நரோரா – உத்திரப்பிரதேசம்
- கைகா – கர்நாடகா
- காக்கரபாரா – குஜராத்

14. தொழிலகங்கள் மற்றும் அதன் வகைகளைக் குறிப்பிடுக.

தொழிலகங்கள்:

- மூலப்பொருட்கள் இயந்திரங்களின் மூலம் உற்பத்திப் பொருட்களாக மாற்றப்படும் இடங்கள் தொழிலகங்கள் எனப்படும்.

வகைகள்:

- வேளாண் சார்ந்த தொழிலகங்கள் எ.கா: பருத்திநெசவு, சணல் ஆலை மற்றும் சர்க்கரை ஆலை.
- காடுகள் சார்ந்த தொழிலகங்கள் எ.கா: காகிதத் தொழிற்சாலை மற்றும் மரச்சாமான் செய்தல்.
- கனிமம் சார்ந்த தொழிலகங்கள் எ.கா: இரும்பு எஃகுத்தொழில் மற்றும் வாகனத் தொழிலகங்கள்.

15. முக்கிய இரும்பு எஃகு ஆலைகள் அமைந்துள்ள இடங்கள் யாவை?

- ஜாம்ஷெட்பூர் – ஜார்கண்ட்
- பர்ன்பூர் – மேற்கு வங்காளம்
- பிலாய் – சத்தீஸ்கர்
- ரூர்கேலா – ஒடிசா
- துர்காபூர் – மேற்கு வங்காளம்
- பொகாரோ – ஜார்கண்ட்
- சேலம் – தமிழ்நாடு
- விசாகப்பட்டினம் – ஆந்திரப்பிரதேசம்

16. இந்தியாவின் முக்கிய மென்பொருள் நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிடுக. **PTA**

- டாடா கன்சல்டன்சி சர்வீசஸ்
- எல் & டி
- இன்போடெக்
- ஐ–பிளக்ஸ்
- அசெஞர்
- காக்னிசன்ட்
- கேலக்ஸி சொல்யுசன்ஸ்
- ஐ டி சி

17. மாங்கனீசுவின் பயன்களைக் குறிப்பிடுக.

மாங்கனீசுவின் பயன்கள்:

- மாங்கனீசு இரும்பு எஃகு மற்றும் உலோக உற்பத்திக்கு அடிப்படையான மூலப்பொருள் ஆகும்.
- வெளுக்கும் தூள், பூச்சிக் கொல்லிகள், வண்ணப்பூச்சுகள், மின்கலன்கள் போன்றவை தயாரிப்பதற்கு மாங்கனீசு பயன்படுகிறது.

18. தாமிரத்தின் பயன்கள் யாவை?

- தாமிரம் நெகிழும் தன்மையுடையதால் அதனை பல்வேறு வடிவமுள்ள பொருட்களாக உருவாக்க முடியும்.
- உலோக்கலவை செய்யப் பயன்படுகிறது.
- பாத்திரங்கள் செய்யப் பயன்படுகிறது.
- பலவகையான மின்சாரக் கம்பிகள், மின்சாதனங்கள், கம்பி வடங்கள் போன்றவை உற்பத்தி செய்யப் பயன்படுகிறது.

19. சணலின் பயன்கள் யாவை?

- சணல் பைகள், கூடாரத்துணிகள், சிப்பலைகள், தரைவிரிப்பு, திரைச்சீலைகள், கயிறுகள், துணிகள், கால் மிதியடிகள் போன்றவை தயாரிக்க சணல் பயன்படுகிறது.

20. இந்தியாவின் மான்செஸ்டர் எனப்படுவது எது? ஏன்?

- மும்பை மற்றும் அதன் புறநகர் பகுதியில் பருத்தியாலைகள் மிக அதிகமாகக் காணப்படுவதால் மும்பை 'இந்தியாவின் மான்செஸ்டர்' என்று அழைக்கப்படுகிறது.

V. வேறுபடுத்துக.

பாடநூல் வினாக்கள்

1. புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலாத வளங்கள். PTA

புதுப்பிக்க இயலும் வளங்கள்	புதுப்பிக்க இயலாத வளங்கள்
➢ பயன்பாட்டிற்குப் பிறகு இயற்கை முறையில் மீண்டும் மீண்டும் பயன்படுத்தக் கூடிய வளங்கள் புதுப்பிக்க இயலும் வளங்களாகும்.	➢ பயன்பாட்டிற்கு பிறகு மீண்டும் (மீட்டுருவாக்கம்) பயன்படுத்த இயலாத வளங்கள் புதுப்பிக்க இயலாத வளங்களாகும்.
➢ சூரிய ஆற்றல், காற்று சக்தி, உயிரி வளிமம், ஓத சக்தி, அலை சக்தி, போன்றவை புதுப்பிக்க இயலும் வளங்களாகும்.	➢ நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை வாயு போன்றவை புதுப்பிக்க இயலாத வளங்களாகும்.

2. உலோகம் மற்றும் அலோக கனிமங்கள். PTA

உலோகக் கனிமங்கள்	அலோகக் கனிமங்கள்
➢ உலோகக் கனிமங்கள் என்பவை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உலோகங்களைக் கொண்டிருக்கும்.	➢ அலோகக் கனிமங்களில் உலோகத்தன்மை இருப்பதில்லை.
➢ உலோகக் கனிமப் படிவுகளில் இரும்பு, மாங்கனீசு, தாமிரம், பாக்சைட், நிக்கல், துத்தநாகம், காரியம் தங்கம் போன்ற மதிப்புமிக்க உலோகங்கள் காணப்படுகின்றன.	➢ மைக்கா, சுண்ணாம்பு, ஜிப்சம், நைட்ரேட், பொட்டாஷ், டோலமைட், நிலக்கரி, பெட்ரோலியம் ஆகியன முக்கிய அலோகக் கனிமங்களாகும்.

3. வேளாண்மை சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள் PTA

வேளாண் சார்ந்த தொழிலகங்கள்	கனிமம் சார்ந்த தொழிலங்கள்
➢ வேளாண் சார்ந்த தொழிலகங்கள் வேளாண் துறையிலிருந்து மூலப் பொருட்களைப் பெறுகின்றன.	➢ இத்தொழில்கள் உலோகம் மற்றும் உலோகமற்ற பொருட்களை மூலப்பொருட்களாக பயன்படுத்துகின்றன.
➢ பருத்தி நெசவாலைகள், சணல் ஆலைகள், பட்டு நெசவாலைகள், சர்க்கரை ஆலைகள், ஆகியன வேளாண் சார்ந்த தொழிலகங்களுக்கு முக்கிய சான்றுகளாகும்.	➢ இரும்பு எஃகு தொழிற்சாலைகள், சிமெண்ட் தொழிற்சாலைகள், இரசாயன உரத்தொழிற்சாலைகள் ஆகியன கனிமம் சார்ந்த தொழிலகங்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

4. சணல் ஆலைகள் மற்றும் சர்க்கரை ஆலைகள்

சணல் ஆலைகள்	சர்க்கரை ஆலைகள்
➢ சணல் ஆலைகள் என்பது குறைவான விலையில் கிடைக்கக்கூடிய சணலிலிருந்து பொருட்கள் தயாரிக்கும் ஆலைகளாகும்.	➢ சர்க்கரை ஆலைகள் என்பது கரும்பு, சர்க்கரை கிழங்குகள் ஆகியவற்றிலிருந்து சர்க்கரை தயாரிக்கும் ஆலைகளாகும்.
➢ சணல் உற்பத்தியில் உலகில் வங்கதேசத்திற்கு அடுத்து இந்தியா இரண்டாமிடம் வகிக்கிறது.	➢ கரும்பு உற்பத்தியில் இந்தியா, பிரேசிலுக்கு அடுத்தபடியாக இரண்டாமிடம் வகிக்கிறது.
➢ இந்தியாவில் சணல் ஆலைகளில் மேற்கு வங்காளம் முதலிடம் பெறுகிறது.	➢ சர்க்கரை ஆலைத் தொழிலில் உத்தரப்பிரதேசம் இந்தியாவில் முதலிடம் வகிக்கிறது.

➤ சணல் பொருட்கள் உற்பத்தி செய்யும் மாநிலங்கள் மேற்கு வங்காளம், ஆந்திரப் பிரதேசம், பீகார், அசாம், உத்திரப்பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் ஒடிசா ஆகும்.	➤ சர்க்கரை ஆலைகள், உத்திரப்பிரதேசம், பீகார், மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், குஜராத், தமிழ்நாடு, ஹரியானா, பஞ்சாப் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ளன.

5. மரபு சார் மற்றும் மரபு சாரா எரிசக்தி

மரபு சார் எரிசக்தி	மரபு சாரா எரிசக்தி
➤ மரபு சார் எரிசக்தி புதுப்பிக்க இயலாத வளங்களாகும்.	➤ மரபு சாரா எரிசக்தி புதுப்பிக்கக் கூடிய வளங்களாகும்.
➤ பெரும்பாலான வளங்கள் பயன்பாட்டின்போது மாசுக்கள் ஏற்படக் காரணமாகின்றன.	➤ பயன்பாட்டின் போது மாசுகள் ஏற்பட வாய்ப்புகளில்லை.
➤ அனல் மின்சக்தி, அணுமின்சக்தி ஆகியன எடுத்துக்காட்டுகளாகும்	➤ நீர்மின் சக்தி, சூரிய சக்தி, காற்று சக்தி உயிரி சக்தி, ஆகியன முக்கிய எடுத்துக்காட்டுகளாகும்

கூடுதல் வினாக்கள்

6. தாமிரம் மற்றும் மைக்கா

தாமிரம்	மைக்கா
➤ இது ஒரு உலோகக் கனிமமாகும்.	➤ இது ஒரு அலோகக்கனிமமாகும்.
➤ இது வரலாற்றிற்கு முந்தைய காலத்திலேயே மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட உலோகமாகும்.	➤ இது பண்டைய காலத்தில் ஆயுர்வேத மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்ட அலோகமாகும்.
➤ இது நெகிழும் தன்மையுடையதால் இதனை பல்வேறு வடிவமுடைய பொருட்களாக உருவாக்க முடியும்.	➤ இது ஒளிபுகும் தன்மையுடையதால் எளிதில் மிக மெல்லிய பட்டைகளாக பிரித்தெடுக்கக் கூடியது ஆகும்.

7. காற்று சக்தி மற்றும் உயிரி சக்தி.

காற்று சக்தி	உயிரிசக்தி
➤ காற்று வீச்சினால் அல்லது உந்துதலால் ஏற்படும் ஆற்றலை காற்று விசைச்சுற்று கலன்களின் உதவியோடு மின்னாற்றலாக மாற்றப்பட்டு காற்றாலை மின்சாரம் பெறப்படுகிறது.	➤ விலங்குகளின் கழிவுகள், சமையல் கழிவுகள், ஆகாய தாமரை கழிவுகள், வேளாண் கழிவுகள் மற்றும் நகரக் கழிவுகள் போன்ற உயிரினக் கழிவுகளிலிருந்து உயிரி சக்தி பெறப்படுகிறது.
➤ காற்று சக்தியானது மின் உற்பத்திக்கும், கப்பல்களை இயக்குவதற்கும் பயன்படுகின்றது.	➤ இச்சக்தியானது பெரும்பாலும் வீட்டு உபயோகங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

8. நீர் மின்சக்தி மற்றும் அனல் மின்சக்தி.

நீர் மின்சக்தி	அனல் மின்சக்தி
➤ நீர் மின் சக்தி ஓடும் நீரிலிருந்து பெறப்படுகிறது.	➤ அனல் மின் சக்தி நிலக்கரி, பெட்ரோலியம், டீசல் மற்றும் இயற்கை எரிவாயு ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படுகிறது.
➤ இது புதுப்பிக்கத்தக்கது.	➤ இது புதுப்பிக்க இயலாதது.
➤ நீர் மின்சக்தி தயாரிப்பதால் சுற்றுச்சூழல் மாசுபடுவதில்லை	➤ அனல் மின்சக்தி உற்பத்தியால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது.

9. இரும்பு எஃகுத் தொழிலகம் மென்பொருள் தொழிலகம்.

காற்று சக்தி	உயிரிசக்தி
➤ இது ஒரு கனிமம் சார்ந்த தொழிலகமாகும்.	➤ இது கனிமம் சார்ந்த தொழிலகம் அல்ல.
➤ எஃகுத் தொழிலகங்கள், ஜார்கண்ட், மேற்குவங்காளம் மற்றும் ஒடிசா மாநிலங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன.	➤ மென்பொருள் தொழிலகம் நாட்டின் பல்வேறு முக்கிய நகரங்களின் பரவலாகக் காணப்படுகிறது.
➤ இந்தியாவில் 10 பெரிய இரும்பு எஃகுத் தொழிலகங்கள் உள்ளன.	➤ இந்தியாவில் 500 க்கு மேற்பட்ட மென்பொருள் தொழிலகங்கள் அமைந்துள்ளன.

VI. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக.

இந்திய பருத்தி நெசவாலைகள்:

- பருத்தி நெசவாலைகள் நம் நாட்டின் அதிக வேலை வாய்ப்பை அளிக்கும் ஆதாரங்களில் ஒன்றாக உள்ளது.
- தற்போது இந்தியா, பருத்தி உற்பத்தியில் உலகின் மூன்றாவது பெரிய நாடாகவும் தறிகளிலும், நூற்பு கருவிகளின் எண்ணிக்கையிலும் முதன்மையான நாடாகவும் உள்ளது.
- தற்போது பருத்தி நெசவாலைகள் இந்தியாவின் மிகப்பெரிய நவீன தொழிலகப் பிரிவாக உள்ளது.

பருத்தி நெசவாலைகளின் பரவல்:

- மகாராஷ்டிரம், குஜராத், மேற்கு வங்காளம், உத்திரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பருத்தி நெசவாலைகள் செறிந்து காணப்படுகின்றன.
- தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், கரூர், சென்னை, திருநெல்வேலி, மதுரை, தூத்துக்குடி, சேலம், மற்றும் விருதுநகர் ஆகியன முக்கிய நெசவாலை நகரங்களாகும்.
- இந்தியாவில் இப்போது 1719 பருத்தி நெசவாலைகள் உள்ளன.

மும்பை–இந்தியாவின் மான்செஸ்டர்:

- மும்பை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பருத்தி நெசவாலைகள் செறிந்து காணப்படுவதால் மும்பை, இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுகிறது.
- இதற்குக் காரணம் மகாராஷ்டிரா மாநிலத்தில் காணப்படும் கரிசல் மண், ஈரப்பதக்கால நிலை, மும்பைத் துறைமுகம், எளிதில் கிடைக்கும் நீர்மின்சக்தி, சந்தை வசதி மற்றும் சிறந்த போக்குவரத்து வசதி ஆகியனவாகும்.

கோயம்புத்தூர்–தென்னிந்தியாவின் மான்செஸ்டர்

- தமிழ்நாட்டிலுள்ள கோயம்புத்தூரில் அதிக எண்ணிக்கையிலான பருத்தி நெசவாலைகள் உள்ளன. இதனால் கோயம்புத்தூர் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படுகிறது.

2. ஹுக்ளி ஆற்றுப் பகுதியில் சணல் தொழிலகங்கள் செறிந்து காணப்படுவதற்கான காரணிகளை விளக்குக.

- ஹுக்ளி ஆற்றுப் பகுதியில் சணல் பயிரிட உகந்த காலநிலை, மண்வளம் மற்றும் நீர்ப்பாசன வசதி போதுமான அளவு உள்ளது.
- சணல், குறைவான விலையில் கிடைக்கக்கூடிய ஒரு இழைப்பயிர். இம்மூலப்பொருள் ஹுக்ளி ஆற்றுப்பகுதிகளில் அதிகமாகப் பயிரிடப்படுகின்றது.

- ஆலைக்குத் தேவையான மலிவான தொழிலாளர்கள் மேற்கு வங்காளம், பீகார், ஒடிசா போன்ற மாநிலங்களிலிருந்து கிடைக்கின்றனர்.
- சாலைப்போக்குவரத்து, ரயில் போக்குவரத்து ஹூக்ளி ஆற்றுப்பகுதியோடு இணைக்கப்பட்டுள்ளன.
- கொல்கத்தா துறைமுகம் அருகில் அமைந்துள்ளதால் குறைந்த செலவில் பொருட்களை துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லவும், ஏற்றுமதி செய்யவும் வசதியாக உள்ளது.
- வங்கிகள் மற்றும் காப்புறுதி நிறுவனங்கள் போன்ற வசதிகளையும் இப்பகுதி பெற்றுள்ளது.
- தொழிற்சாலைக்குத் தேவையான நீர் ஹூக்ளி நதியிலிருந்து கிடைக்கிறது.

3. இந்தியாவின் இரும்பு எஃகு தொழிலகங்கள் பற்றி ஒரு தொகுப்பு எழுதுக. **PTA**

- இரும்பு எஃகு தொழிற்சாலைகள் இதன் உற்பத்தி பொருள்களை மற்ற தொழிலகங்களுக்கு தேவையான மூலப்பொருளாக அளிப்பதனால் இது அடிப்படையான உலோகத் தொழிற்சாலை என அழைக்கப்படுகிறது.
- பொறியியல் கனரக இயந்திரங்கள், எந்திரக் கருவிகள், வாகனங்கள், ரயில் என்ஜின்கள் மற்றும் ரயில்வே உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இரும்பை மூலப்பொருள்களாகப் பயன்படுத்துகின்றன.
- ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி இரும்பு எஃகு உற்பத்தியின் அளவைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது.
- டாட்டா இரும்பு எஃகு தொழிற்சாலை 1907 ஆம் ஆண்டு 'சாக்சி' என்றழைக்கப்பட்ட ஜாம்ஷெட்பூரில் தொடங்கப்பட்ட முதல் நவீன தொழிற்சாலையாகும்.
- இரும்பு எஃகு ஆலைகள் ஜார்கண்ட், மேற்கு வங்காளம், ஒடிசா ஆகிய மாநிலங்களில் செறிந்து காணப்படுகின்றன.
- ஜாரியா, ராணிகஞ்ச், பொகாரோ, கரன்புரா ஆகிய நிலக்கரி வயல்களும் மற்றும் மயூர்பஞ்ச், கியோன்சர், புரேனா ஆகிய இரும்புதாது சுரங்கங்களும் ஒன்றுக்கொன்று அருகாமையில் அமைந்திருப்பது இதன் செறிவிற்குக் காரணமாகும்.
- மேலும் இத்தொழிற்சாலைக்குத் தேவையான டோலமைட், மாங்கனீசு மற்றும் சிலிகான் போன்ற தாது படிவுகள் போதுமான அளவில் கிடைக்கின்றன.
- இந்தியாவில் 10 பெரிய இரும்பு எஃகுத் தொழிலகங்கள் அமைந்துள்ளன.
- டாட்டா இரும்பு எஃகு ஆலை, இந்தியா எஃகு நிறுவனம், இந்துஸ்தான் எஃகு நிறுவனங்கள், விஸ்வேஷ்வரையா இரும்பு எஃகு நிறுவனம் மற்றும் சேலம் எஃகு ஆலை ஆகியவை முக்கியமான இரும்பு எஃகுத் தொழிலகங்கள் ஆகும்.

கூடுதல் வினாக்கள்

4. மென்பொருள் தொழிலகம் பற்றி எழுதுக.

- இந்தியா உலகிலுள்ள மிகச்சிறந்த சில மென்பொருள் நிறுவனங்களின் தாயகமாக உள்ளது. இந்திய மென்பொருள் தொழிலகங்களானது தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிகம் சார்ந்த தீர்வுகள் அளிப்பதில் உலகப்பிரசித்தி பெற்றவைகளாக உள்ளன.
- இந்திய பொருளாதார வளர்ச்சியில் ஒரு மிகப்பெரிய வெற்றியை இந்திய மென்பொருள் தொழிலகங்கள் அடைந்துள்ளன.
- டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் இந்தியாவின் முதல் மென்பொருள் தொழிலகமாகும். இது 1970 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- டாடா கன்சல்டன்சி சர்வீசஸ், எல் & டி, இன்போடெக், ஐ–பிளக்ஸ், அசெஞர், காக்னிசன்ட், கேலக்ஸி சொல்யுசன்ஸ், ஐ டி சி போன்றவைகள் இந்தியாவின் முக்கியமான மென்பொருள் தொழிலகங்களாகும்.
- தற்சமயம், இந்தியா முழுவதும் 500க்கும் மேற்பட்ட மென்பொருள் தொழிலகங்கள் உள்ளன. இந்நிறுவனங்கள் உலகின் சுமார் 95 நாடுகளுக்கு மென்பொருள் ஏற்றுமதி சேவையை செய்கிறது.
- சென்னை, கோயம்புத்தூர், திருவனந்தபுரம், பெங்களூரு, மைசூரு, ஹைதராபாத், விசாகப்பட்டினம், மும்பை, பூனா, இந்தூர், காந்திநகர், ஜெய்ப்பூர், நொய்டா, மொகாலி மற்றும் ஸ்ரீநகர் இந்தியாவின் முக்கிய மென்பொருள் மையங்களாகும்.

5. இந்திய தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் யாவை?

- மின் பற்றாக்குறை மற்றும் சீரற்ற மின் வினியோகம்.
- தொழிலகங்கள் நிறுவுவதற்கேற்ற பரந்த நிலப்பரப்பு இல்லாமை.
- கடன் பெறுவதிலுள்ள நடைமுறை சிக்கல்கள்
- கடனுக்கான அதிக வட்டி விகிதம்
- மலிவான ஊதியத்திற்கு வேலையாட்கள் கிடைக்காமை.
- ஊழியர்களுக்கான தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை பயிற்சிகள் இல்லாமை.
- தொழிற்பேட்டைகளுக்கருகில் வசிப்பதற்கு ஏற்ற சூழல் இல்லாமை.

6. வாகனத் தானியங்கி தொழிலகங்கள் – விவரி.

- இந்தியாவில் மிக வேகமாக வளர்ந்து வரும் தொழிலகங்களில் இதுவும் ஒன்று
- இந்தியாவில் முதல் வாகனத் தொழிலகம் மும்பைக்கு அருகில் உள்ள குர்லா என்னும் இடத்தில் 1947 – ல் பிரீமியர் வாகன நிறுவனம் என்ற பெயரில் தொடங்கப்பட்டது.
- இதைத் தொடர்ந்து 1948 கொல்கத்தாவிற்கு அருகில் உள்ள உத்தர்பரா என்னும் இடத்தில் இந்துஸ்தான் மோட்டார் நிறுவனம் தொடங்கப்பட்டது.
- தற்போது இந்தியா வாகன உற்பத்தியில் ஏழாவது பெரிய நாடாக விளங்குகிறது.
- இந்நிறுவனமானது இரு சக்கர வாகனங்கள், மகிழுந்துகள், ஜீப், மூன்று சக்கர வாகனங்கள், வர்த்தக ரீதியான வாகனங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்கிறது.
- மும்பை, சென்னை, ஜாம்ஷெட்பூர், ஜபல்பூர், கொல்கத்தா, பூனா, புது தில்லி, கான்பூர், பெங்களூரு, சதாரா, லக்னோ, மற்றும் மைசூர் நகரங்கள் முக்கிய உற்பத்தி மையங்களாக உள்ளன.
- டாடா மோட்டார்ஸ், மாருதி சுசுகி, மஹிந்திரா &மகேந்திரா இந்துஸ்தான் மோட்டார்ஸ் போன்ற நிறுவனங்கள் மக்கள் பயணிக்கும் பெரிய கார்களை தயாரிக்கும் இந்திய நிறுவனங்களாகும்.
- இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள பன்னாட்டு நிறுவனங்களான மெர்சிடிஸ், பென்ஸ், ஃபியட், ஆடி, வால்வோ ஆகியன மேலும் சிறப்பு செய்துள்ளது.
- அசோக் லைலேண்ட், இஷர் மோட்டார்ஸ், MAN, ITEC மெஸ்சிடர்ஸ் – ஹீண்டாய் போன்ற நிறுவனங்கள் வர்த்தக ரீதியான வாகனங்களை உற்பத்தி செய்கின்றன.
- இந்தியாவில் வாகனத் தொழிலகங்கள் நான்கு திரள்களாக காணப்படுகின்றன.அவை
  - வட இந்தியா – டெல்லி, குர்கான், மனேசர்
  - மேற்கு இந்தியா – போனா, நாசிக், ஹலோல், ஔரங்காபாத்
  - தென் இந்தியா – சென்னை, பெங்களூரு, ஓசூர்
  - கிழக்கு இந்தியா – ஜாம்ஷெட்பூர், கொல்கத்தா.

வரைபடம்

இந்தியா – இரும்பு எஃகு தொழிலகங்கள் மற்றும் இரும்புத்தாது கிடைக்கும் இடங்கள்





இந்தியா – பெட்ரோலியம், இயற்கை எரிவாயு மற்றும் நிலக்கரி கிடைக்கும் இடங்கள்



அலகு புவியியல்

5 இந்தியா – மக்கள் தொகை, போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் வணிகம்

மனவரைபடம்

இந்தியா மக்கள்தொகை போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் வணிகம்

மக்கள் தொகைக் கலவையின் பண்புகள்

வயது, பாலினம், திருமணநிலை, சாதி, மதம், மொழி, கல்வி, தொழில்

வயது கலவை கீழ்க்கண்ட விகிதத்தைப் புரிந்து கொள்ள உதவுகிறது.

- மக்கள் தொகை விகிதம்
- 15 வயதிற்குக் குறைவானவர்கள் (29.5%)
- 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் (8%)
- சார்ந்துள்ள மக்கள் தொகை 37.5%

மக்கள் தொகை பிறப்பு இறப்பு பற்றிய புள்ளியியல் ஆய்வை பாதிக்கும் காரணிகள்.

- பொருளாதார, சமூக மற்றும் சுற்றுப்புறச் சூழல் அமைப்பு
- மக்கள் தொகை அதிகரித்தல்
- இயற்கை வளங்களின் தன்மை

நகரமயமாக்கம் (2001 – 2011) நகரங்களின் வகைகள் (எண்களில்)

- சட்டப்பூர்வ நகரங்கள் (3799 – 4041)
- கணக்கெடுப்பு நகரங்கள் (1362 – 3894)
- நகர குவியல்கள் (384 – 475)
- புறவளர்ச்சி நகரங்கள் (962 – 981)

கடல் வழிப் போக்குவரத்து

- கடல் மற்றும் பெருங்கடல் வழிகள் சர்வதேச வணிகத்திற்காக துறைமுகங்கள் மூலம் இணைக்கப்படுகின்றன.
- பெரிய துறைமுகங்களை மத்திய அரசாங்கம் நிர்வாகம் செய்கிறது.
- கிழக்கு இந்தியக் கடற்கரையில் அமைந்துள்ள துறைமுகங்கள் பாரதீப், விசாகப்பட்டினம், சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி.

நினைவில் கொள்க

- இந்தியாவில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு **பத்து வருடங்களுக்கு** ஒரு முறை நடத்தப்படுகிறது.
- ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் வாழக்கூடிய மொத்த மக்களின் எண்ணிக்கை **மக்கள்தொகை** ஆகும்.
- சராசரியாக ஒரு சதுரகிலோமீட்டர் பரப்பளவில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுவது **மக்கள் தொகை அடர்த்தி** எனப்படும்.
- ஒரு வருடத்தில் 1000 மக்கள் எண்ணிக்கையில் உயிருடன் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையை **பிறப்பு விகிதம்** என்கிறோம்.
- **பாலின விகிதம்** என்பது மக்கள் தொகையில் 1000 ஆண்களுக்கு உள்ள பெண்களின் எண்ணிக்கையைக் குறிப்பதாகும்.
- எழுத்தறிவில் முதல் மாநிலமாகத் திகழ்வது **கேரளா** (93.9%). குறைந்த எழுத்தறிவு பெற்ற மாநிலம் **பீகார்** (63.82%) ஆகும்.
- கிராமப்புற சமுதாயம் நகர்ப்புற சமுதாயமாக மாற்றமடைவதையே **நகரமயமாக்கம்** என்கிறோம்.
- சமுதாயத்தின் அனைத்துப் பிரிவு மக்களும் பயன்படுத்தக்கூடிய மலிவான போக்குவரத்து **சாலை வழியாகும்.**
- இந்தியாவின் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை NH7 ஆகும். (வாரணாசி – கன்னியாகுமரி 2369 கி.மீ)
- உலகிலேயே உயரமான (4270 மீ) எல்லைப்புறச் சாலை லடாக்கிலுள்ள **லேவில்** இருந்து **சண்டிகர்** வரை அமைக்கப்பட்டுள்ளது.
- வட–தென் பகுதிகளை இணைக்கும் சாலையும் (காஷ்மீர் – கன்னியாகுமரி), கிழக்கு–மேற்கு பகுதிகளை இணைக்கும் சாலையும் **(அசாம்–குஜராத்)** சந்திக்குமிடம் **ஜான்சி**
- இந்திய தரைவழிப் போக்குவரத்து அமைப்பின் முதுகெலும்பாகக் கருதப்படுவது **இரயில் போக்குவரத்து** ஆகும்.
- மெட்ரோ இரயில் போக்குவரத்து சேவை முதன் முதலில் தொடங்கப்பட்ட நகரம் **கொல்கத்தா.**
- உலகளாவிய தகவல் பரிமாற்ற வலையமைப்பினை **இணையம்** என்கிறோம்.
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்பிற்கிடையே உள்ள வேறுபாடு **வணிகச் சமநிலை** (Balance of trade) எனப்படும்.

இடங்களும் அதன் முக்கியத்துவமும்

- இந்தியாவின் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1872ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.
- முழுமையான முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1881 ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.
- பொருளாதாரச் செயல்பாடுகளில் ஈடுபடுவோர் மற்றும் பொருளாதாரச் செயல்பாடுகளில் ஈடுபடாதோருக்குமிடையேயான விகிதம் சார்ந்திருப்போர் விகிதம் எனப்படுகிறது.

- ஷெர்சா சூரி தன்னுடைய பேரரசை பலப்படுத்தவும் ஒருங்கிணைக்கவும் சாஹி (ராயல்) சாலையை சிந்து பள்ளத்தாக்கிலிருந்து மேற்கு வங்கத்தில் உள்ள சோனார் பள்ளத்தாக்கு வரை அமைத்தார்.
- கொல்கத்தாவிலிருந்து பெஷாவர் வரை உள்ள இச்சாலை ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் கிரொண்ட் ட்ரங்ச்சாலை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- தற்போது இச்சாலை அமிர்தரசிலிருந்து கொல்கத்தா வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.
- இச்சாலை இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
- (அ) NH1 டெல்லியிலிருந்து அமிர்தரஸ் வரை.
- (ஆ) NH2 டெல்லியிலிருந்து கொல்கத்தா வரை.
- இந்தியாவின் தேசியநெடுஞ்சாலை ஆணையம் (NHAI) 1995 இல் நிறுவப்பட்டது. இது தரைவழி போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி பெற்ற அமைப்பாகும்.
- இந்தியாவின் முதல் இரயில் போக்குவரத்து மும்பை மற்றும் தானே நகரங்களுக்கிடையேயான 34 கி.மீ தூரத்திற்கு 1853இல் தொடங்கப்பட்டது.
- 1952இல் இரயில்வேயானது 'இந்தியன் இரயில்வே' என்ற பெயருடன் தேசியமயமாக்கப்பட்டது. இந்தியன் இரயில்வேயின் தலைமையகம் புதுடெல்லியாகும்.
- இந்தியாவின் முதல் புறநகர் இரயில் போக்குவரத்து மும்பையில் 1925இல் தொடங்கப்பட்டது.
- சென்னை நகரம் மெட்ரோ இரயில் சேவை கொண்ட ஆறாவது நகரமாகும்.
- காத்திமன் (GATHIMAN) அதிவிரைவு வண்டி இந்தியாவின் மிக அதிகவேக இரயில்வண்டி ஆகும்.
- மேகாலயா மாநிலத்தில் இரயில் போக்குவரத்து இல்லை.
- 2007 ஆம் ஆண்டு இந்திய அரசால் ஏர் இந்தியா மற்றும் இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனங்கள் இந்திய தேசிய விமானப் போக்குவரத்து கழகத்தின் (NACIK) கீழ் ஒருங்கிணைக்கப்பட்டது.
- 16) இதில் NACIK (அ) சர்வதேச விமான சேவையையும் NACIL (I) உள்நாட்டு மற்றும் அண்டைப் பகுதியில் உள்ள தென் கிழக்கு மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான சேவைகளையும் அளிக்கிறது.

வரைபட முக்கிய குறிப்புகள்

தலைப்பு	முக்கிய பகுதிகள்
அதிக மக்கள் தொகை	உத்திரப்பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம், ஆந்திரப்பிரதேசம், புதுடெல்லி யூனியன் பிரதேசம்
மிகக் குறைந்த மக்கள் தொகை	சிக்கிம்
அதிக மக்கள் அடர்த்தி	பீகார், புதுடெல்லி யூனியன் பிரதேசம்
குறைந்த மக்களடர்த்தி	அருணாச்சல பிரதேசம், அந்தமான் நிக்கோபர் தீவுகள் (யூனியன் பிரதேசம்)
பாலின விகிதம்	(அதிகம்) – கேரளா, புதுச்சேரி யூனியன் பிரதேசம். (குறைவு) – டையூ, டாமன் யூனியன் பிரதேசம்.
எழுத்தறிவு	(அதிகம்) – கேரளா (93.9%) (குறைவு) – பீகார் (63.82%)
நகரமயமாக்கம்	(அதிகம்) – கோவா, புதுடெல்லி யூ.பி (குறைவு) – இமாச்சலப்பிரதேசம்.
சாலை வழி, தேசிய நெடுஞ் சாலை	(மிக நீளம்) NH7 – (வாரணாசி 2369 கி.மீ) – கன்னியாகுமரி (குறைந்த நீளம்) 47A – (எர்ணாகுளம் – கொச்சி 6 கி.மீ)

➢ தங்க நாற்கரச் சாலை	➢ புதுடெல்லி – கொல்கத்தா ➢ சென்னை – மும்பை
➢ வட–தென் பகுதிகளை இணைக்கும் சாலை	➢ ஸ்ரீ நகர் (ஜம்மு–காஷ்மீர்)–கன்னியாகுமரி (தமிழ்நாடு)
➢ மேற்கு–கிழக்கு பகுதிகளை இணைக்கும் சாலை	➢ சில்சர் (அசாம்) – போர்பந்தர் (குஜராத்)
➢ விரைவுச் சாலைகள்	➢ மும்பை – பூனா ➢ கொல்கத்தா – டம்டம் ➢ துர்காப்பூர் – கொல்கத்தா ➢ புதுடெல்லி – ஆக்ரா
இரயில் போக்குவரத்து ➢ முக்கிய மண்டலங்களும் தலைமையிடங்களும்	➢ வடக்கு – டெல்லி ➢ தெற்கு – சென்னை ➢ மேற்கு – மும்பை (சர்ச்கேட்) ➢ கிழக்கு – கொல்கத்தா ➢ மத்திய – மும்பை (சத்திரபதி சிவாஜி முனையம்) ➢ கொங்கன் – நவிமும்பை
➢ மெட்ரோ இரயில்	➢ கொல்கத்தா – (மேற்கு வங்காளம்) ➢ சென்னை – (தமிழ்நாடு) ➢ பெங்களூரு – (கர்நாடகா) ➢ மும்பை – (மகாராஷ்டிரா) ➢ கொச்சி – (கேரளா) ➢ ஜெய்ப்பூர் – (இராஜஸ்தான்) ➢ குர்கயோன் – (ஹரியானா) ➢ புதுடெல்லி
➢ நீர்வழி துறைமுகங்கள்	**மேற்குக் கடற்கரை** ➢ காண்ட்லா, மும்பை, நவசேவா, ஜவஹர் மர்மகோவா, நியூமங்களூரு, கொச்சி **கிழக்குக் கடற்கரை** ➢ கொல்கத்தா, ஹால்தியா, பாரதீப், விசாகப்பட்டினம், சென்னை, எண்ணூர், தூத்துக்குடி.
வான்வழி ➢ பன்னாட்டு விமான நிலையங்கள்	➢ புதுடெல்லி, சென்னை, மும்பை, கொல்கத்தா, திருவனந்தபுரம், பெங்களூரு, அகமதாபாத், ஐதராபாத்.

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. மக்கள் தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு
   அ) ஒளிப்படவியல் ஆ) மக்களியல்
   இ) ஆடற்கலையியல் ஈ) மக்களடர்த்தி

2. 2011 ஆம் ஆண்டின் மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம்
   அ) தமிழ்நாடு ஆ) கர்நாடகம்
   இ) கேரளா ஈ) உத்திரப்பிரதேசம்

புவியியல்

3. மனித வள மேம்பாடு __________ மூலம் கணக்கிடப்படுகிறது.
அ) மனித வளக்குறியீடு
ஆ) தனிநபர் குறியீடு
இ) மனித வள மேம்பாட்டு குறியீடு
ஈ) ஐக்கிய நாடுகளின் வளர்ச்சி திட்டம் (UNDP)

4. __________ போக்குவரத்து நேரடியாக உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் இணைக்கிறது.
அ) ரயில்வே ஆ) சாலை இ) வான்வழி ஈ) நீர்வழி

5. இந்தியாவில் தங்க நாற்கரச் சாலையின் நீளம்
அ) 5846 கி.மீ ஆ) 5847 கீ.மீ இ) 5849 கி.மீ ஈ) 5800 கி.மீ

6. இந்திய உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்தின் நீளமானது
அ) 17500 கி.மீ ஆ) 5000 கி.மீ இ) 14500 கி.மீ ஈ) 1000 கி.மீ

7. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம்
அ) பெங்களூரு ஆ) சென்னை இ) புது டெல்லி ஈ) ஹைதராபாத்

8. எளிதில் செல்லமுடியாத பகுதிகளுக்கு பயன்படும் போக்குவரத்து **PTA**
அ) சாலைப்போக்குவரத்து
ஆ) இரயில் போக்குவரத்து
இ) வான்வழிப் போக்குவரத்து
ஈ) நீர்வழிப் போக்குவரத்து

9. கீழ்க்கண்டவற்றில் எவை வானுலங்கு ஊர்தியுடன் (ஹெலிகாப்டர்) தொடர்புடையது? **PTA**
அ) ஏர் இந்தியா
ஆ) இந்தியன் ஏர்லைன்ஸ்
இ) வாயுதூத்
ஈ) பவன்ஹான்ஸ்

10. இந்தியாவின் முக்கிய இறக்குமதி பொருள்
அ) சிமெண்ட் ஆ) ஆபரணங்கள் இ) தேயிலை ஈ) பெட்ரோலியம்

கூடுதல் வினாக்கள்

11. உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடு
அ) இந்தியா ஆ) சீனா இ) அமெரிக்கா ஈ) ரஷ்யா

12. இந்தியாவில் முழுமையான முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெற்ற ஆண்டு
அ) 1872 ஆ) 1911 இ) 2011 ஈ) 1881

13. இந்தியாவின் சராசரி மக்கள் அடர்த்தி (ஒரு சதுர கி.மீ பரப்பளவில்)
அ) 382 ஆ) 328 இ) 392 ஈ) 329

14. குறைந்த மக்களடர்த்தி கொண்ட யூனியன் பிரதேசம்
அ) அந்தமான் நிக்கோபர் தீவுகள்
ஆ) டையூ டாமன்
இ) புதுச்சேரி
ஈ) புதுடெல்லி

15. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் பாலின விகிதம் (1000 ஆண்களுக்கு)
அ) 1084 பெண்கள் ஆ) 980 பெண்கள் இ) 940 பெண்கள் ஈ) 1010 பெண்கள்

16. இந்தியாவில் அதிக எழுத்தறிவு பெற்ற மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) பீகார் இ) ஆந்திரப்பிரதேசம் ஈ) கேரளா

17. இந்தியாவில் மிகுந்த நகர்மயமாக்கப்பட்ட பகுதி
அ) குஜராத் ஆ) கோவா இ) இராஜஸ்தான் ஈ) பஞ்சாப்

18. "மெகா நகரம்" என அழைக்கப்படுவது
அ) மும்பை ஆ) பெங்களூரு இ) சென்னை ஈ) ஐதராபாத்

19. சமுதாயத்தின் அனைத்து பிரிவு மக்களாலும் பயன்படுத்தக்கூடிய மலிவான போக்குவரத்து
அ) வான் வழி ஆ) நீர் வழி இ) சாலை வழி ஈ) இரயில் வழி

20. இந்திய சாலைப் போக்குவரத்தின் முக்கியமான அமைப்பு
அ) மாநிலச்சாலை ஆ) கிராமச்சாலை இ) மாவட்டச்சாலை ஈ) தேசிய நெடுஞ்சாலை

21. இவற்றில் எது தங்க நாற்கரச்சாலை?
அ) டெல்லி – சென்னை ஆ) டெல்லி – ஆக்ரா
இ) டெல்லி – லடாக் ஈ) டெல்லி – பெங்களூரு

22. வட–தென் பகுதிகளை இணைக்கும் சாலையும் மேற்கு–கிழக்கு பகுதிகளை இணைக்கும் சாலையும் சந்திக்கின்ற இடம்
அ) குவாலியர் ஆ) ஜான்சி இ) ஜெய்ப்பூர் ஈ) ஹைதராபாத்

23. உள்நாட்டு போக்குவரத்திற்கான முக்கிய உயிர்நாடியாக அமைந்துள்ளது.
அ) சாலை ஆ) இரயில் இ) கப்பல் ஈ) விமானம்

24. தெற்கு இரயில்வேயின் தலைமையிடம்
அ) செகந்தராபாத் ஆ) திருவனந்தபுரம் இ) மங்களூரு ஈ) சென்னை

25. மிக நீண்ட இரயில்வே பாதையுடையது
அ) வடக்கு இரயில்வே ஆ) தெற்கு இரயில்வே இ) மேற்கு இரயில்வே ஈ) கிழக்கு இரயில்வே

26. இந்திய பொறியியல் துறையின் அதிசயமாகக் கருதப்படுவது
அ) மலபார் இரயில்வே ஆ) கொங்கண் இரயில்வே
இ) கட்ச் இரயில்வே ஈ) தமிழக இரயில்வே

27. மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள ஒரு துறைமுகம்
அ) நவசேவா ஆ) ஹால்தியா இ) பாரதீப் ஈ) எண்ணூர்

28. மும்பையில் அமைக்கப்பட்டுள்ள கப்பல் கட்டும் தொழிற்சாலை
அ) இந்துஸ்தான் ஆ) மசாகான் இ) கார்டன் ரீச் ஈ) ஹால்தியா

29. கொல்கத்தாவில் அமைந்துள்ள சர்வதேச விமான நிலையத்தின் பெயர்
அ) இந்திரா காந்தி ஆ) சத்திரபதி சிவாஜி
இ) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஈ) சர்தார் வல்லபாய்படேல்

30. இந்தியாவின் முதல் அஞ்சல் வில்லை வெளியிடப்பட்ட ஆண்டு
அ) 1857 அ) 1885 இ) 1875 ஈ) 1852

விடைகள்

1. ஆ) மக்களியல்	2. இ) கேரளா
3. இ) மனிதவள மேம்பாட்டு குறியீடு	4. ஆ) சாலை
5. அ) 5846 கி.மீ	6. இ) 14,500 கி.மீ
7. ஈ) ஹைதராபாத்	8. இ) வான்வழிப் போக்குவரத்து
9. ஈ) பவன்ஹான்ஸ்	10. ஈ) பெட்ரோலியம்
11. ஆ) சீனா	12. ஈ) 1881
13. அ) 382	14. அ) அந்தமான் நிக்கோபர் தீவுகள்
15. இ) 940 பெண்கள்	16. ஈ) கேரளா
17. ஆ) கோவா	18. அ) மும்பை
19. இ) சாலை வழி	20. ஈ) தேசிய நெடுஞ்சாலை
21. அ) டெல்லி – சென்னை	22. ஆ) ஜான்சி
23. ஆ) இரயில்	24. ஈ) சென்னை
25. அ) வடக்கு இரயில்வே	26. ஆ) கொங்கண் இரயில்வே
27. அ) நவசேவா	28. ஆ) மசாகான்
29. இ) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்	30. ஈ) 1852

II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

கூடுதல் வினாக்கள்

1. உலகின் இரண்டாவது அதிக மக்கள் தொகையைக் கொண்ட நாடு _______
2. இந்தியாவின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு _______ ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது.
3. நமது நாட்டின் 15வது மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெற்ற ஆண்டு _______
4. மக்கள் தொகையின் அதிவேக வளர்ச்சியை _________ என்று குறிப்பிடுகிறோம்.
5. இந்தியாவில் இடப்பெயர்வு _______ பகுதியிலிருந்து _______ பகுதியை நோக்கி பெருந்திரளாக நடைபெறுகிறது.
6. _______ என்பது மக்கள் தொகையில் 1000 ஆண்களுக்கு உள்ள பெண்களின் எண்ணிக்கையைக் குறிப்பதாகும்.
7. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் பாலின விகிதம் _______ பெண்கள்.
8. இந்தியாவில் குறைந்த எழுத்தறிவு பெற்ற மாநிலம் ________
9. இந்தியாவில் வேலையில் பங்கேற்போர் விகிதம் ________
10. மிகுந்த நகர்மயமாக்கப்பட்ட யூனியன் பிரதேசம் ________
11. _______ என்பது பயணிகள் மற்றும் சரக்குகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்வதாகும்.
12. ________ கண்டுபிடிக்கப்பட்டதன் மூலம் போக்குவரத்து எளிமையாக்கப்பட்டது.
13. கொல்கத்தாவிலிருந்து பெஷாவர் வரையுள்ள சாலைக்கு _______ என்று பெயர்.
14. உலகிலேயே உயரமான எல்லைப்புறச் சாலை ______ லிருந்து _______ வரை செல்கிறது.
15. இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு _______
16. இந்திய தரைவழிப் போக்குவரத்தின் முதுகெலும்பாகக் கருதப்படுவது ________
17. இந்தியாவின் முதல் இரயில் போக்குவரத்து _______ மற்றும் _______ நகரங்களுக்கிடையே தொடங்கப்பட்டது.
18. இந்திய இரயில்வே துறையின் சாதனைகளில் ஒன்று _______ இரயில்வே ஆகும்.
19. விரைவான பயணச் செலவு மிகுந்த நவீன வசதி கொண்ட போக்குவரத்து _______
20. _______ மற்றும் _______ என்பன இந்திய விமான சேவைகளாகும்.
21. தற்போது இந்தியாவிலுள்ள சர்வதேச விமான நிலையங்களின் எண்ணிக்கை ________
22. அகமதாபாத் சர்வதேச விமான நிலையத்தின் பெயர் ________
23. பவன்–ஹான்ஸ் வானுலங்கு ஊர்தி நிறுவனத்தின் தலைமையிடம் _______
24. அந்தமான் நிக்கோபர் தீவுகளுக்கும் இலட்சத்தீவுகளுக்கும் "பயணப் படகு" சேவையை வழங்கும் நிறுவனம்_______
25. _______ என்பது வாய்மொழி தகவல் பரிமாற்றமாகும்.
26. இந்திய வானொலி _______ எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
27. இந்தியாவில் தொலைக்காட்சி வலையமைப்பு _______ என அழைக்கப்படுகிறது.
28. இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் நிறுவப்பட்ட ஆண்டு _______
29. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்பிற்கு இடையேயுள்ள வேறுபாடு _______ எனப்படும்.
30. ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வணிகம் _______ என அழைக்கப்படுகிறது.

விடைகள்

1. இந்தியா
2. பத்து
3. 2011
4. மக்கள் தொகை வெடிப்பு
5. கிராமப்புற, நகர்ப்புற
6. பாலின விகிதம்
7. 1038
8. பீகார்
9. 39.79%
10. புது டெல்லி
11. போக்குவரத்து
12. சக்கரம்
13. கிராண்ட் ட்ரங்க் சாலை
14. லே–சண்டிகர்
15. 1995
16. இரயில்வே
17. மும்பை, தானே
18. கொங்கண்
19. வான்வழி
20. இந்தியன் ஏர்லைன்ஸ், ஏர் இந்தியா
21. 19
22. சர்தார் வல்லபாய் படேல்
23. புதுடெல்லி
24. பவன் ஹான்ஸ்
25. தொலைபேசி
26. ஆகாசவாணி
27. தூர்தர்ஷன்
28. 1969
29. வணிகச் சமநிலை
30. உள்நாட்டு வணிகம்

III. பொருத்துக:

பாடநூல் வினா

அ.

1. எல்லைப்புறச் சாலை	அ) செயற்கைக்கோள் தகவல் தொடர்பு	விடை 1) உ
2. INSAT (இன்சாட்)	ஆ) நகரமயமாக்கலின் தாக்கம்	2) அ
3. மேசகான் கப்பல் கட்டும் தளம்	இ) 1998	3) ஈ
4. புறநகரப் பரவல்	ஈ) மும்பை	4) ஆ
5. கொங்கண் இரயில்வே	உ) 1960 ஹைதராபாத்	5) இ

கூடுதல் வினாக்கள்

மக்களடர்த்தி:

ஆ.

1. மிக அதிக மக்களடர்த்தி	அ) தமிழ்நாடு	விடை 1) ஈ
2. அதிக மக்களடர்த்தி	ஆ) குஜராத்	2) அ
3. மிதமான மக்களடர்த்தி	இ) அருணாச்சலப் பிரதேசம்	3) ஆ
4. குறைந்த மக்களடர்த்தி	ஈ) மேற்கு வங்காளம்	4) உ
5. மிகக்குறைந்த மக்களடர்த்தி	உ) அந்தமான்–நிகோபர் தீவுகள்	5) இ

சாலை வழி:

இ.

1. கிராண்ட்ரங் (GT) சாலை	அ) இந்தியா – பாகிஸ்தான்	விடை 1) உ
2. தேசிய நெடுஞ்சாலை (NH7)	ஆ) எர்ணாகுளம்–கொச்சி	2) ஈ
3. தேசிய நெடுஞ்சாலை NH47 A	இ) மும்பை – புனே	3) ஆ
4. அதிவேக நெடுஞ்சாலை	ஈ) வாரணாசி–உத்திரப்பிரதேசம்	4) இ
5. பன்னாட்டு நெடுஞ்சாலை	உ) கொல்கத்தா–பெஷாவர்	5) அ

இரயில்வே:

ஈ.

1. வடக்கு மண்டலம்	அ) மும்பை	விடை 1) உ
2. தெற்கு மண்டலம்	ஆ) கொல்கத்தா	2) இ
3. மேற்கு மண்டலம்	இ) சென்னை	3) அ
4. கிழக்கு மண்டலம்	ஈ) செகிந்திரபாத்	4) ஆ
5. மத்திய தெற்கு மண்டலம்	உ) டெல்லி	5) ஈ

மெட்ரோ ரயில்:

			விடை
உ.	1. கொல்கத்தா	அ) கர்நாடகம்	1) ஈ
	2. சென்னை	ஆ) கேரளா	2) உ
	3. பெங்களூரு	இ) மகாராஷ்டிரம்	3) அ
	4. கொச்சி	ஈ) மேற்கு வங்காளம்	4) ஆ
	5. மும்பை	உ) தமிழ்நாடு	5) இ

நீர்வழி:

			விடை
ஊ	1. பாரதீப்	அ) தமிழ்நாடு	1) ஆ
	2. விசாகப்பட்டினம்	ஆ) ஒரிஸா	2) இ
	3. எண்ணூர்	இ) ஆந்திரப்பிரதேசம்	3) அ
	4. காண்ட்லா	ஈ) மும்பை	4) உ
	5. ஜவஹர்லால் துறைமுகம்	உ) குஜராத்	5) ஈ

சர்வதேச விமான நிலையங்கள்:

			விடை
எ	1. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்	அ) ஹைதராபாத்	1) ஈ
	2. இந்திராகாந்தி	ஆ) அகமதாபாத்	2) இ
	3. சத்திரபதி சிவாஜி	இ) டெல்லி	3) உ
	4. சர்தார் வல்லபாய் படேல்	ஈ) கொல்கத்தா	4) ஆ
	5. ராஜிவ் காந்தி	உ) மும்பை	5) அ

கப்பல் கட்டும் இடங்கள்:

			விடை
ஏ	1. விசாகப்பட்டினம்	அ) மசாகன்	1) இ
	2. கொல்கத்தா	ஆ) தமிழ்நாடு	2) உ
	3. கொச்சி	இ) இந்துஸ்தான்	3) ஈ
	4. மும்பை	ஈ) கேரளா	4) அ
	5. காட்டுப்பள்ளி	உ) கார்டன் ரீச்	5) ஆ

தகவல் தொடர்பு:

			விடை
ஐ	1. வானொலி	அ) இணையதளம்	1) ஆ
	2. தொலைக்காட்சி	ஆ) மின்னணு ஊடகம்	2) ஈ
	3. சமூக வலைதளம்	இ) விண்வெளி ஆராய்ச்சி	3) அ
	4. செய்தித்தாள்	ஈ) ஒலி–ஒளிச்சாதனம்	4) உ
	5. ISRO	உ) அச்சு ஊடகம்	5) இ

IV. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. மனித வள மேம்பாடு என்றால் என்ன? **PTA**

மனித வள மேம்பாடு என்பது கல்வி, உடல்நலம், வருமானம், அதிகாரம் போன்றவைகளில் மக்களுக்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தும் ஒரு செயல் முறையாகும்.

2. இடப்பெயர்வு என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

- இடப்பெயர்வு என்பது ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மக்கள் இடம் பெயர்ந்து செல்வதாகும்.

- இது உள்நாட்டு இடப்பெயர்வு (ஒரு நாட்டின் எல்லைக்குள்) மற்றும் சர்வதேச இடப்பெயர்வு (நாடுகளுக்கு இடையே) என இருவகைப்படும்.

3. இரயில் போக்குவரத்தின் நன்மைகள் ஏதேனும் நான்கினை எழுதுக.

- இரயில் போக்குவரத்து மிக அதிக அளவிலான பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தின் தேவையை பூர்த்தி செய்கிறது.
- இது மக்களை ஒன்றிணைப்பதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கிறது.
- வணிகம், சுற்றுலா, கல்வி போன்றவற்றையும் ஊக்குவிக்கிறது.
- மூலப்பொருட்களைத் தொழிற்சாலைக்கும், தயாரிக்கப்பட்ட தொழிலகப் பொருட்களைச் சந்தைகளுக்கும் கொண்டு செல்ல உதவுகிறது.

4. நம்நாட்டின் குழாய் போக்குவரத்து அமைப்பு பற்றி ஒரு குறிப்பு வரைக.

- எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு வயல்களையும், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களையும், அதன் சந்தை பகுதிகளோடு இணைப்பதற்கு, எளிதான மற்றும் சிறந்த போக்குவரத்தாக குழாய் போக்குவரத்து செயல்பட்டு வருகிறது.
- முன்னதாக இவை நகரங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் தண்ணீர் வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டது. தற்பொழுது திடப்பொருள்களும் குழம்பாக்குதல் மூலம் குழாய் வழியே கொண்டு செல்லப்படுகிறது.
- குழாய் போக்குவரத்து அமைப்பதற்கு ஆரம்பகால செலவுகள் அதிகம். ஆனால் இதனை பராமரிப்பதற்கான செலவு மிகவும் குறைவு.
- இவற்றை கடினமான நிலப்பகுதிகளிலும், நீருக்கு அடியிலும் அமைக்க இயலும். இது தடங்கலற்ற, குறைந்த செலவுடைய, காலதாமதமற்ற மற்றும் ஆவியாதலற்ற போக்குவரத்து ஆகும்.

5. இந்தியாவின் முக்கிய உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்துகளைக் குறிப்பிடுக.

தேசிய நீர்வழிப்போக்குவரத்து எண்: 1

இது ஹால்தியா மற்றும் அலகாபாத் இடையே 1620 கி.மீ நீளத்தைக் கொண்டு, கங்கை – பாகிரதி – ஹுக்ளி ஆறுகளுடன் செயல்படுகிறது.

தேசிய நீர்வழிப்போக்குவரத்து எண்: 2

இது பிரம்மபுத்ரா ஆற்றில் துபிரி மற்றும் காடியாவிற்கு இடையே சுமார் 891 கி.மீ நீளத்தைக் கொண்டுள்ளது.

தேசிய நீர்வழிப்போக்குவரத்து எண்: 3

இந்த நீர்வழி கேரளா மாநிலத்தின் கொல்லம் மற்றும் கோட்டபுரம் இடையே உள்ளது. 24 மணி நேரமும் செயல்பட்டு 205 கி.மீ தொலைவிற்கு போக்குவரத்து வசதியை அளிக்கக்கூடிய இந்தியாவின் முதல் தேசிய நீர்வழிப் போக்குவரத்து இதுவாகும்.

6. தகவல் தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

தகவல் தொடர்பு:

- தகவல்கள், எண்ணங்கள் மற்றும் கருத்துகளின் பரிமாற்றத்தையே தகவல் தொடர்பு என்கிறோம். தகவல் தொடர்புத் துறையில், தொழில்நுட்பம் வியக்கத்தக்க வகையில் உள்ளது.

வகைகள்:

- தனிமனித தகவல் தொடர்பு
- பொதுத்தகவல் தொடர்பு

7. பன்னாட்டு வணிகம் – வரையறு. **PTA**

பன்னாட்டு வணிகம்:

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம், பன்னாட்டு வணிகம் அல்லது அயல்நாட்டு வணிகம் என அழைக்கப்படுகிறது.

கூறுகள்:

- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியவை பன்னாட்டு வணிகத்தின் இரு கூறுகள் ஆகும்.

வணிகச் சமநிலை:

- ஒரு நாட்டின் ஏற்றுமதி மதிப்பிற்கும், இறக்குமதி மதிப்பிற்கும் இடையேயுள்ள வேறுபாடு வணிகச் சமநிலை எனப்படும்.

8. சாலைப் போக்குவரத்தின் சாதக அம்சங்களை குறிப்பிடுக. **PTA**

- சாலைவழி, குறுகிய மற்றும் நீண்ட தூரத்திற்கு பயணிகள் மற்றும் சரக்குகளை கொண்டு செல்வதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- இது குறுகிய, மத்திய மற்றும் தொலைதூர சேவைகளுக்கு மிகவும் ஏற்றது.
- இது குறுகிய தூர பயணத்திற்கு மிகவும் உகந்தது ஆகும்.
- சாலைகளை அமைப்பது மற்றும் பராமரிப்பு செய்வது மற்ற போக்குவரத்து முறைகளை ஒப்பிடும் பொழுது மலிவானதாகும்.
- சாலைப் போக்குவரத்து அமைப்பு மூலம் பண்ணைகள், தொழிற்சாலைகள் மற்றும் சந்தைகள் ஆகியவற்றிற்கு இடையில் எளிதில் தொடர்பு ஏற்படுகிறது.
- இது சமுதாயத்தின் அனைத்துப் பிரிவு மக்களாலும் பயன்படுத்தக்கூடிய மலிவான போக்குவரத்து ஆகும்.

கூடுதல் வினாக்கள்

9. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்றால் என்ன?

- மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது ஒரு நாட்டில் வரையறுக்கப்பட்ட பகுதி அல்லது முழு பகுதியில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் உள்ள மக்களின் பொருளாதார மற்றும் சமூக புள்ளி விவரங்களை சேகரித்து, தொகுத்து மற்றும் பகுப்பாய்வு செய்து மக்களியல் பற்றிய விவரங்களை அளித்தல் ஆகும்.

10. மக்கள் தொகை மாற்றம் என்றால் என்ன?

- மக்கள் தொகை மாற்றம் என்பது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியிலிருந்து மற்றொரு காலப்பகுதிக்கு இடைப்பட்ட காலத்தில் மக்கள் தொகை அதிகரிப்பதையோ அல்லது குறைவதையோ குறிப்பிடுவதாகும்.
- பிறப்புவிகிதம், இறப்பு விகிதம் மற்றும் இடப்பெயர்வு ஆகியவை மக்கள் தொகை வளர்ச்சியைத் தீர்மானிக்கிறது. மேலும் இவை மூன்றும் மக்கள் தொகையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

11. மக்கள் தொகைக் கலவை என்றால் என்ன? இதனைக் கற்பதால் கிடைக்கும் பயன் என்ன?

- மக்கள் தொகைக் கலவை என்பது பல்வேறு பண்புகளான வயது, பாலினம், திருமணநிலை, சாதி, மதம், மொழி, கல்வி, தொழில் போன்றவற்றை உள்ளடக்கியது ஆகும்.
- மக்கள் தொகை கலவை பற்றிக் கற்பது சமூக, பொருளாதார மற்றும் மக்கள் தொகையின் அமைப்பை அறிய உதவுகிறது.

12. பாலின விகிதம் – வரையறு.

- பாலின விகிதம் என்பது மக்கள் தொகையில் ஆயிரம் ஆண்களுக்கு உள்ள பெண்களின் எண்ணிக்கையைக் குறிப்பதாகும்.

- ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்குமிடையேயான சமத்துவத்தின் அளவை அளவீடு செய்யும் சமூக குறியீடாக பாலின விகிதம் விளங்குகின்றது.

13. சார்ந்திருப்போர் விகிதம் என்றால் என்ன?

- பொருளாதாரச் செயல்பாடுகளில் ஈடுபடுவோர் மற்றும் பொருளதாரச் செயல்பாடுகளில் ஈடுபடாதோருக்குமிடையேயான விகிதம் சார்ந்திருப்போர் விகிதம் எனப்படுகிறது.

14. எழுத்தறிவு விகிதம் பற்றிய சிறுகுறிப்பு வரைக.

- மக்களில் எழுதவும் படிக்கவும் தெரிந்தவர்களே எழுத்தறிவு பெற்றவர் ஆவர். இது மக்களின் தரத்தை அறியும் முக்கிய அளவுகோலாகும். மொத்த மக்கள் தொகையில் எழுத்தறிவு பெற்ற மக்களின் எண்ணிக்கையே எழுத்தறிவு விகிதம் எனப்படும்.

15. நகரமயமாக்கம் என்றால் என்ன?

- கிராமப்புற சமுதாயம் நகர்ப்புற சமுதாயமாக மாற்றமடைவதேயே நகரமயமாக்கம் என்கிறோம்.
- நகரமயமாக்கலின் நிலை என்பது நகரம் மற்றும் பெரு நகரங்களில் உள்ள மக்கள் தொகை விகிதம் மற்றும் வேளாண் சாரா தொழிலாளர்களின் விகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் அளவிடப்படுகிறது.

16. மனிதவள வளர்ச்சிக் குறியீடு என்றால் என்ன?

- மக்கள் தொகை போக்குகள், ஆரோக்கிய வெளிப்பாடு, கல்விச் சாதனைகள், தேசிய வருமானம், வள –கூட்டமைப்பு, தொழில், வேலை வாய்ப்பு, மனித பாதுகாப்பு, மனித மற்றும் முதலீட்டு ஈர்ப்பு ஆகியன மனதவள வளர்ச்சியின் குறியீடுகளாகும்.
- நல்வாழ்வியல், உணர்வு மற்றும் அடிப்படை உரிமை ஒப்பந்தங்கள் ஆகியன மனித வள மேம்பாட்டு துணைக்குறியீடுகளாகும்.

17. இந்தியாவின் நான்கு கப்பல் கட்டும் தளங்கள் யாவை?

- இந்துஸ்தான் கப்பல் கட்டும் தளம் – (விசாகப்பட்டினம்)
- கார்டன் ரீச் கப்பல் கட்டும் தொழிற்சாலை – (கொல்கத்தா)
- மசாகான் கப்பல் கட்டும் தொழிற்சாலை – (மும்பை)
- கொச்சி கப்பல் கட்டும் தளம் – (கொச்சி)

18. இந்தியாவிலுள்ள முக்கியத் துறைமுகங்கள் யாவை?

மேற்குக் கடற்கரை:

- காண்ட்லா
- மும்பை
- நவசேவா (ஜவஹர்லால் நேரு துறைமுகம்)
- மர்மகோவா
- நியூ மங்களூரு
- கொச்சின்

கிழக்குக் கடற்கரை:

- கொல்கத்தா
- ஹால்தியா

புவியியல்

- பாரதீப்
- விசாகப்பட்டினம்
- சென்னை
- எண்ணூர்
- தூத்துக்குடி

19. வணிகம் என்றால் என்ன? அதன் இரு வகைகள் யாவை?

- வணிகம் என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குவதும், விற்பதும் அல்லது பரிமாற்றம் செய்து கொள்ளும் செயலாகும்.
- வணிகம் உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம் என இரு வகைப்படும்.
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பன்னாட்டு வணிகத்தின் இரு முக்கியக்கூறுகள் ஆகும்.

20. கப்பல்துறை மற்றும் துறைமுகம் ஆகிய இரண்டிற்கும் இடையேயான வேறுபாடு என்ன?

கப்பல்துறை:

- கப்பல்துறை என்பது கடற்கரைக்கு அருகில் அமைந்துள்ள விரிவான, ஆழமான நீர்ப்பரப்பு கொண்ட கப்பல்கள் மற்றும் படகுகள் பாதுகாப்பாக நங்கூரமிடக்கூடிய ஒரு இடமாகும். இது சரக்குகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்குப் பயன்படுகிறது.

துறைமுகம்:

- துறைமுகம் என்பது ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதற்காக சரக்குகளை ஏற்றவும், இறக்கவும், சேமித்து வைக்கவும் வசதி கொண்ட கப்பல் துறையின் விரிவாக்கப் பகுதியாகும்.

V. வேறுபடுத்துக.

பாடநூல் வினாக்கள்

1. மக்களடர்த்தி மற்றும் மக்கட்தொகை வளர்ச்சி

மக்களடர்த்தி	மக்கள் தொகை வளர்ச்சி
மக்களடர்த்தி என்பது சராசரியாக ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறது.	மக்கள் தொகை வளர்ச்சி என்பது ஒரு குறிப்பிட்டகாலப் பகுதியில் ஒரு நாட்டின் மக்கள் தொகை எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றத்தை குறிப்பிடுகிறது.
இது சராசரியாக ஒரு சதுர கிலோமீட்டர் பரப்பளவில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையைக் குறிக்கிறது.	மக்கள் தொகை வளர்ச்சி சதவீதத்தில் குறிப்பிடப்படுகிறது.
மக்களடர்த்தி, நிலத்தோற்றம், காலநிலை, இயற்கைத்தாவரம், மதம், கலாச்சாரம், பொருளாதாரம், போக்குவரத்து, வேலைவாய்ப்புகள் போன்ற பௌதிக மற்றும் சமூகக் காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது.	பிறப்பு விகிதம், இறப்பு விகிதம் மற்றும் புலம் பெயர்தல் ஆகியவை மக்கள் தொகை வளர்ச்சியைத் தீர்மானிக்கிறது.
இந்தியாவில் மக்களடர்த்தி மிகுந்த மாநிலம் பீகார் ஆகும்.	இந்தியாவில் மக்கள் தொகை மிகுந்த மாநிலம் உத்திரப்பிரதேசம் ஆகும்.

2. தனி நபர் தகவல் தொடர்பு மற்றும் பொதுத்தகவல் தொடர்பு

தனிநபர் தகவல் தொடர்பு	பொதுத்தகவல் தொடர்பு
➤ தனிநபர்களுக்கிடையேயான தகவல், பரிமாற்றம் தனிநபர் தகவல் தொடர்பு என்று அழைக்கப்படுகிறது.	➤ பொதுத்தகவல் தொடர்பு என்பது ஒரே நேரத்தில் லட்சக்கணக்கான மக்கள் தகவல்களைப் பெறுவதாகும்.
➤ இது அஞ்சல் சேவை, தந்தி, தொலைபேசி, கைப்பேசி, குறுந்தகவல் பிரதிகள், இணையதளம் மற்றும் மின் அஞ்சல் போன்றவைகளை உள்ளடக்கியது ஆகும்.	➤ பொதுத்தகவல் தொடர்பு அமைப்பானது வானொலி, தொலைக்காட்சி, இணையம், செய்தித்தாள்கள் ஆகியனவற்றை உள்ளடக்கியது ஆகும்.
➤ இது பயனாளிகளுடன் நேரடித் தொடர்பை ஏற்படுத்துகிறது.	➤ இது நேரடித் தொடர்பை ஏற்படுத்துவது இல்லை.
➤ தகவல் மற்றும் செய்திகளை பரிமாறிக் கொள்ள உதவுகிறது.	➤ கல்வி, பொழுது போக்கு, தேசியக் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

3. அச்சு ஊடகம் மற்றும் மின்னணு ஊடகம்

PTA

அச்சு ஊடகம்	மின்னணு ஊடகம்
➤ எல்லோராலும் பயன்படுத்தப்படும் செய்தித் தாள்கள் ஒரு சக்தி வாய்ந்த அச்சு ஊடகமாகும். மேலும் இது ஒரு தகவல் தொடர்பு சாதனமாகும்.	➤ வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணையம் ஆகியன மின்னணு ஊடகங்களாகும்.
➤ அச்சு ஊடகம் இந்தியாவில் உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச அளவில் செய்திகளை அளிக்கக் கூடிய பல செய்தித்தாள்கள் உள்ளன.	➤ இது கல்வி, செய்திகள், மற்றும் பொழுதுபோக்கு தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளை ஒளி பரப்புகிறது.

4. சாலை வழிப்போக்குவரத்து மற்றும் இரயில் வழிப்போக்குவரத்து

சாலைவழிப் போக்குவரத்து	இரயில்வழி போக்குவரத்து
➤ சாலை போக்குவரத்து அனைத்து பிரிவு மக்களாலும் பயன்படுத்தக் கூடிய மலிவான போக்குவரத்து ஆகும்.	➤ இந்திய இரயில்வே அமைப்பு நாட்டினுடைய உள்நாட்டு போக்குவரத்திற்கான முக்கிய உயிர் நாடியாக அமைந்துள்ளது.
➤ சாலை வழி குறுகிய மற்றும் நீண்ட தூரத்திற்குப் பயணிகள் மற்றும் சரக்குகளைக் கொண்டு செல்வதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.	➤ மிக அதிக அளவிலான பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தின் தேவையை பூர்த்தி செய்கிறது.
➤ சாலையை அமைப்பது மற்றும் பராமரிப்பது மற்ற போக்குவரத்து முறைகளை விட மலிவானதாகும்.	➤ அமைப்பதற்கும், பராமரிப்பதற்கும் அதிகம் செலவாகும்.
➤ உலகின் இரண்டாவது நீண்ட சாலை வலைப்பின்னல் அமைப்பை இந்தியா பெற்றுள்ளது.	➤ ஆசியாவில் மிகப்பெரியதும், உலக அளவில் இரண்டாவது பெரியதுமான இரயில்வே அமைப்பை இந்தியா பெற்றுள்ளது.

5. நீர்வழிப்போக்குவரத்து மற்றும் வான்வழிப்போக்குவரத்து.

நீர்வழிப் போக்குவரத்து	வான்வழிப் போக்குவரத்து
➤ நீர்வழிப் போக்குவரத்து பழமையான மற்றும் மலிவான ஒரு போக்குவரத்து ஆகும்.	➤ வான்வழிப் போக்குவரத்து நவீன வசதியான மற்றும் செலவு மிகுந்த ஒரு போக்குவரத்தாகும்.
➤ நீர் நிலைகளில் மட்டும் இப்போக்குவரத்து நடைபெறும்.	➤ இது உயர்ந்த மலைகள், பாலைவனங்கள் மற்றும் அடர்ந்த காடுகளையும் எளிதில் கடந்து செல்ல உதவுகிறது.
➤ கனமான மற்றும் அதிகளவிலான சரக்குகளை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு எடுத்துச் செல்ல உதவுகிறது.	➤ இது பயணிகள், அஞ்சல்கள் மற்றும் குறைந்த எடையுள்ள சரக்குகளை கொண்டு செல்ல ஏற்றது.
➤ எரிபொருள், செலவினம் குறைவு	➤ எரிபொருள் செலவினம் அதிகம்.
➤ சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பானது.	➤ சுற்றுச்சூழலை மாசுபடுத்தும்.

6. உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம்.

உள்நாட்டு வணிகம்	பன்னாட்டு வணிகம்
➤ ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வணிகம் உள்நாட்டு வணிகம் என அழைக்கப்படுகிறது.	➤ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம் பன்னாட்டு வணிகம் என அழைக்கப்படுகிறது.
➤ இது உள்ளூர் வணிகம் எனவும் அழைக்கப்படுகிறது.	➤ இது அயல்நாட்டு வணிகம் என்றும் அழைக்கப்படுகிறது.
➤ உள்நாட்டு வணிகத்தில் நிலவழி போக்குவரத்து முக்கியப் பங்காற்றுகிறது.	➤ பன்னாட்டு வணிகத்தில் நீர்வழி மற்றும் வான்வழி போக்குவரத்து முக்கிய பங்காற்றுகின்றன.
➤ இவ்வணிக முறையில் உள்நாட்டு நாணயம் பயன்படுத்தப்படுகிறது.	➤ இவ்வகை வணிகத்தில் அயல்நாட்டு பணம் பயன்படுத்தப்படுகிறது.

கூடுதல் வினாக்கள்

7. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி

ஏற்றுமதி	இறக்குமதி
➤ பொருட்கள் மற்றும் சேவைகள் அந்நிய நாடுகளுக்கு விற்பது ஏற்றுமதி எனப்படும்.	➤ பொருட்களையும் மற்றும் சேவைகளையும் அந்நிய நாடுகளிலிருந்து பெறுவது இறக்குமதி எனப்படும்.
➤ நம் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களில் நமது தேவைக்குப்பின் எஞ்சிய பொருட்களை அயல்நாடுகளுக்கு விற்பது ஏற்றுமதியாகும்.	➤ நமது நாட்டில் கிடைக்காத நமது தேவைக்கான பொருட்களை வெளிநாடுகளிலிருந்து விலைக்கு வாங்குவது இறக்குமதியாகும்.
➤ ஏற்றுமதியின் மதிப்பு இறக்குமதியின் மதிப்பை விட அதிகமாக இருந்தால் அது சாதகமான வணிகச் சமநிலை எனப்படும்.	➤ இறக்குமதியின் மதிப்பு ஏற்றுமதியின் மதிப்பை விட அதிகமாக இருந்தால் அது பாதகமான வணிகச் சமநிலை எனப்படும்.

ஏற்றுமதி	இறக்குமதி
➤ காபி, தேயிலை, கடல்சார் பொருட்கள், கனிமங்கள், தோல் பொருட்கள், ஆபரணங்கள், இரசாயனம் சார்ந்த பொருட்கள், மருந்துகள், மின்சாதனப்பொருட்கள், இயந்திரங்கள் ஆகியவை முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாகும்.	➤ பெட்ரோலியப் பொருட்கள், முத்துக்கள், விலையுயர்ந்த கற்கள், தங்கம் மற்றும் தொலை தொடர்பு சாதனங்கள் போன்றவை முக்கிய இறக்குமதிப் பொருட்களாகும்.

8. தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் பன்னாட்டு நெடுஞ்சாலைகள்

தேசிய நெடுஞ்சாலைகள்	பன்னாட்டு நெடுஞ்சாலைகள்
➤ தேசிய நெடுஞ்சாலைகள் இந்திய சாலைப் போக்குவரத்தின் மிக முக்கியமான அமைப்பாகும்.	➤ பன்னாட்டு நெடுஞ்சாலைகள் அண்டை நாடுகளுடன் இணக்கமான உறவை மேம்படுத்தும் நோக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ள சாலைகளாகும்.
➤ இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் மாநிலங்களின் தலைநகரங்கள், முக்கிய துறைமுகங்கள், இரயில் நிலையங்கள், சுற்றுலா மையங்கள் மற்றும் தொழில் மையங்களை இணைக்கின்றன.	➤ இந்திய பன்னாட்டுச் சாலைகள் பாகிஸ்தான், நேபாளம், பூடான், வங்கதேசம் மற்றும் மியான்மர் ஆகிய அண்டை நாடுகளை இந்திய தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணைக்கின்றன.
➤ இந்திய தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் இந்திய அரசின் தரைவழி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் பொறுப்பாகும்.	➤ இச்சாலைகள் ஆசிய மற்றும் பசிபிக் பகுதிகளுக்கான பொருளாதார மற்றும் சமூக ஆணையம் உடன்படிக்கையின் கீழ் உலக வங்கி நிதியுதவியின் மூலம் அமைக்கப்பட்டுள்ளன.

9. கிராமச்சாலைகள் மற்றும் மாவட்டச் சாலைகள்.

தேசிய நெடுஞ்சாலைகள்	பன்னாட்டு நெடுஞ்சாலைகள்
➤ கிராமச்சாலைகள் பல்வேறு கிராமங்களை அதன் அருகில் உள்ள நகரங்களுடன் இணைக்கின்றன.	➤ மாவட்டச் சாலைகள் மாவட்ட மற்றும் வட்டார தலைமை இடங்களை மாநில நெடுஞ் சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணைக்கின்றன.
➤ இவை கிராமப் பஞ்சாயத்துகளால் பராமரிக்கப்படுகின்றன.	➤ இவை மாநில பொதுப்பணித்துறையால் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணைக்கின்றன.
➤ இந்தியாவில் கிராமச் சாலைகளின் மொத்த நீளம் 39,35,337 கி.மீ ஆகும்.	➤ இந்தியாவில் மாவட்டச் சாலைகளின் மொத்த நீளம் 5,61,940 கி.மீ ஆகும்.

10. பெரியதுறைமுகங்கள் மற்றும் சிறிய துறைமுகங்கள்:

பெரிய துறைமுகங்கள்	சிறிய துறைமுகங்கள்
➤ அதிக அளவில் பொருட்களையும் பயணிகளையும் கையாளும் துறைமுகங்கள் பெரிய துறைமுகங்களாகும்.	➤ குறைவான அளவில் பொருட்களையும், பயணிகளையும் கையாளும் துறைமுகங்கள் சிறிய துறைமுகங்களாகும்.
➤ இவை மத்திய அரசால் நிர்வகிக்கப்படுகின்றன.	➤ சிறிய மற்றும் நடுத்தர துறைமுகங்கள் மாநில அரசுகள் நிர்வகிக்கின்றன.

➤ இந்தியாவில் 13 பெரிய துறைமுகங்கள் உள்ளன.	➤ இந்தியாவில் 200 நடுத்தர மற்றும் சிறிய துறைமுகங்கள் உள்ளன.
➤ சென்னை, மும்பை, கொல்கத்தா மற்றும் கொச்சி ஆகியவை பெரிய துறைமுகங்கள் ஆகும்.	➤ கடலூர், மர்மகோவா, நாகப்பட்டினம் போன்றவை சிறிய துறைமுகங்களாகும்.

11. உள்நாட்டு இடப்பெயர்வு மற்றும் சர்வதேச இடப்பெயர்வு

உள்நாட்டு இடப்பெயர்வு	சர்வதேச இடப்பெயர்வு
➤ உள்நாட்டு இடப்பெயர்வு ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறுகிறது.	➤ சர்வதேச இடப்பெயர்வு என்பது நாடுகளுக்கு இடையே நடைபெறுகிறது.
➤ உள்நாட்டு இடப்பெயர்வு நாட்டின் மக்கள் தொகையில் மாற்றத்தை ஏற்படுத்தாது.	➤ இது மக்கள் தொகை பரவல் மற்றும் கலவையின் மாற்றத்தை ஏற்படுத்தும் காரணியாக அமைகிறது.
➤ இது கிராமத்திலிருந்து நகர்புறங்களுக்கு செல்லும் திறமை இல்லாத உழைப்பாளர்கள் மத்தியில் காணப்படுகிறது.	➤ இது தொழிலறிவு மற்றும் திறமை வாய்ந்த மக்களுக்கு இடையே காணப்படுகிறது.
➤ அரசு இந்த வகையான இடப்பெயர்வை கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை.	➤ சர்வதேச இடப்பெயர்வாளர்களின் பாதுகாப்பிற்காக தூதரகங்களை, அரசு சம்பந்தப்பட்ட நாடுகளில் ஏற்படுத்தி உள்ளது.

VI. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் தாக்கங்களை விளக்குக. **PTA**

நகரமயமாக்கம்

➤ கிராமப்புற சமுதாயம், நகர்ப்புற சமுதாயமாக மாற்றமடைவதையே நகரமயமாக்கம் என்கிறோம்.

➤ நகரமயமாக்கலின் நிலை என்பது நகரம் மற்றும் பெரு நகரங்களில் உள்ள மக்கள் தொகை விகிதம் மற்றும் வேளாண் சாரா தொழிலாளர்களின் விகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் அளவிடப்படுகிறது.

நகரமயமாக்கலின் தாக்கங்கள்:

➤ நகரமயமாக்கலும், மக்கள் தொகை அடர்த்தியும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை.

➤ நகர்ப்புறமயமாக்கலின் விரைவான வளர்ச்சியானது சமூக – பொருளாதார அபிவிருத்தியின் அடையாளமாக கருதப்படுகிறது.

➤ இந்தியா போன்ற வளரும் நாடுகளில் நகரமயமாக்கம் விரைவாக அதிகரித்து வருகிறது.

➤ கிராமத்திலிருந்து நகரங்களுக்கு இடம்பெயர்தல் நகர்பகுதிகளில் மக்கள் தொகை வெடிப்பிற்கு வழிவகுக்கிறது.

➤ மும்பை, கொல்கத்தா, புதுடெல்லி போன்ற பெருநகரங்கள் தங்கள் கொள்ளளவை விட அதிகமான மக்கள் தொகையுடன் காணப்படுகின்றன.

➤ 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்தியாவில் நகர்புற மக்கள் தொகை 377 மில்லியன்களைக் கடந்து அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மொத்த மக்கள் தொகையை விட அதிகமாக உள்ளது.

➤ 2030 ஆம் ஆண்டிற்குள் 50 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் நகர்ப்புறங்களில் வசிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நகரமயமாக்கலால் ஏற்படும் பிரச்சனைகள்:

➤ நகர விரிவாக்கத்தை ஏற்படுத்துகிறது.

➤ நகர்ப்புறங்களில் மக்கள் நெருக்கடியைத் தோற்றுவிக்கிறது.

➤ நகர்ப்புறங்களில் குடியிருப்புகளின் பற்றாக்குறையை உருவாக்குகிறது.

- குடிசைப் பகுதிகள் தோன்றக் காரணமாக உள்ளது.
- போக்குவரத்து நெரிசலை அதிகப்படுத்துகிறது.
- குடிநீர் பற்றாக்குறையை ஏற்படுத்துகிறது.
- வடிகால் பிரச்சனைகள் உண்டாகின்றன.
- திடக்கழிவு மேலாண்மையை சிக்கலாக்குகிறது.
- குற்றங்கள் அதிகரிக்கக் காரணமாகின்றன.

2. இந்தியாவில் செயற்கைக்கோள் தகவல் தொடர்பின் முக்கியத்துவத்தை விவரி.

- செயற்கை கோளானது தொடர்ச்சியாக மிகப்பெரும் பரப்பிலான பதிமம் மற்றும் தகவல்களை அளிப்பதன் மூலம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தகவல் தொடர்பு சாதனமாக இந்தியாவில் விளங்குகிறது.
- செயற்கைக்கோள் பதிமங்களைப் பயன்படுத்தி, வானிலை ஆய்வு, வானிலை முன் அறிவிப்பு, இயற்கைப் பேரழிவு கண்காணிப்பு போன்ற முக்கியப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- 1969 ஆம் ஆண்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் நிறுவப்பட்ட பின்னர், தொலைத்தொடர்பு பரிமாற்றத்தில் செயற்கைக் கோள்கள் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியுள்ளன.
- இந்திய செயற்கைக்கோள் தகவல் தொடர்பு அமைப்பு இரண்டு பிரிவுகளைக் கொண்டது.
  அ) இந்திய செயற்கைக்கோள் அமைப்பு (INSAT)
  ஆ) இந்திய தொலையுணர்வு செயற்கைக்கோள் அமைப்பு (IRS)
- 1983 இல் நிறுவப்பட்ட இந்திய தேசிய செயற்கைக்கோள் அமைப்பு, தொலைத்தொடர்பு, வானியல் ஆய்வு மற்றும் பல்வேறு திட்டங்களை உள்ளடக்கிய ஒரு பல்நோக்கு திட்ட அமைப்பாக உள்ளது.
- இன்சாட் வரிசை செயற்கைக் கோள்கள், கைபேசி, தொலைபேசி, வானொலி மற்றும் தொலைக்காட்சிகளுக்கு சமிக்கைகளை அனுப்ப பயன்படுகிறது. மேலும் இது வானிலையைக் கண்டறியவும், ராணுவப் பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்படுகிறது.
- 1983 ஆம் ஆண்டு ஏவப்பட்ட இன்சாட் 1B தகவல் தொடர்பிற்காக ஏவப்பட்ட முதல் இன்சாட் வரிசை செயற்கைக்கோளாகும்.
- 2018 ஆம் ஆண்டு ஏவப்பட்ட ஜி–சாட் 7A தகவல் தொடர்புக்காக ஏவப்பட்ட சமீபத்திய செயற்கைக்கோளாகும்.

3. இந்தியாவின் மக்கள் பரவல் மற்றும் மக்களடர்த்தியை விவரிக்க.

- 'மக்கள் தொகைப் பரவல்' என்பது புவியின் மேற்பரப்பில் மக்கள் எவ்விடைவெளியில் உள்ளார்கள் என்பதைக் குறிக்கிறது. இப்பரவல் வளங்களின் பரவலுக்கேற்ப சீரற்று காணப்படுகிறது.
- நிலப்பரப்பு, காலநிலை, மண், நீர் பரப்புகள், கனிம வளங்கள், தொழிலகங்கள், போக்குவரத்து மற்றும் நகரமயமாக்கல் ஆகியவை நாட்டின் மக்கள் தொகை பரவலைப் பாதிக்கும் முக்கிய காரணிகளாகும்.
- தொழில் மையங்கள் மற்றும் செழிப்பான வேளாண் பிரதேசங்கள் போன்ற பகுதிகளில் மக்கள் தொகை செறிவுமிக்கதாக காணப்படுகிறது.
- மலைப்பிரதேசங்கள், வறண்ட நிலப்பகுதிகள், வனப்பகுதிகள், தொலைதூரப்பகுதிகள் போன்ற பகுதிகளில் மக்கள் தொகை குறைவாகவும், மக்களற்றும் காணப்படுகிறது.
- உத்திரப்பிரதேச மாநிலம் இந்தியாவில் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலமாகும். சிக்கிம் மிகக்குறைந்த மக்கள் தொகை கொண்ட மாநிலமாகும். யூனியன் பிரதேசங்களிடையே புதுடெல்லி அதிக மக்கள் தொகையுடன் காணப்படுகிறது.

மக்களடர்த்தி

- மக்களடர்த்தி என்பது சராசரியாக ஒரு சதுரகிலோ மீட்டர் பரப்பளவில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறது. 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியாவின் சராசரி மக்களடர்த்தி ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 382 ஆகும்.
- உலகின் மக்களடர்த்தி மிகுந்த பத்து நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவில் மிக அதிக மக்களடர்த்தியைக் கொண்ட மாநிலமாக பீகாரும் மிகக்குறைந்த மக்களடர்த்தியைக் கொண்ட மாநிலமாக அருணாச்சல பிரதேசமும் உள்ளன.

- யூனியன் பிரதேசங்களில் புதுடெல்லி அதிக மக்களடர்த்தியைக் கொண்டதாகவும், அந்தமான் நிக்கோபர் தீவுகள் குறைந்த மக்களடர்த்தியைக் கொண்டதாகவும் உள்ளன.

4. மனிதவள மேம்பாட்டை அளவிடும் முறையை விளக்குக. PTA

மனிதவள மேம்பாடு:

- மனிதவள மேம்பாடு என்பது கல்வி, உடல் நலம், வருமானம், அதிகாரம் போன்றவைகளில் மக்களுக்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தும் ஒரு செயல்முறை ஆகும்.
- இது பௌதீக சூழலிலிருந்து பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சுதந்திரம் போன்றவைகளில் மனித விருப்ப வரம்புகளின் அதிகரிப்பதையும் உள்ளடக்கியது ஆகும்.

மனிதவளர்ச்சிக் குறியீடுகள்.

- மக்கள்தொகை போக்குகள்
- ஆரோக்கிய வெளிப்பாடு
- கல்விச்சாதனைகள்
- தேசிய வருமானம்
- வள–கூட்டமைப்பு
- தொழில்
- வேலை வாய்ப்பு
- மனித பாதுகாப்பு
- மனித மற்றும் முதலீட்டு ஈர்ப்பு
- நல்வாழ்வியல், உணர்வு மற்றும் அடிப்படை உரிமை ஒப்பந்தங்கள் ஆகியவை மனிதவள மேம்பாட்டு துணைக் குறியீடுகள் ஆகும்.

மனிதவள மேம்பாட்டினை அளவிடுதல்

- மனிதவள மேம்பாடு என்பது மூன்று அடிப்படை பரிணாமங்களைக் கொண்ட ஒரு கூட்டுக் குறியீடாகும்.
- ஆரோக்கியம்–பிறப்பு காலத்தில்–சராசரி வாழ்நாள் மதிப்பீடு.
- கல்வி–பள்ளி செல்லும் குழந்தைகளின் படிப்பு காலம்–வயது வந்தோர் சராசரியாக பள்ளிகளில் கற்கும் காலம்.
- வருமானம்–நிகர தேசிய வருமானம்–தனிநபர் வருமானம்.

மனிதளவள மேம்பாட்டு வகைப்பாடு:

- மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டு (HDI) வகைப்பாடு நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டு புள்ளிகளின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. இது கால்மான விளக்கப் பரவல் குறியீடுகளிலிருந்து பெறப்படுகிறது.

வகைப்பாடு:

- HDI 0.550 – குறைந்த மனிதவள மேம்பாடு
- HDI 0.550 – 0.669 – மிதமான மனிதவள மேம்பாடு
- HDI 0.700 – 0.799 – அதிக மனிதவள மேம்பாடு
- HDI 0.800 அதற்கு மேல் – மிக அதிக மனிதவள மேம்பாடு

5. இந்தியாவின் சாலைகளை வகைப்படுத்தி விளக்குக. PTA

சாலைகளின் வகைகள்:

- தேசிய நெடுஞ்சாலைகள்
- மாநில நெடுஞ்சாலைகள்
- மாவட்டச் சாலைகள்
- கிராமச் சாலைகள்
- எல்லைப்புறச் சாலைகள்
- தங்க நாற்கரச் சாலைகள்

தேசிய நெடுஞ்சாலைகள்

- தேசிய நெடுஞ்சாலைகள் இந்திய சாலைப் போக்குவரத்தின் மிக முக்கிய அமைப்பாகும். இது நாட்டின் எல்லைகள், மாநிலத் தலைநகரங்கள், முக்கியத் துறைமுகங்கள் இரயில் நிலையங்கள், முக்கிய சுற்றுலா மையங்கள் ஆகியவற்றை இணைக்கின்றன.
- இச்சாலைகளை மேம்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் இந்திய அரசின் தரைவழி மற்றும் நெடுஞ் சாலைத்துறை அமைச்சகம் பொறுப்பாகும்.
- இந்தியாவில் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை NH7 ஆகும். இது உத்திரப் பிரதேசத்தில் உள்ள வாரணாசியிலிருந்து தமிழ்நாட்டில் உள்ள கன்னியாகுமரி வரை 2369 கி.மீ நீளத்தைக் கொண்டதாகும்.
- குறைவான நீளமுடைய தேசிய நெடுஞ்சாலை NH47 A ஆகும். இது எர்ணாகுளத்திலிருந்து 6 கி.மீ தொலைவைக் கொண்ட கொச்சின் துறைமுகத்தை இணைக்கிறது.

மாநில நெடுஞ்சாலைகள்:

- மாநில நெடுஞ்சாலைகள் பொதுவாக மாநிலத்திலுள்ள முக்கிய மாநகரங்கள், நகரங்கள் மற்றும் மாவட்டத் தலைநகரங்களை, மாநில தலை நகரத்துடனும் தேசிய நெடுஞ்சாலைகளுடனும், அண்டை மாநில நெடுஞ் சாலைகளுடனும் இணைக்கின்றன.
- இந்த மாநில நெடுஞ்சாலைகள் மாநில பொதுப்பணித்துறையினால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

மாவட்டச் சாலைகள்:

- மாவட்ட சாலைகளானது மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளுடன் மாவட்ட மற்றும் வட்டார தலைமை இடங்களை இணைக்கிறது.
- மாவட்ட சாலைகள் மாநிலத்தின் பொதுப்பணித்துறையால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

கிராமச்சாலைகள்:

- கிராமச் சாலைகள் கிராமப்புறங்களை இணைப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன.
- இவை பல்வேறு கிராமங்களை அருகில் உள்ள நகரங்களுடன் இணைக்கின்றன. இவைகளை கிராமப் பஞ்சாயத்துக்கள் பராமரிக்கின்றன.

எல்லைப்புறச்சாலைகள்:

- எல்லைப்புறச் சாலைகள் நாட்டின் எல்லைகளில் அமைந்துள்ள முக்கியத்துவம் வாய்ந்த சாலைகளாகும். இவைகள் எல்லைப்புற சாலைகள் நிறுவனத்தால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.
- இவ்வமைப்பு 1960இல் நிறுவப்பட்டது.
- இச்சாலைகள் வடக்கு மற்றும் வடகிழக்கு எல்லைப் பகுதிகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.
- எல்லைப்புறச் சாலை நிறுவனத்தால் உலகிலேயே உயரமான (4270 மீ) எல்லைப்புற சாலை லடாக்கிலுள்ள லேவிலிருந்து சண்டிகர் வரை அமைக்கப்பட்டுள்ளது.

தங்க நாற்கரச்சாலை:

- 5846 கி.மீ நீளத்தையும் 4 முதல் 6 வழிகளைக் கொண்டதாகவும் உள்ளது. இது வடக்கு தெற்காக இந்தியாவின் நான்கு பெரு நகரங்களான புதுடெல்லி–கொல்கத்தா–சென்னை–மும்பை–புதுடெல்லி ஆகியவைகளை இணைக்கிறது. இத்திட்டம் 1999 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

கூடுதல் வினாக்கள்

6. அதிக மக்கள் தொகையால் ஏற்படும் பிரச்சனைகள் யாவை?

- இந்திய நாட்டில் அதிகரித்துவரும் மக்கள் தொகையானது சமூகம், பொருளாதாரம், கலாச்சாரம், அரசியல் மற்றும் சுற்றுச்சூழலில் பெரும் சவால்களை ஏற்படுத்துகின்றது.
- மக்கள் தொகை பிரச்சனையானது இடம் மற்றும் காலத்திற்கு ஏற்ப மாறுபடுகிறது.

மக்கள் தொகை அதிகரிப்பால் ஏற்படும் பிரச்சனைகள்:

- மக்கள் நெருக்கடி
- இட நெருக்கடி
- வேலைவாய்ப்பின்மை

- திறனுக்கேற்ற வேலையின்மை
- குறைந்த வாழ்க்கைத்தரம்
- ஊட்டச்சத்து இன்மை
- இயற்கை மற்றும் வேளாண் நிலங்களை தவறாக நிர்வகித்தல்
- ஆரோக்கியமற்ற சூழல் போன்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

7. இந்தியாவில் நகரமயமாக்கலால் ஏற்படும் பிரச்சனைகள் யாவை?

- நகரவிரிவாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- நகர்ப்புறங்களில் மக்கள் நெருக்கடியைத் தோற்றுவிக்கிறது.
- நகர்ப்புறங்களில் குடியிருப்புகளின் பற்றாக்குறையை உருவாக்குகிறது.
- குடிசைப்பகுதிகள் தோன்றக் காரணமாக உள்ளது.
- போக்குவரத்து நெரிசலை அதிகப்படுத்துகிறது.
- குடிநீர் பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றது.
- வடிகால் பிரச்சனைகள் உண்டாகின்றன.
- திடக்கழிவு மேலாண்மையை சிக்கலாக்குகிறது.
- குற்றங்கள் அதிகரிக்கக் காரணமாகின்றது.

வரைபடம்

இந்தியா – சாலைகள்

இந்தியா – கடல்வழி

(கோடு)	கடல் வழித்தடம்
(மஞ்சள் கப்பல் குறி)	முக்கிய துறைமுகங்கள்
(பச்சை கப்பல் குறி)	சிறு துறைமுகங்கள்

குறிப்பு - புத்தகம் வெளியிடும்போது கிடைக்கப்பெற்ற தகவல்

இந்தியா – வான்வழி

(பச்சைக் கோடு)	சர்வதேச வான் வழித்தடம்
(சிவப்புக் கோடு)	உள்நாட்டு வான் வழித்தடம்
(சிவப்பு குறியீடு)	சர்வதேச விமான நிலையம்
(மஞ்சள் குறியீடு)	உள்நாட்டு விமான நிலையம்

இந்தியா – இருப்புப்பாதைகள்

அலகு 6 புவியியல்

தமிழ்நாடு–இயற்கைப் பிரிவுகள்

மனவரைபடம்



பீடபூமிகள்

1. பாரமஹால்
2. கோயம்புத்தூர்
3. மதுரை

சமவெளிகள்

1. உள்நாட்டுச் சமவெளிகள்
2. கடற்கரைச் சமவெளிகள்

கிழக்குத்தொடர்ச்சி மலை

1. ஜவ்வாது மலை
2. கல்வராயன் மலை
3. சேர்வராயன் மலை
4. கொல்லி மலை
5. பச்சைமலை

வடிகாலமைப்பு

1. காவேரி
2. பாலாறு
3. தென்பெண்ணையாறு / தென்பொருணையாறு
4. வைகை
5. தாமிரபரணி

மேற்குத்தொடர்ச்சி மலை

1. நீலகிரி மலை
2. ஆனைமலை
3. பழனி மலை
4. ஏலக்காய் மலை
5. வருசநாடு மற்றும் ஆண்டிபட்டி மலைக் குன்றுகள்
6. பொதிகை மலை
7. மகேந்திரகிரி மலைக் குன்றுகள்

காலநிலை

குளிர்காலம்
ஜனவரி மற்றும் பிப்ரவரி

கோடைக்காலம்
மார்ச், ஏப்ரல் மற்றும் மே

தென்மேற்குப் பருவக்காற்று
ஜூன் முதல் செப்டம்பர் வரை

வடகிழக்குப் பருவக்காற்று
அக்டோபர் முதல் டிசம்பர் வரை

மண் வகைகள்

1. வண்டல் மண்
2. கரிசல் மண்
3. சரளை மண்
4. உவர் மண்
5. செம்மண்

நினைவில் கொள்க

- இந்தியாவில் மொழி அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட முதல் மாநிலம் **ஆந்திரப்பிரதேசம்**.
- 1969ஆம் ஆண்டு மதராஸ் மாகாணம் முன்னாள் முதல்வர் **சி.என்.அண்ணாதுரை** அவர்களால் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- "தீபகற்ப பீடபூமி" எனப்படும் தக்காண பீடபூமி **கோண்டுவானா** நிலப்பகுதியிலிருந்து உருவான ஒரு பகுதியாகும்.
- சிவஜோதி பார்வத், அகத்திய மலைகள் மற்றும் தெற்கு கைலாயம் என பல்வேறு பெயர்களில் **பொதிகை மலை** அழைக்கப்படுகிறது.
- **கிழக்குத் தொடர்ச்சி** மலையானது ஒரு தொடர்ச்சியற்ற குன்றுகளாகும். இது பல இடங்களில் வங்காள கடலில் கலக்கும் ஆறுகளால் பிரிக்கப்பட்டுள்ளது.
- **"ஏழைகளின் ஊட்டி"** என அழைக்கப்படும் மலைவாழிடம் ஏற்காடு. இது சேர்வராயன் மலைத்தொடரில் அமைந்துள்ளது.
- காவிரி டெல்டா பகுதிகளில் கிளை ஆறுகளால் உண்டாகியுள்ள வலைப்பின்னல் அமைப்பு **"தென்னிந்தியாவின் தோட்டம்"** என அழைக்கப்படுகிறது.
- **தாமிரபரணி** ஒரு வற்றாத ஆறு ஆகும். இப்பெயர் தாமிரம் (காப்பர்) மற்றும் வருணி (சிற்றோடைகள்) என்பதிலிருந்து பெறப்பட்டது.
- **கொரியாலிஸ் விசை** என்பது பூமியின் சுழற்சியின் காரணமாக நகரும் அல்லது இயங்கும் பொருட்களை வட அரைக்கோளத்தில் வலது புறமாகவும், தென் அரைக்கோளத்தில் இடதுபுறமாகவும், திசைகளை மாற்றியமைக்கும் விசையாகும்.
- தமிழ்நாட்டில் மிக அதிக மழைபெறும் பகுதி வால்பாறைக்கு அருகிலுள்ள **சின்னக்கல்லார்** என்பதாகும்.
- உலகின் இரண்டாவது மிகப்பெரிய சதுப்புநிலக் காடாக விளங்குவது **பிச்சாவரம் சதுப்புநிலக்காடு**.
- உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் இயற்கையினால் ஏற்படும் பேரழிவுதான் **பேரிடர்** எனப்படுகிறது.
- மலைகள் அல்லது குன்றுகளின் ஒரு பகுதியோ அல்லது பாறைகளோ சரிந்து வீழ்தல் **நிலச்சரிவு** எனப்படுகிறது.
- **பேரிடர் அபாய நேர்வு குறைப்பு** என்பது முறையான நடவடிக்கைகளின் மூலம் அபாயத்தின் தன்மையை குறைப்பதாகும்.
- நில அதிர்வு, எரிமலை, நிலச்சரிவு. சூறாவளி, புயல், வெள்ளப் பெருக்கு, காட்டுத்தீ மற்றும் வறட்சி ஆகியன **இயற்கைப் பேரிடர்களாகும்**.

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **தமிழ்நாட்டின் அட்சப் பரவல் __________ முதல் __________ வரை உள்ளது.**
   அ) 8°4' வ முதல் 13°35' வ வரை
   ஆ) 8°5' தெ முதல் 13°35' தெ வரை
   இ) 8°0' வ முதல் 13°05' வ வரை
   ஈ) 8°0' தெ முதல் 13°05' தெ வரை

2. **தமிழ்நாட்டின் தீர்க்கப் பரவல் __________ முதல் __________ வரை உள்ளது.**
   அ) 76°18' கி முதல் 80°20' கி வரை
   ஆ) 76°18' மே முதல் 80°20'மே வரை
   இ) 10°20' கி முதல் 86°18' கி வரை
   ஈ) 10°20' மே முதல் 86°18'மே வரை

3. **தமிழ்நாட்டில் உள்ள மிக உயரமான சிகரம் __________ ஆகும்.**
   அ) ஆனைமுடி ஆ) தொட்டபெட்டா இ) மகேந்திரகிரி ஈ) சேர்வராயன்

4. கீழ்க்கண்டவற்றில் தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலையில் அமையாத கணவாய் எது?
அ) பாலக்காடு ஆ) செங்கோட்டை இ) போர்காட் ஈ) அச்சன்கோவில்

5. கீழ்க்கண்டவற்றில் அரபிக்கடலில் கலக்கும் ஆறு எது? **PTA**
அ) பெரியார் ஆ) காவிரி இ) சித்தார் ஈ) பவானி

6. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் மாங்குரோவ் காடுகள் காணப்படும் மாவட்டம் எது?
அ) இராமநாதபுரம் ஆ) நாகப்பட்டினம் இ) கடலூர் ஈ) தேனி

7. இந்திய வன அறிக்கை 2017இன் படி தமிழ்நாட்டின் வனப்பரப்பளவு __________ .
அ) 20.21% ஆ) 20.31% இ) 21.20% ஈ) 21.30%

8. பின்னடையும் பருவக்காற்று __________ லிருந்து ஈரப்பதத்தை எடுத்துக்கொள்கிறது.
அ) அரபிக்கடல் ஆ) வங்கக்கடல் இ) இந்தியப் பெருங்கடல் ஈ) தைமுர்க்கடல்

9. கீழ்க்கண்டவற்றுள் மண் அரிப்பினால் அதிக அளவு பாதிக்கப்பட்ட மாவட்டம் __________ .
அ) தேனி ஆ) மதுரை இ) தஞ்சாவூர் ஈ) இராமநாதபுரம்

10. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் காடுகளைக் கொண்ட மாவட்டம் __________ . **PTA**
அ) தருமபுரி ஆ) வேலூர் இ) திண்டுக்கல் ஈ) ஈரோடு

கூடுதல் வினாக்கள்

11. மொழியின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட முதல் மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) கேரளா இ) ஆந்திரப் பிரதேசம் ஈ) கர்நாடகா

12. மதராஸ் மாகாணத்தை தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்த முதலமைச்சர்
அ) காமராஜர் ஆ) சி.என்.அண்ணாதுரை
இ) மு.கருணாநிதி ஈ) எம்.ஜி.ராமச்சந்திரன்

13. தமிழ்நாட்டின் வடகோடியாகக் கருதப்படுவது
அ) பழவேற்காடு ஏரி ஆ) வேம்பநாடு ஏரி இ) சில்கா ஏரி ஈ) கொல்லேறு ஏரி

14. கோண்டுவானா நிலப்பகுதியிலிருந்து உருவான ஒரு பகுதி
அ) இமயமலை ஆ) தார் பாலைவனம் இ) கங்கைச் சமவெளி ஈ) தக்காண பீடபூமி

15. தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலைகளிலுள்ள கணவாய்
அ) கைபர் கணவாய் ஆ) போலன் கணவாய்
இ) தால்காட் கணவாய் ஈ) பாலக்காட்டுக் கணவாய்

16. தமிழ்நாட்டின் வடமேற்கில் அமைந்துள்ள மலை
அ) கொல்லி மலை ஆ) நீலகிரி மலை இ) ஆனை மலை ஈ) பொதிகை மலை

17. "காடம்பாறை" நீர்மின் நிலையம் அமைந்துள்ள மலை
அ) ஆனை மலை ஆ) பழனி மலை இ) நீலகிரி மலை ஈ) பச்சை மலை

18. ஆனைமலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள அணை
அ) மேட்டூர் அணை ஆ) கல்லணை இ) திருமூர்த்தி அணை ஈ) சாத்தனூர் அணை

19. கொடைக்கானல் மலைவாழிடம் அமைந்துள்ள மாவட்டம்
அ) மதுரை ஆ) கோயம்புத்தூர் இ) திண்டுக்கல் ஈ) நீலகிரி

20. "சாம்பல்நிற அணில் சரணாலயம்" அமைந்துள்ள இடம்
அ) ராஜபாளையம் ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் இ) சிவகாசி ஈ) சாத்தூர்

21. "தெற்கு கைலாயம்" என்று அழைக்கப்படும் மலை
அ) ஜவ்வாது மலை ஆ) மகேந்திரகிரி மலை இ) ஆனை மலை ஈ) பொதிகை மலை

22. மகேந்திரகிரி மலையின் அடிவாரப்பகுதியில் அமைந்துள்ளது
அ) புலிகள் காப்பகம் ஆ) செயற்கைக் கோள் ஏவுதளம்
இ) அணுமின் நிலையம் ஈ) கும்பக்கரை நீர் வீழ்ச்சி

23. "ஏழைகளின் ஊட்டி" என்று அழைக்கப்படுவது
அ) ஏற்காடு ஆ) சிம்லா இ) ஏலகிரி ஈ) கொடைக்கானல்

24. கோயம்புத்தூர் பீடபூமியை மைசூர் பீடபூமியிலிருந்து பிரிப்பது
அ) வைகை ஆறு ஆ) காவேரி ஆறு இ) மோயர் ஆறு ஈ) சிற்றாறு

25. பவளப்பாறைகள் அதிகமாகக் காணப்படும் பகுதி
அ) மலபார் கடற்கரை ஆ) காம்பே வளைகுடா இ) கட்ச் வளைகுடா ஈ) மன்னார் வளைகுடா

26. கன்னியாகுமரியிலுள்ள புகழ்பெற்ற கடற்கரை
அ) முட்டம் ஆ) கோவளம் இ) எலியாட் ஈ) குளச்சல்

27. வற்றாத தமிழக ஆறு
அ) காவேரி ஆ) வைகை இ) தாமிரபரணி ஈ) பாலாறு

28. தர்மபுரி மாவட்டத்தில் காணப்படும் நீர்வீழ்ச்சி
அ) திருப்பரப்பு ஆ) குற்றாலம் இ) பாலருவி ஈ) ஒகேனக்கல்

29. இந்தியாவை இரு சமபாகங்களாகப் பிரிப்பது
அ) கடக ரேகை ஆ) பூமத்திய ரேகை இ) மகர ரேகை ஈ) வடதுருவம்

30. "பின்னடையும் பருவக்காற்று" என்று அழைக்கப்படுவது
அ) தென்மேற்கு பருவக்காற்று ஆ) வடமேற்கு பருவக்காற்று
இ) தென்கிழக்கு பருவக்காற்று ஈ) வடகிழக்கு பருவக்காற்று

31. வளமான ஒரு மண்
அ) சரளை மண் ஆ) வண்டல் மண் இ) செம்மண் ஈ) கரிசல் மண்

32. தமிழ்நாட்டின் சோழமண்டலக் கடற்கரைப் பகுதிகளில் மட்டுமே காணப்படும் மண்
அ) வண்டல் மண் ஆ) பாலை மண் இ) உவர் மண் ஈ) சரளை மண்

33. ஆற்று முகத்துவாரங்களில் காணப்படும் காடுகள்
அ) மாங்குரோவ் காடுகள் ஆ) ஊசியிலைக் காடுகள்
இ) இலையுதிர் காடுகள் ஈ) பசுமை மாறாக் காடுகள்

34. "புள்ளிமான் சரணாலயம்" அமைந்துள்ள இடம்
அ) களக்காடு ஆ) கோடியக்கரை இ) வளநாடு ஈ) கங்கை கொண்டான்

35. வேடந்தாங்கலில் உள்ள சரணாலயம்
அ) புலிகள் சரணாலயம் ஆ) மான்கள் சரணாலயம்
இ) பறவைகள் சரணாலயம் ஈ) அணில்கள் சரணாலயம்

36. நிலச்சரிவு ஏற்பட முக்கியக் காரணி
அ) நெருப்பு ஆ) நீர் இ) சூறாவளி ஈ) அதிகவெப்பம்

விடைகள்

1. அ) 8º4' வ முதல் 13º35' வ வரை
2. அ) 76º18' கி முதல் 80º20' கி வரை
3. ஆ) தொட்டபெட்டா
4. இ) போர்காட்
5. அ) பெரியார்
6. இ) கடலூர்
7. அ) 20.21%
8. ஆ) வங்கக்கடல்
9. அ) தேனி
10. அ) தருமபுரி
11. இ) ஆந்திரப் பிரதேசம்
12. ஆ) சி.என்.அண்ணாதுரை
13. அ) பழவேற்காடு ஏரி
14. ஈ) தக்காண பீடபூமி
15. ஈ) பாலக்காட்டுக் கணவாய்
16. ஆ) நீலகிரி மலை
17. அ) ஆனை மலை
18. இ) திருமூர்த்தி அணை
19. இ) திண்டுக்கல்
20. ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர்
21. ஈ) பொதிகை மலை
22. ஆ) செயற்கைக் கோள் ஏவுதளம்
23. அ) ஏற்காடு
24. இ) மோயர் ஆறு
25. ஈ) மன்னார் வளைகுடா
26. ஆ) கோவளம்
27. இ) தாமிரபரணி
28. ஈ) ஒகேனக்கல்
29. அ) கடக ரேகை
30. ஈ) வடகிழக்கு பருவக்காற்று
31. ஆ) வண்டல் மண்
32. இ) உவர் மண்
33. அ) மாங்குரோவ் காடுகள்
34. ஈ) கங்கை கொண்டான்
35. இ) பறவைகள் சரணாலயம்
36. ஆ) நீர்

II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. நீலகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்கிடையே காணப்படும் பீடபூமி __________ ஆகும்.
2. கிழக்கு தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் உள்ள உயரமான சிகரம் __________ ஆகும்.
3. ஆற்றுத் தீவான ஸ்ரீரங்கம் __________ மற்றும் __________ ஆறுகளுக்கு இடையே அமைந்துள்ளது.
4. தேயிலை மற்றும் காபி செடிகள் பயிரிடுவதற்கு ஏற்ற மண் __________ ஆகும்.
5. __________ தமிழ்நாட்டின் மாநில விலங்கு மற்றும் இவை காணப்படும் இடம் __________ ஆகும்.

கூடுதல் வினாக்கள்

6. மொழியின் அடிப்படையில் மாநிலங்கள் மறு சீரமைப்பு செய்யப்பட்ட ஆண்டு __________ .
7. தமிழ்நாட்டின் மேற்கு கோடியாக அமைந்துள்ளது __________ .
8. தமிழ்நாட்டின் தென்கோடியாகக் கருதப்படுவது __________ .
9. தமிழ்நாட்டையும், இலங்கையையும் பிரிப்பவை __________ மற்றும் __________ .
10. தமிழ்நாடு உருவான காலக்கட்டத்தில் இருந்த மாவட்டங்களின் எண்ணிக்கை __________ .
11. தமிழ்நாட்டில் தற்போது __________ மாவட்டங்கள் உள்ளன.
12. தக்காண பீடபூமி, __________ நிலப்பகுதியிலிருந்து உருவான ஒரு பகுதியாகும்.
13. தமிழ்நாட்டின் நிலத்தோற்ற அமைப்பு __________ நோக்கிய சரிவைக் கொண்டுள்ளது.
14. நீலகிரி மலையில் அமைந்துள்ள முக்கிய மலைவாழிடங்கள் __________ மற்றும் __________ என்பனவாகும்.
15. பொதிகைமலைப் பகுதியில் அமைந்துள்ள புலிகள் காப்பகம் __________ .
16. ஜவ்வாது மலையின் மிக உயரமான சிகரம் __________ .
17. சேலம் நகருக்கு அருகே அமைந்துள்ள மலைத்தொடர் __________ .
18. கொல்லி மலைத்தொடரில் அமைந்துள்ள முக்கியமான புனிதத்தலம் __________ .
19. தமிழ் நாட்டின் வடமேற்கு பகுதியில் அமைந்திருக்கும் பீடபூமி __________ .
20. நீலகிரி பகுதியில் காணப்படும் ஒரு குறிப்பிடத்தக்க மலையிடைப் பீடபூமி __________ .
21. தமிழ்நாட்டின் கடற்கரைச் சமவெளி __________ என்று அழைக்கப்படுகிறது.
22. இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் கடற்கரையோரங்களில் உருவாக்கப்பட்ட மணல் குன்றுகள் __________ என்று அழைக்கப்படுகின்றன.
23. காவிரி ஆறு __________ என்னுமிடத்தில் உற்பத்தியாகிறது.
24. ஸ்டான்லி நீர்த்தேக்கம் என்று அழைக்கப்படும் அணை __________ ஆகும்.
25. காவிரி ஆறு __________ மாவட்டத்தில் இரண்டு கிளைகளாகப் பிரிகிறது.
26. காவிரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணை __________ (கிராண்ட் அணைகட்).
27. காவிரி டெல்டா பகுதிகளில் கிளை ஆறுகளால் உண்டாகியுள்ள வலைப்பின்னல் அமைப்பு __________ என்று அழைக்கப்படுகிறது.
28. இந்திய மாநிலங்களில் மிக நீளமான கடற்கரையைக் கொண்டது __________.

29. வைகை ஆறு மேற்கு தொடர்ச்சி மலையிலுள்ள __________ குன்றுகளின் கிழக்குச் சரிவில் உற்பத்தியாகிறது.

30. வெப்பமண்டல சூறாவளிகள் __________ பருவத்தில் உருவாகின்றன.

31. தமிழ்நாட்டில் மிக அதிக மழைபெறும் பகுதி __________ . **PTA**

32. __________ என்பது வானிலைச் சிதைவு மற்றும் அரிப்பினால் பாறைகள் சிதைந்து உருவாகும் துகள்களாகும்.

33. தீப்பாறைகள் சிதைவடைவதன் மூலம் உருவாகும் மண் __________ ஆகும்.

34. பருத்தி விளைவதற்கு ஏற்ற மண் __________ .

35. தமிழ்நாட்டில் செம்மண் அதிகம் காணப்படும் மாவட்டங்கள்__________, __________ .

36. "சோலாஸ்" என்று அழைக்கப்படும் காடுகள் __________ .

37. "வளநாடு கருப்பு மான்கள் சரணாலயம்" அமைந்துள்ள மாவட்டம் __________ .

38. திருவள்ளூர் மாவட்டத்தில் __________ பறவைகள் சரணாலயம் உள்ளது.

39. உயிரினங்களுக்கும், உடைமைகளுக்கும் இயற்கையினால் ஏற்படும் பேரழிவினை __________ என்கிறோம்.

40. தமிழ்நாட்டில் __________ பருவக்காற்று காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது.

விடைகள்

1. கோயம்புத்தூர் பீடபூமி	2. சோலைக்கரடு	3. கொள்ளிடம், காவேரி
4. சரளைமண்	5. நீலகிரி வரையாடு, நீலகிரி	6. 1956
7. ஆனைமலை	8. குமரிமுனை	9. மன்னார் வளைகுடா, பாக் நீரிணைப்பு
10. 13	11. 35	12. கோண்டுவானா
13. கிழக்கு	14. ஊட்டி, குன்னூர்	15. களக்காடு–முண்டந்துறை
16. மேல்பட்டு	17. சேர்வராயன் மலைத்தொடர்	18. அரப்பளீஸ்வரர் கோவில்
19. பாரமஹால்	20. சிகூர் பீடபூமி	
21. கோரமண்டல் அல்லது சோழ மண்டல சமவெளி		22. தெரி
23. தலைக்காவிரி	24. மேட்டூர் அணை	25. திருச்சிராப்பள்ளி
26. கல்லணை	27. தென்னிந்தியாவின் தோட்டம்	28. குஜராத்
29. வருஷ நாட்டு	30. வடகிழக்கு	31. சின்னக்கல்லார்
32. மண்	33. கரிசல் மண்	34. கரிசல் மண்
35. சிவகங்கை, இராமநாதபுரம்	36. மிதவெப்பமண்டல மலைக் காடுகள்	
37. தூத்துக்குடி	38. பழவேற்காடு ஏரி	39. பேரிடர்
40. வடகிழக்கு		

III. பொருத்துக:

பாடநூல் வினாக்கள்

அ) 1. குளிர்காலம்	அ) முன் பருவ மழை	விடை	
2. கோடை காலம்	ஆ) ஜூன் – செப்டம்பர்	1) ஈ	
3. தென்மேற்குப் பருவக்காற்று	இ) மார்ச் – மே	2) இ	
4. வடகிழக்குப் பருவக்காற்று	ஈ) டிசம்பர் – பிப்ரவரி	3) ஆ	
5. மாஞ்சாரல்	உ) அக்டோபர் – நவம்பர்	4) உ	
		5) அ	

கூடுதல் வினாக்கள்

ஆ)

				விடை
1.	மாவட்டங்கள்	அ)	39	1) இ
2.	மாநகராட்சிகள்	ஆ)	234	2) ஈ
3.	நகராட்சிகள்	இ)	35	3) உ
4.	சட்டமன்றத் தொகுதிகள்	ஈ)	15	4) ஆ
5.	மக்களவைத் தொகுதிகள்	உ)	125	5) அ

இ)

				விடை
1.	முக்குருத்தி	அ)	நீர்மின் நிலையம்	1) உ
2.	ஆழியாறு	ஆ)	மலைவாழிடம்	2) ஈ
3.	வால்பாறை	இ)	அணை	3) ஆ
4.	காடம்பாறை	ஈ)	பாதுகாக்கப்பட்ட காடுகள்	4) அ
5.	திருமூர்த்தி	உ)	சிகரம்	5) இ

ஈ)

				விடை
1.	வரையாடு	அ)	தெற்கு கைலாயம்	1) ஆ
2.	புலிகள் காப்பகம்	ஆ)	நீலகிரி மலை	2) இ
3.	கொடைக்கானல்	இ)	ஆனை மலை	3) ஈ
4.	கும்பக்கரை நீர்வீழ்ச்சி	ஈ)	பழனி மலை	4) உ
5.	பொதிகை மலை	உ)	வருஷநாடு	5) அ

உ)

				விடை
1.	சாம்பல் நிற அணில்	அ)	மகேந்திரகிரி	1) இ
2.	இஸ்ரோ	ஆ)	காவலூர்	2) அ
3.	வானியல் தொலைநோக்கி மையம்	இ)	ஸ்ரீவில்லிபுத்தூர்	3) ஆ
4.	ஏற்காடு	ஈ)	கல்வராயன்	4) உ
5.	கரலர்	உ)	ஏழைகளின் ஊட்டி	5) ஈ

ஊ)

				விடை
1.	திண்டுக்கல்	அ)	அகத்திய மலை	1) ஈ
2.	நாமக்கல்	ஆ)	பச்சைமலை	2) உ
3.	பெரம்பலூர்	இ)	கஞ்சமலை	3) ஆ
4.	திருநெல்வேலி	ஈ)	பழனிமலை	4) அ
5.	சேலம்	உ)	கொல்லிமலை	5) இ

எ)

				விடை
1.	பாரமஹால்	அ)	மணல் குன்று	1) உ
2.	தேரி	ஆ)	கடற்கரை	2) அ
3.	கோரமண்டல்	இ)	நீர்வீழ்ச்சி	3) ஆ
4.	ஸ்ரீரங்கம்	ஈ)	தீவு	4) ஈ
5.	ஒகேனக்கல்	உ)	பீடபூமி	5) இ

ஏ)

				விடை
1.	குற்றாலம்	அ)	வனவிலங்கு	1) இ
2.	கொரியாலிஸ்	ஆ)	பறவைகள்	2) ஈ
3.	பிச்சாவரம்	இ)	நீர்வீழ்ச்சி	3) உ
4.	கூடன் குளம்	ஈ)	விசை	4) ஆ
5.	முதுமலை	உ)	சதுப்பு நிலக்காடு	5) அ

IV. சரியான கூற்றினை கண்டுபிடி:

பாடநூல் வினாக்கள்

1. கூற்று : தமிழ்நாடு தென்மேற்கு பருவகாற்று காலங்களில் அதிக மழையைப் பெறுவதில்லை.
   காரணம் : இது மேற்கு தொடர்ச்சி மலையின் மழை மறைவுப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.
   அ) கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
   ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
   இ) கூற்று சரி. ஆனால் காரணம் தவறு.
   ஈ) காரணம் சரி. ஆனால் கூற்று தவறு.

2. கூற்று : செம்மண்ணில் அதிக அளவு இரும்பு ஆக்சைடுகள் உள்ளன.
   காரணம் : இது சுவருதலால் உருவாகிறது.
   அ) கூற்று காரணம் இரண்டும் சரி. கூற்று காரணத்தை விளக்குகிறது.
   ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் கூற்றுக்கான காரணம் சரியான விளக்கம் அல்ல.
   இ) கூற்று சரி. ஆனால் காரணம் தவறு.
   ஈ) காரணம் சரி. ஆனால் கூற்று தவறு.

கூடுதல் வினாக்கள்

3. கூற்று : ஆங்கில ஆட்சியின் போது நமது தேசம் மதராஸ், பம்பாய் மற்றும் கல்கத்தா என மூன்று மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது.
   காரணம் : ராணுவ நோக்கங்களுக்காக தெலுங்கு மொழி பேசும் பகுதிகள் மதராஸ் மாகாணத்திலிருந்து பிரிக்கப்பட்டது.
   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி.
   ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.
   இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
   ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

4. கூற்று : தமிழ்நாட்டில் தற்போது 35 மாவட்டங்கள் உள்ளன.
   காரணம் : நிர்வாக வசதிக்காக மாநிலம் பலமுறை மறுசீரமைப்பு செய்யப்பட்டது.
   அ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
   ஆ) காரணம் சரி ஆனால் கூற்று தவறு.
   இ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
   ஈ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

விடைகள்

1. அ) கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
2. இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
3. இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
4. ஈ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

V. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக.** PTA
   - கிழக்கே வங்காள விரிகுடா
   - மேற்கே கேரளா
   - வடக்கே ஆந்திரப்பிரதேசமும், வடமேற்கே கர்நாடகாவும்
   - தெற்கே இந்தியப் பெருங்கடலும் தமிழ் நாட்டின் எல்லைகளாக அமைந்துள்ளன.

2. **கிழக்குத் தொடர்ச்சி மலை மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் சில பகுதிகள் அல்லது முழுபகுதியும் அமைந்துள்ள தமிழ்நாட்டின் மாவட்டங்களின் பெயர்களைப் பட்டியலிடுக.**

   கிழக்குத் தொடர்ச்சி மலைகள் அமைந்துள்ள மாவட்டங்கள்:
   - திருவண்ணாமலை
   - பெரம்பலூர்
   - வேலூர்
   - சேலம்
   - நாமக்கல்
   - விழுப்புரம்

   மேற்குத் தொடர்ச்சி மலைகள் அமைந்துள்ள மாவட்டங்கள்:
   - நீலகிரி
   - விருதுநகர்
   - திண்டுக்கல்
   - திருநெல்வேலி
   - கோயம்புத்தூர்
   - கன்னியாகுமரி
   - தேனி
   - தர்மபுரி

3. **"தேரி" என்றால் என்ன?**
   - இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் கடற்கரையோரங்களில் உருவாக்கப்பட்ட மணல் குன்றுகள் "தேரி" என்று அழைக்கப்படுகின்றன.

4. **கடற்கரைச் சமவெளி எவ்வாறு உருவாகிறது?**
   - தமிழ்நாட்டின் கடற்கரைச் சமவெளியானது கிழக்கு நோக்கி பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கும் ஆறுகளால் உருவாக்கப்பட்டுள்ளதாகும்.
   - இச்சமவெளி கோரமண்டல் அல்லது சோழமண்டல சமவெளி (சோழர்கள் நிலம்) என அழைக்கப்படுகிறது.
   - இச்சமவெளி சென்னைமுதல் கன்னியாகுமரி வரை நீண்டுள்ளது. இது சில இடங்களில் 80 கிலோ மீட்டருக்கும் அதிகமான அகலத்துடன் காணப்படுகிறது.
   - இது உயரமான கடற்கரை என்றாலும் சில பகுதிகள் கடலில் மூழ்கியுள்ளன.

5. **தமிழ்நாட்டின் முக்கிய தீவுகளைக் குறிப்பிடுக.** PTA
   - பாம்பன் தீவு
   - காட்டுப்பள்ளி தீவு
   - முயல் தீவு
   - கொய்யில் தீவு
   - குருசாடி தீவு
   - புள்ளிவாசல் தீவு
   - விவேகானந்தர் நினைவுப் பாறை
   - நல்லதண்ணித் தீவு
   - ஸ்ரீரங்கம் தீவு
   - உப்புதண்ணி தீவு நிலங்கள்

6. **தாமிரபரணி ஆற்றின் துணை ஆறுகளின் பெயர்களை எழுதுக.**
   - காரையாறு
   - மணிமுத்தாறு
   - பச்சையாறு
   - சேர்வலாறு
   - கடனாநதி
   - சித்தாறு
   - இராமநதி

7. **பேரிடர் அபாய நேர்வு – வரையறு.**
   - உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் இயற்கையினால் ஏற்படும் பேரழிவு பேரிடர் எனப்படுகிறது.
   - ஐக்கிய நாடுகள் சபையின் அபாய நேர்வு குறைப்பு அமைப்பின் கூற்றுப்படி, அபாய குறைப்பு என்பது பேரிடருக்கான காரணங்களை முறையாக கண்டறிந்து பேரிடரின்போது அதன் தாக்கங்களைக் குறைப்பதாகும்.
   - இது இடர் உண்டாகும் இடங்களைத் தவிர்த்தல், மக்களின் உயிர் மற்றும் உடைமைகளின் பாதிப்பினை குறைப்பது, நில மேலாண்மை, சூழ்நிலை மேலாண்மை, எதிர் விளைவுகள் குறித்த தயார் நிலை மற்றும் எச்சரிக்கை ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும்.

8. **புயலின்போது வானிலை மையம் மீனவர்களை எவ்வாறு எச்சரிக்கிறது?**

- மீனவர்கள் கூடுதலான மின்சாதனங்களுடன் (பேட்டரிகள்) ஒரு வானொலிப் பெட்டியை வைத்திருத்தல் வேண்டும். அதன் மூலம் அவ்வப்போதைய வானிலை நிலைமைகளைக் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.
- புயலின்போது கடலுக்குச் செல்வதைத் தவிர்த்து படகுகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.
- வதந்திகளை நம்பாமல் அமைதியாகவும் பதற்றமடையாமலும் இருத்தல் வேண்டும்.

கூடுதல் வினாக்கள்

9. **மாநில நிர்வாகப் பிரிவுகள் யாவை?**

- மாவட்டங்கள்
- வருவாய் கோட்டங்கள்
- வட்டங்கள்
- பிர்காக்கள்
- வருவாய் கிராமங்கள்
- மாநகராட்சிகள்
- நகராட்சிகள்
- ஊராட்சி ஒன்றியங்கள்
- பேரூராட்சிகள்
- கிராம ஊராட்சிகள்
- மக்களவைத் தொகுதிகள்
- சட்டமன்றத் தொகுதிகள்

10. **மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள முக்கிய மலைகள் யாவை?**

- நீலகிரி மலை
- ஆனை மலை
- பழனி மலை
- ஏலக்காய் மலை
- வருசநாடு மலை
- ஆண்டிப்பட்டிமலை
- அகத்தியர் மலை

11. **மேற்குத் தொடர்ச்சி மலையையிலுள்ள சிகரங்கள் யாவை?**

- தொட்டபெட்டா
- முக்குருத்தி
- வேம்படி சோலை
- பெருமாள்மலை
- கொட்டைம்தலை
- பகாசுரா

12. **பொதிகைமலை பற்றி குறிப்பு வரைக.**

- பொதிகை மலையின் பெரும்பகுதி திருநெல்வேலி மாவட்டத்திலும் இதன் தென்சரிவு கன்னியாகுமரி மாவட்டத்திலும் அமைந்துள்ளது.
- பொதிகை மலையானது சிவஜோதி பர்வத், அகத்தியர் மலைகள் மற்றும் தெற்கு கைலாயம் என பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது.
- இப்பகுதி வளமான பசுமை மாறாக்காடுகள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் பழைமையான கோயில்கள் ஆகியவற்றிற்கு புகழ் பெற்றதாகும்.
- களக்காடு – முண்டந்துறை 'புலிகள் காப்பகம்' இப்பகுதியில் அமைந்துள்ளது.

13. **தமிழ்நாட்டின் ஆறுகள் பற்றி எழுதுக.** **PTA**

- ஆறுகள் தமிழ்நாட்டின் உயிர்நாடிகளாகும். தமிழ் நாட்டில் பல ஆறுகள் காணப்பட்டாலும் காவிரி, பாலாறு, தென்பெண்ணை, வைகை, தாமிரபரணி போன்றவை குறிப்பிடத்தக்கவை.
- தமிழ்நாட்டின் பெரும்பாலான ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி கிழக்குநோக்கிப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கின்றன.
- தாமிரபரணி ஆற்றைத்தவிர மற்ற ஆறுகள் அனைத்தும் வற்றும் ஆறுகளாகும். தாமிரபரணி தென்மேற்கு மற்றும் வடகிழக்கு ஆகிய இரு பருவமழை காலங்களிலும் மழை பெறுவதால் வற்றாத ஆறாக உள்ளது.

14. **"தென்னிந்தியாவின் தோட்டம்" குறிப்பு வரைக.**

- காவிரி ஆறு கல்லணையைக் கடந்தபின் பல கிளைகளாகப் பிரிந்து டெல்டா பகுதி முழுவதற்கும் ஒரு வலைப்பின்னல் அமைப்பை உருவாக்கியுள்ளது.
- காவிரி டெல்டா பகுதிகளில் கிளை ஆறுகளால் உண்டாகியுள்ள இவ்வலைப்பின்னல் அமைப்பு "தென்னிந்தியாவின் தோட்டம்" என்று அழைக்கப்படுகிறது.

15. **"கொரியாலிஸ் விசை" என்றால் என்ன?**

- கொரியாலிஸ் விசை" என்பது பூமியின் சுழற்சியின் காரணமாக நகரும் அல்லது இயங்கும் பொருட்களை (உந்தி வீசப்பட்ட பொருட்கள் மற்றும் காற்றோட்டம்) வட அரைக்கோளத்தில் வலது புறமாகவும், தென்அரைக்கோளத்தில் இடதுபுறமாகவும், திசைகளை மாற்றியமைக்கும் விசை ஆகும்.

16. **தமிழ்நாட்டில் காணப்படும் மண் வகைகள் யாவை?**
- வண்டல் மண்
- சரளை மண்
- கரிசல் மண்
- உவர் மண்
- செம்மண்

17. **மண் அரிப்பை ஏற்படுத்தும் காரணிகள் யாவை?**
- காடுகள் அழிப்பு, அதிக மேய்ப்பு, நகரமயமாக்கல், அதிக மழைப்பொழிவு ஆகியன மண் அரிப்பிற்கான முக்கியக் காரணிகளாகும்.

18. **இயற்கைத்தாவரம் என்றால் என்ன?**
- இயற்கைத்தாவரம் என்பது புவியில் இயற்கையாக வளரும் தாவரங்களின் தொகுப்பாகும்.
- நிலத்தோற்றம், மண்ணின் தன்மை, வெப்பநிலை மற்றும் மழைப்பொழிவு ஆகியவை இயற்கைத் தாவரங்களின் பரவலை கட்டுப்படுத்தும் முக்கிய காரணிகளாகும்.

19. **தமிழகத்திலுள்ள ஐந்துவகையான காடுகள் யாவை?**
- வெப்பமண்டல பசுமைமாறாக்காடுகள்
- மித வெப்பமண்டல மலைக்காடுகள்
- வெப்பமண்டல இலையுதிர்காடுகள்
- மாங்குரோவ் காடுகள்
- வெப்பமண்டல முட்புதர்க்காடுகள்

20. **தீ விபத்தின் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?**
- வானொலி, தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாள்களின் மூலம் அவ்வப்போதைய செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ளுதல்.
- வாளிகளில் போதுமான நீரை நிரப்பி வைத்தல்.
- புகை மூட்டம் இருக்கும் பட்சத்தில் அறையில் வெளிச்சத்தை ஏற்படுத்துதல்.
- எரிவாயு இணைப்பினை அணைத்தல் மற்றும் மின் சாதனங்களை மின் துண்டிப்பு செய்தல்.
- அனைத்து குடும்ப உறுப்பினர்களும் அவ்விடத்தில் இருந்து வெளியேற வழிவகை செய்தல் போன்றவையாகும்.

21. **தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் அமைந்துள்ள மலை வாழிடங்களைக் குறிப்பிடுக.**
- மேற்குத் தொடர்ச்சி மலைகள் : ஊட்டி, குன்னூர், கோத்தகிரி
- கிழக்குத் தொடர்ச்சி மலைகள் : ஏலகிரி, ஏற்காடு

22. **தமிழ்நாட்டின் நிலத்தோற்றப் பிரிவுகள் யாவை?**
- மேற்குத் தொடர்ச்சி மலை
- கிழக்குத்தொடர்ச்சி மலை
- பீடபூமிகள்
- கடற்கரைச்சமவெளிகள்
- உள்நாட்டுச்சமவெளிகள்

VI. வேறுபடுத்துக:

பாடநூல் வினாக்கள்

1. **தமிழகத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள்**

மேற்குத் தொடர்ச்சி மலைகள்	கிழக்குத் தொடர்ச்சி மலைகள்
1. மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர் வடக்கே நீலகிரி முதல் தெற்கே கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மருதமலை வரை நீண்டுள்ளது.	கிழக்குத் தொடர்ச்சி மலைத் தொடரானது, மேற்குத் தொடர்ச்சி மலையைப் போலன்றி ஒரு தொடர்ச்சியற்ற குன்றுகளாகும்.
2. இம்மலைத் தொடர் தொடர்ச்சியாக இருந்தாலும் சில கணவாய்கள் காணப்படுகின்றன.	இம்மலையானது பல இடங்களில் வங்காளவிரிகுடா கடலில் கலக்கும் ஆறுகளால் பிரிக்கப்பட்டுள்ளது.

3. இம்மலைத் தொடரின் உயரம் 2000 மீட்டர் முதல் 3000 மீட்டர் வரை வேறுபட்டுள்ளது.	இம்மலையின் உயரம் 1100 மீட்டர் முதல் 1600 மீட்டர் வரை மாறுபடுகிறது.
4. இம்மலைத் தொடரில் பாலக்காட்டுக் கணவாய், செங்கோட்டைக் கணவாய் ஆரல்வாய் மொழி கணவாய் மற்றும் அச்சன் கோயில் கணவாய் ஆகியன முக்கிய கணவாய்களாகும்.	இக்குன்றுகள் பீடபூமியை சமவெளியிலிருந்து பிரிக்கின்றன.
5. நீலகிரி மலை, ஆனைமலை, பழனிமலை, ஏலக்காய் மலை, வருசநாடு மலை, ஆண்டிபட்டி மலை மற்றும் அகத்தியர் மலைகள் ஆகியன இங்குள்ள முக்கிய மலைகளாகும்.	ஜவ்வாது மலை, சேர்வராயன் மலை, கல்வராயன் மலை, கொல்லிமலை மற்றும் பச்சைமலை ஆகியன இத்தொடரின் முக்கியக் குன்றுகளாகும்.

2. தென்மேற்குப் பருவக்காற்று மற்றும் வடகிழக்குப் பருவக்காற்று

தென்மேற்குப் பருவக்காற்று	வடகிழக்குப் பருவக்காற்று
1. தென்மேற்குப் பருவக்காற்றுக் காலம் ஜுன் முதல் செப்டம்பர் வரையாகும்.	வடகிழக்குப் பருவக்காற்றுக் காலம் அக்டோபர் முதல் டிசம்பர் வரையாகும்.
2. இச்சமயத்தில் காற்றானது அதிக காற்றழுத்தம் உள்ள இந்தியப் பெருங்கடலிலிருந்து வடக்கு நோக்கி வீசுகிறது. இது தென்மேற்குப் பருவக்காற்று உருவாக காரணமாகிறது.	இச்சமயத்தில் மத்திய ஆசியா மற்றும் வடஇந்தியப் பகுதிகளில் உருவாகும் அதிக காற்றழுத்தம், வடகிழக்குப் பருவக்காற்று உருவாகக் காரணமாகிறது.
3. இப்பருவத்தில் அரபிக் கடலிலிருந்து வீசும் தென்மேற்கு பருவக்காற்றின் மழை மறைவுப் பிரதேசத்தில் தமிழ்நாடு அமைந்துள்ளதால் மிகக்குறைவான மழைப்பொழிவைப் பெறுகிறது.	இப்பருவத்தில் வடஇந்தியாவிலிருந்து வங்கக்கடலை நோக்கி காற்று வீசுகிறது. இது தமிழ்நாட்டின் மழைக் காலம் ஆகும்.
4. இப்பருவத்தின் மழைப்பதிவு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி குறைகிறது. மாநிலத்தின் கிழக்குப் பகுதிகள் மிகக்குறைவான மழை அளவைப் பெறுகின்றன.	இப்பருவத்தில் தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகள் மிகக் கனத்த மழையைப் பெறுகின்றன.

3. தமிழகத்தின் பசுமை மாறாக் காடுகள் மற்றும் வெப்பமண்டல இலையுதிர் காடுகள்.

பசுமை மாறாக் காடுகள்	வெப்பமண்டல இலையுதிர் காடுகள்
1. இவ்வகைக் காடுகள் அதிக மழை பெறும் பகுதிகளில் காணப்படுகின்றன.	இவ்வகைக்காடுகள் பசுமைமாறா காடுகள் மற்றும் அரை பசுமைமாறாக் காடுகளின் விளிம்புப் பகுதிகளில் காணப்படுகின்றன.
2. இவை அடர்ந்த மற்றும் மரக்கிளை அடுக்குகள் கொண்டதாக காணப்படுகின்றன.	இக்காடுகளில் உள்ள மரங்கள் கோடைப் பருவங்களில் தங்களது இலைகளை உதிர்த்து விடுகின்றன.
3. இவ்வகைக்காடுகள் சேர்வராயன் மலை, கொல்லி மலை, பச்சைமலை ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன.	இவ்வகைக் காடுகள் தமிழகத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகளின் கிழக்குச் சரிவுகளில் காணப்படுகின்றன.

4. இலவங்கம், மலபார், கருங்காலி, பனாச மரம், ஜாவாபிளம், ஜமூன், பலாகிண்டல் ஆகிய மரங்கள் இங்கு காணப்படுகின்றது.	பருத்திப் பட்டு, காப்போக், கடம்பா, வாகை நாய்தேக்கு, வெக்காரி போன்ற மரங்கள் காணப்படுகின்றன.

கூடுதல் வினாக்கள்

4. **குளிர்காலம் மற்றும் கோடைக்காலம்**

குளிர்காலம்	கோடைக்காலம்
1. ஜனவரி முதல் பிப்ரவரி வரை தமிழ்நாட்டின் குளிர்காலம் ஆகும்.	மார்ச் முதல் மே வரை தமிழ்நாட்டின் கோடைக்காலம் ஆகும்.
2. இக்காலத்தில் சூரியனின் செங்குத்துக் கதிர்கள் பூமத்திய ரேகைக்கும் மகர ரேகைக்கும் இடையே விழுகிறது. ஆதலால் இம்மாதங்களில் காலநிலை சற்று குளிராகக் காணப்படுகிறது.	இக்காலத்தில் சூரியனின் செங்குத்துக் கதிர்கள் தென்னிந்தியாவில் விழுகிறது. தமிழகம் கடகரேகைக்கு தென்பகுதியில் அமைந்திருப்பதால் அதிக வெப்பநிலையைப் பெறுகின்றது.
3. தமிழகத்தின் குளிர்கால வெப்பநிலையானது 15⁰C முதல் 25⁰C வரை மாறுபடுகிறது.	தமிழகத்தின் கோடைக்கால வெப்பநிலையானது 30⁰C முதல் 40⁰C வரை வேறுபடுகிறது.
4. இக்குறைந்த வெப்பநிலை அடர் மூடுபனி மற்றும் மூடுபனி உருவாகக் காரணமாகிறது.	இப்பருவத்தில் தமிழகத்தின் தென்பகுதி முன்பருவ மழை மூலமும், வெப்பச்சலனம் மூலமும் மழையைப் பெறுகிறது.

5. **வண்டல் மண் மற்றும் கரிசல் மண்**

வண்டல் மண்	கரிசல் மண்
1. வண்டல் மண் ஆறுகளால் படியவைக்கப்படும் நுண் படிவுகளால் உருவாகின்றது. இம்மண் ஒரு வளமிக்க மண்ணாகும்.	தீப்பாறைகள் சிதைவடைவதன் மூலம் கரிசல் மண் உருவாகிறது. இம்மண் ரெகூர் மண் என்றும் பருத்தி மண் என்றும் அழைக்கப்படுகிறது.
2. தமிழ்நாட்டின் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் மற்றும் கடற்கரையோரப் பகுதிகளில் இம்மண் காணப்படுகிறது.	தக்காண லாவா பீடபூமி பகுதிகளில் அரை வறண்ட காலநிலையில் இம்மண் உருவாகிறது.
3. தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், விழுப்புரம், கடலூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இவ்வகைமண் அதிகம் காணப்படுகிறது.	மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் இவ்வகை மண் பெருமளவில் காணப்படுகிறது.
4. நெல், கரும்பு, வாழை, மஞ்சள் போன்ற பயிர்கள் இம்மண்ணில் பயிரிடப்படுகின்றன.	பருத்தி, கம்பு, சோளம் போன்ற பயிர்கள் கரிசல் மண்ணில் பெருமளவில் பயிரிடப்படுகின்றன.
5. இம்மண்ணில் சுண்ணாம்புச்சத்து, பொட்டாசியம், மக்னீசியம், நைட்ரஜன் மற்றும் பாஸ்போரிக் அமிலம் ஆகியவை உள்ளன.	இம்மண்ணில் கால்சியம், மக்னீசியம், கார்பனேட், பொட்டாசியம் மற்றும் சுண்ணாம்புச் சத்துக்கள் ஆகியவை உள்ளன.

6.

7. கரிசல் மண் மற்றும் செம்மண்

கரிசல் மண்	செம்மண்
1. தீப்பாறைகள் சிதைவடைதலால் கரிசல் மண் உருவாகிறது.	பழங்காலப் படிவுப் பாறைகள் மற்றும் உருமாறிய பாறைகள் சிதைவுறுதலால் செம்மண் உருவாகிறது.
2. இம்மண் மிக நுண்ணிய துகள்களைக் கொண்ட களிமண்ணால் ஆனது.	இம்மண் பெரிய மண்துகள்களைக் கொண்டது. ஈரப்பதத்தைத் தக்க வைத்துக்கொள்ளும் தன்மை உடையது.
3. இதில் கால்சியம், மக்னீசியம், கார்பனேட், பொட்டாஷ் மற்றும் சுண்ணாம்புச் சத்துக்கள் அதிகம்.	இம்மண்ணில் இரும்புச்சத்து அதிகம்
4. பருத்தி, கம்பு, சோளம் மற்றும் கால்நடைத் தீவனங்கள் இம்மண்ணில் பயிராகின்றன.	நெல், கேழ்வரகு, புகையிலை மற்றும் காய்கறிகள் இம்மண்ணில் பயிராகின்றன.
5. கோயம்புத்தூர், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் இம்மண் அதிகம் காணப்படுகிறது.	சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் இம்மண் அதிகம் காணப்படுகிறது.

VII. கீழ்க்கண்டவற்றிற்கு காரணம் கூறுக:

பாடநூல் வினாக்கள்

1. கிழக்குத் தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.

காரணம்:

- கிழக்குத் தொடர்ச்சி மலையானது பல இடங்களில் வங்காளவிரிகுடா கடலில் கலக்கும் ஆறுகளால் பிரிக்கப்பட்டுள்ளது. எனவே கிழக்குத் தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.

2. தென்மேற்குப் பருவக்காற்று காலத்தில் தமிழ்நாடு மிகக்குறைந்த மழையைப் பெறுகிறது.

காரணம்:

- தென்மேற்குப் பருவக்காற்று காலத்தில் அரபிக்கடலிலிருந்து வீசும் பருவக்காற்றின் மழை மறைவுப் பிரதேசத்தில் தமிழ்நாடு அமைந்துள்ளதால் மிகக் குறைவான மழைப் பொழிவைப் பெறுகிறது.

3. வண்டல் மண் என்பது ஒரு வளமான மண்.

காரணம்:

- வண்டல் மண் ஆறுகளால் படிய வைக்கப்படும் நுண் படிவுகளால் உருவாகின்றது. இம்மண் சுண்ணாம்புச் சத்து, பொட்டாசியம், மெக்னீசியம், நைட்ரஜன் மற்றும் பாஸ்போரிக் அமிலம் ஆகிய தாதுக்களைக் கொண்டுள்ளதால், இது ஒரு வளம் மிகுந்த மண்ணாகும்.

4. கடலூர் ஒரு பல்வழி பேரழிவு மண்டலம்.

காரணம்:

- தமிழ்நாட்டில் நிகழும் பேரிடர்களான வெள்ளப்பெருக்கு, புயல்கள், சுனாமி மற்றும் நில அதிர்வு ஆகியவற்றால் பாதிப்புக்குள்ளாகும் மாவட்டமாக கடலூர் இருப்பதால் அதனை ஒரு பல்வழி பேரழிவு மண்டலம் என அழைக்கின்றனர்.

கூடுதல் வினாக்கள்

5. **ஆங்கிலேய ஆட்சியின்போது நமது தேசம் மதராஸ், பம்பாய் மற்றும் கல்கத்தா என மூன்று மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது.**

காரணம்:

- ஆங்கிலேய அரசின் அரசியல் மற்றும் இராணுவ நோக்கங்களுக்காக நமது தேசம் மூன்று மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது.

6. **தமிழ்நாடு உருவான காலக் கட்டத்தில் 13 மாவட்டங்கள் மட்டுமே இருந்தன. ஆனால் தற்போது தமிழ்நாட்டில் 35 மாவட்டங்கள் உள்ளன.**

காரணம்:

- நிர்வாக வசதிக்காக தமிழ்நாடு மாநிலம் பலமுறை சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

7. **தமிழ்நாட்டின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள மலைகள் ஏலமலைக் குன்றுகள் என அழைக்கப்படுகின்றன.**

காரணம்:

- இம்மலைகளில் அதிகமான அளவு ஏலக்காய் பயிரிடப்படுவதால் ஏலமலைக் குன்றுகள் என அழைக்கப்படுகின்றன.

8. **திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் உயரம் குறைந்த குன்றுத் தொடராக காணப்படும் மலை "பச்சை மலை" என அழைக்கப்படுகிறது.**

காரணம்:

- தமிழ்மொழியில் 'பச்சை' என்பது பசுமையைக் குறிக்கிறது. பச்சை மலைகளில் காணப்படும் தாவரங்கள் மற்றப் பகுதிகளைவிட பசுமையாகக் காணப்படுவதால் இது பச்சைமலை என அழைக்கப்படுகிறது.

9. **தாமிரபரணியாறு ஒரு வற்றாத ஆறு ஆகும்.**

காரணம்:

- தாமிரபரணி ஆறு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு ஆகிய இரு பருவமழைக் காலங்களிலும் மழைபெறுவதால், வற்றாத ஆறாக உள்ளது.

10. **வடகிழக்குப் பருவக்காற்று பின்னடையும் பருவக்காற்று என்று அழைக்கப்படுகிறது.**

காரணம்:

- வடகிழக்குப் பருவக்காற்று, திரும்பிவரும் தென்மேற்குப் பருவக்காற்றின் ஒரு பகுதியாதலால் இக்காற்றை பின்னடையும் பருவக்காற்று என்றும் அழைப்பர்.

11. **தமிழ்நாடு ஒரு நீர்ப்பற்றாக்குறை உள்ள மாநிலம் ஆகும்.**

காரணம்:

- தமிழ்நாடு மாநிலம் நீர் தேவைக்கு பருவ மழையையே பெரிதும் நம்பியுள்ளது. இப்பருவ மழை பொய்ப்பு நீர்ப்பற்றாக்குறைக்கு வழிவகுக்கிறது.

12. **மண்வளத்தைப் பாதுகாக்க வேண்டியது அவசியம்.**

காரணம்:

- மண் அரிப்பு மண்வளத்தைக் குறைத்து, விளைச்சலைக் குறைக்கிறது. எனவே மண்வளத்தைப் பாதுகாக்க வேண்டும்.

புவியியல்

VIII. பத்தி அளவில் விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **தமிழ்நாட்டின் பீடபூமி நிலத்தோற்றத்தின் தன்மையை விவரிக்கவும்.**

தமிழகப் பீடபூமிகள்:

- தமிழ்நாட்டிலுள்ள பீடபூமி மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளுக்கு இடையே அமைந்துள்ளது. ஏறக்குறைய முக்கோண வடிவத்தில் சுமார் 60,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது

- இதன் உயரம் கிழக்கிலிருந்து மேற்காக உயர்ந்து செல்கிறது. இது கடல் மட்டத்திலிருந்து 150 மீட்டர் முதல் 600 மீட்டர் உயரம் வரை வேறுபட்டு காணப்படுகிறது. மேலும் இப்பீடபூமி வடக்கே அகன்றும் தெற்கே குறுகியும் பல உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.

பாரமஹால் பீடபூமி:

- தமிழ்நாட்டின் வடமேற்கு பகுதியில் அமைந்திருக்கும் பாரமஹால் பீடபூமியானது மைசூர் பீடபூமியின் ஒரு பகுதியாகும். இந்த பீடபூமியில் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் அமைந்துள்ளன.

கோயம்புத்தூர் பீடபூமி:

- கோயம்புத்தூர் பீடபூமி நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கு இடையே அமைந்துள்ளது. இப்பீடபூமி சேலம், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது.
- கோயம்புத்தூர் பீடபூமியின் பரப்பளவு சுமார் 2560 சதுரகிலோ மீட்டர் ஆகும். மோயர் ஆறு இப்பீடபூமியை மைசூர் பீடபூமியில் இருந்து பிரிக்கிறது.
- மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் பவானி, நொய்யல் மற்றும் அமராவதி ஆறுகள் இப்பீடபூமியில் பள்ளத்தாக்குகளை உருவாக்கி உள்ளன.

சிகூர் பீடபூமி:

- நீலகிரி பகுதிகளில் பல மலையிடைப் பீடபூமிகள் காணப்படுகின்றன. சிகூர் பீடபூமி அவற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

மதுரை பீடபூமி:

- மதுரை பீடபூமி, மதுரை மாவட்டத்தில் காணப்படுகிறது. இது மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரம் வரை நீண்டுள்ளது. வைகை மற்றும் தாமிரபரணி வடிநிலப்பகுதிகள் இப்பீடபூமியில் அமைந்துள்ளன.

2. காவிரி ஆறு குறித்து தொகுத்து எழுதுக.

காவிரியின் உற்பத்தி:

- காவிரி ஆறு கர்நாடகா மாநிலத்தில் கூர்க் மாவட்டத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் பிரம்மகிரி குன்றுகளில் தலைக்காவிரி என்னும் இடத்தில் உற்பத்தியாகிறது.
- தமிழ்நாட்டில் சுமார் 416 கிலோமீட்டர் நீளத்திற்கு பாய்கிறது. இது கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகியவற்றிற்கு இடையே சுமார் 64 கிலோமீட்டர் தூரத்திற்கு எல்லையாக உள்ளது.

நீர்வீழ்ச்சி மற்றும் நீர்த்தேக்கம்:

- தர்மபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் என்னும் இடத்தில் நீர்வீழ்ச்சியை உருவாக்குகிறது. ஸ்டான்லி நீர்த்தேக்கம் என்று அழைக்கப்படும் மேட்டூர் அணை சேலம் மாவட்டத்தில் இவ்வாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.

துணையாறுகள்:

- மேட்டூர் நீர் தேக்கத்திலிருந்து சுமார் 45 கிலோமீட்டர் தொலைவில் பவானி ஆறு இதன் துணையாறாக வலது கரையில் காவிரியுடன் இணைகிறது. பின்னர் கிழக்கு நோக்கிப் பாய்ந்து தமிழ்நாட்டின் சமவெளிப் பகுதிக்குள் நுழைகிறது.
- கரூரில் இருந்து 10கி.மீ தொலைவிலுள்ள திருமுக்கூடல் என்னும் இடத்தில் வலதுகரையில் மேலும் இரண்டு துணை ஆறுகளான அமராவதி மற்றும் நொய்யல் ஆறுகள் இணைகின்றன. இப்பகுதியில் ஆற்றின் அகலம் அதிகமாக இருப்பதால், இது அகன்ற காவிரி என அழைக்கப்படுகிறது.

ஸ்ரீரங்கம் தீவு:

- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இந்த ஆறு இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. வடகிளை கொள்ளிடம் (கொளேருன்) என்றும் தென்கிளை காவிரியாகவும் தொடர்கிறது. இவ்விடத்திலிருந்து காவிரி டெல்டா சமவெளி தொடங்குகிறது.
- சுமார் 16 கிலோமீட்டர் தொலைவிற்கு பாய்ந்த பின் மீண்டும் இவ்விரு கிளைகள் இணைந்து ஸ்ரீரங்கம் தீவை உருவாக்குகின்றன.

காவிரி டெல்டா:

- கிராண்ட் அணைகட் என்றழைக்கப்படும் கல்லணை காவேரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.

- இந்த ஆறு கல்லணையைக் கடந்தபின் பல கிளைகளாகப் பிரிந்து டெல்டா பகுதி முழுவதற்கும் ஒரு வலைப்பின்னல் அமைப்பை உருவாக்கியுள்ளது.
- காவிரி டெல்டாப் பகுதிகளில் கிளை ஆறுகளால் உண்டாகியுள்ள இவ்வலைப் பின்னல் அமைப்பு "தென்னிந்தியாவின் தோட்டம்" என்று அழைக்கப்படுகிறது. பின்னர் கடலூருக்கு தெற்கே வங்கக் கடலில் கலக்கிறது.

3. தமிழ்நாட்டின் கோடை மற்றும் குளிர் பருவங்களின் பண்புகளை விவரிக்கவும்.

கோடைப்பருவம்:

- தமிழ்நாட்டின் கோடைக்காலம் மார்ச் முதல் மே வரையாகும். இக்காலத்தில் சூரியனின் வடக்கு நோக்கிய நகர்வு மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நிகழ்வதால் சூரியனின் செங்குத்து கதிரானது தென்னிந்தியாவில் விழுகிறது.
- இக்காலத்தில் பூமத்திய ரேகையிலிருந்து வெப்பநிலையானது படிப்படியாக அதிகரிக்கிறது. தமிழகம் கடகரேகைக்கு தென்பகுதியில் அமைந்திருப்பதால் அதிக வெப்பநிலையைப் பெறுகின்றது. பொதுவாக வெப்பநிலையானது $30^{\circ}C$லிருந்து $40^{\circ}C$ வரை வேறுபடுகிறது.
- இப்பருவத்தில் குறிப்பாக மே மாதத்தில் தமிழகத்தின் தென்பகுதி முன்பருவ மழைமூலமும், வெப்பச் சலனம் மூலமும் மழையைப் பெறுகிறது.

குளிர்காலம்:

- தமிழகத்தின் குளிர்காலம் ஜனவரி முதல் பிப்ரவரி வரை ஆகும். இக்காலத்தில் சூரியனின் செங்குத்துக் கதிர்கள் பூமத்திய ரேகைக்கும் மகர ரேகைக்கும் இடையே விழுகிறது.
- இப்பருவத்தில் தமிழ்நாடு உட்பட இந்தியா முழுவதும் சாய்வான சூரியக்கதிர்களைப் பெறுகின்றன. ஆதலால் இம்மாதங்களில் காலநிலை சற்று குளிராகக் காணப்படுகிறது.
- கோடைக்காலம் மற்றும் குளிர்காலத்திற்கு இடையேயான வெப்பநிலை வேறுபாடுகள் அதிகமாகக் காணப்படுவதில்லை. தமிழகத்தில் குளிர்கால வெப்பநிலையானது $15^{\circ}C$ முதல் $25^{\circ}C$ வரை மாறுபடுகிறது.
- மலைவாழிடங்களில் குளிர்கால வெப்பநிலையானது சில நேரங்களில் $5^{\circ}C$க்கும் குறைவாக உள்ளது. நீலகிரியில் சில பள்ளத்தாக்குகளில் வெப்பம் $0^{\circ}C$ ஆகவும் பதிவாகிறது. இக்குறைந்த வெப்பநிலை அடர்மூடுபனி மற்றும் மூடுபனி உருவாகக் காரணமாகிறது. இப்பருவத்தில் வறண்ட வானிலையே நிலவுகிறது.

4. பாலைவனமாதல் என்றால் என்ன? தமிழ்நாட்டில் பாலைவனமாதலால் பாதிக்கப்பட்ட பகுதிகள் குறித்து விவரி.

பாலைவனமாதல்:

- பாலைவனமாதல் என்பது வறண்ட, ஓரளவு வறண்ட அல்லது ஈரப்பதம் குறைவாக உள்ள பகுதிகள், காலநிலை மாற்றம் மற்றும் மண் அரிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தரம் குறைவதைக் குறிக்கும். மனிதச் செயல்பாடுகளே இதற்கு முதன்மையான காரணமாகக் கூறப்படுகிறது. தற்காலத்தில் பாலைவனமாதல் மிகவும் வேகமாக நடைபெறுகிறது.

தமிழ்நாட்டில் பாலைவனமாதல்:

- தமிழ்நாடு எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனைகளில் ஒன்று பாலைவனமாதலாகும்.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தயாரித்த பாலைவனமாதல் நிலவரத்தின்படி மொத்த நிலப்பரப்பில் சுமார் 12 சதவீத நிலப் பகுதி பாலைவனமாதல் மற்றும் நிலம் சீரழிவு அடைதல் என்ற இருநிலைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள்:

- தேனி, நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் பாலைவனமாதலால் பாதிப்புக்குள்ளாகின்ற பகுதிகளாகும்.
- தேனி மற்றும் இராஜபாளையம் பகுதிகளில் சுமார் 1200 ஹெக்டேர் நிலம் காற்றடி மணல் படிவுகளால் பாதிக்கப்பட்டுள்ளது.

5. **தமிழ் நாட்டிலுள்ள மண் வகைகளின் பரவல் மற்றும் அவற்றின் பண்புகளை விளக்குக.**

மண் வகைகள்:

- தமிழ்நாட்டில் காணப்படும் மண்ணை அதன்தன்மைகளைக் கொண்டு ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தலாம். அவை 1) வண்டல் மண், 2) கரிசல் மண், 3) செம்மண், 4) சரளை மண், 5) உவர் மண் என்பவனவாகும்.

வண்டல் மண்:

- வண்டல் மண் ஆறுகளால் படிய வைக்கப்படும் நுண் படிவுகளால் உருவாகின்றது. சுண்ணாம்புச் சத்து பொட்டாசியம், மெக்னீசியம், நைட்ரஜன் மற்றும் பாஸ்போரிக் அமிலம் ஆகிய தாதுக்களைக் கொண்டுள்ளதால் வண்டல் மண் ஒரு வளம் மிகுந்த மண்ணாகும்.
- இம்மண்ணில் நைட்ரஜன் மற்றும் இலைமக்குகள் குறைவாக உள்ளன. இது நுண்துளைகள் மற்றும் களிமண் கலந்த மண் ஆகும்.
- நெல், வாழை, கரும்பு மற்றும் மஞ்சள் போன்ற பயிர்கள் இம்மண்ணில் பயிரிடப்படுகின்றன.
- தமிழ்நாட்டில் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் மற்றும் கடற்கரையோரப் பகுதிகளில் இம்மண் காணப்படுகிறது. தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், விழுப்புரம், கடலூர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இவ்வகை மண் அதிகம் காணப்படுகிறது.

கரிசல் மண்:

- தீப்பாறைகள் சிதைவடைவதன் மூலம் கரிசல்மண் உருவாகிறது. இது ரெகூர் மண் என்றும் அழைக்கப்படுகிறது. இம்மண்ணில் பருத்தி நன்கு வளர்வதால் இது பருத்தி மண் என்றும் அழைக்கப்படுகிறது.
- தக்காண லாவா பீடபூமி பகுதிகளில் அரை வறண்ட காலநிலையில் இம்மண் உருவாகிறது. இம்மண் மிக நுண்ணிய துகள்களைக் கொண்ட களிமண்ணால் ஆனது.
- இவற்றில் பாஸ்போரிக் அமிலம், ஹைட்ரஜன் மற்றும் உயிரினப் பொருட்களின் சத்து குறைவாக உள்ளது. கால்சியம், மக்னீசியம், கார்பனேட், பொட்டாஷ் மற்றும் சுண்ணாம்பு சத்துக்கள் அதிக அளவில் காணப்படுகிறது.
- பருத்தி, கம்பு, சோளம் மற்றும் கால்நடைத் தீவனங்கள் போன்ற முக்கிய பயிர்கள் கரிசல் மண்ணில் பயிரிடப்படுகின்றன.
- மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கரிசல் மண் பெருமளவில் காணப்படுகிறது.

செம்மண்:

- தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு பரப்பளவில் செம்மண் பரவியுள்ளது. இம்மண் குறிப்பாக மாநிலத்தின் மத்திய மாவட்டங்களில் காணப்படுகின்றது.
- இம்மண் மணல் மற்றும் களிமண் கலந்த தன்மை உடையது. செம்மண் சற்றே பெரிய மண் துகள்களையும் ஈரப்பதத்தை தக்க வைத்துக் கொள்ளும் தன்மையையும் பெற்றுள்ளது.
- இரும்பு ஆக்சைடு அதிகளவில் காணப்படுவதால் செம்மண் சிவப்பு நிறத்துடன் காணப்படுகிறது. நைட்ரஜன், பாஸ்பரஸ் அமிலம் மற்றும் இலைமக்கு சத்துக்கள் இம்மண்ணில் குறைவாக காணப்படுகின்றன.
- நெல், கேழ்வரகு, புகையிலை மற்றும் காய்கறிகள் ஆகியன இம்மண்ணில் பயிரிடப்படும் முக்கிய பயிர் வகைகளாகும்.
- இம்மண் சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் அதிகம் காணப்படுகின்றது.

சரளை மண்:

- சரளை மண்ணானது அதில் கரைந்துள்ள சத்துக்கள் அடித்து செல்லப்படுவதால் உருவாகிறது. இது ஒரு வளமற்ற மண்ணாகும்,
- மிளகு, தேயிலை மற்றும் காபி பயிரிடுவதற்கும் இம்மண் ஏற்றதாக உள்ளது.

உவர் மண் :

- தமிழ்நாட்டின் சோழமண்டலக் கடற்கரைப் பகுதிகளில் மட்டுமே இம்மண் காணப்படுகிறது. வேதாரண்யப் பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் உவர்மண் காணப்படுகிறது.
- டிசம்பர் 26, 2004இல் ஏற்பட்ட சுனாமி அலைகள் அதிக அளவு மணல் படிவுகளை தமிழக கடற்கரைப் பகுதிகளில் படிய வைத்துள்ளன. இதனால் கடற்கரையில் சிலபகுதிகள் பயிரிட உகந்ததாக இல்லை.

6. **நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட இடங்களைக் குறிப்பிட்டு, நிலச்சரிவின் போதும், முன்னரும், நிலச்சரிவுக்குப் பின்னரும், மேற்கொள்ள வேண்டியவற்றைக் குறிப்பிடுக.**

நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட இடங்கள்:

- மலைகள்அல்லது குன்றுகளின் ஒரு பகுதியோ அல்லது பாறைகளோ சரிந்து வீழ்தல் நிலச்சரிவு எனப்படுகிறது. நீரானது, நிலச்சரிவுக்கு ஒரு முக்கிய காரணியாகும்.
- தமிழ்நாட்டில் நீலகிரி மலைப்பகுதி நிலச்சரிவினால் அதிகம் பாதிக்கப்படும் பகுதியாகவும், பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகும் பகுதியாகவும் கண்டறியப்பட்டுள்ளது.
- கோயம்புத்தூர், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பழனி மலையில் அமைந்துள்ள கொடைக்கானல் நிலச்சரிவுக்கு உள்ளாகும் மற்ற பகுதிகளாகும்.

நிலச்சரிவின் போது அபாய நேர்வு குறைப்பு நடவடிக்கைகள்:

அ) கட்டடங்களுக்கு உள்ளே இருந்தால்:

- கனமான மேசை அல்லது மர இருக்கைகளுக்கு அடியில் பதுங்கிக் கொள்ளுதல் வேண்டும். நிலச்சரிவின் இயக்கம் முழுவதும் குறையும் வரை மேசை கால்களை இறுக்கமாக பிடித்துக் கொள்ள வேண்டும்.

ஆ) கட்டடங்களுக்கு வெளியே இருந்தால்:

- நிலச்சரிவு ஏற்படும் இடங்கள் மற்றும் அதன் வழிகளில் இருந்து விரைவாக வெளியேறுதல் வேண்டும்.
- நீர் தடுப்பு கரைகள், மரங்கள் மற்றும் கம்பங்கள் ஆகியவற்றுக்கு அருகாமையில் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.
- பாலங்கள் மற்றும் சாலைகளைக் கடக்காமல் இருத்தல் வேண்டும்.
- நிலச்சரிவிற்குப் பின்னரும் இப்பகுதிகள் சில மணி நேரங்கள் முதல் சில நாட்கள் வரை இதன் தாக்கத்திற்கு உள்ளாகும் என்பதால் சாலைகள் மற்றும் பாலங்களைக் கடப்பதை தவிர்த்தல் வேண்டும்.

இ) நிலச்சரிவுக்கு முன்:

- நிலச்சரிவு அறிகுறிகள் தென்பட்டால் அப்பகுதியை விட்டு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுதல் வேண்டும்.
- விழிப்புணர்வு ஏற்படுத்துதல், எச்சரிக்கை மற்றும் தயார் நிலையில் இருத்தல், அன்றாட செய்திகளை கவனித்தல், வெளியேறுவதற்கான திட்டம், வழக்கத்திற்கு மாறான சிதைந்த பொருட்கள், உடைந்த மரங்கள் மற்றும் கூழாங்கற்களின் நகர்வுகளைக் கவனித்தல் ஆகியவை முக்கிய செயல்பாடுகளாகும்,

நிலச்சரிவுக்குப் பின்:

- நிலச்சரிவு நிகழ்ந்த இடத்திற்கு அப்பால் இருத்தல் வேண்டும், உள்ளூர் வானொலி, தொலைக்காட்சி நிலையங்களின் அன்றைய செய்திகளைக் கேட்டல் வேண்டும்.
- நிலச்சரிவுக்குப் பின் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்பு இருந்தால், வெள்ளம், கழிவுகளின் நகர்வு ஆகியவற்றை கவனித்தல் வேண்டும்.
- நேரடியாக நிலச்சரிவு பகுதியினுள் செல்லாமல் காயப்பட்ட மற்றும் சரிவில் சிக்கியவர்களை மீட்டல் ஆகியன நிலச்சரிவுக்குப் பின் கடைபிடிக்க வேண்டிய செயல்களாகும்.

கூடுதல் வினாக்கள்

7. **தமிழ் நாட்டின் காலநிலை பற்றி விவரி.**

- கடகரேகை இந்தியாவை இரு சமபாகங்களாகப் பிரிக்கிறது. தமிழ் நாடு கடகரேகைக்கு தெற்கேயும் பூமத்திய ரேகைக்கு அருகாமையிலும் அமைந்துள்ளது.
- சூரியனின் செங்குத்துக் கதிர்களினால் வெப்பநிலையானது ஆண்டு முழுவதும் அதிக அளவில் காணப்படுகிறது.
- தமிழகம் வெப்பமண்டல காலநிலை மண்டலத்தில் அமைந்திருந்தாலும் கிழக்குக் கடற்கரைப் பகுதி வெப்பமண்டல கடல் காலநிலையை பெறுகிறது,
- இந்தியப் பெருங்கடல் மற்றும் வங்கக்கடல் ஆகிய இரண்டும் கடற்கரையோர காலநிலையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

- தமிழ்நாட்டின் வெப்பநிலை 18°C முதல் 43°C வரையிலும் உள்ளது. அதன் சராசரி மழையளவு சுமார் 958.5 மில்லி மீட்டராகவும் உள்ளது.
- கிழக்கு கடற்கரை பகுதியில் வெப்பமண்டலக் கடல் ஆதிக்க காலநிலையும் அதேவேளையில் மாநிலத்தின் மேற்குப் பகுதியில் மலைப்பாங்கான காலநிலையும் நிலவுகிறது. இக்காலநிலை நீலகிரி மலை, ஆனைமலை மற்றும் கொடைக்கானல் மலைப்பகுதிகளில் நிலவுகிறது.
- இக்காலநிலை நிலவும் மலைவாழிடங்கள் கோடைப்பருவத்தில் ஆயிரக்கணக்கான மக்களை ஈர்க்கின்றன. ஆனால் தமிழகத்தின் மத்திய பகுதிகள் குறைந்த உயரமும் கடலிலிருந்து விலகியும் இருப்பதால் அதிக வெப்பநிலை மற்றும் வறண்ட காலநிலை நிலவுகிறது.
- சூரியனின் செங்குத்துக் கதிர்களின் இடப்பெயர்வால் தமிழகத்தில் பல்வேறு பருவகாலங்கள் உருவாகின்றன.

8. **தமிழ் நாட்டின் வெள்ளப்பெருக்கின்போது அபாய நேர்வு குறைப்பு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.**

வெள்ளப்பெருக்கிற்கு முன்:

- சேவை மையங்கள் மற்றும் வெளியேறும் வழிகளைத் தெரிந்து வைத்திருத்தல், அவசரகால தொலைவேசி எண்களையும், செய்திகளையும் தெரிந்து வைத்திருத்தல், முக்கிய பொருட்களை மடித்தும் சுருட்டியும் உயரமான பகுதிகளில் வைத்திருத்தல் வேண்டும்.

வெள்ளப்பெருக்கின்போது:

- குழந்தைகள் மற்றும் வயதானவர்களை வேகமாகவும், பாதுகாப்பாகவும், வீடுகளிலிருந்து உயரமான பகுதிகளுக்கு வெளியேற்றுவதை உறுதி செய்தல் வேண்டும்,
- அனைத்து மின்சார சாதனங்கள் மற்றும் எரிவாயு சாதனங்களை அணைத்து வைத்தல், தாமதமின்றி வெளியேறுதல் வேண்டும்.
- நீரின் வழியாக வாகனங்களைச் செலுத்தாமலும், மின்கம்பிகள் மின் திறன் செலுத்தும் மின் வடக்கம்பிகள் மற்றும் வெள்ளங்களுக்குத் தொலைவில் இருத்தல் வேண்டும்.

வெள்ளப்பெருக்கிற்குபின்:

- மீண்டும் வீடுகளுக்குச் செல்வதை உறுதி செய்தல், வீட்டிற்குள் நுழையும் முன் அனைத்து மின்சார உபகரணங்களையும் அணைத்து, மீண்டும் அவற்றை உபயோகப்படுத்தும் முன் சரியாக உள்ளனவா? என உறுதி செய்ய வேண்டும்.
- பழுதுபட்ட பொருட்களை அப்புறப்படுத்துவதற்கு முன் அதற்கேற்ற உடையினை அணிவது அவசியம் ஆகும்.

வரைபடம்

தமிழ்நாடு – அரசியல்

தமிழ்நாடு – இயற்கை அமைப்பு



தமிழ்நாடு – முக்கிய ஆறுகள்



தமிழ்நாடு – மண் வகைகள்



அலகு **7**

புவியியல்

தமிழ்நாடு – மானுட புவியியல்

மனவரைபடம்



நினைவில் கொள்க

- புவியில் காணப்படும் வளங்களில் மிகச்சிறந்த வளம் **மனிதவளம்** ஆகும்.
- வேளாண்மையைக் கட்டுப்படுத்தும் முக்கியக் காரணி **நீர்** ஆகும்.
- பயிர்கள் மற்றும் தாவரங்களின் வளர்ச்சிக்கு தேவையான கனிமச்சத்துக்களையும் ஊட்டச் சத்துக்களையும் அளிப்பது **மண்** ஆகும்.
- "தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம்" என்று அழைக்கப்படுவது **தஞ்சாவூர்** ஆகும்.
- இயற்கை வேளாண்மையை மேம்படுத்தும் நோக்கத்தோடு மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ள திட்டம் **"தேசிய இயற்கை கரிம வேளாண்மைத் திட்டம்"** என்பதாகும்.
- **கரும்பு** தமிழ்நாட்டின் முக்கிய வாணிபப் பயிராகும். **பருத்தி** ஓர் இழைப்பயிர் மற்றும் வாணிபப் பயிராகும்.
- "ஏழை மக்களின் பசு" என்று அழைக்கப்படுவது **வெள்ளாடு** ஆகும்.
- காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணை **மேட்டூர் அணை**. இது இந்தியாவின் மிகப்பழமையான அணைகளில் ஒன்றாகும்.
- வைகை அணைப்பகுதியில் அமைந்துள்ள தோட்டம் **"சிறிய பிருந்தாவனம்"** என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.
- "தமிழ்நாட்டின் மான்செஸ்டர்" என்று அழைக்கப்படுவது **கோயம்புத்தூர்**.
- கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்கள் **"தமிழ்நாட்டின் ஜவுளி பள்ளத்தாக்கு"** எனக் குறிப்பிடப்படுகிறது.
- "தமிழ்நாட்டின் நெசவுத் தலைநகரம்" என்று அழைக்கப்படுவது **கரூர்**.
- ஆயிரம் ஆண்களுக்கு உள்ள பெண்களின் எண்ணிக்கையைக் குறிப்பது **பாலின விகிதம்** எனப்படும்.
- தகவல் தொடர்பு என்பது இலத்தீன் வார்த்தையான **"கம்யூனிகேர்"** என்பதிலிருந்து பெறப்பட்டது இதன் பொருள் 'பகிர்தல்' என்பதாகும்.
- "இந்தியாவின் பட்டாசு (வானவேடிக்கை) உற்பத்தியின் தலைநகர்" எனக்கருதப்படுவது **சிவகாசி**.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா __________. **PTA**
   அ) காவிரி டெல்டா ஆ) மகாநதி டெல்டா
   இ) கோதாவரி டெல்டா ஈ) கிருஷ்ணா டெல்டா

2. தமிழ்நாட்டு மக்களின் இரண்டாவது முக்கிய உணவுப் பயிர் __________ .
   அ) பருப்பு வகைகள் ஆ) சிறுதானியங்கள்
   இ) எண்ணெய் வித்துக்கள் ஈ) நெல்

3. 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் எழுத்தறிவு சதவீதம்
   அ) 80.32 ஆ) 62.33 இ) 73.45 ஈ) 80.33

4. தமிழ்நாட்டின் மிகப் பெரிய நீர்மின்சக்தி திட்டம்
   அ) மேட்டூர் ஆ) பாபநாசம் இ) சாத்தனூர் ஈ) துங்கபத்ரா

5. தமிழ்நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை
   அ) 3 மற்றும் 15 ஆ) 4 மற்றும் 16 இ) 3 மற்றும் 16 ஈ) 4 மற்றும் 15

கூடுதல் வினாக்கள்

6. கிராமப்புற மக்களுக்கு பெருமளவில் வேலை வாய்ப்பை அளிப்பது
   அ) வேளாண்மை ஆ) நெசவு இ) மீன்பிடித்தல் ஈ) வணிகம்

7. வளமான வண்டல் மண்ணைக் கொண்டுள்ள பகுதி
அ) மலைகள் ஆ) சமவெளிகள் இ) பீடபூமிகள் ஈ) தீவுகள்

8. தமிழ்நாட்டின் குறிப்பிடத்தகுந்த வேளாண் பகுதி
அ) நீலகிரி மலை ஆ) தக்காண பீடபூமி இ) காவேரி சமவெளி ஈ) கிழக்குக் கடற்கரை

9. தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள பகுதி
அ) பாபநாசம் ஆ) கும்பகோணம் இ) மன்னார்குடி ஈ) ஆடுதுறை

10. இந்தியாவில் சாலைவிபத்துக்கள் எண்ணிக்கையில் முதலிடம் வகிக்கும் மாநிலம்
அ) குஜராத் ஆ) மேற்குவங்காளம் இ) கேரளா ஈ) தமிழ்நாடு

11. தமிழ்நாட்டில் அதிக நெல் உற்பத்தி செய்யும் பகுதி
அ) காவிரி டெல்டா ஆ) வைகை டெல்டா
இ) தாமிரபரணி டெல்டா ஈ) தென்பெண்ணை டெல்டா

12. புரதச்சத்தின் முக்கிய ஆதாரம்
அ) கரும்பு ஆ) தினைவகைகள் இ) பருப்பு வகைகள் ஈ) எண்ணெய் வித்துக்கள்

13. கொண்டைக்கடலை உற்பத்தியில் தமிழ்நாட்டில் முதலிடம் வகிக்கும் மாவட்டம்
அ) திருநெல்வேலி ஆ) கோயம்புத்தூர் இ) சேலம் ஈ) விழுப்புரம்

14. தமிழ்நாட்டின் முக்கிய எண்ணெய் வித்து
அ) ஆமணக்கு ஆ) எள் இ) கடுகு ஈ) இவை அனைத்தும்

15. தென்னைமரங்கள் அதிகமாகக் காணப்படும் மாவட்டம்
அ) காஞ்சிபுரம் ஆ) இராமநாதபுரம் இ) கன்னியாகுமரி ஈ) வேலூர்

16. தமிழ்நாட்டின் முக்கியமான வாணிபப் பயிர்
அ) கரும்பு ஆ) வாழை இ) பருத்தி ஈ) தேயிலை

17. தமிழ்நாட்டில் பாலின விகிதம் குறைந்த மாவட்டம்
அ) நீலகிரி ஆ) திண்டுக்கல் இ) கிருஷ்ணகிரி ஈ) தர்மபுரி

18. காப்பி உற்பத்தியில் இந்தியாவில் முதலிடம் வகிக்கும் மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) கர்நாடகம் இ) அசாம் ஈ) கேரளா

19. "ஏழைகளின் பசு" என அழைக்கப்படுவது
அ) வெள்ளாடு ஆ) செம்மறி ஆடு இ) வரை ஆடு ஈ) மலை ஆடு

20. கோழிப்பண்ணைகளுக்குப் புகழ்பெற்ற இடம்
அ) நாமக்கல் ஆ) திண்டுக்கல் இ) விருதுநகர் ஈ) மதுரை

21. கடற்கரை மீன்பிடிப்புக்கு சாதகமாக இருப்பது
அ) கண்டத்திட்டு ஆ) கண்டச்சரிவு இ) கண்டநகர்வு ஈ) கண்டத்தட்டு

22. பண்ணைகளில் வளர்க்கப்படும் மீன்வகை
அ) சுறா ஆ) இறால் இ) கெளுத்தி ஈ) திமிங்கலம்

23. எந்த ஆற்றின் குறுக்கே மேட்டூர் அணை கட்டப்பட்டுள்ளது?
அ) பவானி ஆ) வைகை இ) காவிரி ஈ) பாலாறு

24. ஆங்கிலேயர் நிர்வாகத்தால் 1895ஆம் ஆண்டு கட்டப்பட்ட அணை
அ) மேட்டூர் அணை ஆ) கிருஷ்ணகிரி அணை
இ) சாத்தனூர் அணை ஈ) முல்லைப் பெரியாறு அணை

25. "சிறிய பிருந்தாவனம்" என்று அழைக்கப்படும் தோட்டம் அமைந்துள்ள அணை
அ) வைகை அணை ஆ) அமராவதி அணை
இ) காரையார் அணை ஈ) பவானிசாகர்அணை

26. மிகப் பெரிய அளவில் பழுப்பு நிலக்கரி வளங்களைக் கொண்டுள்ளது
அ) நெய்வேலி ஆ) சேலம் இ) கொல்லிமலை ஈ) தூத்துக்குடி

27. சேலம் மாவட்டத்திலுள்ள கஞ்சமலையில் அதிகமாகக் காணப்படும் தாது
அ) நிலக்கரி ஆ) பெட்ரோலியம் இ) இரும்புத் தாது ஈ) ஜிப்சம்

28. "தமிழ்நாட்டின் மான்செஸ்டர்" என்று அழைக்கப்படுவது
அ) சென்னை ஆ) கோயம்புத்தூர் இ) திருநெல்வேலி ஈ) விருதுநகர்

29. "நெசவுத்தலைநகரம்" என்று அழைக்கப்படுவது
அ) சிவகாசி ஆ) ஈரோடு இ) கரூர் ஈ) பல்லடம்

30. தமிழ்நாட்டில் பட்டு உற்பத்திக்குப் புகழ்வாய்ந்த நகரம்
அ) காஞ்சிபுரம் ஆ) மதுரை இ) திருச்சி ஈ) பெரம்பலூர்

31. மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவன ஆய்வகம் (CLRI) அமைந்துள்ள இடம்
அ) திருப்பூர் ஆ) கன்னியாகுமரி இ) தூத்துக்குடி ஈ) சென்னை

32. பாலினவிகிதம் சரியாக 1000 ஆக உள்ள மாவட்டம்
அ) இராமநாதபுரம் ஆ) தஞ்சாவூர் இ) தர்மபுரி ஈ) சிவகங்கை

33. அதிக கல்வியறிவு கொண்ட மாவட்டம்
அ) கன்னியாகுமரி ஆ) காஞ்சிபுரம் இ) மதுரை ஈ) திருச்சி

34. தெற்கு இரயில்வேயின் தலைமையகம்
அ) கோயம்புத்தூர் ஆ) சென்னை இ) திருநெல்வேலி ஈ) புதுக்கோட்டை

35. "இந்தியாவின் பட்டாசு உற்பத்தியின் தலைநகர்" என்று கருதப்படுவது
அ) விருதுநகர் ஆ) சிவகாசி இ) கோவில்பட்டி ஈ) சாத்தூர்

விடைகள்

1. அ) காவிரி டெல்டா	2. ஆ) சிறுதானியங்கள்	3. ஈ) 80.33
4. அ) மேட்டூர்	5. அ) 3 மற்றும் 15	6. அ) வேளாண்மை
7. ஆ) சமவெளிகள்	8. இ) காவேரி சமவெளி	9. ஈ) ஆடுதுறை
10. ஈ) தமிழ்நாடு	11. அ) காவிரி டெல்டா	12. இ) பருப்பு வகைகள்
13. ஆ) கோயம்புத்தூர்	14. ஈ) இவை அனைத்தும்	15. இ) கன்னியாகுமரி
16. அ) கரும்பு	17. ஈ) தர்மபுரி	18. ஆ) கர்நாடகம்
19. ஆ) செம்மறி ஆடு	20. அ) நாமக்கல்	21. அ) கண்டத்திட்டு
22. ஆ) இறால்	23. இ) காவிரி	24. ஈ) முல்லைப் பெரியாறு அணை
25. அ) வைகை அணை	26. அ) நெய்வேலி	27. இ) இரும்புத் தாது
28. ஆ) கோயம்புத்தூர்	29. இ) கரூர்	30. அ) காஞ்சிபுரம்
31. ஈ) சென்னை	32. ஈ) சிவகங்கை	33. அ) கன்னியாகுமரி
34. ஆ) சென்னை	35. ஆ) சிவகாசி	

II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் வேளாண்மை துறையின் பங்கு __________ சதவீதத்தை வகிக்கிறது.
2. சாத்தனூர் அணை __________ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
3. இந்தியாவில் பொது – தனியார் கூட்டு நடவடிக்கையின் கீழுள்ள மொத்த சாலை திட்டங்களில் 20 சதவீதத்திற்கும் அதிகமாக பங்களிக்கும் தமிழ்நாடு __________ இடத்தைப் பெற்றுள்ளது.
4. மும்பை மற்றும் டில்லியை அடுத்த இந்தியாவின் மூன்றாவது பெரிய விமான நிலையம் __________ .
5. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மதிப்புகளுக்கு இடையிலுள்ள வேறுபாடு __________ என அழைக்கப்படுகிறது.

கூடுதல் வினாக்கள்

6. வறண்ட காலங்களில் __________ பயிர்கள் பயிரிடப்படுகின்றன.
7. தமிழ்நாட்டின் முக்கியமான உணவுப் பயிர் __________ ஆகும்.
8. துவரம் பருப்பு அதிகம் உற்பத்தி செய்யும் மாவட்டங்கள் __________ மற்றும் __________ .

9. இயற்கை வேளாண்மையை மேம்படுத்தும் நோக்கத்தோடு மத்திய அரசு _____ திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
10. தமிழ்நாட்டில் விளையும் முக்கியமான இழைப்பயிர் __________ .
11. இந்தியாவில் தேயிலை உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மாநிலம் __________ .
12. சேலம் மாவட்டத்திலுள்ள __________ மலைச்சரிவுகளில் காப்பி குறிப்பிடத்தகுந்த அளவில் பயிரிடப்படுகிறது.
13. இந்தியாவில் கருப்புவகை தேயிலை உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நிறுவனங்களில் ஒன்று __________ .
14. ஆட்டிடையர்களுக்கு முக்கிய வருவாய் ஆதாரமாக உள்ளது __________ .
15. தமிழ்நாட்டு கடற்கரையின் நீளம் __________ கிலோ மீட்டராகும்.
16. கடற்கரையிலிருந்து சில கிலோமீட்டர் தூரம் வரை மீன்பிடிப்பது __________ என அழைக்கப்படுகிறது.
17. கடலில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அடிகள் ஆழத்தில் மீன்பிடிப்பது __________ என அழைக்கப்படுகிறது.
18. தமிழகத்தின் ஆண்டு சராசரி மழையளவு __________ ஆகும்.
19. ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ள அணைக்கட்டு __________ ஆகும்.
20. நாட்டின் மண் – கல் கலவையில் கட்டப்பட்ட மிகப்பெரிய அணைகளுள் ஒன்று __________ .
21. கேரளாவில், தேக்கடி மலையில் உருவாகும் ஆறு __________ .
22. தமிழ்நாட்டில் __________ வடிநிலப்பகுதியில் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு படிவுகள் காணப்படுகின்றன.
23. நீர் வளங்களை புதுப்பித்துக் கொள்ள நாம் சார்ந்துள்ளது __________ .
24. பழனிமலை மற்றும் கொல்லிமலைப் பகுதிகளில் காணப்படும் தாது __________ ஆகும்.
25. __________ ஆலைகள் தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க நன்கு வளர்ந்த தொழிலகமாகும்.
26. நம் நாட்டின் மென்பொருள் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கும் மாநிலம் __________ .
27. இந்தியாவின் மென்பொருள் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு __________ சதவீதமாகும்.
28. மக்கள்தொகை பண்புகள் பற்றிய புள்ளி விவர ஆய்வுகள் __________ என அழைக்கப்படுகின்றன.
29. தமிழ்நாட்டில் அதிக நகர்புற மக்கள் தொகையைக் கொண்டுள்ள நகரம்__________ .
30. தமிழ்நாட்டில் பாலின விகிதம் அதிகம் கொண்ட மாவட்டம் __________ .
31. தமிழ்நாட்டில் மிகக் குறைந்த கல்வியறிவு கொண்ட மாவட்டம்__________ .
32. தமிழ்நாட்டில் உள்நாட்டு சேவைகளை மட்டுமே கொண்ட விமான நிலையங்கள் _______ மற்றும் _______.
33. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறு துறைமுகங்களும் __________ வாரியத்தால் நிர்வகிக்கப்படுகின்றன.
34. தமிழ்நாட்டிலுள்ள முக்கியமான செயற்கைத் துறைமுகம் __________ .
35. உள்நாட்டு மின் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மாவட்டம் __________ .
36. தோல் பொருள் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கும் மாவட்டம் __________ .
37. தமிழ்நாட்டில் மக்கள் தொகை குறைந்த மாவட்டம் __________ .

விடைகள்

1. 21
2. தென்பெண்ணை
3. இரண்டாவது
4. சென்னை
5. வர்த்தகச் சமநிலை
6. மானாவாரி
7. நெல்
8. வேலூர், கன்னியாகுமரி
9. தேசிய இயற்கை கரிம வேளாண்மை
10. பருத்தி
11. அசாம்
12. ஏற்காடு
13. டான் டீ
14. செம்மறியாடுகள்
15. 1076
16. கடலோர மீன்பிடிப்பு
17. ஆழ்கடல் மீன்பிடிப்பு
18. 930 மில்லி மீட்டர்
19. பவானிசாகர் அணை
20. பவானி சாகர் அணை
21. பெரியாறு
22. காவிரி
23. மழை
24. பாக்சைட்
25. பருத்தி நெசவு
26. கர்நாடகா
27. 17
28. மக்கட்தொகையியல்
29. கோயம்புத்தூர்
30. நீலகிரி
31. தர்மபுரி
32. தூத்துக்குடி, சேலம்
33. தமிழ்நாட்டின் கடல்சார்
34. சென்னை
35. வேலூர்
36. வேலூர்
37. நீலகிரி

III. பொருத்துக:

பாடநூல் வினா

அ)

		விடை
1. பாக்சைட்	அ) சேலம்	1) ஆ
2. ஜிப்சம்	ஆ) சேர்வராயன் மலை	2) ஈ
3. இரும்பு	இ) கோயம்புத்தூர்	3) அ
4. சுண்ணாம்புக்கல்	ஈ) திருச்சிராப்பள்ளி	4) இ

கூடுதல் வினாக்கள்

ஆ)

		விடை
1. நெல்	அ) கம்பம் பள்ளத்தாக்கு	1) உ
2. சோளம்	ஆ) தர்மபுரி	2) அ
3. கேழ்வரகு	இ) கன்னியாகுமரி	3) ஆ
4. துவரம்பருப்பு	ஈ) திருவள்ளூர்	4) இ
5. கரும்பு	உ) தஞ்சாவூர்	5) ஈ

இ)

		விடை
1. உணவுப்பயிர்	அ) இழைப்பயிர்	1) ஆ
2. காப்பி	ஆ) நெல்	2) ஈ
3. பருத்தி	இ) எண்ணெய் வித்து	3) அ
4. கரும்பு	ஈ) தோட்டப் பயிர்	4) உ
5. தென்னை	உ) வாணிபப் பயிர்	5) இ

ஈ)

		விடை
1. வெள்ளாடு	அ) மீன் வகை	1) இ
2. செம்மறியாடு	ஆ) நாமக்கல்	2) உ
3. கோழி	இ) ஏழைகளின் பசு	3) ஆ
4. கெளுத்தி	ஈ) மீன்பிடிப்பு	4) அ
5. கட்டுமரம்	உ) உரோமம்	5) ஈ

உ)

		விடை
1. சாத்தனூர் அணை	அ) திருப்பூர் மாவட்டம்	1) ஈ
2. வைகை அணை	ஆ) தஞ்சாவூர்	2) இ
3. பாபநாசம் அணை	இ) ஆண்டிப்பட்டி	3) உ
4. மேட்டூர் அணை	ஈ) செங்கம் தாலுகா	4) ஆ
5. அமராவதி அணை	உ) திருநெல்வேலி	5) அ

ஊ)

		விடை
1. காஞ்சிபுரம்	அ) சுங்கடிச் சேலை	1) இ
2. தஞ்சாவூர்	ஆ) பாய்	2) உ
3. மதுரை	இ) பட்டு	3) அ
4. பத்தமடை	ஈ) மாவு அரைக்கும் இயந்திரம்	4) ஆ
5. கோயம்புத்தூர்	உ) தலையாட்டி பொம்மை	5) ஈ

IV. சரியான கூற்றினை கண்டுபிடி:

பாடநூல் வினாக்கள்

1. கூற்று : கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மண்டலம் தமிழ்நாட்டின் ஜவுளி பள்ளத்தாக்கு என அழைக்கப்படுகிறது.
காரணம் : இவைகள் நெசவாலைகள் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பை அளிக்கின்றன.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி கூற்றுக்கான சரியான விளக்கம் காரணம் ஆகும்.
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

2. கூற்று : நீலகிரி தமிழ்நாட்டின் குறைந்த மக்கள்தொகை கொண்ட மாவட்டம்.
காரணம் : இது தமிழ்நாட்டின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

கூடுதல் வினாக்கள்

3. கூற்று : தமிழ்நாட்டின் வெப்பநிலை ஆண்டு முழுவதும் அதிகமாக உள்ளது.
காரணம் : தமிழ்நாடு பூமத்திய ரேகைக்கு அருகில் அமைந்துள்ளது.
அ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு
ஆ) கூற்று தவறு, ஆனால் காரணம் சரி
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

4. கூற்று : ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியவை வணிகத்தின் இரு கூறுகளாகும்.
காரணம் : ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்பிற்கு இடையேயான வேறுபாடு "வர்த்தகச் சமநிலை" என அழைக்கப்படுகிறது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.
ஈ) கூற்று மற்றும் காரணம் சரி; ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.

விடைகள்

1. அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி கூற்றுக்கான சரியான விளக்கம் காரணம் ஆகும்.
2. ஆ) கூற்று மற்றும் காரணம் சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.
3. இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
4. ஈ) கூற்று மற்றும் காரணம் சரி; ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.

V. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **தமிழ்நாட்டின் வேளாண் பருவகாலங்களை எழுதுக.**
   - சொர்னவாரி பருவம் (ஏப்ரல்–மே)
   - சம்பா பருவம் (ஆடிப்பட்டம்) (ஜூலை–ஆகஸ்டு)
   - நவரை பருவம் (நவம்பர்–டிசம்பர்)

2. **கோயம்புத்தூர் ஏன் "தமிழ்நாட்டின் மான்செஸ்டர்" என அழைக்கப்படுகிறது?**

- பருத்தி நெசவாலைகள் தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க நன்கு வளர்ந்த ஒரு தொழிலகமாகும்.
- பருத்தி நெசவு ஆலைகள் கோயம்புத்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் செறிந்து காணப்படுகின்றன. எனவே இது தமிழ்நாட்டின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுகிறது.

3. **தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்குத் திட்டங்களின் பெயர்களை எழுதுக.** **PTA**

- மேட்டூர் அணை
- பவானி சாகர் அணை
- அமராவதி அணை
- கிருஷ்ணகிரி அணை
- சாத்தனூர் அணை
- முல்லைப் பெரியாறு அணை
- மணிமுத்தாறு அணை
- வைகை அணை
- பாபநாசம் அணை
- பரம்பிகுளம் ஆழியாறு திட்டம்

4. **பறக்கும் தொடருந்துத் திட்டம் (MRTS) என்றால் என்ன?** **PTA**

- பறக்கும் தொடருந்து திட்டம் என்பது நிலத்திலிருந்து உயரே கட்டப்பட்ட பாலத்தின்மேல் செல்லும் புறநகர் தொடருந்து சேவையைக் குறிக்கும். (MRTS-Mass Rapid Transit System).
- போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் சென்னையில் பறக்கும் தொடருந்து திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

5. **தமிழ்நாட்டின் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களைப் பட்டியலிடுக.**

விமான நிலையங்கள்:

- சென்னை
- மதுரை
- திருச்சிராப்பள்ளி

} (சர்வதேச விமான நிலையங்கள்)

- தூத்துக்குடி
- சேலம்

} (உள்நாட்டு விமான நிலையங்கள்)

துறைமுகங்கள்:

- சென்னை
- எண்ணூர்
- தூத்துக்குடி

} முக்கிய துறைமுகங்கள்)

- நாகப்பட்டினம் (இடைநிலை துறைமுகம்)

6. **உங்கள் மாவட்டத்தில் ஏதேனும் கூட்ட நெரிசலால் ஏற்பட்ட விபத்து பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அந்த சம்பவத்தைப் பற்றி சுருக்கமாக எழுதவும்.**

(சொந்த அனுபவத்தில் அல்லது பிறர்கூறக் கேட்ட செய்தியின் அடிப்படையில் உண்மைச் சம்பவத்தினை எழுதவும்)

உதாரணம்:

- தமிழ்நாட்டில் துறையூர் அருகே முத்தியம் பாளையம் கிராமத்தில் கருப்பசாமி கோயிலில் நடந்த திருவிழாவில் படிக்காசு நடைபெற்றபோது, நூற்றுக்கணக்கான பக்தர்கள் திரண்டதால் கூட்ட நெரிசலில் சிக்கி, 7பேர் உயிரிழந்தனர், 10 பேர் காயமடைந்தனர்.

மேலும் சில உதாரணங்கள்:

- கும்பகோணம் – மகாமகத்தில் நடந்த விபத்து (1992)
- தஞ்சை பெரியகோயிலில் ஏற்பட்ட தீ விபத்து (1997)
- ஏர்வாடி தீ விபத்து (2001)
- திருவரங்கம் திருமணக்கூட தீ விபத்து (2004)
- கும்பகோணப் பள்ளிக்கூட தீ விபத்து (2004) (விபத்திற்கான காரணங்களின் உண்மைத்தன்மையை அறிந்திடுக)

கூடுதல் வினாக்கள்

7. மானுடபுவியியல் என்றால் என்ன?

- மானுடபுவியியல் என்பது மனித சமுதாயம் வளர்ச்சி பெற்ற வழிமுறைகள் மற்றும் இயற்கை சூழலுடனான செயல்பாடுகள் குறித்து கற்றறிதல் ஆகும்.

8. வேளாண்மை என்றால் என்ன?

- வேளாண்மை என்பது விவசாய நடைமுறைகளான பயிர்கள் சாகுபடி, கால்நடை, பறவைகள், காடுகள் வளர்த்தல், மீன்பிடித்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும்.

9. தமிழ்நாட்டின் முக்கிய வணிகப்பயிர்கள் யாவை?

- கரும்பு
- எள்
- பருத்தி
- நிலக்கடலை
- சூரியகாந்தி
- தேயிலை
- தென்னை
- காப்பி
- முந்திரி
- ஏலக்காய்
- மிளகாய்
- இரப்பர்

10. தமிழ்நாட்டின் வேளாண் முறைகளின் வகைகள் யாவை?

- தீவிர தன்னிறைவு வேளாண்மை
- தோட்ட வேளாண்மை
- கலப்பு வேளாண்மை

11. தமிழ்நாட்டில் பயிரிடப்படும் முக்கிய எண்ணெய் வித்துக்கள் யாவை?

- நிலக்கடலை
- தென்னை
- எள்
- சூரியகாந்தி
- ஆமணக்கு
- கடுகு

12. தமிழ்நாட்டில் கரும்பு பயிரிடப்படும் மாவட்டங்கள் யாவை?

- திருவள்ளூர்
- திருநெல்வேலி
- காஞ்சிபுரம்
- கோயம்புத்தூர்
- வேலூர்
- கடலூர்

13. உள்நாட்டு மீன்பிடிப்பு எங்கு நடைபெறுகின்றன?

- ஏரிகள்
- கழிமுகங்கள்
- ஆறுகள்
- காயல்கள்
- குளங்கள்
- சதுப்பு நிலப்பகுதிகள்

14. மீன்பிடித்தலை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு மீன்வளத்துறை அறிமுகப்படுத்தியுள்ள திட்டங்கள் யாவை?

- பண்ணைக் குளங்கள் மற்றும் நீர்ப்பாசன ஏரிகளில் மீன்வளர்ப்பு
- மீன்குஞ்சுகள் பொறிப்பகம்
- மீன் குளவு வளர்ப்பகம்
- அலங்கார மீன் வளர்ப்பு
- மீன் வேளாண் மேம்பாட்டு நிறுவனம் போன்றவை இந்நிறுவனத்தின் முக்கிய திட்டங்களாகும்.

15. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி என்றால் என்ன?

- ஏற்றுமதி என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை வெளிநாட்டுப் பணத்திற்கு விற்பது ஆகும்.
- இறக்குமதி என்பது பண்டங்கள் மற்றும் சேவைகளை வெளிநாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்குவதாகும்.
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்பிற்கிடையேயான வேறுபாடு வர்த்தகச் சமநிலை என அழைக்கப்படுகிறது.

16. வேளாண் வளர்ச்சியைத் தீர்மானிக்கும் முக்கியக் காரணிகள் யாவை?

- நிலத்தோற்றம்
- மண்
- காலநிலை
- நீர்ப்பாசனம்

VI. வேறுபடுத்துக:

பாடநூல் வினாக்கள்

1. கடல் மீன்பிடித்தல் மற்றும் உள்நாட்டு மீன்பிடித்தல்

கடல் மீன்பிடித்தல்	உள்நாட்டு மீன்பிடித்தல்
1. பெருங்கடல் அல்லது கடற்கரையில் இருந்து சில கிலோமீட்டர் தொலைவிலோ அல்லது ஆழமான கடல் பகுதியிலோ மீன்பிடிப்பது கடல் மீன் பிடித்தல் எனப்படும்.	ஏரிகள், ஆறுகள், குளங்கள், கழிமுகங்கள், காயல்கள் மற்றும் சதுப்பு நிலப்பகுதி போன்ற நீர் நிலைகளில் மீன்பிடிப்பது உள்நாட்டு மீன்பிடித்தல் எனப்படும்.
2. கடல் மீன்பிடித்தலுக்கு பெரிய மற்றும் சிறிய இயந்திரப் படகுகள் பயன்படுத்தப்படுகின்றன.	கட்டுமரம், டீசல் படகுகள் மற்றும் மீன்வலைகளைப் பயன்படுத்தி உள்நாட்டு மீன்பிடித்தல் நடை பெறுகின்றது.
3. சென்னை, கன்னியாகுமரி, திருநெல்வேலி, நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் தமிழ்நாட்டின் கடல் மீன் உற்பத்தியில் சுமார் 40% பங்களிப்பைத் தருகின்றன.	வேலூர், கடலூர், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் தமிழ்நாட்டின் உள்நாட்டு மீன் உற்பத்தியில் சுமார் 40% பங்களிப்பைத் தருகின்றன.
4. கண்டத்திட்டுப்பகுதி கடல்மீன்பிடித்தலுக்கு சாதகமாக உள்ளது.	பண்ணைக்குளங்கள் மற்றும் நீர்ப்பாசன ஏரிகள் உள்நாட்டு மீன் வளர்ப்புக்கு சாதகமாக உள்ளன.

2. உணவுப்பயிர்கள் மற்றும் வாணிபப்பயிர்கள் PTA

உணவுப்பயிர்கள்	வாணிபப்பயிர்கள்
1. உணவுக்காக உற்பத்தி செய்யப்படும் பயிர்கள் உணவுப்பயிர்கள் எனப்படும்.	வணிக நோக்கத்திற்காக உற்பத்தி செய்யப்படும் பயிர்கள் வாணிபப் பயிர்கள் ஆகும்.
2. நெல், தினைவகைகள் மற்றும் பருப்பு வகைகள் ஆகியன மாநிலத்தின் முக்கிய உணவுப் பயிர்களாகும்.	கரும்பு, பருத்தி, சூரியகாந்தி, தென்னை, முந்திரி, மிளகாய் எள், நிலக்கடலை, தேயிலை காப்பி, ஏலக்காய் மற்றும் இரப்பர் ஆகியவை முக்கிய வணிகப் பயிர்களாகும்.
3. தமிழ்நாட்டின் முக்கியமான உணவுப்பயிரான நெல் காவிரி டெல்டா பகுதியில் அதிக அளவு உற்பத்தி செய்யப்படுகிறது.	வாணிபப் பயிர்களில் முக்கியமான பருத்தி கோயம்புத்தூர் பீடபூமி, வைகை மற்றும் வைப்பாறு வடிநிலப் பகுதிகளில் அதிக அளவு பயிரிடப்படுகிறது.

3. மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர்

மேற்பரப்பு நீர்	நிலத்தடி நீர்
1. ஆற்று வடிநிலம், நீர்த்தேக்கங்கள், ஏரிகள், திறந்தவெளி கிணறுகள் ஆகியவற்றிலிருந்து நமது பயன்பாட்டிற்காகப் பெறப்படும் நீர் மேற்பரப்பு நீர் எனப்படுகிறது.	நிலத்தின் மேற்பரப்பில் பெய்யும் மழைநீர் மண்ணிற்குள்ளே ஊடுருவி அடியில் இருக்கும் பாறைகளுக்குமேல் சேமிக்கப்பட்டிருக்கும் நீர், நிலத்தடி நீர் எனப்படும்.
2. தமிழ் நாட்டின் மேற்பரப்பு நீரில் 95 சதவீதத்திற்கு அதிகமாக பயன்பாட்டில் இருந்து வருகிறது.	தமிழ்நாட்டின் நிலத்தடி நீரில் 80 சதவீதத்திற்கு அதிகமாக பயன்பாட்டில் இருந்து வருகிறது.
3. தமிழ் நாட்டின் மொத்த மேற்பரப்பு நீரின் அளவு சுமார் 24,864 மில்லியன் கனமீட்டராகும்.	தமிழ்நாட்டின் நிலத்தடி நீர்வளம் 22,433 மில்லியன் கன மீட்டர் ஆகும்.
4. மேற்பரப்பு நீர் பாசனத்திற்காக அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சுமார் 24லட்சம் ஹெக்டேர் விளைநிலம் மேற்பரப்புநீர் மூலம் பாசன வசதியைப் பெற்றுள்ளது.	நிலத்தடி நீரின் தற்போதைய பயன்பாட்டின் அளவு 13,558 மில்லியன் கன மீட்டர் ஆகும். இது மறுவூட்டம் மூலம் கிடைக்கும் நீரில் 60% ஆகும்.

கூடுதல் வினாக்கள்

4. வான்வழி போக்குவரத்து மற்றும் நீர்வழி போக்குவரத்து **PTA**

வான்வழி போக்குவரத்து	நீர்வழி போக்குவரத்து
1. தமிழ்நாட்டில் நான்கு முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன.	தமிழ்நாட்டில் மூன்று முக்கிய துறைமுகங்கள் உள்ளன.
2. சென்னை, கோயம்புத்தூர் மதுரை மற்றும் திருச்சி ஆகியன முக்கிய சர்வதேச விமான நிலையங்களாகும்.	சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகியன முக்கிய பெரிய துறைமுகங்களாகும்.
3. தூத்துக்குடி மற்றும் சேலம் உள்நாட்டு விமான நிலையங்களாகும்.	நாகப்பட்டினம் ஒரு இடைநிலை துறைமுகமாகும்.
4. இது ஆண்டிற்கு 18 சதவீதத்திற்கும் அதிகமான விமான போக்குவரத்து வளர்ச்சியை ஏற்படுத்துகிறது.	தமிழ்நாட்டில் உள்ள துறைமுகங்கள் சுமார் 73 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளை ஆண்டுதோறும் கையாளுகிறது.

5. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி

ஏற்றுமதி	இறக்குமதி
1. ஏற்றுமதி என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை வெளிநாட்டு பணத்திற்கு விற்பதாகும்.	இறக்குமதி என்பது பண்டங்கள் மற்றும் சேவைகளை வெளிநாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்குவதாகும்.
2. இந்தியாவின் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்களிப்பு 12.2 சதவீதம் ஆகும்.	தமிழ்நாடு பல பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது.
3. தமிழ்நாடு வேளாண் பொருட்கள், தோல் பொருட்கள், இரத்தின கற்கள், நகைகள், இரசாயனம் சார்ந்த பொருட்களை ஏற்றுமதி செய்கின்றது.	இயந்திரக் கருவிகள், போக்குவரத்து சாதனங்கள், மின்சாதனமல்லாத இயந்திரங்கள், மின்சாதனப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், பெட்ரோலியம், உரங்கள் மற்றும் செய்தித்தாள்கள் ஆகியவை தமிழ்நாட்டின் இறக்குமதிப் பொருட்களாகும்.
4. ஏற்றுமதியின் மூலம் நாம் அந்நியச் செலவாணியைப் பெறுகிறோம்.	இறக்குமதியின் மூலம் நாம் நமது அந்நியச் செலவாணியை இழக்கிறோம்.

VII. கீழ்க்கண்டவற்றிற்கு காரணம் கூறுக:

1. விவசாயிகள் இரசாயன வேளாண்மையிலிருந்து கரிம (இயற்கை) வேளாண்மைக்கு மாறுகிறார்கள். ஏன்?

காரணம்:

இயற்கை வேளாண்மையை மேம்படுத்தும் நோக்கத்தோடு மத்திய அரசு "தேசிய (இயற்கை) கரிம வேளாண்மை திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி, விவசாயிகளுக்கு இயற்கை உரங்களை மேம்படுத்திட பயிற்சியும் அளிக்கப்படுவதுடன் நிதியுதவியும் அளிக்கப்படுவதால், விவசாயிகள் இயற்கை வேளாண்மைக்கு மாறுகிறார்கள்.

2. கிராமங்களைவிட பெருநகரங்களில் மக்கள்தொகை நெருக்கம் அதிகம். ஏன்?

காரணம்:

தொழில்துறை மேம்பாடு, அதிக வேலைவாய்ப்பு, போக்குவரத்து வசதி, கல்வி வசதி போன்ற காரணங்களால் பெருநகரங்களில் மக்கள் தொகை நெருக்கம் அதிகமாகக் காணப்படுகிறது.

3. தமிழ்நாட்டின் நெசவாலை தலைநகர் என கரூர் அழைக்கப்படுகிறது. ஏன்?

காரணம்:

பருத்தி நெசவு ஆலைகள் கரூரிலும் அதன் சுற்றுவட்டாரங்களிலும் செறிந்து காணப்படுகின்றன. நெசவுத் தொழில் மூலம் இப்பகுதிகள் மாநிலப் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பை அளிக்கின்றன. எனவே கரூர் தமிழ்நாட்டின் நெசவாலை தலைநகர் என அழைக்கப்படுகிறது.

4. கோவில்களில் பெரும்பாலும் கூட்ட நெரிசலால் விபத்துகள் ஏற்படுகின்றன. ஏன்?

காரணம்:

கோவில்களில் பெரும்பாலும் ஏற்படும் விபத்துகள் தீ விபத்துகளாகும். காரணம் கோயிலைச் சுற்றியுள்ள வணிக வளாகங்களில் ஏற்படும் மின்கசிவினால் தீ விபத்துகள் ஏற்படுகின்றன. லட்சக்கணக்கில் பக்தர்கள் கூடும் பகுதியில் திடீரென ஏற்படும் தீ விபத்தால் கூட்ட நெரிசல் ஏற்பட்டு பலர் உயிரிழக்க நேரிடுகிறது.

கூடுதல் வினாக்கள்

5. "தஞ்சாவூர் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம்" என அழைக்கப்படுகிறது. ஏன்?

காரணம்:

தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதி அதிக நெல் உற்பத்தி செய்யும் பகுதியாகும். எனவே காவிரி டெல்டா பகுதியிலுள்ள தஞ்சாவூர் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என அழைக்கப்படுகிறது.

6. சிறு மற்றும் குறு விவசாயிகள் வெள்ளாடு வளர்ப்பினை மேற்கொள்கின்றனர். ஏன்?

காரணம்:

வெள்ளாடு வளர்ப்பில் குறைந்த முதலீட்டில் அதிக இலாபம் ஈட்டப்படுவதால் சிறு மற்றும் குறு விவசாயிகள் வெள்ளாடு வளர்ப்பினை மேற்கொள்கின்றனர்.

7. சுற்றுலாத்துறை ஒரு தொழிலாகக் கருதப்படுகிறது. ஏன்?

காரணம்:

சுற்றுலாத்துறையில் ஏராளமான மக்களுக்கு பல்வேறு வகையான வேலைவாய்ப்பு உருவாகிறது. எனவே அது ஒரு தொழிலாகக் கருதப்படுகிறது.

8. தமிழ்நாட்டில் பயிர் சாகுபடிக்கு நீர்ப்பாசனம் இன்றியமையாததாகும். ஏன்?

காரணம்:

தமிழ்நாட்டில் பருவமழை சீரற்ற நிலையிலும் உறுதியற்ற நிலையிலும் பெய்வதால் நீர்ப்பாசனம் அவசியம். மேலும் மழை பருவ காலத்தில் மட்டுமே பெய்கிறது.

VIII. பத்தியளவில் விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. தமிழ்நாட்டின் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக.

- தேயிலை, காப்பி இரப்பர், முந்திரி மற்றும் சின்கோனா ஆகியன தமிழ்நாட்டின் முக்கிய தோட்டப் பயிர்களாகும்.
- தோட்டப்பயிர்கள் தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் சரிவுகளில் பயிரிடப்படுகின்றன.
- இந்தியாவில் அசாம் மாநிலத்திற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு தேயிலை பயிரிடும் பரப்பு மற்றும் உற்பத்தியில் இரண்டாமிடம் வகிக்கிறது.
- நீலகிரி மலைகள் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மலைகளில் தேயிலை தோட்டங்கள் காணப்படுகின்றன.
- நீலகிரி மலைகள் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடு மலைச்சரிவுகளில் காப்பி குறிப்பிடத் தகுந்த அளவில் பயிரிடப்படுகிறது.
- திண்டுக்கல், மதுரை மற்றும் தேனி மாவட்டங்களிலுள்ள மலைச்சரிவுகளிலும் காப்பி பயிரிடப்படுகின்றது.
- காப்பி உற்பத்தியில் கர்நாடகா மாநிலத்திற்கு அடுத்து தமிழ்நாடு இரண்டாமிடம் வகிக்கிறது.
- இரப்பர் தோட்டங்கள் கன்னியாகுமரியில் அதிகமாக காணப்படுகிறது.
- தமிழ்நாட்டிலுள்ள மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகளின் சரிவுகளில் மிதவெப்பம் மற்றும் ஈரமான காலநிலை உள்ள பகுதிகளில் மிளகு விளைகின்றது.

- கடலூர் மாவட்டத்தின் பெரும்பகுதிகளில் முந்திரி பயிரிடப்படுகின்றது.
- சுமார் 1060 மீட்டர் முதல் 1280 மீட்டர் உயரம் வரை உள்ள ஆனை மலைப்பகுதிகளில் சின்கோனா பயிரிடப்படுகின்றது.
- சுமார் 915 மீட்டர் முதல் 1525 மீட்டர் வரை மதுரையைச் சுற்றியுள்ள மலைப்பகுதிகளில் ஏலக்காய் பண்ணைகள் காணப்படுகின்றன.

2. **தமிழ்நாட்டின் நீர் ஆதாரங்களைப் பற்றி எழுதவும்.** **PTA**

நீர்வளம்:

- மனித குலத்திற்கும் புவியில் வாழும் இலட்சக்கணக்கான உயிரினங்களுக்கும் நீர் இயற்கையின் ஒரு விலைமதிப்பற்ற பரிசாகும்.

தமிழ்நாட்டின் நீர் வளங்கள்:

- தமிழ்நாட்டின் மேற்பரப்பு நீரில் 95 சதவீதத்திற்கு அதிகமான மற்றும் நிலத்தடி நீரில் 80 சதவீதத்திற்கு அதிகமாகவும் ஏற்கனவே பயன்பாட்டில் இருந்து வருகிறது.
- அதிகளவு நீரானது மக்கள் மற்றும் விலங்குகளின் நுகர்வு, நீர்ப்பாசனம் மற்றும் தொழிலக பயன்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.
- தமிழகம் பருவமழையைச் சார்ந்தே உள்ளது. தமிழகத்தில் ஆண்டுச் சராசரி மழையளவு சுமார் 930 மில்லி மீட்டர் ஆகும்.
- தமிழகம் வடகிழக்கு பருவக்காற்று காலத்தில் 47%மும், தென்மேற்கு பருவக்காற்று காலத்தில் 35%மும், கோடைகாலத்தில் 14%மும், குளிர்காலத்தில் 4%மும் மழைப்பொழிவு பெறுகின்றது.

தமிழ்நாட்டிலுள்ள நீர்வள ஆதாரங்கள்:

- ஆற்று வடிநிலம்
- ஆழ்துளை கிணறுகள்
- நீர்த்தேக்கங்கள்
- திறந்தவெளி கிணறுகள்
- ஏரிகள்

மேற்பரப்பு நீர்வள ஆதாரங்கள்:

- தமிழ் நாட்டின் மொத்த மேற்பரப்பு நீரின் அளவு சுமார் 24,864 மில்லியன் கனமீட்டராகும். மாநிலத்தில் 17 பெரிய ஆற்று வடிநிலங்கள் 81 நீர்த்தேக்கங்கள் மற்றும் 41,262 ஏரிகள் உள்ளன.
- ஏற்கனவே பெரும்பகுதி மேற்பரப்பு நீர் பாசனத்திற்காக அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.
- சுமார் 24 இலட்சம் ஹெக்டேர் விளைநிலம் மேற்பரப்பு நீர் மூலம் பெரிய, நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் மூலம் பாசன வசதியைப் பெற்றுள்ளது.

தமிழ்நாட்டின் நிலத்தடி நீர்வள ஆதாரங்கள்:

- மாநிலத்தில் பயன்படுத்திக் கொள்ளத்தக்க நிலத்தடி நீர்வளம் 22,433 மில்லியன் கன மீட்டர் ஆகும்.
- நீரின் தற்போதைய பயன்பாட்டின் அளவு 13,558 மில்லியன் கனமீட்டர் ஆகும். இது மறுவூட்டம் மூலம் கிடைக்கும் நீரில் 60% ஆகும். மீத இருப்பு நீரானது சுமார் 8,875 மில்லியன் கனமீட்டராகும்.

3. **தமிழ்நாட்டின் கனிமபரவலை விவரி.**

- வெர்மிகுளேட், மேக்னடைட், டுனைட், ரூட்டில், செம்மணிக்கல், மாலிப் படினம் மற்றும் இல்மனைட் ஆகிய வளங்களில் தமிழ்நாடு முன்னணி உற்பத்தியாளராக உள்ளது.

எரிபொருட்கள்:

- மாநிலத்தில் காணப்படும் முக்கியமான தாதுக்களில், நெய்வேலி மிகப்பெரிய அளவில் பழுப்பு நிலக்கரி வளங்களைக் கொண்டுள்ளது. இராமநாதபுரம் பகுதிகளில் நிலக்கரி படிமங்கள் காணப்படுகின்றன.
- காவிரி வடிநிலப்பகுதியில் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு படிவுகள் காணப்படுகின்றன.

இரும்பு:

- சேலம் மாவட்டத்திலுள்ள கஞ்சமலையிலும் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலையிலும் இரும்புத்தாது படிவுகள் காணப்படுகின்றன.

மேக்னசைட்:

- சேலம் அருகே மேக்னசைட் தாது கிடைக்கின்றது.
- கோயம்புத்தூர், தர்மபுரி, கரூர், நாமக்கல், நீலகிரி, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் மாவட்டங்களில் மேக்னசைட் கிடைக்கிறது.

பாக்சைட்:

- சேர்வராயன் குன்றுகள், கோத்தகிரி, உதகமண்டலம் பழனிமலை மற்றும் கொல்லிமலைப் பகுதிகளில் பாக்சைட் தாதுக்கள் காணப்படுகின்றன.

ஜிப்சம்:

- திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஜிப்சம் கிடைக்கிறது.

இல்மனைட்:

- கன்னியாகுமரி கடற்கரை மணல் பரப்புகளில் இல்மனைட் மற்றும் ருட்டில் காணப்படுகிறது.

சுண்ணாம்புக்கல்:

- கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், கரூர், மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம், சேலம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் சுண்ணாம்புக்கல் கிடைக்கிறது.

பிற உலோகங்கள்:

- பெல்ட்ஸ்பார்க், படிகக்கல், தாமிரம் மற்றும் காரீயம் ஆகியவை மாநிலத்தின் சில பகுதிகளில் காணப்படுகின்றன.

4. **தமிழ்நாட்டில் அடர்த்தியான மக்கள்தொகை கொண்ட பகுதிகள் மற்றும் அதற்கான காரணங்களை எழுதுக.**

மக்களடர்த்தி:

- 2001ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்களடர்த்தி சதுர கிலோமீட்டருக்கு 480 ஆக இருந்தது. இது 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 555 ஆக உயர்ந்துள்ளது.
- இந்தியாவின் மக்களடர்த்தியில் நமது மாநிலம் 12ஆவது இடத்தில் உள்ளது. 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி நமது தேசிய சாரசரி மக்களடர்த்தி 382 ஆகும்.

அதிக மக்களடர்த்தி கொண்ட பகுதிகள்:

- சென்னை
- தஞ்சாவூர்
- காஞ்சிபுரம்
- வேலூர்
- கடலூர்
- திருவள்ளூர்
- சேலம்
- கோயம்புத்தூர்
- கன்னியாகுமரி
- நாகப்பட்டினம்
- மதுரை
- திருச்சிராப்பள்ளி

காரணங்கள்:

- விவசாயம் மற்றும் தொழில் துறை மேம்பாடு
- வேலை வாய்ப்பு
- போக்குவரத்து வசதி
- கல்வி கற்க வசதி
- மருத்துவ வசதி
- சந்தை வசதி
- பொழுதுபோக்கு வசதி போன்றவை அதிக மக்களடர்த்திக்கான காரணங்களாகும்.

5. **தமிழ்நாட்டின் பல்வேறு போக்குவரத்து முறைகளை விவரி.**

சாலைப் போக்குவரத்து:

- மாநிலத்தின் மொத்த சாலைகளின் நீளம் 1,67,000 கிலோமீட்டர் ஆகும். இதில் 60,628 கிலோமீட்டர் மாநில நெடுஞ்சாலைகள் துறை மூலம் பராமரிக்கப்படுகிறது.
- பொதுத்துறை மற்றும் தனியார்துறை கூட்டணி இயக்க திட்டத்தின் கீழ் மொத்த சாலை திட்டங்களில் 20% பங்களிப்புடன் தமிழ்நாடு இந்தியாவில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

சாலைகளின் வகைகள்:

- தேசிய நெடுஞ்சாலைகள்
- மாநில நெடுஞ்சாலைகள்
- கிராம பஞ்சாயத்து சாலைகள்
- வனச் சாலைகள்

- மாநகராட்சி மற்றும் நகராட்சி சாலைகள்
- ஊராட்சி ஒன்றிய சாலைகள்
- வணிக ரீதியிலான சாலைகள்
- வணிக ரீதியற்ற சாலைகள்

இரயில்வே போக்குவரத்து:

- தெற்கு இரயில்வேயின் தலைமையகம் சென்னையில் அமைந்துள்ளது. தெற்கு இரயில்வே வலைப் பின்னலில் தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி, கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் சில பகுதிகள் அடங்கும். இம்மண்டலத்தில் 690 இரயில் நிலையங்கள் உள்ளன.
- இந்த இரயில்வே வலைப்பின்னல் அமைப்பு இந்தியாவின் முக்கிய நகரங்களை இணைக்கிறது. சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகியவை இம்மாநிலத்தில் உள்ள முக்கிய இரயில் சந்திப்புகள் ஆகும்.
- சென்னை புறநகர் இரயில் போக்குவரத்து மற்றும் பறக்கும் தொடருந்துத் திட்டம் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. தற்பொழுது மெட்ரோ இரயில்வே அமைப்பும் மே 2017 முதல் பாதாள இரயில் இயக்கத்துடன் இப்போக்குவரத்து விரிவாக்கம் செய்து வருகிறது.

வான்வழி போக்குவரத்து:

- தமிழ்நாட்டில் 4 முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன. அவை சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியனவாகும்.
- தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகியன உள்நாட்டு விமான நிலையங்கள் ஆகும். இது நம் நாட்டின் பல பகுதிகளை இணைக்கிறது.
- தொழில் துறையின் அதீத வளர்ச்சி, பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்கு போக்குவரத்துகளை அதிகரித்துள்ளது. இது ஆண்டிற்கு 18 சதவீதத்திற்கும் அதிகமான விமான போக்குவரத்து வளர்ச்சியை ஏற்படுத்துகிறது.

நீர்வழிப் போக்குவரத்து:

- சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி தமிழ்நாட்டின் மூன்று முக்கிய துறைமுகங்களாகும். நாகப்பட்டினத்தில் இடைநிலை துறைமுகமும் பிற பகுதிகளில் 15 சிறிய துறைமுகங்களும் உள்ளன.
- தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சிறிய துறைமுகங்களும் தமிழ்நாட்டின் கடல்சார் வாரியத்தால் நிர்வகிக்கப்படுகிறது.
- சென்னை துறைமுகம் ஒரு செயற்கைத் துறைமுகமாகும். இது சரக்குப் பெட்டகங்களைக் கையாளுவதில் நாட்டின் இரண்டாவது பெரிய துறைமுகமாகும். தற்போது 4 இலட்சம் வாகனங்களைக் கையாளும் திறன் கொண்ட பிரத்தியேக முனையம் மேம்படுத்தப்பட்டுள்ளது. இடைநிலை துறைமுகமான எண்ணூர் சமீபத்தில் பெரிய துறைமுகமாக மேம்படுத்தப்பட்டு தமிழகத்தில் அதிக நிலக்கரி மற்றும் தாதுக்களை கையாளும் துறைமுகமாக உள்ளது.
- தமிழக துறைமுகங்கள் சுமார் 73மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளை ஆண்டுதோறும் கையாளுகின்றன.

6. **சாலைப்பாதுகாப்பு விதிகள் பற்றி எழுதவும்.**

- சாலை குறியீடுகள் பற்றிய விழிப்புணர்வு.
- நில், கவனி, செல்.
- வாகனம் நெருங்கி வருகிறதா என்பதை உறுதி செய்தல்.
- சாலைகளில் அதிவிரைவாக வாகனங்களை செலுத்துவதை தவிர்த்தல்.
- பாதசாரிகளுக்கான இடத்தில் சாலையைக் கடந்து செல்லுதல்.
- வாகனம் ஓட்டும்போது கைகளை நீட்டாதிருத்தல்.
- ஒருபோதும் வளைவுகளில் வாகனங்களை முந்தாமல் நின்று கவனமாகச் செலுத்துதல்.

கூடுதல் வினாக்கள்

7. **நீர்வள மேலாண்மை பற்றி எழுதுக.**

- நீர்வள மேலாண்மை என்பது திட்டமிடல், செயல்படுத்துதல், நீர் வளத்தை பெருக்குதல் விநியோகித்தல் மற்றும் நீர் வளங்களின் உகந்த பயன்பாட்டை நிர்வகிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாகும்.
- தமிழ்நாட்டில் மக்கள் தொகை அதிகரிப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் தனிநபரின் நுகர்வு, நீர்அதிகரிப்பு காரணமாக நீரின் தேவை மிக அதிகமாக அதிகரித்துள்ளது.

- தமிழ்நாட்டின் தனிநபர் நீர் நுகர்வின் அளவு 900 கன மீட்டர் ஆகும். இது தேசிய சராசரியான 2,200 கனமீட்டரை ஒப்பிடும் பொழுது குறைவானதாகும்.
- மாநிலத்தில் உள்ள நீர் வளத்தில் 75 சதவீதம் வேளாண்மைக்காக நுகரப்படுகிறது, மக்கள் நீர் பயன்பாடு மற்றும் தொழில் துறைக்கான தேவைகள் மற்றும் இதரத் தேவைகளுக்கான பயன்பாடு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருகின்றது.
- மாநிலம் நீர் தேவைக்கு பருவமழையை பெரிதும் சார்ந்துள்ளது. நீர் வளங்களை புதுப்பித்துக்கொள்ள மழையையே முழுமையாக சார்ந்துள்ளது.
- பருவமழை பொய்ப்பதால் கடுமையான நீர் பற்றாக்குறை ஏற்பட்டு, வறட்சிக்கு வழிவகுக்கும். எனவே நீரை சேமிப்பது நமக்கும் வருங்கால சந்ததியினருக்கும் பயனுள்ளதாக அமையும்.

8. **பேரிடரைக் குறைக்க உதவும் அமைப்புகளைப் பட்டியலிடுக.**

மாநில அமைப்புகள்:

- மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்.
- காவல்துறை
- தீ மற்றும் குடிமையியல் பாதுகாப்பு சேவைகள்.
- போக்குவரத்துத்துறை.
- கால்நடைத்துறை
- நிவாரண / பேரிடர் மேலாண்மை துறை.
- வனத்துறை
- சுகாதார சேவைகள்.
- பொதுப்பணித்துறை
- உணவு மற்றும் வட்ட வழங்கல்துறை

மாவட்ட அமைப்புகள்:

- மாவட்ட மாஜிஸ்திரேட் (தலைவர் மாவட்ட ஆட்சியர்)
- குடிமை பணி நிர்வாகம்
- குடிமை பாதுகாப்பு
- ஊர்க்காவல் படை
- வருவாய்த்துறை
- உள்ளூர் காவல்துறை
- தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள்

9. **பல்நோக்குத் திட்டம் என்றால் என்ன? தமிழ்நாட்டின் பல்நோக்குத் திட்டங்களில் ஏதேனும் இரண்டினை விளக்குக.**

- வேளாண் நீர்ப்பாசன மேம்பாட்டிற்காகவும், நீர் மின்சக்தி உற்பத்திக்காகவும் பல்நோக்குத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை தவிர மண் அரிப்பைத் தடுக்கவும், வெள்ளத்தடுப்பிற்காகவும், மீன்பிடித்தல் தொழிலுக்குப் பயன்படும் வகையிலும் அணைகள் கட்டப்பட்டுள்ளன. இவை பல்நோக்கு திட்டம் எனப்படுகின்றன.

மேட்டூர் அணை:

- காவிரி ஆறு சமவெளியில் நுழையும் இடத்திற்கு முன்னுள்ள மலையிடுக்குப் பகுதியில் இவ்வணை கட்டப்பட்டுள்ளது.
- இது இந்தியாவின் மிகப் பழமையான அணைகளில் ஒன்றாகும்.
- இது சேலம், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 2,71,000 ஏக்கர் விளை நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கிறது.
- அணை, நீர் மின் சக்தி நிலையம், பூங்கா மற்றும் இவ்வணையைச் சூழ்ந்துள்ள மலைப்பகுதிகள் இவற்றை ஒரு முக்கிய சுற்றுலாத் தலமாக்கியுள்ளன.

அமராவதி அணை:

- அமராவதி அணை திருப்பூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டையிலிருந்து சுமார் 25 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.
- இவ்வணை காவிரியின் துணையாறான அமராவதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
- இவ்வணை நீர்ப்பாசனம், வெள்ளத்தடுப்பு மற்றும் நீர்மின்சக்தி உற்பத்திக்காகக் கட்டப்பட்டுள்ளது.
- இந்த நீர்த்தேக்கத்தில் சதுப்புநில முதலைகள் அதிகம் காணப்படுகின்றன.
- இது ஒரு முக்கிய சுற்றுலாத்தலமாகும்.

வரைபடம்

தமிழ்நாடு – முக்கிய பயிர்கள்



தமிழ்நாடு – பல்நோக்கு ஆற்று பள்ளத்தாக்கு திட்டங்கள்



தமிழ்நாடு – சாலைகள்

புவியியல்

தமிழ்நாடு – இருப்புப் பாதைகள்



தமிழ்நாடு – கடல் வழி


தமிழ்நாடு
கடல் வழி
ஆந்திரப் பிரதேசம்
கர்நாடகம்
இ ந் தி யா
கேரளம்
த மி ழ் நா டு
காட்டுப்பள்ளி
எண்ணூர்
சென்னை
புதுச்சேரி
கடலூர்
திருச்சோபுரம்
வங்காள விரிகுடா
திருக்கடையூர்
காரைக்கால் (புதுச்சேரி)
நாகப்பட்டினம்
பாம்பன்
இராமேஸ்வரம்
வாலிநோக்கம்
புன்னக்காயல்
தூத்துக்குடி
மணப்பேடு
குளச்சல்
கூடங்குளம்
கன்னியாகுமரி
இந்தியப் பெருங்கடல்
இலங்கை
முக்கிய கடல் துறைமுகம்
சிறிய துறைமுகம்
முக்கிய கடல் வழி
①விசாகப்பட்டினத்திற்கு
②கொல்கத்தாவிற்கு
③யாங்குனிற்கு
④மலேஷியாவிற்கு
⑤நாகப்பட்டினத்திற்கு
⑥கொழும்புவிற்கு

தமிழ்நாடு – வான் வழி


தமிழ்நாடு
வான் வழி
ஆந்திரப் பிரதேசம்
திருப்பதி
பெங்களூரு
சென்னை
வேலூர்
இ ந் தி யா
கர்நாடகம்
மும்பை
கொல்கத்தா
சேலம்
புதுச்சேரி
வங்காள விரிகுடா
கோயம்புத்தூர்
காரைக்கால் (புதுச்சேரி)
திருச்சிராப்பள்ளி
த மி ழ் நா டு
கேரளம்
கொச்சி
மதுரை
கொழும்பு
இலங்கை
தூத்துக்குடி
திருவனந்தபுரம்
அரபிக் கடல்
இந்தியப் பெருங்கடல்
சர்வதேச விமான வழி
உள்நாட்டு விமான வழி
சர்வதேச விமான நிலையம்
உள்நாட்டு விமான நிலையம்

அலகு குடிமையியல்

1 இந்திய அரசியலமைப்பு

மனவரைபடம்

நினைவில் கொள்க

- அமைச்சரவை திட்டக்குழு 1946 ன் கீழ் அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையால் **இந்திய அரசியலமைப்புச் சட்டம்** உருவாக்கப்பட்டது.
- ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அச்சாணியாக விளங்குவது **அரசியலமைப்பு** ஆகும்.
- அரசியலமைப்பு என்ற கொள்கை முதன் முதலில் **அமெரிக்க ஐக்கிய நாடுகளில்** தோன்றியது.
- **"அரசியலமைப்பின் திறவுகோல்"** என அழைக்கப்படுவது முகவுரை (preamble) ஆகும்.
- 'சிட்டிசன்' என்ற சொல் **'சிவிஸ்'** என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் ஒரு நகர அரசில் வசிப்பவர் என்பதாகும்.
- "இந்தியாவின் மகாசாசனம்" என அழைக்கப்படுவது **அடிப்படை உரிமைகள்** ஆகும்.
- "இந்தியாவின் அரசியலமைப்பின் தந்தை" எனப் போற்றப்படுபவர் **Dr. B.R.அம்பேத்கர்** ஆவார்.
- "அரசியலமைப்பின் பாதுகாவலன்" என அழைக்கப்படுவது **உச்சநீதிமன்றம்** ஆகும்.
- இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 32 ஐ இந்திய அரசியலமைப்பின் **"இதயம்** மற்றும் **ஆன்மா"** என வருணித்தவர் **Dr. B.R.அம்பேத்கர்.**
- நமது அடிப்படை உரிமைகள் **அமெரிக்க ஐக்கிய நாடுகளின்** அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவையாகும்.
- இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கடமைகள் என்பன முன்னாள் **சோவியத் யூனியன் (USSR) அரசியலமைப்பின்** தாக்கத்தால் சேர்க்கப்பட்டதாகும்.
- இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் தலைவர் **Dr. இராஜேந்திர பிரசாத்.**
- இந்திய அரசியலமைப்பு சட்ட வரைவுக்குழு தலைவர் **Dr. B.R.அம்பேத்கர்.**
- 2004 ல் இந்திய அரசு மொழிகளை வகைப்படுத்தி 6 மொழிகள் **செம்மொழிகள்** என அறிவித்தது.
- அரசியலமைப்பின் 42 வது சட்டத்திருத்தம் **"சிறிய அரசியலமைப்பு"** என அறியப்படுகிறது.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **கீழ்க்காணும் வரிசையில் 'முகவுரை' பற்றிய சரியான தொடர் எது?**
   அ) குடியரசு, ஜனநாயக, சமயச் சார்பற்ற, சமதர்ம, இறையாண்மை
   ஆ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, குடியரசு, ஜனநாயக
   இ) இறையாண்மை, குடியரசு, சமயச் சார்பற்ற, சமதர்ம, ஜனநாயக
   ஈ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக, குடியரசு

2. **இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது?**
   அ) ஒரு முறை   ஆ) இரு முறை
   இ) மூன்று முறை   ஈ) எப்பொழுதும் இல்லை

3. **இந்திய அரசியலமைப்பு தனது குடிமக்களுக்கு எந்த வகை குடியுரிமையை வழங்குகிறது?**
   அ) இரட்டை குடியுரிமை
   ஆ) ஒற்றை குடியுரிமை
   இ) சில மாநிலங்களில் ஒற்றை குடியுரிமை மற்ற மாநிலங்களில் இரட்டை குடியுரிமை
   ஈ) மேற்கண்டவைகளில் எதுவுமில்லை

4. ஒரு வெளிநாட்டவர் கீழ்க்காணும் எதன் மூலம் இந்திய குடியுரிமை பெற முடியும்?
   அ) வம்சாவளி ஆ) பதிவு
   இ) இயல்புரிமை ஈ) மேற்கண்ட அனைத்தும்

5. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி **PTA**
   அ) சமத்துவ உரிமை ஆ) சுரண்டலுக்கெதிரான உரிமை
   இ) சொத்துரிமை ஈ) கல்வி மற்றும் கலாச்சார உரிமை

6. கீழ்க்காண்பவற்றில் ஒன்று அடிப்படை உரிமையைப் பயன்படுத்துவதற்கு உதாரணம் இல்லை **PTA**
   அ) கர்நாடகாவிலிருந்து கேரளா பண்ணைகளில் வேலையாட்கள் பணி செய்தல்
   ஆ) கிறித்துவ சமயக்குழு தொடர்ச்சியாக பள்ளிகளை அமைத்தல்
   இ) ஆண், பெண் இருபாலரும் அரசுப் பணிகளுக்கு சம ஊதியம் பெறுதல்
   ஈ) பெற்றோர்களின் பூர்விக சொத்துகள் அவர்களது பிள்ளைகளுக்குச் செல்லுதல்.

7. இந்தியக் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டால் அவர்கள் ____________ ஐ அணுகி தங்களது அடிப்படை உரிமைகளைப் பெறலாம்.
   அ) நாடாளுமன்றம் ஆ) தலைமை வழக்குரைஞர்
   இ) இந்தியக் குடியரசுத் தலைவர் ஈ) இந்திய உச்ச நீதிமன்றம்

8. பின்வருவனவற்றுள் எந்த உரிமை டாக்டர். பி. ஆர். அம்பேத்கர் அவர்களால் இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா என விவரிக்கப்பட்டது?
   அ) சமய உரிமை ஆ) சமத்துவ உரிமை
   இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை ஈ) சொத்துரிமை

9. அடிப்படை உரிமைகள் எவ்வாறு நிறுத்தி வைக்கப்பட முடியும்?
   அ) உச்ச நீதிமன்றம் விரும்பினால் ஆ) பிரதம மந்திரியின் ஆணையினால்
   இ) தேசிய அவசர நிலையின் போது குடியரசு தலைவரின் ஆணையினால்
   ஈ) மேற்கண்ட அனைத்தும்

10. நமது அடிப்படை கடமைகளை ____________ இடமிருந்து பெற்றோம்.
   அ) அமெரிக்க அரசியலமைப்பு ஆ) கனடா அரசியலமைப்பு
   இ) ரஷ்யா அரசியலமைப்பு ஈ) ஐரிஷ் அரசியலமைப்பு

11. வழிகாட்டும் நெறிமுறைகள் எம்முறையில் வகைப்படுத்தப்படுகின்றன?
   அ) தாராளவாதம் மற்றும் கம்யூனிச கொள்கைகள்
   ஆ) சமதர்ம மற்றும் கம்யூனிச கொள்கைகள்
   இ) தாராளவாதம், காந்திய மற்றும் கம்யூனிச கொள்கைகள்
   ஈ) சமதர்ம, காந்திய மற்றும் தாராளக் கொள்கைகள்

12. எந்த பிரிவின் கீழ் நிதிநிலை அவசரநிலையை அறிவிக்க முடியும்?
   அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 356
   இ) சட்டப்பிரிவு 360 ஈ) சட்டப்பிரிவு 368

13. இந்திய அரசியலமைப்பின் எந்த பிரிவில் அரசியலமைப்பு திருத்தம் நடைமுறை குறித்து தரப்பட்டுள்ளது?
   அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 356
   இ) சட்டப்பிரிவு 360 ஈ) சட்டப்பிரிவு 368

14. எந்தக் குழுக்கள் / கமிஷன்கள் மத்திய – மாநில உறவுகள் பற்றி பரிந்துரை செய்தன?
   1) சர்க்காரியா குழு 2) ராஜமன்னார் குழு 3) M.N. வெங்கடாசலையா குழு
   கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு
   அ) 1, 2 & 3 ஆ) 1 & 2 இ) 1 & 3 ஈ) 2 & 3

கூடுதல் வினாக்கள்

15. அரசியலமைப்பு என்ற கொள்கை முதன் முதலில் தோன்றிய நாடு
   அ) இங்கிலாந்து ஆ) சோவியத் யூனியன்
   இ) இந்தியா ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

16. இந்திய அரசியல் நிர்ணய சபை உருவாக்கப்பட்ட ஆண்டு.
அ) 1946 ஆ) 1947 இ) 1950 ஈ) 1948

17. இந்திய அரசியல் நிர்ணய சபையின் தலைவர்
அ) டாக்டர். அம்பேத்கர் ஆ) டாக்டர் இராஜேந்திர பிரசாத்
இ) டாக்டர் மன்மோகன் சிங் ஈ) டாக்டர் இராதா கிருட்டினன்

18. இந்திய அரசியலமைப்பு வரைவுக் குழுவின் தலைவர்
அ) H.C.முகர்ஜி ஆ) V.T.கிருஷ்ணமாச்சாரி
இ) டாக்டர். அம்பேத்கர் ஈ) P.V.இராஜமன்னார்

19. இந்திய குடியரசு தினம்
அ) ஆகஸ்ட் 15 ஆ) ஜனவரி 15
இ) ஆகஸ்ட் 26 ஈ) ஜனவரி 26

20. "இந்திய அரசியலமைப்பின் தந்தை" என அழைக்கப்படுபவர்
அ) மகாத்மா காந்தி ஆ) ஜவகர்லால் நேரு
இ) Dr. B.R.அம்பேத்கர் ஈ) இராஜாஜி

21. வாக்களிக்கும் உரிமையைப் பெற தேவையான அடிப்படை வயது
அ) 20 ஆ) 18 இ) 25 ஈ) 16

22. இந்திய அரசியலமைப்பின் முகவுரை ___________ ன் "குறிக்கோள் தீர்மானத்தின்" அடிப்படையில் அமைந்துள்ளது.
அ) முகமது அலி ஜின்னா ஆ) சர்தார் வல்லபாய் படேல்
இ) ஜவகர்லால் நேரு ஈ) காந்திஜி

23. 'சிட்டிசன்' எனும் சொல் இந்த மொழியிலிருந்து பெறப்பட்டதாகும்.
அ) அரபு ஆ) கிரேக்கம்
இ) பிரெஞ்சு ஈ) இலத்தீன்

24. "இந்தியாவின் மகாசாசனம்" என அழைக்கப்படும் இந்திய அரசியலமைப்பின் பகுதி
அ) பகுதி (ii) ஆ) பகுதி (iii)
இ) பகுதி (iv) ஈ) பகுதி (vi)

25. 'கொத்தடிமை' தடுத்தல் என்பது
அ) சமத்துவ உரிமை ஆ) சுதந்திர உரிமை
இ) கலாச்சார உரிமை ஈ) சுரண்டலுக்கெதிரான உரிமை

26. 'அரசியலமைப்பின் பாதுகாவலன்' என அழைக்கப்படுவது
அ) மாநில சட்ட மன்றம் ஆ) பாராளுமன்றம்
இ) உயர்நீதிமன்றம் ஈ) உச்சநீதிமன்றம்

27. நமது அடிப்படை உரிமைகள் எந்த நாட்டு அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டது?
அ) ஜப்பான் ஆ) ரஷ்யா
இ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஈ) சீனா

28. 1983 ஆம் ஆண்டு சர்க்காரியா குழுவினை அமைத்த பிரதமர்
அ) இந்திரா காந்தி ஆ) இராஜிவ் காந்தி
இ) மன்மோகன் சிங் ஈ) வி.பி. சிங்

29. தமிழ், செம்மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு
அ) 2001 ஆ) 2002
இ) 2003 ஈ) 2004

30. 'சிறிய அரசியலமைப்பு' என அறியப்படும் சட்ட திருத்தப் பிரிவு
அ) 40 ஆ) 42
இ) 44 ஈ) 46

விடைகள்

1. ஈ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக, குடியரசு
2. அ) ஒரு முறை
3. ஆ) ஒற்றை குடியுரிமை
4. இ) இயல்புரிமை
5. இ) சொத்துரிமை
6. ஈ) பெற்றோர்களின் பூர்விக சொத்துகள் அவர்களது பிள்ளைகளுக்குச் செல்லுதல்.
7. ஈ) இந்திய உச்ச நீதிமன்றம்
8. இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை
9. இ) தேசிய அவசர நிலையின் போது குடியரசு தலைவரின் ஆணையினால்
10. இ) ரஷ்யா அரசியலமைப்பு
11. ஈ) சமதர்ம, காந்திய மற்றும் தாராளக் கொள்கைகள்
12. இ) சட்டப்பிரிவு 360
13. ஈ) சட்டப்பிரிவு 368
14. ஆ) 1 & 2
15. ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
16. அ) 1946
17. ஆ) டாக்டர் இராஜேந்திர பிரசாத்
18. இ) டாக்டர். அம்பேத்கர்
19. ஈ) ஜனவரி 26
20. இ) Dr. B.R.அம்பேத்கர்
21. ஆ) 18
22. இ) ஜவகர்லால் நேரு
23. ஈ) இலத்தீன்
24. ஆ) பகுதி (iii)
25. ஈ) சுரண்டலுக்கெதிரான உரிமை
26. ஈ) உச்சநீதிமன்றம்
27. இ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
28. அ) இந்திரா காந்தி
29. ஈ) 2004
30. ஆ) 42

II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. முதன் முதலில் அரசியலமைப்பு எனும் கொள்கை ___________ ல் தோன்றியது.
2. அரசியல் நிர்ணய சபையின் தற்காலிக தலைவராக ___________ தேர்ந்தெடுக்கப்பட்டார்.
3. இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு ___________ .
4. ___________ பேராணைகள் சட்டப்பிரிவு 32ல் குறிப்பிடப்படுகின்றன.
5. இந்திய குடிமக்களுக்கு அடிப்படை கடமைகள் ___________ பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

கூடுதல் வினாக்கள்

6. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அச்சாணியாக விளங்குவது ___________
7. ‘இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை இத்தாலிய பாணியில் கைப்பட எழுதியவர் ___________
8. ______________ என்ற சொல் இந்திய அரசியலமைப்பிற்கு அறிமுகம் அல்லது முன்னுரை என்பதைக் குறிக்கிறது.
9. "அரசியலமைப்பின் திறவுகோல்" என்று குறிப்பிடப்படுவது ___________
10. ___________ என்ற சொற்களுடன் இந்திய அரசியலமைப்பு முகவுரை தொடங்குகிறது.
11. குடியுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு ___________
12. தீண்டாமையை ஒழித்தல் என்பது ___________உரிமை ஆகும்.
13. நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை ___________ எனப்படும்.
14. சட்டத்திற்கு புறம்பாக, ஒருவர் கைது செய்யப்படுவதிலிருந்து பாதுகாக்கும் பேராணை ___________
15. அரசியலமைப்பின் பிரிவு ___________ திருத்தப்பட்டு தொடக்கக் கல்வி, அடிப்படை உரிமையாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

16. இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகள் __________ நாட்டின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டது.
17. சர்தார் ஸ்வரன்சிங் கமிட்டி அமைக்கப்பட்ட ஆண்டு __________
18. இந்தியா முழுமைக்கும் சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்ற மன்றம் __________
19. தற்போது மத்திய அரசு பட்டியலிலுள்ள துறைகளின் எண்ணிக்கை __________
20. மாநில அரசு பட்டியலிலுள்ள துறைகளின் எண்ணிக்கை __________
21. 1967 ஆம் ஆண்டு அலுவலக மொழி திருத்தச் சட்டம் __________ மொழியை அலுவலக மொழியாக காலவரையறையின்றி தொடரலாம் என அறிவித்தது.
22. மாநிலங்கள் தங்கள் தன்னாட்சியை இழந்திடும் வகையில் பயன்படுத்தப்படும் மாநில அவசர நிலை சட்டப்பிரிவு __________
23. இந்தியாவில் முதன்முறையாக குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்ட மாநிலம் __________
24. இதுவரை இந்தியாவில் அறிவிக்கப்படாத அவசர நிலை சட்டம் __________
25. __________ ஆல் மட்டுமே அரசியலமைப்பில் சட்டதிருத்தத்தை கொண்டுவர முடியும்.

விடைகள்

1. அமெரிக்க ஐக்கிய நாடுகள்	2. Dr. சச்சிதானந்த சின்கா	3. நவம்பர் 26, 1949
4. ஐந்து	5. 51 A	6. அரசியலமைப்பு
7. பிரேம் பெஹாரி நரேன் ரைஜடா	8. முகவுரை	9. முகவுரை
10. "இந்திய மக்களாகிய நாம்"	11. 1955	12. சமத்துவ
13. நீதிப் பேராணை	14. ஆட்கொணர்வு நீதிப் பேராணை	15. 45
16. சோவியத் யூனியன்	17. 1976	18. மத்திய நாடாளுமன்றம்
19. 100	20. 61	21. ஆங்கிலம்
22. 356	23. பஞ்சாப்	24. நிதிசார்ந்த அவசர நிலை
25. நாடாளுமன்றம்		

III. பொருத்துக:

பாடநூல் வினா

அ)

1. குடியுரிமைச் சட்டம்	அ. ஜவஹர்லால் நேரு	விடை 1) இ
2. முகவுரை	ஆ. 42 வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம்	2) அ
3. சிறிய அரசியலமைப்பு	இ. 1955	3) ஆ
4. செம்மொழி	ஈ. 1962	4) உ
5. தேசிய அவசரநிலை	உ. தமிழ்	5) ஈ

கூடுதல் வினாக்கள்

ஆ)

1. Dr. சச்சிதானந்த சின்கா	அ. வரைவுக்குழுத் தலைவர்	விடை 1) ஆ
2. Dr. இராஜேந்திர பிரசாத்	ஆ. தற்காலிக தலைவர்	2) ஈ
3. Dr. B.R. அம்பேத்கர்	இ. பிரதமர்	3) அ
4. H.C. முகர்ஜி	ஈ. தலைவர்	4) உ
5. ஜவகர்லால் நேரு	உ. துணைத் தலைவர்	5) இ

குடிமையியல்

இ)	1. தீண்டாமை ஒழித்தல்	அ. கல்வி, கலாச்சார உரிமை	விடை
	2. கொத்தடிமை ஒழிப்பு	ஆ. சமயச் சார்பு உரிமை	1) உ
	3. சிறுபான்மையினரின் மொழி	இ. சுதந்திர உரிமை	2) ஈ
	4. பேச்சுரிமை	ஈ. சுரண்டலுக்கெதிரான உரிமை	3) அ
	5. மத வழிபாடு	உ. சமத்துவ உரிமை	4) இ
			5) ஆ

ஈ)	1. 1946	அ. அலுவலக மொழி திருத்தச் சட்டம்.	விடை
	2. 1969	ஆ. சர்க்காரியா குழு	1) ஈ
	3. 1976	இ. Dr. P.V. இராஜமன்னார் குழு	2) இ
	4. 1983	ஈ. அமைச்சரவை தூதுக்குழு	3) உ
	5. 1967	உ. சர்தார் ஸ்வரன் சிங் கமிட்டி	4) ஆ
			5) அ

IV. குறுகிய விடை தருக.

பாடநூல் வினாக்கள்

1. அரசியலமைப்பு என்றால் என்ன?

- ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து அமைந்துள்ளது என்பதைப் பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு என்பதாகும்.
- அது ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அச்சாணி ஆகும். குறிப்பாக அரசின் நிறுவனக் கட்டமைப்பு பல்வேறு துறைகள் மற்றும் மத்திய, மாநில அரசுகளுக்கிடையே அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் கட்டமைப்புடன் அரசியலமைப்பு சம்பந்தப்பட்டுள்ளது.

2. குடியுரிமை என்பதன் பொருள் என்ன? **PTA**

- சிட்டிசன் (citizen) என்னும் சொல் 'சிவிஸ்' (civis) எனும் இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இதன் பொருள் 'ஒரு நகர அரசில் வசிப்பவர்' என்பதாகும்.
- இந்திய அரசியலமைப்பு இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான ஒற்றை குடியுரிமையை வழங்குகிறது.

3. எத்தனை வகையான அடிப்படை உரிமைகள், இந்திய அரசியலமைப்பால் பட்டியலிடப்படுகின்றன? **PTA**

அடிப்படை உரிமைகள்:

- சமத்துவ உரிமை
- சுதந்திர உரிமை
- சுரண்டலுக்கெதிரான உரிமை
- கல்வி, கலாச்சார உரிமை
- சமயச்சார்பு உரிமை
- அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வுகாணும் உரிமை

4. நீதிப்பேராணை என்றால் என்ன?

- நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப்பேராணை எனப்படும். இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடை செய்ய, நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும்.
- உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்கள் மட்டுமே ஐந்து வகையான நீதிப்பேராணைகளை வெளியிட அதிகாரம் பெற்றுள்ளன.

ஐந்து வகை நீதிப் பேராணைகள்:

- ஆட்கொணர்வு நீதிப் பேராணை
- கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை
- தடையுறுத்தும் நீதிப் பேராணை
- ஆவணக் கேட்பு நீதிப்பேராணை
- தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை.

5. இந்தியாவின் செம்மொழிகள் எவை?

- தமிழ்
- சமஸ்கிருதம்
- தெலுங்கு
- கன்னடம்
- மலையாளம்
- ஒடியா

6. தேசிய அவசரநிலை என்றால் என்ன? **PTA**

- போர், வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதமேந்திய கிளர்ச்சி அல்லது உடனடி ஆபத்து அல்லது அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், குடியரசுத் தலைவர், அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 352 ன் கீழ் அவசரநிலையை அறிவிக்கலாம்.
- போர் அல்லது வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பின் காரணமாக அவசரநிலை அறிவிக்கப்படும் பொழுது அது 'வெளிப்புற அவசர நிலை' எனப்படுகிறது.
- ஆயுதமேந்திய கிளர்ச்சிக் காரணமாக அவசரநிலை அறிவிக்கப்படும்பொழுது அது 'உள்நாட்டு அவசர நிலை' எனப்படுகிறது.
- இந்த வகையான அவசரநிலைகள் 1962, 1971, 1975 ஆகிய ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டன.

7. மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையேயான உறவுகளை மூன்று தலைப்புகளில் பட்டியலிடுக.

- சட்டமன்ற உறவுகள்
- நிர்வாக உறவுகள்
- நிதி உறவுகள்

கூடுதல் வினாக்கள்

8. அரசியலமைப்பின் 'முகவுரை' பற்றி எழுதுக.

- 'முகவுரை' (Preamble) என்ற சொல் அரசியலமைப்பிற்கு அறிமுகம் அல்லது முன்னுரை என்பதைக் குறிக்கிறது. இது அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகள், நோக்கங்கள் மற்றும் இலட்சியங்களை உள்ளடக்கியது.
- இது அரசியலமைப்பின் சுருக்கம் அல்லது சாராம்சத்தைக் கொண்டது. இது பெரும் மதிப்புடன் "அரசியலமைப்பின் திறவுகோல்" என குறிப்பிடப்படுகிறது.

9. குடியுரிமைச் சட்டம் பற்றி குறிப்பு எழுதுக.

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு, 1955 ல் இயற்றப்பட்ட குடியுரிமைச் சட்டம், குடியுரிமை பெறுதல் மற்றும் குடியுரிமை இழத்தல் ஆகியன பற்றி விளக்குகிறது.
- இச்சட்டம் அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தால் எட்டு முறை திருத்தப்பட்டுள்ளது. முதலில், இக்குடியுரிமைச் சட்டம் காமன்வெல்த் குடியுரிமையை வழங்கியது. ஆனால் 2003 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின்படி இவ்வுரிமை நீக்கப்பட்டது.

10. அரசியல் அமைப்பில் திருத்தம் செய்யும் மூன்று வழிகள் யாவை?

- பாராளுமன்றத்தின் எளிய பெரும்பான்மை மூலம் திருத்தம்.
- பாராளுமன்றத்தின் சிறப்பு பெரும்பான்மை மூலம் திருத்தம்.
- பாராளுமன்றத்தின் சிறப்பு பெரும்பான்மை மற்றும் பாதி மாநில சட்டமன்ற ஒப்புதலைப் பெறுவதன் மூலம் திருத்தம்

11. ஒருவர் குடியுரிமையை எவ்வழிகளில் இழக்கிறார்?

- குடிமகன் தாமாக தனது குடியுரிமையை இழத்தல்.
- வேறு ஒரு நாட்டில் குடியுரிமை பெறும் போது, தாமாகவே இந்தியக் குடியுரிமை முடிவுக்கு வந்து விடும்.

- இயல்புரிமையின் மூலம் குடியுரிமை பெற்ற ஒரு குடிமகன், மோசடி செய்து குடியுரிமை பெற்றவர், தவறான பிரதிநிதித்துவம் தந்தவர், உண்மைகளை மறைத்தவர், எதிரி நாட்டுடன் வணிகம் செய்தவர் என்பதை மத்திய அரசு கண்டுபிடித்து அவர் குற்றம் புரிந்தவர் என்று திருப்திபடும் பட்சத்தில் மத்திய அரசு அவரது குடியுரிமையை இழக்கச் செய்யும்.

12. அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் செய்யப்படும் வழிமுறையினை விளக்குக.

- பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும், அரசியலமைப்பு சட்டத்திருத்த மசோதா அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.
- பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் அவையின் ஒட்டுமொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் மற்றும் அவைக்கு வந்து வாக்களித்தவர்களில் 3–ல் 2 பங்குக்குக் குறையாமல் மசோதாவுக்கு வாக்களிக்க வேண்டும்.
- பின் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தபின் மசோதா திருத்தப்பட்டதாக ஏற்றுக் கொள்ளப்படும்.

13. மகாசாசனம் – குறிப்பு வரைக.

- பெரும் முதலாளிகளிடமிருந்து வந்த அழுத்தத்தால், கி.பி 1215 ல் இங்கிலாந்து மன்னர் ஜான் என்பவரால் வெளியிடப்பட்ட உரிமைகள் பட்டயமே மகாசாசனம் எனப்படும். இதுவே, குடிமக்களின் அடிப்படை உரிமைகளுடன் தொடர்புடைய முதல் எழுதப்பட்ட ஆவணமாகும்.

14. உச்சநீதிமன்றம் "அரசியலமைப்பின் பாதுகாவலன்" என்று அழைக்கப்படக் காரணமென்ன?

- ஆட்கொணர்வு நீதிப்பேராணை, கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை, தடையுறுத்தும் நீதிப்பேராணை, ஆவணக் கேட்பு நீதிப் பேராணை மற்றும் தகுதிமுறை வினவும் நீதிப் பேராணை ஆகிய ஆணைகளை வெளியிட்டு மக்களின் உரிமைகளைக் காப்பதினால் உச்சநீதிமன்றம் அரசியலமைப்பின் பாதுகாவலன் என அழைக்கப்படுகிறது.

V. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக. **PTA**

- உலகிலுள்ள எழுதப்பட்ட அனைத்து அரசியலமைப்புகளை விடவும் மிகவும் நீளமானது.
- இதன் பெரும்பாலான கருத்துகள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை.
- இது நெகிழாத்தன்மை கொண்டதாகவும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
- இது கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (மத்திய, மாநில அரசுகள்) ஏற்படுத்துகிறது.
- மாநிலங்களிலும் நாடாளுமன்ற முறையைத் தோற்றுவிக்கிறது.
- இந்தியாவை ஒரு சமயச் சார்பற்ற நாடாக்குகிறது.
- சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
- வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப்படுத்தி 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்தவித பாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது.
- ஒற்றைக் குடியுரிமையை வழங்குகிறது.
- சிறுபான்மையினர், பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் ஆகியோருக்கு சிறப்பு விதிகள் மூலம் சலுகைகள் வழங்க வகை செய்கிறது.

2. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.

i) சமத்துவ உரிமை
ii) சுதந்திர உரிமை
iii) சுரண்டலுக்கெதிரான உரிமை
iv) சமயச்சார்பு உரிமை
v) கல்வி கலாச்சார உரிமை
vi) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை

சமத்துவ உரிமை:

- சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
- மதம், இனம், சாதி, பாலினம் மற்றும் பிறப்பிடம் இவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதைத் தடை செய்தல்.
- பொது வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பளித்தல்.
- தீண்டாமையை ஒழித்தல்.
- இராணுவ மற்றும் கல்விசார் பட்டங்களைத் தவிர மற்ற பட்டங்களை நீக்குதல்.

சுதந்திர உரிமை:

- பேச்சுரிமை, கருத்துத் தெரிவிக்கும் உரிமை.
- அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கு உரிமை, சங்கங்கள், அமைப்புகள் தொடங்க உரிமை, இந்திய நாட்டிற்குள் விரும்பிய இடத்தில் வசிக்கும் மற்றும் தொழில் செய்யும் உரிமை.
- குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கான உரிமை மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.
- வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்குப் பாதுகாப்பு பெறும் உரிமை.
- தொடக்கக்கல்வி பெறும் உரிமை.
- சில வழக்குகளில் கைது செய்து தடுப்புக் காவலில் வைப்பதற்கெதிரான பாதுகாப்பு உரிமை.

சுரண்டலுக்கெதிரான உரிமை:

- கட்டாய வேலை, கொத்தடிமை முறை மற்றும் மனிதத்தன்மையற்ற வியாபாரத்தைத் தடுத்தல்.
- தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தான இடங்களில் குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுத்தல்.

சமயச் சார்பு உரிமை:

- எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை.
- சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை.
- எந்தவொரு மதத்தையும் பரப்புவதற்காக வரி செலுத்துவதற்கெதிரான சுதந்திரம்.
- மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் நடைபெறும் வழிபாடு மற்றும் அறிவுரை நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமலிருக்க உரிமை.

கல்வி கலாச்சார உரிமை:

- சிறுபான்மையினரின் எழுத்து, மொழி மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பு.
- சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை நிறுவி, நிர்வகிக்கும் உரிமை.

அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை:

- தனிப்பட்டவரின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் போது, நீதிமன்றத்தை அணுகி உரிமையைப் பெறுதல்.

3. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை பற்றி எழுதுக.

நீதிப்பேராணை:

- நீதிமன்ற முத்திரையுடன் நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப்பேராணை எனப்படும். இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய, நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும்.
- உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்கள் இரண்டுமே ஐந்து வகையான நீதிப்பேராணைகளை வெளியிட அதிகாரம் பெற்றுள்ளன.

ஐந்து வகையான நீதிப்பேராணைகள்:

- ஆட்கொணர்வு நீதிப் பேராணை,
- கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை,
- தடையுறுத்தும் நீதிப்பேராணை,
- ஆவணக் கேட்பு நீதிப் பேராணை,
- தகுதிமுறை வினவும் நீதிப் பேராணை.

ஆட்கொணர்வு நீதிப்பேராணை:

- சட்டத்திற்குப் புறம்பாக ஒருவர் கைது செய்யப்படுவதிலிருந்து இது பாதுகாக்கிறது.

கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை

- மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனு தொடர்பான பணியினைச் சம்பந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

தடையுறுத்தும் நீதிப்பேராணை:

- ஒரு கீழ் நீதிமன்றம் தனது, சட்ட எல்லையைத் தாண்டி செயல்படுவதைத் தடுக்கிறது.

ஆவணக் கேட்பு நீதிப்பேராணை: (தடை மாற்று நீதிப்பேராணை)

- உயர்நீதிமன்றம், ஆவணங்களை நியாயமான பரிசீலனைக்கு தனக்கோ அல்லது உரிய அதிகாரிக்கோ அனுப்பச் செய்ய கீழ் நீதிமன்றங்களுக்கு இடும் ஆணையாகும்.

தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை:

- இப்பேராணை சட்டத்திற்குப் புறம்பாக, தகாத முறையில் அரசு அலுவலகத்தைக் கைப்பற்றுவதை தடை செய்கிறது.

4. அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

அடிப்படை உரிமைகள்	அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள்
இவை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை.	இவை அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பில் இருந்து பெறப்பட்டது.
அரசாங்கத்தால் கூட இந்த உரிமையை சுருக்கவோ, நீக்கவோ முடியாது.	இவை அரசுக்கு வெறும் அறிவுறுத்தல்களே ஆகும்.
இவற்றை நீதிமன்ற சட்டத்தால் செயற்படுத்த முடியும்.	எந்த நீதிமன்றத்தாலும் கட்டாயப்படுத்த முடியாது.
இவை சட்ட ஒப்புதலைப் பெற்றவை.	இவை தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதலைப் பெற்றவை.

அடிப்படை உரிமைகள்	அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள்
➤ இந்த உரிமைகள் நாட்டின் அரசியல் ஜனநாயகத்தை வலுப்படுத்துகின்றன.	➤ இந்தக் கொள்கைகளைச் செயற்படுத்தும் பொழுது சமுதாய மற்றும் பொருளாதார ஜனநாயகம் உறுதியாகிறது.
➤ இவை இயற்கையான உரிமைகள்.	➤ இவை மனித உரிமைகளைப் பாதுகாக்க வழிவகுக்கிறது.

கூடுதல் வினாக்கள்

5. அடிப்படைக் கடமைகளை விவரி. **PTA**

அடிப்படைக் கடமைகள்:

- ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் அரசியலமைப்பு, அதன் கொள்கைகள், நிறுவனங்கள், தேசியகீதம், தேசியக்கொடி, தேசியச் சின்னங்கள் ஆகியவற்றை மதித்தல்.
- சுதந்திர போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உயரிய நோக்கங்களைப் போற்றி வளர்த்தல்.
- இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றைப் பேணிப் பாதுகாத்தல்.
- தேசப் பாதுகாப்பிற்காகத் தேவைப்படும் பொழுது தேசப் பணியாற்ற தயாராயிருத்தல்.
- சமய, மொழி மற்றும் பிராந்திய அல்லது பகுதி சார்ந்த வேறுபாடுகளை மறந்து, பெண்களைத் தரக்குறைவாக நடத்தும் பழக்கத்தை நிராகரித்து, பெண்களின் கண்ணியத்தைக் காக்கும் எண்ணங்களை மேம்படுத்தி, இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதரத்துவத்தை வளர்த்தல்.
- நமது உயர்ந்த பாரம்பரிய கலப்பு கலாச்சாரத்தை மதித்து பாதுகாத்தல்.
- காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் மற்றும் உயிரினங்கள் அடங்கிய இயற்கைச் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, மேம்படுத்தி அவை வாழும் சூழலை ஏற்படுத்துதல்.
- அறிவியல் கோட்பாடு, மனித நேயம், ஆராய்ச்சி மனப்பான்மை மற்றும் சீர்திருத்தம் ஆகியவற்றை வளர்த்தல்.
- வன்முறையைக் கைவிட்டு பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்.
- தனிப்பட்ட மற்றும் கூட்டுச் செயல்பாடுகள் என அனைத்துச் செயல்பாடுகளிலும் சிறந்தவற்றை நோக்கி செயல்பட்டு, தேசத்தின் நிலையான உயர்ந்த முயற்சி மற்றும் சாதனைக்காக உழைத்தல்.
- 6 முதல் 14 வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்வி பெறும் வாய்ப்பினை வழங்குதல்.

6. மாநில அவசரநிலை – சட்டப்பிரிவு 356 ஐ விளக்குக.

- ஒரு மாநிலத்தில், மாநில அரசால் கட்டுப்படுத்த முடியாத சூழல் ஏற்படும் பொழுது அரசியலமைப்பின் விதிகளுக்கேற்ப ஆளுநர் அறிக்கை அளிக்கும் பொழுது, குடியரசுத் தலைவர் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 356 ன் கீழ் அவசரநிலையை அறிவிக்கலாம்.
- இந்த அவசர நிலை, சட்டப்பிரிவு 352 ன் படி நடைமுறையில் இருந்தாலும் அல்லது தேர்தல் ஆணையம் சட்டமன்றத் தேர்தலை நடத்த உகந்த சூழல் இல்லை என்று சான்றளித்தாலும் மட்டுமே ஓராண்டைத் தாண்டியும் தொடர முடியும். அதிகப்பட்ச அவசரநிலையின் காலம் 3 ஆண்டுகள் இருக்க முடியும்.
- இந்த வகையான அவசரநிலையில் சட்டமியற்றுதல் மற்றும் நிர்வாக செயல்பாடுகளில் மாநிலங்கள் தங்கள் தன்னாட்சியை இழக்கின்றன.

- அவசர நிலை அறிவித்த பிறகு மாநில சட்டமன்றம் முடக்கப்படுகிறது. மாநிலமானது, குடியரசுத் தலைவர் சார்பாக ஆளுநரால் ஆளப்படுகிறது.
- இந்தியாவில் முதன் முறையாக 1951 இல் பஞ்சாப் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது.

7. ஒருவர் எந்தெந்த முறைகளில் குடியுரிமை பெற முடியும்?

பிறப்பின் மூலம்:

- 1950 – ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ இந்தியாவில் பிறந்த அனைவரும் இந்தியக் குடிமக்களாகக் கருதப்படுவர்.

வம்சாவளி மூலம்:

- 1950 ஆம் ஆண்டு 26 அன்றோ அதற்குப் பின்னரோ வெளிநாட்டில் பிறந்த ஒருவரின் தந்தை (அவர் பிறந்த போது) இந்தியக் குடிமகனாக இருக்கும் பட்சத்தில் வெளிநாட்டில் பிறந்த அவர், வம்சாவளி மூலம் இந்தியக் குடியுரிமை பெற முடியும்.

பதிவின் மூலம்:

- ஒருவர் இந்தியக் குடியுரிமை கோரி, பொருத்தமான அங்கீகாரத்துடன் பதிவு செய்வதன் மூலம் இந்தியக் குடியுரிமை பெறலாம்.

இயல்புரிமை மூலம்:

- ஒரு வெளிநாட்டவர், இந்திய அரசிற்கு, இயல்புரிமை கோரி விண்ணப்பிப்பதன் மூலம் அவர், இந்தியக் குடியுரிமை பெறலாம்.

பிரதேச (நாடுகள்) இணைவின் மூலம்:

- பிற பிரதேசங்கள் இந்தியாவுடன் இணையும் போது இந்திய அரசு எவ்வாறு இணையும் பிரதேசங்களின் மக்களைத் தமது மக்களாகக் கருதி அவர்களுக்குக் குடியுரிமை வழங்குகிறது.

அலகு குடிமையியல்

2 மத்திய அரசு



நினைவில் கொள்க

- இந்திய நாட்டின் உயர்ந்த அரசாங்க அமைப்பு **மத்திய அரசு** ஆகும். இதன் தலைமையகம் **புது தில்லியில்** அமைந்துள்ளது.
- மத்திய அரசாங்கம் மூன்று அங்கங்களைக் கொண்டது. அவை **நிர்வாகம்**, **சட்ட மன்றம்**, **நீதித்துறை** என்பனவாகும்.
- மத்திய அரசின் நிர்வாகத் தலைவர் **குடியரசுத் தலைவர்.** அவரே நாட்டின் முதல் குடிமகன் ஆவார்.
- இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் **திரு.இராஜேந்திர பிரசாத்.** முதல் பிரதமர் **திரு.ஜவகர்லால் நேரு.**
- பிரதம அமைச்சர் மற்றும் இதர அமைச்சர்களை நியமிப்பவர் **குடியரசுத் தலைவர்.**
- நாட்டின் உண்மையான தலைவர் **பிரதம அமைச்சர்.** அவர் குடியரசுத் தலைவருக்கும், அமைச்சரவைக்குமிடையே பாலமாக செயல்படுகிறார்.
- அமைச்சரவையின் தலைவர் **பிரதம அமைச்சர்** ஆவார். அவரே அமைச்சரவைக் கூட்டத்தின் தேதி, நிகழ்ச்சி நிரல் (Agenda) குறித்து முடிவு செய்வார்.

- மத்திய அரசின் சட்டம் இயற்றும் அங்கமாகத் திகழ்வது **நாடாளுமன்றம்** ஆகும். இது மூன்று பகுதிகளைக் கொண்டது. அவை குடியரசுத் தலைவர், **மாநிலங்களவை** (ராஜ்ய சபா) மற்றும் **மக்களவை** (லோக் சபா).
- **மாநிலங்களவை** (ராஜ்ய சபா) ஒரு நிரந்தர அவையாகும். அதனைக் கலைக்க முடியாது. **துணைக்குடியரசுத் தலைவர்** இதன் தலைவராவார்.
- தமிழகத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் மக்களவை உறுப்பினர்கள் எண்ணிக்கை **39**, மாநிலங்களவை உறுப்பினர்கள் **18 பேர்.**
- இந்திய அரசாங்கத்தின் மூன்றாவது அங்கம் **நீதித்துறையாகும்.**
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் **உச்சநீதிமன்றம்** ஆகும். இந்திய தலைமை நீதிபதியை நியமனம் செய்பவர் **குடியரசுத் தலைவர்.**
- நாட்டின் உயர்ந்த சட்ட அதிகாரி **அரசின் தலைமை வழக்குரைஞர்** ஆவார். அவர் குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிறார்.
- உச்ச நீதிமன்றத்தின் நிரந்தர தலைமையிடம் **புதுதில்லி** ஆகும்.
- இந்தியாவில் தேர்தல்களை நடத்துவது **இந்திய தலைமைத் தேர்தல் ஆணையமாகும்.**

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. __________ மத்திய அரசின் அரசியலமைப்புத் தலைவர் ஆவார்.
   அ) குடியரசுத் தலைவர் ஆ) தலைமை நீதிபதி
   இ) பிரதம அமைச்சர் ஈ) அமைச்சர்கள் குழு

2. நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் உண்மையான நிர்வாக அதிகாரம் பெற்றவர் யார்?
   அ) இராணுவம் ஆ) பிரதமர்
   இ) குடியரசுத்தலைவர் ஈ) நீதித்துறை

3. ஒரு மசோதாவை நிதி மசோதாவா அல்லது இதர மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றவர்
   அ) குடியரசுத் தலைவர் ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
   இ) நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஈ) லோக் சபாவின் சபாநாயகர்

4. அமைச்சர்கள் குழு ஒட்டு மொத்தமாக இதற்குப் பொறுப்புடையவர்களாவர். **PTA**
   அ) குடியரசுத் தலைவர் ஆ) மக்களவை
   இ) பிரதம அமைச்சர் ஈ) மாநிலங்களவை

5. சட்டமியற்றும் நடவடிக்கைகளில் இந்திய நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவர்
   அ) நாடாளுமன்றத்தின் மூத்த உறுப்பினர் ஆ) மக்களவை சபாநாயகர்
   இ) இந்தியக் குடியரசுத் தலைவர் ஈ) மாநிலங்களவை தலைவர்

6. லோக்சபா தேர்தலில் போட்டியிட தேவையான குறைந்தபட்ச வயது
   அ) 18 வயது ஆ) 21 வயது
   இ) 25 வயது ஈ) 30 வயது

7. இந்திய மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் பெற்றவர் / பெற்ற அமைப்பு **PTA**
   அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதம அமைச்சர்
   இ) மாநில அரசாங்கம் ஈ) நாடாளுமன்றம்

8. கீழ்க்காணும் எந்த விதியின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் நிதி நெருக்கடி நிலையினை அறிவிக்கிறார்?
   அ) சட்டப் பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 360
   இ) சட்டப்பிரிவு 356 ஈ) சட்டப்பிரிவு 365

9. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர்
அ) குடியரசுத் தலைவர் ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
இ) ஆளுநர் ஈ) பிரதம அமைச்சர்

10. பின்வரும் எந்த அடிப்படையில் மாநிலங்களுக்கிடையிலான சிக்கல்களை தீர்க்கும் அதிகாரத்தை உச்ச நீதிமன்றம் பெற்றுள்ளது?
அ) மேல் முறையீடு நீதிவரையறை ஆ) தனக்கேயுரிய நீதிவரையறை
இ) ஆலோசனை நீதிவரையறை ஈ) மேற்கூறியவற்றில் எதுவுமில்லை

11. நீ இந்தியக் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் கீழ்க்கண்ட எந்த முடிவினை எடுப்பாய்?
அ) அமைச்சரவையின் தலைவரை உன்னுடைய விருப்பத்திற்கு நியமிப்பது.
ஆ) இரண்டு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட மசோதாவை மறுபரிசிலனைக்குட்படுத்த கேட்டுக் கொள்வது.
இ) உன்னுடைய விருப்பத்திற்கு பிரதமரை தேர்ந்தெடுப்பது.
ஈ) மக்களவையில் பெரும்பான்மை பெற்ற பிரதமரை பதவி நீக்கம் செய்வது.

கூடுதல் வினாக்கள்

12. இந்திய அரசாங்கத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம்
அ) சென்னை ஆ) மும்பை
இ) கொல்கத்தா ஈ) புது தில்லி

13. இந்தியாவின் பெயரளவு நிர்வாகத் தலைவர்
அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதம அமைச்சர்
இ) சபாநாயகர் ஈ) துணைக்குடியரசுத் தலைவர்

14. குடியரசுத் தலைவராவதற்கு தகுதியான குறைந்தபட்ச வயது
அ) 25 ஆ) 30
இ) 35 ஈ) 40

15. "ராஷ்டிரபதி பவன்" என்பது யாருடைய இல்லம்?
அ) பிரதம மந்திரி ஆ) குடியரசுத் தலைவர்
இ) எதிர்கட்சித் தலைவர் ஈ) முதலமைச்சர்

16. குடியரசுத் தலைவராகத் தேர்வு பெற்றவருக்கு பதவியேற்பு உறுதி மொழி செய்து வைப்பவர்
அ) துணைக் குடியரசுத் தலைவர் ஆ) சபாநாயகர்
இ) பிரதம அமைச்சர் ஈ) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி

17. இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர்
அ) திரு. ராஜேந்திர பிரசாத் ஆ) திரு. ஜாகிர் உசேன்
இ) திரு. வெங்கடராமன் ஈ) திருமதி. பிரதீபா பாட்டீல்

18. தண்டனை பெற்ற ஒருவரின் தண்டனையிலிருந்து விடுவிக்கவும், மன்னிக்கவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கும் சட்டப்பிரிவு
அ) 72 ஆ) 62
இ) 52 ஈ) 42

19. நெருக்கடி நிலையை அறிவிக்கும் அதிகாரம் பெற்றவர்
அ) உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆ) பிரதம அமைச்சர்
இ) குடியரசுத் தலைவர் ஈ) சட்ட அமைச்சர்

20. மத்திய பாதுகாப்புப் படையின் தலைமைத் தளபதி
அ) இராணுவ அமைச்சர் ஆ) முதலமைச்சர்
இ) பிரதம அமைச்சர் ஈ) குடியரசுத் தலைவர்

21. ஒரு மாநில அரசாங்கத்தை முடிவுக்குக் கொண்டுவர குடியரசுத் தலைவர் பயன்படுத்தும் சட்டப்பிரிவு
அ) 356 ஆ) 360
இ) 349 ஈ) 350

22. **நாட்டின் இரண்டாவது உயர்ந்த பதவி**
அ) பிரதம அமைச்சர் ஆ) முதலமைச்சர்
இ) துணைக் குடியரசுத் தலைவர் ஈ) சபாநாயகர்

23. **குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் பதவிகள் ஒரே சமயத்தில் காலியாக இருக்கும் பட்சத்தில், குடியரசுத் தலைவரின் பணிகளைச் செயல்படுத்துபவர்**
அ) உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆ) தலைமைத் தேர்தல் ஆணையர்
இ) அரசின் தலைமை வழக்குரைஞர் ஈ) உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி

24. **இந்தியாவின் முதல் பிரதம அமைச்சர்**
அ) திரு. லால்பகதூர் சாஸ்திரி ஆ) திரு. வி.பி. சிங்
இ) திரு. மொரார்ஜி தேசாய் ஈ) திரு. ஜவகர்லால் நேரு

25. **அமைச்சரவையின் தலைவர்**
அ) பாதுகாப்பு அமைச்சர் ஆ) நிதி அமைச்சர்
இ) பிரதம அமைச்சர் ஈ) சட்ட அமைச்சர்

26. **மத்திய அரசின் சட்டம் இயற்றும் அங்கம்**
அ) சட்டமன்றம் ஆ) நாடாளுமன்றம்
இ) உயர் நீதிமன்றம் ஈ) உச்சநீதி மன்றம்

27. **மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக் காலம்**
அ) ஐந்து ஆண்டுகள் ஆ) ஆறு ஆண்டுகள்
இ) நான்கு ஆண்டுகள் ஈ) ஏழு ஆண்டுகள்

28. **தற்சமயம் இந்திய மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை**
அ) 234 ஆ) 432
இ) 396 ஈ) 545

29. **மத்திய அரசாங்கத்தின் மூன்றாவது அங்கம்**
அ) நீதித்துறை ஆ) நிதித்துறை
இ) சட்டத்துறை ஈ) பாதுகாப்புத் துறை

30. **உச்சநீதி மன்றத்தின் நிரந்தர தலைமையிடம்**
அ) ஐதராபாத் ஆ) புது தில்லி
இ) மும்பை ஈ) ஜெய்ப்பூர்

விடைகள்

1. அ) குடியரசுத் தலைவர்	2. ஆ) பிரதமர்	3. ஈ) லோக் சபாவின் சபாநாயகர்
4. ஆ) மக்களவை	5. ஆ) மக்களவை சபாநாயகர்	6. இ) 25 வயது
7. ஈ) நாடாளுமன்றம்	8. ஆ) சட்டப்பிரிவு 360	9. அ) குடியரசுத் தலைவர்
10. ஆ) தனக்கேயுரிய நீதி வரையறை	11. ஆ) இரண்டு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட மசோதாவை மறுபரிசீலனைக்கு உட்படுத்த கேட்டுக் கொள்வது	12. ஈ) புது தில்லி
13. அ) குடியரசுத் தலைவர்	14. இ) 35	15. ஆ) குடியரசுத் தலைவர்
16. ஈ) உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி	17. அ) திரு. ராஜேந்திர பிரசாத்	18. அ) 72
19. இ) குடியரசுத் தலைவர்	20. ஈ) குடியரசுத் தலைவர்	21. ஆ) 360
22. இ) துணைக் குடியரசுத் தலைவர்	23. அ) உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி	24. ஈ) திரு.ஜவகர்லால் நேரு
25. இ) பிரதம அமைச்சர்	26. ஆ) நாடாளுமன்றம்	27. ஆ) ஆறு ஆண்டுகள்
28. ஈ) 545	29. அ) நீதித்துறை	30. ஆ) புது தில்லி

II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. __________ மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியாது.
2. __________ நாட்டின் உண்மையான தலைவராகவும், நாட்டின் முக்கியச் செய்தி தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.
3. __________ அலுவல் வழியில் மாநிலங்களவையின் தலைவர் ஆவார்.
4. பொதுவாக, குடியரசுத் தலைவர் __________ இனத்திலிருந்து இரண்டு உறுப்பினர்களை மக்களவைக்கு நியமிக்கிறார்.
5. நாடாளுமன்ற இரு அவைகளிலும் உரையாற்றவும், கூட்டத்தொடரில் பங்கு கொள்ளவும் உரிமை பெற்றவர் __________.
6. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது __________.
7. __________ இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் ஆகும்.
8. தற்சமயம் உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி உட்பட நீதிபதிகளின் எண்ணிக்கை __________.

கூடுதல் வினாக்கள்

9. மத்திய சட்டமன்றம் __________ என்று அழைக்கப்படுகிறது.
10. சிம்லாவிலுள்ள குடியரசுத் தலைவர் இல்லம் __________
11. குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் __________
12. மத்திய அரசின் அனைத்து நிர்வாக அதிகாரங்களையும் குடியரசுதலைவருக்கு வழங்குவது __________
13. இந்திய தலைமைக் கணக்கு தணிக்கையாளரை நியமிப்பவர் __________
14. முப்படைகளின் தளபதியை நியமனம் செய்பவர் __________
15. குடியரசுத்தலைவர் ஆண்டுக்கு __________ முறை நாடாளுமன்றத்தைக் கூட்டுகிறார்.
16. குடியரசுத் தலைவரின் அனுமதியில்லாமல் நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்ய முடியாத மசோதா __________
17. நிதி மசோதாவை மக்களவையில் சமர்ப்பிப்பவர் __________
18. ஒவ்வொரு __________ ஆண்டுகளுக்குப் பிறகும் நிதிக்குழு குடியரசுத் தலைவரால் அமைக்கப்படுகிறது.
19. எந்த நீதிமன்றத்திற்கும் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லாதவர் __________
20. நமது பாதுகாப்புப் படையின் தலைமைத்தளபதி என அறியப்படுபவர் __________
21. துணைக்குடியரசுத் தலைவராவதற்கு தேவையான குறைந்தபட்ச வயது __________
22. இந்தியாவின் முதல் துணைக்குடியரசுத் தலைவர் __________
23. மாநிலங்களவையின் தலைவராகச் செயல்படுபவர் __________
24. பிரதம அமைச்சர் மற்றும் அமைச்சர்களின் ஊதியங்களை நிர்ணயிப்பது __________
25. பல்வேறு அமைச்சர்களின் பணிகளை மேற்பார்வையிடுபவர் __________
26. குடியரசுத் தலைவருக்கும், அமைச்சரவைக்கும் இடையே ஒரு பாலமாக செயல்படுபவர் __________
27. நிர்வாகத்தின் மையக்கருவை உருவாக்கும் மூத்த அமைச்சர்களின் முறைசாரா அமைப்பு __________
28. நமது நாடாளுமன்றத்தின் இரு அவைகள் __________ மற்றும் __________
29. __________ அவை ஒரு நிரந்தர அவையாகும். அதனைக் கலைக்க முடியாது.
30. இந்திய நாடாளுமன்றத்தின் புகழ்மிக்க அவை __________

31. மக்களவைக்கு யூனியன் பிரதேசங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை ________

32. "வயது வந்தோர் வாக்குரிமை" யின்படி வாக்களிக்க தகுதியான அடிப்படை வயது ________

33. தமிழக மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை ________ மாநிலங்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை ________

34. குடிமக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பது ________

35. நாட்டின் இறுதி மேல்முறையீட்டு மன்றம் ________

விடைகள்

1. நிதி	2. பிரதம அமைச்சர்	3. துணைக் குடியரசுத் தலைவர்
4. ஆங்கிலோ – இந்தியர்	5. தலைமை வழக்குரைஞர்	6. 65
7. உச்ச நீதிமன்றம்	8. 28	9. நாடாளுமன்றம்
10. ரிட்ரீட் கட்டடம்	11. ஐந்து ஆண்டுகள்	12. அரசியலமைப்புச் சட்டம்
13. குடியரசுத் தலைவர்	14. குடியரசுத் தலைவர்	15. இரண்டு
16. நிதி மசோதா	17. நிதி அமைச்சர்	18. ஐந்து
19. குடியரசுத் தலைவர்	20. குடியரசுத் தலைவர்	21. 35
22. Dr. ராதாகிருஷ்ணன்	23. துணைக் குடியரசுத் தலைவர்	24. நாடாளுமன்றம்.
25. பிரதம அமைச்சர்	26. பிரதம அமைச்சர்	27. கேபினெட்
28. மக்களவை, மாநிலங்களவை	29. மாநிலங்களவை	30. மக்களவை
31. 13	32. 18	33. 39, 18
34. நீதித்துறை	35. உச்ச நீதிமன்றம்	

III. சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. i) மாநிலங்களவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 250.
   ii) இலக்கியம், அறிவியல், கலை, சமூக சேவை ஆகிய துறைகளில் சிறந்த அறிவு மற்றும் அனுபவம் பெற்ற 12 நபர்களை மாநிலங்களவைக்கு குடியரசுத்தலைவர் நியமிக்கிறார்.
   iii) மாநிலங்களவை உறுப்பினராவதற்கு 30 வயதுக்குக் குறைவாக இருத்தல் கூடாது.
   iv) மாநிலங்களவை உறுப்பினர்கள் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
   அ) (ii) மற்றும் (iv) சரியானவை ஆ) (iii) மற்றும் (iv) சரியானவை
   இ) (i) மற்றும் (iv) சரியானவை ஈ) (i), (ii) மற்றும் (iii) சரியானவை

2. i) உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 62.
   ii) மத்திய அரசின் மூன்றாவது அங்கம் நீதித்துறை ஆகும்.
   iii) அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகள் உச்ச நீதிமன்றத்தின் மேல் முறையீட்டு அதிகாரங்களுக்கு உட்பட்டது.
   iv) உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை இந்தியாவின் அனைத்துப் பகுதியிலுள்ள நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்.
   அ) (ii) மற்றும் (iv) சரியானவை ஆ) (iii) மற்றும் (iv) சரியானவை
   இ) (i) மற்றும் (iv) சரியானவை ஈ) (i) மற்றும் (ii) சரியானவை

3. கூற்று (A) :மாநிலங்களவை ஒரு நிரந்தர அவையாகும். இதனைக் கலைக்க முடியாது.
   காரணம் (R) : மாநிலங்களவையில் 1/3 பங்கு உறுப்பினர்கள் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும் ஓய்வு பெறுவர். அக்காலியிடங்களுக்கு புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

அ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரியானது
ஆ) கூற்று சரியானது ஆனால் காரணம் தவறானது
இ) கூற்று, காரணம் இரண்டும் சரி மற்றும் காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமாகும்
ஈ) கூற்று, காரணம் இரண்டும் சரி மற்றும் காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமல்ல

கூடுதல் வினாக்கள்

4. i) நாட்டின் உயர்ந்த அரசாங்க அமைப்பு நாடாளுமன்றம் ஆகும்.
   ii) நமது அரசியலமைப்புச் சட்டம் மக்களாட்சி அடிப்படையிலான அரசாங்கத்தை நமக்கு வழங்குகிறது.
   iii) மத்திய அரசு நான்கு அங்கங்களைக் கொண்டுள்ளது.
   iv) குடியரசுத்தலைவர் இந்தியாவின் முதல் குடிமகனாவார்.
   அ) (i) மற்றும் (iii) சரி　　ஆ) (ii) மற்றும் (iii) சரி
   இ) (i) மற்றும் (iv) சரி　　ஈ) (ii) மற்றும் (iv) சரி

5. i) வாக்காளர் குழுமம் என்பது நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டது ஆகும்.
   ii) குடியரசுத்தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
   iii) குடியரசுத்தலைவர் நாடாளுமன்றத்தின் புதிய கூட்டுக் கூட்டத்தொடரை உரையாற்றி துவக்கி வைக்கிறார்.
   iv) குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னரே அனைத்து மசோதாக்களும் சட்டமாகின்றன.
   அ) (i) மற்றும் (ii) சரி　　ஆ) (iii) மற்றும் (iv) சரி
   இ) (i) மற்றும் (iii) சரி　　ஈ) (ii) மற்றும் (iv) சரி

விடைகள்

1. ஈ) (i), (ii) மற்றும் (iii) சரியானவை
2. அ) (ii) மற்றும் (iv) சரியானவை
3. இ) கூற்று, காரணம் இரண்டும் சரி மற்றும் காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமாகும்
4. ஈ) (ii) மற்றும் (iv) சரி
5. ஆ) (iii) மற்றும் (iv) சரி

IV. பொருத்துக:

பாடநூல் வினா

அ)

1.	சட்டப்பிரிவு 53	அ)	மாநில நெருக்கடி நிலை	1) இ
2.	சட்டப்பிரிவு 63	ஆ)	உள்நாட்டு நெருக்கடி நிலை	2) ஈ
3.	சட்டப்பிரிவு 356	இ)	குடியரசுத் தலைவரின் நிர்வாக அதிகாரங்கள்	3) அ
4.	சட்டப்பிரிவு 76	ஈ)	துணைக் குடியரசுத் தலைவரின் அலுவலகம்	4) உ
5.	சட்டப்பிரிவு 352	உ)	இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் அலுவலகம்	5) ஆ

(கடைசி நெடுவரிசை: விடை)

கூடுதல் வினாக்கள்

ஆ)

1.	குடியரசுத் தலைவர்	அ)	மாநிலங்களவைத் தலைவர்	1) ஆ
2.	துணைக் குடியரசுத்தலைவர்	ஆ)	முப்படைகளின் தலைவர்	2) அ
3.	பிரதம அமைச்சர்	இ)	மக்களவைத் தலைவர்	3) உ
4.	சபாநாயகர்	ஈ)	உயர்ந்த சட்ட அதிகாரி	4) இ
5.	தலைமை வழக்குரைஞர்	உ)	நாட்டின் உண்மையான தலைவர்	5) ஈ

(கடைசி நெடுவரிசை: விடை)

இ) 1. 2	அ) தமிழக ராஜ்யசபா உறுப்பினர்கள்		விடை
2. 13	ஆ) அனைத்து மாநில உறுப்பினர்கள்		1) ஈ
3. 18	இ) தமிழக லோக்சபா உறுப்பினர்கள்		2) உ
4. 39	ஈ) ஆங்கிலோ–இந்தியன் உறுப்பினர்கள்		3) அ
5. 530	உ) யூனியன் பிரதேசங்களின் உறுப்பினர்கள்		4) இ
			5) ஆ

V. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. இந்தியக் குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்? PTA

- இந்தியக் குடியரசுத் தலைவர், ஒற்றை மாற்று வாக்குமூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவத்தின்படி வாக்காளர் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- வாக்காளர் குழுமம் என்பது மாநிலங்களவை மற்றும் மக்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அனைத்து மாநில சட்டமன்ற உறுப்பினர்கள், தேசிய தலைநகர் டெல்லி மற்றும் புதுச்சேரியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

2. மத்திய அரசின் பல்வேறுபட்ட அமைச்சர்களின் வகைகள் யாவை?

1. கேபினெட் (அ) ஆட்சிக்குழு அமைச்சர்கள்
2. இராசாங்க அமைச்சர்கள்
3. துணை அமைச்சர்கள்

3. உச்ச நீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?

- அவர் இந்தியக் குடிமகனாய் இருத்தல் வேண்டும்.
- அவர் ஐந்து ஆண்டுகள் உயர் நீதிமன்ற நீதிபதியாக பணிபுரிந்திருத்தல் வேண்டும்.

(அல்லது)

- அவர் பத்து ஆண்டுகள் உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக செயலாற்றியிருத்தல் வேண்டும்.
- அவர் குடியரசுத் தலைவர் கருத்தின்படி சிறப்புமிக்க சட்ட வல்லுநராய் இருத்தல் வேண்டும்.

4. மக்களவையின் சபாநாயகர் பற்றி குறிப்பு வரைக. PTA

- மக்களவையைத் தலைமை ஏற்று நடத்துபவர் சபாநாயகர் ஆவார்.
- அவர் மக்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- நாடாளுமன்ற மக்களாட்சியில் சபாநாயகரின் பதவி ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது.
- மக்களவை கலைக்கப்பட்டாலும் புதிய சபாநாயகர் தேர்ந்தெடுக்கும் வரை அவர் பதவியில் நீடிப்பார்.
- சபாநாயகர் நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டு கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்.
- அவர் ஒரு மசோதாவை நிதி மசோதாவா அல்லது சாதாரண மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றுள்ளார்.
- பண மசோதாவை தீர்மானிப்பதில் இவருடைய முடிவே இறுதியானது ஆகும்.

5. நிதி மசோதா என்றால் என்ன?

- அரசின் வருமானம் மற்றும் செலவு சம்மந்தமான அல்லது பண சம்மந்தமான மசோதா நிதிமசோதா ஆகும்.
- புதியவரி விதிப்படி, வரிநீக்கம் மற்றும் அரசாங்க கடன் சம்மந்தப்பட்ட மசோதாக்கள் நிதி மசோதா ஆகும்.

6. இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் சிறப்பு அதிகாரங்கள் இரண்டினைப் பட்டியலிடுக.

- இவர் குடியரசுத் தலைவரால் குறிப்பிடப்பட்ட சட்ட விவகாரங்கள் மீது இந்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவார்.
- இந்தியாவிலுள்ள அனைத்து நிதிமன்றங்களிலும் பார்வையிடும் உரிமை இவருக்கு உண்டு.
- நாடாளுமன்ற இரு அவைகளின் செயல்முறைகளிலும் பேசுவதற்கும் பங்குகொள்வதற்கும் இவருக்கு உரிமை உண்டு.

கூடுதல் வினாக்கள்

7. குடியரசுத் தலைவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதிகள் யாவை?

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 35 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- மத்திய அரசிலோ, மாநில அரசிலோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- மக்களவை உறுப்பினராவதற்கான தகுதியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- அவரது பெயரைக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர் குழுவிலுள்ள பத்து வாக்காளர்கள் முன் மொழியவும் மேலும் பத்து வாக்காளர்கள் வழிமொழியவும் வேண்டும்.

8. குடியரசுத் தலைவரின் சிறப்பு அதிகாரங்கள் யாவை?

- சட்டப்பிரிவு 361 (A) ன் படி குடியரசுத் தலைவர் தன்னுடைய பணி மற்றும் அதிகாரத்தை செய்ய வேண்டும் என எண்ணுவதிலும் செயல்படுவதிலும் எந்த நீதிமன்றத்திற்கும் பதில் அளிக்க வேண்டிய அவசியமில்லை என்பதாகும்.

9. துணைக்குடியரசுத் தலைவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதிகள் யாவை?

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 35 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- மத்திய அரசிலோ, மாநில அரசிலோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ ஊதியம் பெறும் பதவிகளில் இருத்தல் கூடாது.
- மாநிலங்களவை உறுப்பினராவதற்கான மற்ற தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

10. பிரதம அமைச்சர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

- மக்களவையின் பெரும்பான்மை கட்சியின் தலைவரை பிரதம அமைச்சராகக் குடியரசுத்தலைவர் நியமிக்கிறார்.
- மக்களவையில் எந்த ஒரு கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை பலம் இல்லையெனில் குடியரசுத் லைவர் எந்தக்கட்சி அமைச்சரவையை அமைக்க முடியுமோ அக்கட்சியின் தலைவரை அரசு அமைக்கக் கூறலாம்.

11. மாநிலங்களவை உறுப்பினராவதற்கான தகுதிகள் யாவை?

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 30 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- அரசாங்கத்தில் ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- நாடாளுமன்றத்தால் அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்படும் தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- மக்களவையிலோ அல்லது எந்தவொரு சட்டமன்றத்திலோ உறுப்பினராக இருத்தல் கூடாது.
- மனநிலை சரியில்லாதவராகவோ அல்லது பெற்ற கடனைத் திருப்பி தர இயலாதவராகவோ இருக்கக் கூடாது.

12. மக்களவை உறுப்பினராவதற்கான தகுதிகள் யாவை?

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 25 வயதிற்குக் குறைவுடையவராய் இருத்தல் கூடாது.
- அவரது பெயர் நாட்டின் ஏதாவது ஒரு பகுதியின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.
- மத்திய, மாநில அரசு அலுவலகங்களில் ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- மனநிலை சரியில்லாதவராகவோ அல்லது பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த இயலாதவராகவோ இருத்தல் கூடாது.

13. துணைக்குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

- துணைக்குடியரசுத் தலைவர் நாடாளுமன்ற இரு அவைகளை உள்ளடக்கிய வாக்காளர் குழுமத்தின் மூலம் மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

14. குடியரசுத் தலைவரை எவ்வாறு பதவி நீக்கம் செய்ய முடியும்?

- குடியரசுத் தலைவர் மீது இராஜதுரோகக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுவதன் மூலம் அவர் பதவி நீக்கம் செய்யப்படலாம்.
- இவருக்கு எதிரான இராஜ துரோகக் குற்றச்சாட்டு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தீர்மானமாக நிறைவேற்றப்பட வேண்டும்.
- மேலும் அவைக்கு வருகை புரிந்தவர்களில் நான்கில் ஒரு பங்குக்குக் குறையாமல் ஆதரவு தெரிவிக்க வேண்டும்.
- அவ்வாறு நிறைவேற்றப்பட்டால் குடியரசுத் தலைவர் பதவி நீக்கம் செய்யப்பட்டதாகக் கருதப்படுவார்.

15. நீதிப்புனராய்வு அல்லது நீதிமன்ற ஆய்வு அதிகாரம் என்றால் என்ன?

- சர்ச்சைக்குரிய ஒரு சட்டத்தினை அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என அறிவிக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திடம் உள்ளது. இதுவே நீதிமன்ற மறுஆய்வு அதிகாரம் எனப்படும்.

VI. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. இந்தியக் குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை விவரி.

குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள்:

நிர்வாக அதிகாரங்கள்
சட்டமன்ற அதிகாரங்கள்
நிதி அதிகாரங்கள்
நீதி அதிகாரங்கள்
இராணுவ அதிகாரங்கள்
இராஜதந்திர அதிகாரங்கள்
நெருக்கடிநிலை அதிகாரங்கள்

நிர்வாக அதிகாரங்கள்:

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் மத்திய அரசின் அனைத்து நிர்வாக அதிகாரங்களையும் குடியரசுத் தலைவருக்கு வழங்குகிறது.
- மத்திய அரசின் ஒவ்வொரு நிர்வாக நடவடிக்கையும் குடியரசுத் தலைவரின் பெயராலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.
- பிரதம அமைச்சரையும், மற்ற அமைச்சர்களையும் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.
- இவர் மாநில ஆளுநர்கள் உயர்நீதி மன்ற மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள், இதர நீதிபதிகள், தலைமைக் கணக்கு தணிக்கையாளர், தேர்தல் ஆணையர்கள், வெளிநாட்டுத்தூதர்கள் போன்றவர்களை நியமனம் செய்கிறார்.

சட்டமன்ற அதிகாரங்கள்:

- பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தின் புதிய கூட்டுத் தொடரை இவர் உரையாற்றி துவக்கி வைக்கிறார்.
- ஒவ்வொரு ஆண்டும் நாடாளுமன்றத்தின் முதல் கூட்டம் இவருடைய உரையுடன் துவங்குகிறது. குடியரசுத் தலைவர் ஆண்டுக்கு இரண்டு முறை நாடாளுமன்றத்தைக் கூட்டுகிறார்.
- நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் இவரது ஒப்புதல் பெற்று சட்டமாகிறது.

- இவருக்கு மக்களவையைக் கலைக்க அதிகாரம் உண்டு.
- இவர் மாநிலங்களவைக்கு 12 உறுப்பினர்களை நியமிக்கிறார்.

நிதி அதிகாரங்கள்:

- நிதி மசோதா, குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்குப் பின்னரே நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும்.
- மத்திய அரசின் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினைக் குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்ற பின்னரே மத்திய நிதி அமைச்சர் மக்களவையில் சமர்ப்பிக்கிறார்.
- இந்திய அவசரகால நிதி குடியரசுத் தலைவரிடம் உள்ளது. அவசர நிதியிலிருந்து அரசின் எதிர்பாராத செலவினங்களை மேற்கொள்ளும் அதிகாரம் அவருக்கு மட்டுமே உண்டு.
- இவரே நிதிக்குழுவை அமைக்கிறார்.

நீதி அதிகாரங்கள்:

- நீதிமன்றத்தால் தண்டனை பெற்ற ஒருவரின் தண்டனையைக் குறைக்கவும், ஒத்தி வைக்கவும், தண்டனையிலிருந்து விடுவிக்கவும் மன்னிப்பு வழங்கவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- இவர் தன்னுடைய இவ்வதிகாரத்தைச் செயல்படுத்துவதில் எந்த நீதிமன்றத்திற்கும் பதில் அளிக்க வேண்டிய அவசியமில்லை.

இராணுவ அதிகாரங்கள்:

- குடியரசுத்தலைவரே முப்படைகளின் தலைமைத் தளபதி ஆவார்.
- மத்திய பாதுகாப்புப் படையின் தலைமைத் தளபதி என்ற அதிகாரம் பெற்ற இவர் இராணுவத்தை வழி நடத்துகிறார்.
- பிற நாடுகள் மீது போர் அறிவிக்கவும் அமைதியை ஏற்படுத்தவும் இவருக்கு அதிகாரம் உண்டு.

இராஜதந்திர அதிகாரங்கள்:

- வெளிநாடுகளுக்கான இந்திய தூதர்களைக் குடியரசுத் தலைவர் நியமிப்பதோடு மட்டுமல்லாமல் அவர் இந்தியாவுக்கான வெளிநாட்டுத் தூதர்களையும் வரவேற்கிறார்.
- வெளிநாடுகளுக்கான அனைத்து உடன்படிக்கைகளும் ஒப்பந்தங்களும் குடியரசுத் தலைவரின் பெயராலேயே நடைபெறுகின்றன.

நெருக்கடி நிலை அதிகாரங்கள்:

- நெருக்கடி நிலையை அறிவிக்கும் அதிகாரத்தை இந்திய அரசியலமைப்புச் சட்டம் குடியரசுத் தலைவருக்கு வழங்கியுள்ளது.
- தேசிய அவசர நிலை, மாநில அவசர நிலை, மற்றும் நிதி சார்ந்த அவசர நிலை என மூன்று வகையான அவசர நிலைகளை இவர் அறிவிக்கிறார்.

2. இந்திய உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் நீதி வரையறைகளை விளக்குக. **PTA**

உச்சநீதிமன்றம்

உச்ச நீதிமன்றம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் ஆகும். இது நாட்டின் முதன்மை நீதிமன்றமாக, சுதந்திரமான, ஒருங்கிணைந்த நீதி அமைப்பாக செயல்படுகிறது. கீழ்க்கண்டவைகள் அதன் செயல்பாடுகளாகும்.

தனக்கேயுரிய நீதி வரையறை:

- உச்ச நீதிமன்றத்திற்கு நேரடியாக வரும் வழக்குகள் தனக்கேயுரிய நீதி வரையறைக்குட்பட்டதாகும். அவை
- (அ) இந்திய அரசிற்கும் ஒரு மாநிலம் அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கும் இடையிலான சிக்கல்கள்.
- (ஆ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கிடையிலான சிக்கல்கள்.
- (இ) அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்கள்.
- அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்திட ஐந்து வகையான நீதிப் பேராணைகளை உச்சநீதிமன்றம் வழங்குகிறது.

மேல்முறையீட்டு நீதி வரையறை:

- உச்சநீதிமன்றமே நாட்டின் இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றமாகும்.
- மாநில உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்குகளை உச்ச நீதிமன்றம் விசாரிக்கின்றது.

ஆலோசனை நீதி வரையறை:

- பொது முக்கியத்துவம் வாய்ந்த எந்தவொரு சட்டம் அல்லது உண்மை மீதான உச்ச நீதிமன்றத்தின் கருத்தினைப் பெற அரசியலமைப்புச் சட்டம் குடியரசுத் தலைவருக்கு அதிகாரத்தினை வழங்குகிறது.

இதர நீதி வரையறை:

- உச்சநீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை இந்தியாவிலுள்ள அனைத்துப் பகுதியிலுள்ள நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்.
- குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று நீதிமன்றத்தின் பொதுவான செயல்முறைகள், வழிமுறைகளை ஒழுங்குப்படுத்தும் விதிகளை உருவாக்க இவற்றிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- உச்சநீதிமன்றம் தனது பணி அமைப்பின் மீதான முழுக்கட்டுப்பாட்டினையும் கொண்டுள்ளது.

நீதிப்புனராய்வு:

- ஒரு சட்டத்தினை அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என அறிவிக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திடம் உள்ளது. இது நீதிப்புனராய்வு எனப்படும்.

3. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை? PTA

- பிரதம அமைச்சர் அமைச்சர்களின் நிலையை அறிந்து அவர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
- தான் தலைமை வகிக்கும் அமைச்சரவைக் கூட்டத்தின் தேதி, நிகழ்ச்சி நிரல் (Agenda) குறித்து முடிவு செய்வார்.
- பிரதம அமைச்சரே அமைச்சரவையின் தலைவர் ஆவார். மற்றவர்கள் அரசின் துறைகளைப் பகிர்ந்து கொள்ளும் சக அமைச்சர்கள் ஆவர்.
- கேபினெட் கூட்டம் நடைபெறாத பொழுது பிரதம அமைச்சர் தனது மூத்த சகாக்கள் இருவர் அல்லது மூவரை இயல்பாகக் கலந்தாலோசிக்கலாம்.
- பிரதம அமைச்சர், பல்வேறு துறைகளின் பணிகளை மேற்பார்வையிடுகிறார்.
- மத்திய அரசின் விவகாரங்கள் மற்றும் சட்டத்திற்கான முன்மொழிவுகள் போன்ற அமைச்சரவையின் அனைத்து முடிவுகளையும் குடியரசுத் தலைவருடன் விவாதிக்கிறார்.
- பிரதம அமைச்சர், குடியரசுத் தலைவருக்கும் அமைச்சரவைக்கும் இடையே பாலமாக செயல்படுகிறார்.
- பிரதம அமைச்சர் நாட்டின் உண்மையான தலைவராவார். அவர் நாட்டின் முக்கிய செய்தித் தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.
- சர்வதேச மாநாடுகளான காமன்வெல்த், அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு, சார்க் நாடுகளின் மாநாடு ஆகியவற்றில் இந்திய நாட்டின் பிரதிநிதியாகப் பிரதமர் பங்கு கொள்கிறார்.

4. நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளைத் திறனாய்வு செய்க.

- இந்திய நாடாளுமன்றம் சட்டமியற்றுதல், நிர்வாகத்தினை மேற்பார்வையிடுதல், வரவு – செலவுத் திட்டத்தினை நிறைவேற்றுதல் பொதுமக்கள் குறைகளைப் போக்குதல், மேலும் வளர்ச்சித் திட்டங்கள், சர்வதேச உறவுகள், உள்நாட்டுக் கொள்கைகள் போன்றவைகளை விவாதித்தல் என பல பணிகளைச் செய்கிறது.
- நாடாளுமன்றம் குடியரசுத் தலைவர் மீதான அரசியல் குற்றச்சாட்டுகளை (Impeachment) விசாரிக்கவும், உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகள், தலைமை தேர்தல் ஆணையர், இந்தியத் தலைமைக் கணக்கு தணிக்கையாளர் ஆகியோரை அரசியலமைப்புச் சட்ட விதிமுறைகளின்படி பதவி நீக்கம் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது.

- நாடாளுமன்றமானது நிர்வாகத்தினைக் கேள்விகள், துணைக்கேள்விகள் கேட்பதன் மூலமாகவும், ஒத்தி வைப்புத் தீர்மானங்கள், விவாதங்கள், தீர்மானங்கள் இயற்றுதல், கண்டனத் தீர்மானம் அல்லது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதித்து அவையில் கொண்டு வருதல் போன்றவைகளின் மூலமாகவும் தங்களது கட்டுப்பாட்டினை செலுத்தி வருகின்றது.
- மாநிலங்களின் எல்லைகளை மாற்றி அமைத்திட நாடாளுமன்றத்திற்கே அதிகாரம் உண்டு.

5. மாநிலங்களவை மற்றும் மக்களவையின் பணிகளைப் பட்டியலிடுக.

மாநிலங்களவையின் பணிகள்:

- எந்தவொரு மசோதாவும் (நிதி மசோதா தவிர) சட்டமாவதற்கு மாநிலங்களவையின் ஒப்புதல் தேவை.
- அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்திற்கான எந்த ஒரு மசோதாவை நிறைவேற்றுவதிலும் மக்களவையைப் போன்றே மாநிலங்களவையும் அதிகாரம் பெற்றுள்ளது.
- மாநிலங்களவை உறுப்பினர்கள் குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்களிக்கும் அதிகாரம் பெற்றுள்ளனர்.
- இவர்கள் குடியரசுத் தலைவர், உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகளின் பதவி நீக்க செயல் முறைகளில் அதிகாரம் பெற்றுள்ளனர்.
- தேசிய முக்கியத்துவம் கருதி மாநில அரசு பட்டியலை உருவாக்கும் அதிகாரத்தை மாநிலங்களவை பெற்றுள்ளது.

மக்களவையின் பணிகள்:

- அனைத்து மசோதாக்களையும் (நிதி மசோதா உட்பட) மக்களவையில் அறிமுகப்படுத்தவும், நிறைவேற்றவும் முடியும்.
- குடியரசுத் தலைவர், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் போன்றவர்களின் பதவி நீக்க விவகாரங்களில் பங்கேற்க மாநிலங்களவையைப் போலவே மக்களவையும் அதிகாரம் பெற்றுள்ளது.
- அரசியலமைப்புச் சட்டதிருத்தத்திற்கான எந்தவொரு மசோதாவை நிறைவேற்றுவதிலும் மாநிலங்களவையைப் போலவே மக்களவையும் சமமான அதிகாரம் பெற்றுள்ளது.
- மக்களவை உறுப்பினர்கள், குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் பெற்றுள்ளனர்.
- நம்பிக்கையில்லாத் தீர்மானம் லோக்சபாவில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும். இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் பிரதம அமைச்சர் உட்பட மற்ற அமைச்சர்களும் தங்களது பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும்.

கூடுதல் வினாக்கள்

6. துணைக் குடியரசுத் தலைவரின் செயல்பாடுகளை விவரி.

- இவர் மாநிலங்களவையின் நடவடிக்கைகளை முறைப்படுத்துகிறார்.
- மாநிலங்களவையின் மரபு, ஒழுங்கு முறைகளைத் தீர்மானிக்கிறார்.
- மாநிலங்களவையின் தீர்மானம் அல்லது கேள்விகளை அனுமதிப்பதை முடிவு செய்கிறார்.
- மிகப்பெரிய பிரச்சனையின் போது அவையின் நடவடிக்கைகளை அவர் ஒத்தி வைக்கவும் அல்லது முடிவுக்குக் கொண்டு வரவும் செய்கிறார்.
- பல்வேறு குழுக்களுக்கு அதனுடைய செயல்பாடுகள் தொடர்பாக அவர் வழிமுறைகளை வகுக்கிறார்.
- குடியரசுத் தலைவர் உடல்நலக் குறைவால் தனது கடமைகளை ஆற்ற இயலாத போதும் அல்லது நாட்டில் இல்லாத போதும் துணைக்குடியரசுத் தலைவர், குடியரசுத் தலைவரின் பணிகளைக் கவனிப்பார்.
- குடியரசுத் தலைவர் பதவியானது அவரின் பதவித்துறப்பு, இறப்பு, இராஜதுரோக மீறிய குற்றச்சாட்டின் மூலம் பதவி நீக்கம் ஆகிய காரணங்களால் காலியாகும் போது துணைக் குடியரசுத் தலைவர் அதிகபட்சமாக ஆறு மாத காலத்திற்கு அவரின் பணிகளைச் செய்வார்.

7. மத்திய அமைச்சர்களின் வகைகளை விவரி.

மத்திய அமைச்சர்களின் வகைகள்:

- கேபினெட் அல்லது ஆட்சிக்குழு அமைச்சர்கள்.
- இராசாங்க அமைச்சர்கள்
- இணை அமைச்சர்கள்.

கேபினெட் அமைச்சர்கள்:

- நிர்வாக மையக்கருவை உருவாக்கும் மூத்த அமைச்சர்களின் முறைசாரா அமைப்பே காபினெட் ஆகும்.
- காபினெட் அரசாங்கத்தின் பாதுகாப்பு, நிதி, வெளியுறவுக் கொள்கைகள், உள்துறை ஆகியவற்றின் முக்கிய முடிவுகளை எடுக்கிறது.
- குடியரசுத் தலைவர் அவசரநிலையைப் பிரகடனம் செய்ய அமைச்சரவை பரிந்துரைக்கிறது.
- அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவர அமைச்சரவை ஒரு கருவியாகச் செயல்படுகிறது.
- நிதி மசோதாவானது அமைச்சரவையில் இருந்து தொடங்கும். பின்னர் குடியரசுத் தலைவர் பரிந்துரையுடன் மக்களவையில் அறிமுகப்படுத்தப்படும்.
- அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையை அமைச்சரவை முடிவு செய்கிறது. மேலும் இது சர்வதேச உடன்படிக்கைகளுக்கும் ஒப்புதல் அளிக்கிறது.
- பல்வேறு நாடுகளுக்கான தூதுவர்களை நியமிப்பதில் அமைச்சரவை முக்கியப் பங்கு வகிக்கிறது.

இராசாங்க அமைச்சர்கள்:

- அமைச்சரவைக் குழுவின் இரண்டாவது வகையினரே இராசாங்க அமைச்சர்கள் ஆவர். அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளின் பொறுப்பு அமைச்சராக செயல்படுகின்றனர்.
- அழைப்பு விடுத்தால் மட்டுமே இவர்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்வர்.

இணை அமைச்சர்கள்:

- அமைச்சரவையில் மூன்றாவதாக, இணை அமைச்சர்கள் உள்ளனர். காபினெட் அமைச்சர்கள் அல்லது இராசாங்க அமைச்சர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகளை செயலாற்றுவதில் இவர்கள் உதவிபுரிகின்றனர்.

விடை காண்க (பொது அறிவு)

1. இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் ________
2. இந்தியாவின் முதல் துணைக்குடியரசுத் தலைவர் ________
3. இந்தியாவின் முதல் பிரதம அமைச்சர் ________
4. தற்போதைய இந்தியக் குடியரசுத் தலைவர் ________
5. தற்போதைய இந்திய துணைக் குடியரசுத் தலைவர் ________
6. தற்போதைய இந்திய பிரதமர் ________
7. தற்போதைய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ________
8. தற்போதைய இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் ________
9. தற்போதைய இந்தியத் தலைமை வழக்குரைஞர் ________
10. தற்போதைய இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் ________
11. தற்போதைய மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் ________
12. தற்போதைய இந்திய ரிசர்வ் வங்கியின் தலைவர் ________
13. தற்போதைய மக்களவைத் தலைவர் ________
14. தற்போதைய தமிழக ஆளுநர் ________
15. தற்போதைய தமிழக முதலமைச்சர் ________

அலகு குடிமையியல்

3 மாநில அரசு

மனவரைபடம்



நினைவில் கொள்க

- தற்போது இந்தியாவில் 29 மாநிலங்கள் 7 யூனியன் பிரதேசங்கள் 25 உயர்நீதி மன்றங்கள் உள்ளன
- மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்புத் தலைவர் **ஆளுநர்** ஆவார்.
- மாநிலத்தின் உண்மையான நிர்வாகி **முதலமைச்சர்** ஆவார். ஆளுநர் மாநிலத்தின் பெயரளவு நிர்வாகியாவார்.
- மாநிலத்தின் உண்மையான அதிகார மையம் **சட்ட மன்றம்** ஆகும்.
- மாநில சட்டமன்றத்திற்கு **அமைச்சரவை** கூட்டுப் பொறுப்பானது ஆகும்.
- மாநில ஆளுநரை நியமனம் செய்பவர் **குடியரசுத் தலைவர்**, மாநில முதலமைச்சரை நியமனம் செய்பவர் **ஆளுநர்** ஆவார்.
- மத்திய–மாநில அரசுகளின் உறவுகளைக் குறித்து ஆராய அமைக்கப்பட்ட குழு **சர்க்காரியா குழு** ஆகும்.

- மாநிலப் பல்கலைக் கழகங்களின் வேந்தராகச் செயல்படுபவர் **ஆளுநர்.**
- மாநில அரசைக் கலைக்கப் பயன்படுத்தப்படும் அரசியலமைப்பு **சட்டப்பிரிவு 356** ஆகும்.
- மாநில அமைச்சர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தி, வழிநடத்தி, இயக்கி அவர்களது நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பவர் **முதலமைச்சர்.**
- ஆளுநருக்கும் அமைச்சர்களுக்குமிடையே செய்தித் தொடர்புகளில் பாலமாக செயல்படுபவர் **முதலமைச்சர்** ஆவார்.
- ஆசிரியர்கள், பட்டதாரிகள் மற்றும் உள்ளாட்சி உறுப்பினர்களை பிரதிநிதிகளாகக் கொண்ட அவை **மாநில சட்ட மேலவை** ஆகும்.
- தற்போது இந்தியாவில் 29 மாநிலங்களில் **7 மாநிலங்களில் மட்டுமே ஈரவை** சட்டமன்றம் (சட்ட கீழவை, சட்ட மேலவை) உள்ளன.
- **சென்னை உயர்நீதிமன்ற வளாகம்** உலகிலேயே இலண்டனுக்கு அடுத்ததாக இரண்டாவது பெரிய நீதித்துறை வளாகமாகும்.

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. மாநில ஆளுநரை நியமிப்பவர்
   - அ) பிரதமர்
   - ஆ) முதலமைச்சர்
   - இ) குடியரசுத் தலைவர்
   - ஈ) தலைமை நீதிபதி

2. மாநில சபாநாயகர் ஒரு ________.
   - அ) மாநிலத் தலைவர்
   - ஆ) அரசின் தலைவர்
   - இ) குடியரசுத் தலைவரின் முகவர்
   - ஈ) மேற்கண்ட எதுவுமில்லை.

3. கீழ்க்காணும் எந்த ஒன்று ஆளுநரின் அதிகாரமல்ல.
   - அ) சட்டமன்றம்
   - ஆ) நிர்வாகம்
   - இ) நீதித்துறை
   - ஈ) தூதரகம்

4. ஆங்கிலோ – இந்தியன் வகுப்பினரிலிருந்து ஒரு பிரதிநிதியை சட்டமன்றத்திற்கு யார் நியமிக்கிறார்?
   - அ) குடியரசுத் தலைவர்
   - ஆ) ஆளுநர்
   - இ) முதலமைச்சர்
   - ஈ) சட்டமன்ற சபாநாயகர்

5. ஆளுநர் யாரை நியமனம் செய்வதில்லை?
   - அ) முதலமைச்சர்
   - ஆ) அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர்
   - இ) மாநில தலைமை வழக்குரைஞர்
   - ஈ) உயர்நீதிமன்ற நீதிபதிகள்

6. மாநில முதலமைச்சரை நியமிப்பவர்
   - அ) சட்டமன்றம்
   - ஆ) ஆளுநர்
   - இ) குடியரசுத் தலைவர்
   - ஈ) சட்டமன்ற சபாநாயகர்

7. அமைச்சரவையின் தலைவர்
   - அ) முதலமைச்சர்
   - ஆ) ஆளுநர்
   - இ) சபாநாயகர்
   - ஈ) பிரதம அமைச்சர்

8. சட்ட மேலவை என்பது
   - அ) 5 ஆண்டுகள் பதவிகாலம் கொண்டது
   - ஆ) 6 ஆண்டுகள் பதவிகாலம் கொண்டது
   - இ) நிரந்தர அவை ஆகும்
   - ஈ) 4 ஆண்டுகள் பதவிகாலம் கொண்டது

9. மேலவை உறுப்பினராவதற்கு குறைந்த பட்ச வயது
   - அ) 25 வயது
   - ஆ) 21 வயது
   - இ) 30 வயது
   - ஈ) 35 வயது

PTA

10. மேலவை உறுப்பினர்கள்
   அ) சட்டமன்ற கீழவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
   ஆ) பொதுவாக நியமிக்கப்படுவார்கள்
   இ) உள்ளாட்சி அமைப்புகள், பட்டதாரிகள், ஆசிரியர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிறரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
   ஈ) மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

11. கீழ்க்காணும் மாநிலங்களில் எந்த ஒன்று ஈரவை சட்டமன்றத்தைப் பெற்றிருக்கவில்லை?
   அ) ஆந்திரப் பிரதேசம் ஆ) தெலுங்கானா
   இ) தமிழ்நாடு ஈ) உத்திரப்பிரதேசம்

12. இந்தியாவில் முதன்முதலில் உயர்நீதிமன்றங்கள் தொடங்கப்பட்ட இடங்கள்
   அ) கல்கத்தா, பம்பாய், சென்னை ஆ) டெல்லி மற்றும் கல்கத்தா
   இ) டெல்லி, கல்கத்தா, சென்னை ஈ) கல்கத்தா, சென்னை, டெல்லி

13. கீழ்க்காணும் எந்த மாநிலங்கள் பொதுவான உயர்நீதிமன்றத்தைப் பெற்றுள்ளன?
   அ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆ) கேரளா மற்றும் தெலுங்கானா
   இ) பஞ்சாப் மற்றும் ஹரியானா ஈ) மகாராஷ்டிரா மற்றும் குஜராத்

கூடுதல் வினாக்கள்

14. ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு மட்டும் சிறப்பு அந்தஸ்து வழங்கும் சட்டப்பிரிவு
   அ) 152 ஆ) 237 இ) 370 ஈ) 356

15. மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்புத் தலைவர்
   அ) குடியரசுத் தலைவர் ஆ) ஆளுநர்
   இ) முதலமைச்சர் ஈ) சபாநாயகர்

16. மத்திய மாநில அரசுகளின் உறவுகளைக் குறித்து ஆராய அமைக்கப்பட்ட குழு
   அ) சர்க்காரியா குழு ஆ) விஸ்வேஸ்வரய்யா குழு
   இ) மண்டல் குழு ஈ) அமைச்சரவைக் குழு

17. மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரியைப் பணி நீக்கம் செய்ய அதிகாரம் பெற்றிருப்பவர்
   அ) முதலமைச்சர் ஆ) சட்ட அமைச்சர்
   இ) ஆளுநர் ஈ) குடியரசுத் தலைவர்

18. மாநிலப் பல்கலைக்கழகங்களின் வேந்தர் PTA
   அ) துணைக் குடியரசுத் தலைவர் ஆ) ஆளுநர்
   இ) முதலமைச்சர் ஈ) கல்வி அமைச்சர்

19. மாநிலத்தில் அவசர சட்டத்தைப் பிறப்பிக்க பயன்படுத்தும் சட்டப்பிரிவு
   அ) 213 ஆ) 313 இ) 413 ஈ) 513

20. உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியை நியமனம் செய்பவர்
   அ) உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆ) ஆளுநர்
   இ) குடியரசுத் தலைவர் ஈ) துணைக் குடியரசுத் தலைவர்

21. முதலமைச்சரின் பதவிக்காலம்
   அ) 6 ஆண்டுகள் ஆ) 5 ஆண்டுகள் இ) 7 ஆண்டுகள் ஈ) 4 ஆண்டுகள்

22. தமிழகத்தின் முதல் முதலமைச்சர் (1947–1949)
   அ) திரு O.P. இராமசாமி ஆ) திரு P.S. குமாரசாமி
   இ) திரு C. இராஜாஜி ஈ) திரு K. காமராஜர்

23. மாநில அமைச்சரவையின் தலைவர்
   அ) ஆளுநர் ஆ) சட்ட அமைச்சர் இ) முதலமைச்சர் ஈ) நிதி அமைச்சர்

24. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழக சட்ட மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை
   அ) 235 ஆ) 234 இ) 432 ஈ) 233

25. நாடாளுமன்ற சட்டத்தின்மூலம் 36 சட்ட மேலவை உறுப்பினர்களைக் கொண்ட மாநிலம்
அ) குஜராத் ஆ) ஆந்திரப்பிரதேசம் இ) கேரளா ஈ) காஷ்மீர்

26. தமிழ் நாட்டில் சட்டமேலவை நீக்கப்பட்ட ஆண்டு
அ) 1986 ஆ) 1985 இ) 1984 ஈ) 1983

27. சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க கடமைப்பட்டவர்
அ) சபாநாயகர் ஆ) துறை அமைச்சர்
இ) ஆளுநர் ஈ) துணை நிலை ஆளுநர்

28. சென்னை உயர்நீதி மன்றம் அமைக்கப்பட்ட ஆண்டு
அ) 1885 ஆ) 1875 இ) 1862 ஈ) 1882

29. உலகின் இரண்டாவது பெரிய நீதித்துறை வளாகம் அமைந்துள்ள இடம்
அ) புதுதில்லி ஆ) மும்பை இ) கொல்கத்தா ஈ) சென்னை

30. இந்தியாவிலுள்ள உயர்நீதி மன்றங்களின் எண்ணிக்கை
அ) 29 ஆ) 30 இ) 25 ஈ) 27

விடைகள்

1. இ) குடியரசுத் தலைவர்	2. ஈ) மேற்கண்ட எதுவுமில்லை	3. ஈ) தூதரகம்
4. ஆ) ஆளுநர்	5. ஈ) உயர்நீதிமன்ற நீதிபதிகள்	6. ஆ) ஆளுநர்
7. அ) முதலமைச்சர்	8. ஆ) 6 ஆண்டுகள் பதவிகாலம் கொண்டது / இ) நிரந்தர அவை ஆகும்	9. இ) 30 வயது
10. இ) உள்ளாட்சி அமைப்புகள், பட்டதாரிகள், ஆசிரியர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிறரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.	11. இ) தமிழ்நாடு	12. அ) கல்கத்தா, பம்பாய், சென்னை
13. இ) பஞ்சாப் மற்றும் ஹரியானா	14. இ) 370	15. ஆ) ஆளுநர்
16. அ) சர்க்காரியா குழு	17. ஈ) குடியரசுத் தலைவர்	18. ஆ) ஆளுநர்
19. அ) 213	20. இ) குடியரசுத் தலைவர்	21. ஆ) 5 ஆண்டுகள்
22. அ) திரு. O.P. இராமசாமி	23. இ) முதலமைச்சர்	24. ஆ) 234
25. ஈ) காஷ்மீர்	26. அ) 1986	27. ஆ) துறை அமைச்சர்
28. இ) 1862	29. ஈ) சென்னை	30. இ) 25

II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. ஆளுநர் தனது இராஜினாமா கடிதத்தை __________ இடம் கொடுக்கிறார்.
2. சட்டமன்ற உறுப்பினர்கள்(MLAs) __________ ஆல் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
3. __________ தமிழகத்தின் முதல் பெண் ஆளுநர் ஆவார்.
4. __________ மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களின் வேந்தராக செயல்படுகிறார்.
5. ஏழாவது அரசியலமைப்பு சட்டத் திருத்தம் __________ இரண்டு அல்லது மேற்பட்ட மாநிலங்களுக்கு பொதுவான உயர்நீதிமன்றத்தை அமைக்க நாடாளுமன்றத்திற்கு அங்கீகாரம் அளித்தது.
6. அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் __________ ஆல் மட்டுமே பணிநீக்கம் செய்ய முடியும்.

கூடுதல் வினாக்கள்

7. நமது தேசியத் தலைநகராக விளங்குவது ________.
8. மாநில ஆளுநரின் நிர்வாக அதிகாரத்தைப் பற்றி கூறும் சட்டப்பிரிவு ________.
9. ஆளுநராகத் தேவையான குறைந்தபட்ச வயது ________.
10. சட்டமன்ற கூட்டத்தைக் கூட்டவும், ஒத்திவைக்கவும் சட்டமன்றத்தைக் கலைக்கவும் உரிமை பெற்றிருப்பவர் ________.
11. மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு மசோதாவும் ________ கையொப்பமிட்ட பின்னரே சட்டமாகும்.
12. ஆளுநரின் முன் அனுமதியுடன் தான் ________ மசோதாவை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியும்.
13. கீழ் நீதிமன்றங்களின் நீதிபதிகளை நியமனம் செய்பவர் ________.
14. மாநிலத்தின் பெயரளவு நிர்வாகி ________, உண்மையான நிர்வாகி ________.
15. அமைச்சரவைக் கூட்டத்தை தலைமை ஏற்று நடத்தி முடிவுகளை எடுப்பவர் ________
16. ஆளுநருக்கும் அமைச்சர்களுக்குமிடையே செய்தித் தொடர்புகளில் முதன்மையாக விளங்குபவர் ________.
17. ________ மாநில சட்டமன்றத்திற்கு கூட்டுப் பொறுப்பானது ஆகும்.
18. சட்டப்பிரிவு ________ ஆளுநரால் முதலமைச்சர் நியமிக்கப்படுவதைக் கூறுகிறது.
19. சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பவர்கள் ________.
20. ________ என்பது ஒரு நிரந்தர அவையாகும்.
21. மாநிலத்தின் நிதி நிலையைக் கட்டுப்படுத்துவது ________ ஆகும்.
22. ஈரவைச் சட்டமன்றத்தில் அதிக அதிகாரங்களுடன் விளங்கும் அவை ________.
23. வடகிழக்கு ஏழு மாநிலங்களுக்கும் பொதுவான நீதிமன்றம் அமைந்துள்ள இடம் ________.
24. உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பவர் ________.
25. கீழ் நீதி மன்றங்களுக்கு உயர்நீதி மன்றம் இடும் ஆணை ________.

விடைகள்

1. குடியரசுத் தலைவர்	2. மக்களால்	3. பாத்திமா பீவி
4. ஆளுநர்	5. 1956	6. குடியரசுத் தலைவர்
7. புதுடெல்லி	8. 154	9. 35
10. ஆளுநர்	11. ஆளுநர்	12. பண மசோதா (நிதி மசோதா)
13. ஆளுநர்	14. ஆளுநர், முதலமைச்சர்	15. முதலமைச்சர்
16. முதலமைச்சர்	17. அமைச்சரவை	18. 164 (1)
19. சட்டமன்ற உறுப்பினர்கள்	20. சட்ட மேலவை	21. சட்ட மன்றம்
22. கீழவை	23. கவுகாத்தி	24. குடியரசுத்தலைவர்
25. கட்டளையுறுத்தும் நீதிப் பேராணை		

III. பொருத்துக:

பாடநூல் வினா

அ)

		விடை
1. ஆளுநர்	அ) அரசாங்கத்தின் தலைவர்	1) ஆ
2. முதலமைச்சர்	ஆ) மாநில அரசின் தலைவர்	2) அ
3. அமைச்சரவை	இ) தீர்ப்பாயங்கள்	3) ஈ
4. மேலவை உறுப்பினர்	ஈ) சட்டமன்றத்திற்குப் பொறுப்பானவர்கள்	4) உ
5. ஆயுதப் படையினர்	உ) மானியங்களுக்கு வாக்களிக்க முடியாது	5) இ

கூடுதல் வினாக்கள்

			விடை
ஆ) 1. திரு. C.N. அண்ணாதுரை	அ)	1977 – 1987	1) இ
2. திரு. K. காமராஜர்	ஆ)	1991 – 1996	2) உ
3. திரு. M. G. இராமச்சந்திரன்	இ)	1967 – 1969	3) அ
4. திரு. M. கருணாநிதி	ஈ)	2006 – 2011	4) ஈ
5. செல்வி. J. ஜெயலலிதா	உ)	1954 – 1963	5) ஆ

			விடை
இ) 1. சட்டப்பிரிவு – 164 (1)	அ)	ஆளுநரின் அவசரகால அதிகாரம்	1) உ
2. சட்டப்பிரிவு – 361 (1)	ஆ)	ஆளுநர் பதவிக்குத் தேவையான தகுதிகள்	2) ஈ
3. சட்டப்பிரிவு – 356	இ)	ஆளுநரின் நிர்வாக அதிகாரம்	3) அ
4. சட்டப்பிரிவு – 157	ஈ)	ஆளுநரின் சிறப்பு உரிமைகள்	4) ஆ
5. சட்டப்பிரிவு – 154	உ)	ஆளுநரால் முதலமைச்சர் நியமனம்	5) இ

IV. சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. i) இந்தியாவில் சில மாநிலங்கள் மட்டும் சட்டமேலவையைப் பெற்றுள்ளன.
   ii) மேலவையின் சில உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.
   iii) மேலவையின் சில உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
   அ) (ii) & (iv) சரி ஆ) (iii) & (iv) சரி
   இ) (i) & (ii) சரி ஈ) (i), (ii) & (iii) சரி

2. கூற்று(A) : மாநில சட்டமன்றத்திற்கு சட்ட அதிகார வரம்பு உண்டு.
   காரணம்(R) : குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் மட்டுமே மாநிலப் பட்டியலிலுள்ள சில மசோதாக்களைச் சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யலாம்.
   அ) (A) தவறு ஆனால் (R) சரி
   ஆ) (A) சரி ஆனால் (R) தவறு
   இ) (A) மற்றும் (R) சரி மேலும் (R), (A) வுக்கான சரியான விளக்கமாகும்.
   ஈ) (A) மற்றும் (R) சரி மேலும் (R), (A) வுக்கான சரியான விளக்கமல்ல.

கூடுதல் வினாக்கள்

3. i) மாநில அரசு வழக்குரைஞரின் ஊதியத்தை முதலமைச்சர் நிர்ணயம் செய்கிறார்.
   ii) மாநில ஆளுநரை குடியரசுத்தலைவரால் மட்டுமே பணிநீக்கம் செய்ய முடியும்
   iii) ஆளுநர் ஆங்கிலோ – இந்தியன் வகுப்பினரிலிருந்து ஓர் உறுப்பினரை மாநில சட்டமன்றத்திற்கு நியமனம் செய்கிறார்.
   iv) அவசரச் சட்டத்தை எந்த நேரமும் ஆளுநர் திரும்பப் பெறலாம்.
   அ) (i) மற்றும் (ii) சரி ஆ) (i), (ii), (iii) சரி
   இ) (i), (ii), (iv) சரியானவை ஈ) (ii), (iii), (iv) சரி

4. i) முதலமைச்சர் தனது அமைச்சரவையை மாற்றி அமைக்க அதிகாரம் பெற்றவராவார்.
   ii) முதலமைச்சர் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரை நியமிக்கிறார்.
   iii) முதலமைச்சர் அமைச்சரவையின் குழப்பத்தைத் தனது இராஜினாமா மூலம் முடித்து வைக்கிறார்
   iv) முதலமைச்சர் சட்டமன்றத்தில் அரசின் கொள்கைகளை அறிவிக்கிறார்.
   அ) (i), (iii), (iv) சரி ஆ) (ii) மற்றும் (iv) சரி,
   இ) (i), மற்றும் (iii) சரியானவை ஈ) (iii), மற்றும் (iv) சரியானவை

5. கூற்று : (A) முதலமைச்சரின் பதவிக்காலம் நிர்ணயிக்கப்பட்ட ஒன்றல்ல
காரணம் : (R) சட்டமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவு உள்ளவரை ஒருவர் முதலமைச்சராக நீடிக்கலாம்

அ) கூற்று சரி, காரணம் தவறு
ஆ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல
இ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்
ஈ) கூற்று தவறு, காரணம் சரி

விடைகள்

1 இ) (i) & (ii) சரி
2 ஆ) (A) சரி ஆனால் (R) தவறு
3 ஈ) (ii), (iii), (iv) சரி
4 அ) (i), (iii), (iv) சரி
5 இ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்

V. சுருக்கமாக விடையளி:

பாடநூல் வினாக்கள்

1. இந்திய மாநிலங்களிலிருந்து ஜம்மு – காஷ்மீர் எவ்வாறு வேறுபடுகிறது?

- இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 370 ஜம்மு–காஷ்மீர் மாநிலத்திற்கு மட்டும் சிறப்பு அந்தஸ்து வழங்கியுள்ளது
- ஜம்மு – காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும், "ஜம்மு – காஷ்மீர் அரசியலமைப்பு" 1957 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது.
- இந்திய அரசியலமைப்பின் அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் மற்றும் அடிப்படை உரிமைகள் ஜம்மு – காஷ்மீர் மாநிலத்திற்குப் பொருந்தாது.
- இந்திய அரசியலமைப்பு நீக்கிய அடிப்படை உரிமைகளில் ஒன்றான சொத்துரிமை ஜம்மு – காஷ்மீரில் நடைமுறையில் உள்ளது.

2. மாநில ஆளுநரின் முக்கியத்துவம் என்ன?

- மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்புத் தலைவர் ஆளுநர் ஆவார். ஆளுநரின் பெயரில் மாநில நிர்வாகம் செயல்படுகிறது.
- மாநில சட்டமன்றமோ அல்லது உயர்நீதி மன்றமோ ஆளுநரை பணி நீக்கம் செய்ய முடியாது.
- இந்திய அரசியலமைப்பு, மாநில நிர்வாகத்தின் அனைத்து அதிகாரங்களையும் ஆளுநருக்கு வழங்குகிறது.
- ஆளுநர் சட்ட மன்றத்தைக் கூட்டவும், சட்டமன்றத்தைக் கலைக்கவும் உரிமை பெற்றுள்ளார்.
- மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு மசோதாவும் ஆளுநர் கையொப்பம் இட்டால் மட்டுமே சட்டமாகும்.
- மாநில அரசைக் கலைக்க இவர் குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்யலாம்.
- குடியரசுத் தலைவரின் ஆட்சியின் போது மாநிலத்தை ஆளுநர் நிர்வாகம் செய்கிறார்.

3. ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் என்ன? PTA

- அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 35 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
- நாடாளுமன்ற உறுப்பினராகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினராகவோ இருத்தல் கூடாது. அவ்வாறு இருப்பின் அவர் ஆளுநராக பதவியேற்கும் பொழுது தாமாகவே அப்பதவி காலியாகிவிடும்.
- அவர், இலாபம் தரும் எந்தத் தொழிலிலும் ஈடுபடக்கூடாது.

4. உயர்நீதிமன்றத்தின் தனக்கே உரிய நீதிவரையறை அதிகாரங்கள் யாவை?

- சென்னை, மும்பை, கொல்கத்தா நீதிமன்றங்கள் தங்களுக்கான நீதிவரையறை அதிகாரங்களுடன் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளன.
- முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள், உயில், திருமணம் சார்ந்த வழக்குகள் மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் ஆகியவற்றை மட்டும் நேரடியாக விசாரிக்கும் அதிகாரத்தை இவை பெற்றுள்ளன.
- மாகாண நீதிமன்றங்கள் தன் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ரூபாய் 2000 மற்றும் அதற்கு மேற்பட்ட தொகை மதிப்புடைய குற்றவியல் வழக்குகளை தனக்கே உரிய நீதிவரையறையைப் பயன்படுத்தி மாகாண நீதிபதிகள் விசாரிக்க முடியும்.

5. உயர் நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரங்கள் பற்றி நீ புரிந்து கொண்டதென்ன?

- உயர் நீதிமன்றங்கள் தங்களிடம் வரும் மேல்முறையீட்டு வழக்குகளையும் கீழ் நீதிமன்றங்களிலிருந்து வரும் மேல்முறையீட்டு வழக்குகளையும் (உரிமையியல், குற்றவியல்) விசாரிக்கின்றன.
- நாட்டின் இராணுவ தீர்ப்பாயங்களின் கீழ்வரும் ஆயுதம் சார்ந்த வழக்குகளை விசாரிக்க இவைகளுக்கு அதிகாரமில்லை.

கூடுதல் வினாக்கள்

6. சர்க்காரியா குழு ஆளுநர் நியமனம் குறித்து வழங்கிய ஆலோசனைகள் யாவை?

- மாநில சட்டமன்ற குழுவால் தயாரிக்கப்பட்ட பட்டியலிலிருந்து (அல்லது)
- முதலமைச்சரின் ஒப்புதலுடன் மாநில அரசால் தயாரிக்கப்படும் பட்டியலிலிருந்து (அல்லது)
- முதலமைச்சருடன் நடத்தப்படும் கலந்துரையாடல் ஆகியவற்றின் மூலம் ஆளுநர் நியமனம் நடைபெறும் என்பதாகும்.

7. முதலமைச்சர் எந்தெந்த அலுவலர்களின் நியமனங்கள் தொடர்பாக ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறார்?

- மாநில அரசு வழக்குரைஞர்
- மாநிலத் தேர்தல் ஆணையர்
- அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
- மாநில திட்டக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
- மாநில நிதிக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

8. ஈரவை சட்டமன்றங்களைக் கொண்டுள்ள மாநிலங்கள் யாவை?

- பீகார்
- கர்நாடகா
- மகாராஷ்டிரா
- உத்திரப்பிரதேசம்
- ஆந்திரபிரதேசம்
- தெலுங்கானா
- ஜம்மு–காஷ்மீர்

9. சட்ட மேலவை பற்றி குறிப்பு வரைக

- சட்ட மேலவை என்பது மாநில சட்ட மன்றத்தின் மேலவை ஆகும். இது ஒரு நிரந்தர அவையாகும்.
- சட்ட மேலவை உறுப்பினர்களின் பதவிக் காலம் 6 ஆண்டுகள் ஆகும். ஒவ்வொரு இரண்டு ஆண்டிற்கும் அதில் மூன்றில் ஒரு பங்கு (1/3) உறுப்பினர்கள் ஓய்வு பெறுவர்.
- இதன் உறுப்பினர்கள் மறைமுகத் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- உறுப்பினர்களின் எண்ணிக்கை அம்மாநில சட்டப்பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்குக்கு மிகாமலும், குறைந்தபட்ச எண்ணிக்கை 40 க்கு குறையாமலும் இருக்க வேண்டும்.

- சட்ட மேலவை உறுப்பினர்கள் மாநில சட்ட மன்றத்தால் அவ்வப்போது நிறைவேற்றப்படும் சட்டங்கள் மூலம் தங்களது ஊதியம் மற்றும் படிகளைப் பெறுகின்றனர்.
- இந்தியாவின் 29 மாநிலங்களில் 7 மாநிலங்களில் மட்டுமே சட்டமேலவை உள்ளது.

10. மாநில சட்ட மேலவை உறுப்பினராவதற்குரிய தகுதிகள் யாவை?

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 30 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
- தெளிவான மனநிலை உடையவராக இருத்தல் வேண்டும்.
- பெற்ற கடனைத் திரும்ப செலுத்த முடியாதவராக இருத்தல் கூடாது.
- எந்த மாநிலத்தில் போட்டியிடுகிறாரோ அம்மாநில வாக்காளர் பட்டியலில் அவர் பெயர் இடம் பெற்றிருக்க வேண்டும்.

11. சட்டமேலவையின் உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?

- மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்புகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- பன்னிரெண்டில் ஒரு பங்கு (1/12) உறுப்பினர்கள் பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- பன்னிரெண்டில் ஒரு பங்கு (1/12) உறுப்பினர்கள் பட்டதாரி ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- மூன்றில் 1 பங்கு (1/3) உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- ஆறில் ஒரு பங்கு (1/6) உறுப்பினர்கள் கலை, இலக்கியம், அறிவியல், சமூக சேவை மற்றும் கூட்டுறவு இயக்கம் இவற்றில் சிறந்து விளங்குபவர்களை ஆளுநர் நேரடியாக நியமனம் செய்கிறார்.

12. ஆளுநரின் சிறப்புரிமைகள் யாவை?

- ஆளுநர் அவரால் செய்யப்பட வேண்டியது என்ன என்பது குறித்து எந்த நீதிமன்றத்திற்கும் பதிலளிக்க வேண்டியதில்லை.
- ஆளுநரின் பதவிக் காலத்தில் அவர் மீது குற்றவியல் நடவடிக்கைகளை அவருக்கு எதிராக எந்த நீதிமன்றத்திலும் தொடர முடியாது.
- ஆளுநரின் பதவிக் காலத்தில் அவர் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தவோ அல்லது அவரைக் கைது செய்யவோ எந்த நீதிமன்றத்திலிருந்தும் உத்தரவு பிறப்பிக்க முடியாது.
- மாநில ஆளுநருக்கு எதிராக உரிமையியல் வழக்குகளைத் தொடர முடியாது.

13. அவசர சட்டங்கள் என்றால் என்ன?

- மாநில சட்டமன்றம் நடைபெறாத பொழுது ஆளுநர் அவசர சட்டத்தைப் பிறப்பிக்கலாம். ஆனால், அந்த சட்டம் ஆறு மாதத்திற்குள் மாநில சட்ட மன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

VI. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.

முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்:

அமைச்சரவை தொடர்பானவை

ஆளுநர் தொடர்பானவை

சட்டமன்றம் தொடர்பானவை

இதர பணிகள் மற்றும் அதிகாரங்கள்

அமைச்சரவை தொடர்பானவை:

- முதலமைச்சர் அமைச்சரவையின் தலைவர் ஆவார். மேலும் அமைச்சர்களைத் தேர்வு செய்து ஆளுநருக்கு பரிந்துரை செய்கிறார்.
- அமைச்சர்களுக்குத் துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
- அமைச்சரவைக் கூட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தி முடிவுகளை எடுக்கிறார்.

- அமைச்சர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தி வழி நடத்தி, இயக்கி அவர்களது நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார்.
- தனது அமைச்சரவையை மாற்றியமைக்கிறார்.
- ஓர் அமைச்சருடன் கருத்து வேறுபாடுகள் எழும் பொழுது, இராஜினாமா செய்யும்படி கேட்கிறார் அல்லது பதவி நீக்கம் செய்ய ஆளுநருக்குப் பரிந்துரை செய்கிறார்.
- அமைச்சரவையின் குழப்பத்தை தனது இராஜினாமா மூலம் முடித்து வைக்கிறார்.

ஆளுநர் தொடர்பானவை:

- ஆளுநருக்கும், அமைச்சரவைக்குமிடையே செய்தித் தொடர்புகளில் முதலமைச்சர் முதன்மையாக விளங்குகிறார்.
- மாநில அரசு வழக்குரைஞர், மாநில தேர்தல் ஆணையர், அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், மாநில திட்டக்குழுத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள், மாநில நிதிக் குழுத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகிய அலுவலர்களின் நியமனங்கள் தொடர்பாக ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறார்.

சட்டமன்றம் தொடர்பானவை:

- சட்டமன்ற கூட்டத் தொடரை ஆரம்பிக்கவும் ஒத்திவைக்கவும் ஆளுநருக்கு முதலமைச்சர் ஆலோசனை வழங்குகிறார்.
- சட்டமன்றத்தில் அரசின் கொள்கைகளை அறிவிக்கிறார்.
- சட்டமன்றத்தில் மசோதாக்களை அறிமுகப்படுத்துகிறார்.
- எந்நேரத்திலும் சட்டமன்றத்தைக் கலைக்க ஆளுநருக்குப் பரிந்துரை செய்கிறார்.

இதர அதிகாரங்கள்:'

- மாநிலத்தின் தலைவராக பல்வேறுபட்ட மக்களின் தேவைகளை உற்று நோக்குகிறார்.
- மாநிலத்தின் அரசியல் தலைவராக பல்வேறு பணிகளைக் கட்டுப்படுத்தி, மேற்பார்வையிட்டு, பல்வேறு துறை செயலர்களின் பணிகளை ஒருங்கிணைக்கிறார்
- மாநில அரச சுமுகமாக இயங்க மத்திய அரசுடன் இணக்கமான உறவை வைத்துக் கொள்கிறார்.

2. ஆளுநரின் பல்வேறு அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.

நிர்வாக அதிகாரங்கள்:

- ஆளுநரே மாநிலத்தின் அரசியலமைப்புத் தலைவர் அவரது பெயராலேயே அனைத்து நிர்வாகமும் நடைபெறுகின்றன.
- மாநில சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பெறும் கட்சியின் தலைவரை முதலமைச்சராக ஆளுநர் நியமனம் செய்கிறார்.
- முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் அமைச்சரவையின் மற்ற உறுப்பினர்களை நியமனம் செய்கிறார்.
- மாநிலத்தின் அரசு வழக்கறிஞர், அரசுப்பணியாளர், தேர்வாணையக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், மாநிலத்தலைமைத் தேர்தல் ஆணையர், மாநிலப் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் ஆகியோரை நியமனம் செய்கிறார்.
- குடியரசுத் தலைவரின் அவசரநிலை பிரகடனம் செய்யப்படும் பொழுது, குடியரசுத் தலைவரின் பெயரில் ஆளுநரே மாநிலத்தை நேரடியாக ஆட்சி செய்கிறார்.

சட்டமன்ற அதிகாரங்கள்:

- ஆளுநர் சட்டமன்றத்தைக் கூட்டவும் ஒத்தி வைக்கவும் கலைக்கவும் உரிமை பெற்றுள்ளார்.
- முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் நியமனத்திற்குப் பிறகு நடைபெறும் முதல் சட்டமன்றக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகிறார்.
- மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு மசோதாவும் ஆளுநர் கையொப்பமிட்ட பின்னரே சட்டமாகும்.

- அரசியலமைப்பு சட்டப்பிரிவு 213–ன் கீழ் ஆளுநர் மாநில சட்டமன்றம் நடைபெறாத பொழுது அவசர சட்டத்தைப் பிறப்பிக்கலாம்.
- மாநிலத்தின் நிதிநிலை அறிக்கை, அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் அறிக்கை, அரசின் தணிக்கைக் குழு அறிக்கை ஆகியனவற்றை சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கின்றார்.

நிதி அதிகாரங்கள்:

- ஆண்டு நிதிநிலை அறிக்கையை (வரவு – செலவு திட்டம்) சட்டமன்றத்தில் அறிமுகம் செய்ய காரணமாகிறார்.
- மாநில நிதியமைச்சர் மூலம் துணை வரவு செலவு திட்டத்தை தேவைப்பட்டால் சமர்ப்பிக்கிறார்.
- ஆளுநரின் முன் அனுமதியுடன் தான் பண மசோதாவை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியும்.
- ஆளுநரின் பரிந்துரையின்றி நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது.
- மேலும் அரசின் எதிர்பாராச் செலவினங்களுக்காக ஆளுநர் அவசர நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய முடியும்.

நீதித்துறை அதிகாரங்கள்:

- மாநில அரசின் தலைமை வழக்குரைஞரையும், கீழ் நீதிமன்றங்களின் நீதிபதிகளையும் நியமனம் செய்கிறார்.
- உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையின் பேரில் மாவட்ட நீதிபதிகளின் நியமனம் மற்றும் பதவி உயர்வு போன்ற பணிகளை மேற்கொள்கிறார்.
- குற்றவாளிகளின் கருணைமனு அடிப்படையில் குற்றவாளிகளை மன்னிக்கலாம் அல்லது அவர்களின் தண்டனையைத் குறைக்கலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம்.

விருப்புரிமை அதிகாரங்கள்:

- குடியரசுத் தலைவரின் ஆலோசனைக்காக ஆளுநர் ஒரு மசோதாவை நிறுத்தி வைக்க முடியும்.
- மாநிலத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சிக்கு ஆளுநர் பரிந்துரை செய்கிறார்.
- மாநில நிர்வாகம் மற்றும் சட்டமன்ற செயல்பாடுகள் தொடர்பான செய்திகளை முதலமைச்சரிடமிருந்து ஆளுநர் பெறுகிறார்.
- அமைச்சரவை பெரும்பான்மையை இழந்தால் சட்டமன்றத்தை ஆளுநர் கலைக்க முடியும்.

அவசரகால அதிகாரங்கள்:

- மாநில அரசு அரசியலமைப்பு விதிகளுக்கேற்ப செயல்படவில்லை என்று ஆளுநர் உறுதியாக நம்பினால் சட்டப்பிரிவு 356 ன் கீழ் மாநில அரசைக் கலைக்க குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்யலாம்.
- மாநில அரசு கலைக்கப்பட்டவுடன் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைக்கு வரும். ஆளுநர் குடியரசுத்தலைவரின் பிரதிநிதியாக மாநிலத்தை நிர்வாகம் செய்கிறார்.

3. சட்டமன்றத்தின் பணிகளை சுருக்கமாக விவாதிக்க.

சட்டமன்ற அதிகாரங்கள்:

- அரசியலமைப்பின்படி மாநிலப் பட்டியலிலுள்ள அனைத்துத் துறைகள் மீதும் சட்டமன்றம் சட்டத்தை இயற்றலாம். பொதுப்பட்டியலிலும் சட்டம் இயற்றலாம்.
- ஆனால், அதே சட்டத்தை மத்திய அரசு இயற்றும் பொழுது, மாநில அரசின் சட்டம் செயலற்றதாகி விடும்.
- மத்திய நாடாளுமன்ற நடைமுறையைப் போன்றே மாநிலச் சட்டமன்றத்தின் மசோதாவும் சட்டமாக நிறைவேறுகிறது.
- ஒவ்வொரு மசோதாவும் சட்டமன்றத்தில் மூன்று நிலைகளுக்குப் பிறகே நிறைவேறுகிறது.
- ஆளுநரின் ஒப்புதலுக்குப் பிறகு அம்மசோதா சட்டமாகிறது.

நிதி அதிகாரங்கள்:

- சட்டமன்றம் மாநிலத்தின் நிதி நிலையைக் கட்டுப்படுத்துகிறது.
- சட்டமன்றக் கீழவையானது மேலவையைக் காட்டிலும் பண நடவடிக்கைகளில் அதிக அதிகாரம் பெற்றுள்ளது.
- பண மசோதா கீழவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும். கீழவையின் அனுமதியின்றி புதிய வரிகள் விதிக்க முடியாது.

நிர்வாகத் துறையின் மீது கட்டுப்பாடுகள்:

- சட்டமன்றம் நிர்வாகத்தின் துறையைக் கட்டுப்படுத்துகிறது. அமைச்சரவையானது சட்ட மன்றத்திற்குப் பொறுப்பானது.
- சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிக்க வேண்டும்.
- அமைச்சரவைக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டால் அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவர்.

பரந்த அதிகாரங்கள்:

- சட்டமன்றம் ஈரவைகளைப் பெற்றிருக்கும் பொழுது மேலவையைக் காட்டிலும் சட்டமன்றக் கீழவை அதிக அதிகாரங்களுடன் விளங்குகிறது.
- சட்டமன்றப் பேரவை மாநில நிதி நிலையை முற்றிலும் கட்டுப்படுத்துகிறது.
- மேலவை நிதி சார்ந்த நடவடிக்கையில் வாக்களிக்க முடியாது.

4. அமைச்சரவையின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை ஆய்க. **PTA**

- மாநில அரசிற்கான கொள்கைகளை உருவாக்கி அவற்றை திறம்பட நடைமுறைப்படுத்துகிறது.
- சட்டமன்ற நிகழ்ச்சிகளை முடிவு செய்து எல்லா முக்கியமான மசோதாக்களுக்கும் ஆதரவளிக்கிறது.
- நிதிக் கொள்கையைக் கட்டுப்படுத்துவதுடன் மாநில பொது நலனுக்கான வரிக்கொள்கையை முடிவு செய்கிறது.
- சமூக, பொருளாதார மாற்றங்களுக்கான நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களை உருவாக்கி அதன்படி மாநில அரசின் தலைமையில் பல்வேறு தொடர்புடைய துறைகள் உருவாக்கப்படுகின்றன.
- முக்கியமான துறைத் தலைவர்களின் நியமனங்களைச் செய்கிறது.
- மற்ற மாநிலங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.
- கீழ் நீதிமன்ற நீதிபதிகளின் நியமனங்களில் ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறது.
- மாநிலத்திற்கான செலவுகளைச் சமாளிக்க திட்ட அறிக்கையை உருவாக்குகிறது.
- ஒரு மசோதா சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் போது அது சாதாரண மசோதாவா அல்லது நிதி மசோதாவா என்று தீர்மானிக்கிறது.
- அமைச்சரவையின் ஒவ்வொரு அமைச்சரின் பணிகளைக் கட்டுப்படுத்தி, கண்காணித்து ஒருங்கிணைக்கின்றது.
- ஆண்டு வரவு செலவு திட்டம் (Budget) அமைச்சரவையால் இறுதி செய்யப்படுகிறது.

5. உயர்நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.

தனக்கேயுரிய நீதிவரையறை

- சென்னை, பம்பாய், கல்கத்தா நீதிமன்றங்கள் தங்களுக்கான நீதிவரையறை அதிகாரங்களுடன் மேல் முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களையும் பெற்றுள்ளன. அதே வேளையில் மற்ற நீதிமன்றங்கள் பெரும்பாலும் மேல் முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களை மட்டுமே பெற்றுள்ளன
- முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள், உயில், திருமணம் சார்ந்த வழக்குகள் மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் ஆகியவற்றை மட்டும் நேரடியாக விசாரிக்கும் அதிகாரங்களை இவை பெற்றுள்ளன.
- மாகாண நீதிமன்றங்கள் தன் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ரூபாய் 2000 மற்றும் அதற்கு மேற்பட்ட தொகை மதிப்புடைய குற்றவியல் வழக்குகளை தனக்கே உரிய நீதிவரையறையை பயன்படுத்தி விசாரிக்க முடியும்.

மேல்முறையீட்டு நீதி வரையறை

- உயர் நீதிமன்றங்கள் தங்களிடம் வரும் மேல்முறையீட்டு வழக்குகளையும் கீழ் நீதிமன்றங்களிலிருந்து வரும் மேல் முறையீட்டு வழக்குகளையும் (உரிமையியல், குற்றவியல்) விசாரிக்கின்றன.
- நாட்டின் இராணுவ தீர்ப்பாயங்களின் கீழ்வரும் ஆயுதம் சார்ந்த வழக்குகளை விசாரிக்க இவைகளுக்கு அதிகாரம் இல்லை.

பேராணைகள்:

- இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 226, அடிப்படை உரிமைகளுக்காக மட்டுமின்றி மற்ற நோக்கங்களுக்காகவும் பேராணைகளை வெளியிடும் அதிகாரங்களை உயர்நீதி மன்றங்களுக்கு வழங்குகிறது. அவை
- ஆட்கொணர்வு நீதிப் பேராணை
- கட்டளையுறுத்தும் நீதிப் பேராணை
- தடையுறுத்தும் நீதிப் பேராணை
- தகுதி வினவும் நீதிப் பேராணை
- ஆவணக் கேட்பு பேராணை

மேற்பார்வை அதிகாரம்

- இராணுவ நீதிமன்றங்களைத் தவிர மற்ற அனைத்து சார்பு நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்களின் பணிகளை மேற்பார்வையிடும் அதிகாரத்தை உயர்நீதி மன்றம் பெற்றுள்ளது.
- உச்ச நீதிமன்றம் இந்தியாவின் அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துவது போல், உயர்நீதிமன்றம் சார் நிலை நீதிமன்றங்களை தனது ஆணையினால் கட்டுப்படுத்துகின்றது.

கீழ் நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்துதல்

- உச்சநீதிமன்றம் இந்தியாவின் அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துவது போல் உயர்நீதிமன்றம் சார்நிலை நீதிமன்றங்களை தனது ஆணையினால் கட்டுப்படுத்துகிறது.

ஆவணங்களின் பாதுகாப்புப் பெட்டகம்

- உயர்நீதி மன்றத்தால் வழங்கப்பட்ட அனைத்து முடிவுகள் மற்றும் தீர்ப்புகள் அச்சடிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. இதனால் உயர்நீதிமன்றம் பதிவேடுகளின் நீதிமன்றமாக செயல்படுகிறது.

நீதிப்புனராய்வு அதிகாரம்

- நீதிப்புனராய்வு என்பது மத்திய – மாநில அரசுகள் இயற்றும் சட்டங்கள் அரசியலமைப்புக்கு உட்பட்டதா அல்லது முரண்பட்டதா என்பதை ஆராய உயர்நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட ஓர் அதிகாரமாகும்.

கூடுதல் வினா

1. உயர்நீதிமன்றம் எவ்வாறு கீழ் நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்துகிறது?

- மாவட்ட நீதிபதிகளின் நியமனம் மற்றும் பதவி உயர்வு குறித்து ஆளுநரால் ஆலோசிக்கப்படுகிறது.
- மாவட்ட நீதிபதிகளைத் தவிர, மற்ற நீதிபதிகளுக்கு நியமனம் செய்வது குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்படுகிறது.
- உயர்நீதிமன்ற நீதிபதிகளின் பதவி நியமனம், பதவி உயர்வு, விடுமுறை, இடமாற்றம் மற்றும் ஒழுங்கு குறித்து விவரிக்கிறது.
- சார் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கினை உயர்நீதிமன்றம் விசாரித்து முடிவுக்குக் கொண்டுவரும் அல்லது வழக்கின் தீர்ப்புடன் மீண்டும் சார் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும்.
- உச்சநீதிமன்றம் இந்தியாவின் அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துவது போல் உயர்நீதிமன்றம் சார் நிலை நீதிமன்றங்களை தனது ஆணையால் கட்டுப்படுத்துகின்றது.

அலகு 4 குடிமையியல்

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை

மனவரைபடம்



பஞ்ச சீலம்

- ஒவ்வொரு நாட்டின் எல்லையையும் இறையாண்மையும் பரஸ்பரம் மதித்தல்
- பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை
- பரஸ்பர உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல்
- பரஸ்பர நலனுக்காக சமத்துவம் மற்றும் ஒத்துழைத்தல். அமைதியாக சேர்ந்திருத்தல்

அணிசேரா இயக்கம்

நிறுவனத் தலைவர்கள்

- இந்தியாவின் ஜவஹர்லால் நேரு
- யூகோஸ்லாவியாவின் டிட்டோ
- எகிப்தின் நாசர்
- இந்தோனேசியாவின் சுகர்னோ
- கானாவின் குவாமே நிக்ரூமா

சார்க்

- ஆப்கானிஸ்தான்
- வங்காள தேசம்
- பூட்டான்
- இந்தியா
- நேபாளம்
- மாலத்தீவுகள்
- பாகிஸ்தான்
- இலங்கை

அடிப்படைக் கருத்துக்கள்

- தேசிய நலனைப் பேணுதல், உலக அமைதியை எய்துதல்
- ஆயுதக் குறைப்பு, பிற நாடுகளுடன் நல்லுறவை வளர்த்தல்
- அமைதியான வழிகளில் பிரச்சினைகளைத் தீர்த்தல்
- அணி சேராக் கொள்கையின்படி சுதந்திரமான சிந்தனை மற்றும் செயல்பாடு
- சர்வதேச விவகாரங்களில் சமத்துவம்
- காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம், இனப்பாகுபாடு ஆகியவற்றிற்கு எதிரான நிலைப்பாடு

நினைவில் கொள்க

- இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை நிறைவேற்றும் பொறுப்பு **இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தைச்** சார்ந்தது.
- நாடுகளுக்கிடையேயான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு வலிமையைப் பயன்படுத்தாமல் அமைதி வழிமுறைகளை பின்பற்றுவதை **புத்தர்** ஆதரித்தார்.
- "அணிசேரா இயக்கம்" என்ற சொல் **வி.கிருஷ்ணமேனன்** என்பவரால் உருவாக்கப்பட்டது.
- ஒரு நாடு தனது நாட்டிற்குள்ளான விவகாரங்கள் தொடர்பாக கொண்டுள்ள கொள்கைகள் **உள்நாட்டு கொள்கை** எனப்படும்.
- ஒரு நாடு பிற நாடுகளுடன் கொண்டுள்ள விவகாரங்கள் தொடர்பான கொள்கை **வெளியுறவுக் கொள்கை** எனப்படும்.
- ஒரு **இலக்கு சார்ந்த வெளியுறவுக் கொள்கை** என்பது பிறநாடுகளுடன் மேம்பட்ட உறவினை அடைவதற்கான திறனைக் கொண்டுள்ளது.
- **சார்க் நாடுகளின் கூட்டமைப்பு** என்பது தெற்காசியாவில் அமைந்துள்ள எட்டு நாடுகளின் பொருளாதார மற்றும் புவிஅரசியல் அமைப்பாகும்.
- **இராஜதந்திரம்** என்பது ஓர் அரசின் வெளியுறவுக் கொள்கையை செயல்படுத்துவதற்கான கருவி ஆகும்.
- இந்தியா சுதந்திரத்திற்குப் பிறகு **காமன்வெல்த்** நாடுகளில் இணைந்து பிற நாடுகளின் சுதந்திர இயக்கத்தை வலுவாக ஆதரித்தது.
- உலக வல்லரசு நாடுகளுடனும் அண்டைநாடுகளுடனும் உறவை மேம்படுத்துவதில் **இந்தியா** தற்போது கவனம் செலுத்துகிறது.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை வடிவமைப்பதில் எந்த அமைச்சர் முக்கிய பங்கு வகிக்கிறார்?
   அ) பாதுகாப்பு அமைச்சர் ஆ) பிரதம அமைச்சர்
   இ) வெளிவிவகாரங்கள் அமைச்சர் ஈ) உள்துறை அமைச்சர்

2. எந்த இரு நாடுகளுக்கிடையே பஞ்சசீல ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது?
   அ) இந்தியா மற்றும் நேபாளம் ஆ) இந்தியா மற்றும் பாகிஸ்தான்
   இ) இந்தியா மற்றும் சீனா ஈ) இந்தியா மற்றும் ஸ்ரீலங்கா

3. இந்திய வெளியுறவுக் கொள்கையை ஏற்றுக்கொண்டு வழிநடத்தும் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு எது?
   அ) சட்டப்பிரிவு 50 ஆ) சட்டப்பிரிவு 51 இ) சட்டப்பிரிவு 52 ஈ) சட்டப்பிரிவு 53

4. இன ஒதுக்கல் கொள்கை என்பது
   அ) ஒரு சர்வதேச சங்கம் ஆ) இராஜதந்திரம்
   இ) ஒரு இனபாகுபாட்டுக் கொள்கை ஈ) மேற்கூறியவைகளில் எதுவுமில்லை

5. 1954இல் இந்தியா மற்றும் சீனாவால் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் இது தொடர்பானது.
   அ) வியாபாரம் மற்றும் வணிகம் ஆ) சாதாரண உறவுகளை மீட்டெடுப்பது
   இ) கலாச்சார பரிமாற்றங்கள் ஈ) ஐந்து கொள்கைகளுடன் சேர்ந்திருத்தல்

6. நமது வெளியுறவுக் கொள்கையுடன் தொடர்பு இல்லாதது எது?
   அ) உலக ஒத்துழைப்பு ஆ) உலக அமைதி
   இ) இனச் சமத்துவம் ஈ) காலனித்துவம்

7. கீழ்க்கண்டவைகளில் அணிசேரா இயக்கத்தில் நிறுவன உறுப்பினர் அல்லாத நாடு எது?
   அ) யூகோஸ்லாவியா ஆ) இந்தோனேசியா இ) எகிப்து ஈ) பாகிஸ்தான்

8. பொருந்தாத ஒன்றினைக் கண்டுபிடி.
அ) சமூக நலம் ஆ) சுகாதாரம்
இ) ராஜதந்திரம் ஈ) உள்நாட்டு விவகாரங்கள்

9. அணிசேராமை என்பதன் பொருள்
அ) நடுநிலைமை வகிப்பது
ஆ) தன்னிச்சையாக பிரச்சனைகளுக்கு முடிவு எடுக்கும் சுதந்திரம்
இ) ராணுவமயமின்மை
ஈ) மேற்கூறியவற்றில் எதுவும் இல்லை

10. ராணுவம் சாராத பிரச்சனைகள் என்பது
அ) ஆற்றல் பாதுகாப்பு ஆ) நீர் பாதுகாப்பு இ) தொற்றுநோய்கள் ஈ) இவை அனைத்தும்

கூடுதல் வினாக்கள்

11. இந்திய வெளிநாட்டு சேவை பயிற்சி நிறுவனம் அமைந்துள்ள இடம்
அ) புதுடெல்லி ஆ) மும்பை இ) சென்னை ஈ) கொல்கத்தா

12. "பஞ்சசீலக் கொள்கை" கொண்டுள்ள கோட்பாடுகளின் எண்ணிக்கை
அ) 8 ஆ) 7 இ) 5 ஈ) 6

13. பஞ்சசீலக் கொள்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட சீனப்பிரதமர்
அ) லீ – கியாங் ஆ) ஷியாங்கே சேக் இ) ஜின் – பிங்க் ஈ) சூ – யென் – லாய்

14. 1955ஆம் ஆண்டு ஆசிய–ஆப்பிரிக்க மாநாடு நடைபெற்ற இடம்
அ) தாய்லாந்து ஆ) இந்தோனேசியா இ) பர்மா ஈ) மலேசியா

15. ஆப்பிரிக்க–ஆசிய மாநாட்டில் கையெழுத்தான பிரகடனம்
அ) ரஷ்ய பிரகடனம் ஆ) சீனப் பிரகடனம் இ) பாண்டுங் பிரகடனம் ஈ) ரங்கூன் பிரகடனம்

16. பனிப்போர் நிலவியபோது மூன்றாவது அணியை உருவாக்க முயன்ற இந்தியப் பிரதமர்
அ) லால் பகதூர் சாஸ்திரி ஆ) இந்திரா காந்தி
இ) ராஜிவ் காந்தி ஈ) ஜவகர்லால் நேரு

17. "அணிசேரா இயக்கம்" என்ற சொல்லை உருவாக்கியவர்
அ) வி.கிருஷ்ணமேனன் ஆ) இராதாகிருஷ்ணன் இ) ஜவகர்லால் நேரு ஈ) மார்ஷல் டிட்டோ

18. அணிசேரா இயக்க உறுப்புநாடுகளின் எண்ணிக்கை
அ) 150 ஆ) 120 இ) 130 ஈ) 140

19. இந்தியா–சோவியத்யூனியன் ஒப்பந்தம் நிகழ்ந்த ஆண்டு
அ) 1917 ஆ) 1947 இ) 1971 ஈ) 1977

20. கானா நாட்டைச் சேர்ந்த அணிசேரா இயக்கத் தலைவர்
அ) டிட்டோ ஆ) சுகர்னோ இ) நாசர் ஈ) குவாமே நிக்ரூமா

21. இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய ஆண்டு
அ) 1998 ஆ) 1954 இ) 1974 ஈ) 2008

22. "தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல்" என்பது
அ) புதிய அரசியல் கொள்கை ஆ) புதிய பொருளாதாரக் கொள்கை
இ) புதிய சமயக் கொள்கை ஈ) புதிய இராணுவக் கொள்கை

23. இனவெறி நிலவிய நாடு
அ) தென்னாப்பிரிக்கா ஆ) தென்அமெரிக்கா இ) சீனா ஈ) ரஷ்யா

24. "பொக்ரான்" இரண்டாவது அணு சோதனை நடைபெற்ற ஆண்டு
அ) 1998 ஆ) 1989 இ) 1957 ஈ) 1991

25. சார்க் அமைப்பின் பேரிடர் மேலாண்மை மையம் அமைந்துள்ள இடம்
அ) பாட்னா ஆ) ஹைதராபாத் இ) புதுடெல்லி ஈ) ஆக்ரா

விடைகள்

1. இ) வெளிவிவகாரங்கள் அமைச்சர்
2. இ) இந்தியா மற்றும் சீனா
3. ஆ) சட்டப்பிரிவு 51
4. இ) ஒரு இனப்பாகுபாட்டுக் கொள்கை
5. ஈ) ஐந்து கொள்கைகளுடன் சேர்ந்திருத்தல்
6. ஈ) காலனித்துவம்
7. ஈ) பாகிஸ்தான்
8. இ) ராஜதந்திரம்
9. ஆ) தன்னிச்சையாக பிரச்சனைகளுக்கு முடிவு எடுக்கும் சுதந்திரம்
10. ஈ) இவை அனைத்தும்
11. அ) புதுடெல்லி
12. இ) 5
13. ஈ) சூ – யென் – லாய்
14. ஆ) இந்தோனேசியா
15. இ) பாண்டுங் பிரகடனம்
16. ஈ) ஜவகர்லால் நேரு
17. அ) வி.கிருஷ்ணமேனன்
18. ஆ) 120
19. இ) 1971
20. ஈ) குவாமே நிக்ரூமா
21. இ) 1974
22. ஆ) புதிய பொருளாதாரக் கொள்கை
23. அ) தென்னாப்பிரிக்கா
24. அ) 1998
25. இ) புதுடெல்லி

II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய இடம் _________ .
2. தற்போது நமது வெளியுறவுக் கொள்கையானது உள்நாட்டு வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான _________ உருவாக்குவதற்கான வழிமுறையாக செயல்படுகிறது.
3. _________ என்பது ஓர் அரசின் வெளியுறவுக் கொள்கையை செயல்படுத்துவதற்கான கருவி ஆகும்.
4. இரு வல்லரசுகளின் பனிப்போரினை எதிர்கொள்ள இந்தியா பின்பற்றிய கொள்கை _________ .
5. நமது மரபு மற்றும் தேசிய நெறிமுறைகள் _________ நடைமுறைப்படுத்துவதாகும்.

கூடுதல் வினாக்கள்

6. இந்திய வெளிநாட்டு சேவை பயிற்சி நிறுவனம் தொடங்கப்பட்ட ஆண்டு _________ .
7. நாடுகளுக்கிடையேயான பிரச்சனைகளை, அமைதி வழிமுறைகளைப் பின்பற்றி தீர்ப்பதை ஆதரித்தவர் _________ .
8. இந்தியாவின் முதல் பிரதமர் _________ .
9. பாண்டுங் மாநாடு நடைபெற்ற ஆண்டு _________ .
10. ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் தங்களது செல்வாக்கைச் செலுத்த முயன்ற வல்லரசுகள் _________, _________ .
11. 1953இல் ஐ.நா. சபையில் உரையாற்றிய இந்தியர் _________ .
12. _________ என்பது இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாக விளங்குகிறது.
13. அணிசேரா இயக்கம் _________ சர்வதேச நிறுவனங்களைக் கொண்டுள்ளது.
14. அணிசேரா இயக்கம் ஒரு அரசியல் இயக்கத்திலிருந்து _________ இயக்கமாக மாற்றம் கொண்டுள்ளது.

15. அணிசேரா இயக்கத்தின் இந்தோனேசிய தலைவர் __________ .
16. 1964ஆம் ஆண்டு சீனா அணு சோதனை மேற்கொண்ட இடம் __________ .
17. மிகப்பெரிய பேரழிவை ஏற்படுத்திய போர் __________ .
18. இந்தியா இரண்டு போர்களை __________ நாட்டுடன் எதிர்கொண்டது.
19. பொக்ரான் அமைந்துள்ள மாநிலம் __________ .
20. இந்தியா __________ நாட்டின் அணு ஏவுகணைப் பாதுகாப்பு திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.
21. சர்வதேச அணுசக்தி நிறுவனத்தில் __________ நாட்டிற்கு எதிராக இந்தியா வாக்களித்துள்ளது.
22. __________ அமைப்பு சார்க் செயற்கைக் கோளை செலுத்த உள்ளது.
23. __________ என்பது மற்ற நாடுகளுடன் உறவைப் பேணுவதற்கான உத்திகளின் கலவையாகும்.
24. மாலத்தீவு __________ பெருங்கடலில் அமைந்துள்ளது.
25. உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடு __________ .

விடைகள்

1. பொக்ரான்	2. உள்முதலீட்டை	3. இராஜதந்திரம்
4. அணிசேராக் கொள்கை	5. படைவலிமைக் குறைப்பை	6. 1986
7. புத்தர்	8. ஜவகர்லால் நேரு	9. 1955
10. அமெரிக்கா, ரஷ்யா	11. வி.கிருஷ்ணமேனன்	12. அணிசேராமை
13. 10	14. பொருளாதார	15. சுகர்னோ
16. லாப் நார்	17. இரண்டாம் உலகப்போர்	18. பாகிஸ்தான்
19. இராஜஸ்தான்	20. அமெரிக்கா	21. ஈரான்
22. இஸ்ரோ (ISRO)	23. வெளியுறவுக் கொள்கை	24. இந்தியப்
25. இந்தியா		

III. பின்வரும் கூற்றினைப் படித்து பொருத்தமான விடையை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. பின்வருவனவற்றை காலவரிசைப்படுத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
   i) பஞ்சசீலம்
   ii) பொக்ரானில் அணு வெடிப்புச் சோதனை
   iii) 20 ஆண்டுகள் ஒப்பந்தம்
   iv) முதல் அணு வெடிப்புச் சோதனை

   அ) (i), (iii), (iv), (ii) ஆ) (i), (ii), (iii), (iv)
   இ) (i), (ii), (iv), (iii) ஈ) (i), (iii), (ii), (iv)

2. பின்வருவனவற்றில் அணிசேரா இயக்கத்துடன் தொடர்பு இல்லாதது எது?
   i) அணிசேரா இயக்கம் என்ற சொல் வி.கிருஷ்ணமேனன் என்பவரால் உருவாக்கப்பட்டது.
   ii) இதன் நோக்கம் இராணுவக் கூட்டமைப்பில் சேர்ந்து வெளி விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தைப் பராமரித்தல் ஆகும்.
   iii) தற்போது இது 120 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.
   iv) இது பொருளாதார இயக்கமாக மாற்றமடைந்துள்ளது.

   அ) (i) மற்றும் (ii) ஆ) (iii) மற்றும் (iv)
   இ) (ii) மட்டும் ஈ) (iv) மட்டும்

3. கீழ்காணும் ஒவ்வொரு கூற்றுக்கும் எதிராக சரியா / தவறா என எழுதுக.

அ) பனிப்போரின் போது சர்வதேச விவகாரங்களில் இந்தியா மூன்றாவது அணியை உருவாக்க முயற்சித்தது.

ஆ) இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை நிறைவேற்றும் பொறுப்பு இந்திய உள்துறை அமைச்சகத்தைச் சார்ந்தது.

இ) இந்தியாவின் அணுசக்தி சோதனை பூமிக்கடியிலான அணு சோதனை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டது.

4. கூற்று : 1971இல் இந்தோ – சோவியத் ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா சோவியத் யூனியனுடன் இணைந்தது.

காரணம் : இது 1962இன் பேரழிவுகரமான சீனப் போருக்குப் பின் தொடங்கியது.

அ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்று தவறு மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று சரி காரணம் தவறு.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

கூற்று : இந்தியா உலகின் பெரும்பான்மையான நாடுகளுடன் தூதரக உறவுகளைக் கொண்டுள்ளது.

காரணம் : உலகின் இரண்டாவது அதிக அளவிலான மக்கள் தொகையைக் கொண்ட நாடு இந்தியா ஆகும். **PTA**

அ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று தவறு காரணம் சரி.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

5. இந்தியா சுதந்திரத்திற்கு பின்னர் ராணுவ முகாம்களில் இணைவதை தவிர்ப்பது அவசியமாக இருந்தது. ஏனெனில் இந்தியா இதனை / இவைகளை மீட்க வேண்டி இருந்தது.

அ) கடுமையான வறுமை
ஆ) எழுத்தறிவின்மை
இ) குழப்பமான சமூக பொருளாதார நிலைமைகள்
ஈ) மேற்கூறிய அனைத்தும்

கூடுதல் வினாக்கள்

6. i) சர்வதேசப் பிரச்சனைகளை ஆயுதப்படைகள் மூலம் தீர்க்க வேண்டும்
ii) சர்வதேச சட்டத்தினை ஒவ்வொரு நாடும் மதிக்க வேண்டும்.
iii) நாடுகள் சர்வதேச உறவுகளில் ஒன்றுடன் ஒன்று சார்ந்து இருப்பது அவசியம்.
iv) இந்திய வெளியுறவு சேவை அதிகாரிகளுக்கு அமெரிக்காவில் பயிற்சியளிக்கப்படுகிறது.

அ) (i) மற்றும் (ii) சரி
ஆ) (ii) மற்றும் (iii) சரி
இ) (iii) மற்றும் (iv) சரி
ஈ) (i) மற்றும் (iv) சரி

7. கூற்று : இந்தியா இராணுவ கூட்டு ஒப்பந்தத்தில் ஈடுபடாமல் தவிர்த்தது.

காரணம் : சுதந்திர இந்தியா தீவிர வறுமை, படிப்பறிவின்மை, குழப்பமான சமூக–பொருளாதார நிலைகளிலிருந்து தன்னை மீட்டெடுக்க விரும்பியது.

அ) கூற்று மற்றும் காரணம் சரி ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.
ஆ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
இ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.
ஈ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.

விடைகள்

1. அ) (i), (iii), (iv), (ii)
2. இ) (ii) மட்டும்
3. அ–சரி, ஆ–தவறு, இ–சரி.
4. இ) கூற்று சரி காரணம் தவறு.
5. ஆ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
6. ஈ) மேற்கூறிய அனைத்தும்
7. ஆ) (ii) மற்றும் (iii) சரி
8. ஈ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.

IV. பொருத்துக:

பாடநூல் வினா

அ)

1.	இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள தீவு	அ)	1955
2.	தென்கிழக்காசிய நாடுகள் கூட்டமைப்பின் பாலம்	ஆ)	1954
3.	பஞ்சசீலம்	இ)	மாலத்தீவு
4.	ஆப்பிரிக்க–ஆசிய மாநாடு	ஈ)	வெளியுறவுக் கொள்கை
5.	உலக அமைதி	உ)	மியான்மர்

விடை: 1) இ 2) உ 3) ஆ 4) அ 5) ஈ

கூடுதல் வினாக்கள்

ஆ)

1.	ஜவகர்லால் நேரு	அ)	எகிப்து
2.	டிட்டோ	ஆ)	இந்தோனேசியா
3.	நாசர்	இ)	யூகோஸ்லாவியா
4.	சுகர்னோ	ஈ)	கானா
5.	குவாமே நிக்ரூமா	உ)	இந்தியா

விடை: 1) உ 2) இ 3) அ 4) ஆ 5) ஈ

இ)

1.	இஸ்ரேல்	அ)	அணு சோதனை
2.	அமெரிக்கா	ஆ)	பாதுகாப்பு தளவாட கொள்முதல்
3.	ஈரான்	இ)	அணு ஏவுகணை பாதுகாப்புத் திட்டம்
4.	சீனா	ஈ)	எரிசக்தி ஆற்றல் வள தூதரக உறவு
5.	பொக்ரான்	உ)	கிழக்கு நோக்கு கொள்கை

விடை: 1) ஆ 2) இ 3) ஈ 4) உ 5) அ

V. சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **வெளியுறவுக் கொள்கை என்றால் என்ன?** **PTA**

➤ வெளியுறவுக் கொள்கை என்பது ஒரு நாடு வெளியுறவு விவகாரங்களில் தனது தேசிய நலனை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் இரு தரப்பு மற்றும் பலதரப்பு உறவுகளைப் பேணவும் வடிவமைக்கப்பட்ட கொள்கை ஆகும்.

➤ இது நாட்டுமக்களின் சிறந்த நலன்கள், நாட்டின் பரப்பு மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை பாதுகாக்க முயல்கிறது.

2. இந்தியாவின் அணு சக்தி கொள்கையை விவரி. **PTA**

- இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து உலக அளவில் ஆயுதப் பெருக்கத்தடை இந்தியாவின் அணுகொள்கையில் மேலோங்கிய ஒரு கருத்தாகவே இருந்து வருகிறது.
- இதனால் ஐ.நா.வின் படை வலிமைக் குறைப்புத் திட்டங்களுக்கு இந்தியா ஆதரவளித்தது. 1974 மற்றும் 1998 அணு சோதனைகள் போர்த்திறமை சார்ந்த நடவடிக்கைகளுக்காகவே செய்யப்பட்டவை ஆகும்.
- "முதலில் பயன்படுத்துவதில்லை" மற்றும் "குறைந்தபட்ச நம்பகமான தற்காப்புத் திறன்" ஆகியன இந்திய அணுக்கொள்கையின் இரண்டு மையக்கருத்துகளாகும்.
- அணு ஆயுதத்தை போர்த்தாக்குதலுக்குப் பயன்படுத்துவது இல்லை என்பதோடு அணு ஆயுதமற்ற நாட்டிற்கு எதிராக பயன்படுத்துவதுமில்லை என இந்தியா தீர்மானித்துள்ளது.
- இந்திய – அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் இந்திய வெளியுறவுக் கொள்கையில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

3. இந்திய வெளியுறவுக் கொள்கையில் நேருவின் பங்களிப்பை எடுத்துக் கூறுக.

- இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள் நாட்டின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேரு வழிகாட்டுதலின்படி முக்கிய குறிக்கோள்களை கொண்டதாக அமைந்திருந்தது.
- நீண்ட காலமாக காலனியாதிக்கத்திலிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகள் பொருளாதார மேம்பாடு தொடர்பான கடுமையான சூழ்நிலையை எதிர்கொண்டன. எனவே ஐக்கிய சோசலிச குடியரசு (USSR) அல்லது அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA) ஆகியவற்றில் ஏதேனும் ஒரு முகாமில் சேர்வது அவசியமாயிற்று.
- அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா ஆகிய இரண்டு வல்லரசு நாடுகள் ஆப்பிரிக்க, ஆசியாவில் புதிதாகத் தோன்றிய நாடுகளில் தங்களது செல்வாக்கைச் செலுத்துவதை நேரு எதிர்த்தார்.
- பனிப்போர் நிலவும் இரு துருவ உலகமான அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா வல்லரசுகளுடன் சேராமல் அணிசேரா இயக்கம் என்ற வழியைத் தேர்ந்தெடுத்ததோடு சர்வதேச விவகாரங்களில் மூன்றாவது அணியை உருவாக்க நேரு முயன்றார். அணிசேரா இயக்கத்தின் நிறுவனத்தலைவர்களில் நேருவும் ஒருவர்.

4. வேறுபடுத்துக: உள்நாட்டுக் கொள்கை மற்றும் வெளிநாட்டுக் கொள்கை **PTA**

உள்நாட்டுக் கொள்கை	வெளிநாட்டுக் கொள்கை
1. உள்நாட்டுக் கொள்கை என்பது ஒரு நாடு தனது நாட்டிற்குள்ளான விவகாரங்கள் தொடர்பாக கொண்டுள்ள கொள்கையாகும்.	வெளிநாட்டுக் கொள்கை என்பது ஒரு நாடு பிற நாடுகளுடன் கொண்டுள்ள விவகாரங்கள் தொடர்பானது ஆகும்.
2. உள் விவகாரங்கள், சமூக நலம், சுகாதாரம், கல்வி, குடியியல் உரிமைகள், பொருளாதார விவகாரங்கள் மற்றும் சமூகப் பிரச்சனைகள் ஆகியவற்றை மையமாகக் கொண்ட சட்டங்களை உள்ளடக்கியது.	வணிகம், அரச தந்திரம், தடுப்பு நடவடிக்கைகள், பாதுகாப்பு, உளவுத்துறை மற்றும் உலகளாவிய சூழல் ஆகிய வகைகளை கொண்டது வெளிநாட்டுக் கொள்கை ஆகும்.

5. பஞ்சசீல கொள்கைகளில் நான்கினைப் பட்டியலிடுக.

- ஒவ்வொரு நாட்டின் எல்லையையும் இறையாண்மையையும் பரஸ்பரம் மதித்தல்.
- பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை.
- பரஸ்பர உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல்.
- பரஸ்பர நலனுக்காக சமத்துவம் மற்றும் ஒத்துழைத்தல்.

6. இந்தியா அணிசேராக் கொள்கையை தேர்ந்தெடுத்ததற்கான காரணம் என்ன?

- பனிப்போர் நிலவும் இரு துருவ உலகமான அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா ஆகிய வல்லரசுகளுடன் சேராமல் இருப்பதற்காகவும் சர்வதேச விவகாரங்களில் மூன்றாவது அணியை உருவாக்கிடவும் இந்தியா அணிசேராக் கொள்கையைத் தேர்ந்தெடுத்தது.

7. இந்தியாவின் பாதுகாப்பு குறித்த அக்கறை எந்தெந்த வழிகளிலெல்லாம் பிரதிபலிக்கிறது? **PTA**

- இந்தியாவின் பாதுகாப்பு குறித்த அக்கறை இந்தியாவின் ராணுவ நவீனமயமாக்கல், கடல்சார் பாதுகாப்பு மற்றும் அணுசக்திக் கொள்கைகள் என்ற வழிகளில் பிரதிபலிக்கிறது.

8. சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.

- ஆப்கானிஸ்தான்
- பூட்டான்
- நேபாளம்
- பாகிஸ்தான்
- வங்காளதேசம்
- இந்தியா
- மாலத்தீவுகள்
- இலங்கை

9. அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள் யாவர்?

- ஜவகர்லால் நேரு (இந்தியா)
- நாசர் (எகிப்து)
- குவாமே நிக்ரூமா (கானா)
- டிட்டோ (யூகோஸ்லாவியா)
- சுகர்னோ (இந்தோனேசியா)

10. வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக. PTA

- உடன்படிக்கைகள்
- தூதுவர்களை நியமித்தல்
- சர்வதேச வணிகம்
- நிர்வாக ஒப்பந்தங்கள்
- வெளிநாட்டு உதவி
- ஆயுதப் படைகள்

கூடுதல் வினாக்கள்

11. அரசு நெறிமுறையுறுத்தும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளைக் குறிப்பிடுக.

- சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல்
- நாடுகளிடையே நியாயமான மற்றும் கௌரவமான உறவுகளை பேணுதல்
- சர்வதேச சட்டம் மற்றும் சர்வதேச அமைப்புகளை மதித்தல்
- சர்வதேச பிரச்சனைகளை நடுவர் மன்றம் மூலம் தீர்க்க ஊக்குவித்தல்

12. நமது வெளியுறவுக் கொள்கையின் முக்கிய நோக்கங்கள் யாவை?

- தேசிய பாதுகாப்பு
- தேசிய வளமை
- நட்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
- உலக அமைதி அடைதல் மற்றும் ஒவ்வொரு நாட்டுடனும் அமைதியுடன் சேர்ந்திருத்தல்
- பொருளாதார வளர்ச்சி

13. இந்திய வெளியுறவுக் கொள்கையின் புதிய மாற்றங்கள் என்னென்ன?

- சீனாவுடனான நட்புறவு – கிழக்கு நோக்கு கொள்கை (1992)
- பொக்ரானில் (ராஜஸ்தான்) நடைபெற்ற இரண்டாவது அணு சோதனை (1998)
- இஸ்ரேலிடமிருந்து பாதுகாப்பு தளவாடங்களை கொள்முதல் செய்தலுக்கான உறவு
- அரபு நாடுகள் மற்றும் ஈரானுடன் எரிசக்தி ஆற்றல் வள தூதரக உறவு
- அமெரிக்காவின் அணு ஏவுகணைப் பாதுகாப்பு திட்டத்தை ஏற்றுக் கொள்ளுதல்
- சர்வதேச அணுசக்தி நிறுவனத்தில் ஈரானுக்கு எதிராக இந்தியாவின் வாக்களிப்பு

14. பொருளாதார வளர்ச்சி அடைவதற்குத் தேவையான காரணிகளைப் பட்டியலிடுக.

- மூலதனம் தொழில்நுட்பம்
- சந்தை பணியாளர் திறன்
- மரபுப் பிணைப்பு நியாயமான உலகளாவிய நிர்வாகம்
- ஒரு நிலையான, நியாயமான வளர்ச்சிக்கு உகந்த சூழல்

VI. விரிவாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக. PTA

அணிசேரா இயக்கம்:

- அணிசேரா இயக்கம் என்ற சொல் 1953இல் ஐ.நா. சபையில் உரையாற்றிய வி. கிருஷ்ணமேனன் என்பவரால் உருவாக்கப்பட்டது.
- அணிசேராமை என்பது இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாக விளங்குகிறது.
- இதன் நோக்கம் இராணுவக் கூட்டடணியில் சேராமல் வெளிநாட்டு விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தை பராமரித்தலாகும். பன்முக கூட்டரங்கில் இது மிகப்பெரிய அரசியல் குழுவாக விளங்குகிறது.
- இவ்வியக்கம் 120 உறுப்பு நாடுகளையும் 17 நாடுகளைப் பார்வையாளர்களாகவும், 10 சர்வதேச நிறுவனங்களையும் கொண்டுள்ளது.
- வளர்ச்சி குறைந்த நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பிற்கான அடித்தளத்தை நிறுவுவதில் அணிசேரா நாடுகள் வெற்றிபெற்றுள்ளன.
- அணிசேரா இயக்கம் ஒரு அரசியல் இயக்கத்திலிருந்து பொருளாதார இயக்கமாக மாற்றம் கொண்டுள்ளது என்பது ஒரு குறிப்பிடத்தக்க உண்மையாகும்.

அணிசேரா இயக்கத்தில் நேருவின் பங்கு:

- இந்தியாவின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேரு அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா ஆகிய வல்லரசு நாடுகள் ஆப்பிரிக்கா, ஆசியாவின் புதியதாக தோன்றிய நாடுகளில் தங்களது செல்வாக்கைச் செலுத்துவதை எதிர்த்தார்.
- பனிப்போர் நிலவும் இரு துருவ உலகமான அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா ஆகிய வல்லரசுகளுடன் சேராமல் அணிசேரா இயக்கம் என்ற வழியைத் தேர்ந்தெடுத்த நேரு, சர்வதேச விவகாரங்களில் மூன்றாவது அணியை உருவாக்க முயன்றார்.

அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள்:

- ஜவகர்லால் நேரு – இந்தியா
- டிட்டோ – யூகோஸ்லாவியா
- நாசர் – எகிப்து
- சுகர்னோ – இந்தோனேசியா
- குவாமே நிக்ரூமா – கானா

கொள்கை மாற்றம்:

- இந்தியா அணிசேரா இயக்கத்தில் இருந்தபோதும் சோவியத் யூனியனுடன் 1971ஆம் ஆண்டில் இந்தியா – சோவியத் ஒப்பந்தத்தின் மூலம் இணைந்தது. பின்னர் இந்தியா ராணுவ நவீன மயமாக்கலை மேற்கொண்டது.
- வெளியுறவுக் கொள்கைகளை நிர்வகிப்பதில் ஏற்படும் குறைகளும் தவறுகளும் அவ்வப்போது சரிசெய்யப்பட்டாலும், இந்தியாவின் அடிப்படைக் கொள்கையான அணிசேராமை இன்னும் நடைமுறையில் உள்ளது.

தற்போதைய அணிசேராமை:

- அணிசேராமை என்பது இராணுவ வலிமை இல்லாது இருத்தல் என்று பொருளல்ல, மோதல்கள் மற்றும் பதட்டங்களை குறைப்பதை உறுதி செய்வது என பொருள்படுவதாகும்.
- தற்போது அணிசேராமை என்பது நடுநிலைமையாக இருப்பது என்பது மட்டும் பொருள் அல்ல, பிரச்சனைகளை நாடுகள் சுதந்திரமாகத் தீர்மானிப்பதுவும் ஆகும்.
- அணிசேரா இயக்கம் என்பது நாடுகளிடையே அமைதி மற்றும் முன்னேற்றத்திற்கான பரஸ்பர உதவிக்கானதாகும்.

PTA

2. வெளியுறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகளை பற்றி விவாதிக்கவும்.

- நாட்டின் புவியியல் அமைப்பு மற்றும் பரப்பளவு
- நாட்டின் வரலாறு, பாரம்பரியம் மற்றும் தத்துவம் அடிப்படையிலானவை
- இயற்கை வளங்கள்
- பொருளாதார வளர்ச்சியின் அவசியம்
- அரசியல் நிலைத்தன்மை மற்றும் அரசாங்க அமைப்பு
- அமைதிக்கான அவசியம், ஆயுதக் குறைப்பு, அணு ஆயுதப் பெருக்கத்தடை
- ராணுவ வலிமை
- சர்வதேச சூழ்நிலை

3. அண்டை நாடுகளுடன் நட்புறவினைப் பேண இந்தியா பின்பற்றும் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கருத்துகளை பட்டியலிடுக.

- தேசிய நலனைப் பேணுதல்
- உலக அமைதியை எய்துதல்
- ஆயுதக் குறைப்பு
- பிற நாடுகளுடன் நல்லுறவை வளர்த்தல்
- அமைதியான வழிகளில் பிரச்சனைகளைத் தீர்த்தல்
- அணி சேராக் கொள்கையின்படி சுதந்திரமான சிந்தனை மற்றும் செயல்பாடு
- சர்வதேச விவகாரங்களில் சமத்துவம்
- காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம், இனப் பாகுபாடு ஆகியவற்றிற்கு எதிரான நிலைப்பாடு

கூடுதல் வினாக்கள்

4. சார்க் பற்றி விவரி.

- சார்க் என்பது தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு ஆகும் (SAARC - South Asian Association for Regional Cooperation).
- இது தெற்காசியாவில் அமைந்துள்ள எட்டு நாடுகளின் ஒரு பொருளாதார மற்றும் புவி அரசியல் அமைப்பாகும்,
- சார்க் நாடுகளின் கொள்கை நோக்கமானது நலம்சார் பொருளாதாரத்தை ஊக்குவித்தல், தெற்காசிய நாடுகளிடையே கூட்டுத்தன்னிறைவு மற்றும் இப்பிராந்தியத்தில் சமூக–பண்பாட்டு மேம்பாட்டினை விரைவுபடுத்துதல் ஆகியனவாகும்,
- சார்க் அமைப்பின் பேரிடர் மேலாண்மை மையம் புது டெல்லியில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையம் தெற்காசியாவில் பேரிடர் குறைப்பு மற்றும் மேலாண்மைக்கான வல்லுனர்களைக் கொண்ட அமைப்பாகும்.
- இஸ்ரோ (ISRO) அமைப்பு சார்க் பிராந்தியத்திற்கான "செய்தித் தொடர்பு மற்றும் வானிலை ஆய்விற்காக" சார்க் செயற்கைக் கோளை செலுத்த உள்ளது.
- சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகள்: ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், பூட்டான், இந்தியா, நேபாளம், மாலத்தீவுகள், பாகிஸ்தான் மற்றும் இலங்கை.

5. "வழிகாட்டும் சக்தியாக இந்தியா" – நிரூபி.

- ஜி–20 நாடுகள், கிழக்காசிய உச்சிமாநாடு, பிரிக்ஸ்(BRICS) ஆகியவற்றில் உறுப்பு நாடாக இந்தியா இருப்பதும், வேகமாக வளர்ந்து வரும் மிகப்பெரிய பொருளாதாரம் கொண்ட ஒரு நாடாக இருப்பதும் அதன் நிலைக்கு ஒரு சான்றாகும்.
- ஐ.நா. சபையின் பாதுகாப்பு சபையில் ஒரு நிரந்தர உறுப்பு நாடாக இந்தியா விரும்புகிறது. இந்தியா தற்போது தனது அதிகரித்துவரும் நலனை உலகின் பல பகுதிகளில் ஆழப்பதித்து வருகிறது.
- மேலும் ஆற்றல் வளம் முக்கிய இயற்கை வளங்களை பாதுகாத்தல், அவசியமான கப்பல் வழித்தடங்களை திறத்தல் மற்றும் பராமரித்தல், முதலீடுகளை எதிர்நோக்கல், கடல் கடந்த வணிக வாய்ப்புகள் மற்றும் வணிக நுழைவினைப் பெறுதல் போன்ற பல்வேறு காரணிகளால் முன்னேற்றம் கண்டுவருகிறது.

5 இந்தியாவின் சர்வதேச உறவுகள்

மனவரைபடம்

நினைவில் கொள்க

- அதிக எண்ணிக்கையிலான அண்டை நாடுகளுடன் தனது எல்லையை பகிர்ந்து கொள்ளும் நாடுகள் **சீனா மற்றும் ரஷ்யா**.
- "இடி மின்னல் நிலம்" என்று அழைக்கப்படும் ஒரு சிறிய நாடு **பூட்டான்** ஆகும்.
- இந்தியாவிலிருந்து பூட்டானுக்குச் சென்று அங்கு புத்த சமயத்தைப் பரப்பிய துறவி **குருபத்மசம்பவா** ஆவார்.
- இந்தியாவிற்கும், சீனாவிற்கும் இடையிலான எல்லைக்கோட்டிற்கு **மக்மகான் எல்லைக்கோடு** என்று பெயர்.
- இந்தியாவையும் காத்மண்டுவையும் இணைப்பதற்காக இந்தியாவால் கட்டப்பட்டுள்ள வழிக்கு **மகேந்திரராஜ் மார்க்** என்று பெயர்.
- இரட்டை நகரங்களான காட்மண்ட்–வாரணாசி, லும்பினி–புத்தகயா, மற்றும் ஜனக்பூர்–அயோத்தி ஆகிய **மூன்று சகோதரி நகர்** ஒப்பந்தங்களில் இந்தியா–நேபாளம் கையெழுத்திட்டுள்ளன.
- **அசோகர்** புத்த மதத்தை பரப்புவதற்காக அவரது மகன் மகிந்தாவையும் மகள் சங்கமித்தரையையும் இலங்கைக்கு அனுப்பினார்.
- உலகின் மிகப் பழமையான கடல் வர்த்தகப் பாதைகளில் ஒன்று சுமேரியாவிலிருந்து பக்ரைன் வழியாக **மெலுக்கா** என்று அழைக்கப்பட்ட சிந்து சமவெளி நாகரிகம் வரை அமைக்கப்பட்டிருந்தது.
- **இந்தியா** தன் அண்டைநாடுகளின் வளர்ச்சிக்கு நிதி உதவியினை அளித்து வருகிறது.
- இந்தியா தென்கிழக்கு ஆசியாவிற்குள் செல்வதற்கான ஒரு நுழைவு வாயிலாக இருப்பது **மியான்மர்** ஆகும்.

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **மக்மகான் எல்லைக்கோடு எந்த இரு நாடுகளுக்கு இடையே உள்ள எல்லை ஆகும்?**
   அ) பர்மா – இந்தியா ஆ) இந்தியா – நேபாளம்
   இ) இந்தியா – சீனா ஈ) இந்தியா – பூட்டான்

2. **இந்தியா பின்வருவனவற்றுள் எந்த அமைப்பில் உறுப்பினராக இல்லை?**
   அ) ஜி 20 ஆ) ஏசியன்(ASEAN) இ) சார்க் (SAARC) ஈ) பிரிக்ஸ் (BRICS)

3. **ஒபெக் (OPEC) என்பது**
   அ) சர்வதேச காப்பீட்டு நிறுவனம் ஆ) ஒரு சர்வதேச விளையாட்டு கழகம்
   இ) எண்ணெய் ஏற்றுமதி நிறுவனங்களின் அமைப்பு ஈ) ஒரு சர்வதேச நிறுவனம்

4. **இந்தியா தனது மிக நீண்ட நில எல்லையை எந்த நாட்டோடு பகிர்ந்து கொள்கிறது?**
   அ) வங்காளதேசம் ஆ) மியான்மர் இ) ஆப்கானிஸ்தான் ஈ) சீனா

5. **பின்வருவனவற்றை பொருத்தி கீழே கொடுக்கப்பட்ட குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**
   i) சல்மா அணை – 1. வங்காளதேசம்
   ii) பராக்கா ஒப்பந்தம் – 2. நேபாளம்
   iii) சுக்கா நீர்மின்சக்தி திட்டம் – 3. ஆப்கானிஸ்தான்
   iiv) சாரதா கூட்டு மின்சக்தி திட்டம் – 4. பூட்டான்
   அ) 3 1 4 2 ஆ) 3 1 2 4 இ) 3 4 1 2 ஈ) 4 3 2 1

6. **எத்தனை நாடுகள் இந்தியாவுடன் தன் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன?**
   அ) 5 ஆ) 6 இ) 7 ஈ) 8

7. எந்த இரண்டு தீவு நாடுகள் இந்தியாவின் அண்டை நாடுகள் ஆகும்?
அ) இலங்கை மற்றும் அந்தமான் தீவுகள் ஆ) மாலத்தீவு மற்றும் லட்சத் தீவுகள்
இ) மாலத்தீவு மற்றும் நிக்கோபார் தீவு ஈ) இலங்கை மற்றும் மாலத்தீவு

8. எந்த இந்திய மாநிலம் மூன்று நாடுகளால் சூழப்பட்டுள்ளது?
அ) அருணாச்சல பிரதேசம் ஆ) மேகாலயா
இ) மிசோரம் ஈ) சிக்கிம்

9. எத்தனை மாநிலங்கள் நேபாளத்துடன் தங்கள் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன?
அ) 5 ஆ) 4 இ) 3 ஈ) 2

10. புதிதாக சுதந்திரமடைந்த பாகிஸ்தானுக்கான எல்லைகளை வகுத்தவர்
அ) மவுண்ட்பேட்டன் பிரபு ஆ) சர் சிரில் ராட்க்ளிஃப்
இ) கிளமன்ட் அட்லி ஈ) மேற்கூறிய ஒருவருமில்லை

கூடுதல் வினாக்கள்

11. பலுசிஸ்தான் பகுதியைச் சேர்ந்த இந்திய விடுதலைப் போராட்ட வீரர்
அ) கான் அப்துல் கபார் கான் ஆ) செங்கிஸ்கான்
இ) குப்ளாய் கான் ஈ) யூசப் கான்

12. ஆப்கானிஸ்தானில் முதலீடு செய்வதில் முன்னணியில் உள்ள நாடு
அ) பாகிஸ்தான் ஆ) ஈரான் இ) இந்தியா ஈ) கத்தார்

13. ஆப்கானிஸ்தானில் இந்தியா கட்டியுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைந்துள்ள இடம்
அ) கராச்சி ஆ) காந்தகார் இ) காபுல் ஈ) லாகூர்

14. இந்தியா, வங்காளதேசத்திற்கிடையே கங்கை நீரை பகிர்ந்து கொள்ள போடப்பட்ட ஒப்பந்தம்
அ) டாக்கா ஒப்பந்தம் ஆ) கல்கத்தா ஒப்பந்தம்
இ) அகர்தலா ஒப்பந்தம் ஈ) பராக்கா ஒப்பந்தம்

15. "தாகூர் இருக்கை" ஏற்படுத்தப்பட்டுள்ள பல்கலைக் கழகம்
அ) காத்மண்ட் பல்கலைக் கழகம் ஆ) டாக்கா பல்கலைக் கழகம்
இ) நாளந்தா பல்கலைக் கழகம் ஈ) சிம்லா பல்கலைக் கழகம்

16. நிலங்களால் சூழப்பட்ட நாடு
அ) பூட்டான் ஆ) வங்காள தேசம் இ) மியான்மர் ஈ) பாகிஸ்தான்

17. மாலத்தீவு அமைந்துள்ள கடல்
அ) அரபிக்கடல் ஆ) வங்காள விரிகுடா
இ) இந்தியப் பெருங்கடல் ஈ) பசிபிக் பெருங்கடல்

18. இந்தியா தென்கிழக்கு ஆசியாவிற்குள் செல்வதற்கான நுழைவாயில்
அ) மிசோரம் ஆ) மியான்மர் இ) நாகலாந்து ஈ) மணிப்பூர்

19. மிகவேகமாக ஓடும் ஆறுகளைக் கொண்டுள்ள நாடு
அ) ஆப்கானிஸ்தான் ஆ) வங்காளதேசம் இ) இலங்கை ஈ) நேபாளம்

20. இந்தியா பாகிஸ்தானிடையே முக்கிய விவகாரமாக இருப்பது
அ) குஜராத் ஆ) லாகூர் இ) காஷ்மீர் ஈ) பஞ்சாப்

21. சிம்லா ஒப்பந்தம் கையெழுத்தான ஆண்டு
அ) 1972 ஆ) 1950 இ) 1947 ஈ) 1962

22. இந்தியாவின் நாளந்தா பல்கலைத்திட்டத்தின் ஒரு பங்குதாரராக உள்ள நாடு
அ) சீனா ஆ) இங்கிலாந்து இ) ரஷ்யா ஈ) இலங்கை

23. புத்தமதத்தைப் பரப்புவதற்காக தன் மகனையும் மகளையும் இலங்கைக்கு அனுப்பிய மன்னர்
அ) சந்திரகுப்த மௌரியர் ஆ) அசோகர் இ) கனிஷ்கர் ஈ) கர்ஷர்

24. ஆப்கானிஸ்தான் மற்றும் ஆசியா ஆகிய சந்தைகளை இந்தியா அணுக ஒரு நுழைவு வாயிலாக அமைந்துள்ள துறைமுகம்
அ) கராச்சி ஆ) மும்பை இ) சபஹார் ஈ) கட்ச்

25. பிரிக்ஸ் அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம் **PTA**
அ) ஷாங்காய் ஆ) ஹாங்காய் இ) நான்கிங் ஈ) பீகிங்

விடைகள்

1. இ) இந்தியா–சீனா
2. ஆ) ஏசியன் (ASEAN)
3. இ) எண்ணை ஏற்றுமதி நிறுவனங்களின் அமைப்பு
4. அ) வங்காளதேசம்
5. அ) 3 1 4 2
6. இ) 7
7. ஈ) இலங்கை மற்றும் மாலத்தீவுகள்
8. அ) அருணாச்சல பிரதேசம் & சிக்கிம்
9. அ) 5
10. ஆ) சர் சிரில் ராட்க்ளிஃப்
11. அ) கான் அப்துல் கபார் கான்
12. இ) இந்தியா
13. ஆ) காந்தகார்
14. ஈ) பராக்கா ஒப்பந்தம்
15. ஆ) டாக்கா பல்கலைக் கழகம்
16. அ) பூட்டான்
17. இ) இந்தியப் பெருங்கடல்
18. ஆ) மியான்மர்
19. ஈ) நேபாளம்
20. இ) காஷ்மீர்
21. அ) 1972
22. ஈ) இலங்கை
23. ஆ) அசோகர்
24. இ) சபஹார்
25. அ) ஷாங்காய்

II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. __________ இமயமலையில் உள்ள ஒரு சிறிய அரசு ஆகும்.
2. இந்தியா, தென்கிழக்காசியாவிற்குள் செல்வதற்கான ஒரு நுழைவு வாயிலாக __________ இருக்கிறது.
3. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான இடைப்படு நாடு __________ ஆகும்.
4. இந்தியாவிற்கு சொந்தமான __________ என்ற பகுதி மேற்கு வங்காளம் – வங்காளதேச எல்லையில் அமைந்துள்ளது.
5. இடிமின்னல் நிலம் என்று அறியப்படும் நாடு __________ ஆகும்.
6. __________ ஆல் இந்தியாவும் இலங்கையும் பிரிக்கப்படுகின்றன.

கூடுதல் வினாக்கள்

7. இந்தியாவின் முதல் பிரதமர் __________.
8. அதிக எண்ணிக்கையிலான அண்டை நாடுகளுடன் தனது எல்லைகளை பகிர்ந்து கொண்டுள்ள நாடுகள் __________, __________.
9. இந்திய சமய பரப்புக்குழுக்களை சீனா, மத்திய ஆசியா மற்றும் ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பிய இந்திய மன்னர் __________.

10. வங்காள தேசத்தின் சுதந்திரத்தை அங்கீகரித்த முதல் நாடு __________.
11. இந்தியாவிற்கும் வங்காளதேசத்திற்கும் பொதுவானதாக உள்ள நதிகளின் எண்ணிக்கை __________.
12. பராக்கா ஒப்பந்தம் கையெழுத்தான ஆண்டு __________ .
13. கடல் சார்ந்த தொடர்புகளுக்கு இந்தியாவையே பெரிதும் நம்பியுள்ள நாடு __________.
14. இந்தியாவிலிருந்து பூட்டானுக்குச் சென்று புத்தசமயத்தைப் பரப்பிய துறவி __________.
15. இந்தியா தன் இரண்டாவது மிக நீளமான எல்லையை __________ நாட்டுடன் பகிர்ந்துள்ளது.
16. மியான்மரில் இந்தியா உருவாக்கிவரும் பன்முக மாதிரி போக்குவரத்துத் திட்டம் __________.
17. நேபாளத்தில் பெரிய முதலீட்டாளராகத் திகழும் நாடு __________ .
18. இந்தியாவையும் காட்மண்டுவையும் இணைப்பதற்காக கட்டப்பட்டுள்ள இணைப்பு __________.
19. __________ மொழியை இந்தியா அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் சேர்த்துள்ளது.
20. சிம்லா ஒப்பந்தம் __________ மற்றும் __________ நாடுகளுக்கிடையே ஏற்படுத்தப்பட்டது.
21. இலங்கையின் வட பகுதியைக் கைப்பற்றிய சோழ மன்னர்கள் __________, __________.
22. மௌரிய மன்னர் அசோகரின் மகன் __________ மகள் __________.
23. __________ நாட்டின் விண்வெளி ஏவுதளங்களை இஸ்ரோ (ISRO) பயன்படுத்தி வருகிறது.
24. உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு ஒரு மாற்றாக அமைக்கப்பட்ட கூட்டமைப்பு __________.
25. பிரிக்ஸ் (BRICS) என்ற சொல்லை உருவாக்கிய பொருளாதார மேதை __________.
26. OPEC அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம் __________.
27. OPEC ன் சின்னத்தை வடிவமைத்த ஆஸ்திரிய வடிவமைப்பாளர் __________.

விடைகள்

1. பூட்டான்
2. மியான்மர்
3. நேபாளம்
4. டீன்பிகா
5. பூட்டான்
6. பாக் ஜலசந்தி
7. ஜவகர்லால் நேரு
8. சீனா, ரஷ்யா
9. கனிஷ்கர்
10. இந்தியா
11. 54
12. 1977
13. பூட்டான்
14. குருபத்மசம்பவா
15. மியான்மர்
16. கலடன்
17. இந்தியா
18. மகேந்திர ராஜ் மார்க்
19. நேபாள
20. இந்தியா, பாகிஸ்தான்
21. இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன்
22. மகிந்தா, சங்கமித்திரை
23. பிரான்ஸ்
24. பிரிக்ஸ் கூட்டமைப்பு
25. ஜிம் ஓ நெயில்
26. வியன்னா
27. ஸ்வோபோடா

III. சரியான கூற்றினை தேர்வு செய்யவும்:

பாடநூல் வினாக்கள்

1. இந்தியா மற்றும் மியான்மரின் கலடன் போக்குவரத்துத் திட்டம் பின்வரும் போக்குவரத்து முறைகளில் எந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது?
   1) சாலை 2) ரயில் வழி 3) கப்பல் 4) உள்நாட்டு நீர் போக்குவரத்து
   கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்தி சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும்.
   அ) 1, 2 மற்றும் 3 ஆ) 1, 3 மற்றும் 4 இ) 2, 3 மற்றும் 4 ஈ) 1, 2, 3 மற்றும் 4

2. கூற்று : இந்தியாவும் பிரான்சும் சர்வதேச சூரிய சக்திக் கூட்டணியை (international Solar Alliance) தொடங்கியுள்ளன.
   காரணம் : இது கடகரேகை மற்றும் மகரரேகை ஆகியவற்றுக்கு இடையேயான நாடுகளை சூரிய ஆற்றலுக்கான ஒத்துழைப்பில் ஒன்றிணைப்பதற்காகும்.

குடிமையியல்

அ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று தவறு; காரணம் சரி.
ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

3. பின்வரும் கூற்றுகளில் எது/எவை உண்மையானவை?
1. இந்திய பண்பாட்டு உறவுகளுக்கான குழு, டாக்கா பல்கலைக்கழகத்தில் 'தாகூர் இருக்கை' ஏற்படுத்த வழிவகை செய்துள்ளது.
2. மேற்கத்திய நாடுகளுக்கான இந்தியாவின் நுழைவு வாயில் மியான்மர் ஆகும்.
3. நேபாளம், பூட்டான் ஆகியவை நிலப்பகுதிகளால் சூழப்பட்ட நாடுகளாகும்.
4. இந்தியாவின் நாளந்தா பல்கலைக்கழகத் திட்டத்தின் ஒரு பங்குதாரர் நாடு இலங்கையாகும்.

அ) 1, 2 மற்றும் 3 ஆ) 2, 3 மற்றும் 4 இ) 1, 3 மற்றும் 4 ஈ) 1, 2 மற்றும் 4

4. கூற்று : இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் ஒபெக் (OPEC) ஆர்வம் காட்டியுள்ளது.
காரணம் : தேவையான எண்ணெய் வளங்கள் இல்லாததால் இந்தியா விவசாயம் மற்றும் தொழில்துறை உற்பத்தியில் கவனம் செலுத்துகிறது.

அ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது. ஆ) கூற்று தவறு, காரணம் சரி.
இ) கூற்று காரணம் இரண்டும் சரி. ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு.

கூடுதல் வினாக்கள்

5. i) இந்தியாவின் தென்கிழக்கில் மாலத்தீவு அமைந்துள்ளது.
ii) இந்தியாவின் மேற்கில் வங்காள தேசம் அமைந்துள்ளது.
iii) இந்தியாவின் வடமேற்கில் ஆப்கானிஸ்தான் அமைந்துள்ளது.
iv) இந்தியாவின் வடக்கில் சீனா அமைந்துள்ளது.

அ) (i) மற்றும் (ii) சரி. ஆ) (iii) மற்றும் (iv) சரி.
இ) (ii) மற்றும் (iv) சரி. ஈ) (i) மற்றும் (iii) சரி.

6. கூற்று : சீனாவில் துவக்கி வைக்கப்பட்ட ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பில் இந்தியாவிற்கு பார்வையாளர் தகுதியை வழங்கியுள்ளது.
காரணம் : இந்தியாவும் சீனாவும் கல்வி பரிமாற்ற திட்டத்தில் கையெழுத்திட்டுள்ளன.

அ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு ஆ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு.

விடைகள்

1. ஆ) 1, 3 மற்றும் 4
2. அ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.
3. இ) 1, 3 மற்றும் 4
4. இ) கூற்று காரணம் இரண்டும் சரி.
5. ஆ) (iii) மற்றும் (iv) சரி.
6. இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி.

IV. பொருத்துக:

பாடநூல் வினாக்கள்

அ)

1.	பிராண்டிக்ஸ் (Brandix)	அ)	வியன்னா
2.	தகவல்தொடர்பு இணக்கத்தன்மை மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம் (COMCASA)	ஆ)	ஜப்பான்
3.	ஷிங்கன்சென்	இ)	ஷாங்காய்
4.	பிரிக்ஸ் (BRICS)	ஈ)	அமெரிக்க நாடுகள்
5.	ஒபெக் (OPEC)	உ)	விசாகப்பட்டினத்தின் ஆடை நகரம்

விடை
1) உ
2) ஈ
3) ஆ
4) இ
5) அ

கூடுதல் வினாக்கள்

ஆ)

				விடை
1.	ஆப்கானிஸ்தான்	அ)	சார்க் அமைப்பின் பார்வையாளர்	1) இ
2.	வங்காளதேசம்	ஆ)	கலடன்	2) உ
3.	பூட்டான்	இ)	சல்மா அணை	3) ஈ
4.	சீனா	ஈ)	டிஜிட்டல் நூலகம்	4) அ
5.	மியான்மர்	உ)	பராக்கா ஒப்பந்தம்	5) ஆ

இ)

				விடை
1.	மகேந்திர ராஜ் மார்க்	அ)	தென்கிழக்கு ஆசியா செல்லும் நுழைவாயில்	1) ஈ
2.	பாகிஸ்தான்	ஆ)	நாளந்தா பல்கலைக் கழகத் திட்டம்	2) இ
3.	இலங்கை	இ)	லாகூர் பிரகடனம்	3) ஆ
4.	மாலத்தீவு	ஈ)	நேபாளம்	4) உ
5.	மியான்மர்	உ)	இந்தியப் பெருங்கடல்	5) அ

V. சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை எழுதுக.**
   - ➢ பாகிஸ்தான்
   - ➢ வங்காள தேசம்
   - ➢ ஆப்கானிஸ்தான்
   - ➢ மியான்மர்
   - ➢ சீனா
   - ➢ இலங்கை
   - ➢ நேபாளம்
   - ➢ பூட்டான்
   - ➢ மாலத்தீவு

2. **போர்த்திறம் சார்ந்த பங்களிப்பு ஒப்பந்தம் (SPA) பற்றிய சிறு குறிப்பு வரைக.**
   - ➢ இந்தியா, ஆப்கானிஸ்தான் உறவு போர்த்திறம் சார்ந்த பங்களிப்பு ஒப்பந்தம் மூலம் வலிமை பெற்றுள்ளது.
   - ➢ இந்த ஒப்பந்தம் ஆப்கானிஸ்தானின் உட்கட்டமைப்பை மறுசீரமைக்கவும், நிறுவனங்கள், வேளாண்மை, நீர், கல்வி, சுகாதாரம் மற்றும் வரியில்லாமல் இந்திய சந்தையை எளிதாக அடைதல் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை நல்கவும் வழிகோலுகிறது.

3. **பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

➢ பிரேசில்	B
➢ ரஷ்யா	R
➢ இந்தியா	I
➢ சீனா	C
➢ தென்னாப்பிரிக்கா	S

4. **கலடன் பன்முக மாதிரி போக்குவரத்துத் திட்டம் பற்றி நீவிர் அறிவது என்ன?** **PTA**
   - ➢ கொல்கத்தாவை மியான்மரில் உள்ள சிட்டவேயுடன் இணைப்பதற்காக சாலை – நதி – துறைமுகம் – சரக்கு போக்குவரத்துத் திட்டமான கலடன், பன்முக மாதிரி போக்குவரத்துத் திட்டத்தினை இந்தியா உருவாக்கி வருகிறது.

5. **சபஹார் ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.** **PTA**
   - ➢ சபஹார் ஒப்பந்தம் எனப்படும் முக்கூட்டு ஒப்பந்தம் இந்தியா, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது.
   - ➢ இதன்படி சபஹார் துறைமுகத்தை பயன்படுத்தி மூன்று நாடுகளிலும் போக்குவரத்து வழித்தடங்கள் ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.
   - ➢ இத்துறைமுகம் பாகிஸ்தானை தவிர்த்து ஆப்கானிஸ்தான் மற்றும் ஆசியா ஆகிய சந்தைகளை இந்தியா அணுக ஒரு நுழைவு வாயிலாக இருக்கும்.

6. **இந்தியா உறுப்பினராக உள்ள ஏதேனும் ஐந்து உலகளாவிய குழுக்களை பட்டியலிடுக.**
   - ➢ ஷாங்காய் ஒத்துழைப்பு நிறுவனம் (SCO).
   - ➢ ஜி.சி.சி (GCC) வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில்
   - ➢ ஈ.ஏ.எஸ் (EAS) கிழக்கு ஆசிய உச்சி மாநாடு
   - ➢ ஆர்.சி.இ.பி. (RCEP) ஒருங்கிணைந்த வர்த்தக மண்டலம்
   - ➢ எம்.ஜி.சி (MGC) மீகாங்–கங்கா ஒத்துழைப்பு

7. **ஜப்பான் - இந்தியா உற்பத்தி நிறுவனத்தின் (JIM) பங்கு என்ன?**
   - ➢ உற்பத்தி துறையில் உற்பத்தி மற்றும் திறன் இந்தியா (Make in India, Skill India) திட்டங்களில் பங்களிக்கவும் ஜப்பானிய உற்பத்தி திறன்களை வழங்கி இந்தியாவின் உற்பத்தித் தொழில்துறை தளத்தை மேம்படுத்தவும் 30,000 இந்திய மக்களுக்கு பயிற்சி வழங்க ஜப்பான் - இந்தியா உற்பத்தி நிறுவனம் அறிவித்துள்ளது.
   - ➢ 2017 ஆம் ஆண்டு குஜராத், கர்நாடகம், ராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு ஆகிய நான்கு மாநிலங்களில் ஜப்பான் - இந்தியா உற்பத்தி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கூடுதல் வினாக்கள்

8. **இந்தியா அண்டை நாடுகளுடன் கொண்டுள்ள உறவுகளைக் குறிப்பிடுக.**
   - ➢ இந்தியா தனது அண்டைநாடுகளுடன் வரலாற்று ரீதியாகவும், சமய, பொருளாதார, இன மற்றும் மொழியின் அடிப்படையிலும் நல்லுறவைப் பேணுகிறது.

9. **பூட்டானில் புத்த சமயம் எவ்வாறு பரவியது?**
   - ➢ குரு பத்மசம்பவா எனும் புத்த துறவி இந்தியாவில் இருந்து பூட்டானுக்குச் சென்றார். அங்கு தனது செல்வாக்கை ஏற்படுத்தி புத்த சமயத்தைப் பரப்பியதன் மூலம் இருநாட்டு மக்களிடையே பாரம்பரியத்தை உறுதிப்படுத்தினார்.

10. **மக்மகான் எல்லைக்கோடு – குறிப்பு வரைக.**
    - ➢ இந்தியா, சீனா மற்றும் பூட்டானின் கிழக்குப் பகுதி ஆகிய பகுதிகளுக்கு இடையேயான எல்லைக்கோடு மக்மகான் எல்லைக்கோடு ஆகும்.
    - ➢ இது 1914ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இந்தியா, திபெத் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.
    - ➢ பிரிட்டிஷ் இந்தியாவின் சார்பில் இந்தியாவிற்கான செயலாளர் ஆர்தர் ஹென்றி மக்மகான் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

11. **"கட்டுப்பாடுக் கோடு" – குறிப்பு வரைக.**
    - ➢ 1949ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்ட போர் நிறுத்தக்கோடு (இந்தியா – பாகிஸ்தான் இடையே) 1972ஆம் ஆண்டிற்குப் பிறகு "எல்லைக் கட்டுப்பாடு கோடு" என அழைக்கப்பட்டது.
    - ➢ இது 1972ஆம் ஆண்டின் சிம்லா ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்றுக் கொள்ளப்பட்ட எல்லையாகும்.
    - ➢ இக்கோடு பிரிவினை செய்யப்பட்டபோது ராட்க்ளிஃப் கோடு என்று அழைக்கப்பட்டது. ஏனெனில் ராட்க்ளிஃப் என்பவர் எல்லை ஆணையத்தின் தலைவராக இருந்தார். இக்கோடு தற்போது கட்டுப்பாடுக் கோடு என அழைக்கப்படுகிறது.

12. **மேற்கு ஆசிய நாடுகள் யாவை?**
    - ➢ எகிப்து ➢ அரேபிய தீபகற்பம் ➢ துருக்கி ➢ ஈரான் – என்பனவாகும்

13. **ஒபெக் நிறுவன உறுப்பினர் நாடுகள் யாவை?**
    - ➢ ஈரான் ➢ சவுதி அரேபியா ➢ ஈராக்
    - ➢ வெனிசுலா ➢ குவைத் – என்பனவாகும்

14. **பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் அமைப்பின் திட்டங்கள் யாவை?**

- அதன் உறுப்பு நாடுகளுக்குள் எண்ணெய் கொள்கைகளை ஒருங்கிணைத்தல்.
- எண்ணெய் சந்தையை நிலைநிறுத்த உதவுதல்.
- பெட்ரோலிய உற்பத்தியாளர்களுக்கு நியாயமான நிலையான வருவாய்கிடைப்பதை உறுதி செய்தல்.
- எண்ணெய் நுகர்வு செய்யும் நாடுகளுக்கு திறமையான சிக்கனமான, வழக்கமான, வினியோகத்தை அளித்தல்.
- பெட்ரோலியத் தொழிலில் முதலீடு செய்பவர்களுக்கு மூலதனத்திற்கு நியாயமான வருவாய் கிடைக்கச் செய்தல்.

15. **பிரிக்ஸ் நிதிக் கட்டமைப்பு பற்றி எழுதுக.**

- புதிய மேம்பாட்டு வங்கி என்பது பலதுறை வளர்ச்சி வங்கி ஆகும்.
- அடிப்படைக் கட்டமைப்புகளுக்குக் கடன் வழங்குவதே இதன் முதன்மைச் செயலாகும்.
- சமூக சுற்றுச்சூழல் மற்றும் நீடித்த பொருளாதார திட்டங்களுக்கு பங்களிப்பது இதன் முக்கிய நோக்கமாகும்.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களை மேம்படுத்தும் திட்டங்களுக்கு இது முன்னுரிமை வழங்குகிறது.

16. **பிரிக்ஸ் அமைப்பு உறுப்புநாடுகளிடையே ஒத்துழைப்பை அதிகரிக்கும் காரணிகள் யாவை?**

- வளரும் நாடுகளிடையே தற்போதைய சூழ்நிலையைப் பிரதிபலிக்கும் ஒரு பொருளாதார ஒழுங்கை உருவாக்குவதற்கு பிரிக்ஸ் அமைப்பு முயற்சிகளைத் தூண்டும்.
- உலக நிர்வாகத்தில் பிரிக்ஸ் நாடுகளின் மாற்று யோசனை இதர நாடுகளின் ஆதரவை ஈர்க்கும்.
- மற்ற துறைகளுடனான பிரிக்ஸ் தொடர்புகளின் விரிவாக்கம் அதை மேலும் வலுவான கூட்டாண்மையாக உருவாக்கும்.

17. **OPEC (ஒபெக்) நாடுகளுடன் இந்தியா கொண்டுள்ள உறவினை விளக்குக.**

- கச்சா எண்ணெய் அதிக அளவில் நுகர்வு செய்யும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் தங்களுடைய ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளன.
- 86 சதவிகித கச்சா எண்ணெய், 70 சதவிகித இயற்கை எரிவாயு, 95 சதவிகித சமையல் எரிவாயு ஆகியவற்றை இந்தியா ஒபெக் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறது.
- அதிக எண்ணெய் தேவையினால் இந்தியா ஒரு சிறந்த பங்காளராக ஒபெக் நாடுகளால் அடையாளம் காணப்படுகிறது.

VI. விரிவாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **இந்தியா மற்றும் சர்வதேச அமைப்புகள் குறித்தும் இந்தியா உறுப்பினராக உள்ள ஏதேனும் மூன்று உலகளாவிய குழுக்கள் பற்றிய சிறப்பு அம்சங்கள் குறித்தும் எழுதுக.**

இந்தியா மற்றும் சர்வதேச அமைப்புகள்:

- இந்தியா ஒரு வலிமை வாய்ந்த வல்லரசாகும். வளர்ந்து வரும் உலகளாவிய செல்வாக்கை அனைத்து நாடுகளிலும் பெற்றுள்ளது.
- புதிதாக தொழில் மயமாக்கப்பட்ட நாடாக இருப்பதால் பல்வேறு நாடுகளுடன் ஒத்துழைக்கும் சிறந்த வரலாற்றைக் கொண்டுள்ளது.
- பல்வேறு சர்வதேச அமைப்புகளில் முக்கியத்துவம் வாய்ந்த உறுப்பினராக இந்தியா செயல்படுவதோடு அவற்றில் சிலவற்றின் நிறுவன உறுப்பினராகவும் இருந்து வருகிறது.
- இந்தியா முறைப்படி அமைக்கப்பட்ட அமைப்புகளான ஐ.நா.சபை, அணிசேரா இயக்கம், சார்க், ஜி–20 மற்றும் காமன்வெல்த் போன்றவைகளில் உறுப்பினராக உள்ளது.
- இராணுவ மோதல்களை முடிவுக்கு கொண்டுவருவது மற்றும் நாடுகளிடையே அமைதி மற்றும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது போன்ற ஐ.நா.சபை எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் இந்தியா உதவுகிறது.

ஐ.பி.எஸ்.ஏ (IBSA):

- ஐ.பி.எஸ்.ஏ. என்ற உலகளாவிய குழுவில் இந்தியா, பிரேசில் மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இக்குழு வேளாண்மை, கல்வி, ஆற்றல் வர்த்தகம், கலாச்சாரம் மற்றும் பாதுகாப்பில் கவனம் செலுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

பி.சி.ஐ.எம்: (BCIM):

- இந்தியா, சீனா, வங்காளதேசம் மற்றும் மியான்மர் ஆகிய நாடுகள் இக்குழுவில் இடம்பெற்றுள்ளன. இதன் குறிக்கோள்கள், இயற்கைப் பேரழிவுகள் மற்றும் தரவு மீறல்கள் போன்ற அச்சுறுத்தல்களை சமாளித்தல், வணிக நலன் பாதுகாத்தல் என்பனவாகும்.

ஈ.ஏ.எஸ் (EAS) (கிழக்கு ஆசிய உச்சிமாநாடு):

- இவ்வுலகளாவிய குழுவில் 10 ஆசிய நாடுகள் மற்றும் ஐக்கிய அமெரிக்கா, சீனா, இந்தியா, ஜப்பான் உள்பட முக்கிய எட்டு நாடுகள் உறுப்பு நாடுகளாக இடம் பெற்றுள்ளன. அமைதி மற்றும் நிலைத்தன்மையை ஊக்குவித்தல் இதன் முக்கிய குறிக்கோள்களாகும்.

2. பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவாவதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக. **PTA**

பிரிக்ஸ் கூட்டமைப்பு உருவாவதற்கான காரணம்:

- உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு ஒரு மாற்றாகவும், அமெரிக்க மேலாதிக்கத்திற்கு போட்டியாகவும் பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.
- உறுப்பு நாடுகளிடையே பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றவும், சொந்த மற்றும் சுயமாக நிரூபிக்கும் விதமாக இக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

பிரிக்ஸின் நோக்கங்கள்:

- பிராந்திய வளர்ச்சியை அடைவது.
- வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் இடையே பாலமாக செயல்படுவது.
- மனித மேம்பாட்டிற்கு மிகப்பரந்த அளவில் பங்களிப்பு செய்தல்.
- அதிக சமத்துவம் மற்றும் நியாயமான உலகத்தை ஏற்படுத்துதல்.
- வணிக ஒத்துழைப்பை அதிகரிக்க பிரிக்ஸ் நாடுகளிடையே உள்நாட்டு நாணயங்கள் மூலம் வணிகம் மேற்கொள்வதை ஊக்குவித்தல் மற்றும் நடப்பு சர்வதேச சிக்கல்களை எதிர்கொள்ளுதல்.
- உறுப்பு நாடுகளிடையே தகவல் தொழில்நுட்பங்களை பரிமாறிக் கொள்வதை ஊக்குவித்தல், உறுப்பு நாடுகளில் வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு, பொருளாதார மாற்றங்கள் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தல்.

3. பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் அமைப்பின் (OPEC) திட்டம் குறித்தும் அவ்வமைப்பு எவ்வாறு பிற நாடுகளுக்கு உதவி செய்கின்றன என்பது குறித்தும் குறிப்பிடுக. **PTA**

பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் அமைப்பின் திட்டம்:

- அதன் உறுப்பு நாடுகளுக்குள் எண்ணெய் கொள்கையை ஒருங்கிணைத்தல்.
- எண்ணெய் சந்தையை நிலைநிறுத்த உதவுதல்.
- பெட்ரோலிய உற்பத்தியாளர்களுக்கு நியாயமான நிலையான வருவாய் கிடைப்பதை உறுதி செய்தல்.
- எண்ணெய் நுகர்வு செய்யும் நாடுகளுக்கு திறமையான, சிக்கனமான, வழக்கமான, வினியோகத்தை அளித்தல்.
- பெட்ரோலியத் தொழிலில் முதலீடு செய்பவர்களுக்கு மூலதனத்திற்கு நியாயமான வருவாய் கிடைக்கச் செய்தல்.

ஒபெக் பிற நாடுகளுக்குச் செய்யும் உதவிகள்:

- பெட்ரோலிய ஏற்றுமதி செய்யும் நாடுகளின் சர்வதேச மேம்பாட்டு நிதி என்பது குறைந்த வட்டி வீதத்தில் கடன் அளிக்கும் நிதி நிறுவனம் ஆகும். இது சமூக மற்றும் மனிதாபிமான திட்டங்களுக்கு மானியங்களை வழங்குகிறது.

➢ புத்தகங்கள், அறிக்கைகள், வரைபடங்கள், பெட்ரோலிய எரிசக்தி மற்றும் எண்ணெய் சந்தை தொடர்பான மாநாட்டு நடவடிக்கைகள் உள்பட 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொகுதிகளைக் கொண்ட ஒரு தகவல் மையத்தை ஒபெக் கொண்டுள்ளது. இத்தகவல் மையம் பொதுமக்களாலும், பெரும்பாலும் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களாலும் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கூடுதல் வினாக்கள்

4. இந்தியா–பூட்டான் உறவு பற்றி எழுதுக.

➢ பூட்டான் இமயமலையில் உள்ள ஒரு சிறிய அரசு ஆகும். "இடி மின்னல் நிலம்" என்று அறியப்படும் இது உலகின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றாகும்.

➢ இந்தியா மற்றும் பூட்டான் இடையேயான இராஜதந்திர உறவுகள் 1968ஆம் ஆண்டில் இந்திய பிரதிநிதி ஒருவரை திம்புவில் நியமித்ததிலிருந்து தொடங்கியது.

➢ பூட்டான் நிலங்களால் சூழப்பட்ட நாடாகும். அதனால் கடல் சார்ந்த தொடர்புகளுக்கு இந்தியாவையே பெரிதும் சார்ந்துள்ளது. பூட்டானின் பொருளாதார மேம்பாட்டிற்கு இந்தியா முதன்மை பங்காற்றுகிறது.

➢ இந்தியா "பாரத் முதல் பூட்டான் வரை" (B2B) என்று அறியப்படும் இருதரப்பு வணிக உறவினை அறிவித்தது.

➢ பூட்டான் மாணவர்கள் புகழ்பெற்ற நிறுவனங்களில் உயர்கல்வி பெறுவதற்கு இந்தியா உதவித்தொகை அளிப்பதோடு, பூட்டானில் ஒரு டிஜிட்டல் நூலகம் அமைத்திடவும் உதவி செய்துள்ளது.

➢ நேரு–வாங்சுக் கல்வி உதவித் தொகை தகுதியும் திறமையும் கொண்ட பூட்டான் மாணவர்கள் பெற்றிடவும், தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மையான இந்தியக் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலவும் வாய்ப்பு அளிக்கிறது.

➢ இந்தியா மற்றும் பூட்டான் இடையே இருதரப்பு ஒத்துழைப்பிற்கு நீர்மின்சக்தித் துறை ஒரு முக்கிய எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இதுவரை இந்திய அரசாங்கம் மூன்று நீர்மின்சக்தித் திட்டங்களை பூட்டானில் அமைத்துள்ளது.

➢ பூட்டான் நாட்டில் தொலைத் தொடர்பு வசதியை ஏற்படுத்தவும், மருத்துவமனைகள், சாலைகள் மற்றும் பாலங்கள் ஆகியவற்றைக் கட்டுவதற்கும் அந்நாட்டின் அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்தவும் இந்தியா உதவியுள்ளது.

5. இந்தியா, மேற்கு ஆசிய நாடுகளுடன் கொண்டுள்ள நல்லுறவு பற்றி விவரி. **PTA**

➢ மேற்கு ஆசியா என்பது எகிப்து, அரேபியா தீபகற்பம், துருக்கி மற்றும் ஈரான் ஆகிய நாடுகளை உள்ளடக்கியது ஆகும்.

➢ இந்தியாவும் மேற்கு ஆசிய நாடுகளும் வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்தே உறவுகளை கொண்டிருக்கின்றன. சிந்துவெளி மற்றும் மெசபடோமியா நகரங்களுக்கு இடையே வணிக உறவுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

➢ மேற்கு ஆசியா பொருளாதார அடிப்படையில் குறிப்பிடத்தக்க பகுதியாக இந்தியாவிற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. நிலத்தால் சூழப்பட்ட, எண்ணெய் வளமிக்க மத்திய ஆசியாவிற்கு ஒரு நுழைவு வாயிலாக அமைந்துள்ளது.

➢ புதிய நூற்றாண்டு தொடங்கியதிலிருந்து இந்தியா மற்றும் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் இடையிலான உறவில் அசாதாரணமான திருப்பம் ஏற்பட்டுள்ளது.

➢ சபஹார் ஒப்பந்தம் எனப்படும் முக்கூட்டு ஒப்பந்தம் இந்தியா, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

➢ இதன்படி சபஹார் துறைமுகத்தைப் பயன்படுத்தி மூன்று நாடுகளிலும் போக்குவரத்து வழித்தடங்கள் ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

➢ இத்துறைமுகம் பாகிஸ்தானைத் தவிர்த்து ஆப்கானிஸ்தான் மற்றும் ஆசியா ஆகிய சந்தைகளை இந்தியா அணுக ஒரு நுழைவு வாயிலாக இருக்கும்.

அலகு 1 பொருளியல்

மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி : ஓர் அறிமுகம்

மனவரைபடம்



நினைவில் கொள்க

- ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பே **"மொத்த உள்நாட்டு உற்பத்தி"** (GDP) ஆகும்.
- நுகர்வுக்காக அல்லது பயன்பாட்டுக்காக உள்ள பண்டங்கள் மற்றும் பணிகள் **"இறுதி நிலை பண்டங்கள் மற்றும் பணிகள்"** எனப்படுகிறது.
- எந்த பண்டங்கள் மற்றும் பணிகள், மற்றொரு பண்டப்பணிகளை உற்பத்தி செய்யப் பயன்படுகிறதோ அதை **"இடை நிலை பண்டங்கள்"** என்கிறோம்.
- இடைநிலை பண்டத்தின் மதிப்பை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்த்தால் அதன் விளைவை **"இருமுறை கணக்கிடுதல்"** என்கிறோம்.

- ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு **"நாட்டு வருமானம்"** எனப்படுகிறது.
- ஒரு நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் ஈட்டிய வருமானமும், வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் அடங்கியதை **"மொத்த நாட்டு உற்பத்தி"** (GNP) என்கிறோம்.
- மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கியபின் கிடைக்கும் பண மதிப்பு **"நிகர நாட்டு உற்பத்தி"** (NNP) ஆகும்.
- நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுப்பதன் மூலம் பெறப்படுவது "தலா வருமானம்" ஆகும்.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

- "இந்தியாவின் வறுமை மற்றும் பிரிட்டிஷ்யில்லா ஆட்சி" என்ற நூலை எழுதியவர் **தாதாபாய் நௌரோஜி.**
- மொத்த உள்நாட்டு உற்பத்தி ஒரு நாட்டின் பொருளாதார நலத்தை பிரதிபலிக்கிறது.
- **GDP** –யின் நவீன கருத்தினை முதன் முதலில் உருவாக்கியவர் **சைமன் குஸ்நட்** என்பவராவார்
- ஒரு பொருளாதாரத்தின் உண்மையான முன்னேற்றத்தை அளப்பதற்கு பயன்படுவது **மனிதவள** மேம்பாடு குறியீடு (**HDI**) ஆகும்.

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. GNP யின் சமம் ____________.
   அ) பணவீக்கத்திற்காக சரி செய்யப்பட்ட NNP
   ஆ) பணவீக்கத்திற்காக சரி செய்யப்பட்ட GDP
   இ) GDP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்.
   ஈ) NNP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்.

2. நாட்டு வருமானம் அளவிடுவது ____________.
   அ) பணத்தின் மொத்தமதிப்பு
   ஆ) உற்பத்தியாளர் பண்டத்தின் மொத்த மதிப்பு
   இ) நுகர்வு பண்டத்தின் மொத்த மதிப்பு
   ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு

3. முதன்மை துறை இதனை உள்ளடக்கியது
   அ) வேளாண்மை
   ஆ) தானியங்கிகள்
   இ) வர்த்தகம்
   ஈ) வங்கி

4. __________ முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டும் போது, இறுதி பண்டத்தின் மதிப்பை கணக்கிடலாம்.
   அ) செலவு முறை
   ஆ) மதிப்பு கூட்டு முறை
   இ) வருமான முறை
   ஈ) நாட்டு வருமானம்

5. GDPயில் எந்த துறை மூலம் அதிகமான வேலைவாய்ப்பு ஏற்படுகிறது? **PTA**
   அ) வேளாண் துறை
   ஆ) தொழில் துறை
   இ) பணிகள் துறை
   ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

6. பணிகள் துறையில் நடப்பு விலையில் மொத்த மதிப்பு கூடுதல் 2018 – 2019ல் ____________ லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.
அ) 91.06 ஆ) 92.26
இ) 80.07 ஈ) 98.29

7. வேளாண் பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா ____________ அதிகமாக உற்பத்தியாளர் ஆகும்.
அ) 1 வது ஆ) 3 வது இ) 4 வது ஈ) 2 வது

8. இந்தியாவில் பிறப்பின் போது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் ____________ ஆண்டுகள் ஆகும்.
அ) 65 ஆ) 60 இ) 70 ஈ) 55

9. கீழ்கண்டவற்றுள் எது வர்த்தக கொள்கை?
அ) நீர்பாசனக் கொள்கை ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை
இ) நில சீர்திருத்தக் கொள்கை ஈ) கூலிக் கொள்கை

10. இந்திய பொருளாதாரம் என்பது ____________.
அ) வளர்ந்து வரும் பொருளாதாரம் ஆ) தோன்றும் பொருளாதாரம்
இ) இணை பொருளாதாரம் ஈ) அனைத்தும் சரி

கூடுதல் வினாக்கள்

11. இந்தியா எவ்வாறு செயல்படுகிறது என்பதை விளக்குவது
அ) GDP ஆ) GNP இ) NNP ஈ) PCI

12. ஒரு நாட்டில் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பு
அ) தலா வருமானம் ஆ) செலவிடத் தகுதியான வருமானம்
இ) தனிப்பட்ட வருமானம் ஈ) நாட்டு வருமானம்

13. ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் மதிப்பு
அ) மொத்த நாட்டு உற்பத்தி ஆ) நிகர நாட்டு உற்பத்தி
இ) மொத்த உள்நாட்டு உற்பத்தி ஈ) நிகர உள்நாட்டு உற்பத்தி

14. மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கியபின் கிடைப்பது
அ) நிகர உள்நாட்டு உற்பத்தி ஆ) நிகர நாட்டு உற்பத்தி
இ) மொத்த உள்நாட்டு உற்பத்தி ஈ) இறுதிநிலை உற்பத்தி

15. நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுப்பதன் மூலம் பெறப்படுவது
அ) தலா வருமானம் ஆ) தனிப்பட்ட வருமானம்
இ) உள் நாட்டு வருமானம் ஈ) செலவிடத் தகுதியான வருமானம்

16. "இந்தியாவின் வறுமை மற்றும் ஒரு பிரிட்டிஷ்யில்லா ஆட்சி" என்ற நூலின் ஆசிரியர்
அ) சர்தார் வல்லபாய் படேல் ஆ) அன்னிபெசன்ட்
இ) தாதாபாய் நௌரோஜி ஈ) லாலா லஜபதிராய்

17. இரண்டாம் துறைத் தொழில்களில் ஒன்று
அ) மீன் பிடித்தல் ஆ) ஜவுளித் தொழில்
இ) வர்த்தகம் ஈ) வங்கி

18. மூன்றாம் துறைத் தொழில்களில் ஒன்று
அ) கால் நடைப் பண்ணைகள் ஆ) சிறு தொழில்கள்
இ) காடுகள் வளர்த்தல் ஈ) கல்வி

19. உலகளாவிய மென்பொருள் வணிகங்களுக்கான ஒரு சிறந்த மையமாக விளங்குவது
அ) டெல்லி ஆ) மும்பை
இ) பெங்களூரு ஈ) கொல்கத்தா

20. பன்னாட்டு நிதி நிறுவனத்தின் (IMF) உலக பொருளாதாரக் கண்ணோட்டத்தின் படி 2018 ல் இந்தியாவின் GDP வளர்ச்சி விகிதம்
அ) 7.3 ஆ) 3.7
இ) 8.3 ஈ) 3.8

விடைகள்

1. இ) GDP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்.
2. ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு
3. அ) வேளாண்மை
4. ஆ) மதிப்பு கூட்டு முறை
5. இ) பணிகள் துறை
6. ஆ) 92.26
7. ஈ) 2வது
8. அ) 65
9. ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை
10. ஈ) அனைத்தும் சரி
11. அ) GDP
12. ஈ) நாட்டு வருமானம்
13. இ) மொத்த உள்நாட்டு உற்பத்தி
14. ஆ) நிகர நாட்டு உற்பத்தி
15. அ) தலா வருமானம்
16. இ) தாதாபாய் நௌரோஜி
17. ஆ) ஜவுளித் தொழில்
18. ஈ) கல்வி
19. இ) பெங்களூரு
20. அ) 7.3

II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. இந்தியாவில் மிகப்பெரிய துறை ____________ துறையாகும்.
2. GDP ____________ பொருளாதாரத்தின் ஒரு குறியீடாகும்.
3. இரண்டாம் துறையை வேறுவிதமான ____________ துறை என அழைக்கலாம்.
4. இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி இயந்திரம் ____________ துறையாகும்.
5. இந்தியா உலகத்தில் ____________ மிகப்பெரிய பொருளாதாரம் ஆகும்.
6. இந்தியா ____________ மிக வேகமாக வளரும் நாடாகும்.
7. GDPயின் விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற நவீன மயமாக்கத்துடன் கூடிய விரைவான தொழில் மயமாக்கல் என்று ____________ கொள்கை கூறுகிறது.

கூடுதல் வினாக்கள்

8. ____________ என்பது தொடக்கூடிய பொருளாகும்.
9. ____________ என்பது தொட்டு உணரமுடியாத நடவடிக்கைகளாகும்.
10. அங்காடியில் விற்கும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பை அளவிடுவது ____________
11. நுகர்வுக்காக அல்லது பயன்பாட்டுக்காக உள்ள பண்டங்கள் மற்றும் பணிகள் ____________ என அழைக்கப்படுகின்றன.
12. இடைநிலை பண்டத்தின் மதிப்பை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்த்தால், அதன் விளைவை ____________ என அழைக்கிறோம்.
13. மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தை கழித்து பின் கிடைப்பது ____________ உற்பத்தியாகும்.
14. ____________ உற்பத்தி ஒரு நாட்டின் பொருளாதார நலத்தைப் பிரதிபலிக்கிறது.
15. GDP –யின் நவீன கருத்தை முதன் முதலில் உருவாக்கியவர் ____________
16. இந்திய பொருளாதாரம் பரவலாக ____________ துறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
17. இந்தியாவில் மிகப்பெரிய துறை ____________ ஆகும்.
18. உலகில் இந்தியா தொழில் துறையில் ____________ இடத்தில் உள்ளது.
19. ஒரு பொருளாதாரத்தின் உண்மையான முன்னேற்றத்தை அளப்பதற்குப் பயன்படும் குறியீடு ____________
20. ____________ திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு ஒரு உந்துதல் வழங்கப்பட்டது.

விடைகள்

1. பணிகள்	2. வளரும்	3. தொழில்
4. தொழில்	5. ஆறாவது	
6. ஐந்தாவது	7. தொழிற்துறை	8. பண்டங்கள்
9. பணிகள்	10. பணம்	
11. இறுதிநிலை பண்டங்கள் மற்றும் பணிகள்		12. இரு முறை கணக்கிடுதல்
13. நிகர உள்நாட்டு உற்பத்தி	14. மொத்த உள்நாட்டு உற்பத்தி	15. சைமன் குஸ்நட்
16. மூன்று	17. பணிகள் துறை	18. எட்டாவது
19. மனிதவள மேம்பாடு குறியீடு	20. ஐந்தாண்டு	

III. சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. பின்வரும் காரணங்களினால் இந்தியாவின் சேமிப்பு விகிதம் குறைவாக உள்ளது. **PTA**
   i) குறைந்த தனிநபர் வருமானம்
   ii) மோசமான செயல்திறன் மற்றும் பொதுத்துறையின் குறைவான பங்களிப்பு
   iii) வீடுகள் துறையின் மோசமான பங்களிப்பு
   iv) கிராமப்புறத்துறையின் சேமிப்புத் திறனை முழுமையாக பயன்படுத்தாதது.
   அ) i, ii மற்றும் iv சரியானவை
   ஆ) i, ii மற்றும் iii சரியானவை
   இ) i, ii, iii மற்றும் iv சரியானவை
   ஈ) i, iii மற்றும் iv சரியானவை

கூடுதல் வினாக்கள்

2. i) மொத்த உள்நாட்டு உற்பத்தி ஒரு நாட்டின் பொருளாதார நலத்தை பிரதிபலிக்கிறது.
   ii) தேனீர் இறுதிப் பண்டமாகும்.
   iii) தேயிலை, சர்க்கரை மற்றும் பால் ஆகியன இடை நிலைப் பண்டங்களாகும்.
   iv) மதிப்புக் கூட்டு முறையில் ஒவ்வொரு இடை நிலைப் பண்டத்தின் மதிப்பைக் கூட்டினால், இறுதிப் பண்டத்தின் மதிப்பை அளவிடலாம்.
   அ) i மற்றும் ii சரி ஆ) iii மற்றும் iv சரி
   இ) i, ii மற்றும் iii சரி ஈ) அனைத்தும் சரி

3. கூற்று:
   1970 களில் பள்ளிகளில் பந்துமுனை பேனாக்கள் பயன்படுத்த அனுமதிக்கப்படவில்லை
   காரணம்:
   பண்டத்தினுடைய தரம் என்பது மிக முக்கியமானதாகும்.
   அ) கூற்று சரி, காரணம் தவறு
   ஆ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்
   இ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல
   ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

விடைகள்

1. அ) i, ii மற்றும் iv சரியானவை
2. ஈ) அனைத்தும் சரியானவை
3. ஆ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்

IV. பொருத்துக:

பாடநூல் வினா

அ)

		விடை
1. மின்சாரம் / எரிவாயு மற்றும் நீர்	அ) நாட்டு வருமானம் / மக்கள் தொகை	1) இ
2. விலைக் கொள்கை	ஆ) மொத்த நாட்டு உற்பத்தி	2) ஈ
3. GST	இ) தொழில் துறை	3) உ
4. தனிநபர் வருமானம்	ஈ) வேளாண்மை	4) அ
5. C+I+G+(X-M)	உ) பண்டம் மற்றும் பணிகள் மீதான வரி	5) ஆ

கூடுதல் வினாக்கள்

ஆ)

		விடை
1. தாதாபாய் நௌரோஜி	அ) மனித மேம்பாட்டுக் குறியீடு	1) ஆ
2. சைமன் குஸ்நட்	ஆ) இந்தியாவின் வறுமை மற்றும் பிரிட்டிஷ்யில்லா ஆட்சி	2) இ
3. டைலர் கோவன்	இ) GDP-யின் நவீன கருத்து	3) ஈ
4. அமர்த்தியா சென்	ஈ) இடைநிலைப் பண்டங்கள்	4) உ
5. முகஹப்–உல் ஹிக்	உ) இந்திய பொருளியல் அறிஞர்	5) அ

இ)

		விடை
1. GNP	அ) தலா வருமானம்	1) ஆ
2. GDP	ஆ) மொத்த நாட்டு உற்பத்தி	2) ஈ
3. NNP	இ) மனிதவள மேம்பாட்டு குறியீடு	3) உ
4. PCI	ஈ) மொத்த உள்நாட்டு உற்பத்தி	4) அ
5. HDI	உ) நிகர நாட்டு உற்பத்தி	5) இ

V. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. நாட்டு வருமானம் – வரையறு.

- நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.
- பொதுவாக நாட்டு வருமானத்தை மொத்த நாட்டு உற்பத்தி (GNP) அல்லது நாட்டு வருமான ஈவு என்பர்.

2. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பொருள் என்ன?

ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகளின்) மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகும்.

3. GDP யின் முக்கியத்துவத்தை எழுதுக.

- பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆய்வு பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகிறது.
- செல்வம் சமனற்ற முறையில் விநியோகம் செய்யப்படுவது குறித்து அறிந்து கொள்ள உதவுகிறது.
- பணவீக்கம் மற்றும் பண வாட்டத்தின் சிக்கல்கள் பற்றி அறிய உதவுகிறது.
- உலகின் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பீடு செய்வதற்குப் பயன்படுகிறது.
- வாங்கும் திறன் மதிப்பீடு செய்வதற்கு உதவுகிறது.
- பொதுத்துறை பற்றி அனைவரும் தெரிந்துகொள்ள பயன்படுகிறது.
- பொருளாதாரத் திட்டமிட வழிகாட்டியாகவும் பயன்படுகிறது.

4. தனிநபர் வருமானம் என்றால் என்ன? **PTA**

- தனிநபர் (தலா வருமானம்) என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.
- நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுப்பதன் மூலம் தனிநபர் (தலா வருமானம்) பெறப்படுகிறது.

- தனிநபர் வருமானம் (தலா வருமானம்) = நாட்டு வருமானம் / மக்கள் தொகை

5. மதிப்புக் கூட்டு முறையை எடுத்துக்காட்டுடன் வரையறு.

- மதிப்புக் கூட்டு முறையில், ஒவ்வொரு இடைநிலைப் பண்டத்தின் மதிப்பைக் கூட்டினால், இறுதிப் பண்டத்தின் மதிப்பை அடையலாம்.
- உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலைப் பண்டங்களின் மதிப்பைச் சேர்க்கும் பொழுது, பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்களின் மொத்த மதிப்பு கிடைக்கிறது.
- எடுத்துக்காட்டு :

டீ தூள் + பால் + சர்க்கரை = தேநீர்

இடைநிலைப் பண்டங்கள் = இறுதிப்பண்டம்

6. GDPயில் பங்களிப்புள்ள துறைகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

முதன்மைத்துறை (விவசாயம்)	இரண்டாம் துறை (தொழில்)	மூன்றாம் துறை (பணிகள்)
வேளாண்மை	இரும்பு எஃகு தொழில்	அரசு
கால் நடைப் பண்ணைகள்	ஜவுளித் தொழில்	அறிவியல் ஆராய்ச்சி
மீன் பிடித்தல்	சணல்	போக்குவரத்து
சுரங்கங்கள்	சர்க்கரை	தகவல் தொடர்பு
காடுகள் வளர்த்தல்	சிமெண்ட்	வர்த்தகம்
	காகிதம்	தபால் மற்றும் தந்தி
	பெட்ரோலியம்	வங்கி
	ஆட்டோமொபைல்ஸ்	கல்வி
	சிறு தொழில்கள்	பொழுதுபோக்கு
		சுகாதாரம்
		தகவல் தொழில் நுட்பம்

7. இந்தியாவில் 2017ல் GDPயின் துறைவாரியான பங்களிப்பை கூறுக.

விவசாயம் (முதன்மைத் துறை) = 17.09%
தொழில்கள் (இரண்டாம் துறை) = 29.03%
பணிகள் (மூன்றாம் துறை) = 52.08%

8. இந்திய பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும் காரணிகள் யாவை? **PTA**

- இந்தியாவில் உழைக்கும் வயது மக்களின் பங்கு உயர்ந்துள்ளது. இது 58% லிருந்து 64% ஆக உயர்ந்துள்ளது.
- இந்தியா கடுமையான சட்டமுறையையும், அதிகமான ஆங்கில மொழி பேசுபவர்களையும் கொண்டுள்ளது.
- மேலும் தகவல் தொழில்நுட்பத்தில் நிபுணத்துவம் வாய்ந்ததாக இருப்பதால் நிறுவனங்களிடமிருந்து முதலீடுகளை உள்நோக்கி இழுக்கிறது.
- இந்தியாவில் கூலிச்செலவு குறைவாக உள்ளது.

9. இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளின் பெயர்களை எழுதுக.

- வேளாண் கொள்கை
- தொழில் துறைக் கொள்கை
- புதிய பொருளாதாரக் கொள்கை
- இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கொள்கை (சர்வதேச வர்த்தகக் கொள்கை)
- உள்நாட்டு வர்த்தகக் கொள்கை

- வேலை வாய்ப்புக் கொள்கை
- நாணய மற்றும் வங்கிக் கொள்கை
- நிதி மற்றும் பணவியல் கொள்கை
- கூலிக் கொள்கை

10. சிறுகுறிப்பு வரைக 1. GNH, 2. HDI

GNH (மொத்த தேசிய மகிழ்ச்சி)

- (GNH) என்பது அரசாங்கத்தை வழி நடத்தும் ஒரு தத்துவமாகும். அது ஒரு மக்கள் தொகை கூட்டு மகிழ்ச்சி மற்றும் நல்வாழ்வை அளவிடப் பயன்படும் குறியீட்டை உள்ளடக்கியது.
- GNH என்ற வார்த்தையை 1972ல் உருவாக்கியவர் ஜிகமே சிங்கயே வாங்ஹுக் என்ற பூட்டான் அரசர் ஆவார். அவர் GNP -ஐ விட GNH முக்கியம் என்றார்.

GNH ன் நான்கு தூண்கள்:

- நிலையான மற்றும் சமமான சமூக பொருளாதார வளர்ச்சி
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு
- கலாசாரத்தை பாதுகாப்பது மற்றும் மேம்படுத்துவது
- நல்ல ஆட்சி.

GNH ன் ஒன்பது களங்கள்: (domains)

- உளவியல் நலன்
- உடல் நலம்
- நேரம் பயன்பாடு
- கல்வி
- கலாச்சார பன்முகத் தன்மை மற்றும் பின்னடைவு
- நல்ல ஆட்சி
- சமூகத்தின் உயர்வு
- சுற்றுச்சூழல் பன்முகத் தன்மை மற்றும் பின்னடைவு
- வாழ்க்கைத் தரம்

HDI : (மனித மேம்பாட்டுக் குறியீடு)

- பொருளாதாரத்தின் உண்மையான முன்னேற்றத்தை அளப்பதற்கு மனிதவள மேம்பாட்டு குறியீடு (HDI) சரியானதாகும்.
- இது 1990 ஆம் ஆண்டு முகஹப்–உல் ஹிக் என்ற பாகிஸ்தான் பொருளியல் அறிஞரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பிறப்பின் போது வாழ்நாள் எதிர்பார்ப்பு, வயது வந்தோரின் கல்வியறிவு மற்றும் வாழ்க்கைத்தரம், GDP மடக்கை செயல்பாடு என கணக்கிடப்பட்டு வாங்கும் சக்தி சமநிலைக்கு (PPP) சரி செய்யப்படுகிறது.

கூடுதல் வினாக்கள்

11. இறுதிநிலைப் பண்டங்கள் மற்றும் பணிகள் என்றால் என்ன?

- இறுதிநிலை பண்டங்கள் மற்றும் பணிகள் என்பது நுகர்வுக்காக அல்லது பயன்பாட்டுக்காக உள்ள பண்டங்கள் மற்றும் பணிகளாகும்.
- பண்டங்கள் என்பது தொடக்கூடிய பொருட்களாகும்
- பணிகள் என்பது தொட்டு உணர முடியாத நடவடிக்கைகளாகும்.

12. இடைநிலைப் பண்டங்கள் என்றால் என்ன?

- எந்த பண்டங்கள் மற்றும் பணிகள் மற்றொரு பண்ட பணிகளை உற்பத்திப் செய்ய பயன்படுகிறதோ அல்லது மற்ற பண்ட பணிகளை உற்பத்தி செய்ய ஒரு பகுதியாகிறதோ அதை இடைநிலைப் பண்டங்கள் என்கிறோம்.

13. மொத்த நாட்டு உற்பத்தி என்றால் என்ன? **PTA**

- மொத்த நாட்டு உற்பத்தி என்பது அந்த நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மதிப்பைக் குறிக்கும். வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.

14. நிகர நாட்டு உற்பத்தி என்றால் என்ன?

- மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கியபின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும்
- நிகர நாட்டு உற்பத்தி (NNP) = மொத்த நாட்டு உற்பத்தி (GNP) - தேய்மானம் ஆகும்.

15. நிகர உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன?

- நிகர உள்நாட்டு உற்பத்தி என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதியாகும்
- மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தை (தேய்மான செலவின் அளவு) கழித்தபின் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தியாகும்.
- NDP = GDP – தேய்மானம் **PTA**

VI. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. நாட்டு வருமானத்தைக் கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துகளை விவரி. **PTA**

1. நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் கருத்துக்கள்:

- மொத்த நாட்டு உற்பத்தி (GNP)
- மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)
- நிகர நாட்டு உற்பத்தி (NNP)
- நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)
- தலா வருமானம் (PCI)
- தனிப்பட்ட வருமானம் (PI)
- செலவிடத்தகுதியான வருமானம் (DI)

மொத்த நாட்டு உற்பத்தி (GNP):

மொத்த நாட்டு உற்பத்தி என்பது அந்நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மதிப்பைக் குறிக்கும்.

வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)

ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்திக் காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மொத்த மதிப்பே உள்நாட்டு உற்பத்தியாகும்.

நிகர நாட்டு உற்பத்தி (NNP):

மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கியபின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும்.

நிகர நாட்டு உற்பத்தி (NNP) = மொத்த நாட்டு உற்பத்தி (GNP) – தேய்மானம்.

நிகர உள்நாட்டு உற்பத்தி (NNP):

நிகர உள்நாட்டு உற்பத்தி என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதியாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தைக் (தேய்மான செலவின் அளவு) கழித்தபின் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தியாகும்.

நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) = மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – தேய்மானம்.

தலா வருமானம் அல்லது தனிநபர் வருமானம் (PCI)

தலா வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.

நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

தனிப்பட்ட வருமானம் (PI):

நேர்முக வரிவிதிப்பிற்கு முன் தனி நபர்கள் மற்றும் ஒரு நாட்டின் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்தும் பெறப்படுகின்ற மொத்த பண வருமானத்தைத் தனிப்பட்ட வருமானம் என்கிறோம்.

செலவிடத் தகுதியான வருமானம் (DI):

தனி நபர்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான வருமானத்தில் நுகர்வுக்கு செலவிடப்படுகின்ற வருமானத்தை செலவிட தகுதியான வருமானம் என்கிறோம்.

2. GDP ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி. **PTA**

GDP ஐ கணக்கிடும் முறைகள்

- செலவின முறை.
- வருமான முறை.
- மதிப்புக் கூட்டு முறை.

செலவின முறை:

இந்த முறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்த அனைத்து இறுதிப்பண்ட பணிகளுக்கு மேற்கொள்ளும் செலவுகளின் கூட்டுத் தொகையே ஆகும்.

$$Y = C+I+G+(X-M)$$

பொருளியல்

வருமான முறை:

பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வருமானத்தைக் கணக்கிட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியை இந்த முறை கூறுகிறது. வருமான முறையில் GDPஐ கணக்கிடும் முறை

வருமானம் = கூலி + வாரம் + வட்டி + லாபம்

மதிப்புக் கூட்டு முறை:

மதிப்புக் கூட்டு முறையில், ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டினால் இறுதிப் பண்டத்தின் மதிப்பை அடையலாம்.

உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலை பண்டங்களின் மதிப்பை சேர்க்கும் பொழுது, பொருளதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்களின் மொத்த மதிப்பு கிடைக்கிறது.

மதிப்புக் கூட்டு முறை:

டீதூள் + பால் + சர்க்கரை	=	தேநீர்
இடைநிலை பண்டங்கள்	=	இறுதிப் பண்டம்.

3. இந்தியாவில் GDP யின் பல்வேறு துறைகளின் பங்கினை விவரி.

GDPயின் துறைகள்:

- முதன்மைத் துறை (விவசாயத் துறை)
- இரண்டாம் துறை (தொழில் துறை)
- மூன்றாம் துறை (பணிகள் துறை)

முதன்மைத்துறை:

- வேளாண்மைத் துறையை முதன்மைத் துறை எனவும் அழைக்கலாம். இதில் வேளாண் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் விவசாய நடவடிக்கைகள் அடங்கும்.
- இவை, கால்நடை பண்ணைகள், மீன்பிடித்தல், சுரங்கங்கள், காடுகள் வளர்த்தல், சோளம், நிலக்கரி போன்ற மூலப்பொருட்களை உற்பத்தி செய்கிறது.

இரண்டாம் துறை: **PTA**

- தொழில் துறையை இரண்டாம் துறை எனவும் அழைக்கலாம். மூலப்பொருட்களை மாற்றியமைப்பதன் மூலம் பண்டங்கள் மற்றும் பணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
- இரும்பு மற்றும் எஃகு தொழில், ஜவுளித் தொழில், சணல், சர்க்கரை, சிமெண்ட், காகிதம், பெட்ரோலியம், ஆட்டோ மொபைல்ஸ் மற்றும் பிற சிறுதொழில்கள் ஆகியன முக்கியத் தொழில்களாகும்.

மூன்றாம் துறை:

- பணிகள் துறையை மூன்றாம் துறை எனவும் அழைக்கலாம்.
- அவை அரசு, அறிவியல் ஆராய்ச்சி, போக்குவரத்து, தகவல் தொடர்பு, வர்த்தகம், தபால் மற்றும் தந்தி, வங்கி, கல்வி, பொழுதுபோக்கு, சுகாதாரம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் போன்றவைகளாகும்.

4. பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளைக் கூறுக.

	பொருளாதார வளர்ச்சி	பொருளாதார முன்னேற்றம்
➤ கருத்து	➤ பொருளாதார வளர்ச்சி ஒரு குறுகிய கருத்து	➤ பொருளாதார முன்னேற்றம் ஒரு பரந்த கருத்து.
➤ வரையறை/ பொருள்	➤ ஒரு குறிப்பிட்டகாலத்தில் ஒரு பொருளாதாரத்தில் வெளியீட்டில் இது நேர்மறை அளவு மாற்றத்தைக் கொடுக்கும்.	➤ இது பொருளாதாரத்தில் வெளியீட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, HDIயின் குறியீட்டின் முன்னேற்றம், வாழ்க்கைத் தரத்தில் உயர்வு, தொழில் நுட்ப முன்னேற்றம், மற்றும் ஒரு நாட்டின் ஒட்டு மொத்த மகிழ்ச்சி குறியீட்டைக் கருதுகிறது.
➤ அணுகுமுறை இயல்பு	➤ அளவின் இயல்பு	➤ தரத்தின் இயல்பு
➤ நோக்கம்	➤ GDP, GNP, FDI, FII, போன்ற அளவுகள் அதிகரிக்கும்.	➤ வாழ்க்கை எதிர்பார்ப்பு விகிதம், குழந்தை எழுத்தறிவு விகிதம் மற்றும் வறுமை விகிதத்தில் முன்னேற்றம்
➤ கால வரம்பு	➤ இயற்கையில் குறுகிய காலத்தை உடையது.	➤ இயற்கையில் நீண்ட காலத்தை உடையது.
➤ பொருந்தும் தன்மை	➤ வளர்ந்த நாடுகள்	➤ வளர்ந்து வருகின்ற நாடுகள்
➤ அளவீட்டு நுட்பங்கள்	➤ நாட்டு வருமானத்தை அதிகரித்தல்	➤ உண்மையான நாட்டு வருமானத்தை அதிகரித்தல். அதாவது, தனிநபர் வருமானம் போன்றவை
➤ நிகழ்வின் அதிர்வெண்	➤ ஒரு குறிப்பிட்ட காலம்	➤ தொடர்ச்சியான செயல்முறை
➤ அரசாங்க உதவி	➤ ஒரு தானியங்கி செயல் முறையாகும். எனவே, அரசாங்க உதவி / ஆதரவு அல்லது தலையீடு தேவைப்படாது.	➤ அரசாங்க தலையீட்டை மிகவும் நம்பியுள்ளது. இது பரந்த கொள்கை மாற்றங்களை உள்ளடக்கியுள்ளது.
➤ செல்வ பகிர்வு	➤ பொருளாதார வளர்ச்சி அனைத்து மக்களிடையேயும் செல்வம், வருமானத்தை நியாயமாக மற்றும் சமமாக விநியோகிக்கப்படுவதில்லை.	➤ இது ஒரு சம நிலையில் கவனம் செலுத்துகிறது. அனைத்து தனி நபர்களிடையே செல்வத்தை சமமாக விநியோகிப்பது சமூகங்களை மேம்படுத்துவதற்கு முயற்சிக்கிறது.

5. வளர்ச்சிப் பாதையின் அடிப்படையில் GDP மற்றும் வேலை வாய்ப்பு பற்றி விவரி.

வளர்ச்சிப் பாதையில் GDP:

- இந்தியா தன் வளர்ச்சி பாதையில் முதலாவதாக நெருக்கமான வர்த்தகக் கொள்கையை எடுத்துக் கொண்டது.
- இது உள்நாட்டுத் தொழில்களுக்கு ஒரு உந்துதலை ஏற்படுத்தியது.
- இது வெளிநாட்டு பொருட்களையும், நிறுவனங்களையும் சார்ந்திருத்தலைக் குறைக்கும் நிலைமையையும் ஏற்படுத்தியது.
- இந்தியாவில் கடந்த இரண்டு சகாப்தங்களாக GDP யின் நிலையான அதிக வளர்ச்சியால் தனிநபர் வருமானம் அதிகரித்ததும், முழு வறுமை குறைந்தும் காணப்படுகின்றன.
- 12 ஆண்டுகளின் தனிநபர் வருமானம் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. இந்தியா தனிநபர் வருமானத்தில் நடுத்தர வருவாய் நாடுகளின் பிரிவில் இடம் பிடித்துள்ளது.

வேலைவாய்ப்பு:

- ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு ஒரு உந்துதல் வழங்கப்பட்டது.
- இந்தியாவில் நிலப்பரப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அங்கமாக இருப்பதால் கிராமப்புற மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது.
- வறுமை ஒழிப்பு மற்றும் கிராமப்புற வளர்ச்சி இந்திய வளர்ச்சிப் பாதையின் ஒரு பகுதியாகும்.
- பொதுத்துறைக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
- தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் கடுமையான ஒழுங்கு முறை மற்றும் தரநிலைக்கு உட்பட்டவை ஆயின.
- அரசாங்கமானது மக்களின் ஒரே பாதுகாப்பாளராகவும் சமூக நலத்திற்காகவும் செயல்படும் என்றும் நம்பப்படுகிறது.
- தற்போது 12 ஆண்டுகளில் தனிநபர் வருமானம் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது.
- மற்ற பிற நாடுகளை விட, இந்தியா வெவ்வேறான வளர்ச்சிப் பாதையைப் பின்பற்றுகிறது.
- இந்தியா வேளாண்மையிலிருந்து மிக விரைவில் பணிகளுக்கு மாறியது.

6. கீழ்க்கண்ட பொருளாதாரக் கொள்கைகளை விவரி.

1. விவசாயக் கொள்கை, 2. தொழிற் கொள்கை, 3. புதிய பொருளாதாரக் கொள்கை

விவசாயக் கொள்கை (வேளாண் கொள்கை):

உள்நாட்டு வேளாண்மை மற்றும் வெளிநாட்டு வேளாண்மை, இறக்குமதி பொருட்கள் பற்றிய அரசின் முடிவுகளையும், நடவடிக்கைகளையும் பற்றியது வேளாண் கொள்கையாகும்.

முக்கிய வேளாண் கொள்கைகள்:

- விலைக் கொள்கை
- நிலச்சீர்த்திருத்தக் கொள்கை
- பசுமைப்புரட்சி
- பாசனக் கொள்கை
- உணவுக் கொள்கை
- விவசாயத் தொழிலாளர் கொள்கை
- கூட்டுறவுக் கொள்கை

தொழில் கொள்கை:

- தொழில் துறை முன்னேற்றம் எந்த ஒரு பொருளாதார முன்னேற்றத்திற்கும் முக்கியமான அம்சமாகும். இது வேலைவாய்ப்பை உருவாக்குகிறது.
- இதனால் நவீனமயமாக்கலுக்கு வழிவகுக்கப்பட்டு இறுதியில் பொருளாதாரம் தன்னிறைவு அடைகிறது.
- உண்மையில், தொழில்துறை வளர்ச்சி, விவசாயத்துறை மற்றும் பணிகள் துறை போன்ற துறைகளை ஊக்குவிக்கின்றன. இது பொருளாதார வர்த்தக வளர்ச்சிக்கு முக்கியப் பங்கு வகிக்கிறது.

முக்கியக் கொள்கைகள்:

- ஜவுளித் தொழில் கொள்கை
- சர்க்கரைத் தொழில் கொள்கை
- தொழில் துறை வளர்ச்சி விலைக் கொள்கை
- சிறுதொழில் தொழில் கொள்கை
- தொழில் துறை தொழிலாளர் கொள்கை.

புதிய பொருளாதாரக் கொள்கை:

- இந்தப் புதிய பொருளாதார சீர்த்திருத்தம் பொதுவாக LPG, அல்லது தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல், மற்றும் உலக மயமாக்கல் மாதிரி என அழைக்கப்படுகிறது.
- இந்த மாதிரியின் பிரதான குறிக்கோள், இந்திய பொருளாதாரம் உலகின் மிகப் பெரிய பொருளாதாரங்களுடன் ஒப்பிடுவதற்கு உதவும் திறனுடன் கூடிய உலகில் வேகமாக வளரும் பொருளாதாரத்தை உருவாக்குவது ஆகும்.
- இது நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியை ஒரு குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றமடையச் செய்தது.

கூடுதல் வினாக்கள்

7. இந்தியாவில் GDP யின் வளர்ச்சியை விவரி.

- 1990 களிலிருந்து இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியானது உறுதியான, நிலையான, வேறுபட்ட, நெகிழ்வினை மற்றும் வலுவான பேரியல் பொருளாதாரத்தின் அடிப்படைகளைப் பிரதிபலிக்கிறது.
- சமீபத்திய காலாண்டுகளில் ஏற்ற இறக்கங்கள் இருந்த போதிலும், பண மதிப்பு குறைப்பு, பண்டங்கள் மற்றும் பணிகளின் வரி (GST) ஆகிய இரண்டு பிரதான சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தது.
- 2018–19 ம் ஆண்டு 7.3% மற்றும் 2019–20 ஆம் ஆண்டு 7.5% வளர்ச்சி விகிதம் என உலக வங்கி திட்டமிட்டுள்ளது.
- பன்னாட்டு நிதி நிறுவனம் IMF உலக பொருளாதாரக் கண்ணோட்டம் (அக்டோபர் 2018) ன் படி GDP வளர்ச்சி விகிதம் 7.3% ஆக இருக்கும் எனவும், வங்கதேசத்திற்குப் பிறகு இந்தியா உலகத்தில் 5 வது மிக வேகமாக வளர்ந்து வருகின்ற நாடு எனவும் கூறுகிறது.

அலகு பொருளியல்

2 உலகமயமாதல் மற்றும் வர்த்தகம்

மனவரைபடம்

உலகமயமாதலின் வரலாறு
- நிலை 1: தொன்மையான உலகமயமாக்கல்
- நிலை 2: இடைப்பட்ட உலகமயமாக்கல்
- நிலை 3: நவீன உலகமயமாக்கல்

தென்னிந்தியாவில் வர்த்தகம் மற்றும் வர்த்தகர்கள்

1. ஆரம்பகால வர்த்தகர்கள்
2. ஐரோப்பிய வணிகர்கள்
3. போர்ச்சுக்கீசியர்கள்
4. டச்சுக்காரர்கள்
5. பிரிட்டிஷ் நிறுவனம்
6. டேனிஷ்காரர்கள்
7. பிரெஞ்சுக்காரர்கள்

பன்னாட்டு நிறுவனம் MNC
↓
வளர்ச்சியின் காரணிகள்
↓

1. சந்தையின் பரப்பளவு
2. சந்தையின் விரிவாக்கம்
3. நிதி மேலாண்மை
4. தொழில்நுட்ப நுணுக்கங்கள்
5. தயாரிப்பு கண்டுபிடிப்புகள்

நினைவில் கொள்க

- **உலகமயமாக்கல்** என்பது ஒரு நாட்டை உலக பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்பதாகும்.
- **LPG** –தாராளமயமாக்கல் (Liberalization) தனியார்மயமாக்கல் (Privatization) மற்றும் உலகமயமாக்கல் (Globalization).
- உலகமயமாக்கல் என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர் பேராசிரியர் **தியோடோர் லெவிட்** என்பவராவார்.
- ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு புதிய கடல்பாதையைக் கண்டுபிடித்தவர் **வாஸ்கோட காமா.**
- **வாஸ்கோடாகாமாவால்** போர்ச்சுக்கலுக்கு கொண்டு வந்த பொருட்களின் லாபமானது இந்தியாவிலிருந்து கொண்டு சென்ற பொருட்களின் லாபமானது, இந்தியா முழுவதும் பயணம் செய்த செலவைவிட 60 மடங்கு அதிகம் ஆகும்.
- ஆங்கிலேயரால் சென்னையில் கட்டப்பட்ட கோட்டை **செயின்ட் ஜார்ஜ் கோட்டை** ஆகும்.
- இந்தியாவில், பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் முதல் தொழிற்சாலையை நிறுவிட அனுமதி அளித்தவர் **கோல்கொண்டாவின் சுல்தான்** ஆவார்.

- இந்தியாவில் '**டங்கல் வரைவு**' கையெழுத்திடப்பட்ட ஆண்டு 1994
- இந்தியாவிலுள்ள 15 பெரிய பன்னாட்டு நிறுவனங்களில் 11 **அமெரிக்கா** நாட்டைச் சேர்ந்ததாகும்.
- உலக வர்த்தக அமைப்பின் தலைமையகம் **ஜெனிவாவில்** (சுவிட்சர்லாந்து) அமைந்துள்ளது.

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **உலக வர்த்தக அமைப்பின் (WTO) தலைவர் யார்?** PTA
   அ) அமைச்சரவை ஆ) தலைமை இயக்குநர்
   இ) துணை தலைமை இயக்குநர் ஈ) இவற்றில் எதுவுமில்லை

2. **WTO வில் தற்போதுள்ள உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை**
   அ) 159 ஆ) 164 இ) 148 ஈ) 128

3. **இந்தியாவில் காலனியாதிக்க வருகை** PTA
   அ) போர்ச்சுகீசியர், டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு
   ஆ) டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு
   இ) போர்ச்சுகீசியர், டேனிஷ், டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலேயர்கள்
   ஈ) டேனிஷ், போர்ச்சுகீசியர், பிரெஞ்சு, ஆங்கிலேயர், டச்சு

4. **வர்த்தக நோக்கத்திற்காக முதலில் இந்தியாவுக்கு வந்தவர்கள்**
   அ) ரோமானிய பேரரசு ஆ) போர்ச்சுகீசியர்
   இ) டச்சு ஈ) டேனிஷ்

5. **போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவில் எப்போது குடியேறினார்கள்?**
   அ) 1600 ஆ) 1602 இ) 1498 ஈ) 1616

6. **காட் – இன் முதல் சுற்று நடைபெற்ற இடம்**
   அ) டோக்கியோ ஆ) உருகுவே இ) டார்குவே ஈ) ஜெனீவா

7. **இந்தியா எப்போது டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டது?**
   அ) 1984 ஆ) 1976 இ) 1950 ஈ) 1994

8. **1632ல் ஆங்கிலேயர்களுக்கு "கோல்டன் ஃபயர்மான்" வழங்கியவர் யார்?**
   அ) ஜஹாங்கீர் ஆ) கோல்கொண்டா சுல்தான்
   இ) அக்பர் ஈ) ஔரங்கசீப்

9. **வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை (FIP) அறிவித்த ஆண்டு**
   அ) சூன் 1991 ஆ) சூலை 1991
   இ) சூலை – ஆகஸ்ட் 1991 ஈ) ஆகஸ்ட் 1991

10. **இந்திய அரசாங்கம் 1991 இல் __________ ஐ அறிமுகப்படுத்தியது.**
    அ) உலகமயமாக்கல் ஆ) உலக வர்த்தக அமைப்பு
    இ) புதிய பொருளாதார கொள்கை ஈ) இவற்றில் எதுவுமில்லை

கூடுதல் வினாக்கள்

11. இந்தியாவில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனம் நிறுவப்பட்ட ஆண்டு
அ) 1600 ஆ) 1602 இ) 1610 ஈ) 1611

12. 1602 ஆம் ஆண்டு இந்தியாவில் உருவாக்கப்பட்ட நிறுவனம்
அ) பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் ஆ) ஆங்கில கிழக்கிந்திய நிறுவனம்
இ) டச்சு கிழக்கிந்திய நிறுவனம் ஈ) போர்ச்சுகீசிய கிழக்கிந்திய நிறுவனம்

13. 16ஆம் நூற்றாண்டில் ஆப்பிரிக்காவிலிருந்து ஆசியா வரை வர்த்தக நிறுவனங்களை நிறுவியவர்கள்
அ) பிரெஞ்சுக்காரர்கள் ஆ) போர்ச்சுகீசியர்கள்
இ) டச்சுக்காரர்கள் ஈ) ஆங்கிலேயர்கள்

14. சிவப்பு வண்ணக்கல் அலங்காரப் பொருட்களை வர்த்தகத்திற்கு கொண்டுவந்தவர்கள்
அ) கலிங்க வர்த்தகர்கள் ஆ) பல்லவ வர்த்தகர்கள்
இ) சோழ வர்த்தகர்கள் ஈ) பாண்டிய வர்த்தகர்கள்

15. தென்கிழக்கு ஆசியாவின் வர்த்தகத்தில் முக்கிய இடம் பெற்றது
அ) பட்டு ஆடைகள் ஆ) கம்பளி ஆடைகள் இ) சணல் ஆடைகள் ஈ) பருத்தி ஆடைகள்

16. இந்தியாவிற்கு கடல்வழி கண்டுபிடித்தவர்.
அ) மெக்கலன் ஆ) பார்த்தலோமியோ டயஸ்
இ) வாஸ்கோட காமா ஈ) கொலம்பஸ்

17. ஆரம்பத்தில் போர்ச்சுக்கீசியர்களின் தலைமையிடமாக விளங்கியது
அ) மசூலிப்பட்டினம் ஆ) காலிகட் இ) கண்ணனூர் ஈ) கொச்சி

18. இந்தியாவில் டச்சுக்காரர்களின் தலைமையிடமாக இருந்தது.
அ) நாகப்பட்டினம் ஆ) புலிகாட் இ) சென்னை ஈ) பாண்டிச்சேரி

19. மசூலிப்பட்டினம் அமைந்துள்ள பகுதி.
அ) மன்னார் வளைகுடா ஆ) கொங்கணக் கடற்கரை
இ) மலபார் கடற்கரை ஈ) கோரமண்டலக் கடற்கரை

20. டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனம் அமைக்கப்பட்ட ஆண்டு
அ) 1616 ஆ) 1611 இ) 1602 ஈ) 1610

21. இந்தியாவிலுள்ள பன்னாட்டு நிறுவனங்களில் மிகப்பெரிய அளவினைக் கொண்டுள்ள நாடு
அ) இங்கிலாந்து ஆ) பிரான்ஸ் இ) அமெரிக்கா ஈ) ஜெர்மனி

22. பாரத ஸ்டேட் வங்கியின் (SBI) தலைமையகம் அமைந்துள்ள இடம்
அ) மும்பை ஆ) சென்னை இ) கொல்கத்தா ஈ) டெல்லி

23. டி.வி.எஸ் (TVS) ஆட்டோமொபைல் நிறுவனம் இயங்கும் வெளிநாடு
அ) பங்களாதேஷ் ஆ) பிரேசில் இ) ஸ்ரீலங்கா ஈ) மலேசியா

24. "இன்போசிஸ்" நிறுவனத்தின் தொழில் வகை
அ) வங்கி ஆ) எரிவாயு இ) மருந்து பொருள்கள் ஈ) மென்பொருள்

25. காட் (GATT) டின் இயக்குநர் ஜெனரல்
அ) ஆர்தர் டங்கல் ஆ) ஆண்ட்ரே டங்கல் இ) ஆர்தர் குந்தர் ஈ) ஆண்ட்ரே குந்தர்

விடைகள்

1. ஆ) தலைமை இயக்குநர்	2. ஆ) 164
3. அ) போர்ச்சுகீசியர், டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு	4. ஆ) போர்ச்சுகீசியர்
5. இ) 1498	6. ஈ) ஜெனிவா
7. ஈ) 1994	8. ஆ) கோல்கொண்டா சுல்தான்
9. இ) ஜுலை – ஆகஸ்டு 1991	10. இ) புதிய பொருளாதார கொள்கை
11. அ) 1600	12. இ) டச்சு கிழக்கிந்திய நிறுவனம்
13. ஆ) போர்ச்சுகீசியர்கள்	14. அ) கலிங்க வர்த்தகர்கள்
15. இ) சணல் ஆடைகள்	16. இ) வாஸ்கோட காமா
17. ஈ) கொச்சி	18. ஆ) புலிகாட்
19. ஈ) கோரமண்டலக் கடற்கரை	20. அ) 1616
21. இ) அமெரிக்கா	22. அ) மும்பை
23. ஆ) பிரேசில்	24. ஈ) மென்பொருள்
25. அ) ஆர்தர் டங்கல்	

II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. டச்சுக்காரர்கள் பாண்டிச்சேரியை ____________ இல் கைப்பற்றினர்.
2. ஒரு நல்ல பொருளாதாரம் ____________ன் விரைவான வளர்ச்சிக்காக அறிமுகப்படுத்தப்படுகிறது.
3. கிழக்கிந்திய கம்பெனி சென்னையில் பலமான தொழிற்சாலைகள் கட்டியமைத்ததை ____________ என அழைக்கப்படுகிறது.
4. உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம் ____________ இருந்து அமுலுக்கு வந்தது.
5. ____________ ஆல் உலகமயமாக்கல் என்ற பதம் கண்டுபிடிக்கப்பட்டது.
6. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் ____________ இல் இரண்டாவது தொழிற்சாலையை நிறுவியது.

கூடுதல் வினாக்கள்

7. ____________ என்பது உலக பொருளாதாரத்துவ நாடுகளை ஒருங்கிணைப்பதாகும்.
8. சுமர் மற்றும் சிந்து சமவெளி நாகரிகங்களுக்கிடையே இருந்த வர்த்தக உறவுகள் "உலகமயமாக்கல்" என்ற வடிவத்தை உருவாக்கியது என வாதிட்டவர் ____________ .
9. பேரரசுகளுக்கிடையேயான வணிக உறவுகளால் வளர்ச்சி பெற்ற சாலை ____________.
10. 19 ஆம் நூற்றாண்டில் ____________ ன் வருகை நவீன வடிவத்தை நெருங்கியது.
11. தென்னிந்தியாவில் வர்த்தகம் சோழர்கள் ஆதிக்கத்திலிருந்து ____________ ஆதிக்கத்திற்கு மாறியது.
12. ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு ____________ வழியாக புதிய கடல் பாதையை வாஸ்கோடகாமா கண்டுபிடித்தார்.
13. போர்ச்சுக்கீசியர்கள் வாணிபத்திற்காக கோலிக் கோட்டிற்கு வந்தடைந்த ஆண்டு ____________
14. வாஸ்கோட காமா இரண்டாம் முறையாக இந்தியாவிற்கு வந்த ஆண்டு ____________
15. டச்சு கிழக்கிந்திய நிறுவனத்தை மசூலிப்பட்டினத்தில் தொடங்கியவர் ____________
16. 1610 ல் டச்சுக்காரர்கள் புலிகாட்டில் தொழிற்சாலை நிறுவ அனுமதியளித்த ராஜா ____________
17. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு நிறுவனம் துவங்குவதற்கு பட்டயம் வழங்கியவர் ____________
18. செயின்ட் ஜார்ஜ் கோட்டை கட்டப்பட்ட ஆண்டு ____________
19. பஜாஜ் நிறுவனத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம் ____________
20. காட்டின் 7வது சுற்று மாநாடு நடைபெற்ற இடம் ____________.

விடைகள்

1. 1693	2. மூலதனச் சந்தை	3. செயின் ஜார்ஜ் கோட்டை
4. ஜனவரி 1, 1995	5. பேராசிரியர் தியோடோர் லெவிட்	6. மசூலிப்பட்டினம்
7. உலகமயமாக்கல்	8. ஆண்ட்ரே குந்தர் ஃபிராங்க்	9. பட்டு சாலை
10. உலகமயமாக்கல்	11. பல்லவர்கள்	12. நன்னம்பிக்கை முனை
13. 1498	14. 1502	15. அட்மிரல் வான்டெர் ஹகேன்
16. சந்திரகிரி ராஜா	17. எலிசபெத்ராணி	18. 1639
19. பூனா	20. டோக்கியா	

III. சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. i) கிழக்கிந்திய கம்பெனி, குறிப்பாக கிழக்கு இந்திய நறுமணப் பொருட்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டு, பின்னர் பருத்தி, பட்டு, இண்டிகோவையும் வர்த்தகத்தில் இணைத்துக் கொண்டது.
   ii) டச்சு கிழக்கு இந்தியா நிறுவன வணிகர்கள் தங்கள் நிறுவனத்தை முதன் முதலில் கள்ளிக் கோட்டையில் நிறுவினார்கள்.
   iii) நானா தேசிஸ் வர்த்தக குழுக்கள் ஹொய்சாளா பேரரசின் காலத்தில் வர்த்தகம் செய்தனர்.
   அ) i சரியானது ஆ) ii மற்றும் iii சரியானது
   இ) i மற்றும் iii சரியானது ஈ) i, ii மற்றும் iii சரியானது

கூடுதல் வினாக்கள்

2. i) தாராளமயமாக்கல், தனியார்மயமாதல் மற்றும் உலகமயமாதல் என்பன புதிய பொருளாதாரக் கொள்கையின் தூண்களாகும்
   ii) உலகமயமாக்கல் என்பது உலகப்போரில் ஈடுபட்ட நாடுகளை ஒருங்கிணைப்பதாகும்
   iii) இந்தியாவிற்கு கடைசியாக வந்த ஐரோப்பிய வணிகக் கம்பெனி பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியாகும்
   iv) நாகப்பட்டினம் தஞ்சாவூர் கடற்கரையில் உள்ளது
   அ) i மற்றும் ii சரியானது ஆ) i, ii, மற்றும் iii சரியானது
   இ) i, ii மற்றும் iv சரியானது ஈ) i, iii மற்றும் iv சரியானது

3. கூற்று : இந்தியா, இங்கிலாந்து வங்கியில் 40 டன் தங்கத்தை அடமானம் வைத்தது.
   காரணம் : இந்தியா சர்வதேச சந்தையில் தனது கடன் தரும் தகுதியை இழந்தது.
   அ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.
   ஆ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல
   இ) கூற்று சரி, காரணம் தவறு
   ஈ) கூற்று தவறு, காரணம் சரி

விடைகள்

1. இ) i மற்றும் iii சரியானது
2. ஈ) i, iii மற்றும் iv சரியானது
3. அ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்

IV.பொருத்துக:

பாடநூல் வினாக்கள்

அ) 1. இந்தியாவில் பன்னாட்டு நிறுவனம் — அ) 1947
2. பன்னாட்டு நிதி நிறுவனம் (MNC) — ஆ) அயல்நாட்டு வாணிபத்தை செயல்படுத்தல்
3. சுங்கவரி, வாணிபம் குறித்த பொது உடன்பாடு (GATT) — இ) உற்பத்தி செலவு குறைத்தல்
4. 8வது உருகுவே சுற்று — ஈ) இன்போசிஸ்
5. உலக வர்த்தக அமைப்பு (WTO) — உ) 1986

விடை: 1) ஈ 2) இ 3) அ 4) உ 5) ஆ

கூடுதல் வினாக்கள்

ஆ) 1. 1502 — அ) பிரிட்டிஷ்காரர்கள்
2. 1602 — ஆ) போர்ச்சுக்கீசியர்கள்
3. 1600 — இ) டேனிஷ்காரர்கள்
4. 1668 — ஈ) டச்சுக்காரர்கள்
5. 1616 — உ) பிரெஞ்சுக்காரர்கள்

விடை: 1) ஆ 2) ஈ 3) அ 4) உ 5) இ

இ) 1. ஒ.என்.ஜி.சி (ONGC) — அ) மென்பொருள்,
2. டி.வி.எஸ் (TVS) — ஆ) தகவல் தொடர்பு
3. பாரத் ஏர்டெல் — இ) ஆட்டோ மொபைல்
4. அமுல் — ஈ) எரிவாயு
5. இன்போசிஸ் — உ) உணவுப் பொருள்

விடை: 1) ஈ 2) இ 3) ஆ 4) உ 5) அ

ஈ) 1. பங்களாதேஷ் — அ) Dr ரெட்டி மருத்துவ ஆய்வகம்
2. கொலம்பியா — ஆ) இன்போசிஸ்
3. மலேசியா — இ) பஜாஜ்
4. ஜமாலிகா — ஈ) டி.வி.எஸ் (TVS)
5. அமெரிக்கா — உ) அமுல்

விடை: 1) இ 2) ஈ 3) உ 4) அ 5) ஆ

உ) 1. சென்னை — அ) பாரத் ஏர்டெல்
2. மும்பை — ஆ) மைக்ரோ மேக்ஸ்
3. புதுடெல்லி — இ) இன்போசிஸ்
4. கூர்கான் — ஈ) பாரத ஸ்டேட் வங்கி
5. பெங்களூரு — உ) TVS

விடை: 1) உ 2) ஈ 3) அ 4) ஆ 5) இ

V. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. உலகமயமாக்கல் என்றால் என்ன?

- உலகமயமாக்கல் என்பது பண்டங்கள் மற்றும் பணிகள், தொழில்நுட்பம், மூலதனம், உழைப்பு அல்லது மனித மூலதனம் ஆகியவற்றின் தடையில்லா ஓட்டத்தில், எந்த தடையும் ஏற்படாமல் உலகின் பல்வேறு பொருளாதாரங்களை ஒருங்கிணைப்பதற்கான செயல்முறையாகும்.
- உலகமயமாக்கலின் கீழ் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான சர்வதேச சந்தைகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன.
- இது உலக பொருளாதார நாடுகளை ஒருங்கிணைப்பதாகும். அடிப்படையில், இது சர்வதேசமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் செயல் முறையை குறிக்கிறது.

PTA

2. உலகமயமாக்கலின் வகைகளை எழுதுக.

உலகமயமாக்கல் வரலாற்று பின்னணியில் மூன்று நிலைகளாக வகுக்கப்பட்டுள்ளன.

- தொன்மையான உலகமயமாக்கல்
- இடைப்பட்ட உலகமயமாக்கல்
- நவீன உலகமயமாக்கல் என்பனவாகும்.

3. பன்னாட்டு நிறுவனங்கள் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

- நாட்டில் பண்டங்களையும் அல்லது பணிகளையும் உற்பத்தி செய்யும் அல்லது கட்டுப்படுத்தும் ஒரு பெரு நிறுவனம் பன்னாட்டு நிறுவனம் எனப்படும்.
- பன்னாட்டு நிறுவனங்களை (MNC), சர்வதேச நிறுவனங்கள் அல்லது பன்னாட்டு அமைப்பு எனவும் கூறலாம்.
- எடுத்துக்காட்டு: பெப்சி நிறுவனம், பஜாஜ், பாரத ஸ்டேட் வங்கி.

4. தென்னிந்தியாவில் டச்சு – சிறுகுறிப்பு வரைக.

- டச்சு கிழக்கிந்திய நிறுவனம் 1602 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- அட்மிரல் வான் டெர் ஹகேன் என்பவரால் டச்சு நிறுவனம் மசூலிப்பட்டினம், பெத்தபோலி, (நிஜாம்பட்டினம்), தேவனாம்பட்டினம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டது.
- 1610ல் சந்திரகிரி ராஜாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி புலிகாட்டில் மற்றொரு தொழிற்சாலையை நிறுவினர்.
- இண்டிகோ, சால்ட்பேட்டர் மற்றும் வங்க கச்சா பட்டு போன்ற இதர பொருட்கள் டச்சுக்காரர்களால் ஏற்றுமதி செய்யப்பட்டன.
- இந்தியாவில் டச்சுக்காரர்களின் தலைமையிடமாக புலிகாட் இருந்தது. 1659ல் போர்ச்சுகீசியரிடமிருந்து தஞ்சாவூர் கடற்கரையில் இருந்த நாகப்பட்டினம் கைப்பற்றப்பட்டது.

5. உலகமயமாக்கலை மேற்கொள்ளும் சீர்த்திருத்தங்கள் யாவை?

- சில தொழிற்சாலைகளை தவிர, தொழில் உரிமம் பெறுவதை நீக்கியது.
- பொதுத்துறை நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.
- இந்தியாவின் பொருட்களின் ஏற்றுமதி பரிமாற்றத்தில் நிலையான பணத்தின் மாற்று வீதத்தை சரி செய்தது.
- வெளிநாட்டு தனியார் துறை நடப்புக் கணக்கில் இறக்குமதி வரியை குறைப்பதன் மூலம் வர்த்தகத்தில் ரூபாய் மாற்றத்தை உருவாக்கியது.
- அயல் நாட்டு செலவாணி ஒழுங்குமுறை பொருத்தமாக திருத்தப்பட்டது.
- இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்ட சட்ட ரீதியான நீர்மை விகிதம் (SLR) அதிகரிக்கப்பட்டது.

6. நியாயமான வர்த்தகம் என்றால் என்ன?

நியாயமான வர்த்தகமானது, சிறிய விவசாயிகளை உலகளாவிய சந்தை இடத்தில் ஒரு சுறுசுறுப்பான பகுதியாக வைத்திருப்பதோடு நுகர்வோருக்கு அதிகாரம் அளிக்கவும், கொள்முதல் செய்யவும், அவர்களின் மதிப்பை ஆதரிக்கவும் நோக்கமாகக் கொள்ளும் ஒரு வழி முறையாகும்.

7. "நியாயமான வர்த்தக நடைமுறைகளின்" ஏதாவது ஐந்து கொள்கைகளை எழுதுக:

- பொருளாதார ரீதியில் பின்தங்கிய உற்பத்தியாளர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.
- வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வு.
- நியாயமான வர்த்தக நடைமுறைகள் மற்றும் நியாயமான விலையில் கொடுப்பது.
- குழந்தைத் தொழிலாளர் மற்றும் கட்டாயத் தொழிலாளர் இல்லை என்பதை உறுதிப்படுத்துதல்.
- திறனை வளர்த்தல் மற்றும் நியாயமான அமைப்பினை மேம்படுத்துதல்
- சுற்றுச்சூழலுக்கு மதிப்பளித்தல்.

8. "உலக வர்த்தக அமைப்பின்" முக்கிய நோக்கம் என்ன?

உலக வர்த்தக அமைப்பின் (WTO) முக்கிய நோக்கங்கள்:

- அயல்நாட்டு வாணிபத்திற்கான விதிகள் அமைத்தல் மற்றும் செயல்படுத்துதல்.
- வர்த்தக தாராளமயமாக்கலுடனான பேச்சு வார்த்தை மற்றும் கண்காணிப்பதற்கான ஒரு மன்றத்தை வழங்குதல்.
- வர்த்தக தகராறுகளைக் கையாளுதல்
- நிலையான முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்து அறிமுகம் செய்தல்
- உலக வர்த்தகத்தில் வளர்ந்துவரும் நாடுகளின் ஒரு சிறந்த வளர்ச்சிக்கு பாதுகாப்பாக இருத்தல்
- முடிவெடுக்கும் செயல்களின் வெளிப்படைத் தன்மையை அதிகரித்தல்
- முழுவேலை வாய்ப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் பயனுள்ள தேவையை அதிகரித்தல்

9. TRIPs மற்றும் TRIMs சிறுகுறிப்பு எழுதுக.

TRIPs: (அறிவுசார் சொத்துரிமை தொடர்பான வர்த்தக உரிமைகள்)

- அறிவுசார் பண்டங்களின் உரிமைகள் என்பது "ஒரு வணிக மதிப்புடன் கூடிய தகவல்" என வரையறுக்கலாம்.
- TRIPs ன் கீழ், பண்டங்கள் அல்லது செயல்முறைகள், அனைத்து துறைகளின் தொழில் நுட்பங்களில் எந்தவொரு கண்டுபிடிப்புக்கும் காப்புரிமை வழங்குகிறது.
- TRIPs ஒப்பந்தத்தில் ஏழு பகுதிகள் அறிவார்ந்த சொத்து உரிமைகளை உள்ளடக்கியுள்ளது.
- அதாவது நகல் உரிமைகள், வர்த்தக சந்தை, வர்த்தக ரகசியங்கள், தொழில் வடிவமைப்பு, புவியியல் முகவர்களின் ஒருங்கிணைந்த சுற்றுகள் மற்றும் காப்புரிமைகள் போன்றவைகளாகும்.

TRIMs: (வர்த்தக தொடர்புடைய முதலீடு)

- உள்நாட்டு தொழில்களின் வளர்ச்சிக்காக தேவையான வசதிகளை வழங்குவதற்கு அந்நாட்டில் செய்யப்படும் வெளிநாட்டு முதலீட்டிற்கு சில நிபந்தனைகள் அல்லது கட்டுப்பாடுகளை அரசு விதிக்கும் என்பதையே TRIMs குறிக்கிறது என உருகுவே சுற்று உடன்படிக்கை கூறுகிறது.

10. உலக மயமாக்கலின் நேர்மறையான தாக்கத்தை எழுதுக.

நேர்மறைத்தாக்கம்:

- ஒரு சிறந்த பொருளாதாரம், மூலதன சந்தையின் விரைவான வளர்ச்சியை அறிமுகப்படுத்துகிறது.
- வாழ்க்கைத்தரம் அதிகரித்துள்ளது.
- உலகமயமாக்கல் வேகமாக வர்த்தகத்தை அதிகரித்து, அதனால் அதிக மக்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்படுகிறது.
- புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் புதிய அறிவியல் ஆராய்ச்சி முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டது.
- உலகமயமாக்கல் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும்.
- இது பண்டங்களின் ஓட்டத்தைத் தாராளமாக அதிகரிக்கவும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை (FDI) அதிகரிக்கவும் உதவுகிறது.

கூடுதல் வினாக்கள்

11. மத்திய காலத்தில் தெற்கு இந்தியாவில் வர்த்தகர்களாக விளங்கியவர்கள் யாவர்?

வர்த்தகக் குழுவினர்:

- கத்ரிகாஸ்
- நாகராஸ்
- மும்முரிதந்தாஸ்
- அய்யாவோலி 500
- செட்டீஸ்
- பிருடாஸ்
- கோவாரஸ்

12. தென்னிந்தியாவின் ஐரோப்பிய வணிகர்களை குறிப்பிடுக.

- போர்ச்சுகீசியர்கள்
- டச்சுக்காரர்கள்
- ஆங்கிலேயர்கள்
- டேனியர்கள்
- பிரெஞ்சுக்காரர்கள்

13. இந்தியாவின் மிகப்பெரிய பன்னாட்டு நிறுவனங்கள் யாவை?

- சோனி கார்ப்பரேசன்.
- ஹவுலக் பேக்கார்டு (HP)
- டாடா குழுமம்
- மைக்ரோ சாப்ட் கார்ப்பரேசன்
- ஐ.பி.எம்
- நெட்டில்
- பிராக்டர் மற்றும் கேம்பில்
- சிட்டி குழுமம்
- பெப்சி நிறுவனம்
- கோகோ–கோலா நிறுவனம்

14. வெளிநாட்டிலுள்ள இந்தியாவின் பன்னாட்டு நிறுவனங்களில் சிலவற்றைக் குறிப்பிடுக.

- பஜாஜ்
- டி.வி.எஸ் (TVS)
- பாரத ஸ்டேட் வங்கி
- பாரத் ஏர்டெல்
- அமுல்
- மைக்ரோமேக்ஸ்
- ஒ.என்.ஜி.சி (ONGC)
- இன்போசிஸ்.

15. அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம் குறிப்பு வரைக.

- அந்நிய செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம் 1973 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டு, ஜனவரி 1, 1974 அன்று நடைமுறைக்கு வந்தது.
- இச்சட்டம் இந்தியாவில் பன்னாட்டு நிறுவனங்களின் செயல்பாட்டை நேரடியாகக் குறிப்பிடுகிறது.

16. G7 நாடுகள் யாவை?

- கனடா
- பிரான்ஸ்
- ஜெர்மனி
- இத்தாலி
- ஜப்பான்
- ஐக்கிய அரசு
- ஐக்கிய நாடுகள்

17. உலகமயமாக்கலின் எதிர்மறைத் தாக்கங்களை குறிப்பிடுக.

- நாடுகளுக்கிடையே மிக அதிகமான மூலதனம், வருமானத்தின் நியாயமற்ற மற்றும் ஒழுக்கமற்ற விநியோகிப்பாளர்களை அறிமுகப்படுத்துகிறது.
- தேசிய ஒருமைப்பாட்டை இழந்து வருவதோடு, மிக அதிகமான வர்த்தக பரிமாற்றம் இருப்பதால், சுதந்திரமான உள்நாட்டுக் கொள்கைகள் இழக்கப்படுகின்றன என்பது அச்சத்திற்குரியதாகும்.
- முக்கிய உள்கட்டமைப்பும் மற்றும் வளங்களை பிரித்தெடுத்தலும் ஒரு பொருளாதாரத்தின் விரைவான வளர்ச்சிக்கு தேவை என்றாலும், இது எதிர்மறை சுற்றுச்சூழல் மற்றும் சமூக செலவுகளை அதிகரிக்கும்
- அந்நிய செலாவணியை பெறுவதற்காக, இயற்கை வளங்கள் மிக அதிகமாக விரைவாக சுரண்டப்படுகிறது.
- சுற்றுச்சூழல் பற்றிய தரங்களும், கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுள்ளன.

18. காட் – டின் முக்கிய நோக்கம் என்ன?

- அர்த்தமுள்ள விதிமுறைகளைப் பின்பற்றி பலவிதமான கட்டணங்களையும், ஒதுக்கீடுகளையும், மானியங்களையும் குறைப்பதன் மூலம் சர்வதேச வர்த்தகத்தை அதிகரித்தல் ஆகும்.

VI. விரிவான விடையளிக்கவும்.

பாடநூல் வினாக்கள்

1. உலகமயமாக்கல் வரலாற்றை சுருக்கமாக எழுதுக:

உலகமயமாக்கல் வரலாற்றின் மூன்று நிலைகள்.

தொன்மையான உலகமயமாக்கல்

இடைப்பட்ட உலகமயமாக்கல்

நவீன உலகமயமாக்கல்

தொன்மையான உலகமயமாக்கல்:

- சுமர் மற்றும் சிந்து சமவெளி நாகரிகத்தின் இடையேயான வர்த்தக உறவுகள் உலகமயமாக்கல் என்ற வடிவத்தை மூன்றாம் நூற்றாண்டுகளில் உருவாக்கியது என்று ஆண்ட்ரே குந்துர் ஃபிராங்க் வாதிட்டார்.
- உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரம் மற்றும் கலாசாரத்தின் ஆரம்ப வடிவம் தொன்மையான உலகமயமாக்கல் என்று கிரேக்க காலத்தின் போது அழைக்கப்பட்டது.
- வணிக ரீதியாக நகர்ப்புற மையங்கள் கிரேக்க கலாச்சார மையத்தில் ஆர்வமாக சுற்றிவந்தன.
- ரோம பேரரசுக்கும், பார்த்தியன் பேரரசுக்கும் மற்றும் ஹன் வம்சத்துக்கும் இடையேயான வர்த்தகத் தொடர்பு உலகமயமாக்கலின் ஆரம்ப வடிவமாகும்.
- மேலும் இப்பேரரசுகளுக்கிடையிலான வணிக உறவுகளால் "பட்டு சாலையின்" (**Silk Route**) வளர்ச்சியை ஊக்கப்படுத்தியது.

இடைப்பட்ட உலகமயமாக்கல்:

- 16 மற்றும் 17ம் நூற்றாண்டுகளில், ஐரோப்பிய பேரரசுகளின் எழுச்சியால் முதலில் போர்ச்சுகீசியர்கள், ஸ்பானியர்கள், டச்சுக்காரர்கள் மற்றும் பிரிட்டிஷ்காரர்கள் கடல் வழி வாணிபம் மேற்கொண்டனர்.
- உலகமயமாக்கல் 17ம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனம் 1600 ல் தனியார் நிறுவனம் போன்று உருவாக்கப்பட்டது. இது முதல் பன்னாட்டு நிறுவனம் என அழைக்கப்பட்டது.
- தொடர்ந்து டச்சு மற்றும் போர்ச்சுக்கீசியர்களும் வணிக நிறுவனங்களை நிறுவினர்.

நவீன உலகமயமாக்கல்:

- 19ம் நூற்றாண்டில் உலகமயமாக்கலின் வருகை நவீன வடிவத்தை நெருங்கியது.
- 19 மற்றும் 20ம் நூற்றாண்டுகளுக்கு இடையே நடைபெற்ற உலகமயமாக்கல் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் கொண்டிருந்தன.

- அவை, இந்த நூற்றாண்டுகளில் நடைபெற்ற உலகளாவிய வர்த்தக பொருளாதாரத்தில் மூலதனம் மற்றும் முதலீடு செய்யப்பட்டது.
- 20ம் நூற்றாண்டில் வணிக உற்பத்தியில் அதிக பங்கினை பெற்றிருந்ததுடன், சேவைகள் வர்த்தகம் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் உற்பத்தி வணிகத்தில் எழுச்சியுற்றிருந்தது ஆகும்.

2. MNC யின் பரிமாண வளர்ச்சியைக் கூறி அதன் நன்மைகள் மற்றும் தீமைகளை சுருக்கமாக எழுதுக.

MNC யின் பரிணாம வளர்ச்சி: **PTA**

- கிழக்கு இந்திய நிறுவனம், இந்தியாவை ஒரு வர்த்தக நிறுவனமாகக் கொண்டு வந்தது. அதன் பிறகு அரசியல் ரீதியாக நாடெங்கிலும் பரவலாக ஆதிக்கம் செலுத்தியது.
- 1920களில் பன்னாட்டு நிறுவனங்கள் முதலில் பிரித்தெடுக்கப்பட்ட தொழில்களில் அல்லது தொழில் நடத்தும் நாடுகளின் மூலப்பொருட்களைக் கட்டுப்படுத்தி மெதுவாக இந்தியாவினுள் நுழைந்தன.
- 1950களுக்கு பிறகு உற்பத்தி மற்றும் பணிகள் துறையிலும் ஈடுபட்டது. தற்போது, இந்தியாவில் நான்கு பெரிய ஏற்றுமதி நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு சொந்தமான பன்னாட்டு நிறுவனங்கள் பெரும்பான்மையாக உள்ளன. இவற்றில் மிகப்பெரியது அமெரிக்காவாகும்.

MNCயின் நன்மைகள்:

- பன்னாட்டு நிறுவனங்கள் குறைந்த விலையில் பொருட்களை தரமாகவும் மற்றும் பரிவர்த்தனை செலவு இல்லாமலும் உற்பத்தி செய்கிறது.
- பன்னாட்டு நிறுவனங்கள் விலைகளை குறைப்பதால் உலகளாவிய நுகர்வோரின் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது.
- பன்னாட்டு நிறுவனங்கள் வரி மாறுபாட்டை பயன்படுத்திக் கொள்ள முடியும்.
- பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளூர் பொருளாதாரத்தில் வேலை வாய்ப்பினை ஊக்குவிக்கிறது.

MNCயின் தீமைகள்:

- பன்னாட்டு நிறுவனங்கள் முற்றுரிமையை (சில தயாரிப்புகளுக்கு) வளர்ப்பதற்கான ஒரு வழியாகும்.
- பன்னாட்டு நிறுவனங்களினால் சுற்றுச்சூழலில் தீங்கினை உருவாக்க வாய்ப்புள்ளது.
- ஒரு புரவலன் நாட்டின் பொருளாதாரத்தில், பன்னாட்டு நிறுவனத்தின் அறிமுகம் சிறிய உள்ளூர் வணிக வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.
- பன்னாட்டு நிறுவனங்கள் ஒழுக்க நெறிமுறைகளை மீறுவதோடு, தார்மீக சட்டங்களை அவர்கள் குற்றம் சாட்டி, மூலதனத்துடன் தங்கள் வணிக செயல்பாட்டினை திருப்பிக் கொள்வதற்கும் முனைவர்.
- இந்த பன்னாட்டு நிறுவனங்கள் பல்வேறு நாடுகளில் முதலீடு செய்யவும், புதிய தயாரிப்புகளை உருவாக்கவும், தொழில்நுட்ப முறைகளை சுரண்டிக் கொள்ளவும் செய்தன.

3. தென்னிந்தியாவில் வர்த்தகம் மற்றும் வர்த்தகர்களை பற்றி சுருக்கமாக விளக்குக.

தென்னிந்திய வர்த்தகம்:

- வர்த்தக நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கவும், விரிவுபடுத்தவும் வணிகர்கள் தென்னிந்திய வர்த்தகக் குழுக்களை உருவாக்கினார்கள்.
- இந்திய கலாச்சாரத்தை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் வழிகளாக வர்த்தகக் குழுக்கள் இருந்தன.
- தென்னிந்தியாவில் வர்த்தகம் சோழர்கள் ஆதிக்கத்திலிருந்து பின்பு அது பல்லவர்கள் ஆதிக்கத்திற்கு மாறியது.

ஆரம்பகால வர்த்தகர்கள்:

- கலிங்க வர்த்தகர்கள் சிவப்பு வண்ணக்கல் அலங்கார பொருட்களை வர்த்தகத்திற்குக் கொண்டு வந்தனர்.
- ஆரம்ப நாட்களில் பருத்தி ஜவுளியை தென்கிழக்கு ஆசியாவிற்கு கொண்டு வந்து வர்த்தகம் செய்தனர்.

மத்தியகால வர்த்தகர்கள்:

- மத்திய காலத்தில் தெற்கு இந்தியாவில் வர்த்தகர்களாக கத்ரிகாஸ், நாகராஸ், மும்முரிதந்தாஸ், அய்யாவோலி, செட்டீஸ், பிருடாஸ், கோவாரஸ் போன்ற வர்த்தகக் குழுவினர் செயல்பட்டனர்.

ஐரோப்பிய வணிகர்கள்:

- வாஸ்கோடா காமாவால் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு நன்னம்பிக்கை முனை வழியாக புதிய கடல் பாதை கண்டுபிடிக்கப்பட்டது. அது நாகரீக உலகத்தின் மீது பல விளைவுகளை ஏற்படுத்தியது.
- இந்தியாவின் கடலோர மற்றும் கடல் வர்த்தகம் ஐரோப்பியர்களால் முற்றுரிமை பெற்றிருந்தது.

போர்ச்சுக்கீசியர்கள்:

- வாஸ்கோடகாமாவின் தலைமையின் கீழ் போர்ச்சுகீசியர்கள் மே 17, 1498 இல் கோலிக்கோட்டில் வாணிபத்திற்காக வந்தனர்.
- 1502 இல் வாஸ்கோடகாமாவின் இரண்டாவது பயணத்தினால் இந்தியாவில் காலிகட், கொச்சின் மற்றும் கண்ணனூர் ஆகிய இடங்களில் வர்த்தக நிறுவனங்கள் நிறுவுவதற்கு வழிவகுத்தது. ஆரம்பத்தில் இந்தியாவில் போர்ச்சுகீசியர்களின் தலைநகராக கொச்சின் இருந்தது.

டச்சுக்காரர்கள்:

- டச்சு கிழக்கிந்திய நிறுவனம் 1602ல் உருவாக்கப்பட்டது.
- அட்மிரல் வான்டெர் ஹகேன் என்பவரால் டச்சு நிறுவனம் மசூலிப்பட்டினம், பெத்தபோலி (நிஜாம்பட்டினம்), தேவனாம்பட்டினம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டன.
- 1610ம் ஆண்டில் சந்திரகிரி ராஜாவுடன் பேச்சு வார்த்தை நடத்தி புலிக்காட்டில் மற்றொரு தொழிற்சாலையை நிறுவினர். புலிகாட் டச்சுக்காரர்களின் தலைமையிடமாக இருந்தது.

பிரிட்டிஷ்காரர்கள்:

- 1600 ல் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு நிறுவனம் தொடங்குவதற்கு எலிசபெத் ராணியால் பட்டயம் வழங்கப்பட்டது.
- தென்கிழக்கு கடற்கரையில் 1611ல் மசூலிப்பட்டினத்திலும், 1626ல் புலிகாட் அருகிலும், ஆங்கிலேயர்கள் வணிகத் தளங்களை நிறுவினார்.
- ஆங்கிலேயர்கள் சென்னையில் செயின்ட் ஜார்ஜ் என அழைக்கப்படும் ஒரு வலுவான கோட்டையைக் கட்டினர்.
- கோரமண்டல கடற்கரையிலுள்ள மசூலிப்பட்டினம் ஆங்கிலேய குடியேற்றத்தின் தலைமையிடமாக மாறியது.

டேனிஷ்காரர்கள்:

- டேனிஷ்காரர்கள் 1616 இல் இந்தியாவிற்கு வருகை புரிந்து டேனிஸ் கிழக்கு இந்திய நிறுவனம் ஒன்றை உருவாக்கினர்.
- 1620ம் ஆண்டில் டிராங்குபாரை (தமிழ்நாடு) தலைமையிடமாக நிறுவியது, ஆனால் இந்தியாவில் தங்களை வலுப்படுத்த தவறியதால், 1845 ல் அனைத்து குடியேற்றங்களையும் ஆங்கிலேயர்களால் கட்டாயப்படுத்தப்பட்டு அவர்களுக்கே விற்றுச் சென்றனர்.

பிரெஞ்சுக்காரர்கள்:

- இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்கள் 1668ஆம் ஆண்டில் கோல்கொண்டாவின் சுல்தானிடம் அனுமதி பெற்று, முதல் பிரெஞ்சு தொழிற்சாலையை நிறுவினர்.
- 1701 ல் பாண்டிச்சேரி பிரெஞ்சின் தலைமையிடமாக மாறியது.

சிறப்பு பொருளாதார மண்டலங்கள்

- சமீபத்தில் இந்திய அரசு தென்னிந்தியாவில் சிறப்பு பொருளாதார மண்டலங்களை குறிப்பாக தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளாவில் ஏற்படுத்தியது. மேலும் ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கில் நாங்குனேரி SEZ, எண்ணூர் SEZ, கோயம்புத்தூர் SEZ என தமிழகத்தில் சில SEZ கள் ஆரம்பிக்கப்பட்டன.

4. உலக வர்த்தக அமைப்பு பற்றி எழுதுக.

உலக வர்த்தக அமைப்பு (WTO)

- 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உலக வர்த்தக அமைப்பை (WTO) அமைப்பதற்கு காட் (GATT) உறுப்பு நாடுகள் உருகுவே சுற்றின் இறுதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- இந்த அமைப்பை அமல்படுத்திட உடன்படிக்கையை ஏற்று 104 உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்டது. WTO உடன்படிக்கை ஜனவரி 1, 1995 முதல் நடைமுறைக்கு வந்தது.
- தற்போது உலக வர்த்தக அமைப்பில் 164 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர். இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனிவாவில் அமைந்துள்ளது.

WTO வின் குறிக்கோள்கள்:

- அயல் நாட்டு வாணிபத்திற்கான விதிகள் அமைத்தல் மற்றும் செயல்படுத்துதல்.
- வர்த்தக தாராயமயமாக்கலுடனான பேச்சு வார்த்தை மற்றும் கண்காணிப்பதற்கான ஒரு மன்றத்தை வழங்குதல்.
- வர்த்தக தகராறுகளைக் கையாளுதல்
- நிலையான முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்து அறிமுகம் செய்தல்
- உலக வர்த்தகத்தில் வளர்ந்துவரும் நாடுகளின் ஒரு சிறந்த வளர்ச்சிக்கு பாதுகாப்பாக இருத்தல்.
- முடிவெடுக்கும் செயல்களின் வெளிப்படைத் தன்மையை அதிகரித்தல்.
- முழு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் பயனுள்ள தேவையை அதிகரித்தல் என்பனவாகும்.

5. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக. **PTA**

- உலகமயமாக்கலின் நன்மைகள் அனைத்து நாடுகளுக்கும் நீடிக்கப்பட வேண்டும். அவை தன்னிச்சையாக செயல்படாது.
- வளர்ந்துவரும் உலகில் உலகமயமாக்கல், உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும் என்பது அச்சத்திற்குரியதாகும்.
- உலகமயமாக்களினால் உலகளாவிய போட்டி அதிகரித்து தொழில் முறை உலகில், ஊதியங்கள், தொழிலாளர் உரிமைகள், வேலைவாய்ப்பு நடைமுறைகள் ஆகியவற்றை அடிமட்டத்திற்குக் கொண்டு செல்ல இது வழிவகுக்கும்.
- இது உலகளாவிய சமத்துவமின்மைக்கு வழிவகுக்கிறது.
- உலகமயமாக்கல் ஒரு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.
- உலகமயமாக்கலால் குழந்தை தொழிலாளர் மற்றும் அடிமைத்தனம் போன்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது.
- மக்கள் அதிகமாக துரித உணவுகளை உட்கொள்கிறார்கள். இதனால் உடல் நலக்குறைவு மற்றும் நோய் பரவுதலுக்கு இது வழிவகுக்கிறது.

கூடுதல் வினாக்கள்

6. நியாயமான வணிக நடைமுறைகளின் பயனாளிகள் பற்றி விவரி.

நுகர்வோர்:

- நுகர்வோர், நியாயமான வர்த்தக அமைப்பை ஆதரித்தும் மற்றும் சர்வதேச வர்த்தக விதிகளின் பரந்த சீர்திருத்தத்தை ஒப்பிட்டும், அவர்கள் சிறந்த தயாரிப்புகளை வளர்ந்துவரும் வரம்பிலிருந்து தேர்வு செய்யலாம்.
- நியாயமான வர்த்தக பெயரிட்ட தயாரிப்புகளை நுகர்வோர் வாங்குவதன்மூலம், தங்கள் வாழ்க்கையை மேம்படுத்தப் போராடும் தயாரிப்புகளுக்கு ஆதரவு தெரிவிக்கலாம்.

வர்த்தகர்கள்/நிறுவனங்கள்:

- 2002 ஆம் ஆண்டு முதல், இது வர்த்தகத்தில் மிகவும் பரவலாக அங்கீகரிக்கப்பட்டு சமூக மற்றும் முன்னேறிய அடையாளமாக மாறியுள்ளது.
- நியாயமான வர்த்தக நிறுவனங்கள் தங்கள் வர்த்தகத்திற்கு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு நம்பகமான வழியை வழங்குகிறது.

உற்பத்தியாளர்கள்:

- நிலையான விலையில் நிலையான உற்பத்தி செலவுகளைக் கட்டுப்படுத்தலாம். சந்தை அணுகுதல் என்பது சந்தையில் இருந்து வெளியேற்றப்பட்ட உற்பத்தியாளர்களிடம் வர்த்தகம் செய்ய வாங்குபவர்கள் உதவுதலாகும்.
- பங்குதாரர், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

7. MNC யின் வளர்ச்சிக்கான காரணங்கள் யாவை?

சந்தை நிலப்பரப்பின் விரிவாக்கம்:

- பெரிய அளவிலான நிறுவனங்களின் விரிவாக்கங்களின் விரிவாக்கங்கள் விரிவடைந்து வருவதால், அந்த நிறுவனம் உள்ள நாட்டின் புவியியல் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகளை மேலும் விரிவாக்குகிறது.

சந்தைப்படுத்தும் மேன்மை:

- ஒரு பன்னாட்டு நிறுவனம், தேசிய நிறுவனங்களின் மீது சந்தைப்படுத்தும் மேன்மையைக் கொண்டுள்ளது.
- இது சந்தை மதிப்பினைப் பெற்று, அதன் தயாரிப்புகளை விற்பனை செய்வதில் குறைவான சிரமங்களை எதிர் கொள்கிறது.
- மேலும் பயனுள்ள விளம்பர மற்றும் விற்பனை ஊக்குவிப்பு தொழில்நுட்பங்களை ஏற்றுக் கொள்கிறது.

நிதி மேன்மை:

- இதில் நிதி வளங்களும், உயர்நிதி பயன்பாடுகளும் உள்ளன. அதனால், வெளிப்புற மூலதன சந்தைகளை எளிதில் அணுக முடியும்.
- அதன் சர்வதேச புகழ் காரணமாக வளங்களை அதிகரிக்கவும் முடியும்.

தொழில்நுட்ப மேன்மை:

- தேசிய தொழில் துறைகளுடன் ஒப்பிடுகையில், இந்த நிறுவனங்கள் தொழில் வளர்ச்சியில் தொழில் நுட்ப மேம்பாட்டுடன் காணப்படுகின்றன.

பண்டங்களின் கண்டுபிடிப்புகள்:

- பன்னாட்டு நிறுவனங்கள், புதிய தயாரிப்புகள் மற்றும் ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை உயர்ந்த வடிவமைப்புகளாக உருவாக்குவதற்கான பணியில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுடன் ஈடுபட்டுள்ளன.

உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து

மனவரைபடம்

உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து



நினைவில் கொள்க

- **உணவு பாதுகாப்பு** என்பது, ஒரு நபர் போதுமான அளவு சாப்பிடுவதையும், சுறுசுறுப்பாக இருப்பதையும் ஆரோக்கியமான வாழ்க்கை நடத்துவதையும் குறிக்கும்.
- **உணவு கிடைத்தல்** என்பது விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு இருப்பதாகும்.
- உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் மூன்று அடிப்படைக் கூறுகள்: **கிடைத்தல்' அணுகல் மற்றும் உறிஞ்சுதல்** என்பனவாகும்.
- **அமெரிக்கா** தனது பொதுச்சட்டம் 480 திட்டத்தின் மூலம் இந்தியாவுக்கு உதவி வழங்கியது.
- நாட்டில் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழிவகுத்தது **பசுமைப்புரட்சி** ஆகும்.
- **குறைந்தபட்ச ஆதரவு விலை** என்பது அந்த பயிரின் சாகுபடியில் பல்வேறு செலவுகளை கருத்தில் கொண்டு ஒரு குறிப்பிட்ட பயிருக்கு ஒரு விலை என்று நிபுணர் குழுவால் நிர்ணயிக்கப்படுவது ஆகும்.
- **தேசிய உணவு பாதுகாப்பு சட்டம்** இந்திய பாராளுமன்றத்தால் 2013ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.
- விவசாய பொருட்களின் ஏற்றுமதி அடிப்படையில் **புதிய வேளாண் கொள்கை** 2018ல் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது.
- மனிதவள மேம்பாட்டில் **சுகாதாரத்திற்கு** முக்கிய பங்கு உண்டு. சிறந்த மருத்துவ பராமரிப்பு ஆரோக்கியமான மக்கள் தொகைக்கு வழி வகுக்கிறது.
- தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டங்கள் இலவசமாக **ஆம்புலன்ஸ்** (108 அவசர ஆம்புலன்ஸ் சேவை) சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. __________ என்பது விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு இருப்பது, உள்நாட்டு உற்பத்தியில் இருப்பில் மாற்றங்கள் மற்றும் இறக்குமதி பற்றிய ஒரு செயல்பாடாகும்.
   அ) உணவு கிடைப்பது ஆ) உணவுக்கான அணுகல்
   இ) உணவின் முழு ஈடுபாடு ஈ) ஏதுமில்லை

2. தாங்கியிருப்பு என்பது உணவுப் பங்கு தானியங்கள் அதாவது கோதுமை மற்றும் அரிசியை __________ மூலம் அரசாங்கம் கொள்முதல் செய்கிறது.
   அ) FCI ஆ) நுகர்வோர் கூட்டுறவு இ) ICICI ஈ) IFCI

3. எது சரியானது?
   i) HYV – அதிக விளைச்சல் தரும் வகைகள் ii) MSP – குறைந்தபட்ச ஆதரவு விலை
   iii) PDS – பொது விநியோக முறை iv) FCI – இந்திய உணவுக் கழகம்
   அ) (i) மற்றும் (ii) சரியானவை.
   ஆ) (iii) மற்றும் (iv) சரியானவை.
   இ) (ii) மற்றும் (iii) சரியானவை.
   ஈ) மேற்கூறிய அனைத்தும்.

4. நீட்டிக்கப்பட்ட உதவி பொதுச் சட்டம் 480ஐ கொண்டு வந்த நாடு
   அ) அமெரிக்கா ஆ) இந்தியா இ) சிங்கப்பூர் ஈ) இங்கிலாந்து

5. __________ புரட்சி இந்தியாவில் தோன்றியதால் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது.
   அ) நீலப் புரட்சி ஆ) வெள்ளைப் புரட்சி இ) பசுமைப் புரட்சி ஈ) சாம்பல் புரட்சி

6. உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக் கொண்ட ஒரே மாநிலம்__________.
அ) கேரளா ஆ) ஆந்திரப்பிரதேசம்
இ) தமிழ்நாடு ஈ) கர்நாடகா

7. __________ என்பது உடல் நலம் மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான உணவை வழங்கும் அல்லது பெறும் செயல்முறையாகும்.
அ) ஆரோக்கியம் ஆ) ஊட்டச்சத்து இ) சுகாதாரம் ஈ) பாதுகாப்பு

8. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் __________இல் தொடங்கப்பட்டது. **PTA**
அ) 1980 ஆ) 1975 இ) 1955 ஈ) 1985

9. __________ நிலை என்பது மக்கள் தொகை மற்றும் மனிதவளர்ச்சியின் ஒட்டு மொத்த நல்வாழ்வின் குறியீடுகளில் ஒன்று.
அ) ஆரோக்கியம் ஆ) ஊட்டச்சத்து இ) பொருளாதாரம் ஈ) செல்வம்

10. தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டங்கள் __________ சேவையை இலவசமாக அறிமுகப்படுத்தியுள்ளது.
அ) 106 ஆம்புலன்ஸ் ஆ) 108 ஆம்புலன்ஸ்
இ) 107 ஆம்புலன்ஸ் ஈ) 105 ஆம்புலன்ஸ்

கூடுதல் வினாக்கள்

11. உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் அடிப்படைக் கூறுகளில் ஒன்று
அ) உறிஞ்சுதல் ஆ) வழங்கல் இ) உற்பத்தி ஈ) விற்பனை

12. "கப்பலுக்கு வாயில்" இருப்பு என்று அழைக்கப்படும் உதவியை வழங்கிய நாடு
அ) இங்கிலாந்து ஆ) ரஷ்யா இ) அமெரிக்கா ஈ) ஜப்பான்

13. உணவு உற்பத்தியை அதிகரிக்க அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம்
அ) FCI ஆ) ICDS இ) NFSA ஈ) HYV

14. இந்தியா உணவு நிலையை சீர் செய்ய எடுத்துக் கொண்ட காலம்
அ) 50 ஆண்டுகள் ஆ) 65 ஆண்டுகள் இ) 60 ஆண்டுகள் ஈ) 75 ஆண்டுகள்

15. விவசாயிகளுக்கு மலிவான பண்ணைக் கடனை வழங்குவது
அ) உலக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி
இ) கூட்டுறவு சங்கங்கள் ஈ) தொழிற்சங்கங்கள்

16. இந்தியா எவற்றின் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதில் வெற்றிபெறவில்லை?
அ) பருப்பு வகைகள் ஆ) முட்டை இ) கோதுமை ஈ) அரிசி

17. இந்தியா எவற்றின் உற்பத்தியில் 40 மடங்கு அதிகரிக்கச் செய்துள்ளது?
அ) பால் ஆ) முட்டை இ) மீன் ஈ) எண்ணெய் விதை

18. தமிழ்நாட்டில் குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவசமாக வழங்கப்படுவது
அ) பால் ஆ) கோதுமை இ) முட்டை ஈ) அரிசி

19. தமிழ்நாட்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு
அ) 2013 ஆ) 2014 இ) 2016 ஈ) 2015

20. 2015–16இல் இந்தியாவிலிருந்த ஏழைமக்களின் எண்ணிக்கை
அ) 364 மில்லியன் ஆ) 271 மில்லியன் இ) 635 மில்லியன் ஈ) 410 மில்லியன்

21. 2015–16ஆம் ஆண்டு வறுமைக் கணக்கின்படி மிக ஏழ்மையான மாநிலமாக இருந்தது
அ) அசாம் ஆ) பீகார் இ) உத்திரப்பிரதேசம் ஈ) பஞ்சாப்

22. 2006ஆம் ஆண்டில் மிகக் குறைந்த ஏழ்மை வட்டாரங்களைக் கொண்டிருந்த மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரப்பிரதேசம்
இ) கேரளா ஈ) மேற்கு வங்காளம்

23. 2014–17வரையிலான காலங்களில் வறுமை ஒழிப்பில் முன்னிலை வகித்த மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) மகாராஷ்டிரம் இ) குஜராத் ஈ) கர்நாடகா

24. மதிய உணவுத்திட்டத்தின் முன்னோடியாகத் திகழ்வது
அ) மத்தியப் பிரதேசம் ஆ) அருணாச்சல பிரதேசம்
இ) ராஜஸ்தான் ஈ) தமிழ்நாடு

25. அரசு நிறுவனங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு தமிழக அரசு வழங்கும் நிதியுதவி
அ) ₹ 15000 ஆ) ₹ 12000 இ) ₹ 10000 ஈ) ₹ 20000

விடைகள்

1. அ) உணவு கிடைப்பது
2. அ) FCI
3. ஈ) மேற்கூறிய அனைத்தும் சரி.
4. அ) அமெரிக்கா
5. இ) பசுமைப் புரட்சி
6. இ) தமிழ்நாடு
7. ஆ) ஊட்டச்சத்து
8. அ) 1980
9. அ) ஆரோக்கியம்
10. ஆ) 108 ஆம்புலன்ஸ்
11. அ) உறிஞ்சுதல்
12. இ) அமெரிக்கா
13. ஈ) HYV
14. ஆ) 65 ஆண்டுகள்
15. இ) கூட்டுறவு சங்கங்கள்
16. அ) பருப்பு வகைகள்
17. ஆ) முட்டை
18. ஈ) அரிசி
19. இ) 2016
20. அ) 364 மில்லியன்
21. ஆ) பீகார்
22. இ) கேரளா
23. அ) தமிழ்நாடு
24. ஈ) தமிழ்நாடு
25. ஆ) ₹ 12000

II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. அமெரிக்காவிலிருந்து __________ அமைப்பு இந்தியாவில் HYVஐ அறிமுகப்படுத்தியது.
2. __________ ஊட்டச்சத்து குறைபாட்டின் முக்கியமான குறியீடாகும். **PTA**
3. __________ ஆம் ஆண்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் இந்திய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.
4. பொதுவான மக்களுக்கு பொறுப்பான விலையில் தரமான பொருட்களை வழங்குவதில் __________ முக்கிய பங்கு வகிக்கிறது.
5. __________ என்பது ஒரு அலகு பணம் வாங்கக் கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளின் அளவின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படும் நாணயத்தின் மதிப்பாகும்.

கூடுதல் வினாக்கள்

6. இந்தியாவில், தமிழ்நாடு நீங்கலாக உள்ள மற்ற மாநிலங்களில் பின்பற்றப்படும் வழங்கல் முறை __________ .
7. தமிழ் நாட்டில் __________ பெற்றிருப்பவர்கள் அனைவருக்கும் பொது வழங்கல் முறையில் உணவு தானியங்கள் வழங்கப்படுகிறது.

8. தமிழ்நாட்டில் இயங்கும் நியாயவிலைக் கடைகளில் 94% __________ நிறுவனங்களால் நடத்தப்படுகிறது.
9. சந்தை விலையை விட குறைந்த விலையில் விற்பனை செய்யப்படும் விலை __________ என்று அழைக்கப்படுகிறது.
10. பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும் போது அவற்றின் __________ அதிகரிக்கிறது.
11. விலை அதிகரிக்கும்போது, வாங்கும் திறன் குறைந்து இறுதியாக __________ ன் மதிப்பு குறைகிறது.
12. நுகர்வோர் விலை குறியீட்டு எண் என்பது __________ ஐ கண்காணிப்பதற்கான ஒரு முறையாகும்.
13. இந்தியா தனது வறுமை விகிதத்தை 10 ஆண்டுகளில் 55%லிருந்து__________% ஆக குறைத்துள்ளது.
14. __________ குறைபாட்டினால் குழந்தைகளின் வயது தொடர்பான எடையை விட "எடை குறைவாக" உள்ளது.
15. நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் __________ .
16. இரத்த சோகை ஏற்படக் காரணம் __________ குறைபாடு ஆகும்.
17. தமிழ் நாட்டில் மிகச் சிறந்த முறையில் நடைபெறும் சத்துணவுத் திட்டத்தின் பெயர் __________ .
18. __________ திட்டம் குழந்தையின் முழு வளர்ச்சிக்கான உலகின் மிகப் பெரிய திட்டங்களில் ஒன்றாகும்.
19. தமிழ்நாட்டின் அவசர ஆம்புலன்ஸ் சேவையின் எண் __________ .
20. பொது ICDS திட்டங்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள் தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு __________ .

விடைகள்

1. ஃபோர்டு அறக்கட்டளை	2. எடை குறைவு	3. 2013
4. நுகர்வோர் கூட்டுறவு	5. வாங்கும் திறன்	6. இலக்கு பொது வழங்கல் முறை
7. குடும்ப வழங்கல் கார்டு	8. கூட்டுறவு	9. வெளியீட்டு விலை
10. விலை	11. நாணயத்தின்	12. வாங்கும் சக்தியை
13. 28%	14. ஊட்டச்சத்து	15. அமர்த்தியா சென்
16. ஊட்டச்சத்து	17. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம்	
18. ICDS	19. 108	20. 1991

III. பொருத்துக:

பாடநூல் வினா

அ)

1. நுகர்வோர் கூட்டுறவு	அ) மானிய விகிதங்கள்	விடை	1) ஈ
2. பொது விநியோக முறை	ஆ) 2013		2) அ
3. UNDP	இ) குறைந்த ஏழ்மை உள்ள பகுதி		3) உ
4. தேசிய உணவு பாதுகாப்பு சட்டம்	ஈ) தரமான பொருட்களை வழங்குதல்		4) ஆ
5. கேரளா	உ) ஐக்கிய நாடுகள் சபை வளர்ச்சித் திட்டம்		5) இ

கூடுதல் வினா

ஆ)

1. பிரதம மந்திரி	அ) மகப்பேறு நன்மை திட்டம்	விடை	1) இ
2. முதலமைச்சர்	ஆ) ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாடு சேவை		2) ஈ
3. முத்துலட்சுமி ரெட்டி	இ) கிரமோதயா யோஜனா திட்டம்		3) அ
4. அமர்த்தியா சென்	ஈ) சுகாதார காப்பீடு திட்டம்		4) உ
5. உலக வங்கி	உ) பொருளாதார அறிஞர்		5) ஆ

IV. சரியான கூற்றினை தேர்வு செய்யவும்:

பாடநூல் வினா

1. கூற்று (A) : வாங்கும் சக்தி அதிகரித்தால் விலை குறைகிறது மற்றும் இது நேர்மாறானது.
   காரணம் (R) : பொருட்களின் உற்பத்தி குறைந்து, விலை அதிகரிப்பதால் வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.
   அ) A சரியானது R தவறானது.
   ஆ) A மற்றும் R இரண்டும் தவறானது.
   இ) A சரியானது ஆனால் R சரியான விளக்கம் அல்ல.
   ஈ) A சரியானது R என்பது Aஇன் சரியான விளக்கம்.

கூடுதல் வினாக்கள்

2. கூற்று (A) : பணக்கார நாடுகளிலிருந்து உணவு தானியங்களை சலுகை விலையில் இந்தியா கோரவேண்டியிருந்தது.
   காரணம் (R) : இந்தியாவில் ஏற்பட்ட தொடர்ச்சியான வறட்சி, உணவு தானியங்களின் இறக்குமதியைச் சார்ந்திருக்க தள்ளப்பட்டது.
   அ) A சரியானது R தவறானது.
   ஆ) A மற்றும் R இரண்டும் தவறானது.
   இ) A சரியானது ஆனால் R சரியான விளக்கம் அல்ல.
   ஈ) A சரியானது R என்பது Aஇன் சரியான விளக்கம்.

3. கூற்று (A) : மனித ஆரோக்கியத்திலும், நல்வாழ்விலும் ஊட்டச்சத்து முக்கிய பங்கு வகிக்கிறது.
   காரணம் (R) : உணவுப் பாதுகாப்பில் ஊட்டச்சத்தும் பாதுகாப்பும் அடங்கும்.
   அ) A மற்றும் R சரி.
   ஆ) A மற்றும் R தவறு.
   இ) A சரி ஆனால் R தவறு.
   ஈ) A தவறு ஆனால் R சரி.

விடைகள்

1. ஈ) A சரியானது, R என்பது Aஇன் சரியான விளக்கம்.
2. ஈ) A சரியானது, R என்பது Aஇன் சரியான விளக்கம்.
3. அ) A மற்றும் R சரி.

V. சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. FAOயின் படி உணவு பாதுகாப்பை வரையறு.
   - "எல்லா மக்களும், எல்லா நேரங்களிலும், போதுமான, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுக்கான உடல், சமூக மற்றும் பொருளாதார அணுகு முறையை கொண்டிருக்கும்போது, அவர்களின் உணவுத் தேவைகளையும், சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உணவு விருப்பங்களையும் பூர்த்தி செய்வதில் உணவு பாதுகாப்பு இருக்கிறது".

2. உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் அடிப்படை கூறுகள் யாவை?

- உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் அடிப்படை கூறுகள் மூன்று. அவை கிடைத்தல், அணுகல் மற்றும் உறிஞ்சுதல் ஆகும்.
- உணவு கிடைத்தல் என்பது விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு இருப்பதாகும்.
- உணவுக்கான அணுகல் என்பது முதன்மையாக வாங்கும் திறன் பற்றிய கூற்றாகும்.
- உணவினை உறிஞ்சுதல் என்பது உட்கொள்ளும் உணவை உயிரியல் ரீதியாகப் பயன்படுத்துவதற்கான திறன் ஆகும்.

3. "கப்பலுக்கு வாயில்" நிகழ்வை விளக்குக. **PTA**

- 1960களின் முற்பகுதியில் அமெரிக்கா தனது பொதுச்சட்டம் 480 (பி.எல் 480) திட்டத்தின் மூலம் இந்தியாவிற்கு உதவி வழங்கியது. இந்த நிலைமை பிரபலமாக "கப்பலுக்கு வாயில்" இருப்பு (Ship to Mouth) என்று அழைக்கப்பட்டது.

4. பசுமைப்புரட்சியின் FCIயின் பங்கு என்ன?

- பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை (Minimum support Price) பருவ காலத்தில் அறிவிக்கப்படுகிறது.
- உபரி உற்பத்தி இருக்கும் மாநிலங்களில் விவசாயிகளிடமிருந்து கோதுமை மற்றும் அரிசியை இந்திய உணவுக் கழகம் (FCI) மூலம் அரசு கொள்முதல் செய்கிறது.
- விவசாயிகளுக்கு முன்பே அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதரவு விலையை வழங்குகிறது.
- வாங்கிய உணவு தானியங்களை FCI பெரிய சேமிப்பு கிடங்கினை அமைத்து சேமித்து வைக்கிறது. தாங்கியிருப்பு உணவு தானியங்கள் அனைத்தையும் ஆண்டு முழுவதும் வழங்குகிறது.

5. பசுமைப்புரட்சியின் விளைவுகள் யாவை?

- பசுமைப்புரட்சி நாட்டில் தோன்றி உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது. உயர்ரக விதைகளான (HYV) அரிசி மற்றும் கோதுமை ஆகிய உணவுத் தானியங்கள் பயிரிடப்பட்ட பகுதியில் உற்பத்தியை அதிகரிக்க முடிந்தது, மேலும் பிற முக்கிய தானியப் பயிர்களின் விளைச்சலும் அதிகரித்தது,
- உணவுத் தானிய சாகுபடியின் பரப்பளவு 122 மில்லியன் ஹெக்டேராக வளர்ந்து, உற்பத்தி ஐந்து மடங்காக அதிகரித்தது.
- உணவு தானிய உற்பத்தியில் ஏற்பட்ட இந்த மாற்றம் பால், கோழி மற்றும் மீன்வளத்துறை உற்பத்தியிலும் பலமடங்கு அதிகரிக்க காரணமாயிற்று.

6. உலகளாவிய பொது வழங்கல் முறைக்கும் இலக்கு பொது வழங்கல் முறைக்கும் உள்ள வேறுபாட்டை எழுதுக.

உலகளாவிய பொது வழங்கல் முறை	இலக்கு பொது வழங்கல் முறை
1. உலகளாவிய பொது வழங்கல் முறையை தமிழ் நாடு ஏற்றுக்கொண்டுள்ளது.	இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களில் இலக்கு பொது வழங்கல் முறை பின்பற்றப்படுகிறது.
2. உலகளாவிய பொது வழங்கல் முறையின் கீழ் குடும்ப வழங்கல் கார்டு பெற்றிருப்பவர்கள் அனைவருக்கும் பொது வழங்கல் மூலம் உணவுத் தானியங்கள் மானிய விலையில் வழங்கப் படுகின்றன.	இலக்கு பொது வழங்கல் முறையில் பயனாளிகள் சில அளவுகோல்களின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு உரிமைகள் வழங்கப்படுகின்றன. மீதமுள்ளவர்களுக்கு வழங்கப்படுவதில்லை.
3. தமிழ்நாடு அரசு அனைத்து அட்டைதாரர்களுக்கும் இலவசமாக அரிசியை வழங்குகிறது.	இலவசமாக உணவுத் தானியங்கள் வழங்கப்படுவதில்லை.

7. வாங்கும் திறன் பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.

- வாங்கும் திறன் என்பது ஒரு அலகு பணம் வாங்கக்கூடிய பொருள்கள் அல்லது சேவைகளின் அளவின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படும் நாணயத்தின் மதிப்பு விலை ஏறும்போது வாங்கும் திறன் குறைகிறது. மாறாக விலை குறையும் பொழுது வாங்கும் திறன் அதிகரிக்கிறது என்பதாகும்.

8. **புதிய வேளாண் கொள்கைக்கான முக்கிய காரணங்கள் யாவை?**

- விவசாய பொருட்களின் ஏற்றுமதியை அதிகரித்திடல்.
- விவசாய உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துதல்.
- ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் விவசாயிகளின் வருமான நிலை மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்,
- விவசாயத்துறையின் அனைத்து வட்டங்களிலும், விரிவான வளர்ச்சியடைதல் போன்ற காரணங்களுக்காக புதிய வேளாண் கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

9. **வறுமையின் பல பரிமாண தன்மை குறித்து சிறு குறிப்பு எழுதுக.**

- ஒரு விரிவான வடிவத்தினை உருவாக்க பல பரிமாண வறுமை நடவடிக்கைகள் பயன்படுத்தப்படுகிறது. யார் ஏழை, அவர்கள் எப்படி ஏழை, அவர்கள் அனுபவிக்கும் தீமைகளின் வீச்சு ஆகியவற்றை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள்.
- வறுமை என்பது ஒற்றை பரிமாணமல்ல, அது பல பரிமாணத்தினைக் கொண்டது என்ற கருத்து பல பரிமாண வறுமை குறியீட்டின் அடிப்படைத் தத்துவமாகும்.
- உடல் நலம், கல்வி, வாழ்க்கைத்தரம், வருமானம், அதிகாரமளித்தல், பணியின் தரம், மற்றும் வன்முறையிலிருந்து அச்சுறுத்தல் போன்ற ஏழை மக்களின் அனுபவத்தை இழக்கும் பல காரணிகளால் பல பரிமாண வறுமை உருவாகிறது.
- பீகார், ஜார்கண்ட், உத்திரப்பிரதேசம் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய நான்கு ஏழ்மையான மாநிலங்கள் இன்னும் 196 மில்லியன் பல பரிமாண வறுமை குறியீடுள்ள ஏழை மக்களைக் கொண்டுள்ளது.

10. **தமிழ் நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயரை எழுதுக.**

- புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஊட்டச்சத்து உணவுத் திட்டம்.
- ஆரம்பக் கல்விக்கு தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டம்.
- பொது ICDS திட்டங்கள் மற்றும் உலகவங்கி உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள்.
- பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா திட்டம்
- தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்
- மதிய உணவுத்திட்டம்

கூடுதல் வினாக்கள்

11. **பிரபல விவசாய விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதனின் கருத்துப்படி ஊட்டச்சத்து பாதுகாப்பினை விளக்குக.**

- பிரபல விவசாய விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் கருத்துப்படி "சரிவிகித உணவு, பாதுகாப்பான குடிநீர், சுற்றுச் சூழல் சுகாதாரம், ஆரம்ப சுகாதார பராமரிப்பு மற்றும் ஆரம்பக்கல்வி ஆகியவற்றிற்கான உடல், பொருளாதார மற்றும் சமூக அணுகல் என்பது ஊட்டச்சத்து பாதுகாப்பாகும்".

12. **குறைந்தபட்ச ஆதரவு விலை என்றால் என்ன?**

- குறைந்தபட்ச ஆதரவு விலை என்பது அந்த பயிரின் சாகுபடியில் பல்வேறு செலவுகளை கருத்தில் கொண்டு ஒரு குறிப்பிட்ட பயிருக்கு நிபுணர் குழுவால் ஒரு விலை நிர்ணயிக்கப்படுகிறது. இதனை குறைந்தபட்ச ஆதரவு விலை என்பர்.

13. **தமிழ்நாட்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் பற்றி கூறுக.**

- இந்திய தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் துவங்கி மூன்று ஆண்டுகள் கழித்து நவம்பர்1, 2016 அன்று இச்சட்டம் இந்தியாவிலேயே கடைசி மாநிலமாக தமிழ்நாட்டில் துவக்கப்பட்டது.
- அக்டோபர் 27 அன்று வெளியிடப்பட்ட அரசாங்க உத்தரவில், சட்டத்தை அமல்படுத்தும்போது, அது அதன் விதிகளை மாற்றியமைக்கும் என்று அரசு குறிப்பிட்டது.

14. **தாங்கியிருப்பு என்றால் என்ன?**

- உணவு தானியங்களான கோதுமை மற்றும் அரிசி ஆகியவை விவசாயிகளிடமிருந்து இந்திய உணவுக் கழகத்தின் மூலம் அரசாங்கத்தால் வாங்கப்படுகிறது. வாங்கிய உணவுதானியங்கள் FCI உணவு தானிய களஞ்சியங்களில் சேமிக்கப்படுகின்றன. FCI யினால் சேமிக்கப்பட்ட உணவு தானியங்களை தாங்கியிருப்பு உணவு தானியங்கள் என்பர்.

15. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நன்மை திட்டத்தினை விளக்குக.

- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நன்மை திட்டத்தின் கீழ் ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு சத்தான உணவுக்கான செலவுகளைச் சமாளிக்க, பிரசவ காலத்தில் வருமான இழப்பை ஈடுசெய்ய, புதிதாகப் பிறக்கும் குழந்தைகளின் எடையை அதிகரிக்க மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகளை வாங்க, அரசாங்க நிறுவனங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு ரூ.12,000/– நிதி உதவியை மூன்று தவணைகளில் தமிழக அரசு வழங்குகிறது.

16. வாங்கும் சக்தி சமநிலை பற்றி குறிப்பு வரைக.

- வாங்கும் சக்தி சமநிலை என்பது ஒரு பொருளாதாரக் கோட்பாடு ஆகும். இது ஒரு பொருளின் விலையுடன் சரி செய்யப்பட வேண்டிய தொகையை மதிப்பிடுகிறது. இரு நாடுகளின் மாற்று விகிதங்கள் கொடுக்கப்பட்டால் ஒவ்வொரு நாணயத்தின் வாங்கும் சக்தியுடன் பரிமாற்றம் பொருந்த வேண்டும்.
- நாடுகளின் வருமான நிலைகள் மற்றும் வாழ்க்கைச் செலவு தொடர்பான பிற தொடர்புடைய பொருளாதாரத் தரவு அல்லது பணவீக்கம் மற்றும் பண வாட்டத்தின் சாத்தியமான விகிதங்களை ஒப்பிடுவதற்கு வாங்கும் சக்தி சமநிலை பயன்படுகிறது.

17. குறைந்தபட்ச ஆதரவு விலை மற்றும் வெளியீட்டு விலை என்பதனை வேறுபடுத்துக.

விவசாயிகளிடம் உபரியாக இருக்கும் அரிசி மற்றும் கோதுமை போன்ற உணவுப் பொருட்கள் இந்திய உணவுக் கழகத்தின் மூலம் நிபுணர்கள் குழுவால் குறிப்பிட்ட விலைக்கு வாங்கப்படுகிறது. இதற்கான விலை விதைப்பு பருவத்திற்கு முன்பே அறிவிக்கப்படுகிறது. இது குறைந்தபட்ச ஆதரவு விலை எனப்படும்.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட உணவு தானியங்கள் ஏழ்மையான பிரிவினருக்கு சந்தை விலையை விட குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது. அவ்விலை வெளியீட்டு விலை எனப்படுகிறது.

VI. விரிவாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. பசுமைப் புரட்சி ஏன் தோன்றியது என்பதைப் பற்றி விவரி. **PTA**

- சுதந்திரத்திற்குப் பிறகு, இந்தியா ஒரு திட்டமிட்ட வளர்ச்சிக்கான மாதிரியை தேர்வு செய்தது. ஆரம்பத்தில் விவசாயத்தில் கவனம் செலுத்தியது.
- இந்தியாவில் ஏற்பட்ட தொடர்ச்சியான வறட்சி, உணவு தானியங்களின் இறக்குமதியைச் சார்ந்திருக்க தள்ளப்பட்டது. இருப்பினும், அப்பொழுது இருந்த அந்நிய செலாவணி இருப்பு, திறந்த சந்தை கொள்முதல் மற்றும் தானியங்களின் இறக்குமதிக்கு அனுமதிக்கவில்லை.
- பணக்கார நாடுகளிலிருந்து உணவு தானியங்களை சலுகை விலையில் கோரவேண்டியிருந்தது. 1960களின் முற்பகுதியில் அமெரிக்கா தனது பொது சட்டம் 480 (பி.எல் 480) திட்டத்தின் மூலம் இந்தியாவிற்கு உதவியது.
- ஒரு பெரிய மக்கள் தொகையைக் கொண்ட பசியுடன் வளர்ந்து வரும் ஒரு நாடு புரட்சிக்கான சாத்தியமான தேர்வாளராக கருதப்பட்டது. அமெரிக்க நிர்வாகம் ஃபோர்டு அறக்கட்டளை போன்ற மனிதநேய அமைப்புகள் உணவு உற்பத்தியை அதிகரிக்க கோதுமை மற்றும் அரிசியின் உயர்ரக விளைச்சல் வகைகளுக்கான திட்டத்தை வகுத்து அறிமுகப்படுத்தியது.
- இந்த திட்டம் நீர்ப்பாசனம் உறுதி செய்யப்பட்ட இடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. திட்டங்களின் முடிவுகள் உறுதி செய்யப்பட்டதால், அதிக எண்ணிக்கையிலான மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் இந்த திட்டம் நீட்டிக்கப்பட்டது.
- இவ்வாறு, பசுமைப்புரட்சி நாட்டில் தோன்றி உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழிவகுத்தது. உயர்ரக விதைகளான (HYV) அரிசி மற்றும் கோதுமை உணவுத் தானியங்கள் பயிரிடப்பட்ட பகுதியில் உற்பத்தியை அதிகரிக்க முடிந்தது. மேலும் முக்கிய தானிய பயிர்களின் விளைச்சலும் அதிகரித்தது.

2. குறைந்தபட்ச ஆதரவு விலையை விளக்குக. **PTA**

- குறைந்தபட்ச ஆதரவு விலை என்பது அந்த பயிரின் சாகுபடியில் பல்வேறு செலவுகளை கருத்தில் கொண்டு ஒரு குறிப்பிட்ட பயிருக்கு நிபுணர் குழுவால் ஒரு விலை நிர்ணயிக்கப்படுகிறது.
- குறைந்தபட்ச ஆதரவு விலை அறிவித்த பின்னர், இந்த பயிர்கள் பரவலாக வளர்க்கப்படும் இடங்களில் அரசு கொள்முதல் மையங்களைத் திறக்கும். எனினும் அந்த விவசாயிகள் தங்கள் பயிர், விளைபொருட்களுக்கு சிறந்த விலையைப் பெற்றால் திறந்த சந்தையில் விற்றுக் கொள்ளலாம்.

- மறுபுறம் திறந்தவெளி சந்தையில் விலை குறைந்தபட்ச ஆதரவு விலையைவிட குறைவாக இருந்தால், விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு விற்பதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட விலையை (MSP) பெறுவார்கள்.
- எனவே குறைந்தபட்ச ஆதரவு விலையை விவசாயிகள் செயல்படுத்துவதன் மூலம் பயிர்பருவத்தின் முடிவில் அவர்கள் பெறும் விலை குறித்து உறுதியாக உள்ளனர்.
- மேலும் அறுவடைக் காலங்களில் எந்தவொரு விலை வீழ்ச்சிக்கும் எதிராக விவசாயிகள் பாதுகாக்கப்படுகிறார்கள்.

3. **பொது விநியோக முறையை விவரிக்கவும்.**

பொது விநியோக முறை:

- உணவுத்தானிய உற்பத்தியின் அதிகரிப்பினால் அனைவருக்கும் உணவிற்கான அணுகலை அதிகரிக்க தேவையில்லை, வருமானத்தில் சமமற்ற வழங்கல் மற்றும் இந்திய பொருளாதாரத்தில் நீடிக்கும் வறுமையின் அளவைக் கருத்தில் கொண்டு, பொது வழங்கல் முறை மூலம் உணவுத்தானியங்களை மானிய விலையில் வழங்கச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. பொது வழங்கல் முறையின் தன்மை, நோக்கம் மற்றும் செயல்பாடு மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடக்கூடியது.

உலகளாவிய பொது வழங்கல் முறை:

- தமிழ்நாடு உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக் கொண்டது. இம்முறையின் கீழ் குடும்ப வழங்கல் கார்டு பெற்றிருப்பவர்கள் அனைவருக்கும் பொது வழங்கல் முறையின் மூலம் உணவுத் தானியங்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது.
- தமிழ்நாடு அரசு உலகளாவிய பொது வழங்கல் முறையின் மூலம் அனைத்து அட்டைதாரர்களுக்கும் இலவசமாக அரிசியை வழங்குகிறது.

இலக்கு பொது வழங்கல் முறை:

- இந்தியாவில் தமிழ்நாடு நீங்கலாக மற்ற மாநிலங்களில் "இலக்கு பொது வழங்கல் முறை" செயல்பாட்டில் இருந்தது.
- இலக்கு பொது வழங்கல் முறையில் பயனாளிகள் சில அளவுகோல்களின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு மட்டுமே உரிமைகள் வழங்கப்படுகின்றன. மீதமுள்ளவர்களுக்கு வழங்கப்படுவது இல்லை.

மானியம்:

- மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் பொது வழங்கல் மூலம் வழங்கப்படும் பொருட்களுக்கு மானியம் வழங்குகின்றன. மானியத்தின் நிலை மற்றும் அளவு மாநிலங்களுக்கிடையே வேறுபடுகிறது.

தேசிய உணவு பாதுகாப்புச்சட்டம்:

- தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் இந்திய நாடாளுமன்றத்தால் 2013இல் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் 50% நகர்புற குடும்பங்களையும் மற்றும் 75% கிராமப்புற குடும்பங்களையும் உள்ளடக்கியது ஆகும்.
- இந்தக் குடும்பங்கள் ஒரு குறிப்பிட்ட அளவுகோலின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு முன்னுரிமைக் குடும்பங்கள் என அழைக்கப்படுகின்றன. இந்த நாட்டின் முன்னுரிமை குடும்பங்களுக்கு தற்பொழுது பொது வழங்கல் முறை மூலம் வழங்கப்படும் உணவினைப் பெறும் உரிமை உண்டு.
- மத்திய அரசு அரிசியை கிலோவிற்கு ₹2 என்ற விகிதத்திலும், தினை கிலோவிற்கு ₹1 என்ற விகிதத்திலும் NFSA கீழ் வழங்குகிறது.

4. **வாங்கும் திறனைப் பாதிக்கும் காரணிகள் யாவை? அவற்றை விளக்குக.**

வாங்கும் திறனைப் பாதிக்கும் காரணிகள்:

- அதிக மக்கள் தொகை
- அத்தியாவசிய பொருட்களின் விலையை அதிகரித்தல்
- பொருட்களுக்கான தேவை
- பொருட்களின் விலை நாணய மதிப்பை பாதிக்கிறது
- பொருட்களின் உற்பத்தி மற்றும் அளிப்பு
- வறுமை மற்றும் சமத்துவமின்மை

அதிக மக்கள் தொகை:

- இந்தியாவில் அதிக மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் உள்ளது. அதிக மக்கள் தொகை அதிக தேவைக்கு வழிவகுக்கிறது. ஆனால் அளிப்பு தேவைக்கு சமமாக இல்லை.

➢ எனவே சாதாரண விலை நிலை, அதிகமாக இருக்கும். இது குறிப்பாக கிராமப்புற மக்களின் வாங்கும் சக்தியை பாதிக்கிறது.

அத்தியாவசிய பொருட்களின் விலையை அதிகரித்தல்:

➢ மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிலையான வளர்ச்சியும், இந்திய பொருளாதாரத்தில் வளர்ச்சி வாய்ப்புகளும் இருந்த போதிலும், அத்தியாவசிய பொருட்களின் விலையில் நிலையான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

➢ விலைகளின் தொடர்ச்சியான உயர்வு வாங்கும் சக்தியை சுரண்டி, ஏழை மக்களை மோசமாக பாதிக்கிறது.

பொருட்களுக்கான தேவை:

➢ பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும்போது, பொருட்களின் விலையும் அதிகரிக்கிறது. அதனால் வாங்கும் சக்தி பாதிக்கப்படுகிறது.

பொருட்களின் விலை நாணயமதிப்பை பாதிக்கிறது:

➢ விலை அதிகரிக்கும்போது, வாங்கும் திறன் குறைந்து இறுதியாக நாணயத்தின் மதிப்பு குறைகிறது. மாறாக இது நேர்மாறானது.

பொருட்களின் உற்பத்தி மற்றும் அளிப்பு:

➢ பொருட்களின் உற்பத்தி மற்றும் அளிப்பு குறையும் பொழுது, பொருட்களின் விலை அதிகரிக்கிறது. ஆகையால் வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

வறுமை மற்றும் சமத்துவமின்மை:

➢ இந்திய பொருளாதாரத்தில் மிகப்பெரிய ஏற்றத்தாழ்வு உள்ளது. 10% இந்தியர்களுக்குச் சொந்தமான வருமானம் மற்றும் சொத்துக்களின் விகிதம் அதிகரித்து வருகிறது. இது சமுதாயத்தின் வறுமை நிலையை அதிகரிக்க வழி வகுக்கிறது. பொதுவாக வறுமையாலும் மற்றும் செல்வத்தின் சமமற்ற வழங்குதலாலும் வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

5. **இந்தியாவின் வேளாண் கொள்கையின் சில முக்கிய நோக்கங்களை சுருக்கமாக எழுதுக.**

இந்தியாவின் வேளாண் கொள்கையின் நோக்கங்கள்:

➢ உள்ளீடுகளின் உற்பத்தித் திறனை உயர்த்துதல்
➢ ஒரு ஹெக்டேருக்கு மதிப்பு கூட்டப்பட்டவை
➢ ஏழை விவசாயிகளின் நலன்களைப் பாதுகாத்தல்
➢ விவசாயத்துறையை நவீனமயமாக்குதல்
➢ சுற்றுச் சூழல் சீரழிவு
➢ அதிகாரத்துவ தடைகளை நீக்குதல்

உள்ளீடுகளின் உற்பத்தித் திறனை உயர்த்துதல்:

➢ இந்தியாவின் விவசாயக் கொள்கையின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று வீரியவித்து விதைகள், உரங்கள், பூச்சி கொல்லிகள், நீர்ப்பாசன திட்டங்கள் போன்ற வாங்கிய உள்ளீடுகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதாகும்.

ஒரு ஹெக்டேருக்கு மதிப்பு கூட்டப்பட்டவை:

➢ வேளாண் கொள்கையானது பொதுவாக வேளாண்மையின் உற்பத்தித்திறனை உயர்த்துவதன் மூலமும், குறிப்பாக சிறிய மற்றும் ஓரளவு வைத்திருக்கும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலமும் உடல் உற்பத்தியை உயர்த்துவதை விட ஒரு ஹெக்டேருக்கு மதிப்பு கூட்டப்பட்டதை அதிகரிப்பதாகும்.

ஏழை விவசாயிகளின் நலன்களைப் பாதுகாத்தல்:

➢ ஏழை விவசாயிகளுக்கு நிறுவன கடன் ஆதரவை விரிவுபடுத்துதல், நில சீர்திருத்தங்கள் செய்தல், இடைத்தரகர்களை ஒழித்தல் போன்றவற்றின்மூலம் ஏழை மற்றும் குறு விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதே விவசாயக் கொள்கையாகும்.

விவசாயத்துறையை நவீனமயமாக்குதல்:

➢ விவசாயக் கொள்கை ஆதரவில் விவசாய நடவடிக்கைகளில் நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் HYV விதைகள், உரங்கள் போன்ற மேம்பட்ட விவசாய உள்ளீடுகளைப் பயன்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

சுற்றுச்சூழல் சீரழிவு:

- இந்திய விவசாயத்தின் இயற்கை அடித்தளத்தின் சுற்றுச்சூழல் சீரழிவை சரிபார்க்க இந்தியாவின் விவசாயக்கொள்கை மற்றொரு நோக்கத்தை அமைத்துள்ளது.

அதிகாரத்துவ தடைகளை நீக்குதல்:

- விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சுய உதவி நிறுவனங்கள் மீதான அதிகாரத்துவ தடைகளை நீக்குவதற்கு இந்த கொள்கை மற்றொரு குறிக்கோளை அமைத்துள்ளது. இதனால் அவர்கள் சுதந்திரமாகச் செயல்படமுடியும்.

6. பல பரிமாண வறுமைக் குறியீடு–இந்தியா மற்றும் தமிழ்நாடு பற்றி விவாதிக்கவும்.

இந்தியாவின் பல பரிமாண வறுமைக் குறியீடு:

- ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (UNDP) மற்றும் ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முனைவு (OPHI) ஆகியவற்றால் இந்தியாவின் பலபரிமாண வறுமைக் குறியீடு பற்றி 2018ஆம் ஆண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது.
- இந்தியா தனது வறுமை விகிதத்தை 10 ஆண்டுகளில் 55%திலிருந்து 28%ஆக வெகுவாக குறைத்துள்ளது. 2005–2006 மற்றும் 2015–2016ஆம் ஆண்டிற்கு இடையில் 271 மில்லியன் மக்களை வறுமையிலிருந்து வெளியேற்றினர்.
- 2005–2006ஆம் ஆண்டில் 635 மில்லியன் ஏழைமக்கள் இருந்தனர். இது 2015–2016ஆம் ஆண்டில் 364 மில்லியனாக குறைந்துள்ளது.
- 2005–2016ஆம் ஆண்டில் பல பரிமாண வறுமை குறியீடு ஏழைகளாக இருந்த 364 மில்லியன் மக்களில், 156 மில்லியன் குழந்தைகளாகும். இது 2005–2006ஆம் ஆண்டில் இருந்த 292 மில்லியனிலிருந்து 136 மில்லியன் குழந்தைகள் குறைந்திருப்பதை குறிக்கின்றது.
- 2015–2016 ஆம் ஆண்டில் வறுமையில் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட மிக ஏழ்மையான மாநிலமாக பீகார் இருந்தது.
- பீகார், ஜார்கண்ட், உத்திரப்பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய நான்கு ஏழ்மையான மாநிலங்கள் இன்னும் 196 மில்லியன் பல பரிமாண வறுமைக் குறியீடுள்ள ஏழைமக்களைக் கொண்டுள்ளது. இது இந்தியாவில் உள்ள அனைத்து பல பரிமாண வறுமைக் குறியீடுள்ள ஏழை மக்களில் பாதிக்கும் மேலானது ஆகும்.
- 2006 ஆம் ஆண்டில் கேரளா மிகக் குறைந்த ஏழ்மை வட்டாரங்களில் ஒன்றாக இருந்தது. அதன் பல பரிமாண வறுமைக் குறியீட்டை சுமார் 92% குறைத்துள்ளது.

தமிழ்நாட்டின் பல பரிமாண வறுமைக் குறியீடு:

- கடந்த பத்து ஆண்டுகளாக, வறுமைக் குறைப்பில் தமிழகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. தமிழ் நாட்டிலுள்ள மாவட்டங்கள் உயர் வறுமை மாவட்டங்கள், மிதமான வறுமை மாவட்டங்கள் மற்றும் குறைந்த அளவிலான வறுமை மாவட்டங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- 1994க்குப் பிறகு, தமிழ்நாட்டின் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வறுமை படிப்படியாக குறைந்துள்ளது, மற்றும் இந்தியாவில் அதன் மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது சிறிய ஏழ்மைப் பங்கினைக் கொண்டுள்ளது.
- 2005க்குப் பிறகு, இந்தியாவில் பல மாநிலங்களை விட வறுமை குறைப்பு தமிழ்நாட்டில் வேகமாக உள்ளது. 2014–2017 வரையிலான காலங்களில் வறுமை ஒழிப்பு திட்டங்களில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது.
- தற்போது, இந்திய அரசு வறுமையை ஒழிக்க பல கொள்கைகளையும், திட்டங்களையும் செயல்படுத்துகிறது. இவை தொடர்ந்து இருந்தால் வறுமையை முற்றிலுமாக ஒழிக்கலாம். எதிர்காலத்தில் தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாதிரி மாநிலமாக மாற வாய்ப்புள்ளது.

7. தமிழ்நாட்டின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை சுருக்கமாக விளக்குக.

- மனித ஆரோக்கியத்திலும், நல்வாழ்விலும் ஊட்டச்சத்து முக்கிய பங்குவகிக்கிறது. தேசிய அளவில் அதிக பொருளாதார வளர்ச்சி இருந்த போதிலும் மக்கள் தொகையின் ஊட்டச்சத்து அளவுகள் போன்ற மனித வளர்ச்சி குறிகாட்டிகளில் மேம்பாடுகள் ஏற்றுக் கொள்ள முடியாத அளவிற்கு மெதுவாகவே உள்ளன.
- ஏராளமான இந்தியக் குழந்தைகள் குன்றியிருக்கிறார்கள். கணிசமான எண்ணிக்கையிலான இந்தியக் குழந்தைகள் மற்றும் பெண்கள் எடை குறைவாகவும், இரத்த சோகை மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளாலும் பாதிக்கப்படுகின்றனர்.

- இந்த பிரச்சனைகளை நீக்குவதற்காக மத்திய மாநில அரசுகள் பல்வேறு சுகாதார மற்றும் ஊட்டச்சத்து திட்டங்களான ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள், மதிய உணவுத் திட்டம், இனப்பெருக்க மற்றும் குழந்தைகள் சுகாதார திட்டங்கள் மற்றும் தேசிய கிராமப்புற சுகாதாரப்பணி போன்ற திட்டங்களில் கணிசமான வளங்களைக் கொண்டுள்ளன.
- ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் இளம் பருவப் பெண்கள் ஆகியோரின் உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டுவருவதில் தமிழகம் ஒரு முன்னோடிப் பங்கைக் கொண்டுள்ளது.
- ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்திற்கான தமிழக அரசின் அடுத்தடுத்த பட்ஜெட் செலவினங்கள் நாட்டிலேயே மிக அதிகமாகும். ICDS திட்டம் மற்றும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம் ஆகியவற்றின் செயல்திறன் நாட்டின் மிகச்சிறந்த ஒன்றாக கருதப்படுகின்றன.
- ஒரு ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத மாநிலமாக மாற்றிட பலதுறைகள் வழிநடத்துகின்றன. "அனைத்து வகையான ஊட்டச்சத்து குறைபாட்டையும் சிறந்த செயல்திறன் கொண்ட நாடுகளின் நிலைக்கு குறைப்பது" என்பது தமிழக அரசின் குறிக்கோளாகும்.
- தமிழ் நாட்டில் 434 குழந்தைகள் மேம்பாட்டுத் தொகுதிகள், 54,439 குழந்தை மையங்கள் (அங்கன்வாடி மையங்கள்) மூலம் ICDS செயல்படுத்தப்படுகிறது.
- அணுகப்படாத பகுதிகளுக்கு நிலையான விரிவாக்கம், ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் பாதுகாப்பு, மேம்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் சேவைகளின் விரிவாக்கம் ஆகியவற்றுடன், ICDS இப்போது உலகின் மிகப் பெரிய திட்டங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. மேலும் குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கான ஒரு மாதிரியாகவும் விளங்குகிறது.
- சேவைகள் நோக்கம் கொண்ட பயனாளிகளை அடைவதை உறுதி செய்வதற்காக, இந்த திட்டம் உலகமயமாக்கப்பட்டு, சுகாதாரம், கல்வி, குடிநீர் போன்றவற்றைக் கையாளும் தொடர்புடைய துறைகளுடன் ஒன்றிணைக்கப்படுகிறது.
- புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம் குழந்தைகளிடையே ஊட்டச்சத்துகுறைபாட்டை எதிர்த்து போராடுவதற்கும், தொடக்கப்பள்ளி சேர்க்கையை அதிகரிப்பதற்கும், இடைநிற்றல் விகிதங்களைக் குறைப்பதற்கும் நாட்டின் மிகப்பெரிய மதிய உணவுத் திட்டமாகக் கருதப்படுகிறது.
- நாட்டின் பிற மாநிலங்கள் தமிழகத்தின் முன்னோடி முயற்சிகளின்படி மதிய உணவு திட்டங்களை வடிவமைத்துள்ளன.
- இந்த பிரச்சனைகளை நீக்குவதற்காக மத்திய மாநில அரசுகள் பல்வேறு சுகாதார மற்றும் ஊட்டச்சத்து திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகின்றன.

கூடுதல் வினா

8. உணவுப் பாதுகாப்பில் நுகர்வோர் கூட்டுறவின் பங்கினை விவரி.

- பொதுவான மக்களுக்கு பொறுப்பான விலையில் தரமான பொருட்களை வழங்குவதில் நுகர்வோர் கூட்டுறவு முக்கிய பங்கு வகிக்கிறது.
- இந்தியாவில் மூன்று அடுக்கு அமைப்புகளில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை முதன்மை நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள், மத்திய நுகர்வோர் கூட்டுறவு கடைகள் மற்றும் மாநில அளவிலான நுகர்வோர் கூட்டமைப்புகள் ஆகும்.
- கிராமப்புறங்களில் நுகர்வோர் பொருட்களை வழங்குவதில் 50,000க்கும் மேற்பட்ட கிராம அளவிலான சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. சுகாதாரம், காப்பீடு, வீட்டுவசதி போன்ற பல வகையான நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளன.
- இந்தியாவில் உணவு பாதுகாப்பில் இந்தத் திட்டம் முக்கியப் பங்கினை வகிக்கிறது. உதாரணமாக, தமிழ் நாட்டில் இயங்கும் அனைத்து நியாய விலைக் கடைகளில் சுமார் 94% கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன.
- பற்றாக்குறை பகுதிகளில் வழங்குவதற்காக தாங்கியிருப்பு செய்யப்படுகிறது. உணவு தானியங்கள் சமூகத்தின் ஏழ்மையான பிரிவினருக்கு சந்தை விலையைவிட குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது.
- அவ்விலை வெளியீட்டு விலை என்று அழைக்கப்படுகிறது. பாதகமான வானிலை அல்லது பேரழிவு காலங்களில் உணவுப் பற்றாக்குறை பிரச்சனையை தீர்க்க இது உதவுகிறது.

அரசாங்கமும் வரிகளும்

மனவரைபடம்

அரசாங்கமும் வரிகளும்

வளர்ச்சிக் கொள்கைகளில் அரசாங்கத்தின் பங்கு

1. பாதுகாப்பு (அ) ராணுவம்
2. அயல் நாட்டுக்கொள்கை
3. அவ்வப்போது தேர்தல்களை நடத்துதல்
4. சட்டம் மற்றும் ஒழுங்கு
5. பொது நிர்வாகம் மற்றும் பொதுப் பண்டங்களை வழங்குதல்
6. வருமான மறு பகிர்வு மற்றும் வறுமை ஒழிப்பு
7. பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துதல்

வரி

வரிகளின் வகைகள்

- **நேர்முக வரிகள்**
  - வருமான வரி
  - நிறுவன வரி
  - சொத்து வரி (அ) செல்வ வரி
- **மறைமுக வரிகள்**
  - முத்திரைத்தாள் வரி
  - பொழுதுபோக்கு வரி
  - சுங்கத்தீர்வை (அ) கலால் வரி
- **பண்டங்கள் மற்றும் பணிகள் வரி**
  - மாநில பண்டங்கள் மற்றும் பணிகள் வரி
  - மத்திய பண்டங்கள் மற்றும் பணிகள் வரி
  - ஒருங்கிணைந்த பண்டங்கள் மற்றும் பணிகள் வரி
- வளர் வீத வரி விதிப்பு முறை
- விகித வரி விதிப்பு முறை (அ) விகித சாரா வரி விதிப்பு முறை
- தேய்வு வீத வரி விதிப்பு முறை

கருப்பு பணம்

காரணங்கள்

1. பண்டங்கள் பற்றாக்குறை
2. உரிமம் பெறும் முறை
3. தொழில்துறையின் பங்கு
4. கடத்தல்
5. வரியின் அமைப்பு

வரி ஏய்ப்பு

வரி ஏய்ப்பு நடவடிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளவை

1. வருமானத்தை குறைத்து மதிப்பிடுதல்
2. விலக்குகள் (அ) செலவுகளை உயர்த்துதல்
3. மறைக்கப்பட்ட பணம்
4. கடல் கடந்த கணக்குகளில் விவரங்களை மறைத்தல்

வரிகளும் முன்னேற்றமும்

வரி விதிப்பின் பங்கு

1. வளங்களை திரட்டுதல்
2. வருமான ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்
3. சமூக நலன்
4. அந்நியச் செலாவணி
5. வட்டார முன்னேற்றம்
6. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல்

நினைவில் கொள்க

- ஒரு நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு அரசாங்கத்தால் விதிக்கப்படுவது வரி எனப்படும்.
- ஒரு அரசின் வருமானம் நேர்முக மற்றும் மறைமுக வரிகளை சார்ந்து உள்ளது. நேர்முக வரி தனிநபரின் வருமானத்திலும், மறைமுக வரி பண்டங்கள் மற்றும் பணிகள் மீதும் விதிக்கப்படுகின்றன.
- இந்தியாவில் வரி விதிப்பின் வேர்கள் மனுஸ்மிருதி மற்றும் அர்த்தசாஸ்திர காலத்திலிருந்து பின்பற்றப்பட்டது.
- வருமானவரி இந்தியாவில் விதிக்கப்படுகின்ற நேர்முக வரிமுறையில் மிக முக்கியமானது ஆகும்.
- இந்தியாவில் முதன் முதலாக வருமானவரி **1860** ஆம் ஆண்டு சர் ஜேம்ஸ் வில்சன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஒருவர் மீது விதிக்கப்பட்ட வரிச்சுமையை மற்றொருவருக்கு மாற்றப்பட்டால் அது மறைமுக வரி எனப்படும்.
- பண்டங்கள் மற்றும் பணிகள் வரியின் (**GST**) குறிக்கோள் (ஒரு நாடு – ஒரு அங்காடி – ஒரு வரி) என்பதாகும்.
- கருப்புப் பணம் என்பது கருப்பு சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் செலுத்தப்படாத வரிப்பணம் ஆகும்.
- தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகள் ஆகியவை சட்ட விரோதமாக வரி செலுத்தாமல் இருப்பது வரி ஏய்ப்பு எனப்படும்.
- கட்டணம் என்பது பணிகளை பயன்படுத்துவதற்காகச் செலுத்துவதாகும்.
- உள்ளூர் வரி என்பது உள்ளாட்சி அமைப்புகளால் அதன் எல்லைக்குள் விதிக்கப்படுகின்ற வரியாகும்.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. இந்தியாவிலுள்ள மூன்று நிலைகளான அரசுகள்
   அ) மைய, மாநில மற்றும் உள்ளாட்சி　　ஆ) மைய, மாநில மற்றும் கிராம
   இ) மைய, நகராட்சி மற்றும் பஞ்சாயத்து　　ஈ) ஏதுமில்லை
2. இந்தியாவில் உள்ள வரிகள்
   அ) நேர்முகவரிகள்　　ஆ) மறைமுகவரிகள்
   இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ)　　ஈ) ஏதுமில்லை
3. வளர்ச்சிக் கொள்கையில் அரசாங்கத்தின் பங்கு எது?
   அ) பாதுகாப்பு　　ஆ) வெளிநாட்டுக் கொள்கை
   இ) பொருளாதாரத்தை கட்டுப்படுத்தல்　　ஈ) மேற்கூறிய அனைத்தும்
4. இந்தியாவில் தனி நபர்களின் மேல் விதிக்கப்படுகின்ற பொதுவான மற்றும் மிக முக்கியமான வரி
   அ) சேவை வரி　　ஆ) கலால் வரி
   இ) விற்பனை வரி　　ஈ) மத்திய விற்பனை வரி
5. ஒரு நாடு, ஒரே மாதிரியான வரி என்பதை எந்த வரி உறுதிபடுத்துகிறது?
   அ) மதிப்புக் கூட்டு வரி (VAT)　　ஆ) வருமான வரி
   இ) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி　　ஈ) விற்பனை வரி
6. இந்தியாவில் வருமான வரிச்சட்டம் முதன் முதலில் ____________ ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
   அ) 1860　　ஆ) 1870　　இ) 1880　　ஈ) 1850

7. சொத்து உரிமையிலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்கு ____________ வரி விதிக்கப்படுகிறது.
அ) வருமான வரி ஆ) சொத்து வரி இ) நிறுவன வரி ஈ) கலால் வரி

8. கருப்பு பணத்திற்கான காரணங்கள் என கண்டறியப்பட்ட அடையாளம் எவை?
அ) பண்டங்களின் பற்றாக்குறை ஆ) அதிக வரி விகிதம்
இ) கடத்தல் ஈ) மேற்கூறிய அனைத்தும்

9. வரி ஏய்ப்பு என்பது சட்டவிரோதமானது, ____________ மூலம் வரி ஏய்ப்பு மேற்கொள்ளப்படுகிறது.
அ) தனி நபர்கள் ஆ) பெரு நிறுவனங்கள்
இ) அறக்கட்டளைகள் ஈ) மேற்கூறிய அனைத்தும்

10. கட்டணங்கள் என்பது
அ) கட்டணங்கள் (Fees) மற்றும் அபராதங்கள் ஆ) அபராதங்கள் மற்றும் பறிமுதல்கள்
இ) எதுவுமில்லை ஈ) (அ) மற்றும் (ஆ)

கூடுதல் வினாக்கள்

11. எதிரிகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பது
அ) இராணுவம் ஆ) அயல்நாட்டுக் கொள்கை
இ) காவல்துறை ஈ) சட்டம்

12. உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தலை நடத்துவது
அ) மத்திய அரசு ஆ) நாடாளுமன்றம் இ) உச்சநீதிமன்றம் ஈ) மாநில அரசு

13. பணவீக்கம், அந்நியச் செலாவணி மற்றும் வட்டிவீதம் ஆகியவற்றை கட்டுப்படுத்துவது.
அ) இந்தியன் வங்கி ஆ) இந்திய மைய வங்கி
இ) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஈ) பாரத ஸ்டேட் வங்கி

14. ஒரு நபருக்கு வரி செலுத்த போதுமான பணம் கிடைக்கும் நேரத்தில் வரி வசூலிக்கப்பட வேண்டும் என்பது
அ) நெகிழ்ச்சி வரி ஆ) சமத்துவ வரி இ) வசதிக்கான வரி ஈ) உறுதி வரி

15. இந்தியாவில் விதிக்கப்படும் நேர்முக வரிமுறையில் மிக முக்கியமான வரி
அ) வருமான வரி ஆ) நிறுவன வரி இ) சொத்து வரி ஈ) குடிதண்ணீர் வரி

16. இந்தியாவில் முதன் முதலாக வருமான வரியை அறிமுகப்படுத்தியவர்
அ) சர் ஜேம்ஸ் வில்சன் ஆ) ஆடம்ஸ்மித் இ) ஜே. எஸ். மில் ஈ) அமொர்தியா சென்

17. சொத்துக்களுக்கான வரியை வசூலிப்பது
அ) மத்திய அரசு ஆ) மாநில அரசு இ) மாவட்ட ஆட்சியர் ஈ) உள்ளூர் அரசாங்கம்

18. பொழுதுபோக்கு வரிக்குள் அடங்காதது
அ) திரைஅரங்கு ஆ) விளையாட்டு அரங்கம்
இ) திருமணப் பதிவு ஈ) கண்காட்சி

19. முதன் முதலில் பண்டங்கள் மற்றும் பணிகள் வரியை அமல்படுத்திய நாடு
அ) பிரிட்டன் ஆ) ஜெர்மனி இ) ஜப்பான் ஈ) பிரான்ஸ்

20. கருப்புப்பணம் தோன்றுவதற்கு மிக முக்கியமான பங்கு வகிப்பது
அ) காவல்துறை ஆ) தொழில்துறை இ) வேளாண்துறை ஈ) சுரங்கத்துறை

விடைகள்

1. அ) மைய, மாநில மற்றும் உள்ளாட்சி
2. இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ)
3. ஈ) மேற்கூறிய அனைத்தும்
4. இ) விற்பனை வரி
5. இ) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி
6. அ) 1860
7. ஆ) சொத்து வரி
8. ஈ) மேற்கூறிய அனைத்தும்
9. ஈ) மேற்கூறிய அனைத்தும்
10. ஈ) (அ) மற்றும் (ஆ)
11. அ) இராணுவம்
12. ஈ) மாநில அரசு
13. ஆ) இந்திய மைய வங்கி
14. இ) வசதிக்கான வரி
15. அ) வருமான வரி
16. அ) சர் ஜேம்ஸ் வில்சன்
17. ஈ) உள்ளூர் அரசாங்கம்
18. இ) திருமணப் பதிவு
19. ஈ) பிரான்ஸ்
20. ஆ) தொழில்துறை

II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. ___________ மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சிக்காக அரசாங்கத்தால் விதிக்கப்படுகிறது.
2. "வரி" என்ற வார்த்தை ___________ சொல்லிலிருந்து பெறப்பட்டது.
3. ___________ வரியில் வரியின் சுமையை மற்றவர்களுக்கு மாற்ற முடியாது.
4. ___________ பங்குதாரர்களிடமிருந்து தனி நிறுவனங்களாக இருக்கும் நிறுவனங்களுக்கு வரி விதிக்கப்படுகிறது.
5. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி ___________ ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.
6. வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட, கணக்கிடப்படாத பணம் ___________ என்று அழைக்கப்படுகிறது.

கூடுதல் வினாக்கள்

7. பாதுகாப்பு படைகளை உருவாக்குவதற்கும், பராமரிப்பதற்கும் பொறுப்பான அரசாங்கம் __________.
8. உலக அமைதிக்காக உறுதி ஏற்றுள்ள நாடு __________.
9. 'வரி' என்ற சொல் 'வரிவிதிப்பு' என்பதிலிருந்து வந்தது. இதன் பொருள் __________.
10. வரி விதிப்பு முறை __________ என்ற கருத்தை மையமாகக் கொண்டு செயல்படுகிறது.
11. "வரி என்பது ஒரு குடிமகன் அரசுக்கு கட்டாயமாக செலுத்தும் செலுத்துகையாகும்" என்று கூறியவர் ________.
12. இந்தியாவின் வரிவிதிப்பின் வேர்கள் __________ மற்றும் __________ காலத்திலிருந்து பின்பற்றப்பட்டது.
13. வரிகளை உயர்த்துவதற்கான அரசாங்கத்தின் திறனை __________ என்று கூறுவர்.
14. செலவு, வரி வருவாயை விட அதிகமாக இருக்கும்போது ஒரு அரசாங்கம் திரட்டுவது __________.
15. __________ வரி என்பது ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்தின் மீது நேரடியாக விதிக்கப்படுவதாகும்.
16. இந்தியாவில் கிட்டத்தட்ட அனைத்து நேரடி வரிகளும் __________ அரசாங்கத்தால் சேகரிக்கப்படுகின்றன.
17. இந்தியாவின் முக்கிய மறைமுக வரிகள் __________ மற்றும் __________ ஆகும்.
18. ஒருவர் மீது விதிக்கப்பட்ட வரிச்சுமையை மற்றொருவருக்கு மாற்றப்பட்டால் அது __________ எனப்படும்.
19. திருமணப்பதிவு அல்லது சொத்து தொடர்பான ஆவணப் பதிவுகள் __________ வரியில் அடங்கும்.
20. __________ என்பது விற்பனையை விட, உற்பத்தி இயக்கத்தில் உள்ள எந்தவொரு உற்பத்திப் பொருட்களின் மீதும் விதிக்கப்படும் வரியாகும்.
21. GST (பண்டங்கள் மற்றும் பணிகள் வரி) யின் குறிக்கோள் __________ என்பதாகும்.
22. பிரான்ஸ் நாடு முதன் முதலில் GST ஐ அமல்படுத்திய ஆண்டு __________.
23. ஒரு நிலையான அளவில் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு விதிக்கப்படும் வரி _________ முறை எனப்படுகிறது.
24. __________ க்கு கடத்தல் ஒரு முக்கிய ஆதாரமாகும்.
25. வரி ஏய்ப்பு என்பது பொதுவாக __________ பொருளாதாரத்துடன் தொடர்புடைய ஒரு செயலாகும்.

விடைகள்

1. வரி	2. வரிவிதிப்பு	3. நேர்முக
4. நிறுவன வரி	5. ஜூலை 1, 2017	6. கருப்புப்பணம்
7. மத்திய அரசு	8. இந்தியா	9. மதிப்பீடு
10. நல அரசு	11. பேராசிரியர் செலிக்மேன்	12. மனுஸ்மிருதி, அர்த்தசாஸ்திரம்
13. நிதித்திறன்	14. கடன்	15. நேர்முக
16. யூனியன்	17. சுங்கவரி, ஜி. எஸ். டி	18. மறைமுக வரி
19. முத்திரைத்தாள்	20. சுங்கத்தீர்வை / கலால் வரி	
21. ஒருநாடு – ஒரு அங்காடி – ஒரு வரி		22. 1954
23. விகித வரிவிதிப்பு	24. கருப்புப்பணம்	25. முறைசாரா

III. சரியான கூற்றினை தேர்வு செய்யவும்:

பாடநூல் வினாக்கள்

1. GST பற்றி கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரியானது?
   i) GST 'ஒரு முனைவரி'
   ii) இது மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களால் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு விதிக்கப்படும் அனைத்து நேரடி வரிகளையும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
   iii) இது ஜூலை 1, 2017 முதல் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டது.
   iv) இது இந்தியாவில் வரி கட்டமைப்பை ஒன்றிணைக்கும்.
   அ) i மற்றும் ii சரியானவை
   ஆ) ii, iii மற்றும் iv சரியானவை
   இ) i, iii மற்றும் iv சரியானவை
   ஈ) மேற்கூறிய அனைத்தும் சரியானவை

2. சரியில்லா கூற்றை தேர்ந்தெடுக்கவும். **PTA**
   i) இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ பண்டங்களின் பற்றாகுறை கருப்பு பணத்திற்கு மூலக் காரணமாகும்.
   ii) கருப்புப் பணம் தோன்றுவதற்கு மிக முக்கிய பங்கு வகிப்பது தொழிற் துறையாகும்.
   iii) கருப்புப் பணம் உருவாவதற்கு கடத்தல் ஒரு முக்கிய மூலமாகும்.
   iv) வரி விகிதம் குறைவாக இருக்கும்போது, அதிக கருப்புப் பணம் தோன்றுகிறது.
   அ) i மற்றும் ii சரியானவை
   ஆ) iv சரி
   இ) i சரி
   ஈ) ii மற்றும் iii சரியானவை

கூடுதல் வினாக்கள்

3. கூற்று (A) : எதிரிகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பது இராணுவத்தின் அத்தியாவசியப் பணியாகக் கருதப்படுகிறது.
   காரணம் (R): பாதுகாப்பு முறையில், தரைப்படை, கப்பல் படை மற்றும் விமானப்படை ஆகிய மூன்று சேவைகள் உள்ளன.
   i) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.
   ii) கூற்று மற்றும் காரணம் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.
   iii) கூற்று சரி, காரணம் தவறு.
   iv) கூற்று தவறு, காரணம் சரி.

4. கூற்று (A) : வருமான வரி இந்தியாவில் விதிக்கப்படுகின்ற நேர்முக வரிகளில் மிக முக்கியமான வரியாகும்.
   காரணம் (R): இவ்வரி தனிநபர் பெறுகின்ற வருமானத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்றது.
   i) கூற்று சரி, காரணம் தவறு.
   ii) கூற்று தவறு. காரணம் சரி.
   iii) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்.
   iv) காரணம் கூற்றினை சரியாக விளக்கவில்லை

விடைகள்

1. இ) i, iii மற்றும் iv சரியானவை
2. ஆ) iv சரி
3. ii) கூற்று மற்றும் காரணம் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.
4. iii) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்.

IV. பொருத்துக:

பாடநூல் வினா

		விடை
அ) 1. வருமான வரி	அ) மதிப்புக் கூட்டு வரி	1) ஈ
2. ஆயத்தீர்வை	ஆ) ஜூலை 1, 2017	2) உ
3. VAT	இ) கடத்துதல்	3) அ
4. GST	ஈ) நேர்முகவரி	4) ஆ
5. கருப்புப் பணம்	உ) மறைமுகவரி	5) இ

கூடுதல் வினா

		விடை
ஆ) 1. 2002	அ) கருப்பு பணச் சட்டம்	1) உ
2. 2015	ஆ) சுத்தமான பணம் செயல்பாடு	2) அ
3. 2016	இ) வருமான வரி	3) ஈ
4. 2017	ஈ) ரியல் எஸ்டேட் சட்டம்	4) ஆ
5. 1860	உ) பணமோசடி சட்டம்	5) இ

V. சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **வரி வரையறுக்க.**
   - "வரி" என்ற சொல் "வரிவிதிப்பு" என்பதிலிருந்து உருவானது. இதன் பொருள் மதிப்பீடு என்பதாகும்.
   - வரி விதிப்பு என்பது அரசாங்கம் தனது செலவினங்களுக்காக பொதுமக்களிடமும், பெரு நிறுவனங்களிடமும் வரிகளை விதித்து வருவாயினை உருவாக்கும் ஒரு வழிமுறையாகும்.
   - வரி என்பது எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி நேரடியாக அரசாங்கத்திற்கு செலுத்துகின்ற கட்டாய கட்டணம் ஆகும்.

2. **அரசுக்கு ஏன் வரி செலுத்த வேண்டும்?**
   - நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றம் அடையச் செயல்வதற்காக நாம் வரி செலுத்த வேண்டும்.
   - சில அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, தங்குமிடம், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் மாத வருமானம் போன்றவற்றினை ஏழைகளுக்கு வழங்குவதற்காகவும், நாட்டின் வறுமையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அரசிற்கு நிதி அவசியப்படுகிறது.
   - மேலும் சமூக நலனுக்காக சாலைகள், குடிநீர், வடிகால், கழிவு சேகரிப்பு மற்றும் அகற்றல் போன்றவற்றிற்காக அரசாங்கம் பல்வேறு துறைகள் மூலம் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளுக்காக நிதியளிக்க பல்வேறு வரிகளின் மூலம் நிதி ஆதாரங்களைத் திரட்டுகிறது.

3. **வரி முறையின் வரிக் கொள்கைகளை எழுதுக.**
   - ஒவ்வொரு வகையான வரியும் சில நன்மைகள் மற்றும் தீமைகளைப் பெற்றுள்ளன. எனவே நாம் கொண்டுள்ள வரி அமைப்பு, பல்வேறு வகையான வரிகளின் தொகுப்பாகும்.
   - வரிமுறையை வடிவமைக்கும் போது எவ்வாறு பின்பற்றப்பட வேண்டும் என்று பொருளாதார வல்லுநர்கள் கருதும் வரி முறைகளில் சில பண்புகள் உள்ளன. இந்த பண்புகள் வரிவிதிப்பு கொள்கைகள் என அழைக்கப்படுகின்றன. ஆடம்ஸ்மித் முதல் பல பொருளாதார வல்லுநர்கள் வரிவிதிப்பு கொள்கைகளை கொடுத்துள்ளனர்.

   அவை ;
   - சமத்துவ விதி
   - சிக்கன மற்றும் வசதி விதி
   - உறுதி விதி
   - உற்பத்தி மற்றும் நெகிழ்ச்சி வரி

PTA

4. வரிகளின் வகைகள் யாவை? எடுத்துக்காட்டு தருக.

➢ நேர்முக வரி மற்றும் மறைமுக வரி என்பது வரிகளின் வகைகளாகும்.

நேர்முக வரி :

➢ நேர்முக வரி என்பது ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்தின் மீது நேரடியாக விதிக்கப்படும் வரியாகும். இவ்வரியை மற்றவர் மீது புரட்டிவிட முடியாது. நேர்முக வரி என்பது "யார் மீது வரி விதிக்கப்பட்டதோ அவரே அவ்வரியை செலுத்துவதாகும்."

➢ எடுத்துக்காட்டு : வருமான வரி, சொத்துவரி மற்றும் நிறுவன வரி ஆகியனவாகும்.

மறைமுக வரி :

➢ ஒருவர் மீது விதிக்கப்பட்ட வரிச்சுமையை மற்றொருவருக்கு மாற்றப்பட்டால் அது "மறைமுக வரி" எனப்படும். வரி விதிக்கப்பட்டவர் வேறு ஒருவர், ஆனால் வரிச்சுமையை சுமப்பவர் வேறு ஒருவராவார்.

➢ எடுத்துக்காட்டு : முத்திரைத்தாள் வரி, பொழுதுபோக்கு வரி, சுங்கத்தீர்வை மற்றும் பண்டங்கள் மற்றும் பணிகள் (GST) மீதான வரிகளாகும்.

5. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி – சிறு குறிப்பு வரைக.

➢ பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (GST) என்பது மறைமுக வரிகளில் ஒன்றாகும். இவ்வரி இந்தியப் பாராளுமன்றத்தில் மார்ச் மாதம் 29 ஆம் தேதி 2017 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.

➢ மேலும் ஜூலை 1, 2017 முதல் GST அமுல்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் குறிக்கோள் "ஒரு நாடு – ஒரு அங்காடி – ஒரு வரி" என்பதாகும்.

➢ பண்டங்கள் மற்றும் பணிகள் வரி, நுகர்வோர், பண்டங்கள் மற்றும் பணிகளை வாங்கும்பொழுது விதிக்கப்படுகின்ற வரியாகும்.

➢ இது மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களால் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு விதிக்கப்படும் அனைத்து மறைமுக வரிகளையும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

➢ பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி மற்றும் விநியோகம் மீதான வரிகளின் அடுக்கு விளைவினை இவ்வரி அகற்றுகிறது. இது "ஒருமுனை வரி" ஆகும்.

6. வளர்வீத வரி என்றால் என்ன?

➢ வளர்வீத வரி விதிப்பு முறையில் வரியின் அடிப்படைத்தளம் அதிகரிக்கும்போது (பெருக்கப்படும்) வரிவிகிதமும் (பெருக்கி) அதிகரிக்கிறது. வரி விகிதத்தை வரி அளவுடன் பெருக்குவதன் மூலம் செலுத்த வேண்டிய வரியின் அளவு கணக்கிடப்படுகிறது.

➢ ஒரு வளர்வீத வரியைப் பொறுத்தவரையில் பெருக்கல் (வருமானம்) அதிகரிக்கிறது. வருமானம் அதிகரிக்கும்போது, வரி விகிதமும் அதிகரிக்கிறது. இது வளர்வீத வரி விதிப்பு முறை என்று அழைக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டு :

வரி அடிப்படை	வரி விகிதம்	வரி அளவு
10,000	10 %	1,000
20,000	15 %	3,000
30,000	25 %	7,500
40,000	40 %	16,000

7. கருப்பு பணம் என்பதன் பொருள் என்ன?

➢ "கருப்பு பணம்" என்பது, கருப்பு சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் செலுத்தப்படாத வரிப்பணமாகும். வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட, கணக்கிடப்படாத பணம் ஆகும். இது சட்டத்திற்குப் புறம்பாக சம்பாதிக்கும் பணம் ஆகும்.

8. **வரி ஏய்ப்பு என்றால் என்ன?**

- வரி ஏய்ப்பு என்பது பொதுவாக முறைசாரா பொருளாதாரத்துடன் தொடர்புடைய ஒரு செயலாகும். வரி ஏய்ப்பு அளவின் ஒரு நடவடிக்கை, பதிவு செய்யப்படாத வருமானத்தின் அளவு, வரி அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட வேண்டிய வருமான அளவிற்கும் உண்மையான அறிக்கையிடப்பட்ட தொகைக்கும் உள்ள வித்தியாசம் ஆகும்.
- வருமானத்தை குறைத்து மதிப்பிடுதல், விலக்குகள் அல்லது செலவுகளை உயர்த்துவது, மறைக்கப்பட்ட பணம், கடல் கடந்த கணக்குகளில் விவரங்களை மறைத்தல் ஆகியன வரி ஏய்ப்பு நடவடிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளவைகளாகும்.

9. **வரி ஏய்ப்பிற்க்கான சில காரணங்களைக் கூறுக.**

- கருப்பு பணத்தின் விளைவாக வரி ஏய்ப்பு மத்திய அரசின் வரி திரட்டல் முயற்சிகளை தடுக்கிறது. நிதிப்பற்றாகுறை, வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுவதை சிதைக்கிறது மற்றும் பொதுச் செலவுகள் தவிர்க்க முடியாததாக இருப்பதால், பற்றாக்குறை நிதியுதவியை நாடும்படி அரசாங்கத்தை கட்டாயப்படுத்துகிறது.
- இது சேமிப்பு மற்றும் முதலீட்டு முறைகளை சிதைப்பதன் மூலமும், பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கான வளங்களின் கிடைக்கும் தன்மையினாலும் அரசாங்கத்தின் அறிவிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையில் தலையிடுகிறது.
- வரி ஏய்ப்பு, வரி அமைப்பின் சமத்துவ பண்புகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. நேர்மையான வரி செலுத்துவோர் மனச்சோர்வு அடைந்து வரி ஏய்ப்பு செய்பவர்களின் முகாமில் சேர ஈர்க்கப்படுகிறார்கள்.
- வரி ஏய்ப்பு மற்றும் கருப்பு பணம் ஆகியவை நாட்டில் தகுதியற்ற குழுக்களின் கைகளில் பொருளாதார சக்தியைக் குவிப்பதை ஊக்குவிக்கின்றன. இது பொருளாதாரத்தை அதன் வழியில் அச்சுறுத்துதலாகும்.
- வரி ஏய்ப்பு, வரி நிர்வாகத்தின் நேரத்தினையும், சக்தியினையும் பயன்படுத்தி வரி ஏமாற்றுக்காரர்களின் சிக்கலான கையாளுதல்களைத் தடுக்கிறது.

10. **வரிக்கும், கட்டணத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?**

வரி (Tax)	கட்டணம் (Payments)
1. வரி என்பது எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் அரசாங்கத்திற்கு கட்டாயமாகச் செலுத்துகின்ற செலுத்துகையாகும்.	1. கட்டணம் என்பது பணிகளைப் பயன்படுத்துவதற்காக செலுத்துவது ஆகும்.
2. பொதுவாக அரசாங்கத்தின் வருமான இனங்களில் ஒன்றாகி வரி மேலோங்கி உள்ளது.	2. கட்டணம் என்பது ஒரு குறிப்பிட்ட நன்மைகளுக்கான தனிச்சலுகைகளைப் பெற்றிருந்தாலும், பொது நல ஒழுங்கு முறையின் சிறப்பான முதன்மை நோக்கமாகும்.
3. வரி என்பது கட்டாய செலுத்துகை ஆகும்.	3. கட்டணம் என்பது தன்னார்வக் கட்டணமாகும்.
4. தனிப்பட்ட நபரின் மீது வரி விதிக்கப்பட்டால், அதனை அவர் செலுத்த வேண்டும். இல்லையெனில் அவர் தண்டிக்கப்படுவார்.	4. பணிகளைப் பெற விருப்பமில்லை எனில் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.
5. வரி செலுத்துபவர்கள் நேரடியாக எவ்வித சலுகைகளையும் எதிர்பார்க்க முடியாது.	5. கட்டணம் செலுத்துவதன் மூலம் நுகர்வோர், நேரடியாக சலுகைகளைப் பெறுகின்றனர்.
உதாரணம் : வருமான வரி, அன்பளிப்பு வரி, சொத்து வரி மற்றும் மதிப்புக் கூட்டு வரி.	**உதாரணம்** : முத்திரை வரி, ஓட்டுநர் உரிமை கட்டணம், அரசாங்க பதிவுக் கட்டணம்.

கூடுதல் வினாக்கள்

11. **முத்திரைத்தாள் வரி என்றால் என்ன?**

- முத்திரைத்தாள் வரி என்பது அரசாங்க ஆவணங்கள் மீது விதிக்கப்படுகின்ற வரிகளான திருமணப் பதிவு, சொத்து தொடர்பான ஆவணங்கள் மற்றும் சில ஒப்பந்தப் பத்திரங்கள் பதிவிற்காக விதிக்கப்படும் வரி ஆகும்.

12. **கலால் வரி (சுங்கத் தீர்வை) என்றால் என்ன?**

➢ கலால் வரி அல்லது சுங்கத் தீர்வை என்பது விற்பனையை விட, உற்பத்தியின் இயக்கத்தில் உள்ள எந்தவொரு உற்பத்திப் பொருள்களின் மீதும் விதிக்கப்படும் வரியாகும். இவ்வரி பொதுவாக விற்பனை வரி போன்ற மறைமுக வரிகளுக்குக் கூடுதலாக விதிக்கப்படுகிறது.

13. **"கடத்தல்" குறிப்பு வரைக.**

➢ கருப்பு பணத்திற்கு கடத்தல் ஒரு முக்கிய ஆதாரமாகும். இந்தியா கடுமையான பரிமாற்ற முறைகளை கொண்டிருந்த போது விலை உயர்ந்த பொருட்களான தங்கம், வெள்ளி, ஜவுளிகள், மின்னணுப் பொருட்கள் ஆகியவற்றுக்கு சுங்கத் தீர்வை அதிகமாக விதிக்கப்பட்டது. அதிகாரிகளை மீறி இந்த பொருட்களை கொண்டு வருவது கடத்தலாகும்.

VI. விரிவாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. **பொருளாதார முன்னேற்ற கொள்கைகளில் அரசின் பங்கினை விவரி.**

➢ இந்தியாவில் மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி ஆகிய மூன்று நிலையிலான அரசாங்கங்கள் மக்கள் மற்றும் சமூகத்தின் நலனுக்காக பல்வேறு செயல்பாடுகளைச் செய்து வருகின்றன.

பாதுகாப்பு (அ) இராணுவம் :

➢ எதிரிகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பது இராணுவத்தின் அத்தியாவசியப் பணியாகக் கருதப்படுகிறது. பாதுகாப்பு படைகளை உருவாக்குவதற்கும், பராமரிப்பதற்கும் மத்திய அரசாங்கமே பொறுப்பானதாகும்.

அயல்நாட்டுக் கொள்கை :

➢ இன்றைய உலகில், நாம் அனைத்து உலக நாடுகளுடனும் நட்பான உறவைப் பராமரித்தல் அவசியமானதாகும். உலக அமைதிக்காக இந்தியா உறுதி ஏற்றுள்ளது.

➢ ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதன் மூலமும், மூலதனம் மற்றும் உழைப்பை பரிமாற்றம் செய்வதன் மூலமும் நாம் நல்ல பொருளாதார உறவினை பராமரிக்க முடியும். இந்த சேவையை மத்திய அரசாங்கம் வழங்குகிறது.

அவ்வப்போது தேர்தல்களை நடத்துதல் :

➢ இந்தியா ஒரு ஜனநாயக நாடு. நாம் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத்திற்குப் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றோம். மத்திய அரசு சட்டங்களையும், நிர்வாக அமைப்புகளையும் உருவாக்கி இந்த இரண்டு சட்ட அமைப்புகளுக்கும் தேர்தல்களை நடத்துகிறது. இதேபோல், மாநில அரசுகள் உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தலை மாநிலத்திற்குள் நடத்துகின்றன.

சட்டம் மற்றும் ஒழுங்கு :

➢ மத்திய மற்றும் மாநில அரசுகள் நமது உரிமைகள், சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும், நமது பொருளாதாரம் மற்றும் சமூகத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் ஏராளமான சட்டங்களை இயற்றுகின்றன.

➢ மத்திய அரசு தேசிய, மாநில மற்றும் கீழ்நிலைகளில் உள்ள நீதிமன்றங்களை உள்ளடக்கிய ஒரு துடிப்பான நீதி அமைப்பின் மூலம் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக அமைத்துள்ளது.

➢ மேலும் அந்தந்த மாநிலங்களில் காவல்துறையை நிர்வகிக்கும் பொறுப்பை மாநில அரசுகள் ஏற்றுக்கொள்கின்றன.

பொது நிர்வாகம் மற்றும் பொதுப்பண்டங்களை வழங்குதல் :

➢ அரசாங்கம் பொதுவாக பல்வேறு துறைகள் மூலம் பொருளாதாரத்தையும் சமூகத்தையும் நிர்வகிக்கிறது. வருவாய் துறை, பள்ளிகள், மருத்துவமனைகள் கிராம வளர்ச்சி போன்றவைகள் எடுத்துக்காட்டுகளாகும்.

➢ உள்ளூர் அரசாங்கங்கள், உள்ளூர் சாலைகள், வடிகால், குடிநீர், கழிவு சேகரிப்பு மற்றும் அகற்றல் போன்ற பொது பணிகளை வழங்குகின்றன.

வருமான மறுபகிர்வு மற்றும் வறுமை ஒழிப்பு :

- பல்வேறு நடவடிக்கைகளுக்கு நிதியளிக்க அரசு பல்வேறு வரிகளை வசூலிக்கின்றது. அதிக வருமானம் உடையவர்கள் ஏழைகளைவிட அரசாங்கத்திற்கு அதிக வரி செலுத்தக்கூடிய வகையில் வரி வசூலிக்கப்படுகிறது.
- சில அடிப்படைத் தேவைகளான உணவு, தங்குமிடம், உடை, கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் மாத வருமானம் போன்றவற்றினை ஏழைகளுக்கு வழங்குவதற்காக அரசாங்கம் பணத்தைச் செலவிடுகிறது.
- மேலும், அரசு வரிகளைச் சேகரிப்பது, ஏழைகளுக்கான செலவினைச் செய்வது மற்றும் வறுமையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் போன்றவற்றினை செயல்படுத்துகிறது.

பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துதல் :

- மத்திய அரசு, பணத்தின் அளிப்பு, வட்டி வீதம், பணவீக்கம் மற்றும் அந்நியச் செலாவணி ஆகியவற்றை இந்திய மைய வங்கி மூலம் கட்டுப்படுத்துகிறது.
- இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் மற்றும் இந்திய போட்டி ஆணையம் போன்ற பல்வேறு முகவர்கள் மூலமாகவும் மத்திய அரசு பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துகிறது.
- இந்தியாவில் உள்ள அரசாங்கங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் மலிவு விலையில் அத்தியாவசியமான பொருட்கள் மற்றும் சேவைகளை மக்களுக்கு வழங்குகின்றன.

2. **சில நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக.**

நேர்முக வரிகள் :

- நேர்முக வரி என்பது ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்தின் மீது நேரடியாக விதிக்கப்படுவதாகும். இவ்வரியை மற்றவர்கள் மீது புரட்டிவிட முடியாது.
- வருமானவரி, சொத்துவரி மற்றும் நிறுவனவரி ஆகியன நேர்முக வரிகளாகும்.

வருமான வரி :

- வருமான வரி இந்தியாவில் விதிக்கப்படுகின்ற நேர்முக வரிமுறையில் மிக முக்கியமான வரியாகும். இவ்வரி தனிநபர் பெறுகின்ற வருமானத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்றது. இவ்வரி வசூலிக்கப்படும் விகிதம் வருமான அளவைப் பொறுத்து மாறுபடக் கூடியது ஆகும்.

நிறுவன வரி :

- இந்நிறுவன வரி தங்கள் பங்குதாரர்களிடமிருந்து தனி நிறுவனங்களாக இருக்கும் நிறுவனங்களுக்கு விதிக்கப்படுகிறது. இது இந்தியாவில் அமைந்துள்ள சிறப்பு உரிமைகளில், மூலதன சொத்துக்களின் விற்பனையிலிருந்து வரும் வட்டி இலாபங்கள், தொழில் நுட்ப சேவைகள் மற்றும் ஈவுத்தொகைக்கான கட்டணம் போன்றவற்றிலிருந்து வசூலிக்கப்படுகிறது.
- நிறுவன வரி வெளிநாட்டு நிறுவனங்கள் பெறும் வருமானத்தின் மீது விதிக்கப்படுகிறது அல்லது இவ்வரியானது இந்தியாவில் தோன்றுவதாகக் கருதப்படுகிறது.

சொத்து வரி :

- சொத்து வரி (அ) செல்வ வரி என்பது சொத்திலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்காக சொத்தின் உரிமையாளருக்கு விதிக்கப்படுகின்ற வரியாகும்.
- ஒவ்வொரு ஆண்டும் சொத்தின் நடப்பு சந்தை மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது. இவ்வரி தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் மீது விதிக்கப்படும் வரியாகும்.

மறைமுக வரிகள் :

- ஒருவர் மீது விதிக்கப்பட்ட வரிச்சுமையை மற்றொருவருக்கு மாற்றப்பட்டால் அது "மறைமுக வரி" எனப்படும்.
- முத்திரைத்தாள் வரி, பொழுதுபோக்கு வரி, சுங்கத்தீர்வை மற்றும் பண்டங்கள் மற்றும் பணிகள் மீதான வரி (GST) ஆகியன மறைமுக வரிகளாகும்.

முத்திரைத்தாள் வரி :

- முத்திரைத்தாள் வரி என்பது அரசாங்க ஆவணங்கள் மீது விதிக்கப்படுகின்ற வரிகளான திருமண பதிவு, சொத்து தொடர்பான ஆவண பதிவு மற்றும் சில ஒப்பந்த பத்திரங்கள் பதிவு போன்றவைகள் மீது விதிக்கப்படுவதாகும்.

பொழுதுபோக்கு வரி :

- எந்தவொரு பொழுதுபோக்கு மூலங்களாக இருந்தாலும், அரசாங்கத்தால் விதிக்கப்படுகின்ற வரி பொழுதுபோக்கு வரியாகும். உதாரணமாக திரைப்படங்கள், பொழுதுபோக்கு பூங்காக்கள், கண்காட்சிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள் ஆகியவற்றை பார்ப்பதற்காக விதிக்கப்படுகின்ற வரியாகும்.

சுங்கத்தீர்வை (அ) கலால் வரி :

- சுங்கத்தீர்வை என்பது விற்பனையை விட, உற்பத்தியின் இயக்கத்தில் உள்ள எந்தவொரு உற்பத்திப் பொருட்களின் மீதும் விதிக்கப்படும் வரியாகும். இவ்வரி பொதுவாக விற்பனை வரி போன்ற மறைமுக வரிகளுக்கு கூடுதலாக விதிக்கப்படுகிறது.

பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (GST) :

- பண்டங்கள் மற்றும் பணிகள் வரி, நுகர்வோர்கள் பண்டங்கள் மற்றும் பணிகளை வாங்கும் பொழுது விதிக்கப்படுகின்ற வரியாகும்.
- இது மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களால் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு விதிக்கப்படும் அனைத்து மறைமுக வரிகளையும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

3. **GST யின் அமைப்பை எழுதுக.**

மாநில பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (SGST) (மாநிலத்திற்குள்) :

- மதிப்புக் கூட்டு வரி (VAT)
- விற்பனை வரி
- கொள்முதல் வரி
- பொழுதுபோக்கு வரி
- ஆடம்பர வரி
- பரிசுச் சீட்டு வரி
- மாநில கூடுதல் கட்டணம் மற்றும் வரிகள்

மத்திய பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (CGST) (மாநிலத்திற்குள்) :

- மத்திய சுங்கத்தீர்வை
- சேவை வரி
- எதிர் வரி
- கூடுதல் கட்டணம்
- கல்விக் கட்டணம் (இடைநிலைக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி வரி)
- கூடுதல் ஆயத்தீர்வை

ஒருங்கிணைந்த பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (IGST) (மாநிலங்களுக்கு இடையே) :

- நான்கு முக்கிய GST விகிதங்கள் உள்ளன.
  5 %, 12 %, 18 % மற்றும் 28 %
- காய்கறிகள் மற்றும் உணவு தானியங்கள் போன்ற வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியத் தேவைகளுக்கான அனைத்து பண்டங்களுக்கும் இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றது.

4. **கருப்புப் பணம் என்றால் என்ன? அதற்கான காரணங்களை எழுதுக.** **PTA**

கருப்புப் பணம் :

- கருப்புப் பணம் என்பது, கருப்பு சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் செலுத்தப்படாத வரிப்பணம் ஆகும். வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட கணக்கிடப்படாத பணமும் "கருப்புப் பணம்" என அழைக்கப்படுகிறது.

கருப்புப் பணத்திற்கான காரணங்கள் :

பண்டங்கள் பற்றாக்குறை :

- கருப்புப் பணம் இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ பண்டங்கள் பற்றாக்குறை ஏற்படுவதற்கு மூலகாரணமாக உள்ளது. கருப்புப் பணத்தை கட்டுப்படுத்துவதற்கு அடுத்தடுத்து தடைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

உரிமம் பெறும் முறை :

- கட்டுப்பாட்டு அனுமதி, ஒதுக்கீடு மற்றும் உரிமங்களின் அமைப்பு, பொருட்களின் குறைவான அளிப்பினால் தவறான விநியோகத்துடன் தொடர்புடையது என்று உறுதியாக நம்பப்படுகிறது. இதன் விளைவாக கருப்புப் பணம் உருவாகிறது.

தொழில் துறையின் பங்கு :

- கருப்புப் பணம் தோன்றுவதற்கு மிக முக்கியமான பங்குவகிப்பது தொழில் துறையாகும். உதாரணமாக வரையறுக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் கட்டுப்பாட்டாளர் பண்டங்களை மிகவும் குறைவான விலைக்கு வாங்க முயற்சி செய்வதுடன், அப்பொருளுக்கு அதிக கட்டணம் வசூலித்து அவ்வித்தியாசத்தை தனிப்பட்ட முறையில் காண்பிப்பதில்லை.

கடத்தல் :

- கருப்புப் பணத்திற்கு கடத்தல் ஒரு முக்கிய ஆதாரமாகும். இந்தியா கடுமையான பரிமாற்ற முறைகளை கொண்டிருந்தபோது, விலை உயர்ந்த பொருட்களான தங்கம், வெள்ளி, ஜவுளிகள், மின்னணுப் பொருட்கள் ஆகியவற்றிற்கு சுங்கத் தீர்வை அதிகமாக விதிக்கப்பட்டது. அதிகாரிகளை மீறி இந்தப் பொருட்களை கொண்டு வருவது கடத்தலாகும்.

வரியின் அமைப்பு :

- வரிவிகிதம் அதிகமாக இருக்கும்போது, கருப்புப் பணம் தோன்றக் காரணமாக அமைகிறது.

5. பொருளாதார முன்னேற்றத்தில் வரி விதிப்பின் பங்கினை விளக்குக. **PTA**

வளங்களை திரட்டுதல் :

- வரி விதிப்பு அரசாங்கத்திற்கு கணிசமான அளவிற்கு வருவாய் திரட்டுவதற்கு உதவுகிறது. குறிப்பாக நேர்முக வரிகளான தனிநபர் வருமான வரி, நிறுவன வரி மற்றும் மறைமுக வரிகளான ஆயத்தீர்வை, சுங்கவரி ஆகியவற்றின் மூலமாக வரி வருவாய் திரட்டப்படுகிறது.

வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் :

- வரியின் மூலம் சமத்துவ முறையை உருவாக்கலாம். குறிப்பாக, நேர்முக வரியில் வளர்வீதவரி முறை பின்பற்றப்படுகிறது. அதேபோல் சில மறைமுக வரிகளான ஆடம்பரப் பண்டங்களின் மீது விதிக்கப்படும் வரி வளர்வீத வரியின் தன்மையுடையதாகும்.

சமூக நலன் :

- வரி விதிப்பு சமூக நலனை உருவாக்குகிறது. சில விரும்பத்தகாத பொருட்களான மதுபானங்கள் போன்ற பொருட்களின் மீது அதிகமான வரி விதிப்பதன் மூலம் சமூக நலன் பாதுகாக்கப்படுகிறது.

அந்நியச் செலாவணி :

- வரிவிதிப்பு ஏற்றுமதியை ஊக்குவித்து இறக்குமதியைக் கட்டுப்படுத்துகிறது. பொதுவாக வளர்ந்து வரும் நாடுகளை விட வளர்ந்த நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்களுக்கு அதிகமாக வரிகளை விதிப்பதில்லை.

வட்டார முன்னேற்றம் :

- வட்டார வளர்ச்சியில் வரிவிதிப்பு முக்கிய பங்கினை வகிக்கிறது. பின்தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்கள் அமைப்பதற்காக வரிச்சலுகையையும், வரி விடுமுறைகளையும் அளிப்பதன் மூலம், அப்பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வணிக நிறுவனங்களைத் தூண்டுகிறது.

பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துதல் :

- வரி என்பது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் கருவிகளுள் ஒன்றாக பயன்படுத்தப்படுகிறது. அரசாங்கம் பண்டங்கள் மீதான வரி விகிதத்தை குறைப்பதன் மூலம் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

கூடுதல் வினா

6. **வரி எவ்வாறு விதிக்கப்படுகிறது என்பதை விளக்குக.**

வளர்வீத வரிவிதிப்பு முறை :

- வளர்வீத வரிவிதிப்பு முறையில் வரியின் அடிப்படைத்தளம் அதிகரிக்கும்போது (பெருக்கப்படும்) வரிவிகிதமும் (பெருக்கி) அதிகரிக்கிறது. வரி விகிதத்தை வரி அளவுடன் பெருக்குவதன் மூலம் செலுத்த வேண்டிய வரியின் அளவு கணக்கிடப்படுகிறது.
- ஒரு வளர்வீத வரியைப் பொருத்தவரையில் பெருக்கல் (வருமானம்) அதிகரிக்கிறது. வருமானம் அதிகரிக்கும்போது, வரி விகிதமும் அதிகரிக்கிறது. இது வளர்வீத வரிவிதிப்பு முறை என்று அழைக்கப்படுகிறது.

வரி அடிப்படை	வரி விகிதம்	வரி அளவு
10,000	10 %	1,000
20,000	15 %	3,000
30,000	25 %	7,500
40,000	40 %	16,000

விகித வரிவிதிப்பு முறை (அ) விகிதாச்சார வரிவிதிப்பு முறை :

- ஒரு நிலையான அளவில் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு விதிக்கப்படும் வரி, விகித வரி விதிப்பு முறை எனப்படுகிறது. அனைத்து வரி செலுத்துவோரும், தங்கள் வருமானத்தில் அதே விகிதத்தில் பங்களிப்பு செய்கின்றனர்.
- இந்த முறையில், வருமானத்தின் அளவைப் பொருட்படுத்தாமல் வரி விதிப்பு விகிதம் ஒரே மாதிரியானது ஆகும். பெறப்பட்ட வரித்தொகை வருமானத்தின் அதே விகிதத்தில் மாறுபடும்.

வரி அடிப்படை	வரி விகிதம்	வரி அளவு
10,000	10 %	1,000
20,000	10 %	2,000
30,000	10 %	3,000
40,000	10 %	4,000

தேய்வு வீத வரி விதிப்பு முறை :

- இது அதிக வருமானம் ஈட்டுபவர்களைவிட, குறைந்த வருமானம் ஈட்டுபவர்களிடம் அதிக வரி விகிதம் விதிப்பதைக் குறிக்கிறது. இது வளர்வீத வரி விதிப்பு முறைக்கு நேர் எதிர்மாறானதாகும்.

வளர்வீத வரிவிதிப்பு	வருமான அதிகரிப்பு	வரி அதிகரிக்கும்	உதாரணம் : வருமான வரி
விகித வரிவிதிப்பு	வருமான அதிகரிப்பு	வரி குறைவு	உதாரணம் : நிறுவன வரி
தேய்வு வீத வரிவிதிப்பு	வருமான மாற்றம்	எப்போதும் ஒரே வரி	உதாரணம் : விற்பனை வரி

பொருளியல்

5 தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள்

மனவரைபடம்

பொருளாதாரத்தின் நன்மைகள்

- தேவையான உள்ளீடுகளை உருவாக்குவது
- சந்தையின் இருப்பு
- உற்பத்தித் திறனை மேம்படுத்த
- வேலை வாய்ப்பை உருவாக்குவது
- தொழில்நுட்ப மாற்றம்

தொழிற்சாலையின் வகைகள்

- பயனர்கள்
- பயன் படுத்தப்படும் உள்ளீடுகளின் வகை
- நிறுவன உரிமையாளர்
- அளவு

தொழில்மயமாதலின் முன்னேற்றம் வரலாறு

சில தொழில்கள் காலனித்துவ காலத்தில் வளர்ந்தன

↓

சுதந்திரத்திற்குப் பின் 1990களின் முற்பகுதியில்

↓

தமிழ்நாட்டில் தொழில்மயமாதல் தாராளமயமாதல் கட்டம்

தொகுப்புகள்

- தானியங்கி தொகுப்புகள்
- நெசவுத் தொழில் தொகுப்புகள்
- தோல் மற்றும் தோல் பொருட்களின் தொகுப்பு
- பட்டாசு, தீப்பெட்டி மற்றும் அச்சிடுதல் தொகுப்பு
- மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொகுப்புகள்

முகமைகள்

- (SIPCOT) தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம்
- (TANSIDCO) தமிழ்நாடு மாநில சிறு தொழில் வளர்ச்சிக் கழகம்
- (TIDCO) தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டுக் கழகம்
- (TIIC) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்
- (TANSI) தமிழ்நாடு சிறு தொழில் கழகம்

நினைவில் கொள்க

- மூலப்பொருட்களை எளிதில் பயன்படுத்தக்கூடிய பொருட்களாக மாற்றுவதில் ஈடுபட்டுள்ள ஒரு மனித நடவடிக்கையை தொழிற்சாலை என்று அழைக்கிறோம்.
- வெளியீடுகளை இறுதி நுகர்வோர் பயன்படுத்தினால் அது நுகர்வோர் பண்டங்கள் துறை என்று அழைக்கப்படும்.
- தொழில் தொகுப்பு அல்லது மாவட்டங்களின் நன்மைகளை முதன் முதலில் கண்டறிந்தவர் ஆல்ஃபிரட் மார்ஷல்.
- சிவகாசி தீப்பெட்டி தொழிலுக்கும், பட்டாசு உற்பத்திக்கும், அச்சுத்தொழிலுக்கும் முக்கியமான மையமாக விளங்குவதால் அது "லிட்டில் ஜப்பான்" என்று அழைக்கப்படுகிறது.
- இந்தியாவின் அனைத்து மாநிலங்களையும் விட அதிக தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள மாநிலம் தமிழ்நாடு ஆகும்.
- "ஆசியாவின் டெட்ராய்ட்" என்று அழைக்கப்படுவது சென்னை ஆகும்.
- இந்தியாவில் மிகப்பெரிய நெசவுத்தொழில் துறைகளுக்கு தாயகமாக விளங்குவது தமிழ்நாடு.
- "தென்னிந்தியாவின் மான்செஸ்டர்" என்று அழைக்கப்படும் நகரம் கோயம்புத்தூர்.
- பின்னலாடை தயாரிக்கும் ஏராளமான நிறுவனங்களின் தொகுப்புக்கு புகழ்பெற்ற இடம் திருப்பூர்.
- தெற்கு அரைக்கோளத்தில் உள்ள நாடுகள் உலகளாவிய தெற்கு நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன.
- தோல் பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியாவிலேயே முதன்மை மாவட்டமாகத் திகழ்வது வேலூர் மாவட்டம்.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. ஆசியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படுவது ____________.
   அ) தூத்துக்குடி ஆ) கோயம்புத்தூர் இ) சென்னை ஈ) மதுரை
2. பம்ப்செட்டுகள் மற்றும் மோட்டார்ஸ் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுவது ____________.
   அ) சேலம் ஆ) கோயம்புத்தூர் இ) சென்னை ஈ) தருமபுரி
3. தூத்துக்குடி ____________ என அழைக்கப்படுகிறது.
   அ) இந்தியாவின் நுழைவாயில் ஆ) தமிழ்நாட்டின் நுழைவாயில்
   இ) பம்ப் நகரம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
4. ____________ என்பது ஒரு நாட்டின் வளர்ச்சியில் முக்கிய அம்சமாகும்.
   அ) வேளாண்மை ஆ) தொழில்
   இ) இரயில்வே ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
5. திருப்பூர் ____________ என அழைக்கப்படுகிறது.
   அ) தோல் பதனிடுதல் ஆ) பூட்டு தயாரித்தல்
   இ) பின்னலாடை தயாரித்தல் ஈ) வேளாண் பதப்படுத்துதல்
6. ஆம்பூர் மற்றும் வாணியம்பாடியுடன் ____________ ல் தோல் பொருள் ஏற்றுமதிக்கான மையம் உள்ளது.
   அ) சென்னை ஆ) சிவகாசி இ) கோயம்புத்தூர் ஈ) மதுரை
7. Information Technology (IT) என்ற சொல் குறிப்பது ____________ ஆகும்.
   அ) இந்திய தொழில் நுட்பம் ஆ) தகவல் தொழில் நுட்பம்
   இ) தொழில் நுட்ப நிறுவனம் ஈ) முனைவு தொழில் நுட்பம்

பொருளியல்

8. ____________ இல் ஒரு வெற்றிகரமான தொழில்துறை தொகுப்பு முற்றிலும் தமிழ்நாட்டால் உருவாக்கப்பட்டது.
அ) ஓசூர் ஆ) திண்டுக்கல் இ) கோவில்பட்டி ஈ) திருநெல்வேலி

9. SIPCOT உருவாக்கப்பட்ட ஆண்டு ____________.
அ) 1972 ஆ) 1976 இ) 1971 ஈ) 1978

10. கீழ்க்கண்டவற்றுள் தமிழ்நாடு தொழில்துறை வளர்ச்சி முகமை எவை?
அ) SIPCOT ஆ) TANSIDCO
இ) TIDCO ஈ) மேற்கண்ட அனைத்தும்

கூடுதல் வினாக்கள்

11. தொழிற்புரட்சி தோன்றிய நாடு
அ) இங்கிலாந்து ஆ) ஜப்பான் இ) ரஷ்யா ஈ) அமெரிக்கா

12. அதிக அளவு நெசவுத்தொழில் தோன்றுவதற்குக் காரணமாயிருந்த சாகுபடி
அ) சணல் ஆ) பருத்தி இ) தேயிலை ஈ) இரப்பர்

13. பட்டாசு உற்பத்தியால் புகழ்பெற்ற நகரம்
அ) விருதுநகர் ஆ) மதுரை இ) திருநெல்வேலி ஈ) சிவகாசி

14. தோல் உற்பத்தி தொழில் நடைபெறும் ஒரு முக்கிய நகரம்
அ) திருச்சி ஆ) விழுப்புரம் இ) திண்டுக்கல் ஈ) செங்கல்பட்டு

15. சென்னையில் ரயில் பெட்டிகள் தயாரிக்கும் இடம்
அ) ஆவடி ஆ) அம்பத்தூர் இ) பெரம்பூர் ஈ) கோடம்பாக்கம்

16. பாரத கனரக மின்சாதன நிறுவனம் (BHEL) அமைக்கப்பட்டுள்ள நகரம்
அ) சென்னை ஆ) கோயம்புத்தூர் இ) ஓசூர் ஈ) திருச்சிராப்பள்ளி

17. போர் தளவாடங்கள் தயாரிக்க கனரக வாகனத் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ள இடம்
அ) ஆவடி ஆ) பெரம்பலூர் இ) கரூர் ஈ) தேனாம்பேட்டை

18. சேலம் இரும்பு எஃகு ஆலை தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1973 ஆ) 1963 இ) 1983 ஈ) 1953

19. பின்னலாடை தொழில் தொகுப்புகள் விரிவாக்கம் உருவாகியுள்ள இடம்
அ) சேலம் ஆ) நாமக்கல் இ) திருப்பூர் ஈ) ஈரோடு

20. வீட்டு அலங்கார பொருட்கள் தொழில் தொகுப்புகள் உருவாகிய இடம்
அ) ஆம்பூர் ஆ) கரூர் இ) வாணியம்பாடி ஈ) பல்லடம்

21. இந்தியாவில் அதிக தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள மாநிலம்
அ) மகாராஷ்டிரா ஆ) குஜராத் இ) பீகார் ஈ) தமிழ்நாடு

22. சுமைதூக்கும் வாகன கட்டமைப்பிற்குப் பெயர் பெற்ற இடம்
அ) நாமக்கல் ஆ) ஓசூர் இ) கோயம்புத்தூர் ஈ) நாகர்கோயில்

23. இந்தியாவில் மிகப்பெரிய நெசவுத் தொழில் துறைகளுக்கு தாயகமாக விளங்குவது
அ) கேரளா ஆ) தமிழ்நாடு இ) கர்நாடகா ஈ) மேற்கு வங்காளம்

24. "தென்னிந்தியாவின் மான்செஸ்டர்" என்று அழைக்கப்படுவது
அ) தூத்துக்குடி ஆ) மதுரை இ) கோயம்புத்தூர் ஈ) அம்பாசமுத்திரம்

25. பட்டுப்புடவைகளுக்குப் புகழ்வாய்ந்த நகரம்
அ) திருநெல்வேலி ஆ) புதுக்கோட்டை இ) இராமநாதபுரம் ஈ) காஞ்சிபுரம்

விடைகள்

1. இ) சென்னை
2. ஆ) கோயம்புத்தூர்
3. ஆ) தமிழ்நாட்டின் நுழைவாயில்
4. ஆ) தொழில்
5. இ) பின்னலாடை தயாரித்தல்
6. அ) சென்னை
7. ஆ) தகவல் தொழில் நுட்பம்
8. அ) ஒசூர்
9. இ) 1971
10. ஈ) மேற்கண்ட அனைத்தும்
11. அ) இங்கிலாந்து
12. ஆ) பருத்தி
13. ஈ) சிவகாசி
14. இ) திண்டுக்கல்
15. இ) பெரம்பூர்
16. ஈ) திருச்சிராப்பள்ளி
17. அ) ஆவடி
18. அ) 1973
19. இ) திருப்பூர்
20. ஆ) கரூர்
21. ஈ) தமிழ்நாடு
22. அ) நாமக்கல்
23. ஆ) தமிழ்நாடு
24. இ) கோயம்புத்தூர்
25. ஈ) காஞ்சிபுரம்

II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

பாடநூல் வினாக்கள்

1. ___________ மனிதனின் நவீன பொருளாதார நடவடிக்கைகளில் மிகவும் முக்கியமானதாகும்.
2. ___________ என்பது பொதுவான சந்தை மற்றும் தொழில்நுட்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதியில் உள்ள நிறுவனங்களின் தொகுப்புகளாகும்.
3. நூற்றுக்கணக்கான தோல் மற்றும் தோல் பதனிடும் வசதிகள் தமிழ்நாட்டில் ___________ மாவட்டத்தை சுற்றி அமைந்துள்ளன.
4. ___________ 'லிட்டில் ஜப்பான்' என்று பற்றுடன் அழைக்கப்படுகிறது.
5. சிறப்பு பொருளாதார மண்டலக் கொள்கைகள் ___________ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
6. ___________ என்பவர் புத்தாக்க சிந்தனைகள் மற்றும் வணிக செயல்முறைகளின் புத்தாக்கம்புனைபவர் ஆவார்.

கூடுதல் வினாக்கள்

7. மூலப்பொருட்களை எளிதில் பயன்படுத்தக்கூடிய பொருட்களாக மாற்றுவது ___________.
8. வேலை வாய்ப்பை உருவாக்குவது ___________ ன் ஒரு முக்கிய நோக்கமாகும்.
9. தொழில் மயமாக்குதலுக்கு நன்மைதரும் மாற்றம் ___________ ஆகும்.
10. வெளியீடுகளை இறுதி நுகர்வோர் பயன்படுத்தினால் அது ___________ என்று அழைக்கப்படுகிறது.
11. வெளியீடுகள் மற்றொரு உற்பத்தியாளரால் பயன்படுத்தப்பட்டால் அது ___________ என்று அழைக்கப்படும்.
12. 1920 – களில் புகழ்பெற்ற பொருளாதார அறிஞராக விளங்கியவர் ___________.
13. ரயில்வே துறையின் அறிமுகத்தால் ___________ சந்தை விரிவடைந்தது.
14. அச்சுத் தொழிலுக்கு முக்கிய மையமாக விளங்கும் நகரம் ___________.
15. ஸ்டான்டர்ட் மோட்டார்ஸ் நிறுவனம் சென்னையில் ___________ உற்பத்தியைத் தொடங்கியது.
16. வாகன உதிரிப் பாகங்களின் நகரமாக மாறியது ___________.
17. சென்னை எல்லையில் உள்ள மாவட்டங்களில் ___________ மண்டலங்கள் உருவாக்கப்பட்டன.
18. TVS தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடம் ___________.
19. தானியங்கிகளின் தொகுப்பாக வளர்ந்து வரும் நகரம் ___________.
20. ஈரோடு மற்றும் சேலம் பகுதிகளில் ___________ தொழில் பரவலாக உள்ளது.
21. பவானி மற்றும் குமாரபாளையம் ___________ உற்பத்தி செய்யும் முக்கிய மையங்களாகும்.
22. தீப்பெட்டி உற்பத்தித் தொழிலில் புகழ்பெற்று விளங்கும் நகரம் ___________.

23. இந்தியாவில் அதிக அளவு பொறியியல் கல்லூரிகளைக் கொண்ட மாநிலம் ________.

24. சிறந்த போக்குவரத்து உள்கட்டமைப்புக்கு பெயர்பெற்ற மாநிலம் ________.

25. சென்னையில் IT பொருளாதார சிறப்பு மண்டலம் நிறுவப்பட்டுள்ள இடம் ________.

விடைகள்

1. தொழில்மயமாதல்	2. தொழில் தொகுப்புகள்	3. வேலூர்
4. சிவகாசி	5. 2000	6. தொழில்முனைவோர்
7. தொழிற்சாலை	8. தொழில் மயமாதல்	9. தொழில் நுட்ப மாற்றம்
10. நுகர்வோர் பண்டங்கள் துறை	11. மூலதன பண்டங்கள் துறை	12. ஆல்ஃபிரட் மார்ஷல்
13. பருத்தி நூல்	14. சிவகாசி	15. மகிழுந்து
16. சென்னை	17. சிறப்பு பொருளாதார	18. ஓசூர்
19. கோயம்புத்தூர்	20. மின்விசை (மின்தறி)	21. தரை விரிப்புகள்
22. சிவகாசி	23. தமிழ்நாடு	24. தமிழ்நாடு
25. சோளிங்கநல்லூர்		

III. சரியான கூற்றினை தேர்வு செய்யவும்:

பாடநூல் வினா

1. i) பொதுமக்களின் செயலற்ற சேமிப்பை அணிதிரட்டுவதன் மூலம் மூலதன உருவாக்கத்தை ஊக்குவிக்கிறது.
   ii) அவர்கள் கைவினைஞர், தொழில்நுட்ப தகுதி வாய்ந்த நபர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு பெரிய அளவிலான வேலைவாய்ப்பை வழங்கவில்லை.
   iii) மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் தலா வருமானத்தையும் அதிகரிக்க தொழில் முனைவோர் நாட்டிற்கு உதவுகிறார்கள்.
   iv) தொழில் முனைவோர் நாட்டின் ஏற்றுமதி வர்த்தகத்தை ஊக்குவிப்பதில்லை.
   அ) i மற்றும் iv சரி ஆ) i மட்டும் சரி
   இ) iii மற்றும் iv சரி ஈ) i மற்றும் iii சரி

கூடுதல் வினாக்கள்

2. கூற்று (A) : ஒரு நாடு போதுமான அளவு பண்டங்களை உற்பத்தி செய்ய முடியாவிட்டால் அது இறக்குமதியை நம்பியிருக்க வேண்டும்.
   காரணம் (R): அதிக அளவு அந்நிய செலாவணியை செலவிட வேண்டியிருக்கும்.
   அ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
   ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு.
   இ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமல்ல.
   ஈ) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமாகும்.

3. i) மேற்கு மற்றும் தெற்கு தமிழ்நாட்டில் பருத்தி சாகுபடி, அதிக அளவு நடைபெற்றது.
   ii) தூத்துக்குடி துறைமுகம் அதன் அருகாமையில் தொழிற்சாலைகள் உருவாகிட காரணமாக இருந்தது.
   iii) தொழிற்புரட்சி முதன் முதலில் இந்தியாவில் ஏற்பட்டது.
   iv) சேலத்தில் 1973 ஆம் ஆண்டு இரும்பு எஃகு ஆலை அமைக்கப்பட்டது.
   அ) i, ii மற்றும் iii சரியானவை ஆ) i, iii மற்றும் iv சரியானவை
   இ) i, ii மற்றும் iv சரியானவை ஈ) i, iii, iv சரியானவை

விடைகள்

1. ஈ) i மற்றும் iii சரி
2. ஈ) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமாகும்
3. இ) i, ii மற்றும் iv சரியானவை

IV. தவறான ஒன்றினை தேர்வு செய்க:

பாடநூல் வினா

1. பின்வருவனவற்றில் தோல் தொழிற்சாலைகள் இல்லாதது எது? **PTA**

அ) ராணிப்பேட்டை ஆ) தர்மபுரி இ) ஆம்பூர் ஈ) வாணியம்பாடி

2. பின்வருவனவற்றில் எது தொழில்துறை வளர்ச்சி நிறுவனம் அல்ல?

அ) TIDCO ஆ) SIDCO இ) MEPG ஈ) SIPCOT

விடைகள் 1. ஆ) தர்மபுரி 2. இ) **MEPG**

V. பொருத்துக:

பாடநூல் வினா

அ)			விடை
1. தொழில் முனைவோர்	அ)	ஏற்றுமதி செயலாக்க மண்டலம்	1) இ
2. **MEPZ**	ஆ)	கோயம்புத்தூர்	2) அ
3. இந்திய ஒழுங்குமுறை தொழிற்சாலை	இ)	அமைப்பாளர்	3) ஈ
4. **TNPL**	ஈ)	அரவங்காடு	4) உ
5. தென்னிந்தியாவின் மான்செஸ்டர்	உ)	கரூர்	5) ஆ

கூடுதல் வினாக்கள்

ஆ)			விடை
1. ரயில் பெட்டி	அ)	ஓசூர்	1) உ
2. **BHEL**	ஆ)	கோயம்புத்தூர்	2) ஈ
3. மின்சார மோட்டார்கள்	இ)	சேலம்	3) ஆ
4. இரும்பு எஃகு ஆலை	ஈ)	திருச்சிராப்பள்ளி	4) இ
5. **TVS**	உ)	பெரம்பூர்	5) அ

இ)			விடை
1. திருப்பூர்	அ)	வீட்டு அலங்காரப் பொருட்கள்	1) ஈ
2. கரூர்	ஆ)	பட்டாசு	2) அ
3. திண்டுக்கல்	இ)	பட்டுப்புடவை	3) உ
4. காஞ்சிபுரம்	ஈ)	பின்னலாடை	4) இ
5. சிவகாசி	உ)	தோல் உற்பத்தி	5) ஆ

ஈ)			விடை
1. சோளிங்கநல்லூர்	அ)	திருநெல்வேலி	1) ஆ
2. விலாங்குறிச்சி	ஆ)	சென்னை	2) இ
3. இலந்தைகுளம்	இ)	கோயம்புத்தூர்	3) ஈ
4. நாவல்பட்டு	ஈ)	மதுரை	4) உ
5. நாங்குநேரி	உ)	திருச்சிராப்பள்ளி	5) அ

VI. சுருக்கமாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. வளரும் பொருளாதாரம் ஏன் விவசாயத்திலிருந்து பன்முகப்படுத்தப்பட வேண்டும்?

➢ உணவுத் தேவையுடன் வருமானத் தேவையும் நிலையானதாக உள்ளது. எனவே ஒரு நாட்டின் பொருளாதாரம் வளர்ந்து வருமானம் அதிகரிக்கும் பொழுது நுகர்வோர் வேளாண்மை உற்பத்தி பொருட்களுக்கு தங்கள் வருமானத்தில் ஒரு சிறு பகுதியை மட்டுமே செலவிடுகிறார்கள்.

- நுகரப்படும் உணவு பொருளாதார விரிவால் பல மாற்றங்களுக்கு உட்படுகிறது. அதனால் பல வட்டாரங்களுக்கிடையேயும் மக்களுக்கிடையேயும் வேளாண் தொழிலில் அதிக வேலைப்பகுப்பு முறை காணப்படுகிறது. உணவுப் பொருட்கள் நீண்ட தூரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பதப்படுத்தி முத்திரையிடப்படுகிறது. இதன் விளைவாக நுகர்வோர் வாங்கும் விலையை விட விவசாயிகள் பெறும் விலை குறைவாக உள்ளது.
- நிலத்தின் இறுதிநிலை உற்பத்தித்திறன் குறைந்து கொண்டே வருவதால் வேளாண் பணிகளுக்கு தொழிலாளர்களை ஈர்த்துக் கொள்வதில் ஆட்களை ஏற்பதில் சில வரையறைகள் பின்பற்ற நேரிடுகின்றன. இதன் விளைவாக வேளாண்மை துறையில் உழைப்பாளர்களின் உற்பத்தி திறனை அதிகரிக்க முடிவதில்லை.
- இந்த அனைத்து காரணிகளின் விளைவாக வேளாண் துறையிலிருந்து விலகி, பொருளாதாரமானது உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பின் அடிப்படையில் ஒரு தேவையை ஏற்படுத்துகிறது.

2. விவசாயத் துறையில் ஊதியங்கள் ஏன் குறைவாக உள்ளன?
   - நிலத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் குறைந்து கொண்டே வருவதால் வேளாண் பணிகளுக்கு தொழிலாளர்களை ஈர்த்துக் கொள்வதில், ஆட்களை ஏற்பதில் பல வரையறைகள் பின்பற்ற நேரிடுகிறது. இதன் விளைவாக வேளாண்மை துறையில் உழைப்பாளர்களின் உற்பத்தி திறனை அதிகரிக்க முடிவதில்லை.
   - பெருமளவிலான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு வேளாண்மையை நம்பியிருப்பதாலும், கூலியை அதிகரிக்க வாய்ப்பில்லாததாலும் வறுமையின் அளவு தொடர்ந்து அதிகரிக்கிறது.

3. தொழில்துறை தொகுப்பு என்றால் என்ன?
   - தொழில் தொகுப்புகள் என்பது பொதுவான சந்தைகள், தொழில் நுட்பங்கள் மற்றும் திறன்களுக்கான தேவைகளை பகிர்ந்துகொள்ள வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதியில் உள்ள நிறுவனங்களின் தொகுப்பு ஆகும்.
   - தொழில் தொகுப்புகளின் முக்கிய அம்சம் நிறுவனங்களுக்கிடையேயான ஒரு பரஸ்பர தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதாகும்.

4. தொழில் தொகுப்புகள் உருவாவதற்கான வழிகள் யாவை? **PTA**
   - தொழில் தொகுப்பு தோன்றுவதற்கு பல்வேறு காரணிகள் உள்ளன. ஒரு சில தொழில் தொகுப்புகள் தோன்றிய இடங்களில் கைவினைஞர்கள் குடியேறி நெடுங்காலமாக அங்கு தங்கி இருந்ததாகவும் வரலாறு கூறுகிறது. கைத்தறி நெசவுத்தொழில் வளர்ச்சி இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.
   - சில துறைகளில், ஒரு பெரிய நிறுவனம் நிறுவப்படும்போது, அதன் உள்ளீடு மற்றும் பணிகளின் தேவைகளை கவனித்துக் கொள்வதற்காக ஒரு தொழில் தொகுப்பு நிறுவனம் தோன்றக்கூடும்.
   - சில நேரங்களில் ஒரு வட்டாரத்திலிருந்து மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தியை ஊக்குவிக்க அரசாங்கங்கள் முடிவு செய்யலாம். இது தொழில் தொகுப்பு தோன்றுவதற்கு வழிவகுக்கும்.

5. நாட்டின் மிகவும் தொழில்மயமான மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு மாற உதவிய கொள்கை வகுப்பின் 3 பகுதிகளைக் குறிப்பிடுக.
   - கல்வி
   - உள்கட்டமைப்பு
   - தொழில்துறை ஊக்குவிப்பு

6. தமிழ்நாட்டில் உள்ள மூன்று தொழில்துறை வளர்ச்சி மேம்பாட்டு நிறுவனங்களையும் அவற்றின் பங்கினையும் குறிப்பிடுக.

   தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT):
   - தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் என்பது 1970ல் தொழில் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்டு, தொழிற்தோட்டங்களை அமைத்தது.

   தமிழ்நாடு மாநில சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (TANSIDCO):
   - தமிழ்நாடு மாநில சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் என்பது 1970ல் தமிழக அரசால் நம் மாநிலத்தில் சிறுதொழில் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்ட ஒரு அரசு நிறுவனமாகும். சிறு தொழிற்பிரிவின் புதிய நிறுவனங்களுக்கு மானியம் மற்றும் தொழில்நுட்ப உதவிகளையும் இந்த நிறுவனம் செய்கிறது.

   தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டுக் கழகம் (TIDCO):
   - நம் மாநிலத்தில் தொழில் தோட்டங்களை நிறுவுவதற்கும் தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்கும் உதவும் மற்றுமொரு அரசு நிறுவனமாகும்.

7. **தற்போது தமிழ்நாட்டில் தொழில்மயமாதலின் சிக்கல்கள் யாவை?**

- தமிழகம், நமது நாட்டின் சிறந்த தொழில்மயமான மாநிலமாக இருந்தபோதிலும் சில குறைகளை சந்திக்க வேண்டியுள்ளது. வேதிப்பொருட்கள், ஜவுளித்துறை மற்றும் தோல் தொகுப்புகள் மூலம் வரும் திரவக் கழிவுகள் நமது சுகாதாரத்தைக் கெடுக்கிறது.
- இந்த திரவக்கழிவுகள் சேரும் நீர்நிலைகளை மட்டுமல்லாமல் அதையொட்டியுள்ள விவசாய நிலங்களையும் மாசுபடுத்துகிறது. இந்தக் குறைகள் உடனடியாக கவனிக்கப்பட வேண்டியது ஆகும்.
- உலகளாவிய அளவில் போட்டி போடுவதற்காக முதன்மையான தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதால் நிலையான வேலை வாய்ப்புக்கான குறை ஏற்படுகிறது. பணியாளர்களின் தரமானது, இன்றைய காலக்கட்டத்தில் தற்காலிகமாக பணியமர்த்துவதால் குறை ஏற்படுகிறது.

8. **தொழில் முனைவோர் என்றால் என்ன?** **PTA**

- ஒரு "தொழில் முனைவோர்" என்பவர் புதிய சிந்தனைகளுக்கும், வணிக செயல்முறைகளுக்கும் புத்தாக்கம் புனைபவர் ஆவார். இவர்களிடம் சிறந்த நிர்வாகத் திறன், வலிமையான குழுவை அமைக்கும் திறமைகளும் மற்றும் தேவையான தலைமைக்கான பண்புகளும் இருக்கும்.

9. **தொழில் முனைவு என்றால் என்ன?** **PTA**

- தொழில் முனைவோர் தங்கள் தொழிலை பெருக்குவதற்கான செயல்முறைகளே தொழில் முனைவு எனப்படும். இவை ஒன்றை உருவாக்குவதற்கும் மேலும் பெரிதுபடுத்துவதற்குமான திறன் ஆகும்.

கூடுதல் வினாக்கள்

10. **தொழிற்சாலை என்றால் என்ன?**

- மூலப்பொருட்களை எளிதில் பயன்படுத்தக் கூடிய பொருட்களாக மாற்றுவதில் ஈடுபட்டுள்ள எந்த ஒரு மனித நடவடிக்கையும் தொழிற்சாலை என்று அழைக்கப்படுகிறது.

11. **தொழில்மயமாதல் என்றால் என்ன?**

- தொழில்மயமாதல் என்பது நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்களால் பண்டங்களை உற்பத்தி செய்ய பெரிய அளவிலான தேவைப்படும் பண்டங்களை நவீன உற்பத்தி தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதற்கான செயல்முறையைக் குறிக்கிறது.

12. **தமிழக தொழில் தொகுப்புகளின் பல்வேறு நடவடிக்கைகள் யாவை?**

- தமிழ்நாட்டில் சென்னை வட்டாரத்தைத் தவிர தொழிற்துறை வளர்ச்சியானது மாநிலம் முழுவதும் பல்வேறு சிறிய நகரங்களில் தோன்றிய தொழில் தொகுப்புகள் மேற்கு வட்டாரத்திலேயே குவிந்துள்ளன.
- இந்த தொழில் தொகுப்புகளின் பல்வேறு நடவடிக்கைகளாக ஆடை வடிவமைத்தல், வீட்டு அலங்காரப் பொருட்கள், ஜவுளி, தோல், கோழி வளர்த்தல், கயிறு தயாரித்தல், போக்குவரத்து உபகரணப் பணிகள், பொறியியல் பணிகள், தானியங்கி உதிரிப்பாகங்கள் தயாரித்தல் போன்றவைகள் ஆகும்.

13. **சிவகாசி "லிட்டில் ஜப்பான்" குறிப்பு வரைக.**

- தீப்பெட்டி உற்பத்தி தொழிற்சாலையில் புகழ்பெற்று விளங்கும் சிவகாசி பகுதியானது தற்பொழுது பட்டாசு மற்றும் அச்சிடும் தொழிலில் நாட்டின் சிறந்த நகரமாக திகழ்கிறது.
- இந்தியா 90% பட்டாசு உற்பத்தி, 80% பாதுகாப்பான தீப்பெட்டி உற்பத்தி மற்றும் 60% அச்சுப்பணி தேர்வுகளுக்கு முக்கிய பங்காக சிவகாசியையே சார்ந்துள்ளது.
- அச்சிடும் பணிகளில் தனித்துவம் பெற்று மேலோங்கி விளங்குகிறது. காலனித்துவ காலத்தில் தொடங்கப்பட்ட இத்தொழிலானது தற்பொழுது அதிக அளவில் வேலைவாய்ப்பை அளிக்கிறது. எனவே சிவகாசி "லிட்டில் ஜப்பான்" என்று அழைக்கப்படுகிறது.

14. **ELCOT நிறுவனம் நிறுவியுள்ள பொருளாதார சிறப்பு மண்டலங்களைப் பட்டியலிடுக.**

- சென்னை – சோளிங்கநல்லூர்
- கோயம்புத்தூர் – விலாங்குறிச்சி
- மதுரை – இலந்தைகுளம்
- மதுரை – வடபாலஞ்சி, கின்னிமங்கலம்

- திருச்சி – நாவல்பட்டு
- திருநெல்வேலி – கங்கைகொண்டான்
- சேலம் – ஜாகீர் அம்மாபாளையம்
- ஓசூர் – விஸ்வநாதபுரம்

VII. விரிவாக விடையளிக்கவும்:

பாடநூல் வினாக்கள்

1. தொழில்மயமாதலின் வளர்ச்சிக்கு பங்களிப்புகள் யாவை?

- ஒரு பொருளாதாரத்தில் பிற உற்பத்தியாளர்களுக்குத் தேவையான உள்ளீடுகளை உருவாக்குவது அவசியம். வேளாண் உற்பத்தித்திறன் அதிகரிக்க உரங்கள் மற்றும் டிராக்டர்கள் போன்ற தொழில்களுக்கு உள்ளீடுகள் தேவைப்படுகின்றன.
- உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் பண்டங்கள் ஆகிய இரண்டிற்கும் இடையே ஒரு சந்தை நிலவுகிறது. அதேபோல் வங்கி, போக்குவரத்து மற்றும் வர்த்தகம் போன்ற பணிகள் தொழிற்சாலைகளின் உற்பத்தியை சார்ந்தே உள்ளது.
- நவீன உற்பத்தி முறைகளை பயன்படுத்துவதன் மூலம் தொழில்கள் சிறந்த உற்பத்தி திறனை அளிக்கின்றன. இதனால் உற்பத்தி செய்யப்படும் அனைத்து பண்டங்களின் உற்பத்திச் செலவும் குறைகிறது. இதன் காரணமாக மலிவான விலையில் பண்டங்களை வாங்கிட உதவவும் மற்றும் அதிகளவு உற்பத்தித் தேவையை உருவாக்கவும் உதவுகிறது.
- அத்தகைய பண்டங்களின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் தொழில்மயமாதல் வேளாண்மையில் ஈடுபடும் அதிக உழைப்பாளர் சக்தியை ஈர்க்க உதவுகிறது. எனவே வேலைவாய்ப்பை உருவாக்குவது தொழில்மயமாதலின் ஒரு முக்கிய நோக்கமாகும்.
- தொழில் மயமாதலுக்கு நன்மை தருவது தொழில்நுட்ப மாற்றமே ஆகும். நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் தொழில்மயமாதலின் முறைகளையும் அதன் வளர்ச்சியையும் அறிந்துகொள்ள முடிகிறது. அவற்றின் விளைவாக உழைப்பாளர்களின் உற்பத்தித்திறன் அதாவது உள்ளீடு அதிகரித்து அவர்கள் அதிக வருமானம் ஈட்ட உதவுகிறது.
- அதிக வருமானம் அதிகரிப்பதன் மூலம் பண்டங்கள் மற்றும் பணிகளின் தேவைக்கு வழிவகுக்கிறது. எனவே தொழில்மயமாதல் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை பாதுகாக்கவும் ஏற்றுமதி மூலம் அந்நிய செலாவணியை ஈட்டவும் உதவுகிறது.

2. தமிழ்நாட்டில் தொழில்மயமாதலின் வரலாறு பற்றி குறிப்பு வரைக.

காலனித்துவ முன்காலத்தில் :

- காலனித்துவ முன்காலத்தில் ஜவுளி, கப்பல் கட்டுமானம், இரும்பு மற்றும் எஃகு தயாரித்தல் மற்றும் மட்பாண்டங்கள் தயாரித்தல் போன்ற தொழில்துறை நடவடிக்கைகளில் தமிழ்நாடு ஈடுபட்டதற்கான சான்றுகள் உள்ளன.
- தமிழ்நாடு பரந்து விரிந்த கடற்கரையைக் கொண்டுள்ளதால் பல நூற்றாண்டுகளாக தென்கிழக்கு மற்றும் மேற்கு ஆசியாவுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டது.
- தொழிற்புரட்சிக்குப் பிறகு இங்கிலாந்திலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட இயந்திரங்களின் இறக்குமதியின் காரணமாக போட்டி நிலவி கைத்தறி நெசவுத் தொழில் வீழ்ச்சியடைந்தது.

காலனித்துவ காலத்தில் :

- மேற்கு மற்றும் தெற்கு தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பருத்தி சாகுபடி அதிகளவு நெசவுத் தொழில் தோன்றுவதற்கும் வளர்ச்சியடைவதற்கும் காரணமாகின.
- இந்த காலக்கட்டத்தில் வாணிபத்தின் வளர்ச்சியானது சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுக வட்டாரங்களின் அருகாமையில் தொழிற்சாலைகள் உருவாகக் காரணமாக இருந்தது.
- சென்னையை சுற்றி வாகனங்கள் மற்றும் தோல் தொழிற்சாலைகள் வளர்ச்சியைக் கண்டது. மேலும் தோல் உற்பத்தி தொழிலானது திண்டுக்கல், வேலூர், ஆம்பூர் ஆகிய பகுதிகளில் நடைபெற்றது.
- தென்தமிழ்நாட்டில் வெல்லம் உற்பத்தி தொழில் வளர்ச்சி கண்டது. சிவகாசியில் தீப்பெட்டி தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு பின்னர் பட்டாசு உற்பத்தி மற்றும் அச்சுத் தொழிலுக்கு முக்கிய மையமாக சிவகாசி மாறியது.

- தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் நெசவுத்தொழில் நுட்பத்தின் வளர்ச்சியானது, இயந்திரங்களின் தேவையையும் அதற்கான தொழிற்சாலைகளை நிறுவ காரணமாக இருந்தது.
- 1930 களில் தமிழகத்தின் மேற்குப்பகுதியில் தொடங்கப்பட்ட நீர்மின்சக்தி உற்பத்தி நிலையங்கள் முக்கிய தொழில் வளர்ச்சியாகும்.
- நிலத்தடி நீரை உறிஞ்சுவதற்குப் பயன்படுத்தப்படும் எண்ணெய் இயந்திரங்கள் (Oil Engine) உற்பத்தியால் வேளாண்மைத் தொழில் விரிவடைந்து எண்ணெய் இயந்திரங்களின் தேவை அதிகரித்தது. இதனால் உலோகத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வேளாண்மை சார்ந்த இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டன.

சுதந்திரத்திற்குப் பின் : (1990 களில்)

- தொழில் வளர்ச்சியானது சுதந்திரத்திற்குப் பிறகு மத்திய மாநில அரசுகளால் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பல பெரிய நிறுவனங்கள் நிறுவப்பட்டன. அவையாவன,
- சென்னை (பெரம்பூர்) – ரயில்பெட்டி தொழிற்சாலை
- திருச்சிராப்பள்ளி – பாரத் கனரக மின்சாதன நிறுவனம் (BHEL)
- ஆவடி – போர் தளவாடங்கள் தயாரிக்க கனரக வாகன தொழிற்சாலை
- சென்னை – வாகனத் தொழில்கள்
- சேலம் – இரும்பு எஃகு ஆலை
- கோயம்புத்தூர் – ஜவுளி இயந்திரங்கள், மின்சார மோட்டார்கள், பம்ப் செட்டுகள்
- திருப்பூர் – பின்னலாடைகள்
- கரூர் – வீட்டு அலங்காரப் பொருட்கள்
- கோயம்புத்தூர் – விசைத்தறி நெசவு
- ஆவடி – தொழில் தோட்டங்கள்
- ஓசூர் – விரிவாக்கப்பட்ட தொழில் தோட்டங்கள்

3. வெற்றிகரமான தொழில்துறை தொகுப்புகளின் முக்கிய பண்புகள் என்ன?

- சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் புவியியல் பகுதிகளுக்கு அருகாமையில் இருத்தல்.
- துறைசார்ந்த சிறப்பு கவனம்.
- நிறுவனங்களுக்கிடையே நெருக்கமான அல்லது பரஸ்பர முறையில் இணைந்திருத்தல்.
- புத்தாக்கத்தினால் எளிதாக்கும் ஒரு சமூக கலாச்சார அடையாளம்.
- பல்வேறு திறமையான தொழிலாளர்கள்.
- சுய உதவிக்குழுக்கள் செயல்படுதல்.
- பிராந்திய மற்றும் நகராட்சிகளுக்கு அரசின் ஆதரவு.

போன்றவற்றால் நிறுவனங்கள் ஒருவருக்கு ஒருவர் பரஸ்பரமாக ஒத்துழைத்து போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே வேளையில் பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் அவர்கள் தங்கள் திறனை விரிவுபடுத்த முடியும். போட்டியின் மூலம் அவர்கள் மிகவும் திறமையானவர்களாக மாற கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

4. தமிழ்நாட்டில் நெசவுத் தொழில் தொகுப்பு பற்றி எழுதுக.

பருத்தி நெசவு ஆலைகள் :

- இந்தியாவின் மிகப்பெரிய நெசவுத்தொழில் துறைகளுக்கு தமிழ்நாடு தாயகமாக விளங்குகிறது. பருத்தி நெசவுத் தொழில் வளர்ச்சியின் காரணமாக கோயம்புத்தூர் "தென்னிந்தியாவின் மான்செஸ்டர்" என அழைக்கப்படுகிறது.
- தற்போது நெசவு ஆலைகளில் பெரும்பாலானவை கோயம்புத்தூரைச் சுற்றியுள்ள சிறு நகரங்கள், கிராமங்களுக்கு நகர்ந்துள்ளன. அவைகள் கோயம்புத்தூரைச் சுற்றி 100 முதல் 150 கி.மீ. சுற்று வட்டாரப் பகுதிகளாகும்.

விசைத்தறி நெசவு :

- கோயம்புத்தூரைச் சுற்றி அருகிலுள்ள பல்லடம் சோமனூர் மற்றும் சிறு நகரங்கள், கிராமங்களில் நன்கு செயல்படும் விசைத்தறி நெசவுத் தொழில் தொகுப்புகள் தங்களது வீடுகளிலேயே சொந்தமாக உற்பத்தி செய்யப்படுகின்றன.
- ஈரோடு மற்றும் சேலம் பகுதியிலும் அதிக அளவிலான மின்தறி அலகுகள் இருப்பதால் மின்விசைத் தொழில் மிகவும் பரவலாக உள்ளது.

பின்னலாடை :

- திருப்பூரானது பின்னலாடை தயாரிக்கும் ஏராளமான நிறுவனங்களின் தொகுப்புகளுக்கு புகழ்பெற்ற இடமாகும். இது நாட்டின் பருத்தி பின்னலாடை ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 80% பங்கினைக் கொண்டுள்ளது. 1980களின் பிற்பகுதியிலிருந்து மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கியுள்ளது. இது உள்நாட்டு சந்தையில் மிகப்பெரிய வெற்றியாளராகத் திகழ்கிறது.
- இந்த மிகப்பெரிய வெற்றியின் காரணமாக உலக சந்தையில் உலகின் தெற்கு அரைக்கோளத்தில் ஒரு சக்திவாய்ந்த தொகுப்பாக இந்த இடம் உள்ளது.
- தற்போது இந்தியாவின் மிகப்பெரிய முன்னணி பின்னலாடை ஏற்றுமதியாளர்கள் இங்கு தங்கள் தொழிற்சாலைகளை அமைத்துள்ளனர்.

வீட்டு அலங்காரப் பொருட்கள் :

- மேஜைத்துணி, திரைச்சீலைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் துண்டுகள் போன்ற வீட்டு அலங்காரப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் முக்கிய மையமாக கரூர் உள்ளது. மேலும் பவானி மற்றும் குமாரபாளையம் உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளுக்கு தரைவிரிப்புகளை உற்பத்தி செய்யும் முக்கிய மையங்களாகத் திகழ்கின்றன.

பட்டு மற்றும் கைத்தறி :

- பட்டு மற்றும் கைத்தறி புடவைகளுக்கு பிரபலமான மதுரை மற்றும் காஞ்சிபுரம் போன்ற பாரம்பரிய கைவினைத் தொகுப்புகள் உள்ளன. இந்த விசைத்தறி தொகுப்புகளில் பல அலகுகள் பயன்படுத்தியதன் மூலம் புதுமையாதலின் அளவை அடைந்தன.

5. **தொழில்மயமாதலுக்கு தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்ட கொள்கைகளின் வகைகள் பற்றி விரிவாக எழுதுக.**

கல்வி : **PTA**

- திறமை வாய்ந்த மனித வளங்கள் தொழிற்சாலைக்குத் தேவைப்படுகிறது. நமது மாநிலமானது தொடக்கக் கல்விக்காக அதிகமான கவனம் செலுத்துவது மட்டுமல்லாமல், படித்தவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மற்றும் எண் கணித திறன்களை வளர்ப்பதிலும் கவனம் செலுத்துகிறது.
- இது நாட்டில் மிக அதிகப்படியான தொழில்நுட்ப வல்லுநர்களை தருவதிலும் பெயர்பெற்ற இடமாகும். இந்தியாவில் அதிக அளவில் பொறியியல் கல்லூரிகள், பல்தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சி மையம் நமது மாநிலத்தில்தான் உள்ளது.

உள்கட்டமைப்பு :

- மாநிலங்களில் உள்ள சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் தொழில்மயமாதல் பரவுதலுக்கு மின்சார விநியோகம் சிறப்பான பங்கினை வகிக்கிறது. மின்சார விநியோகம் மட்டுமல்லாது, தமிழ்நாடானது மிகச் சிறந்த போக்குவரத்து உள்கட்டமைப்புக்குப் பெயர் பெற்றது ஆகும்.
- கிராமப்புற சிறு சாலை வசதிகளால் அருகிலுள்ள சிறு நகரங்களுடனும், பெருநகரங்களுடனும் சிறப்பான முறையில் இணைக்கப்பட்டுள்ளது. பொது மற்றும் தனியார் போக்குவரத்து துறைகள் ஒருங்கிணைந்து கிராமப்புற மற்றும் நகர்புறங்களின் இணைப்பை எளிதாக்கியுள்ளன. சிறு உற்பத்தியாளர்களை சிறந்த சந்தைகளோடு இணைத்து அவர்களுக்கு நற்பலனைக் கொடுக்கிறது.

தொழில்துறை ஊக்குவிப்பு :

- கல்வி போக்குவரத்து மற்றும் ஆற்றல் வாய்ந்த உள்கட்டமைப்புகளுக்கு முதலீடு செய்வது மட்டுமல்லாமல் சிறந்த தொழில் பிரிவுக்கான தொழிற்சாலை விஸ்தரிப்புகளை சிறந்த பகுதிகளில் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

- பொருளாதார சீர்திருத்தத்திற்குப் பின் குறிப்பிட்ட காரணிகளான தானியங்கி, தானியங்கி கருவிகள், உயரிய தொழில் நுட்பம் மற்றும் செய்தித் தொடர்புக்கான பிரிவுகள் நல்ல முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- எனவே பெரிய, சிறிய மற்றும் நடுத்தர பிரிவில் மேம்படுத்த உதவும் ஆதரவான உள்கட்டமைப்புகளை நாடு முழுவதும் பல இடங்களில் தொழில்துறை மேம்பாடு முகமைகளை அரசு நிறுவியுள்ளது.

6. தொழில் முனைவோரின் பங்கினைப் பற்றி விளக்குக. **PTA**

- நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் தொழில் முனைவோரின் பங்கு மிக முக்கியமானதாகும்.
- தொழில் முனைவோர் கிராமப்புற மற்றும் பின்தங்கிய தொழிற்சாலைகளை முன்னேற்றுவதுடன், நாட்டில் பல்வேறு பகுதிகளில் நிலவும் வட்டார ஏற்றத் தாழ்வுகளை நீக்குகிறார்கள்.
- இவர்கள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் தலா வருமானம் உயர்வதற்கு உதவி புரிகிறார்கள்.
- வருமானம் மற்றும் செல்வத்தின் செறிவினைக் குறைப்பதன் மூலம் அவை சமூகத்தின் வளர்ச்சிக்கு பங்களிக்கின்றன.
- குடிமக்களின் அசையா சேமிப்புகள் மற்றும் நாட்டின் ஏற்றுமதி வியாபாரம் மூலமாக மூலதனத்தை செயல்பட வைக்கிறார்கள்.
- தொழில் முனைவோர் கைவினைஞர்கள், தொழில்நுட்ப தகுதிவாய்ந்த நபர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு பெரிய அளவிலான வேலை வாய்ப்பை வழங்குகிறார்கள் மற்றும் தொழில் நுட்பத்தை மாற்றும் சூழலில் பணியாற்றி மேலும் புத்தாக்கத்தின் மூலம் இலாபத்தை அதிகரிக்க முயற்சிக்கின்றனர்.
- தொழில் முனைவோர், குறைந்த விலையில் சிறந்த தரமான பொருட்களைப் பெற மக்களுக்கு உதவுகின்றனர். இதன் விளைவாக அவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுகிறது.

கூடுதல் வினா

7. தொழிற்சாலைகளின் வகைகளை தெளிவுபடுத்துக.

அ) பயனர்கள் :

- வெளியீடுகளை இறுதி நுகர்வோர் பயன்படுத்தினால் அது நுகர்வோர் பண்டங்கள் துறை எனப்படுகிறது.
- வெளியீடுகள் மற்றொரு உற்பத்தியாளரால் பயன்படுத்தப்பட்டால் அது மூலதன பண்டங்கள் துறை எனப்படுகிறது.
- பிற தொழில்களுக்குப் பயன்படும் மூலப்பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அடிப்படைப் பண்டங்கள் தொழிற்சாலை எனப்படுகின்றன. எடுத்துக்காட்டு: சிமெண்ட், எஃகு.

ஆ) பயன்படுத்தப்படும் உள்ளீடுகளின் வகை :

- வேளாண் பதப்படுத்துதல், ஜவுளித்துறை, ரப்பர் உற்பத்தி, தோல் பொருட்கள் போன்ற மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் அடிப்படையில் தொழிற்சாலைகள் வகைப்படுத்தப்படுகின்றன.

இ) நிறுவன உரிமையாளர்கள் :

- தொழிற்சாலையானது தனியாருக்கு சொந்தமானது, பொது உரிமையாளர் (மத்திய அல்லது மாநில அரசாங்கத்தால்), தனியார் மற்றும் பொதுத்துறை இரண்டிற்கும் சொந்தமானது அல்லது கூட்டுறவுக்குச் சொந்தமானதாகவும் இருக்கலாம்.

ஈ) அளவு :

- நிறுவனங்கள் அவற்றின் உற்பத்தி, விற்பனை, முதலீடு அல்லது வேலைவாய்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பெரியதாகவோ. சிறியதாகவோ அல்லது நடுத்தரமாகவோ இருக்கலாம். சிறிய நிறுவனங்களை விட நுண்ணிய அல்லது மிகச்சிறு நிறுவனங்களும் உள்ளன.
- இச்சிறிய நிறுவனங்களுக்கு அரசாங்கம் பெருமளவு நிதி, உள் கட்டமைப்பு அல்லது மானிய உதவிகளை வழங்குகிறது.

அரசு மாதிரி வினாத்தாள் (2019 - 20)

10

சமூக அறிவியல்

கால அளவு: 15 நிமிடம் + 2½ மணி **மொத்த மதிப்பெண்கள் : 100**

குறிப்பு : i) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

ii) நீலம் (அல்லது) கருப்பு மையினை எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் மட்டுமே பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

குறிப்பு : இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

பகுதி - I

குறிப்பு : இப்பகுதியில் உள்ள அனைத்து 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். $14 \times 1 = 14$

1. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையை செய்து கொண்டது?
அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) போப் ஈ) ஸ்பெயின்

2. இந்திய தேசிய காங்கிரஸின் மூன்றாவது கூட்டம் எங்கு நடைபெற்றது?
அ) மெரினா ஆ) மைலாப்பூர்
இ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை ஈ) ஆயிரம் விளக்கு

3. சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதி யார்?
அ) T. முத்துசாமி ஆ) P.S. சிவசாமி
இ) V.S. சீனிவாச சாஸ்திரி ஈ) G.A. நடேசன்

4. இந்தியாவில் முதலில் ஒழுங்கமைக்கப்பட்ட சென்னை தொழிற்சங்கம் உருவாக்கப்பட்ட ஆண்டு
அ) 1918 ஆ) 1917 இ) 1916 ஈ) 1914

5. கூற்று : பிரிட்டிஷ் அரசு 1857 ஆம் ஆண்டு கிளர்ச்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது.
காரணம் : மையப்படுத்தப்பட்ட தலைமை இல்லாததால் கிளர்ச்சி தோல்வி கண்டது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு
ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்று மற்றும் காரணம் சரி. கூற்றுக்குக் காரணம் சரியான விளக்கமாகும்
ஈ) கூற்று மற்றும் காரணம் சரி. கூற்றுக்குக் காரணம் சரியான விளக்கமல்ல.

6. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்:
அ) காதர் ஆ) பாங்கர் இ) வண்டல் மண் ஈ) கரிசல் மண்

7. ஒரே அளவு மழைபெறும் இடங்களை இணைக்கும் கோடு
அ) சமவெப்பக் கோடு ஆ) சம மழைக்கோடு இ) சம அழுத்தக் கோடு ஈ) அட்சக் கோடு

8. முதல் காகித தொழிற்சாலை தொடங்கப்பட்ட இடம்
அ) ராணிகஞ்ச் ஆ) துர்க்காபூர் இ) ஹூக்ளி ஈ) பாலிகஞ்ச்

9. மக்கள் தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு
அ) ஒளிப்படவியல் ஆ) மக்களியல் இ) ஆடற்கலையியல் ஈ) மக்களடர்த்தி

10. தமிழ்நாட்டின் அட்சப்பரவல்
அ) 8° 5' வ & 13° 35' வ ஆ) 8° 5' தெ & 13° 35' தெ
இ) 8° 0' வ & 13° 5' வ ஈ) 8° 0' தெ & 13° 05' தெ

11. பின்வரும் கூற்றினை காலவரிசைப்படுத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
    i) பஞ்சசீலம்
    ii) பொக்ரானில் அணுச்சோதனை
    iii) இருபது ஆண்டுகள் ஒப்பந்தம்
    iv) முதலாவது அணுச்சோதனை

    அ) (i), (iii), (iv), (ii)   ஆ) (i), (ii), (iii), (iv)
    இ) (i), (ii), (iv), (iii)   ஈ) (i), (iii), (ii), (iv)

12. உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது (ஆண்டுகளில்)
    அ) 58   ஆ) 60   இ) 62   ஈ) 65

13. தவறான கூற்றினை / கூற்றுகளை தேர்ந்தெடுக்கவும்:
    i) இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ பண்டங்களின் பற்றாக்குறை கருப்பு பணத்திற்கு மூலக் காரணம் ஆகும்.
    ii) கருப்புப் பணம் தோன்றுவதற்கு மிக முக்கிய பங்கு வகிப்பது தொழிற்துறை ஆகும்.
    iii) கருப்புப் பணத்திற்கு கடத்தல் ஒரு முக்கிய மூலக் காரணம்.
    iv) வரிவிகிதம் குறைவாக இருக்கும்போது, அதிகளவில் கருப்புப் பணம் உருவாக்கப்படுகிறது.

    அ) (i) மற்றும் (ii)   ஆ) (iv) மட்டும்
    இ) (i) மட்டும்   ஈ) (ii) மற்றும் (iii)

14. உணவு மற்றும் சத்துணவு பாதுகாப்பின் அடிப்படைக்கூறு(கள்)
    அ) கிடைத்தல்   ஆ) அணுகுதல்
    இ) முழு ஈடுபாடு   ஈ) அனைத்தும்

பகுதி - II

குறிப்பு : எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
(வினா எண்: 28 க்கு கட்டாயமாக பதிலளிக்கவும்). $10 \times 2 = 20$

15. மன்றோ கோட்பாட்டை விளக்குக.
16. மார்ஷல் திட்டம் என்றால் என்ன?
17. தன்னாட்சி இயக்கத்தின் குறிக்கோள்களை விவரிக்கவும்.
18. மறைமலை அடிகள் விளக்கவுரை எழுதிய சங்க நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
19. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை எழுதுக.
20. இந்தியாவின் வேளாண்மை முறைகளைக் குறிப்பிடுக.
21. "பன்னாட்டு வணிகம்" வரையறுக்க.
22. தமிழ்நாட்டில் காணப்படும் மாங்குரோவ் காடுகளைப் பற்றி சிறு குறிப்பெழுதுக.
23. நிதி மசோதா என்றால் என்ன?
24. பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
25. தனிநபர் வருமானம் என்றால் என்ன?
26. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின்படி உணவு பாதுகாப்பு என்பதனை வரையறுக்க.
27. வரையறுக்க : வரி
28. புதுப்பிக்கக் கூடிய வளங்கள் பற்றி நீவிர் அறிவதென்ன?

பகுதி - III

குறிப்பு : எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
(வினா எண்: 42 க்கு கட்டாயமாக பதிலளிக்கவும்). $10 \times 5 = 50$

29. **கோடிட்ட இடங்களை நிரப்புக:**
    i) ஐரோப்பிய குழுமத்தின் தலைமை _________ நகரில் அமைந்துள்ளது.
    ii) தேயிலை மற்றும் காஃபி விளைவதற்கு உகந்த மண் _________ ஆகும்.
    iii) _________ தமிழகத்தின் முதல் பெண் ஆளுநர் ஆவார்.
    iv) _________ ஆல் உலகமயமாக்கல் என்ற பதம் கண்டுபிடிக்கப்பட்டது.
    v) தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் _________

30. **பொருத்துக:**

i) ஹிண்டன் பர்க்	– டிடு மீர்
ii) வாஹாபி கிளர்ச்சி	– காளையார் கோவில்
iii) தனித்தமிழ் இயக்கம்	– ஜெர்மனி
iv) சிங்மென் ரீ	– மறைமலை அடிகள்
v) மருது சகோதரர்கள்	– தென் கொரியா

31. **பொருத்துக:**

i) மேசகான் கப்பல் கட்டும் தளம்	– நிலக்கரி
ii) கருப்பு தங்கம்	– நந்தா தேவி
iii) ஹிராகுட்	– பிரம்மபுத்ரா
iv) உயிர்கோள காப்பகம்	– மகாநதி
v) சாங்போ	– மும்பை

32. அ) **வேறுபடுத்துக.**
    i) வானிலை மற்றும் காலநிலை
    ii) வேளாண் சார்ந்த தொழிலகங்கள் மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்

    ஆ) **காரணம் கூறுக** : மழைநீர் சேகரிப்பு அவசியம்.

33. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க.
34. வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தைப் பற்றி குறிப்பு எழுதுக.
35. தென்மேற்குப் பருவக்காற்று குறித்து எழுதுக.
36. தமிழ்நாட்டின் நீர் ஆதாரங்களைப் பற்றி எழுதுக.
37. அடிப்படை உரிமைகளைப் பற்றி குறிப்பிடுக.
38. பஞ்சசீலக் கோட்பாடுகளைப் பற்றி விவரிக்க.
39. தொழிற்தொகுப்புகள் வெற்றி பெற முக்கியப் பண்புகள் யாவை?
40. GDP யை கணக்கிடும் முறைகள் யாவை? அவற்றினை விவரிக்க.
41. கீழ்காண்பனவற்றிற்குக் காலக்கோடு வரைக.
    1920 முதல் 1940 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.
42. உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
    i) கிரேட் பிரிட்டன் ii) ஜெர்மனி iii) ரஷ்யா
    iv) ஹிரோஷிமா v) ஹவாய் தீவு

பகுதி - IV

இரு வினாக்களுக்கும் விடையளிக்க. $2 \times 8 = 16$

43. அ) பால்கன் போர்கள்

i) பால்கன் கழகம் ஏன் உருவாக்கப்பட்டது?

ii) முதல் பால்கன் போரின் விளைவுகள் யாவை?

iii) இப்போரில் தோற்கடிக்கப்பட்டவர்கள் யாவர்?

iv) இரண்டாவது பால்கன் போரின் இறுதியில் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையின் பெயரென்ன?

ஆ) சுபாஷ் சந்திர போஸ் மற்றும் இந்திய தேசிய ராணுவம்

i) சுபாஷ் சந்திர போஸ் ஜப்பானை எப்படிச் சென்றடைந்தார்?

ii) இந்திய தேசிய ராணுவத்தின் பெண்கள் பிரிவுக்குத் தலைமை ஏற்றவர் யார்?

iii) சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய ராணுவத்தை எவ்வாறு மறுசீரமைப்புச் செய்தார்?

iv) சுபாஷ் சந்திர போஸால் வழங்கப்பட்ட முழக்கம் யாது?

(அல்லது)

இ) ராமலிங்க அடிகள்

i) ஜீவகாருண்யம் என்றால் என்ன?

ii) அருட்பா என்றால் என்ன?

iii) சமரச வேத சன்மார்க்க சத்ய சங்கத்தின் முக்கியப் பங்களிப்பைக் குறிப்பிடுக.

iv) தனது இலவச உணவகத்தை அவர் எங்கே அமைந்திருந்தார்?

ஈ) வேலூர் புரட்சி

i) வேலூர் புரட்சி எப்போது வெடித்தது?

ii) இராணுவத்தில் புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்தியவர் யார்?

iii) புரட்சியின் போது முதலில் பலியானவர் யார்?

iv) புரட்சியாளர்களால் புதிய மன்னராக அறிவிக்கப்பட்டவர் யார்?

44. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்.

i) ஆரவல்லி மலைத்தொடர்

ii) காவிரி ஆறு

iii) தென்மேற்குப் பருவக்காற்று வீசும் திசை

iv) அகஸ்திய மலை உயிர்க்கோளப் பெட்டகம்.

v) கரிசல் மண் காணப்படும் முக்கிய பகுதி

vi) ஏதேனும் ஒரு பன்னாட்டு விமான நிலையம்

vii) தமிழ்நாட்டில் உள்ள அணுமின் நிலையம்

viii) மும்பை முதல் கொல்கத்தா வரையிலான ரயில்பாதை

(அல்லது)

கொடுக்கப்பட்ட தமிழக வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்.

i) நீலகிரி குன்றுகள்

ii) சோழமண்டலக் கடற்கரை

iii) ஏதேனும் நெல் விளையும் பகுதி

iv) பவானி சாகர் அணை

v) தூத்துக்குடி துறைமுகம்

vi) ஏதேனும் ஒரு பன்னாட்டு விமான நிலையம்

vii) பழவேற்காடு ஏரி

viii) கன்னியாகுமரி